Q6
N18
224020

600 008

Q6
N18
224020

காலைநேரத்துக்கடுத்த புத்திமதிகளும், பத்தி முயற்சிகளும்.

காலையில் கண் விழித்தவுடன் சிலுவை அடையாளம் வரைந்து சொல்லத்தகும் செபமாவது.

என்னைச் சிருஷ்டித்த பிதாவுக்கு ஸ்தோத்திரம்.

என்னை இரக்ஷித்த சுதனுக்கு ஸ்தோத்திரம்.

என்னை அர்ச்சித்த இஸ்பிரீத்துசாந்துவுக்கு ஸ்தோத்திரம்.

ஏகமுட்ட, பரிசுத்தமுமாகிய திரித்துவம் இப்போதும் எப்போதும் வாழ்த்தப்படுவதாக. ஆமென்சேசு.

படுக்கையை விட்டெழுந்திருக்கும்போது சொல்லத்தகும் செபம்.

சேசுக்கிறீஸ்துநாதருடைய திருநாமத்தினாலே நான் எழுந்திருக்கிறேன். அவரே என்னை ஆசீர்வதித்துக் காப்பாற்றி, என்னை

ஆண்டு நடத்தி, என்னை நித்திய ஜீவியத்துக்குள் சேர்த்துக்கொள்வாராக—ஆமென் சேசு.

நீ உடுத்திக்கொள்ளுகையில், உன்னுடைய அறுதினச் செபங்களையும், கிரியைகளையும், உன் கஸ்தி வருத்தங்களையும் ஜெப அப்போஸ்தல சபையாருக்குக் குறிக்கப்பட்ட கருத்துகளுக்காக சேசுவின் திரு இருதயத்துக்கு ஒப்புக்கொடுப்பாயாக.

சேசுவின் திரு இருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர் திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகக் கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்று செய்யும் செபங்களையும், கிரியைகளையும், படும் துன்ப வருத்தங்களையும் கன்னி மரியாயின் மாசில்லாத இருதயத்தின் வழியாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். இந்த மாசத்துக்கும் இந்த நாளுக்கும் உலகமெங்கும் பரம்பியுள்ள இச்சபையாருக்குக் குறிக்கப்பட்ட பொதுக் [illegible]ருத்துகளுக்காகவும் விசேஷித்த கருத்துகளுக்காகவும் அவைகளை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன் *

* இந்த நாளில் உன் ஜெபங்களுக்கும் நற்கிரியைகளுக்கும் அளிக்கப்பட்ட பலன்கள் யாவையும் அடைவேனென்று பிரதிக்கினை செய்துகொள்.

காலைச்செபம்.

உடுத்திக்கொண்டபின் முழங்காலிலிருந்து சொல்லவேண்டிய செபம்.

பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துடையவும் நாமத்தினாலே, ஆமென் சேசு.

திவ்விய இஸ்பிரீத்து சாந்துவே, தேவரீர் எழுந்தருளி வாரும். உம்முடைய விசுவாசிகளுடைய இருதயங்களை நிரப்பி, அவைகளில் உமது சிநேக அக்கினியை மூட்டியருளும்.

உன்னைச் சர்வேசுரனுடைய சந்நிதானத்தில் நிறுத்திச் சொல்லத்தக்க செபமாவது.

மகா பரிசுத்தமும் ஆராதனைக்குரியதுமான திரித்துவமே, மூன்றாளாயிருந்தாலும் ஏகமாயிருக்கிற சர்வேசுரா, தேவரீர் இவ்விடத்தில் பிரசன்[illegible]ன்று அடியேன் விசுவசித்து, தேவரீ[illegible] தாழ்ச்சி[illegible] ஆராதித்து, தேவரீருடைய உன்ன[illegible]கத்துவத்துக்கு யோக்கியமான பணிவிடை நமஸ்காரத்தை என் முழு இருதயத்தோடு தேவரீருக்குச் செலுத்துகிறேன்.

224020

☞ சர்வேசுரனுக்கு நன்றியறிதல் செலுத்தி உன்னை முழுதும் அவருக்குக் கையளிப்பாயாக.

என் சர்வேசுராசுவாமி, தேவரீர் இந்த நிமிஷம் வரையில் அடியேனுக்குச் செய்திருக்கிற சகல உபகாரங்களுக்காகவுந் தேவரீருக்கு மிகுந்த தாழ்ச்சியோடு நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செய்கிறேன். தேவரீர் என்னை உமது சாயலாகச் சிருஷ்டித்ததற்காகவும், உமது திருக்குமாரனுடைய விலைமதியாத திரு இரத்தத்தினால் என்னை மீட்டிரக்ஷித்ததற்காகவும், என்னை உயிரோடு காப்பாற்றி இந்த நாளை நான் காணும்படி கிருபை புரிந்ததற்காகவும், என் முழு இருதயத்தோடு தேவரீருக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் பண்ணுகிறேன். ஆண்டவரே, நான் என்னை முழுவதும், விசேஷமாய் இன்று என்னுடைய நினைவு, வாக்கு, கிரியை, துன்ப வருத்தம் யாவையும் தேவரீருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன். இவைகளையெல்லாம் தேவரீருடைய திருநாமத்துக்கு ஸ்தோத்திரமாக ஒப்புக்கொடுத்து, இவைகளைத் தேவரீர் என் இரக்ஷகராகிய சேசுக்கிறீஸ்துவின் அளவில்லாத பேறுபலன்களைப் பார்த்து கையேற்றுக்கொள்ளவேண்டுமென்று மன்றாடுகிறேன்.

தேவரீருடைய திவ்விய சிநேகத்தால் இவைகளை அர்ச்சித்து, இவைகள் தேவரீருடைய அதியுன்னத ஸ்தோத்திரத்தை மாத்திரம் நாடும்படி செய்தருளும்.

பாவத்தை விலக்கி பரிசுத்தமாய் நடக்கப் பிரதிக்கினை செய்வாயாக.

என் இரக்ஷகரும், என் எஜமானனும், சகல உத்தமதனத்துக்கும் மாதிரியுமாகிய ஆராதனைக்குரிய சேசுவே, நான் இன்று தேவரீருடைய மாதிரிகையைக் கண்டுபாவித்து, தேவரீரைப்போல் சாந்தமும், தாழ்ச்சியும், பரிசுத்தமும், ஞானப்பற்றுதலும், பிறசிநேகமும், தேவசித்தத்துக்கு அமைதலும் உள்ளவனாயிருக்கும்படி தீர்மானஞ்செய்து, இதற்காக என்னால் கூடியமட்டும் பிரயாசப்படுவேனென்று உறுதியான பிரதிக்கினை செய்கிறேன். நான் இதுவரையில் கட்டிக்கொண்ட எந்தப் பாவத்திலும் இன்றைக்கு விழாதபடி அதிக எச்சரிக்கையோடு நடந்து, (இங்கே உனக்கு அதிக சார்புள்ள குற்றத்தை நினைத்துக்கொள்) அதை முழுவதும் தவிர்த்துவிடப் பிரயாசப்படுவேன்.

உனக்குத் தேவையான வரப்பிரசாதங்களை இரந்து கேட்பாயாக.

ஆ என் ஆண்டவரே! என் எளிமைத்தனமும், பலவீனமும், தேவரீருடைய உதவி

யின்றி என்னால் யாதொரு நன்மையான காரியத்தையும் செய்யக்கூடாதென்பதும், தேவரீருக்கு நன்றாய்த் தெரியுமே. ஆண்டவரே, உம்முடைய வரப்பிரசாத உதவியை எனக்கு இல்லையென்காதேயும். என் அவசியம் எவ்வளவோ அவ்வளவாக உம்முடைய வரப்பிரசாதத்தையும் பகிர்ந்தருளும். தேவரீருக்குப் பொருந்தாத எந்தப் பாவத்தையும் விலக்கவும், தேவரீர் கற்பித்த புண்ணியங்களை அனுசரிக்கவும், எனக்கு வேண்டிய பலத்தைக் கட்டளையிட்டருளும். எனக்கு வரவேண்டுமென்று தேவரீர் சித்தமாயிருக்கிற எவ்வித கஸ்தி வருத்தங்களையும் பொறுமையோடு சகித்துக்கொள்ளும்படி அடியேனுக்கு மனத்திடனைத் தந்தருளும்.

விசுவாச முயற்சி.

என் சர்வேசுரா சுவாமீ, திருச்சபை விசுவசித்துப் படிப்பிக்கிற சத்தியங்களை எல்லாம் தேவரீர் தாமே அறிவித்தபடியினாலே நானும் உறுதியாக விசுவசிக்கிறேன்.—

ஆமென்சேசு.

நம்பிக்கை முயற்சி.

என் சர்வேசுரா சுவாமீ, தேவரீர் வார்த்தைப்பாடு கொடுத்தபடியினாலே சேசுநாதர் சுவாமி பாடுபட்டுச் சிந்தின திரு இரத்தப்

பலன்களைப் பார்த்து, என் பாவங்களை எல்லாம் பொறுத்து எனக்கு உம்முடைய வரப்பிரசாதங்களையும் மோட்ச பாக்கியத்தையுந் தந்தருளுவீர் என்று உறுதியாக நம்பியிருக்கிறேன்.—ஆமென்சேசு.

தேவசிநேக முயற்சி.

என் சர்வேசுரா சவாமீ, தேவரீர் மட்டில்லாத சிநேகத்துக்குப் பாத்திரமாயிருக்கிறபடியினாலே, எல்லாத்தையும் பார்க்க உம்மை நான் முழுமனதோடே சிநேகிக்கிறேன். பின்னையும் உம்மைப்பற்றி என்னை நான் சினேகிக்கிறாப்போலே மற்ற எல்லாரையுஞ் சிநேகிக்கிறேன்.—ஆமென்சேசு.

மனஸ்தாப முயற்சி.

என் சர்வேசுரா, நான் தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்தேனென்கிறதினாலே மிகவும் மனநொந்து உத்தமமனஸ்தாபமாயிருக்கிறேன். தேவரீர்மேல் அடியேனுக்குள்ள பத்தி நேசத்தைப்பற்றி என் பாவங்களையெல்லாம் வெறுத்துத் தள்ளுகிறேன். இனி ஒருக்காலும் தேவரீருக்குப் பொருந்தாத துரோகத்தைச் செய்வதில்லையென்றும், தேவரீருடைய வரப்பிரசாத உதவியைக்கொண்டு எவ்வித பாவச் சமயத்

தையும் விலக்கிவிடுவேனென்றும் கெட்டி
யான பிரதிக்கினை செய்கிறேன்.

பரமண்டல மந்திரம்.

பரமண்டலங்களிலே யிருக்கிற எங்கள்
பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படு
வதாக, உம்முடைய இராச்சியம் வருக, உம்
முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்
படுமாப்போலே பூமியிலேயும் செய்யப்படுவ
தாக. அன்றன்றுள்ள எங்களப்பம் எங்க
ளுக்கு இன்று தாரும் எங்கள் கடன்காரர்
களுக்கு நாங்கள் பொறுக்குமாப்போல எங்
கள் கடன்களை எங்களுக்குப் பொறும். எங்
களைச் சோதனையிலே பிரவேசிப்பியாதே
யும். தின்மையிலே நின்று எங்களை இரட்
சித்துக்கொள்ளும், ஆமென்சேசு.

பிரியதத்த மந்திரம்.

பிரியதத்தத்தினாலே பூரண மரியாயே!
வாழ்க; கர்த்தர் உம்முடனே, பெண்சாதி
களுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே.
உம்முடைய திருவயிற்றின் கனியாகிய சேசு
ஆசீர்வதிக்கப் பட்டவருமாமே; அர்ச்சிய
சிஷ்ட மரியாயே! சர்வேசுரனுடைய
மாதாவே! பாவிகளாயிருக்கிறஎங்களுக்காக

இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும்
வேண்டிக்கொள்ளும். ஆமென்சேசு.

விசுவாச மந்திரம்.

பரலோகத்தையும், பூலோகத்தையும்
படைத்த சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய
சர்வேசுரனை அதியோக்கிய பத்தியாக விசு
வசிக்கிறேன். அவருடைய ஏக சுதனாகிய
நம்முடையநாதர் சேசுக்கிறீஸ்துவையும்
அதியோக்கிய பத்தியாக விசுவசிக்கிறேன்.
இவர் இஸ்பிரீத்துசாந்துவினாலே கர்ப்பமா
யுற்பவித்து, அர்ச்சியசிஷ்ட கன்னிமரியாயி
யிடத்திலே நின்று பிறந்து, போஞ்சுபிலாத்
தின்கீழே பாடுபட்டுச் சிலுவையிலே அறை
யுண்டு மரித்து அடக்கப்பட்டார். பாதா
ளங்களிலே இறங்கி மூன்றாநாள் மரித்தவர்க
ளிடத்தினின்று உயிர்த்தெழுந்தருளினார். பர
மண்டலங்களிலேயேறி சர்வத்துக்கும் வல்ல
பிதாவாகிய சர்வேசுரனுடைய வலது பாரி
சத்திலே உட்கார்ந்திருக்கிறார். அவ்விடத்
திலே நின்று சீவியர்களுக்கும் மரித்தவர்
களுக்கும் நடுத்தீர்க்க வருவார். இஸ்பிரீத்து
சாந்துவை அதியோக்கிய பத்தியாக விசுவ
சிக்கிறேன். பொதுவாயிருக்கிற அர்ச்சிய
சிஷ்ட சபையையும், அர்ச்சியசிஷ்டவர்களு
டைய சமூதீத பிரயோசனத்தையும் விசுவ
சிக்கிறேன். பாவப்பொறுத்தலை விசுவசிக்

கிறேன். மாம்ஸ உத்தானத்தை விசுவசிக்கிறேன். சதமான சீவியத்தை விசுவசிக்கிறேன். ஆமென்சேசு.

அர்ச். தமதிரித்துவத்துக்குத் தோத்திரம். பிதாவுக்கும், சுதனுக்கும், இஸ்பிரீத்துசாந்துவுக்கும் தோத்திரமுண்டாகக்கடவது. ஆதியிலே இருந்ததுபோலே, இப்பொழுதும் எப்பொழுதும் அநாதி சதாகாலமும் இருக்கும்படியே, ஆமென்சேசு.

பாவசங்கீர்த்தன மந்திரம்.

சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரனுடனேயும், எப்போதுங் கன்னியாயிருக்கிற முத்திப்பேறுபெற்ற மரியாயியுடனேயும், பிரதான சம்மனசாயிருக்கிற முத்தனான மிக்கேலுடனேயும், ஸ்நாபகனாயிருக்கிற முத்தனான அருளப்பருடனேயும், அப்போஸ்தலராயிருக்கிற அர்ச்சியசிஷ்ட இராயப்பருடனேயும், சின்னப்பருடனேயும், சகல அர்ச்சியசிஷ்டவர்களுடனேயும், (எனக்குக் குருவாயிருக்கிற உம்முடனேயும்) பாவசங்கீர்த்தனம் பண்ணிக்கொள்ளுகிறேன். அதேனென்றால் என் சிந்தனையினாலேயும் வாக்கினாலேயுங் கிரியையினாலேயும் மகா பாவங்களைச் செய்தேனே. என் பாவமே, என் பாவமே, என் பெரும் பாவமே, ஆகையால் எப்போதுங் கன்னியாயிருக்கிற முத்திப்

பேறுபெற்ற மரியாயியையும், பிரதான சம்மனசாயிருக்கிற முத்தனான மிக்கேலையும், ஸ்நாபகனாயிருக்கிற முத்தனான அருளப்பனையும், அப்போஸ்தலராயிருக்கிற அர்ச்சியசிஷ்ட இராயப்பனையும் சின்னப்பனையும், சகல அர்ச்சியசிஷ்டவர்களையும், (எனக்குக் குருவாயிருக்கிற உம்மையும்,) நம்முடைய கர்த்தராகிற சர்வேசுரனிடத்திலே எனக்காக வேண்டிக்கொள்ளவேணுமென்று மன்றாடுகிறேன்.—ஆமென்சேசு.

சர்வ வல்லமையுள்ள சர்வேசுரன் என்மேலிரங்கி, என் பாவங்களை எனக்கு மன்னித்து நித்திய ஜீவியத்திற்கு என்னைச் சேர்த்துக் கொள்வாராக. ஆமென்சேசு.

சர்வ வல்லவரும் தயாபரருமான ஆண்டவர் என்மேலிரங்கி என் பாவக் கட்டுகளை அவிழ்த்து எனக்கு சகல பாவங்களுக்கும் பொறுத்தல் அளித்தருள்வாராக. ஆமென்சேசு.

அர்ச்சியசிஷ்டவர்களை நோக்கி வேண்டுதல்.

பரிசுத்த கன்னிகையே, சர்வேசுரனுக்கு மாதாவும் எனக்குத் தாயும் பாதுகாவலுமானவளே, என்னை முழுமையும் தேவரீருடைய அடைக்கலத்திலே வைத்து, உம்முடைய கிருபைதயாபமென்னும் காங்க

ளில் நம்பிக்கையோடு என்னை ஒப்படைக்கிறேன். ஓ இரக்கமுள்ள தாயே, என் துன்பத்தில் எனக்கு ஆதரவும், கஸ்தியில் ஆறுதலும் இப்பொழுதும் என் மரண நேரத்திலும் உம்முடைய ஆராதனைக்குரிய திருக்குமாரனிடத்தில் எனக்கு சிபாரிசுக்காரியுமாயிருக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேன்.

பரலோக தூதனே, எனக்கு அன்பும் எனது பிரமாணிக்கமுமுள்ள வழிகாட்டியே, உம்முடைய பரிசுத்த ஏவுதல்களுக்குப் பணிந்து நடக்கவும், சர்வேசுரனுடைய திருச் சித்தத்தையும் அவருடைய கற்பனைகளையும் ஒருபோதும் விட்டகலாமல் நடந்துவரவும் வேண்டிய அனுக்கிரகப்பிரசாதத்தை அடைந்து தந்தருளும்.

நான் பேர்கொண்ட பெரிய அர்ச்சியசிஷ்டவரே, நீர் என்னை ஆதரித்து, உம்மைப்போல் நான் இவ்வுலகில் ஆண்டவருக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ் செய்தபின், உம்மோடு கூட மோக்ஷத்தில் அவரை அநவரதகாலமும் ஸ்துதித்துக்கொண்டிருக்கும்படி எனக்காக வேண்டிக்கொள்ளும். ஆமென்சேசு.

தேவசித்தத்துக்கு அமைதல்.

சர்வேசுரனுடைய மகா நீதியும், மகா உன்னதமும், மகா அன்புக்குரியதுமாகிய சித்த

மானது சகல படைப்புகளிடத்திலும் நிறைவேறி, புகழப்பட்டு, நித்தியமும் மேன்மைப்படுத்த எல்லாவற்றிலும் நடந்தேறி ஸ்துதி பெற்று நித்தியத்துக்கும் மேன்மைபபடுவதாக. ஆமென்சேசு.

சேசுநாதருடைய திருநாமத்தின் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலேயிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,

உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரா,

அர்ச். தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,

நித்திய பிதாவின் திருச்சுதனாயிருக்கிற சேசுவே,

பிதாவின் பிரகாசமாயிருக்கிற சேசுவே,
நித்திய ஒளியின் தூய்மையாகிய சேசுவே,
மட்டில்லாத மகிமை உடைத்தான இராஜாவாகிய சேசுவே,
நீதி ஆதித்தனாகிய சேசுவே,
பரிசுத்த கன்னிமரியாயின் குமாரனாகிய சேசுவே,
மகா அன்புக்குரிய சேசுவே,
ஆச்சரியத்துக்குரிய சேசுவே,
மிகுந்த வல்லபக் கடவுளாயிருக்கிற சேசுவே,
வரப்போகிற பாக்கியங்களுக்குக் காரணராயிருக்கிற சேசுவே,
பரம ஆலோசனைகளின் திவ்விய தூதரான சேசுவே,
மகா சத்தியுடைத்தான சேசுவே,
மகா பொறுமையுள்ள சேசுவே,
மகா சிரவணம் பொருந்திய சேசுவே,
மனத் தாழ்ச்சியையும் மதுர குணத்தையுங் கொண்டிருக்கிற சேசுவே,
கற்பைச் சிநேகிக்கிற சேசுவே,
எங்கள் அன்பராகிய சேசுவே,
சமாதான தேவனாகிய சேசுவே,
ஜீவியத்துக்குக் காரணராயிருக்கிற சேசுவே,

எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

சகல புண்ணியங்களுக்கு மாதிரிகையாயிருக்கிற சேசுவே,
ஆத்துமங்களை இரட்சிக்கிறதிலே மகா அபேட்சையுள்ள சேசுவே,
எங்கள் தேவனாயிருக்கிற சேசுவே,
எங்களுக்கு அடைக்கலமாயிருக்கிற சேசுவே,
தரித்திரருடைய பிதாவாயிருக்கிற சேசுவே,
விசுவாசிகளுடைய பொக்கிஷமாயிருக்கிற சேசுவே,
நல்ல ஆயராயிருக்கிற சேசுவே,
உண்மையான பிரகாசமாயிருக்கிற சேசுவே,
நித்திய ஞானமாயிருக்கிற சேசுவே,
மட்டில்லாத நன்மைத்தன்மையைக் கொண்டிருக்கிற சேசுவே,
எங்கள் ஜீவியமும் உண்மையும் வழியுமாயிருக்கிற சேசுவே,
சம்மனசுக்களுடைய சந்தோஷமாயிருக்கிற சேசுவே,
பிதாப்பிதாக்களுக்கு இராஜாவாகிய சேசுவே,
தீர்க்கதரிசிகளுக்கு ஞானங்கொடுக்கிற சேசுவே,

எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

அப்போஸ்தலருக்குக் குருவாகிய சேசுவே,

சுவிசேஷகருக்குப் போதகரான சேசுவே,

வேதசாட்சிகளுக்குத் திடனான சேசுவே,

ஸ்துதியருடைய பிரகாசமான சேசுவே,

விரத்தருடைய துப்புரவான சேசுவே,

சகல அர்ச்சியசிஷ்டவர்களுக்கு முடியான சேசுவே,

தயாபரராயிருந்து,—எங்கள் பாவங்களைப் பொறுத்தருளுஞ் சுவாமீ.

தயாபரராயிருந்து,—எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமீ.

சகல பாவங்களிலே நின்று,
தேவரீருடைய கோபத்திலே நின்று,
பசாசின் தந்திரங்களிலே நின்று,
மோக ஆசையிலே நின்று,
நித்திய மரணத்திலே நின்று,

தேவரீர் தருகிற தரும விசாரங்களை அசட்டை பண்ணுகிற துர்க்குணத்திலே நின்று,

தேவரீருடைய மனுஷாவதாரத்தின் பரம இரகசியத்தைப் பார்த்து,

தேவரீருடைய பிறப்பைப் பார்த்து,

தேவரீருடைய பாலத்துவத்தைப் பார்த்து,

தேவரீருடைய விருத்தசேதனத்தைப் பார்த்து,

தேவரீருடைய திவ்விய நடக்கையைப் பார்த்து,

தேவரீருடைய பிரயாசத்தையும் பிரயாணங்களையும் பார்த்து,

தேவரீருடைய அருட்டத்தையும் இரத்த வேர்வையையும் பார்த்து,

தேவரீருடைய சிலுவையையும் பாடுகளையும் பார்த்து,

தேவரீருடைய உபத்திரவங்களையும் நிர்ப்பந்தங்களையும் பார்த்து,

தேவரீருடைய மரணத்தையும் அடக்கத்தையும் பார்த்து,

தேவரீருடைய மகிமையான உத்தானத்தைப் பார்த்து,

தேவரீருடைய ஆச்சரியமான ஆரோகணத்தைப் பார்த்து,

தேவரீருடைய சந்தோஷத்தையும் மகிமையையும் பார்த்து,

தேற்றுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவின் ஆகமனத்தைப் பார்த்து, ஒ. ஜ. ஏ.

நடுத்தீர்க்கிற நாளிலே,

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே, எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே, எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே, எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

சேசுவே, எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

சேசுவே, எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

முதலோதி.—இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றைக்கும்,

துணைவர்.—ஆண்டவருடைய திருநாமம் வாழ்த்தப்படக்கடவது.

பிரார்த்திக்கக்கடவோம்.

எங்கள் திவ்விய இரக்ஷகருமாய் ஆண்டவருமாயிருக்கிற சேசுக்கிறீஸ்துவே! எங்கள் புத்தி ஆத்துமத்தையுஞ் சரீரத்தையும் உண்டான மனது நினைவையும் எங்களுக்கு காணிக்கையாக சகலத்தையும் உமக்குக் சிந்தனை வைக்கிறோம். நாங்கள் எங்கள் முழுதும் உம் வாக்குக் கிரியைகளினாலே உமது மைச் சிநேகிக்கவும் ஸ்துதிக்கவும் எங்கள் திவ்விய சிநேகத்தின் அக்கினியினால் செய்த இருதயம் பற்றி எரியவுந் தயை இதுவே ருளுஞ் சுவாமீ. எங்களுக்கு இஸ்பிரீத்து போதும், பிதாவோடேயும் சாந்துவோடேயுஞ் சதாகாலஞ் சீவியருமாய் இராச்சிய பரிபாலகருமாயிருக்கிற ஆண்டவரே,—ஆமென்சேசு.

திரிகாலச் செபம்.

ஆண்டவருடைய சம்மனசானது மரியாயியுடனே விசேஷஞ் சொல்லிற்று, அவள் இஸ்பிரீத்துசாந்துவினாலே கெர்ப்பணியானாள்.—பிரியதத்தமந்திரம்.

இதோ, ஆண்டவருடைய அடிமையானவள் உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது.—பிரி.

வார்த்தையானது மாம்ஸமாகப் பண்ணப்பட்டு எங்களுடனேகூட வாசமாயிருந்தது. பிரி.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரா சுவாமி, சம்மனசு சொன்னதினாலே உமக்குக் குமாரனாகிய சேசுக்கிறீஸ்து மனுஷனானதை அறிந்திருக்கிற நாங்கள் அவருடைய பாடுகளினாலேயும் சிலுவையினாலேயும் உத்தானத்தின் மகிமையை அடையத்தக்கதாக, எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருளவேணுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு முகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென் சேசு.

போசனத்துக்கு முன் கேட்கும் ஆசீர்வாதம்.

சர்வேசுரா சுவாமி, என்னையும், உமது அருளினாலே நான் போசிக்க இருக்கின்ற இந்தப் போசிப்புகளையும், என் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு முகத்தைப் பார்த்து ஆசீர்வதித்தருளும்.— ஆமென் சேசு.

போசனத்துக்குப் பின் நன்றியறிந்த தோத்திரம்.

சதாகாலத்துக்கும் நித்தியருமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்கிற சர்வ வல்லபமுள்ள சர்வேசுரா! தேவரீர் எனக்குத் தந்தருளின இந்த ஆகாரங்களுக்காகவும் தேவரீர் எனக்குச் செய்து வருகிற சகல உபகாரங்களுக்காகவும் தேவரீருக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகிறேன்.

சுவாமி கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமீ தயையாயிரும்.—பர.

இப்பொழுதும் எப்பொழுதும் ஆண்டவருடைய திருநாமம் வாழ்த்தப்படக்கடவது.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரா சுவாமி, எங்களுக்கு உபகாரம் பண்ணுகிறவர்களுக்கெல்லாம் நித்திய ஜீவியத்தைக் கட்டளையிட்டருள அநுக்கிரகம் பண்ணியருளும். ஆமென் சேசு.

இராச்செபம்.

பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினாலே, ஆமென் சேசு.

திவ்விய இஸ்பிரீத்து சாந்துவே, தேவரீர் எழுந்தருளி வாரும்.

உம்முடைய விசுவாசிகளின் இருதயங்களை நிரப்பும்.

அவைகளில் உம்முடைய சிநேகாக்கினியை மூட்டியருளும்.

(உன்னைத் தேவ சந்நிதானத்தில் நிறுத்தி சுவாமியைத் தாழ்ச்சி விநயத்தோடு ஆராதிப்பாயாக.)

என் சர்வேசுரா சுவாமி, இந்த நாளின் கடைசியிலும் தேவரீருக்கு என்னிருதயப் பற்றுதல் நமஸ்காரங்களைச் செலுத்தும்படி உமது திருப் பாதத்தை யண்டிவருகிறேன். என் சிருஷ்டிகரும், இரக்ஷகரும் எனக்குத் தீர்வையிடும் நீதி கர்த்தருமாகிய தேவரீரை அத்தியந்த தாழ்ச்சியோடு ஆராதிக்கிறேன். தேவரீர் சத்தியமாயிருக்கிறபடியால் உம்மை விசுவசிக்கிறேன். தேவரீர் உம்முடைய வாக்குத்தத்தங்களில் நீர் பிரமாணிக்கரா

யிருக்கிறபடியால் உம்மை நம்புகிறேன். தேவரீர் மட்டில்லாத சிநேகத்துக்குப் பாத்திரமாயிருக்கிறபடியால், என் முழு இருதயத்தோடு உம்மைச் சிநேகிக்கிறேன். பின்னையும் உம்மைப்பற்றி என்னை நான் சிநேகிக்குமாப்போலே மற்றெல்லோரையும் சிநேகிக்கிறேன்.

சர்வேசுரன் உனக்குச் செய்த உபகாரங்களுக்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துவாயாக.

ஆ என் ஆண்டவரே! தேவரீர் என்னை ஆசீர்வதித்து எனக்குச் செய்தருளின விலை மதிக்கப்படாத சகல சகாய உபகாரங்களுக்காகவும், என்னால் இயன்றமட்டும் தேவரீருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தும்படி எனக்கு ஒத்தாசை செய்தருளும். தேவரீர் நித்தியகாலமாய் என்மேல் நினைவுகூர்ந்து என்னைச் சிநேகித்தீர். என்னை ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டாக்கினீர். என்னை மீட்டிரட்சிக்கும்பொருட்டு உம்முடைய நேசகுமாரனை அவமானம் நிறைந்த சிலுவை மரணத்துக்குள்ளாகும்படி கையளித்தீர். என்னை உமது சத்திய திருச்சபையில் சேர்த்துக்கொண்டீர். என் அக்கிரம துரோகங்களால் நான் உமது கோபாக்

னைக்குப் பாத்திரமாயிருந்தாலும் தேவரீர் என்னை நித்திய நரக பாதாளத்தில் விழவொட்டாமல் காப்பாற்றினீர். நான் உமக்குத் துரோகஞ் செய்வதை இன்னும் விடாமலிருந்தாலும், தேவரீர் தயவாய் என்னைச் சகித்துக்கொண்டு வருகிறீர். தேவரீர் எனக்குச் செய்த எண்ணிறந்த உபகாரங்களுக்காகவும், விசேஷமாய் இன்று செய்தருளின சகாயங்களுக்காகவும், தேவரீருக்கு என்ன பிரதி நன்றி செலுத்துவேன்? சம்மனசுக்களும் அர்ச்சியசிஷ்டவர்களுமாகிய சகல மோக்ஷவாசிகளே! நீங்களெல்லோரும் என்னோடே ஏகோபித்து, நீசவஸ்துவாகிய அபாத்திர சிருஷ்டியாகிய அடியேனுக்கு இரக்கம் நிறைந்த ஆண்டவர் செய்த எண்ணிறந்த உபகாரங்களுக்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தும்படி உங்களைக் கெஞ்சி மன்றாடுகிறேன்.

பர. பிரி. திரி.

☞ நீ இன்றைக்குக் கட்டிக்கொண்ட பாவங்களெல்லாம் உன் நினைவில் வரும்படியாக தேவ உதவியை இரந்து கேட்பாயாக.

சகலருக்கும் நீதித் தீர்வையிடுபவராகிய சர்வேசுரா, பாவிகள் தங்கள் பாவாக்கிரமங்களில் மூர்க்கராய்ச் சாகாமல் அவர்கள்

மனந்திரும்பி ஈடேறவேண்டுமென்று தேவரீர் தயா சித்தமாயிருக்கிறபடியால், பாவியாகிய அடியேன் இன்று என் நினைவு, வாக்கு, கிரியைகளால் கட்டிக்கொண்ட பாவங்களை நினைத்து அவைகளுக்காக மெய்யான துக்க மனஸ்தாபப்படும்படி என் புத்திக்கு உமது ஞான ஒளியையும் என் மனதுக்கு உமது அநுக்கிரகப்பிரசாத உதவியையும் தந்தருளவேண்டுமென்று மன்றாடுகிறேன்.

(உன் ஆத்துமத்தைப் பரிசோதித்து நீ இன்று எவ்விடத்தில், யாராரோடு பேசிப் புழங்கினாயென்று யோசித்து, அந்தந்த சமயங்களில் சர்வேசுரனுக்கும், பிறருக்கும், உனக்கும் விரோதமாக நீ கட்டிக்கொண்டிருக்கும் குற்றந் தப்பிதங்களை ஞாபகப்படுத்திக்கொள். உன் அந்தஸ்துக் கடமைகளையும் சுமுத்திரையாய்ச் செய்து முடித்தாயோ என்று பார்த்துக்கொள்)

முதலாவது: **சர்வேசுரனுக்கு விரோதமாக.**— வேத கடமைகளை நிறைவேற்றாமல் விட்டதும், அல்லது அசட்டையாய் நிறைவேற்றினதும், செபத்தில் அனாசாரமாயிருந்ததும், பொருந்திய மனதோடு பராக்காயிருந்ததும், தேவ ஏவுதல்களையும் நல்ல

விசாரங்களையும் புறக்கணித்ததும், ஆணையிட்டதும், முறைப்பாடு பேசினதும், தேவசித்தத்துக்கு அமையாதிருந்ததும், அவநம்பிக்கைப்பட்டதும் ஆகிய இவைகளில் சற்று நேரம் உன் ஆத்துமத்தைச் சோதித்துக் கொள்.

இரண்டாவது: **பிறருக்கு விரோதமாக:**—அவர்கள் செய்கைகளின்மேல் அநியாயமாய்க் குறை கூறினதும், அவர்களைப் பகைத்தல், பொறுமைப்படல், கோபங்கொள்ளல், தூஷணித்து நிந்தித்தல், கேடு நினைத்தல், அவதூறு சொல்லல், பழித்தல் அபாண்டஞ் சொல்லல், பிறர் பொருளுக்கும் கீர்த்திக்கும, நஷ்டம் வருவித்தல், இடறலாயிருத்தல், பிரசித்த துர்மாதிரிகையாயிருத்தல், கீழ்ப்படியாமை, சங்கை மரியாதையின்மை, பிறர் சிநேகத்துக்கும் பிரமாணிக்கத்துக்கும் பொருந்தாத நடக்கை முதலியன. இவைகளிலும் சற்று ஆத்துமசோதனை செய்வாயாக.

மூன்றாவது: **தனக்கு விரோதமாக:**—பெருமை, சலாக்கியம், முகத்தாக்ஷணியம், பொய், கற்புக்கு விரோதமான, நினைவு, ஆசை, பேச்சு, கிரியை, போசனத்தில் மட்டுத்தவறல், கோபாத்திரத்தை அடக்காதிருத்தல்,

சோம்பி சுகப்பிரியமாய்த் திரிந்து காலத்தை வீணாக்கல், தன் அந்தஸ்துக்கடமைகளை அசட்டை செய்தல் இவைகளின்பேரிலும் சிறிதுநேரம் உன் உள்ளத்தைச் சோதித்துக் கொள்.

ஆத்துமசோதனைக்குப்பின் சொல்லத்தக்க செபம்.

அளவில்லாத சகல நன்மை சுரூபியுமாய் அளவின்றிப் பாவத்தைப் பகைக்கிறவருமாகிய என் சர்வேசுரா சுவாமி, தேவரீருக்குப் பொருந்தாத துரோகங்களை பாவி நான் செய்தபடியினாலே மிகவும் மனநொந்து, என் சகல பாவங்களுக்காகவும் அழுது மனஸ்தாபப்படுகிறேன். சேசுக்கிறீஸ்துநாதருடைய மட்டில்லாத கிருபையைப்பார்த்து தேவரீர் அடியேனுக்கு இரங்கிப் பொறுத்தல் அளிக்கவேண்டுமென்று மகா தாழ்ச்சி விநயத்தோடு மன்றாடுகிறேன். தேவரீருடைய வரப்பிரசாத உதவியால் என் பாவங்களை வெறுத்து அவைகளுக்காக தபசுபண்ணுவேனென்றும் இனி ஒருபோதும் உமக்குத் துரோகஞ் செய்யமாட்டேனென்றும் உறுதியான பிரதிக்கினை செய்கிறேன்.

சர்வத்துக்கும்வல்ல சர்வேசுரனுடனே... ....(10-ம் பக்கம் பார்க்கவும்.)

சத்திய திருச்சபைக்காக வேண்டுதல்.

சர்வேசுரா சுவாமி, எங்கள் பரிசுத்த பிதாவாகிய அர்ச். பாப்பானவருக்காகவும், எங்கள் மேற்றிராணிமார், குருக்களுக்காகவும், எங்கள்மேல் அதிகாரமுள்ளவர்களுக்காகவும் நாங்கள் செய்யும் வேண்டுதல்களைத் தயவாய்க் கேட்டருளும். பரிசுத்த கத்தோலிக்குத் திருச்சபை முழுவதையும் தேவரீர் ஆசீர்வதிக்கும்படி உம்மை மன்றாடுகிறேன். சகல பதிதர், பிரிவினைக்காரர், அவவிசுவாசிகளையும் மனந்திருப்பியருளும். என்னைச் சேர்ந்தார் சிநேகிதர்களையும், எனக்கு அறிமுகமானவர்களையும், யாராவது எனக்கு விரோதமாயிருந்தால் அவர்களையும் தேவரீர் கிருபையாய் நோக்கி அவர்கள்மேல் உமது ஆசீர்வாதங்களைப் பொழிந்தருளும். தரித்திரர், நோவாளிகள், மரண அவஸ்தைப்படுகிறவர்கள், இவர்களுக்கும் உதவி புரிந்தருளும். ஓ! இரக்கமும் நன்மையும் நிறைந்த ஆண்டவரே, உத்தரிக்கிற ஸ்தலத்திலே வேதனைப்படுகிற ஆத்துமாக்களின்மேல் கிருபையாயிரும். அவர்களுடைய வேதனையை நீக்கி, அவர்களுக்கு நித்திய பிரகாசத்தையும், இளைப்பாற்றியையும், மோக்ஷ பாக்கியத்தையும் கட்டளையிட்டருளும்.

ஆமென்சேசு.

ஆண்டவரே, என் நித்திரையை ஆசீர்வதித்து, என் சரீரம் மறுபடி பலங்கொண்டு எழுந்து உமக்கு அதி உத்தமமாய் ஊழியம்பண்ணும்படி உதவிபுரிந்தருளும்.

ஓ! பரிசுத்த கன்னிமரியாயே, இரக்கத்துக்கு மாதாவே, இந்த இராத்திரியில் என்னை ஆத்தும சரீர பொல்லாப்புகளிலிருந்து காப்பாற்றியருளும்.

பரிசுத்த பிதாவாகிய அர்ச். சூசையப்பரோ, அதிதூதரான அர்ச். மிக்கேலே, தேவதூதர்களும் அர்ச்சியசிஷ்டவர்களுமாகிய சகல மோக்ஷவாசிகளே, எனக்குக்காவலான சம்மனசானவரே, எனக்குப் பாதுகாவலரான அர்ச்சியசிஷ்டவரே, என்னைச் சகல தின்மைகளிலும் நின்று காத்தருளுங்கள். இப்பொழுதும் எப்பொழுதும் என்னை உங்களுடைய அடைக்கலத்தில் வைக்கிறேன்.

ஆமென்சேசு.

பரிசுத்தரே, பரிசுத்தரே, பரிசுத்தரே, தளங்களுக்குக் கர்த்தராகிய சர்வேசுரா, உலகமெல்லாம் உமது மகிமையால் நிறைந்திருக்கிறது. பிதாவுக்கும், சுதனுக்கும், இஸ்பிரீத்துசாந்துவுக்கும் தோத்திரமுண்டாவதாக,—ஆமென்சேசு.

அர்ச். தேவமாதாவின் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலேயிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரா,

அர்ச். தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,

அர்ச். மரியாயே,

சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே,

கன்னியாஸ்திரிகளுக்குள்ளே உத்தம அர்ச். கன்னிகையே,

எங். வேண்.

கிறீஸ்துவினுடைய மாதாவே,

தேவ வரப்பிரசாதத்தின் மாதாவே,

மகா பரிசுத்த மாதாவே,

அத்தியந்த விரத்தியாயிருக்கிற மாதாவே,

பழுதற்ற கன்னியாஸ்திரியாயிருக்கிற மாதாவே,

கன்னிசுத்தங்கெடாத மாதாவே,

மகா அன்புக்குப் பாத்திரமாயிருக்கிற மாதாவே,

ஆச்சரியத்துக்குரிய மாதாவே,

நல்லாலோசனை மாதாவே,

சிருஷ்டிகருடைய மாதாவே,

இரட்சகருடைய மாதாவே,

மகா புத்தியுடைத்தான கன்னிகையே,

மகா வணக்கத்துக்குரிய கன்னிகையே,

பிரகாசமாய்ஸ்துதிக்கப்பட யோக்கியமாயிருக்கிற கன்னிகையே,

சக்தியுடையவளாயிருக்கிற கன்னிகையே,

தயையுள்ள கன்னிகையே,

விசுவாசியாயிருக்கிற கன்னிகையே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

தருமத்தினுடைய கண்ணாடியே,
ஞானத்துக்கு இருப்பிடமே,
எங்கள் சந்தோஷத்தினுடைய காரணமே,
ஞான பாத்திரமே,
மகிமைக்குரிய பாத்திரமே,
அத்தியந்தபத்தியுடைத்தான பாத்திரமே,
தேவ இரகசியத்தைக் கொண்டிருக்கிற உரோசாவென்கிற புஷ்பமே,
தாவீதுராசாவுடைய உப்பரிகையே,
தந்தமயமாயிருக்கிற உப்பரிகையே,
சொர்ணமயமாயிருக்கிற ஆலயமே,
வாக்குத்தத்தத்தின் பெட்டியே,
பரலோகத்தினுடைய வாசலே,
விடியற்காலத்தின் நக்ஷத்திரமே,
வியாதிக்காரருக்கு ஆரோக்கியமே,
பாவிகளுக்கு அடைக்கலமே,
கஸ்திப்படுகிறவர்களுக்கு தேற்றரவே,
கிறீஸ்துவர்களுடைய சகாயமே,
சம்மனசுக்களுடைய இராக்கினியே,
பிதாப் பிதாக்களுடைய இராக்கினியே,
தீர்க்கதரிசிகளுடைய இராக்கினியே,
அப்போஸ்தலர்களுடைய இராக்கினியே,
வேதசாட்சிகளுடைய இராக்கினியே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

ஸ்துதியருடைய இராக்கினியே,
கன்னியாஸ்திரிகளுடைய இராக்கினியே,
சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய இராக்கினியே,
ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்த இராக்கினியே,
திருச்செபமாலை இராக்கினியே,

எங். வேண்டிக்.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே.—எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே.—எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே.—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

சுவாமீ, கிருபையாயிரும்.
கிறீஸ்துவே, கிருபையாயிரும்.
சுவாமீ, தயவாயிரும்.

சர்வேசுரனுடைய அர்ச்சியசிஷ்ட மாதாவே, இதோ உம்முடைய சரணமாக ஓடிவந்தோம். எங்கள் அவசரங்களிலே நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு நீர் பராமுகமாயிராதேயும். ஆசீர்வதிக்கப்பட்டவளுமாய் மோட்சம் உடையவளுமாயிருக்கிற நித்திய கன்னிகையே, சகல ஆபத்துக்களிலே நின்று எங்களைத் தற்காத்துக்கொள்ளும்.

முதல்—சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரமாயிருக்கத்தக்கதாக.

துணை.—சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சுவாமீ, முழுமனதோடே தண்டனாக விழுந்துகிடக்கிற இந்தக் குடும்பத்தைப் பார்த்து எப்பொழுதும் பரிசுத்த கன்னிகையான முத்திப்பேறுபெற்ற மரியாயுடைய வேண்டுதலினாலே சகல சத்துருக்களின் சர்ப்பனைகளிலே நின்று பிரசன்னராய்த் தயைசெய்து இரக்ஷியும். இந்த மன்றாட்டுகளை எல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப்பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென் சேசு.

சாதாரண திருப்பூசையில் சொல்லப்படும் செபங்கள்.

"அஸ்பெர்ஜெஸ்" அல்லது, தீர்த்தம் தெளிக்கும்போது சொல்லும் செபம்.

ஆண்டவரே! நீர் ஈசோப்பென்னும் புல்லினால் என்மேல் தெளித்தருளுவீர். நானும் சுத்தமாவேன். நீர் என்னைக் கழுவுவீர். வெண்பனிக்கட்டியிலும் தூய்மையாவேன்.

ஆண்டவரே, உமது இரக்கத்தின் விசாலத்துக்குத் தக்கபடி என்மேல் கிருபையாயிரும்.

பிதாவுக்கும், சுதனுக்கும், இஸ்பிரீத்துசாந்துவுக்கும் தோத்திரமுண்டாகக்கடவது.

ஆதியிலே இருந்ததுபோல் இப்பொழுதும் எப்பொழுதும் அனவரதகாலம் ஸ்துதியும் தோத்திரமும் உண்டாகக்கடவது.

நீர் என்மேல் தெளித்தருளுவீர்.

குருபீடத்தின் படியண்டை திரும்பிவந்து சொல்வது—

குரு. ஆண்டவரே, உமது இரக்கத்தை எங்களுக்குக் காண்பித்தருளும்.

சீஷன். உம்முடைய இரக்ஷிப்பை எங்களுக்கு அளித்தருளும்.

கு. ஆண்டவரே, என் மன்றாட்டைக்
கேட்டருளும்.
சீ. என் அபயசத்தம் உமது சந்நிதிமட்
டும் வரக்கடவது.

கு. ஆண்டவர் உன்னோடு இருப்பாராக.
சீ. உம்முடைய விருப்பத்தின்படியே
ஆண்டவர் உம்மோடும் இருப்பாராக.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வ வல்லபரான பிதாவே, நித்திய கடவு
ளான பரிசுத்தமாகிய கர்த்தாவே, எங்கள்
விண்ணப்பத்தைக் கேட்டு, இந்த ஆலயத்
தில் கூடியிருக்கும் எல்லோரையும் பாது
காத்து, போஷித்து, காப்பாற்றி, சந்தித்து,
தற்காக்கும்படி உம்முடைய பரிசுத்த சம்
மனசானவரை பரலோகத்தினின்று அனுப்
பும்படி இரந்து மன்றாடுகிறோம். இந்த மன்
றாட்டுகளை உம்முடைய திருக்குமாரனும் எங்
கள் ஆண்டவருமாகிய சேசுக்கிறீஸ்துவின்
பேராலே எங்களுக்குத் தந்தருளும். ஆமென்
சேசு.

பாஸ்குத்திருநாள் முதல் இஸ்பிரீத்து
சாந்து திருநாள் முடிய மேலே கூறிய பாடலுக்குப்
பதில் அடியில் வரும் பாடல் வழங்கப்படும்.

தேவாலயத்தில் வலது பக்கத்திலிருந்து
தண்ணீர் ஓடக்கண்டேன். அல்லேலூயா.

அந்தத் தண்ணீர் எவர்களிடம் வந்ததோ
அவர்கள் எல்லோரும் இரக்ஷிக்கப்பட்டார்
கள். அவர்கள் அல்லேலூயாவென்று
சொல்வார்கள்.
ஆண்டவரை ஸ்துதியுங்கள். ஏனெனில்
அவர் நல்லவராயிருக்கிறார். மேலும் அவரு
டைய கிருபை எக்காலமும் நிலைத்திருக்கும்.
பிதாவுக்கும், சுதனுக்கும், இஸ்பிரீத்து
சாந்துவுக்கும் தோத்திரமுண்டாகக்கடவது.
ஆதியிலே இருந்ததுபோலே இப்பொழுதும்
எப்பொழுதும் அநவரதகாலம் ஸ்துதியும்
தோத்திரமும் உண்டாகக்கடவது.

குரு பீடத்தில் நின்று, தலைவணங்கி,
தமது நெற்றிமுதல் மார்புவரையில் சிலுவை
வரைந்து தெளிவான குரலோடு சொல்லுகிற
செபம் :—
பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்
பிரீத்து சாந்துவுடையவும் நாமத்தினாலே
ஆமென்சேசு.

பிறகு இரு கைகளையும் குவித்துச் சொல்வது.

கு. ஆண்டவருடைய திருப்பீடத்தில் பிர
வேசிப்பேன்.
சீ. என்னுடைய வாலப்பிராயத்தை
மகிழ்ச்சிப்படுத்தும் ஆண்டவரிடத்தில் பிர
வேசிப்பேன்.

42-ம் சங்கீதம்.

கு. சர்வேசுரா! தேவரீர் பத்தியற்ற ஜனங்களுக்கு விரோதமாய் என் நியாயத்தை விசாரித்துக்கொள்ளும்; கெட்டவனும், கபடுள்ளவனுமாகிய மனிதனிடத்தினின்று என்னை விடுதலையாக்கும்.

சீ. நீர் என் தேவனும் பலமுமாயிருக்க ஏன் என்னைத் தள்ளிவிட்டீர்? என் சத்துரு என்னைத் துன்பப்படுத்தும்போது ஏன் நான் துக்கங்கொண்டு நடக்கிறேன்?

கு. உமது பிரகாசத்தையும் உண்மையையும் அனுப்பியருளும்; அவைகள் பரிசுத்த பருவதத்திலும் உமது வாசஸ்தலங்களிலும் என்னைக் கூட்டிக்கொண்டுபோய் மறுபடியும் கூட்டிக்கொண்டு வாரும்.

சீ. ஆண்டவருடைய பீடத்தில் என் வாலப் பிராயத்தை மகிழ்ச்சிப்படுத்தும் சர்வேசுரனிடத்தில் பிரவேசிப்பேன்.

கு. ஓ! ஆண்டவரே, என் தேவனே, நான் உம்மை வீணையில் துதிப்பேன். என் ஆத்துமமே! ஏன் கஸ்தியாயிருக்கிறாய்? ஏன் எனக்குக் கலக்கம் கொடுக்கிறாய்?

சீ. நான் இன்னும் தேவனை துதிப்பேனாகையால் அவர்பேரில் நம்பிக்கையாயிரு.

(அவரே) எனக்கு இரட்சிப்பும் என் தேவனுமா(யிருக்கிறார்.)

கு. பிதாவுக்கும், சுதனுக்கும், இஸ்பிரீத்து சாந்துவுக்கும் தோத்திரமுண்டாகக் கடவது.

சீ. ஆதியிலே இருந்ததுபோல இப்போதும் எப்போதும் அனவரதகாலம் ஸ்துதியும் தோத்திரமும் உண்டாகக்கடவது, ஆமென்.

கு. ஆண்டவருடைய திருப்பீடத்தில் பிரவேசிப்பேன்.

சீ. எனது வாலப்பிராயத்தை மகிழ்ச்சிப்படுத்தும் ஆண்டவரிடத்துக்குப் போவேன்.

கு. ஆண்டவருடைய திருநாமமே எனக்கு ஆதாரமாயிருக்கிறது.

சீ. அவரே வானத்தையும் பூமியையும் படைத்தார்.

கு. சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரனுடனேயும், எப்போதும் கன்னியாயிருக்கிற முத்திப்பேறுபெற்ற மரியாயுடனேயும், பிரதான சம்மனசாயிருக்கிற முத்தனான மிக்கேலுடனேயும், ஸ்நாபகனாயிருக்கிற முத்தனான அருளப்பருடனேயும், அப்போஸ்தலராயிருக்கிற அர்ச். இராயப்பருடனேயும், சின்னப்பருடனேயும், சகல அர்ச்சியசிஷ்டவர்களுடனேயும், (எனக்குக் குருவாயிருக்கிற உம்முடனேயும்,

னையும்) பாவசங்கீர்த்தனம் பண்ணிக் கொள்ளுகிறேன். அதேதென்றால் என் சிந்தையினாலேயும், வாக்கினாலேயும், கிரியையினாலேயும் மகா பாவங்களைச் செய்தேனே, என் பாவமே, என் பாவமே, என் பெரும் பாவமே. ஆகையால் எப்பொழுதும் கன்னியாயிருக்கிற முத்திப்பேறுபெற்ற மரியாயையும், பிரதான சம்மனசாயிருக்கிற முத்தனான மிக்கேலையும், ஸ்நாபகனாயிருக்கிற முத்தனான அருளப்பனையும், அப்போஸ்தலராயிருக்கிற அர்ச். இராயப்பனையும், சின்னப்பனையும், சகல அர்ச்சியசிஷ்டவர்களையும் (எனக்குக் குருவாயிருக்கிற உம்மையும்) நம்முடைய கர்த்தராகிய சர்வேசுரனிடத்தில் எனக்காக வேண்டிக்கொள்ள வேணுமென்று மன்றாடுகிறேன், ஆமென்சேசு.

சீ. சர்வ வல்லபமுள்ள ஆண்டவர் உமது பேரில் இரக்கமாயிருந்து, உம்முடைய பாவங்களைப் பொறுத்து உம்மை நித்திய ஜீவியத்துக்குள் பிரவேசிப்பிப்பாராக.

கு. ஆமென்.

சீ. சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரனுடனேயும்...மற்றதும்.

கு. சர்வ வல்லபமுள்ள ஆண்டவர் உங்கள்பேரில் இரக்கமாயிருந்து உங்க

ளுடைய பாவங்களைப் பொறுத்து உங்களை நித்திய ஜீவியத்துக்குள் பிரவேசிப்பிப்பாராக.

சீ. ஆமென்.

கு. சர்வ வல்லபமும், அதிக இரக்கமுமுள்ள ஆண்டவர் நம்முடைய பாவங்களுக்கு மன்னிப்பளித்து பொறுத்தல் தந்து நம்மை பாவத்தினின்று சுத்தப்படுத்துவாராக.

சீ. ஆமென்.

கு. ஓ! ஆண்டவரே! எங்கள் பக்கம் உமது கிருபைக் கண்களைத் திருப்பினபடியால் எங்களுக்குப் பலத்தைத் தந்தருளும். (நித்திய ஜீவிய வரப்பிரசாதத்துக்குட்படுத்துவீராக.)

சீ. உம்முடைய ஜனங்களும் உம்மிடத்தில் அகமகிழ்வார்கள்.

கு. ஓ! ஆண்டவரே, உமது இரக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும்.

சீ. உம்முடைய இரட்சண்ணியத்தை எங்களுக்குத் தந்தருளும்.

கு. ஓ! ஆண்டவரே, என் மன்றாட்டைக் கேட்டருளும்.

சீ. என் அபய சத்தம் உமது சந்நிதி மட்டும் வரக்கடவது.

கு. ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

சீ. உம்முடைய விருப்பத்தின்படியே ஆண்டவர் உம்மோடும் இருப்பாராக.

குருவானவர் பலிபீடத்துக்கு ஏறிப்போகையில் சொல்வதாவது.

எங்கள் பாவதோஷங்களை எங்களிடத்திலிருந்து நீக்கியருளும். ஆண்டவரே! நாங்கள் சுத்தமனதோடு உம்முடைய மகா பரிசுத்த பலிபீடத்துக்கு வர பாத்திரவான்களாகும்படியாக உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு முகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.

குருவானவர் பீடத்துக்குமுன் தலை குனிந்து சொல்லுவதாவது:—ஓ! ஆண்டவரே, இங்கிருக்கும் அர்ச்சியசிஷ்ட பண்டத்துக்குரிய அர்ச்சியசிஷ்டவர்களுடையவும் சகல அர்ச்சியசிஷ்டவர்களுடையவும் பேறுபலன்களினால் நீர் என்னுடைய எல்லாப் பாவங்களையும் மன்னிக்கத் தயவுசெய்தருளவேணுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன்.—ஆமென்.

குருவானவர் "இந்திராயிற்" வாசிக்கும்போது சொல்வதாவது.

ஆண்டவருடைய திருநாமம் இப்போதும்
எப்போதும் புகழப்படக்கடவது. உதய
காலமுதல் அஸ்தமிக்கும்வரை ஆண்டவ
ருடைய திருநாமத்துக்குப் புகழ்ச்சியும்
வாழ்த்துதலும் உண்டாகக்கடவது. உந்நத
பரமண்டலங்களில் வசிப்பவரும், பரலோ
கத்திலும் பூலோகத்திலும் உள்ள தாழ்ச்சி
யுள்ளவர்களை கிருபையோடு நோக்கும்
நிகரற்ற கர்த்தரும் எங்கள் ஆண்டவருமாகிய
சர்வேசுரனுக்கு தோத்திரமுண்டாகக்கட
வது. பிதாவுக். சுதனுக். மற்றதும்.

"கீரியே" என்ற செபம்.

கு. சுவாமி எங்கள்பேரில் தயவாயிரும்.
சீ. சுவாமி எங்கள்பேரில் தயவாயிரும்.
கு. சுவாமி எங்கள்பேரில் தயவாயிரும்.
சீ. கிறீஸ்துவே எங்கள்பேரில் தயவாயிரும்.

கு. கிறீஸ்துவே எங்கள்பேரில் தயவாயிரும்.

சீ. கிறீஸ்துவே எங்கள்பேரில் தயவாயிரும்.

கு. சுவாமி எங்கள்பேரில் தயவாயிரும்.
சீ. சுவாமி எங்கள்பேரில் தயவாயிரும்.

கு. சுவாமி எங்கள்பேரில் தயவாயிரும்.

"கிளோரியா" என்ற மந்திரம்.

பரலோகத்தில் உந்நத பரம கடவுளுக்குத் துதியும், பூலோகத்தில் சுத்தமனதுடையோருக்குச் சமாதானமும் உண்டாவதாக. ஆண்டவரே, நாங்கள் உம்மைப் புகழ்கிறோம், உம்மை ஸ்துதிக்கிறோம், உம்மை மகிமைப்படுத்துகிறோம். உமது பிரதாப மகத்துவத்துக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகிறோம். ஓ! பரம கடவுளே, பரலோக இராஜாவே, சர்வ வல்லபமுள்ள பரம பிதாவே, ஓ! ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவே, அவதரித்த ஏகசுதனே, பரம கடவுளே, உலக பாவங்களைப் போக்குகிற பிதாவாகிய சர்வேசுரனுடைய திவ்விய செம்மறிப்புருவையே, எங்கள்பேரில் இரக்கமாயிரும். உலக பாவங்களை மன்னிக்கிற ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும். பிதாவாகிய சர்வேசுரனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் திவ்விய இரட்சகரே, எங்கள்பேரில் இரக்கமாயிரும். ஏனெனில், நீரே பரம கர்த்தர், நீரே ஏக பரிசுத்தர். ஓ! திவ்விய சேசுவே நீரே இஸ்பிரீத்துசாந்துவோடு பிதாவாகிய சர்வேசுரனால் மகிமையில் அதிகமாய் உயர்த்தப்பட்டிருக்கிறீர். ஆமென்.

குருவானவர் சபையைப்பார்த்து சொல்லுதல்.

கு. ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.
சீ. உம்முடைய விருப்பத்தின்படியே ஆண்டவர் உம்மோடும் இருப்பாராக.

குருவானவர் "கலெக்ட்" என்ற செபம் வாசிக்கும்போது சொல்லத்தகும் செபம்.

ஓ! சர்வ வல்லபரும் நித்தியருமாகிய சர்வேசுரா, உம்முடைய திருச்சபையின் பேராலும் உமது ஜனங்கள்பேராலும் உமக்கு திவ்விய பலி ஒப்புக்கொடுக்கிற உமது ஊழியனாகிய குருவானவருடைய விண்ணப்பங்களுக்கு தயவாய்ச் செவிகொடுக்க உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். உம்முடைய திருநாமத்தின் மேன்மைக்கும் ஆத்துமாக்களின் நன்மைக்கும் அம்மன்றாட்டுக்களைத் தயவாய் ஏற்றுக்கொண்டு எங்கள் இரட்சண்ணியத்துக்கு அவசியமான இஷ்டப்பிரசாதங்களை எங்களுக்குத் தந்தருளும் ஆண்டவரே. ஆமென்.

குருவானவர் நிருபம் வாசிக்கும்போது.

உம்முடைய மகிமைக்கும் எங்களுடைய மகா நன்மைக்குமுரிய ஆச்சரியமான தேவ ரகசியங்களை உம்முடைய பரிசுத்த தீர்க்க

தரிசிகளுக்கும் அப்போஸ்தலர்களுக்கும் வெளிப்படுத்தி அறிவிக்கச் சித்தமான ஆண்டவரே! நித்திய புகழ்ச்சியும் ஸ்துதியும் சதா உமக்கு உண்டாகக்கடவது. அவர்களுடைய வார்த்தைகள் உம்முடைய வார்த்தைகளானபடியால், அவைகளை நாங்கள் உறுதியாக விசுவசிக்கிறோம். அவர்கள் போதிக்கும் கற்பனைகளைக் கண்டுபிடித்து அவைகளின்படி நாங்கள் எங்கள் சீவிய காலங்களில் நடந்து மரணவேளையில் உம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நித்திய மோட்சபாக்கியத்தில் நாங்கள் சேரும் பாக்கியம் எங்களுக்குக் கிடைக்கும்படிக்கு உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். ஆமென்.

குருவானவர் நிருபம் வாசித்து முடித்தபின் சீஷன் மறுமொழி சொல்வதாவது.

சர்வேசுரனுக்குத் தோத்திரம்.

குருவானவர் "கிராடுயல் அல்லது டிராக்ட்" வாசிக்குபோது.

ஓ ஆண்டவரே, உலகமெங்கும் உம்முடைய திருநாமம் எவ்வளவு வியப்பை வருவிக்கின்றது! எக்காலங்களிலும் ஆண்டவரை ஸ்துதிப்பேன். என் நாவானது எப்போதும் அவரைப் புகழக்கடவது. நீரே என் ஆண்டவரும் என் ஆதரவுமாயிருக்கிறீர்.

உம்மிடத்திலேயே என் முழு நம்பிக்கையை வைத்திருக்கிறேன். நான் ஒருபோதும் மனங்கலங்காதிருக்கும்படி செய்தருளும்.

சுவிசேஷம் வாசிக்குமுன்.

எரிகிற கங்கினால் தீர்க்கதரிசியான இசெயாஸ் என்பவருடைய இதழ்களைச் சுத்தஞ்செய்த சர்வ வல்லபமுள்ள சர்வேசுரா, என் இருதயத்தையும் என் இதழ்களையும் சுத்தமாக்கும். உம்முடைய பரிசுத்த சுவிசேஷத்தை நான் தக்க வணக்கத்தோடு கவனிக்கும்படிக்கு என்னைச் சுத்தமாக்க உம்முடைய தயவுள்ள இரக்கத்தைக் குறித்து உம்மை மன்றாடுகிறேன். இந்த மன்றாட்டுக்களை எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும். ஆமென்.

உம்முடைய சுவிசேஷத்தை நான் தக்க வணக்கத்தோடும் சங்கையோடும் கவனிக்கும்படியாய், ஆண்டவரே, நீர் என் இருதயத்திலும் என் நாவிலும் குடிகொண்டிருப்பீராக. ஆமென்.

கு. ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

சீ. உம்முடைய விருப்பத்தின்படியே ஆகக்கடவது.

ஆ. அர்ச்...... ......வர் எழுதின பரிசுத்த சுவிசேஷத்தின் துவக்கம் (அல்லது) தொடர்ச்சிப்பிரகாரம்.

சீ. ஆண்டவரே, உமக்கு மகிமை உண்டாகக்கடவது.

சுவிசேஷம் வாசிக்கும்பொழுது.

உம்முடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டும் அப்போஸ்தலர்களைக்கொண்டும் எங்களுக்கு உம்முடைய திவ்வியகற்பனைகளைப் போதித்தது போதாதென்று கருதி, உம்முடைய ஏககுமாரனும் எங்கள் இரட்சகருமாகிய சேசுக்கிறீஸ்துநாதர்வழியாய் உமது திருக்குமாரனுக்கு நாங்கள் காதுகொடுக்கும்படி வானத்திலிருந்து சப்தமிட்டு கட்டளை கொடுத்து எங்களோடுபேச தயவுபுரிந்த ஆண்டவரே, நீர் எக்காலமும் ஆராதிக்கப்பட்டு புகழப்படுவீராக. எங்கள் இரட்சகருடைய திவ்விய போதனைகளால் நாங்கள் மோட்சம் அடைய எங்களுக்கு வேண்டிய இஷ்டப்பிரசாதத்தை தயவாய் அளித்தருளும்.

திவ்விய சேசுவே, உம்மைக்குறித்து சுவிசேஷத்தில் எழுதப்பட்ட யாவும் உண்மையேயொழிய வேறல்ல; அப்படியே உம்முடைய திவ்விய கிரியைகளில் அள-

வில்லா ஞானமும், நீர் செய்த அற்புதங்களில் மட்டற்ற வல்லபமும் நன்மைத்தன்மையும், நீர் காண்பித்த திவ்விய மாதிரிகைகளில் ஞானவெளிச்சமும் திவ்விய போதகமும் தெளிவாய் விளங்குகின்றன.—பரிசுத்த இரட்சகரே! நீரே நித்திய ஜீவிய வார்த்தையாயிருக்கிறீர். நித்திய உண்மையான ஊற்றான ஆண்டவரே, உம்மையன்றி நாங்கள் வேறே யாரிடம் போவோம்? நீர் போதித்த யாவையும் நாங்கள் உறுதியாக விசுவசிக்கிறோம். உமது கற்பனைகளை நுணுநுணுக்கமாய் அநுசரிக்கவும், நீர் ஆசிப்பதை செய்துமுடிக்கவும் வேண்டிய வரத்தைமாத்திரம் எங்களுக்குத் தந்தருளும் ஆண்டவரே, ஆமென்.

சுவிசேஷ முடிவில்.

சீ. ஓ ஆண்டவரே! உமக்குப் புகழ்ச்சியுண்டாவதாக.

அதன்பின் குருவானவரோடு மெதுவாய் சொல்லத்தக்கதாவது.

சுவிசேஷ வார்த்தைகளின் பலத்தால் எங்கள் பாவங்களெல்லாம் கழுவப்படக்கடவது.

"நைசீன் விசுவாசமந்திரம்."

பரலோகத்தையும் பூலோகத்தையும், அதுகளில் அடங்கிய காணக்கூடியதும் காணக்கூடாததுமான சகல வஸ்துக்களையும் சிருஷ்டித்த சர்வ வல்லபமுள்ள பிதாவாகிய ஒரே சர்வேசுரனை விசுவசிக்கிறேன். அவருடைய ஏகசுதனாகிய சேசுக்கிறீஸ்துவாகிய ஒரே சர்வேசுரனையும் விசுவசிக்கிறேன். அவர் காலாகாலங்களுக்குமுன் பிதாவினிடத்திலிருந்து பிறந்திருக்கிறார். அவர் சர்வேசுரனிடத்திலிருந்து உண்டான சர்வேசுரன், அவர் வெளிச்சத்தின் வெளிச்சம், அவர் மெய்யான சர்வேசுரனின் மெய்யான சர்வேசுரன். அவர் தன்னிலே உண்டானவர். ஒருவராலும் உண்டாக்கப்படவில்லை. சகல பொருட்களையும் உண்டாக்கின பிதாவாகிய சர்வேசுரனுக்கு சகலத்திலும் சரிசமானமானவர். மனிதர்களாகிய நாம் இரட்சண்ணியம் அடைவதற்காக அவர் பரலோகத்திலிருந்து பூலோகத்துக்கு வந்து, இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனால் கன்னிமரியாயிடத்தில் அவதரித்து மனிதனாகப் பிறந்தார். அவர் நமக்காக போஞ்சு பிலாத்தின் அதிகாரத்தின் கீழ் பாடுபட்டு நமக்காக சிலுவையில் அறைபட்டு மரித்து அடக்கப்பட்டார். வேதாகமங்களில் எழு

தப்பட்டிருக்கிறபடியே அவர் மூன்றாம் நாள் உயிர்த்தார். அவரும் பரமண்டலங்களில் ஏறி பிதாவாகிய சர்வேசுரனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார். அவர் சீவியர்களையும் மரித்தோர்களையும் நடுத்தீர்க்க மகிமைப்பிரதாபத்தோடு மறுபடி (இவ்வுலகத்திற்கு) வருவார். அவருடைய இராச்சியம் ஒருபோதும் முடியாது. பிதாவிடத்திலிருந்தும் சுதனிடத்திலிருந்தும் புறப்பட்டுவருகிறவருமாய் சீவியத்துக்குக் காரணருமாயிருக்கிற ஆண்டவராகிய இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனையும் விசுவசிக்கிறேன். அவர் பிதாவோடும் சுதனோடும் ஒன்றாக ஆராதிக்கப்பட்டு மகிமைப்படுத்தப்படுகிறார். அவர் தீர்க்கதரிசிகள் வழியாய்ப் பேசியிருக்கிறார். பொதுவாயிருக்கிறதும் அப்போஸ்தலர்களைப் பின்தொடர்ந்துவருவதுமான ஒரே பரிசுத்த திருச்சபையையும் விசுவசிக்கிறேன். பாவ விமோசனத்துக்காக ஏற்படுத்தப்பட்ட ஞானஸ்நானத்தையும் விசுவசிக்கிறேன். மரித்தோர் உயிர்த்தலையும், மறு உலகத்தின் சீவியத்தையும் விசுவசிக்கிறேன், ஆமென்.

கு. ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

சீ. உம்முடைய விருப்பப்படியே ஆகக்கடவது.

தன்னை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தல்.

பிரார்த்திக்கக்கடவோம்.

ஆ என் சர்வேசுரா! உமது கட்டளைகளை நான் அநுசரிக்கவும், உமது திவ்விய சித்தப் பிரகாரம் நான் அமைந்து நடக்கவும், என்னையும் எனக்குள்ள யாவையும் உமக்கே முழு இருதயத்தோடு ஒப்புக்கொடுக்கிறேன். உமது திவ்விய மகத்துவத்துக்கு ஒப்புக் கொடுக்கப்படப்போகிற பலியின் அளவில்லாத பேறுபலன்களினால் நான் உமது திவ்விய சமூகத்துக்கு ஏற்றவனாகும்படி என்னுடைய பாவங்களைப் போக்கி என் காணிக்கையை தயவாய் ஏற்றுக்கொள்ளும்.

குருவானவர் அப்பத்தை ஒப்புக்கொடுத்தல்.

சர்வ வல்லபரும் நித்தியருமான பரிசுத்த பிதாவாகிய சர்வேசுரா! இந்த மாசற்ற அப்பத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். உம்முடைய அபாத்திரவானான அடியானாகிய நான், என்னுடைய கணக்கற்ற பாவங்களுக்காகவும், குற்றங்களுக்காகவும், அசட்டைத்தனத்துக்காகவும், இங்கு கூடியிருக்கும் சகலருக்காகவும், இன்னும் ஜீவிக்கிறவர்களும் மரித்தவர்களுமான சகல விசுவாசிகளான கிறீஸ்துவர்களுக்காகவும், என்னையும் அவர்களையும் நித்திய ஜீவியத்துக்குள்

ளாக்கும்படியாகவும் இந்த அப்பத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி,

ஆமென்.

குருவானவர் பாத்திரத்திற்குள் திராட்ச ரசமும் தண்ணீரும் வார்க்கும்போது.

மனிதனை ஆச்சரியத்துக்குரிய விதமாய் சிருஷ்டித்து மகிமைப்படுத்தினதுமல்லாமல் இன்னும் அதிக வியப்புக்குரிய விதமாய் அவர்களை இரட்சித்த சர்வேசுரா! இந்த ஜலமும் திராட்ச ரசமும் கலந்ததாகிய பரம ரகசியமானது உம்முடைய திருக்குமாரனும் எங்கள் ஆண்டவருமான சேசுக்கிறீஸ்து நாதர் மனுஷ சுபாவத்தை எடுக்கச் சித்தமாக தயைபுரிந்ததைக் குறிப்பதால், அவருடைய தேவசுபாவத்தில் நாங்களும் பங்காளிகளாகும்படி கிருபைசெய்தருள உம்மோடு சுயஞ்சீவியரும் இராட்சியபாரம் பண்ணுகிற இருவருமாகிய உமது திருக்குமாரனுடைய திருமுகத்தைப்பார்த்து எங்களுக்குத் தந்தருளும்,

ஆமென்.

குருவானவர் பாத்திரத்தில் ரசம் வார்த்து ஒப்புக்கொடுத்தல்.

எங்களுடைய இரட்சண்ணியத்துக்காகவும் சர்வ லோகத்துக்காகவும் பரிமள தூபம்போல உம்முடைய திவ்விய சமூகத்துக்கு

முன் எழும்பிவந்து உமது இரக்கத்தை மன்றாடும் இரட்சண்ணியத்தின் பாத்திரத்தை, ஆண்டவரே, உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம், ஆமென்.

குரு பீடத்துக்குமுன் தலைகுனியும்போது.

ஆண்டவரே, மிகுந்த தாழ்ச்சியும் துக்கமுமுள்ள இருதயமுடைத்தான எங்களை தயவாய் ஏற்றுக்கொள்ளும். உமது திவ்விய சமுகத்துக்குமுன் இன்றைக்கு நாங்கள் ஒப்புக்கொடுக்கும் பரமபலி, ஆண்டவரே, உமக்குப் பிரியமுள்ளதாயிருக்கும்படி செய்தருளும்.

குரு அப்பத்தையும் இரசத்தையும் ஆசீர்வதிக்கும்போது.

சகலத்தையும் அர்ச்சித்தவரும் சர்வவல்லபரும் நித்தியருமாகிய சர்வேசுரா, உமது பரிசுத்த திருநாமத்துக்குத் தோத்திரமாக முஸ்திப்பு செய்யப்பட்ட இந்தப் பலியை தயவாய் வந்து ஆசீர்வதித்தருளும்.

குருவானவர் கைவிரல் சுத்தி செய்யும்போது.

ஆண்டவரே! உத்தமரின் நடுவில் என் கரங்களைக்கழுவி உமது பீடத்தைச் சுற்றி வருவேன்.

நான் உமது துதிகளின் சப்தத்தைக் கேட்டு உமது அதிசயங்களையெல்லாம் சொல்லிக் காட்டும்படிக்கு,

ஆண்டவரே! உமது வீட்டின் அலங்காரத்தையும் உமது மகிமையிருக்கிற இடத்தையும் விரும்பினேன்.

சர்வேசுரா! என் ஆத்துமாவை அவபத்தியுள்ளவர்களோடும், என் சீவனை இரத்தப்பிரியரோடும் போக்கடிக்காதேயும்.

அவர்களுடைய கைகளில் தோஷங்களிருக்கின்றன. அவர்கள் வலதுகை இலஞ்சத்தால் நிறைந்திருக்கின்றது.

நானோ கபடற்றவனாய் நடந்தேன். என்னைமீட்டு என்பேரில் இரக்கம் புரியும்.

என் கால் செவ்வழியில் உறுதியாயிருந்தது; ஆண்டவரே! சபைக்கூட்டங்களிலே உம்மைத் துதிப்பேன்.

பிதாவுக்கும்...மற்றதும்.

குருவானவர் பீடத்துக்குமுன் தலைகுனிந்து சொல்லுவதாவது :

எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவின் திருப்பாடுகளையும், உயிர்த்தலையும், உத்தானத்தையும் ஞாபகப்படுத்தவும், எப்பொழுதும் கன்னிகையான முத்திப்பேறுபெற்ற மரியாயுடையவும், ஸ்நாபக அருளப்

பருடையவும், பரிசுத்த அப்போஸ்தலராகிய இராயப்பருடையவும், சின்னப்பருடையவும், சகல அர்ச்சியசிஷ்டவர்களுடையவும் மகிமையைக் குறிக்கவும், அர்ச்சியசிஷ்டவர்களுடைய மகிமைப் பிரதாபம் விளங்கவும், நாங்கள் இரட்சண்ணியமடையவும், ஓ பரிசுத்த தமதிரித்துவமே! நாங்கள் ஒப்புக்கொடுக்கிற இந்தக் காணிக்கையை கையேற்றுக்கொள்ளும். நாங்கள் இவ்வுலகில் கொண்டாடுகிற அர்ச்சியசிஷ்டவர்களின் வேண்டுதலால் உமது இரக்கம் எங்கள்மேல் வரக்கடவது.

குருவானவர் ஜனங்களைத் திரும்பிப்பார்த்து சற்று உரத்த சத்தமாய் சொல்லுவதாவது :

கு. சகோதரரே, சர்வ வல்லபமுள்ள பிதாவாகிய சர்வேசுரனுக்கு என்னுடையதும் உங்களுடையதுமாகிய இவ்விய பலி பிரியமுள்ளதாயிருக்கும்படியாக வேண்டிக் கொள்ளுங்கள்.

சீ. ஆண்டவருடைய திருநாமம் தோத்தரிக்கப்பட்டு புகழப்படும்படியாகவும், எங்களுடையவும் திருச்சபையினுடையவும் பொது நன்மைக்காகவும், உம்முடைய திருக்கரங்களிலிருந்து இத்திருப்பலியை ஆண்டவர் ஏற்றுக்கொள்ளக்கடவாராக.

குருவானவர் மெதுவாய்ச்சொல்லும் செபங்கள்.

ஓ ஆண்டவரே, எங்கள் ஜெபங்களை இரக்கமாய்க் கேட்டருளும். உமது ஊழியர்களாகிய நாங்கள் உமக்கு ஒப்புக்கொடுக்கும் இந்தக் காணிக்கையை தயவாய் ஏற்றுக்கொள்ளும். ஆண்டவரே, உம்முடைய திருநாமத்தின் மகிமைக்காக நாங்கள் இப்பலியை ஒப்புக்கொடுப்பதால், அப்பரம பலியின் பலனால் இவ்வுலகில் உம்முடைய வரப்பிரசாதங்களையடைந்து மறுஉலகில் நித்திய பாக்கியத்தையடையச் செய்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும், ஆமென்சேசு.

கு. இப்பொழுதும் எப்பொழுதும் அநாதி சதாகாலம் இருக்கும்படியே.

சீ. ஆமென்.

கு. ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

சீ. உமது விருப்பப்படியே ஆகக்கடவது.

கு. உங்கள் இருதயங்களை எழுப்புங்கள்.

சீ. ஆண்டவரை நோக்கி எங்கள் இருதயங்களை எழுப்பியிருக்கிறோம்.

தி. நமது கர்த்தராகிய சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்தக்கடவோம்.

சீ. அப்படி செய்வது தகுந்ததும் ஞாயமுள்ளதுந்தான்.

முகவுரை. (Preface.)

பரிசுத்த ஆண்டவரும், சர்வ வல்லபமுள்ள பிதாவும், நித்திய சர்வேசுரனுமாகிய உமக்கு எப்போதும் எல்லா இடங்களிலும் நன்றியறிந்த தோத்திரம் செலுத்துவது, மெய்யாகவே தகுந்ததும் ஞாயமுள்ளதும் இரட்சண்ணியத்துக் குரியதுமாயிருக்கின்றது. எங்கள் தோத்திரங்களை எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் வழியாய் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அந்த ஆண்டவர்பேரால் வானதூதர்கள் உம்முடைய தேவமகத்துவத்தைக் கொண்டாடுகிறார்கள். சகல மோட்சவாசிகளும் உம்மை நமஸ்கரிக்கிறார்கள். வல்லபமுள்ளவர்கள் உமக்குமுன் நடுநடுங்கி நிற்கிறார்கள். மோட்சவாசிகளும் சம்மனசுக்களும் உமது மகிமையைப் புகழ்ந்து பாராட்டுகிறார்கள். எங்கள் அற்பப் புகழ்ச்சியை அவர்களுடைய உத்தம ஆராதனையோடு ஒன்றிக்க எங்களுக்குத் தயைசெய்தருளும்.

"பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பரதளத்துக்கு கர்த்தரான சர்வேசுரா! பரலோகமும் பூலோகமும் உமது மகிமைப் பிரதாபத்தால் நிறையப்பட்டிருக்கின்றன. பரலோகத்தில் புகழ்ச்சி உண்டாகக்கடவது. ஆண்டவருடைய நாமத்தால் வருபவருக்கு சதா தோத்திரம் உண்டாகக்கடவது."

பூசைப்பிரமாணம். (Canon of the Mass)

மட்டற்ற தயவுள்ள பிதாவே! எங்கள் ஆண்டவரும் உம்முடைய திருக்குமாரனுமாகிய சேசுக்கிறீஸ்துநாதர் வழியாய் இந்தக் காணிக்கைகளையும், பரிசுத்தமும் மாசற்றதனமுமாகிய தேவபலியையும் நீர் தயவாய் ஆசீர்வதித்து ஏற்றுக்கொள்ள உம்மை மன்றாடுகிறோம். இந்தக் காணிக்கைகளை உமது பரிசுத்த பத்தினியாகிய கத்தோலிக்குத் திருச்சபைக்காக ஒப்புக்கொடுக்கிறோம். சத்திய திருச்சபை நித்திய சமாதானத்தை யடையவும், வேதவிரோதிகளிடத்தினின்று காப்பாற்றி, ஒன்றுசேர்த்து உலக முடிவு வரையில் ஆண்டு நடத்தவும், உமது ஊழியரும் எங்கள் பாப்புவுமாகிய (பத்தாம் பத்திநாதரொன்னும் பாப்பானவரையும்), எங்கள் மேற்றிராணியாரையும் இன்னும் சத்திய

திருச்சபையிலுள்ள விசுவாசிகளையும், புண்ணிய ஆத்துமாக்களையும் ஆண்டு நடத்தியருளவும் தயைபுரிய உம்மை மன்றாடுகிறோம்.

ஜீவியருக்காக வேண்டிக்கொள்ளுதல்.

ஆ, என் சர்வேசுரா! உமது ஊழியர்களாகிய ஸ்திரீ பூமான்களை நினைத்தருளும். தங்களுக்காகவும் தங்கள் குடும்பங்களுக்காகவும் தங்கள் சிநேகிதர்களுக்காகவும் இத்திவ்விய பூசைப்பலியை உமக்கு ஒப்புக்கொடுக்கும் அல்லது ஒப்புக்கொடுக்கச் செய்யும் இங்கு கூடியிருக்கும் சபையோரையும் நினைத்தருளும் சுவாமி. இவர்களுடைய விசுவாசமும பத்தியும் உமக்குத் தெரியுமே. நித்தியரும் சுயஞ்சீவியரும் மெய்யான கடவுளுமாகிய ஆண்டவரே! இவர்கள் உமக்குச் செலுத்தும் வாக்குத்தத்தங்களைக் குறித்து சரீர சௌக்கியத்தையும் ஆத்தும இரட்சண்ணியத்தையும் கொடுத்தருளுஞ் சுவாமி.

எங்கள் ஆண்டவரும் இரட்சகருமாகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருத்தாயாரும் எப்பொழுதும் கன்னியாஸ்திரியுமான அர்ச். மரியாயின் பேராலும், முத்திப்பேறுபெற்ற அப்போஸ்தலர்கள், வேதசாட்சிகள், இன்னும் சகல அர்ச்யசிஷ்டவர்கள் பேராலும், அவர்களுடைய பேறு பலன்களினாலும்,

வேண்டுதலினாலும், உமது வல்லபமுள்ள உதவியினாலும் நாங்கள் காப்பாற்றப்பட்டு எப்பொழுதும் உமது ஆதரவில் ஜீவிக்கச் செய்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும். ஆமென்.

குருவானவர் பாத்திரத்தின்மேல் கைவிரித்து சொல்வதாவது:

ஓ ஆண்டவரே! உமது ஊழியர்களும் உமது பிள்ளைகளுமாகிய நாங்கள் ஒப்புக்கொடுக்கும் இந்த காணிக்கையை தயவாய் ஏற்றுக்கொள்ள உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம்.

தேவசமாதானத்தில் நாங்கள் எங்கள் நாட்களை கழிக்கவும், நித்திய நரக ஆக்கினைக்கு நாங்கள் தப்பித்துக்கொள்ளவும், உமது மோட்சவாசிகளில் ஒருவனாகத் தெரிந்துகொள்ளப்படவும் தயைபுரிந்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப்பார்த்துத் தந்தருளும். ஆமென்.

உமது நேசகுமாரனும் எங்கள் ஆண்டவருமாகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருச்சரீரமும் இரத்தமுமாக மாறும்படி நாங்கள் ஒப்

புக்கொடுக்கும் இந்தக் காணிக்கையை கையேற்றுக்கொண்டு அர்ச்சிக்க அனுக்கிரகஞ் செய்தருளும். ஆமென்.

குருவானவர் திவ்விய சற்பிரசாதத்தையும் பாத்திரத்தையும் எழுந்தேற்றம் பண்ணும்போது

குருவானவர் தேவவசீகர வார்த்தைகளை உச்சரிக்கும்போது உன் முன்பாக நடக்கும் ஆச்சரியங்களை உன் மனதுக்குள் யோசிக்கக்கடவாய். உன் ஆண்டவரும் உன் இரட்சகரும் உன்னை நடுத்தீர்க்கிறவருமான பரம கடவுள் இந்தப் பீடத்தின்மேல் எழுந்தருளிவருகிறார். அவருடைய திவ்விய சமுகத்துக்கு முன் சாஷ்டாங்க தெண்டனிட்டு தேவாராதனை தோத்திரங்களை முழு விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் தேவ சிநேகத்தோடும் செலுத்தக்கடவாய்.

ஓ எங்கள் இரட்சண்ணிய பரம பலியே! சயஞ்சீவிய இராஜனே! அவதரித்த திவ்விய வார்த்தையே! எனக்காகவும் சகல மனிதருக்காகவும் பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்ட தேவ பலியே! தேவகுமாரனின் விலைமதியாத திருச் சரீரமே! ஆணிகளால் அறையப்பட்டதும், ஈட்டியால் ஊடுருவப்பட்டதும், நிற்பாக்கிய பாவிகளாகிய எங்களுக்காகச் சிலுவைமரத்தில் தொங்கி இரத்தஞ் சிந்தின பரிசுத்த பரம சரீரமே! ஆச்சரியத்

துக்குரிய நன்மையே! ஓயாத சிநேகமே! உமது தயைநிறைந்த சிநேகமானது எங்களுக்காக இவ்வேளையில் உமது பிதாவிடத்தில் பரிந்துபேசக்கடவது. என் அக்கிரம தோஷங்களையெல்லாம் துலைத்து என் சீவிய புத்தகத்தில் என்பேர் எழுதப்படும்படி செய்தருளும். நான் உம்மையே விசுவசிக்கிறேன். உம்மை என் முழு இருதயத்தோடு நேசிக்கிறேன். உமக்குச் சதா தோத்திரமும், புகழ்ச்சியும், மகிமையும், வாழ்த்துதலும் உண்டாகக்கடவது. ஆமென்.

சேசுக்கிறீஸ்துநாதருடைய திருக்காயங்களிலிருந்து வடிந்து உலக பாவங்களைப் போக்குகிற பரிசுத்த திவ்விய இரத்தமே, நான் உம்மைவிட்டுப் பிரியாமலும் உம்மோடு எப்பொழுதும் ஒன்றித்திருக்கும்படிக்கும் என்னாத்துமத்தைச் சுத்தப்படுத்தி அர்ச்சித்துக் காத்தருளும். ஓ! நித்திய பிதாவே! உமது ஏக குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப்பாரும். அவருடைய திரு இரத்தம் பழிவாங்க அல்ல, ஆனால் நீர் எங்கள் பேரில் இரக்கமாயிருக்கவும், எங்கள் பாவங்களை மன்னிக்கவும், உம்மைநோக்கி அபயமிடும் திரு சத்தத்துக்குக் காதுகொடுத்தருளும். ஆண்டவரே, இந்த பரம பலியை

ஏற்றுக்கொள்ளும். எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் மனிதர் இரட்சண்ணியத்துக்காக சிலுவைமரத்தில் அனுபவித்த பாடுகளின் பேறுபலன்களைக்கொண்டு எங்கள்பேரிலும் சகல ஜாதி ஜனங்கள்பேரிலும் உமது கிருபா நோக்கம் பாலித்தருளும்.

சர்வ வல்லபமுள்ள சர்வேசுரா! இத் திருப் பீடத்தண்டையில் உமது திருக்குமாரனுடைய திருச்சரீரத்தையும் திரு இரத்தத்தையும் உட்கொள்ளும் அனைவரும் தேவ இஷ்டப்பிரசாதங்களால் நிறப்பப்பட்டவர்களாகும்படிக்கு, பரிசுத்த சம்மனசுக்கள் இந்தக் காணிக்கையை கைகளிலேந்தி மோட்சத்தில் உமது தேவமகத்துவத்துக்கு முன் கொண்டுவரும்படி கற்பிக்க உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம், ஆமென்.

மரித்தோருக்காக வேண்டுதல்.

ஆண்டவரே! உமதுமட்டில் பூரண விசுவாசத்துடன் சமாதான நித்திரையில் சயனிக்கிறவர்களும், எங்களுக்குமுன் இறந்துபோனவர்களுமான உமது ஊழியர்கள்பேரில் தயவாயிரும் சுவாமி. (நாம் யாருக்காக வேண்டிக்கொள்ள வேண்டுமோ அவர்களைக் குறித்து வேண்டிக்கொள்ளவேண்டும்.)

ஆண்டவரே! கிறீஸ்துநாதரிடத்தில் இளைப்பாறும் இந்த ஆத்துமாக்கள்பேரில் தயைபுரிந்து அவர்களுக்கு நித்திய பிரகாசமும், இளைப்பாற்றியும், சமாதானமுமுள்ள இடத்தைக் கட்டளையிட்டருளவேண்டுமென்று கெஞ்சி மன்றாடுகிறோம், ஆமென்.

குருவானவர் மார்பில் பிழைதட்டிக்கொண்டு சொல்லுவதாவது.

ஆண்டவரே! உமது திவ்விய இரக்கத்தில் முழுநம்பிக்கையோடிருக்கிற உமது ஊழியர்களும் நிற்பாக்கிய பாவிகளுமாகிய எங்களை உமது பரிசுத்த அப்போஸ்தலர்களும் வேதசாட்சிகளும் சகல அர்ச்சியசிஷ்டவர்களுமாகிய இவர்கள் கூட்டத்தில் சேர்ப்பிக்கத் தயைசெய்தருளும். நாங்கள் செய்யும் நற்கிரிகையினால் அல்ல, ஆனால் எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய பேறுபலன்களினாலே எங்களுக்குப் பாவமன்னிப்பை அளித்து சகல அர்ச்சியசிஷ்டவர்களோடு மோட்சத்தில் உம்மைக்கண்டு களிகூரத் தயைசெய்தருளும்.

கு. இப்பொழுதும் எப்பொழுதும்.

சீ. ஆமென்.

பிரார்த்திக்கக்கடவோம்.

உம்முடைய போதனைகளால் கற்பிக்கப்பட்டும், உமது திவ்விய மாதிரிகைகளினால்

உம்மை பின்பற்றியும், உம்மை மன்றாடுவதியாதெனில்: பரமண்டலங்களிலேயிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக...மற்றதும்.

கு. தின்மையிலேநின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்.

சீ. ஆமென்.

எங்களுக்கு நேரிட்டதும், நேரிடுகிறதும், இனி நேரிடக்கூடியதுமான சகல பொல்லாப்புகளிலே நின்று, ஆண்டவரே, எங்களை இரட்சிக்க உம்மை கெஞ்சி மன்றாடுகிறோம். எப்பொழுதும் கன்னிகையும் ஆசீர்வதிக்கப்பட்டவளுமாகிய தேவதாயாரின் வேண்டுதலாலும், பரிசுத்த அப்போஸ்தலர்களாகிய இராயப்பர், சின்னப்பர், யாகப்பர், இன்னும் சகல அர்ச்சியசிஷ்டவர்கள் பேராலும், இக்காலத்தில் தயவாய் எங்களுக்கு தேவ சமாதானத்தைக் கட்டளையிட்டருளும். உமது திவ்விய இரக்கத்தின் உதவியால் நாங்கள் ஒருபோதும் பாவங் கட்டிக்கொள்ளாதிருக்கும்படிக்கு, சுயஞ்சீவியரும் நித்தியருமாயிருக்கிற உமது திருக்குமாரனும் எங்கள் ஆண்டவருமாகிய சேசுக்கிறீஸ்துவின் வழியாய் சகல பொல்லாப்புக்களிலே நின்று எங்களைக் காப்பாற்ற தயவுசெய்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

கு. இப்பொழுதும் எப்பொழுதும்.

சீ. ஆமென்.

கு. ஆண்டவருடைய நித்திய சமாதானம் உங்களோடு எப்போதும் இருக்கக்கடவது.

சீ. உமது விருப்பப்படியே ஆகக்கடவது.

குருவானவர் திவ்விய சற்பிரசாதத்தை இரண்டாய்ப்பிட்டு அதிலே ஒரு சிறு துண்டை பாத்திரத்திற் தள்ளி விடும்போது சொல்லுதல்.

எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருச்சரீரமும் இரத்தமும் ஒன்றாய்க் கலத்தலாலும், பிதாவாகிய சர்வேசுரனுக்கு வசீகரம் பண்ணப்படுவதாலும், அச்சரீரத்தை உட்கொள்ளும் எங்களுக்கு நித்திய சீவியத்தை அளிக்கக்கடவது, ஆமென்.

குருவானவர் பின் தலைகுனிந்து மார்பில் பிழைதட்டிக்கொள்ளுகையில் சொல்லுவதாவது.

உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே, எங்கள்பேரில் தயவாயிரும்.

உலகத்தினுடைய பாவங்களை...

எங்கள்பேரில் தயவாயிரும்.

உலகத்தினுடைய பாவங்களை...

எங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளும்.

குருவானவர் மரித்தோருக்காகப் பூசை செய்யும்போது, "அவர்களுக்கு இளைப்பாற்றியைத் தந்தருளும்" என்று இரண்டுவிசை சொல்லுகிறார். மூன்றாம்விசை "அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும்" என்று சொல்லுகிறார்.

நித்திய சர்வேசுரனுடைய ஏக குமாரனாகிய சேசுவே, உமது பிதாவாகிய சர்வேசுரன் சித்தத்துக்கு அமைந்து திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திவ்விய செயலாலும் உமது திரு மரணத்தினாலும் இவ்வுலகத்துக்கு உயிர் அளிக்கச் சித்தமானீரே. இந்த உமது அதி உன்னத பரிசுத்த திருச்சரீரத்தினுடையவும் திரு இரத்தத்தினுடையவும் பலத்தால் என் அக்கிரமங்களில் நின்றும் பொல்லாப்புக்களில் நின்றும் இரட்சித்தருளும். உமது கற்பனைகளை நான் ஒருபோதும் மீறாதிருக்கவும் உம்மைவிட்டு நான் ஒருபோதும் பிரியாதிருக்கவும் வேண்டிய அனுக்கிரகஞ் செய்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும்.

ஆமென்.

என் ஆண்டவராகிய சேசுவே, உமது திருச்சரீரத்தை உட்கொள்ள நான் அபாத்திரவானாயிருந்தாலும் உமது சரீரத்தை நான் அருந்துவதால் அகோர தீர்வைக்கும் நித்திய கேட்டுக்கும் உள்ளாகாதபடிக்கு என்னைக் காப்பாற்றி உமது திரு இரக்கத்தால் என்னாத்துமத்துக்கும் சரீரத்துக்கும் திவ்விய அவுழ்தமாயிருக்கும்படி செய்தருளும். ஆமென்.

குருவானவர் திவ்விய சற்பிரசாதத்தைக் கையிலேந்தி—"ஆண்டவருடைய திருநாமத்தை உச்சரித்து பரலோக போசனத்தைக் கையிலெடுக்கிறேன்" என்று சொல்லுகிறார்.

குருவானவர் மார்பில் பிழைதட்டிக்கொண்டு மூன்றுவிசை உச்சரிக்கிறதாவது.

ஆண்டவரே! நீர் என் குச்சுக்குள் எழுந்தருளிவர நான் பேறுபெற்றவனல்ல. நீர் ஒரு வார்த்தை மாத்திரம் திருவுளம்பற்றுவீராகில், என் ஆத்துமம் ஆரோக்கியமடையும்.

குருவானவர் திவ்விய சற்பிரசாதத்தை உட்கொள்ளும்போது சொல்லுகிறதாவது.

ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருச்சரீரமானது என்னாத்துமத்தைக்

காப்பாற்றி நித்தியமோட்சத்தில் சேர்ப்பிக்கக்கடவது, ஆமென்.

குருவானவர் திரு இரத்தம் அடங்கிய பாத்திரத்தைக் கையிலேந்தி சொல்லுவதாவது.

சர்வேசுரன் எனக்கு அளித்த சகல நன்மைகளுக்கு பிரதிநன்றியாக நான் என்னத்தை ஒப்புக்கொடுப்பேன். இரட்சண்ணிய பாத்திரத்தைக் கையிலேந்தி ஆண்டவருடைய திருநாமத்தைக் கூப்பிடுவேன். ஆண்டவருடைய திருநாமத்தை புகழ்ந்து பாராட்டி கூப்பிட்டு என் சத்துராதிகளிடமிருந்து என்னைத் தற்காத்துக்கொள்ளக்கடவேன்.

குருவானவர் நமது இரட்சகருடைய திரு இரத்தத்தை உட்கொள்ளும்போது சொல்லுவதாவது.

நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு இரத்தம் என்னாத்துமத்தைக் காப்பாற்றி நித்திய சீவியத்துக்குள்ளாக்கக்கடவது. ஆமென்.

☛ குருவானவர் பாவப்பொறுத்தல் தரும்போதும், திவ்விய நற்கருணை உட்கொண்டபின்னும், நீயும் பின்வரும் செபத்தை உருக்கத்தோடு சொல்லி ஆசைநன்மை உட்கொள்ளக்கடவாய்.

ஆ! என் திவ்விய இரட்சகரே! இந்த பரிசுத்தமும் வணக்கத்துக்குரியதுமாகிய திவ்

வியநற்கருணையில் உம்மை உயிருள்ள விசுவாசத்தோடு ஆராதிக்கிறேன். என் இருதயத்திலுள்ள முழுப்பற்றுதலோடு உம்மை நேசிக்கிறேன். எங்களோடு எப்போதும் வசித்திருக்க உம்மை ஏவித் தூண்டும் உமது அளவற்ற நன்மைத்தனத்தின்மட்டில் என் முழு நம்பிக்கையை வைத்திருக்கிறேன். உம்மை மெய்யாகவே இப்போது உட்கொள்ளும் பாக்கியவான்களில் ஒருவனாயிருக்க மிகவும் ஆசிக்கிறேன். என்மட்டில் உமக்குள்ள அன்பினால் உம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்த உமது விலைமதியாத திருச்சரீரத்தையும், உலக பாவங்களைப் போக்கும் உமது பரிசுத்த இரத்தத்தாரைகளிலிருந்து வடிந்தோடின ஆராதனைக்குரிய உமது திரு இரத்தத்தையும் இன்று உட்கொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைத்தால் எவ்வளவோ ஆறுதலடைவேன். ஆனால் ஐயோ, அவ்வளவு பெரிய உபகாரம் அடைய நான் மிகவும் அபாத்திரவானாயிருக்கிறேன். சகல பரிசுத்தத்தனத்துக்கும் ஊற்றாகிய ஆண்டவரே, உம்மை உட்கொள்ள நான் பேறுபெற்றவனல்ல. ஆயினும் உம்மை உட்கொள்ள மெய்யாகவே ஆசிக்கிறேன். இந்த என் ஆசையை கையேற்றுக்கொள்ளவும் உமது சகல வல்லபமுள்ள வரப்பிரசாதத்தின் வல்லமையால்

எனக்கு உம்மை தந்தருளவும் உம்மை மிகுந்த தாழ்ச்சியோடு கெஞ்சி மன்றாடுகிறேன். ஓ என் ஆண்டவரே, என் ஏக நம்பிக்கையே, என்னிடத்தில் எழுந்தருளிவாரும். ஏனெனில் என் முழு இருதயத்தை உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன். என் ஆத்துமம் உம்மையே நேசிக்கவும் உம்மை மெய்யாகவே சுகித்து அனுபவிக்கவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறபடியால், உம்மோடு ஒன்றித்து ஏகோபித்து முழுதும் ஆசைகொண்டு அங்கலாய்த்து நிற்கிறது. ஆண்டவரே, உம்மை நான் மெய்யாகவே என் இருதயத்தில் வாங்கி உமது மட்டற்ற தயாளத்தில் குடிகொண்டிருக்கும்படியான பாக்கியமான சமயங் கிடைக்கிறவரையில், உமக்கு ஆராதனையாகவும், உம்மை நான் இனி உட்கொள்ள ஆயத்தமாகவும் இருக்கும்படிக்கு, என் சிந்தனைகள், வார்த்தைகள், கிரிகைகள் யாவும் உம்முடைய திரு இருதயத்துக்கு ஒப்புக்கொடுத்து என்னை முழுதும் உமக்கு வசிகரம் பண்ணுகிறேன். ஓ என் ஆண்டவரே, அந்த பாக்கியமான சமயம் எனக்கு எப்போது கிடைக்குமென்று ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறேன். உமது பரிசுத்த திவ்விய பந்திக்கு சுத்த இருதயத்தோடும் உருக்கமுள்ள மனதோடும் அணுகி வந்து உம்மை உட்கொள்ளும் ஒவ்வொரு

தடையும் என்னிருதயத்தில் மெய்யான தேவபயமும் தேவசிநேகமும் அதிகரித்து தேவசித்தத்தின்படி என் அந்தஸ்துக்குரிய கடமைகளை நுணுநுணுக்கமாய் அனுசரிக்க வேண்டிய மனத்திடனையும் எனக்குத் தந்தருளவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேன் ஆண்டவரே, ஆமென்சேசு.

கு. ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

சீ. உமது விருப்பப்பிரகாரம் ஆகக்கடவது.

கு. திவ்விய பூசை முடிந்தது, (வீட்டுக்கு) போங்கள் (அல்லது) ஆண்டவரை ஸ்துதிப்போம்.

சீ. சர்வேசுரனுக்குத் தோத்திரம்.

மரித்தவர்களுக்காக நடக்கும் பூசையில்.

கு. அவர்கள் நித்திய இளைப்பாற்றியில் இளைப்பாறுவார்களாக.

சீ. ஆமென்.

குருவானவர் பீடத்துக்குமுன் தலைகுனிந்து வணங்கி சொல்வதாவது.

ஓ பரிசுத்த திரியேக திரித்துவமே! நான் ஒப்புக்கொடுக்கும் இத்திவ்விய பூசையில் செய்யும் கிரிகைகள் யாவும் உமக்குப் பிரியப்படத்தக்கவைகளாயிருக்கும்படி செய்

தருளும். நான் மிகவும் அபாத்திரவானுயிருந்தாலும் உமது தேவமகத்துவத்துக்கு முன் ஒப்புக்கொடுக்கப்படும் இப்பரம பலியானது உமக்குப் பிரியமுள்ளதாகவும் உமது அளவில்லாத இரக்கத்தால் எனக்கும், எவர்களுக்காக இப்பரமபலி ஒப்புக்கொடுக்கப்பட்டதோ அவர்களுக்கும் பாவமன்னிப்பு அளிக்கவுங்கடவது. இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப்பார்த்துத் தந்தருளும்.

[ஆமென்சேசு.

குருவானவர் சபையைத் திரும்பிப்பார்த்து ஆசீர்வாதம் கொடுக்கும்போது சொல்வதாவது.

சர்வ வல்லபமுள்ள பிதாவாகிய சர்வேசுரனும், சுதனாகிய சர்வேசுரனும், இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனும் உங்களை ஆசீர்வதிப்பார்களாக, ஆமென்சேசு.

கு. ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

சீ. உமது விருப்பப்படி ஆகக்கடவது.

கு. அர்ச். அருளப்பர் எழுதிய சுவிசேஷத்தின் ஆரம்பத்தின்படியே.

சீ. ஆண்டவரே, உமக்கு மகிமை உண்டாவதாக.

கடைசி சுவிசேஷம்.

ஆதியிலே வார்த்தையானவர் இருந்தார்; வார்த்தையானவர் சர்வேசுரனிடத்திலுமிருந்தார்; வார்த்தையானவர் சர்வேசுரனாகவுமிருந்தார். அவர் ஆதியிலே சர்வேசுரனிடத்தில் இருந்தார். அவரால் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டதொழிய, சிருஷ்டிக்கப்பட்டவைகளில் அவரின்றி சிருஷ்டிக்கப்பட்டதொன்றுமில்லை. சீவன் அவரிலே இருந்தது. அச்சீவன் மனுக்குலத்தோருக்கு ஒளியாயிருந்தது. அவ்வொளியும் அந்தகாரத்தினிடையே துலங்குகின்றது. அந்தகாரமோ அதை ஒப்புக்கொள்ளவில்லை.

சர்வேசுரனாலே அனுப்பப்பட்ட அருளப்பனென்னும் நாமத்தையுடைய ஓர் மனிதனிருந்தார். அவராலே எல்லோரும் விசுவசிக்கும்படிக்கு, ஒளிக்குச் சாட்சிசொல்ல ஒரு சாட்சியாக வந்தார். அவர் ஒளியாயிருந்தவரல்ல, ஆனால் ஒளிக்குச் சாட்சியாக வந்தவராம். இவ்வுலகத்தில் தோன்றி வருகிற எந்த மனிதனுக்கும் பிரகாசிக்கிற மெய்யான ஒளியானவராய் இருந்தார். அவர் உலகத்திலும் இருந்தார். உலகமும் அவராலே சிருஷ்டிக்கப்பட்டது. ஆகிலும் உலகமானது அவரை அறிந்துகொண்டதில்லை. அவர்

தமது ஆதீனத்தில் வந்தார். ஆனால் அவருடைய ஆதீனத்தார் அவரை ஏற்றுக்கொண்டதில்லை. ஆகிலும் தம்மை ஏற்றுக்கொண்டு தமது நாமத்தில் விசுவாசம் வைத்த எவர்களுக்கும், தேவபுத்திரர் ஆவதற்குரிய தத்துவத்தை அவர் தந்தருளினார். அப்படிக் கொத்தவர்கள் உதிரத்தில் நின்றாகிலும், மாங்கிஷ இச்சையில் நின்றென்கிலும், புருஷன் சித்தத்தில் நின்றாலும் அல்ல. சர்வேசுரனிடத்தில் நின்றே பிறந்தவர்களாயிருக்கிறார்கள். வார்த்தையானவரோ மாமிஷமாகி இஷ்டப்பிரசாதத்தினாலும், சத்தியத்தினாலும், பூரித்தவராய் நமக்குள்ளே சஞ்சரித்து பிதாவின் ஏக சுதனுக்குரிய மகிமையாக அவருடைய மகிமையைக் கண்டோம்.

சர்வேசுரனுக்குத் தோத்திரமுண்டாவதாக.

☞ 1884-௵ ஜனவரி-௴ 6-௳ 13-ம் சிங்கராயர் என்கிற நாமதேயமுள்ள அர்ச். பாப்பானவர் கட்டளையிட்ட உத்தரவுப்படி இதற்கடியில் வரும் செபங்களை முழங்காலிலிருந்து பூசைக்குப்பிறகு குருவுடனே வேண்டிக்கொள்ளுகிறவர்கள் 300 நாள் பலன் அடையலாம்.

மூன்று பிரியதத்த மந்திரம் வேண்டிக்கொண்டபின் கிருபைதயாபத்து மந்திரம் சொல்லவும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

எங்கள் அடைக்கலமும் பலமுமாகிய சர்வேசுரா! உம்மைநோக்கிக் கூப்பிடுகிற ஜனங்களின்பேரில் கிருபாநோக்கம் பாலித்தருளும். அன்றியும் மகத்துவம் பொருந்திய அமலோற்பவ கன்னியும் தேவதாயாரும் ஆகிய அர்ச். மரியம்மாள், அவளுடைய பத்தாவாகிய முத்திப்பேறுபெற்ற அர்ச். சூசையப்பர், உமது அப்போஸ்தலராகிய முத்திப்பேறுபெற்ற அர்ச். இராயப்பர், சின்னப்பர் முதலிய சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய மன்றாட்டுக்களுக்குத் தேவரீர் திருவுளமிரங்கி, பாவிகள் மனந்திரும்புதற்காகவும் நமது தாயாகிய திருச்சபை சுவாதீனம் பெற்றுத் தழைத்தோங்குவதற்காகவும் நாங்கள் செய்துவருகிற செபங்களைக் கிருபைதயாபத்தோடே கேட்டருளும் சுவாமி. இந்த மன்றாட்டுக்களை எங்கள் ஆண்டவரான சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப்பார்த்துத் தந்தருளும். ஆமென்சேசு.

பிறது வேண்டிக்கொள்ளவேண்டியதாவது.

அதிதூதரான அர்ச்சியசிஷ்ட மிக்கேலே, எங்கள் போராட்டத்தில் எங்களைத் தற்காத்தருளும். பசாசின் துர்க்கருத்தையும் அதின் சர்ப்பனைகளையும் அகற்றி எங்களுக்குத்

துணையாயிரும். தாழ்மையான எங்கள் மன்றாட்டைக்கேட்டு சர்வேசுரன் பசாசுக்குக் கற்பிப்பாராக. நீரும் மோட்ச சேனைக்குத் தலைமையானவரோ! ஆத்துமங்களை அழிக்கிறதற்கு உலகத்தில் சுற்றித்திரியும் பேயையும் மற்றத் துஷ்ட அரூபிகளையும் தேவ வல்லமையின் பலத்தால் நரகத்தில் தள்ளுவீராக. ஆமென் சேசு.

உத்தரிக்கிற ஆத்துமாக்களைக் குறித்து பூசைகாணும் வகை.

பூசை ஒப்புக்கொடுக்கிற செபம்.

கருணை நிறைந்த பிதாவே! இரக்கமுள்ள கர்த்தாவே! பாவத்தாற் கெட்டழிந்த மனுஷரை மீட்டிரட்சிக்கும்படி உமது ஏகசுதனான சேசுநாதர் முன் கொடிய வேதனைப்பட்டுச் சிலுவையில் உயிர்விட்டுத் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுக்கத் தேவரீர் திருவுளமானதுமல்லாமல் அவர் அப்போது சிலுவையில் செலுத்தின பலியை எப்போதுந் திவ்விய பூசையினால் வரக்கூடுமான நன்மைபலன் யாவற்றையுந் தேவரீருடைய சித்தத்துக்குத் தக்கது உத்தரிக்கிற சகல ஆத்துமாக்களுக்கும் விசேஷமாய் இன்னான் இன்

னாளுடைய ஆத்துமத்துக்குந் தந்தருள வேணுமென்று தேவரீரைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

சர்வேசுரா சுவாமி, உத்தரிக்கிற ஸ்தலத்திலே இருக்கிற ஆத்துமாக்கள் வேதனை குறைய அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமி.

1. பரமண்டல மந்திரம் 1. பிரியதத்த மந்திரஞ் சொல்லவும்.

விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.

திவ்வியபூசை துவக்குகிறபோது.

சர்வேசுரா சுவாமி, உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்து, அவர்களுக்கு நித்திய பிரகாசம் விளங்கச்செய்தருளும். சீயோனிலும் உமக்குஸ்துதியும் ஜெருசலேமிலும் உமக்கு வேண்டுதலும் உண்டாகக்கடவது. என் மன்றாட்டுக்கிரங்கும். சகல மனுஷரும் உமது அண்டையில் வருவார்களாக. சர்வேசுரா சுவாமி, உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்து, அவர்களுக்கு நித்திய பிரகாசம் விளங்கச் செய்தருளும்.

சர்வேசுரா சுவாமீ! உத்தரிக்கிற ஸ்தலத்திலே இருக்கிற ஆத்துமாக்கள் வேதனை குறைய அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமி.

பர. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்...மற்றதும். (ஒருவிசை சொல்லவும்)

பிரார்த்திக்கக்கடவோம்.

சகல விசுவாசிகளுடைய சிருஷ்டிகரும் இரட்சகருமாகிய சர்வேசுரா! மரித்த உமது அடியோர்களுக்காகச் செய்யப்படுகிற பத்தியுள்ள மன்றாட்டுகளை அங்கீகரித்து, அவர்கள் ஆவலோடே இச்சிக்கிற பாவமன்னிப்பைக் கிருபைசெய்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். சதாகாலமும் சீவியரான சர்வேசுரா, இந்த மன்றாட்டைத் தயவோடு கேட்டருளும் சுவாமீ—

ஆமென்சேசு.

நித்திய பிதாவே! பெற்றோர், பந்துக்கள், சிநேகிதர், உபகாரிகள் முதலியவர்களைத் தக்க விதமாய் நேசித்து அவர்களுக்கு வேண்டிய நன்மை செய்யக் கற்பித்தருளினீரே. ஆகையால் எங்களைப் பெற்று அன்போடே வளர்த்து ஆதரித்தவர்களும், பற்பல உபகாரங்களை எங்களுக்குச் செய்தவர்களுமாகிய எங்கள் பந்துக்கள், சிநேகிதர் முதலானவர்கள் வேதனை நீங்கி, நித்திய

காலம் உம்மை சந்தோஷமாய்த் தரிசித்துக் கொண்டிருக்கத் தேவரீர் கிருபை செய்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம்—ஆமென்சேசு.

கிருபை நிறைந்த சர்வேசுரா, மரணத்தை அடைந்த எங்களுடைய சகோதரரைக் கிருபையாய்ப் பார்த்தருளும். அவர்களுடைய ஆத்துமங்களைப் பிதாப்பிதாக்களாகிய அபிரகாம், ஈசாக்கு, இயாக்கோப்பு என்பவர்களுடன் என்றென்றைக்கும் வாழும் மோட்ச வாசிகளிடத்தில் சேர்த்தருளும். அழுகை, கஸ்தி, வருத்தம் அறியாத ஸ்தலமான எவ்வித பேரின்பம் நிறைந்த உமது பாகதியில் இந்த ஆத்துமாக்களை வைத்துக்கொள்ளவேணுமென்று தேவரீரைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

நித்திய பிதாவாகிய சர்வேசுரா! எங்களுடைய தாய் தகப்பனைச் சங்கிக்கவேணுமென்று கற்பித்தீரே. மரித்த எங்களுடைய தாய் தகப்பன் ஆத்துமங்களுக்குக் கிருபை செய்து அவர்களுடைய பாவங்களைப் பொறுத்து, நாங்கள் அவர்களை நித்திய பிரகாசமுள்ள உம்முடைய இராச்சியத்தில் பார்க்கும்படிக்கு செய்ய வேணுமென்று

தேவரீரைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோஞ் சுவாமி—ஆமென்சேசு.

சர்வேசுரா சுவாமி, உத்தரிக்கிற ஸ்தலத்தில் . மற்றதும்.

பர. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் ..மற்றதும்.

அப்போஸ்தலரான அர்ச். அருளப்பர் காட்சி ஆகமத்தில் எழுதிய நிருபம்.

அக்காலத்தில் பரமண்டலத்திலிருந்து ஓர் சத்தம் எனக்கு உண்டாகக் கேட்டேன். அதாவது: சர்வேசுரனுடைய சமாதானத்தில் சாகிறவர்கள் பாக்கியவான்கள்தான்; அதேதென்றால், அவர்களுடைய நற்கிரியைகள் அவர்களைத் தொடருகிறதினாலே, அவர்கள் பட்ட வருத்தங்களிலேநின்று அவர்கள் இளைப்பாற வேணுமென்று இஸ்பிரீத்து சாந்துவானவர் சொல்லுகிறார் என்கிறதாக எழுதவேணுமென்று எனக்குச் சத்தங் கேட்கப்பட்டதாமே.

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஸ்தலத்திலே...மற்றதும்.

பர. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்...மற்றதும்.

சர்வேசுரா சுவாமீ! உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்து, அவர்களுக்கு நித்திய பிரகாசம் விளங்கச் செய்தருளும்.

நீதிமான் நித்திய கீர்த்தியைக் கொண்டிருப்பான்; அவதூறான கேள்விகளால் அவனுக்குப் பயமிராது.

சர்வேசுரா சுவாமீ, மரித்த சமஸ்த விசுவாசிகளுடைய ஆத்துமங்களை எவ்வித பாவக்கட்டுகளிலே நின்று மீட்டுக்கொள்ளும். இந்த ஆத்துமாக்களும் கோப ஆக்கினையிலே நின்று உமது அநுக்கிரகத்தால் இரட்சிக்கப்பட்டு, நித்திய பிரகாசத்தின் பாக்கியத்தை அநுபவிக்கக்கடவார்கள்.

Dies iræ Dies Illa.

தீயேஸ் ஈரே, தீயேஸ் இல்லா என்கிற சல்லாபம்.

1. அந்த நாள் பெரிய நாள், எந்த நாளோவென்றால், தாவீதென்கிற இராஜாவுஞ் சிபீல் என்கிறவளுஞ் சொன்னப்போல் உலகத்தில் உண்டானதெல்லாம் நிர்மூலமாய்ச் சாம்பலாய்ப் போகப்படுகிற நாள்.

2. அந்தநாள் ஆண்டவருடைய நாள், ஆகையால் நம்மை இரட்சித்த ஆண்டவா

சகல கணக்குங் கேட்கும் அகோரமான பயங்கரமுள்ள நாள்.

3. அந்த நாள் உலகத்தில் அடக்கப்பட்டவர்கள் எல்லாரும் இங்கே வாருங்கள் என்று எக்காளத் தொனியால் அழைக்கப்படுகிற நாள்.

4. அந்த நாளையிற் சிருஷ்டிக்கப்பட்ட சகல ஜீவப்பிராணிகளும் அதிர்ந்து நடுநடுங்கி, மரணத்தை அடைந்த பிரசைகள் எல்லாரும் தங்கள் கல்லறைகளை விட்டு உயிர்த்தெழுந்திருக்கிற நாள். என் ஆத்துமமே, இதைக் கெட்டியாய் நம்பிக்கொள்.

5. அதேதென்றால் அந்த நாளையில் அவரவர் செய்த பாவ புண்ணியம் எல்லாம் எழுதியிருக்கப்பட்ட புஸ்தகம் திறக்கப்படுகிற நாள். ஆகையால் தீர்வை சொல்லுகிற சர்வேசுரனுடைய கேள்வி உண்டாகப்படுகிற நாள்.

6. அந்த நாளில் இப்படிப்பட்ட நீதியுள்ள ஆண்டவர் தீர்வை சொல்லத்தக்கதாக மகா உந்நதமான பத்திராசனத்தில் எழுந்தருளிவருவதால், பிரசைகளுடைய மறைந்திருக்கப்பட்ட குற்றங்கள் எல்லாம் வெளியாக்கியபின் நல்லவர்களுக்கு மோக்ஷ வெகுமானத்தைச் சந்தோஷமாகவும்,

பொல்லாதவர்களுக்கு நித்திய நரக ஆக்கினையைக் கடூரமாகவும், வகையறுக்கப்படுகிற நாளாம்.

7. அந்த நாளில் புண்ணியவான்கள் முதலாய் நடுநடுக்க முற்றிருக்கிறார்கள் என்றால், பாவியான எனக்குச் சமுத்திலாயான தீர்வை சொல்லும்பொழுது நான் என்ன சொல்லப்போகிறேன்! அப்போது எனக்காக வேண்டிக்கொள்ளப் போகிறவர்கள் யார்? நான் எவர் அடைக்கலத்தைப்பற்றி மன்றாடப்போகிறேன்?

8. திவ்விய பிரதாப மகிமையான பரலோக இராஜாவே, கரையேறுவார்கள் என்றால், மகா குற்றமும் பொல்லாப்பும் நிறைந்திருக்கப்பட்ட என்னை உம்முடைய இரக்கத்தினால் இரட்சித்தருளுஞ் சுவாமீ.

9. என் சேசுவே! தேவரீர் பரலோகத்தில் நின்று எழுந்தருளி வந்து மகா இளைப்போடே தேடப்பட்ட அடிமை நான்தானே.

10. அப்படிப்பட்ட எனக்காகத் தேவரீர் மகா கஸ்தி நிர்ப்பந்தங்களைக் கையேற்றதுமல்லாமற் சிலுவையில் அறையுண்டு என்னை இரட்சித்தீர் என்பதினால் எனக்காகத் தேவரீர் பாடுபட்ட இத்தனை பலனும்

நான் இழந்துபோகாதபடிக்கு அந்த நாளை
யில் என்னை நினைத்தருளுஞ் சுவாமீ.

11. அந்த நாளையில் நீதிக்குச் சமுத்
திரையாக பாவிகள்மேற் பழிவாங்குகிற
மெய்யான நீதியுள்ள நடுவனே, உம்மால்
அல்லாமல் வேறொருவராலும் எனக்குப்
பாவப்பொறுத்தல் கிடையாதென்பதா
லும், உமதுபேரில் நம்பிக்கை வைத்திருக்
கிறேன் சுவாமீ.

12. தேவரீர் தீர்வை சொல்லுகிற நாள்
வருமுன்னே குற்றவாளனாகிய அடியேன்
இத்தனை மகா பாவதோஷங்களை கட்டிக்
கொண்டிருப்பதினால் மிகவும் நடுநடுங்கி
இருக்கிறேன். இதுவன்றியே அப்படிப்
பட்ட குற்றத்தினால் என் முகம் மிகவும்
வாடியிருப்பதல்லாமல், என் மனமுழுதும்
விதனப்படுகின்றது. என் பாவங்களைப்
பொறுத்தருளுஞ் சுவாமீ.

13. அதேதென்றால், தேவரீர் மரியமத
லேனாள் என்பவளின் குற்றங்களைப்பொறுத்
துக்கொண்டதுமல்லாமல் உம்மைப்பார்த்து
வேண்டிக்கொண்ட கள்ளனையும் உமது அடி
மையாக்கிக்கொண்டீர் என்கிறதினால் அப்
படியே என் குற்றங்களையும் பொறுத்துக்

கொள்வீரென்று உம்மையே நம்பியிருக்
கிறேன் சுவாமீ.

14. என்னுடைய வேண்டுதலானது
தேவரீருடைய திருச் சமுகத்துக்குப் பாத்
திரமல்லாததாயிருந்தாலும், தேவரீருடைய
திருக் கண்களானது மகா சாதாரண தயாபம்
நிறைந்திருக்கிற நேத்திரங்களாயிருப்பதால்,
அப்படிப்பட்ட திரு விழிகளால் இரங்கி
நித்திய நரக அக்கினியில் விழாதபடிக்கு
என்னை இரட்சித்துக்கொள்ளுஞ் சுவாமீ.

15. அப்படியே அந்த நாளிற் பொல்
லாதவர்களுடைய கூட்டத்தில்நின்று என்னை
விலக்கி, உமது வலதுபாரிசத்தில் இருக்கப்
பட்ட செம்மறி ஆடுகளாகிய ஆசீர்வதிக்கப்
பட்டவர்களின் கூட்டத்திலே என்னைச்
சேர்த்துக்கொள்ளுஞ் சுவாமீ.

16. அந்தநாளில் நித்திய அக்கினிக்குக்
குறிக்கப்படுகிற பொல்லாதவர்கள் தள்ளப்
படுவதுபோல, நித்திய மோட்சத்திற்கு உரி
யவர்களாக உம்மால் ஆசீர்வதிக்கப்படுகிற
வர்களுடன் என்னையுங் கூட்டிக்கொண்டு
போகக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.

17. என் இருதயமானது பச்சாத்தாபத்
தால் வெந்து நீராயிருக்கிறது. ஆகையால்
என் ஆண்டவரே! அடியேனுக்குப் பாவப்
பொறுத்தல் கட்டளையிட்டருளுஞ் சுவாமீ.

18. அந்த நாள் ஒரு அற்பப் பாவத்துக்கு முதலாய் யிருந்த வியாகுலப் பிரலாபத்துடனே கணக்குக் கொடுக்கவேண்டிய பயங்கரமுள்ள கொடிதான நாளாயிருக்கும். ஆகையால் என்பேரில் இரக்கமாயிருந்து, என் பாவங்களையெல்லாம் பொறுத்து, நான் நித்திய நரக அக்கினியில் அவியாத கட்டையாய் இராதபடிக்கு என்னை இரட்சித்துக்கொள்ளுஞ் சுவாமீ.

19. இதுவன்றியே இரக்கமுள்ள ஆண்டவராயிருக்கிற என் சேசுவே, நித்திய ஆறுதலைத் தந்தருளுஞ்—சுவாமீ. ஆமென்சேசு.

சர்வேசுரா சுவாமி, உத்தரிக்கிறஸ்தலத்திலே...மற்றதும். பர. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்—மற்றதும்.

அப்போஸ்தலரான
அர்ச். அருளப்பர் எழுதின சுவிசேஷம்.

அக்காலத்திலே சேசுக்கிறீஸ்துநாதர் யூதர்களுடைய கூட்டங்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: "நானே பரமண்டலத்திலே நின்று இறங்கின ஜீவியமுள்ள அப்பமாய் இருக்கிறேன். இந்த அப்பத்தை யாதொருவன் புசிப்பானேயாகில் என்றென்றைக்கும் பிழைப்பான். மேலும் நான் கொடுக்கும் அப்பம் பூலோக ஜீவியத்துக்காக என்

மாமிசமாய் இருக்கின்றதென்றார். அதைப்பற்றி யூதர்கள் ஒருவரொருவரோடே வாக்குவாதஞ் செய்து, இவர் தன் மாமிசத்தைப் புசிக்க நமக்கு எப்படி கொடுக்கக் கூடுமென்றார்கள். ஆதலால் சேசுநாதர் அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: நீங்கள் மனுமகனுடைய மாமிசத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைக் குடியாமலும் இருந்தால், உங்களிடத்தில் ஜீவியத்தை நீங்கள் கொண்டிருப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாமிசத்தையும் புசித்து, என் இரத்தத்தையும் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவியம் உண்டு. பின்னும் நான் கடைசி நாளையில் அவனை உயிர்ப்பிப்பேன்" என்றார்.

சர்வேசுராசுவாமி, உத்தரிக்கிற ஸ்தலத்திலே...மற்றதும்.

பர. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்...மற்றதும்.

ஆண்டவரே, சேசுக்கிறீஸ்துநாதரே! பிரதாபமுள்ள இராஜாவே! ஆக்கினைகளிலே நின்றும், உத்தரிக்கிறஸ்தலத்திலே நின்றும், மரித்த சமஸ்த விசுவாசிகளுடைய ஆத்துமங்களை மீட்டுக்கொள்ளும். தேவரீர் மூற்

காலத்தில் பிதாப்பிதாவாகிய அபிரகாமுக்
கும், அவருடைய சந்ததியாருக்கும் கொடுப்
போமென்று வார்த்தைப்பாட்டைத் தந்த
பேரின்ப பிரகாசத்துக்கு இந்த ஆத்துமாக்
களை அதிதூதரான அர்ச். மிக்கயேல் சேர்ப்
பிக்கச் செய்தருளுஞ் சுவாமி.

நாங்கள் இத்தினத்தில் குறித்த ஆத்து
மாக்களுக்கு எங்களுடைய செபங்களும்,
ஸ்துதிகளும் பலிகளும் பலிக்கச்செய்தரு
ளும். இந்த ஆத்துமாக்கள் பிதாப்பிதாவா
கிய அபிரகாமுக்கும் அவருடைய சந்ததியா
ருக்கும் தேவரீர் கொடுப்போமென்று வார்
த்தைப்பாடு தந்த நித்திய ஜீவியத்தில் பிர
வேசிக்கப்பண்ணியருளும் சுவாமி.

சர்வேசுராசுவாமி, உத்தரிக்கிற ஸ்தலத்
திலே...மற்றதும்.

பர. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமங்
கள்...மற்றதும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

ஆண்டவரான சர்வேசுரா! ஸ்திரீ பூமான்
களான உமது அடியோர்களுடைய ஆத்து
மங்களின்பேரில் உம்முடைய கிருபையை
ஏராளமாய்ப் பொழியச்செய்து, அவர்கள்
ஞானஸ்நானம் பெறும்படிக்குத் தேவரீர்

திருவுளமானீர் என்கிறதினாலே, நித்திய பேரி
ன்பத்தில் முடியாத சந்தோஷத்தையும்
அவர்களுக்குத் தரவேணுமென்று உம்மை
மன்றாடுகிறோம் சுவாமி. மட்டற்ற கிருபை
யுடைத்தான சர்வேசுரா! எங்களுடைய
தாழ்மையான மன்றாட்டுகளைக் கிருபாக
டாட்சமாய் ஏற்றுக்கொள்ளும். எங்களு
டைய சகோதரர், சிநேகிதர், உறவின்முறை
யார், உபகாரிகள், பிரதாபமுள்ள உம்மு
டைய நாமதேயத்தை அறியவும், ஸ்துதிக்
கவும், தேவரீர் செய்தாப்போலே இந்தத்
திவ்விய பூசையின் பலனைக்கொண்டு அவர்
கள் செய்த சகல பாவங்களுக்கு மன்னிப்
பைத் தரவேணுமென்று தேவரீரைப் பிரார்த்
தித்துக்கொள்ளுகிறோம் சுவாமி.

சர்வேசுராசுவாமி! எங்களுடைய தாய்
தகப்பனுடைய ஆத்துமங்களுக்காக நாங்
கள் ஒப்புக்கொடுக்கிற இந்தத் திவ்விய
பூசையைக் கிருபையாய் ஏற்றுக்கொள்ளும்.
அவர்கள் சீவியர்களுடன் இராச்சியத்தில்
என்றென்றைக்கும் வாழவும், நாங்கள் அவர்
களுடன் சகல மோட்சவாசிகளுடைய பாக்
கியத்தை அடையவும் செய்தருளுஞ்சுவாமி.

சர்வேசுராசுவாமி, உத்தரிக்கிற ஸ்தலத்
திலே...மற்றதும்.

பா. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்...மற்றதும்.

திரு பரிசுத்தர் என்கிற மந்திரம் சொன்ன பிறகு.

மட்டற்ற தயை நிறைந்த பிதாவே! தேவரீருக்கு ஏக சுதனுமாய் எங்கள் ஆண்டவருமாயிருக்கிற சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்து நாங்கள் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிற இந்தத் திவ்விய பூசையைக் கிருபையாய் ஏற்றுக்கொண்டு, சத்திய சாதாரண திருச்சபையையும், அர்ச். பாப்பானவரையும், மேற்றிராணிமார்களையும், சகல விசுவாசிகளையும் ஆண்டளித்துக் காத்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.

பின்னையும் எங்கள் தந்தை தாய், உறவின்முறையார், சிநேகிதர், உபகாரிகள், பகையாளிகளுக்கும், "விசேஷமாய் இன்னார் இன்னாருக்கும்" வேண்டிய உதவி சகாயங்களைக் கட்டளையிட்டருளும் சுவாமி. நாங்கள் கேட்கிற மன்றாட்டு தேவரீருக்கு அதிக பிரியமாயிருக்கும்படிக்கு அர்ச். தேவமாதா, அப்போஸ்தலர், வேதசாட்சிகள் இவர்களுடைய மன்றாட்டுகளுடனே எங்கள் மன்றாட்டு

களையும் கூட்டித் தேவரீருக்குக் காணிக்கையாக வைக்கிறோம்.

சர்வேசுரா சுவாமி, உத்தரிக்கிற ஸ்தலத்திலே...மற்றதும்.

பா. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்...மற்றதும்.

திரு தேவநற்கருணை எழுந்தருளப் பண்ணுகிறபோது.

ஆண்டவராயிருக்கிற சேசுக்கிறீஸ்துவே! பூலோகப் பாவங்களைப் போக்குகிறவரே, எழுந்தருளி வாரும். உம்முடைய அற்புதங்களின் மேலான அற்புதமாகிய இந்தப் பரம இரகசியத்தை நிறைவேற்ற வாரும். இதோ பூலோகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய திவ்விய செம்மறிப் புருவையானவர் எழுந்தருளி வருகிறார்! என்னை உண்டாக்கி இரட்சித்த கர்த்தர் உன்னத மோட்சத்தில் நின்று என்னைப்பற்றிப் பலியாய் இறங்கி வருகிறார், என் ஆத்துமமே பத்தியோடே அவரை ஸ்துதித்து ஆராதிப்பாயாக.

அவதரித்த வார்த்தையே, திவ்விய சேசுவே! மெய்யான தேவனும், மெய்யான மனுஷனும் ஒன்றானவரே, தேவரீர் இந்தப்பீடத்தின்பேரில் மெய்யாகவே எழுந்தருளிவர்

இருக்கிறீரென்று உறுதியாக விசுவசித்து, மிகுந்த தாழ்ச்சியோடு வணங்கி, ஆராதித்து, முழுமனதோடு உம்மை அபேட்சித்து நேசிக்கிறேன்; என்மேல் வைத்த நிகரில்லாத அன்பினால் தேவரீர் இந்தப் பீடத்தின்மீதே எழுந்தருளி வந்தமையால், என்னை முழுதும் உமக்குத் தேவ வசீகரம் பண்ணுகிறேன்.

சர்வேசுராசுவாமி, உத்தரிக்கிறஸ்தலத்திலே மற்றதும்.

பா. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்...மற்றதும்.

குருவானவர் மரித்தோர் ஆத்துமங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறபோது.

என் ஆண்டவரே, திருச்சபையில் மரித்த சமஸ்த விசுவாசிகளுடைய ஆத்துமங்களுக்கும் இந்தத் திவ்விய பூசையின் பலன் பங்குண்டாயிருக்கக்கடவது. விசேஷமாய் இந்தத் திவ்விய பலியைப்பார்த்து, "இன்னார் இன்னாருடைய" ஆத்துமங்களின் வேதனையை நீக்கி, அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்து. பிரதாபமுள்ள உம்முடைய இராச்சியத்தில் அவர்களைப் பிரவேசிக்கப்பண்ண வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறேஞ் சுவாமி.

அனந்த காருண்ணியரான பிதாவே! இனி ஒருநாள் எங்களுக்கும் இந்த உபகாரத்தை கட்டளையிட்டு, நித்தியகாலம் நாங்கள் அப்போஸ்தலர், வேதசாட்சிகள், சகல அர்ச்சியசிஷ்டவர்களுடனே கூடத் தேவரீரைச் சிநேகித்து ஸ்துதித்து தோத்தரித்துக் கொண்டிருக்கும்படியாய் எங்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளுஞ் சுவாமி.

சர்வேசுராசுவாமி, உத்தரிக்கிறஸ்தலத்திலே...மற்றதும்.

பா. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் . மற்றதும்.

குரு பரமண்டலமந்திரம் சொல்லுகிறபோது.

பரமண்டலங்களிலே இருக்கிற..மற்றதும்.

சர்வேசுராசுவாமி, உத்தரிக்கிறஸ்தலத்திலே...மற்றதும்.

பா. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்...மற்றதும்.

குரு உலோக பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே என்கிற மந்திரஞ் சொல்லுகிறபோது.

பூலோக பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே! உத்தரிக்

கிற ஆத்துமாக்களுக்கு இளைப்பாற்றியைத் தந்தருளும்.

பூலோக பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையே! உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு இளைப்பாற்றியைத் தந்தருளும்.

பூலோக பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையே! உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும்.

சர்வேசுராசுவாமி, உத்தரிக்கிற ஸ்தலத்திலே . மற்றதும்.

பா. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்...மற்றதும்.

திரு தேவநற்கருணை உட்கொள்ளுகிற போது.

ஆண்டவரே, நீர் என்வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பேறுபெற்றவனல்ல. நீர் ஒரு வார்த்தை மாத்திரமே திருவுளம்பற்றியருளும்; அப்போது என் ஆத்துமம் பாவ வியாதியிலே நின்று விடப்பட்டு ஆரோக்கியத்தை அடையும்.

ஆண்டவரே, நீர் என்வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பேறுபெற்றவனல்ல. நீர் ஒரு

வார்த்தை மாத்திரமே திருவுளம்பற்றியருளும்; அப்போது என் ஆத்துமம் பாவவியாதியிலே நின்று விடப்பட்டு ஆரோக்கியத்தை அடையும்.

ஆண்டவரே, நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பேறுபெற்றவனல்ல. நீர் ஒரு வார்த்தை மாத்திரமே திருவுளம்பற்றியருளும்; அப்போது என் ஆத்துமம் பாவவியாதியிலே நின்று விடப்பட்டு ஆரோக்கியத்தை அடையும்.

இரக்க சமுத்திரமான சேசுவே, சத்தியமாக தேவநற்கருணையிலிருக்கும் உமது திவ்விய சரீரத்தையும், உமது திவ்விய இரத்தத்தையும் பார்த்து, உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படுகிற ஆத்துமாக்களுக்குப் பிரதாபமுள்ள உமது தெரிசனத்தைக் கொடுக்க வேணுமென்று தேவரீரைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

சர்வேசுராசுவாமி, உத்தரிக்கிற ஸ்தலத்திலே...மற்றதும்.

பா. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்...மற்றதும்.

திரு தேவநற்கருணை உட்கொண்டபிறகு.

சர்வேசுராசுவாமி, உமது மட்டில்லாத இரக்கத்தைப்பார்த்து, உத்தரிக்கிற ஆத்து

மாக்களுக்கு நித்திய பிரகாசம் மோட்ச இராச்சியத்தில் விளங்கச் செய்தருளும். உமது மட்டற்ற இரக்கத்தைப்பார்த்து அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்து, நித்திய பிரகாசம் விளங்கச்செய்தருளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

*ஆண்டவரான சுவாமீ! ஸ்திரீ பூமான்களான உமது அடியோர்களுடைய ஆத்துமங்களுக்கு எங்களுடைய மன்றாட்டுகள் பலிக்கச்செய்தருளும். இந்த ஆத்துமாக்கள் கட்டிக்கொண்ட எவ்வித பாவங்களையும் நீக்கி, உமது இரட்சிப்பின் பங்கடையக் கட்டளையிட்டருளும்.

சர்வவல்லபமும், சர்வ கிருபையுமுடைத்தான சர்வேசுரா! அடியோர்கள் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிற இந்தப்பலிகளும் ஸ்துதிகளும் குறித்த எங்களுடைய பந்துக்கள், சகோதரர், உபகாரிகளுடைய ஆத்துமங்களுக்கு உதவவும், இந்தத் திவ்விய பூசையின் பலனைப்பற்றி அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்படைந்து, உமது கிருபையினால் நித்திய பிரகாசத்தைப் பெற்றுக்கொள்ளவுஞ் செய்யவேணுமென்று தேவரீரைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

சர்வேசுராசுவாமி! உத்தரிக்கிற ஸ்தலத்திலே...மற்றதும்.

பர. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்...மற்றதும்.

பூசை முடியும்போது சொல்லத்தகுஞ் சங்கீதம்.

சுவாமீ, பாதாளத்திலின்று உம்மைநோக்கிக் கூப்பிடுகிறேன்; என் சத்தத்தைக் கேட்டருளுஞ் சுவாமி. எனது விண்ணப்பத்தின் பேரொலியை உமது செவிதந்து கேட்டருளும். ஆண்டவரே! நீர் எங்கள் பாவங்களைப் பாராட்டுவீராகில் உமக்கு முன்பாக நிர்வாகஞ் செய்கிறவன் யார்?—ஆனால் தேவரீரிடத்தில் தயாளமான மன்னிப்பிருக்கிறபடியாலும், உமது வேத முறைமையைப் பற்றியும், சுவாமீ, உம்மை நம்பி காத்திருக்கிறேன். என் ஆத்துமம் ஆண்டவருடைய திரு வசனத்தின்மேல் ஊன்றிக் காத்திருக்கின்றது; என் ஆத்துமம் ஆண்டவரிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறது. உதய சாம காவல் நேரந்துவக்கி இரவுபரியந்தம் இஸ்ராயேல் ஜனம் ஆண்டவரை நம்பிக் காத்திருக்கக்கடவது. ஏனென்றால் சுவாமி தயையுள்ளவர், அவரிடத்தில் இரட்சணியம் ஏராளமாயிருக்கின்றது. அவரே இஸ்ரா

யேல் ஜனத்தை அதின் சகல பாவங்களில் நின்று இரட்சித்தருளுவார்.

சர்வேசுராசுவாமி, உத்தரிக்கிற ஸ்தலத்திலே... மற்றதும்.

பர. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்... மற்றதும்.

கடைசியிலே உத்தரிக்கிற ஆத்துமாக்களைக் குறித்து 5 பரமண்டல மந்திரஞ் சொல்லவும்.

விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.

பூசைக்கு உதவிசெய்யும் வகை.

பூசைக்கு உதவிசெய்கிறவர்களுக்குச் சில புத்திமதிகள்.

பூசைக்கு உதவிசெய்கிறவன் எப்போதும் சுவிசேஷம் எந்தப்பக்கத்தில் இருக்கிறதோ, அதற்கு எதிர்ப்பக்கத்திலிருக்கவேண்டும்.

பீடத்தில் திவ்வியநற்கருணை ஸ்தாபித்திருந்தாலும், இல்லாவிட்டாலும், பீடத்தின்

மத்தியில் போகும்போதெல்லாம் முழந்தாள்படியிட்டு வணக்கஞ் செய்யவேண்டும்.

பூசை துவக்கும்போது செய்யவேண்டிய முறை.

சீஷன் குருவானவருக்கு முந்தி நடந்து, நிருபம் வாசிக்கிற பக்கத்தில்வந்து நின்று, குருவின் தொப்பியை வாங்கி, முழந்தாளிட்டுப் பீடத்துக்கு வணக்கஞ்செய்து, (திவ்வியநற்கருணை பிரசித்தமாய் ஸ்தாபித்திருந்தால் இரு முழந்தாளிட்டு வணக்கஞ் செய்து) சுவிசேஷம் வாசிக்கப்படுகிற இடத்துக்கு நேரேபோய் முழங்காலிலிருக்க வேண்டியது.

பூசைக்கு உதவிசெய்யும் வகையை "பூசைக்குதவி மந்திரம்" என்னும் புஸ்தகத்தில் காண்க.

பூசைக்கு உதவிசெய்பவர்களுக்கு ஒரு சிறு புத்தி.

பூசைக்கு உதவிசெய்யும் பாக்கியம் சம மனசுகளுக்குமுதலாய்க் கிடைக்காத பெரிய பாக்கியமென்பதைப் பூசைக்கு உதவி செய்யப்போகிற நீங்கள் ஒருபோதும் மறந்துவிட வேண்டாம். ஒருவிசை ஒரு குருவானவருக்குப் பூசைக்கு உதவிசெய்ய ஆளில்லாத

போது, நமது ஆண்டவர்தாமே ஒரு சிறுபிள்ளை ரூபமாக வந்து, உதவி செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் திவ்விய பாலன் எவ்வளவு ஆசார வணக்கத்தோடும் பத்திவிநயத்தோடும் உதவி செய்திருப்பாரென்று யோசித்துக்கொள்ளுங்கள்.

பூசைக்கு உதவிசெய்யப்போகுமுன் சற்றுநேரம் திவ்வியநற்கருணையைச் சந்தித்து, சக்கிரிஸ்திலிருக்கும்போது மௌனமும் உள்ளடக்கமுமாயிருந்து சுறுசுறுப்போடு உடைதரித்துக்கொள்ளவேண்டியது. பின்னும் இரு கரங்களையுங் குவித்து நெஞ்சில் படியவைத்துக்கொண்டு, தலையை அங்குமிங்குஞ் சாய்க்காமல், சற்றே கவிழ்ந்த முகமாய் கண் அடக்கத்தோடு பீடத்தைநோக்கிச் செல்லவேண்டும். திவ்விய நற்கருணைக்கு முன்பாகப் போகும்போது, பத்திவிநயத்தோடு முழந்தாள் தரையில்படிய அடக்கவொடுக்கமாய் வணக்கஞ் செய்யவேண்டியது.

பூசையில் குருவானவருக்கு உதவிமந்திரஞ் சொல்லும்போது படபடப்பும், தாமதமுமின்றி சீர்பொருந்திய தெளிவோடு பதில்சொல்லவேண்டும். அப்படிச் சொல்வது மாத்திரம் போதுமென்றிருக்கலாகாது.

உதவிமந்திரஞ் சொல்லுகிற நேரமும், மற்றும் உதவிசெய்யும் நேரமும்போக இடைக்கிடையே மீதியான நேரத்தில் சும்மா இராமல், செபமாலைமுதலிய செபங்களைச் செபிப்பதும், அல்லது நமது ஆண்டவருடைய திருப்பாடுகளைத் தியானிப்பதும் உத்தம முயற்சியாகையால் அவைகளைச் செய்யத் தகும்.

பூசைமுடிந்தபின் சற்பிரசாதத்தில் வீற்றிருக்கும் திவ்விய கர்த்தருக்கு முன்பாக முழங்காலிலிருந்து, உங்களுக்குக் கிடைத்த மேலான பாக்கியத்துக்காகச் சுவாமிக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தி, பூசைக்கு உதவி செய்யும்நேரத்தில் நீங்கள் கட்டிக்கொண்டிருக்கும் குற்றங்குறைகளைப்பற்றி அவரிடத்தில் பொறுத்தல் கேட்டுக்கொள்ளவும்.

திவ்விய பூசையைத் தக்கவிதமாய்க் காணும் வகை.

திவ்வியபூசையைவிட அதிக மகத்துவமுள்ளதும், சர்வேசுரனுக்கு அதிக ஏற்கையானதுமான காரியம் வேறொன்றும் இல்லை. மெய்யாகவே திவ்விய பூசையானது நம்முடைய திவ்விய இரட்சகர் நமது ஈடேற்றத்துக்காகத் தம்மைத்தாமே தேவபிதா

வுக்குச் சிலுவைப் பீடத்தின்மேல் ஒப்புக்கொடுத்த பலியாமே. சகல சம்மனசுக்களும் அர்ச்சியசிஷ்டவர்களும் ஏகோபித்துச் சர்வேசுரனுக்குச் செலுத்தக்கூடிய எவ்வித வணக்க ஸ்தோத்திரங்களையும்விட ஒரே ஒருவிசை இந்தத் திவ்விய பலிபூசையை ஒப்புக்கொடுப்பதினால் அவருக்கு அதிக மகிமை ஸ்தோத்திரம் உண்டாகிறது.

அப்போஸ்தலர்களும், வேதசாட்சிகளும், ஸ்துதியர்களும் கன்னியர்களும், அர்ச். கன்னிமரியம்மாளு முதலாய்ச் சம்பாதித்த சகல பேறுபலன்களையும்விடத் திவ்விய பூசைக்கு அளவில்லாத மடங்கு அதிக பலனும் வல்லமையும் உண்டென்பதற்குச் சந்தேகமில்லை.

அப்படியிருக்கக் கிறீஸ்துவர்களெல்லோரும் அநுதினமும் திவ்விய பூசையை ஆவலோடு காணப் பிரயாசப்படவேண்டாமோ? அதின் பலனையடையத் தேடவேண்டாமோ? அநுதினம் இந்தத் திவ்விய பலிபூசையைக் காணக்கூடாவிட்டாலும், ஞாயிற்றுக்கிழமைகள், கடன் திருநாட்களிலாகிலும் தவறாமல் காணக்கடவார்கள்.

திவ்வியபூசையைக் காணும்போதெல்லாம் நாம் பத்திவிநயத்தோடும் கவனத்தோடும்

காணவேண்டியதொழிய, நமது அனுசாரத்தாலும் பத்திக் குறைவினாலும் யூதர்கள் கல்வாரி மலையில் திவ்விய கர்த்தருக்கு வருவித்த நிந்தையவமானங்களைப் புதுப்பிக்காதிருக்கக்கடவோம்.

திவ்வியபூசையின் பலனானது சர்வலோக பாவங்களையும் போக்குவதற்கு வல்லதாயிருக்கிறதுமன்றி, இன்னும் இதுபோல் கோடான கோடி உலகங்களின் பாவங்களையும் போக்குவதற்கு வல்லதாமே. இப்பேர்க் கொத்த வல்லமையுள்ள பூசை ஒரே நாளிலும், ஒரே நேரத்திலும், ஒரே இடத்திலு மாத்திரம் ஒப்புக்கொடுக்கப்படும்படி சர்வே சுரன் சித்தமாகாமல், எந்நாளும், எவ்விடத்திலும், எந்நேரமுந்தானே ஒப்புக்கொடுக்கப் படும்படி சித்தமானார்.

இப்படிப்பட்ட திவ்வியபூசை உலகத்தி லில்லாதிருந்தால், உலகத்தில் நடந்துவரும் பாவாக்கிரமத்தால் உலகமெல்லாம் வெந் தழிந்து, சோதோம் கொமாரா என்னும் பட்டணங்களைப்போல் நாசமாய்ப் போக லாம். பாவம் நிறைந்த இந்த உலகத்தின் மேல் சர்வேசுரனுக்கு உண்டாகும் நீதிக் கோபத்தை அமர்த்தி, அவருக்கு இரக்க முண்டாகும்படி செய்வது இந்தப் பலி

தானுமே. இந்தப்பலியை எல்லாரும் காணலாமென்கிறதுமல்லாமல்,எல்லோரும் குருவுடனேகூட இந்தப் பலியை ஒப்புக்கொடுக்கலாமென்பதினால், இதின் மகத்துவ மேன்மை எம்மாத்திரமென்று வர்ணித்துச் சொல்ல ஒருவராலும் ஏலாது.

குருவானவர் பூசையிலே அணிந்துகொள்ளும் திரு வஸ்திரங்களுக்குள்ள அர்த்தமாவது.

முந்தமுந்தத் திருவஸ்திரங்களை அணிந்து திருப்பூசை செய்யப்போகும் குருவானவர், கபாலமலையில் பாடுபட்ட நமது ஆண்டவரிடமாகவும், அவர் சாயலாகவும் இருக்கிறார்.

பூசைப் பாத்திரமானது ஆண்டவருடைய திருச்சரீரத்தை அடக்கஞ்செய்த கல்லறைக்கும் அந்தப் பாத்திரத்தின்மேல் போட்டு மூடுகிற சிறு பட்டானது சுவாமியுடைய சரீரம் பொதியப்பட்ட பரிவட்டத்துக்கும் சாயலாயிருக்கின்றது.

பூசை ஆரம்பிக்கும்போது.

ஓ கிறீஸ்துவ ஆத்துமாக்களே, உங்களுடைய பத்தி விசுவாசப்பற்றுதலை எழுப்பிக்கொண்டு இப்போது உங்கள் கண்முன்பாக நடக்கப்போகிற மகத்தான பலியின்பேரில்

தியானிக்கக்கடவீர்கள். இதோ சகல அற்புதங்களும் நிறைந்த சங்க்ஷேபமும், வரப்பிரசாதங்களுக்கெல்லாம் வற்றாத ஊற்றும், எவ்வித நன்மை ஆசீர்வாதங்களுக்கும் உறைவிடமுமாகிய பலிபூசை நடந்தேறப்போகின்றது.

இந்தத் திருப்பூசை நடக்கிற பீடமானது நமது இரட்சகர் மரணத்தையடைந்த கல்வாரி மலையேயன்றி வேறல்லவென்று மனதிலே வைத்துக்கொள்ளுங்கள். பூசை ஒப்புக்கொடுக்கிற குருவானவரை வெறும் மனுஷனென்று நினையாமல், நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே மறுபடியும் தேவபிதாவுக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கப் போகிற திவ்விய இரட்சகரிடமாயிருக்கிறாரென்று எண்ணிப் பத்தி விநயத்தோடு பூசை காணக்கடவோம்.

ஓ நமது பாக்கியத்துக்கு இணையான பாக்கியமுண்டோ? குருவானவரோடு நாமும் ஏகோபித்து குருவானவர் தமது சிரசின்மேல் போட்டுக்கொள்ளும் சிறிய வெள்ளைவஸ்திரமானது, சேவகர் திவ்விய கர்த்தருடைய தலையிலே குட்டி “உன்னை அடித்தவன் யாரென்று தீர்க்கதரிசனமாய்ச் சொல” என்று கேட்டபோது, அவருடைய திரு

முகத்தை மூடியிருந்த வஸ்திரத்துக்கு அடையாளமாமே.

குருவானவர் தரித்திருக்கும் நீடிய வெள்ளைச் சட்டையானது ஏரோதேஸ் என்பவன் சர்வ ஞானமும் மகிமையுமுள்ள ஆண்டவரை பைத்தியகாரனென்று நிந்தித்து, அவருக்குத் தொடுவித்த வெள்ளை வஸ்திரத்துக்கு அடையாளமாம்.

குருவானவர் இடையில் கட்டிக்கொள்ளும் கயிறானது சேவகர் நமது திவ்விய கர்த்தரை ஜெத்செமனி என்னும் பூங்காவனத்தில் ஓர் குற்றவாளியைப்போல் பிடித்துக் கட்டின கயிறுகளுக்குக் குறிப்பாயிருக்கின்றது.

குருவானவர் கழுத்திலும் கையிலும் அணிந்துகொள்ளும் நீண்ட பட்டு வஸ்திரமானது, யூதர்கள் ஆண்டவருடைய தோளின்மேல சிலுவைமரத்தைச் சுமத்தி, ஓர் பாதகனைப்போல் அவரைக் கல்வாரிமலைக்கு இழுத்துக்கொண்டுபோகும்படி அவருடைய கழுத்திலும் கையிலும் கட்டின கயிறுகளுக்கு அடையாளமாமே.

குருவானவர் மேலே தரித்துக்கொள்ளும் பெரிய பட்டுவஸ்திரமானது, யூதர்கள்

ஆண்டவருடைய தலையிலே முண்முடியைச் சூட்டி, மூங்கில் தடியைக் கையில் கொடுத்துப் பரிகாச ராஜாவென்று ஆகடியஞ்செய்யும்போது, அவருக்கு உடுத்திய சிவப்புப் போர்வைக்குக் குறிப்பாயிருக்கின்றது.

பரிசுத்தமும், தூய்மையுமானதும், மாசற்றதும் நம்முடைய கடன்களையெல்லாம் நமக்கு மன்னித்து நமக்குத் தேவையான சகல வரப்பிரசாதங்களையும் பெறுவிக்கத்தக்கதுமான ஓர் பலியைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கப்போகிறோம்.

ஆ! என் சேசுவே, அர்ச்சியசிஷ்டவர்களும் புண்ணியவான்களும் இந்தத் திவ்விய பூசையைக்காணும்போது, அவர்களிடத்தில் விளங்கின விசுவாசமும், பத்திநேசமும் என்னிடத்தில் இல்லாதிருந்தாலும், அடியேன் மனம்பொருந்தின பராக்கு, அசட்டைத்தனம் முதலிய குறைகளுக்கு இடங்கொடாமல், இந்தத் திவ்விய பூசையை ஒப்புக்கொடுக்கும் குருவானவருடைய கருத்தோடேகூட என் கருத்தையும் ஒன்றாகக்கூட்டி இந்தத் திவ்விய பலியை ஒப்புக்கொடுக்கும்படி அடியேனுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும்.

பூசை ஆரம்பத்தில் குருவானவர் பீடத்தின் கீழ்ப்படியில் நின்று செபஞ்செபிக்கும்போது.

பூர்வீக பிதாப்பிதாக்கள் தாங்களிருந்த இருள் நிறைந்த ஸ்தலத்தில் நின்று மீட்கப்படவேண்டுமென்று எவ்வளவு ஆவலோடு வேண்டிக்கொண்டிருந்தார்களென்று தியானித்து, உன்னுத்துமத்தையும் ஆண்டவர் பாவ பாதாளத்தினின்று விடுவிக்கவேண்டுமென்று மன்றாடுவாயாக.

"சுவாமீ கிருபையாயிரும்" என்று குருவானவர் அர்ச். தமதிரித்துவத்தை நோக்கி மும்முறை சொல்லி வேண்டிக்கொள்ளுகிறார். சர்வேசுரன் எனக்கு இரக்கஞ்செய்யாரோ என்று நான் அவநம்பிக்கைக்கு உள்ளாகலாமோ? பிதாவானவர் என்னைச் சிருஷ்டித்தும், சுதனானவர் என்னை இரட்சித்தும், இஸ்பிரீத்துசாந்துவானவர் என்னை அர்ச்சித்துமிருக்க, இன்னும் நான் சர்வேசுரனுடைய இரக்கத்தினமேல் நம்பிக்கை வையாதிருக்கலாமோ?

உன்னதத்தில் சர்வேசுரனுக்குத் தோத்திரமென்று சம்மனசுக்கள் பாடின ஸ்துதியைச் சொல்லும்போது, திவ்விய கர்த்தர் பிறந்த சமயத்தில் சம்மனசுக்களும் இடை-

யர்களும் அவரைத் தரிசித்து, அதினால் அவர்கள் அனுபவித்த ஆனந்த மனோகரத்தைத் தியானிப்பாயாக. குழந்தை ரூபமெடுத்த இந்த ஆண்டவர் உன்னை எம்மாத்திரம் அன்போடு நேசித்து, உன்னிமித்தம் தம்மைத்தாமே பனி குளிர் முதலிய வருத்தங்களுக்குக் கையளித்தாரென்று யோசித்து, நீயும் உன் முழு இருதயப்பற்றுதலோடு அவரை உன் உள்ளத்தில் நேசித்து ஆராதிப்பாயாக

குருவானவர் ஜனங்களைத் திரும்பிப் பார்த்து "ஆண்டவர் உங்களோடிருப்பாராக" என்கிற வார்த்தைகளைச் சொல்லும்போது.

நமது ஆண்டவர் மட்டற்ற பிரியத்தோடு தம்முடைய சீஷாக்களோடுகூட சம்பாஷித்ததையும், பாவிகளை மிகுந்த தயவோடும் அன்போடும் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு பாவப்பொறுத்தலளித்ததையும் தியானிக்கக்கடவாய்.

குருவானவர் அன்றன்றைக்குரிய செபங்களைச் சொல்லும்போது.

நமது ஆண்டவர் இவ்வுலகத்திலிருக்கும்போது, கணக்கற்றவிசை நமக்காகத் தமது தேவபிதாவை நோக்கிச் செபித்துவந்தாரென்று நினைத்துக்கொள். அல்லாமலும்

இந்த நேரத்தில் குருவானவர் திருச்சபையின்பேரால் நமக்காக வேண்டிக்கொள்ளுகிறார். சேசுக்கிறீஸ்துநாதருடைய பத்தினியாகிய திருச்சபையின்பேராலும், திருச்சபையின் பத்தாவும் மத்தியஸ்தருமாகிய சேசுக்கிறீஸ்துவின் பேறுபலன்களைக்கொண்டும் குருவானவர் வேண்டிக்கொள்ளும்போது, அந்த வேண்டுதல் பலியாமற்போகுமோ ?

குருவானவர் நிருபம் வாசிக்கும்போது.

அந்த நிருபமானது தீர்க்கதரிசிகளும், விசேஷமாய் அர்ச். ஸ்நாபக அருளப்பரும் தேவ ஏவலால் இரட்சகர் வருவதை அறிந்து, ஜனங்களுக்குப் பிரசங்கித்ததை நமக்கு ஞாபகப்படுத்துகின்றது. அந்தப் பிரசங்கங்களைக் கேட்கும்படி தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குக் கிடைத்த பாக்கியம் நமக்கு இல்லையேயென்று நாம் கலங்கத் தேவையில்லை. சர்வேசுரன்தாமே இஸ்பிரீத்துவின் ஏவலால் எழுதப்பட்ட இந்த நிருபங்களின் வழியாகவும், தமது பணிவிடைக்காரராகிய குருக்கள் சொல்லும் புத்திமதிகளைக்கொண்டும் நம்மோடே பேசுகிறார். தெரிந்துகொள்ளப்பட்டவர்களோடேகூட நீயும் ஒருவனாயிருக்கவேண்டுமா

னால், அவர்களுடைய வார்த்தைகளைக் கவனத்தோடும் பணிவோடும் கேட்பாயாக.

குருவானவர் நிருபத்துக்குப்பின் கிராதுவல் என்னும் வாக்கியங்களை வாசிக்கும்போது.

அர்ச். ஸ்நாபக அருளப்பர் கையால் தபஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் வனத்திலே அருந்தபஞ்செய்தார்களென்று நினைத்துக்கொள்வாயாக.

“ அல்லேலூயா ” என்று சொல்லும்போது பாவ அந்தஸ்தைவிட்டு இஷ்டப்பிரசாத அந்தஸ்துக்குத் திரும்பிவரும் ஆத்துமமானது அனுபவிக்கும் ஞான ஆனந்தம் இம்மாத்திரமென்று ஆராய்ந்து யோசித்துக்கொள்.

பாவி, எவ்வளவு காலத்துக்கு நீ இந்த மகத்தான பாக்கியத்தை இழந்து ஆத்தும நிர்ப்பாக்கியப்படுவாய்?

சுவிசேஷம் வாசிக்கும்போது “ சுவிசேஷம் ” என்பது சேசுக்கிறீஸ்துநாதர் திருவாய் மலர்ந்து அருளிச்செய்த திவ்விய போதகமேயன்றி வேறல்ல. அது வாசிக்கப்படும்போது, அதின் சத்தியத்துக்கு நாம் சாட்சிகொடுக்கவும், அதின் போதனையை உறுதிப்படுத்தும்படி நமது இரத்தத்தையெல்லாஞ்

சிந்தி, உயிரைமுதலாய் இழக்கவும் நாம் ஆயத்தமாயிருக்கிறோமென்பதற்கு அடையாளமாக நாம் எழுந்து நின்றுகொண்டிருக்கவேண்டும்.

அன்றியும் நாம் நமது உள்ளத்தில் சுவிசேஷ போதனையை வகித்து, வாயால் அங்கீகரித்து, நமது நடபடிக்கைகளில் அதை அநுசரிக்கும்படி ஆயத்தமாய் இருக்கிறோமென்பதற்குக் குறிப்பாகக் குருவானவரோடு நாமும் சிலுவை அடையாளம் வரைந்துகொள்ளுகிறோம்.

"கிரேதோ" என்கிற விசுவாசமந்திரமானது கிறீஸ்துவர்கள் விசுவசிக்கவேண்டிய சத்தியங்களின் சுருக்கமாயிருக்கிறது. குருவும் பூசைக்கு உதவிசெய்கிறவர்களும் மாசற்ற கன்னிமரியம்மாளின் திரு வயிற்றில் மனுஷ அவதாரமெடுத்த நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரை ஆராதிக்கும்படியாக, "மனுஷ அவதாரம் செய்தார்" என்கிற வார்த்தையைச் சொல்லும்போது, முழங்கால்படியிடுகிறார்கள். தூசியும் சாம்பலுமாகிய நான் என் ஆங்காரத்தை அடக்கி, சத்தியவேதம் எனக்குக் கற்பிக்கிற விசுவாச சத்தியங்கள் யாவையும் விசுவசித்து, சர்வேசுரன் தமது குருக்கள் அல்லது பிரதிநிதிகள் வாயினால் கொடுக்கும் கட்டளை

களுக்கு நான் கீழ்ப்படியவேண்டியது எவ்வளவோ நியாயமாமே.

குருவானவர் அப்பத்தைக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறபோது.

திவ்விய வார்த்தையானவர் நமதுபேரில் வைத்த சிநேகத்தினிமித்தம் பாடுபடவும், மரணத்தை அடையவும் அமைந்த மனதோடு கீழ்ப்படிந்தாரென்று தியானித்து, அவருக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்வாயாக. "ஆ! என் சேசுவே! இப்போது குருவானவர் ஒப்புக்கொடுக்கிற அப்பமும் இரசமும் இன்னும் சற்றுநேரத்துக்குள்ளாக உம்முடைய திருச்சரீரமும் இரத்தமுமாக மாறிப்போகுமாப்போல, என்னுடைய ஆத்துமம் உமது ஆத்துமத்தோடு ஒரே பொருளாய் மாறிப்போகவேண்டுமென்று நான் ஆசையாயிருக்கிறேன்."

குருவானவர் பாத்திரத்துக்குள் வார்க்கும் தண்ணீர்த்துளியானது, உயிர் பிரிந்த திவ்விய கர்த்தருடைய திரு இருதயத்தை லோஞ்சின் என்கிறவன் ஈட்டியினால் குத்தித் திறந்தபோது, அவருடைய திரு விலாவினின்று வடிந்த அற்புதமான தண்ணீருக்கு அடையாளமாயிருக்கிறது. மேலும் அந்தத் தண்ணீரால் குறிக்கப்பட்ட விசுவாசி

கள் சேசுக்கிறீஸ்துநாதரோடு ஒன்றித்து, பாத்திரத்தில் அவரோடு காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்படுகிறார்கள் என்பதற்கும் அது அடையாளமாயிருக்கிறது. ஏனென்றால் அர்ச். அருளப்பர் சொல்லுமாப்போல், இந்தத் தண்ணீர் ஜனங்களைக் குறிக்கின்றது.

குருவானவர் இரசத்தைக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறபோது.

நாம் நித்திய பிதாவுக்கு இந்தப் பூசைப் பலியை ஒப்புக்கொடுத்துச் சொல்லத்தக்க செபமாவது: "இரக்கம் நிறைந்த பிதாவே! தேவரீர் சகல படைப்புகளுக்கும் அதிபதி கர்த்தராயிருக்கிறீரென்று அடியேன் அறிந்து ஒத்துக்கொண்டு, தேவரீர் செய்துவருகிற சகல சகாய உபகாரங்களுக்கு நன்றியறிந்த தோத்திரமாகவும், அடியேனும், உலகத்திலுள்ள யாவரும், உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களும், விசேஷமாய் எனக்குப் பிரியமுள்ள ஆத்துமாக்களும் கட்டிக்கொண்ட பாவங்களுக்குப் பரிகாரமாகவும், உமது ஏக திருக்குமாரனுடைய சரீரத்தையும் இரத்தத்தையும் பலியாக ஏற்றுக்கொள்ளும்.

அன்பு நிறைந்த பிதாவே, இந்தப் பரிசுத்த பலியின் அளவில்லாப் பேறுபலன்

களைப் பார்த்து, பாவிகளுக்கு மனஸ்தாப வரத்தையும், நல்லவர்களுக்கு நிலைமை என்னும் வரத்தையும் தந்து, எல்லோரும் உம்முடைய இஷ்டப்பிரசாதத்திலும் சிநேகத்திலும் நிலைத்து, அந்த இஷ்டப்பிரசாதத்தில் உயிர்விடக் கிருபைசெய்தருளும்." கிறீஸ்துவனே, பத்தியோடு பூசை காணக்கடவாய். பூசை ஒன்றே இந்த வரப்பிரசாதங்களை நமக்குப் பெறுவிக்க வல்லபமுள்ளதாயிருக்கிறது.

குருவானவர் ஜனங்களைத் திரும்பிப்பார்த்து வேண்டிக்கொள்ளச் சொல்லும்போது.

சேசுநாதர் பூங்காவனத்தில் தமது அப்போஸ்தலர்களை நோக்கி: சோதனையில் பிரவேசியாதபடி விழித்திருந்து செபம் பண்ணச் சொன்ன புத்தியை நினைத்துக்கொள்ளுவாயாக. இந்தப் புத்தியின்படி நீ எப்போதும் நடந்திருந்தால், அவ்வளவு எளிதாய்ப் பாவத்தில் விழுந்திருப்பாயோ! "ஆண்டவரே, உமது திவ்விய உதவியைக்கொண்டு நான் என் நடத்தையைத் திருத்திக்கொள்வேன். இனிமேலாக என் செபங்களை அதிக உருக்கத்தோடு செய்து, அதிக ஜாக்கிரதையோடு பாவத்துக்கு ஏதுவான சமயங்களை விலகி நடப்பேன்.

குருவானவர் பலித்து ஆயத்தமான செபத்தைச் சொல்லி, பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்னும் திருப்புகழ் கூறும்போது.

நமதாண்டவர் ஜெருசலேம் பட்டணத்துக்குள் பிரவேசித்ததையும், ஜனங்கள் அக்களிப்போடு எதிர்கொண்டு வந்து, ஒலிவமரக்கொப்புகளையும் குருத்தோலைகளையும் கையில் பிடித்துக்கொண்டு, உன்னதத்தில் ஆண்டவருக்குத் தோத்திரம், சர்வேசுரனுடைய நாமத்தினால் வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவரென்று கெம்பீரமாய் அழைத்துக்கொண்டு போனதையும் யோசித்துக்கொள்.

உன் நினைவினால் சர்வேசுரனுடைய சிம்மாசனமட்டும் ஏறி, ஞானிக்கர், பத்திசுவாலகர் என்கிற சம்மனசுக்கள், "தளங்களுக்குக் கர்த்தராகிய தேவன் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்றும், வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்திருக்கின்றன" என்றும் உன்னதத்தில் பாடுவதைக் கேட்கிறதாக ரூபிகரித்துக்கொள்.

"மெமெந்தோ" என்கிற வேண்டுதல் செய்யும்போது.

குருவானவர் தமது கைகளைக் குவித்து, தலைகுனிந்து, கண் கவிழ்ந்து, வாய் மூடியிருப்பதைக் காண்பாய். நமதாண்டவர் அந்

தந்தப் பாடுகளைப்படும்போது இருந்தவிதம் இதுவே. அவர் தம்முடைய கழுத்தில் பெருங்கயிற்றை மாட்ட வந்தவர்களுக்குத் தலையைச் சாய்த்துக்கொடுத்தார். தமது கைகளைச் சேர்த்துக்கொடுத்துத் தம்மைக் கட்டும்படி சம்மதித்தார். தாம் குற்றவாளியென்றாற்போல் தரையை நோக்கிக் கண் கவிழ்ந்து நின்றார். தமதுமேல் குற்றமில்லையென்று ஒரு வார்த்தைமுதலாய்ச் சொல்வதற்கு அவர் வாய் திறந்தவரல்ல. அவருடைய மௌனம் எப்படிப்பட்டதாயிருந்ததென்றால், அவரைத் தீர்வையிட்ட பிலாத்தன் முதலாய் அதைக்கண்டு ஆச்சரியப்படும்படியாயிற்று. ஓ, ஆண்டவருடைய மௌனமும் பொறுமையும் எவ்வளவு ஆச்சரியத்துக்குரியதாயிருந்தது! "ஆண்டவரோ, நீர் எனக்காக இவ்வளவு பாடுபட்டிருக்க, உமக்காக நான் ஒரு வருத்தமும் அனுபவிக்க மனமில்லாதிருப்பதெப்படி?"

குருவானவர் தேவவசீகரமாக்கப்பட்ட அப்பத்தையும் இரசத்தையும் எழுந்தேற்றம் பண்ணுகிற சடங்கானது, நமதாண்டவர் சிலுவையில் உயர்த்தப்பட்ட விசேஷத்தை நமக்கு நினைப்பூட்டுகின்றது. அந்தப் பாக்கியமான நேரம் சமீபித்திருக்கிறது. தேவ குமாரன் பரமண்டலத்தினின்று பரிசுத்த

பலிபீடத்தின்மேல் இறங்குகிறார். அப்
போது உன் ஆத்துமத்தின் பத்தியுருக்க
மெல்லாங் கூட்டிச்சொல்லத்தக்க செபமா
வது: "சிலுவைப் பீடத்தின்மேல் மனுக்
குல இரட்சணியத்திற்காக உத்தமபலியாக
ஒப்புக்கொடுக்கப்பட்ட என் இரட்சகரான
சேசுக்கிறீஸ்துவின் பரிசுத்த இருதயமே,
உம்மை ஆராதிக்கிறேன். நித்தியபிதாவே!
என் பாவங்கள் என்னைப் பழிவாங்கும்படி
தேவரீரிடம் அபயமிடுகின்றன. ஆனால்,
இதோ! உமது குமாரன் எனக்காகத் தம்
மைப் பலியாக ஒப்புக்கொடுத்துத் தமது
அளவில்லாத பேறுபலன்களால் எனக்கு
மன்னிப்பை இரந்து கேட்கிறார். நிர்ப்பாக்
கிய பாவியாகிய என்மேல் இரக்கமாயிரும்."

குருவானவர் பாத்திரத்தை உயர்த்துகிற போது சொல்லத்தகும் செபம்.

"என் பாவங்களையும் சகல மனுஷருடைய
பாவங்களையும் கழுவும்படி சிலுவையில்
வழிந்தோடின என் சேசுவின் விலைமதியாத
திரு இரத்தமே, இந்தப் பாத்திரத்தில் உம்
மை ஆராதிக்கிறேன். மிகவும் மதுரமான
சேசுவே, இந்த விலைமதியாத இரத்தம்
எனக்கு வீணாய்ப்போகும்படி விடாதேயும்."
உன் குற்றங்களையும் நிற்பாக்கியங்களையும்

ஆண்டவருக்கு வெளிப்படுத்தி உனக்கு
வேண்டிய நன்மைகளைக் கேட்டுக்கொள்
வதற்கு இந்த நல்ல சமயத்தைத் தவற
விடாதே. அவர் சகல தகப்பன்மாரிலும்
அன்புள்ள தகப்பனாகையால், அவரிடத்தில்
நம்பிக்கையோடும் கபடற்ற இருதயத்தோ
டும் உன் நிர்ப்பாக்கியத்தைச் சொல்லிக்
காண்பிப்பாயாக. உனக்கும் உன் பெற்
றோர் சிநேகிதர் முதலியவர்களுக்கும் வேண்
டிய வரப்பிரசாதங்களை இரந்துகேள். திருச்
சபைக்காகவும், உன் தேசத்துக்காகவும்,
குருக்களுக்காகவும், பாவிகளுக்காகவும்....
உன் விரோதிகளுக்காகவும் வேண்டிக்கொள்.

குருவானவர் "பாவிகளாகிய எங்களுக்காகவும்" என்கிற வார்த்தைகளைச் சொல்லி பிழைதட்டிக்கொள்ளும்போது.

நமதாண்டவர் உயிர்விடுகையில் நடந்த
பயங்கர அடையாளங்களைக் கண்ட சேர்
வைக்காரனும் மற்றவர்களும், இவர் மெய்
யாகவே தேவ குமாரன் என்று சொல்லி
தங்கள் நெஞ்சுகளில் அடித்துக்கொண்டு
மனஸ்தாபப்பட்டதை நினைத்துக்கொள்வா
யாக. நீயும் அவரை உன் மெய்யான தேவ
னென்று ஒத்துக்கொண்டு, இனி உன் பாவங்
களால் அவருடைய பாடுகளையும் மரணத்

தையும் மறுபடி ஒருபோதும் புதுப்பிக்க மாட்டேனென்று பிரதிக்கினை செய்துகொள்வாயாக.

பரமண்டல மந்திரத்திலடங்கிய ஏழு மன்றாட்டுகளும் சிலுவையின்பேரில் அவஸ்தைப் படும்போது நமதாண்டவர் திருவுளம்பற்றின ஏழு வாக்கியங்களுக்கு அடையாளமாயிருக்கின்றன.

குருவானவர் தேவநற்கருணையைப் பிட்கும்போது.

சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு ஆத்துமம் அவருடைய திருச்சரீரத்தைவிட்டுப் பிரிந்து பாதாளங்களுக்குப்போய் அங்கேயிருந்த நீதிமான்களுடைய ஆத்துமங்களை விடுவித்ததையும், பீடத்தின்மேல் திவ்விய அப்பத்தின் மூன்று பங்குகளிலும் அவருடைய தேவத்துவம் இப்போது எழுந்தருளியிருக்கிறதுபோலவே, அப்போது அது அவருடைய திரு ஆத்துமத்தோடும் திருச்சரீரத்தோடும் சேர்ந்திருந்ததென்றும் தியானிக்கக்கடவாய்.

“ஆண்டவருடைய சமாதானம் உங்களோடு இருப்பதாக,” “இதோ ஆண்டவருடைய செம்மறிப்புருவை” என்கிற வார்த்தைகள், ஆண்டவர் உயிர்த்தபின் தம்மு

டைய அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமாகி, “உங்களுக்குச் சமாதானமுண்டாகக்கடவது” என்றருளிச்செய்ததை நமக்கு நினைப்பூட்டுகிறது. “ஆண்டவரே, இவ்வுலகத்தின் சகல சந்தோஷங்களுக்கும் மேற்பட்டதாகிய அந்தச் சமாதானத்தை எனக்குக் கட்டளையிட்டருளும். என் ஆத்துமமானது சர்வேசுரனுடைய திருச்சித்தத்தை நிறைவேற்றும்படி அவரோடு சமாதான ஐக்கியத்திலிருக்கக்கடவது. என் சகோதரனுடைய குற்றங்களை நான் பொறுமையோடு சகிப்பதால் என் ஆத்துமம் அவனோடு சமாதான ஒற்றுமையில் இருக்கக்கடவது. என் ஆசாபாசங்களை என் புத்திக்குக் கீழ்ப்படியச் செய்வதால், அது என் மனச்சாட்சியோடு எப்போதும் சமாதான பந்தனமாயிருக்கக்கடவது.

குருவானவர் திவ்விய சற்பிரசாதத்தை உட்கொள்ளும்போது.

அந்நாளில் பலமுறையும் பின்வரும் விதமாய் நீ ஆசைநன்மை வாங்கலாம். “ஓ, மிகவும் மதுரமான சேசுவே, தேவரீர் இந்த மாசில்லாமை நிறைந்த தேவதிரவிய அநுமானத்தில் மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறீரென்று உறுதியாக விசுவசிக்கிறேன்.

தேவரீரை உட்கொண்டு என் இருதயத்தில் குடிகொண்டிருக்கச் செய்ய நான் ஆசையாயிருக்கிறேன். பரிசுத்த ஆத்துமங்களின் பரலோக பத்தாவே! என் இருதயத்தில் எழுந்தருளிவந்து, அதில் உமது சிநேக அக்கினியை மூட்டியருளும். என் சேசுவே! நான் உம்மைச் சிநேகிக்கிறேன். உம்மை எப்போதும் சிநேகித்து, ஒருபோதும் உமக்குத் துரோகஞ் செய்யாதிருக்க மனதாயிருக்கிறேன். ஆனால் தேவரீரைத் தேவநற்கருணை வழியாக உட்கொள்ள நான் அபாத்திரவானாயிருக்கிறபடியால், என்னுடைய நல்ல ஆசையை ஏற்றுக்கொண்டு உமது சிநேகத்தை எனக்குத் தந்தருளும்.

(இவ்விடத்தில "கிறீஸ்துவின் ஆத்துமமானதே என்னை அர்ச்சியசிஷ்டவனாகப் பண்ணியருளும்" என்கிற செபத்தைச் சொல்லவும்.)

சுவிசேஷ புஸ்தகத்தை நிருபம் வாசிக்கப்படும் பக்கத்துக்குக் கொண்டுபோனபிறகு ஏராளமான யூதர்களும் அஞ்ஞானிகளும் மரண அந்தகாரத்தினின்று சுவிசேஷத்தின் ஞான ஒளியைப் பெற்றுப் புதுமையாய் மனந்திரும்பினதைத் தியானிப்பாயாக. "ஆண்டவரே, இந்த மகத்தான உபகாரத்

தை நினைத்துத் தேவரீருக்கு நான் என்ன நன்றியறிதல் செலுத்தப்போகிறேன்? இவ்வளவு விலைமதியாத உபகாரத்தைப் பெற்றுக்கொள்ள அடியேன் பாத்திரமானதெப்படி? ஞானஸ்நானம் பெறும்படி உனக்குக் கிடைத்த பாக்கியத்துக்காக ஆண்டவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வாயாக.

குருவானவர் கடைசி வேண்டுதல் செய்யும்போது.

நமதாண்டவர் நமக்காகத் தமது தேவ பிதாவைப் பார்த்து வேண்டிக்கொண்டபோது செய்த செபங்களை நினைவுகூர்ந்து கொள்வாராக. நமது அன்புள்ள இரட்சகர் நம்மைக் கைவிடவில்லை, நமக்காக வேண்டிக் கொள்ளுகிறார். நாம் இரட்சணியமடைய வேண்டுமென்று அவர் ஆசிக்கிறபடியால், அதற்காக நாம் எப்போதும் வேண்டிக் கொள்ளவேண்டும்.

குருவானவர் கடைசி ஆசீர்வாதம் கொடுக்கப் போகிறபோது தியானிப்பதாவது.

நான் பலிபூசையைக் கண்டேன். தேவ குமாரன் தம்மைத்தாமே என் இரட்சணியத்துக்காக ஒப்புக்கொடுத்தார். "ஐயோ,

என் ஆண்டவரே, இந்தத் திவ்விய பூசையை எவ்வளவு பத்திக்குறைவாய்க் கண்டேன்! என் சர்வேசுரா, எனக்கு மன்னிப்பு கொடுத்தருளும். இந்த நாளில் நான் தேவரீருக்குத் துரோகஞ் செய்யாதபடி எனக்கு ஒத்தாசை செய்தருளும். உமது தாசராகிய குருவினால் எனக்குக் கிடைத்த ஆசீர்வாதமானது பொதுத்தீர்வை நாளில் உறுதிப்படும்படி அநுக்கிரகஞ் செய்தருளும்." முழந்தாளிலிருந்து இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கோவிலை விட்டுப் புறப்படுமுன் தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கிற ஆண்டவரைப் பார்த்துச் சொல்லத்தக்க செபமாவது: "என் அன்பரே, என் இருதயத்தை உமது கரங்களில் ஒப்படைக்கிறேன். உமது உத்தரவுபெற்று என் கடமைகளையெல்லாம் நிறைவேற்றப்போகிறேன். ஆண்டவரே, எனக்கும் என்னைச்சேர்ந்தவர்களெல்லோருக்கும் உமது திவ்விய ஆசீர்வாதத்தைத் தந்தருளும்." ஆமென்சேசு.

(பூசை முடிந்தபின் சொல்லப்படும் 3 பிரியதத்தமந்திரங்களும், கிருபைதயாபத்து மந்திர முதலியவைகளும் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கின்றன.)

திவ்விய பூசை காண சுருக்கமான வகை.

(முத்திப்பேறுபெற்ற லேயோனார்த்.)

பூசை ஆரம்பமுதல் சுவிசேஷம் வாசிக்கிற வரையில்.

என் சர்வேசுரா சுவாமி! தேவரீர் என் ஆத்துமத்தின் காரணக் கர்த்தாவாகவும், எஜமானனாகவும் இருக்கிறீரென்று நான் அங்கீகரித்து தேவரீரை ஆராதனை பண்ணுகிறேன். என் உயிர் ஸ்திதி அனைத்தும், மற்றெனக்குள்ள யாவும், தேவரீராலேயே எனக்குக் கிடைத்தது. ஆகையால், தேவரீருடைய உன்னத மகத்துவத்துக்குரிய அளவற்ற ஆராதனை வணக்க ஸ்தோத்திரங்களை நான் செலுத்தவேண்டியவனாயிருந்தாலும், இப்பேர்ப்பட்ட பெரிய கடமையை நிறைவேற்ற நீசப் பாவியாகிய என்னாலே எவ்வளவேனும் கூடாததாய் இருக்கின்றது. எனது திவ்விய இரட்சகர்தாமே இத்திருப்பீடத்தில் எழுந்தருளிவந்து தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிற தமது தாழ்மை நிறைந்த அவமானங்களையும், ஆராதனை நமஸ்காரங்களையும்

நானும் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.
எனது திவ்விய இரட்சகர் செய்வதையே
நானும் அவரோடு ஒன்றித்துச் செய்ய
ஆசைப்படுகிறேன். தேவரீருடைய திவ்விய
மகிமைப்பிரதாப சந்நிதியில் அடியேன் சாஷ்
டாங்கமாக விழுந்து தாழ்ச்சியோடு தேவரீ
ரை ஆராதிக்கிறேன். திவ்விய கர்த்தருடைய
நிந்தை அவமானமுள்ள பாடுகளோடு ஒன்
றித்து தேவரீரை வணங்கி நமஸ்கரிக்கிறேன்.
எனது திவ்விய கர்த்தர் எனக்குப் பதிலாய்
அளவற்ற ஆராதனை வணக்க ஸ்தோத்திரங்
களைத் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறதைப்
பார்த்து நான் மனமகிழ்ந்து அக்களிக்
கிறேன். என் சர்வேசுரா சுவாமி! தேவரீ
ருடைய திவ்விய மகத்துவ சன்னிதானத்
திற்கு இத்திருப் பலிபூசை அளவில்லாத
ஆராதனையாய் இருப்பதைப் பார்த்து உண்
மையாகவே நான் களிகூருகிறேன். என்
னால் இயன்றமட்டும் இந்தப் பூசைப்பலி
யைக் கண்டு சந்தோஷித்து, தேவரீரை
வாழ்த்தி ஸ்துதிக்கிறேன்.

சுவிசேஷம் வாசித்ததுமுதல் திவ்விய சற்பிரசாத எழுந்தேற்றம் வரையில்.

என் சர்வேசுரா சுவாமி! தேவரீருக்கு
விரோதமாய் இத்தனை விசை துரோகஞ்

செய்த பாவி நான் இதோ வந்தேன். இப்
போது என் முழு இருதயத்தோடும் துக்க
மனஸ்தாபத்தோடும் என் பாவ அக்கிரமங்
களையெல்லாம் வெறுத்துத் தள்ளுகிறேன்.
அவைகளுக்குப் பரிகாரமாக திவ்விய கர்த்த
ரானவர் இத்திருப்பீடத்தில் தேவரீருக்
குச் செலுத்தும் பரிகாரங்களையே நானும்
ஒப்புக்கொடுக்கிறேன். சேசுக்கிறீஸ்துவினு
டைய திருப்பேறுபலன்களையும் அவருடைய
திரு இரத்தத்தையும் இன்னும் எனக்காக
திரும்பவும் பலியாகும் மனுஷாவதாரமான
திவ்விய கர்த்தரைத்தானே நானும் ஒப்புக்
கொடுக்கிறேன். இத்திருப்பீடத்தில் அவர்
தமது விலையேறப்பெற்ற திரு இரத்தத்தைக்
கொண்டு • எனது மத்தியஸ்தருமாய் மனுப்
பேசுகிறவருமாய் அமைந்திருந்து எனக்காக
பொறுத்தலை இரந்து மன்றாடுகிறபடியால்,
அந்த நேச திரு இரத்தத்தின் பேரொலி
யோடு நானும் ஒன்றித்து எனது தோஷ
துரோகங்களுக்கெல்லாம் பொறுத்தலை இர
ந்து மன்றாடுகிறேன்.

திவ்விய கர்த்தருடைய திரு இரத்தமா
னது இரக்கத்தின்பொருட்டுத் தேவரீரை
நோக்கிக் கூப்பிடுகின்றது. மனஸ்தாபப்
படும் என்னுள்ளமும் இரக்கத்திற்காகவே

தேவரீரை நோக்கி அபயமிடுகின்றது. ஆ!
எனதன்பரான தேவனே! என் கண்ணீர்
களைக் கண்டு தேவரீர் இரங்காவிட்டாலும்,
என் திவ்விய இரட்சகருடைய பெருமூச்சு
களைக் கேட்டாவது என்மேல் இரக்கமா
யிரும். அவர் சிலுவை மரத்தில் சகல மனுக்
குலத்திற்கும் பேறு பெற்றடைந்த இரக்கத்
தை இத்திருப்பீடத்தில் அவர் எனக்கு வரு
விக்கக்கூடாதிருப்பதெப்படி? அந்த விலை
மதிக்கப்படாத திரு இரத்தத்தின் பேறு
பலன்களைக்கொண்டு தேவரீர் என் பாவங்
களை எல்லாம் பொறுத்தருளுவீரென்று நம்பி
யிருக்கிறேன். எனது ஜீவியகாலக் கடைசி
நிமிஷம் வரையிலும் நான் அவைகளுக்காகத்
துக்கித்து அழுவேன்.

எனது அன்புக்குரிய இரட்சகரே! அர்ச்.
இராயப்பருடைய கண்ணீரையும், மரியமத
லேனாளுடைய மனஸ்தாபத்தையும் எனக்
குத் தந்தருளும். இன்னும் பாவச் ஜீவியத்
தில் நின்று உண்மையாய் மனந்திரும்பின
புண்ணியவாளருடைய துயர மனஸ்தாபத்
தை எனக்குத் தந்து இந்தத் திருப் பூசைப்
பலி நேரத்தில் என் சகல பாவங்களுக்கும்
முழுப் பொறுத்தலடையக் கிருபை செய்
தருளுஞ் சுவாமி.

திவ்விய சற்பிரசாத எழுந்தேற்றமுதல் அதை உட்கொள்ளும் நேரம் வரையில்.

என் அன்பான தேவனே! இதோ தேவ
ரீர் அடியேனுக்குக் கட்டளையிட்ட பொது
வும் விசேஷித்ததுமான நன்மை வரப்பிர
சாதங்களாலே நிறையலானேன். இன்னம்
இம்மை மறுமையிலும் தேவரீர் எனக்குக்
கொடுக்கச் சித்தமாயிருக்கிற நன்மைகளை
யும் கண்டுணர்ந்தேன். அடியேன்மேல் தேவ
ரீர் கொண்டிருக்கும் இரக்கம் மட்டற்றதா
யிருந்தவண்ணமே இன்னமும் இருக்கிற
தென்று நம்பியிருக்கிறேன். அதற்காகவே
தேவரீர்மட்டில் எனக்குள்ள கடமையெல்
லாம் கடைசிமட்டும் சரிவர நிறைவேற்ற
ஆயத்தமாயிருக்கிறேன். ஆகையால் இதற்கு
நன்றியறிதலாகவும் உத்தரிப்புப் பலியாக
வும் குருவானவருடைய கைங்கிரியத்தைக்
கொண்டு நான் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்
கிற மாசற்ற பலி இதோ! திவ்விய கர்த்த
ருடைய விலையேறப்பெற்ற திரு இரத்தம்
இதோ! தேவரீர் எனக்குக் கட்டளையிட்ட
நன்மை வரப்பிரசாதங்களுக்கெல்லாம் நான்
இப்போது ஒப்புக்கொடுக்கிற இந்தத் திருப்
பூசைப் பலியானது போதுமான பிரதிதான
மாம். அளவில்லாத விலைபொருந்திய இந்தப்

பிரதிதானமானது, தேவரீரிடத்தில் நான் பெற்றுக்கொண்டதும், இன்னும் பெறக்கூடியதுமான சகல நன்மைகளுக்கும் யோக்கியப் பெறுமதியாமே.

ஓ பரிசுத்த சம்மனசுக்களே! மோக்ஷவாசிகளே! சர்வேசுரன் எனக்குத் தந்தருளின சகல நன்மைகளுக்கும் நான் நன்றியறிந்த தோத்திரஞ்செய்ய எனக்கு ஒத்தாசை செய்யுங்கள். இதைப்பற்றியே, இந்தத் திருப்பூசையை மாத்திரமல்ல, இன்னம் பூலோகமெங்கும் இப்போது நடக்கும் சகல பூசைப் பலிகளையும் நான் நன்றியறிந்த தோத்திரமாய் ஒப்புக்கொடுக்க அடியேனுக்கு உதவி செய்யுங்கள். இப்படியாய், அன்புக்குரிய தயாள சம்பன்னராகிய சர்வேசுரன் எனக்குத் தந்தருளினதும், இன்னும் எப்போதும் அவர் தந்தருளுவதுமான சகல உபகாரங்களுக்கும் இதுவே பிரதிதானமாகும்.

ஓ! என் அன்புக்குரிய அர்ச்சியசிஷ்டவர்களே! பாதுகாவலானவர்களே! நான் நன்றிகெட்டவனாய் வாழ்ந்து, மரணம் அடையாதபடிக்கு நன்மைத்தனமுள்ள தேவனுக்கு நீங்கள் எனக்குப் பதிலாய் இந்த நன்றியறிந்த ஸ்தோத்திரத்தைச் செலுத்தத்

தயைசெய்யுங்கள். அவர் என் நன்மனதைக் கையேற்றுக்கொண்டு எனக்காக திவ்விய கர்த்தர் இந்தத் திருப்பூசைப்பலியில் ஒப்புக்கொடுக்கும் பட்சமுள்ள நன்றியறிதலான முயற்சிகளைக் கிருபையாய்க் கேட்டருளவேண்டுமென்றும் மன்றாடுங்கள்.

திவ்வியசற்பிரசாதம் உட்கொண்ட நேரமுதல் பூசை முடியுமட்டும்.

என் அன்பான சர்வேசுரா! தேவரீருடைய நன்மை உபகாரங்களுக்கு நான் முழுதும் அபாத்திரவானென்று ஏற்றுக்கொள்ளுகிறேன். இப்பேர்ப்பட்ட எனது முற்றும் அபாத்திரமான தன்மையைச் சங்கீர்த்தனமாய் வெளிப்படுத்துகிறேன். என்னுடைய பாவ துரோகங்களைப்பற்றி தேவரீர் சமுகத்தில் என் விண்ணப்பம் அநுகூலமடைய அபாத்திரமானதாயினும், இத்திருப்பீடத்தில் எழுந்தருளி வந்து எனக்காகத் தமது திரு உயிரைப் பலியிட்டுப் பிரார்த்திக்கும் உமது திவ்விய குமாரனுக்குத் தேவரீர் செவி கொடாதிருக்கக்கூடுமோ?

என் அன்பான தேவனே! இந்த உன்னத பரிபாலகரின் செபத்தைக் கேட்டருளி எனது இரட்சண்ய அலுவலை நிறைவேற்ற அவசரமான வரப்பிரசாதங்களையெல்லாம்

அவருடைய திரு முகத்தைக் குறித்து
எனக்குத் தந்தருளுஞ் சுவாமி. என் சகல
பாவங்களுக்கும் பொதுப்பொறுத்தலைத்
தந்து கடைசிமட்டும் இஷ்டப்பிரசாதத்தில்
நிலைத்திருக்கத்தக்க வரத்தை எனக்குக் கட்
டளையிட்டருளத் தேவரீரை இரந்து மன்றாடு
கிறேன். என் சர்வேசுரா சுவாமி! திவ்விய
கர்த்தருடைய மன்றாட்டை நம்பிக்கொண்டு
நான் அர்ச்சியசிஷ்டவனாய் ஜீவிக்கத்தக்க
உறுதியான சகல புண்ணியங்களையும் பல
மான ஒத்தாசையையும் தந்தருள மன்றாடு
கிறேன் சுவாமி.

இதன்றியே, சகல பாவிகளும் அவிசுவாசி
களும், விசேஷமாய் ஆத்தும சம்பந்தத்தா
லாவது இரத்தக் கலப்பினாலாவது என்னோடு
ஐக்கியப்பட்டிருக்கிற யாவரும் மனந்
திரும்பிச் சீவிக்க வரந்தந்தருளுஞ் சுவாமி.
உத்தரிப்பு ஸ்தலத்திலுள்ள சகல ஆத்துமங்
களும் வேதனைகுறைந்து மீட்சி அடையத்
தயை செய்தருளும். இந்தத் திவ்விய பூசைப்
பலியின் பேறுபலன்களைக்கொண்டு அந்த
உத்தரிப்பு ஸ்தலச் சிறையினின்று அவர்கள்
எல்லோரையும் மீட்டருளும். சகல சீவியர்
களும் சத்திய வேதநெறி தவறாமல் நடக்க
அவர்களை மனந்திருப்பியருளும். இப்படி
யாய் இந்த நிர்ப்பாக்கியமான பூலோகம்

தேவரீருக்கு இனிய ஆனந்த ஸ்தலமாகக்
கடவது. இதிலே தேவரீர் சகலராலும்
நேசிக்கு வணங்கி ஸ்தோத்தரிக்கப்பட்ட
பின், நித்திய காலத்திற்கும் தேவரீரை
நாங்கள் வாழ்த்தி ஸ்துதிக்க மறுமையில்
வந்து சேரக்கடவோமாக.

1884-௵ ஜனவரி-௴ 6-௳, 13-ம் சிங்க
ராயர் என்கிற நாமதேயமுள்ள அர்ச். பாப்
பானவர் கட்டளையிட்ட உத்தாரப்படி,
இதற்கடியில் வருஞ் செபங்களை முழந்தாளி
லிருந்து பூசைக்கு பிறகு குருவுடனே வேண்
டிக்கொள்ளுகிறவர்கள் 300-நாள் பலன்
அடையலாம்.

மூன்று பிரியதத்த மந்திரமும், ஒரு கிருபை
தயாபத்து மந்திரமும் சொல்லவும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

எங்கள் அடைக்கலமும் பலமுமாகிய சர்
வேசுரா! உம்முடைய திருச்சபையின் பத்தி
யுள்ள செபங்களுக்குச் செவிகொடுத்தரு
ளும், மகத்துவம் பொருந்திய அமலோற்பவ
கன்னியும் தேவதாயாருமாகிய அர்ச். மரியம்
மாள், மூத். அர்ச். சூசையப்பர் உம்முடைய
அப்போஸ்தலராகிய அர்ச். இராயப்பர், சின்
னப்பர் முதலிய சகல அர்ச்சியசிஷ்டவர்
களுடைய மன்றாட்டுக்குத் தேவரீர் இரங்கி,

தற்கால துன்பங்களில் அடியோர்கள் இரந்துகேட்கிற நன்மைகளை அடையும்படி தயைபுரியும். இந்த மன்றாட்டை எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும். ஆமென்சேசு.

அதிதூதரான அர்ச்சியசிஷ்ட மிக்கேலே, எங்கள் போராட்டத்தில் எங்களைத் தற்காத்தருளும். பசாசின் துர்க்கருத்தையும் அதின் சற்பனைகளையும் அகற்றி எங்களுக்குத் துணையாயிரும். தாழ்மையான எங்கள் மன்றாட்டைக்கேட்டு சர்வேசுரன் பசாசுக்கு கற்பிப்பாராக. நீரும் மோட்ச சேனைக்குத் தலைமையானவரே! ஆத்துமங்களை அழிக்கிறதற்கு இவ்வுலகத்தில் சுற்றித்திரியும் பேயையும் மற்றத் துஷ்ட அரூபிகளையும் தேவவல்லமையின் பலத்தால் நரகத்தில் தள்ளுவீராக. ஆமென்சேசு. சேசுவின் திரு இருதயமே! எங்கள்பேரில் இரக்கமாயிரும். (மூன்று தடவை.)

300-நாள் பலன்.

நல்ல பாவசங்கீர்த்தனம் செய்யும் வகை.

பச்சாத்தாபம் அல்லது பாவசங்கீர்த்தனம், பாவங்களையும் பாவங்களுக்குரிய வேதனைகளையும் பொறுத்து அந்தப் பாவங்களில் விழாமலிருக்க வரப்பிரசாதமடைய நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரால் ஸ்தாபிக்கப்பட்ட ஓர் தேவதிரவிய அநுமானமாம். நம்மாலேயானமட்டும் சுறுசுறுப்போடே இந்த மேலான முயற்சியைச் செய்துவரப் பிரயாசப்படவேணும். ஆகையால் பாவசங்கீர்த்தனத்துக்கு முன்னும், பாவசங்கீர்த்தனம் பண்ணும்போதும், பாவசங்கீர்த்தனம் பண்ணினபிறகும், செய்யவேண்டியது ஏதென்று சுருக்கத்தில் விசாரிப்போமாக.

1. பாவசங்கீர்த்தனம் செய்யுமுன்.

சிலுவை அடையாளம்வரைந்து உன் பாவம் குற்றங்குறைகளைக் கண்டுபிடிக்கவும், அதுகளுக்காக உருக்கமான மனஸ்தாபப்படவும், சேசுவின் திரு இருதயத்தையும், அர்ச். கன்னிமரியாயின் மாசற்ற திரு இருதயத்தை

யும் பார்த்து, பத்தியோடு வேண்டிக்கொள்ளுகிறது.

சேபம்.

மிகவும் இரக்கமுள்ள கன்னிமரியாயே! ஆறுதல் தரும் தாயாரே! கஸ்தி வியாகுலப் படும்பொழுது உம்மையும் உம்முடைய திருக்குமாரனாகிய சேசுவையும் நம்பி அடைக்கலமென்று வந்தவர்களில் ஒருவராகிலும் தேற்றரவு அடையாமற்போனார்களென்று உலகத்திலே சொல்லக் கேள்விப்பட்டதில்லை என்கிறதினாலே பாவியாயிருக்கிற நானும் வெகு நம்பிக்கையோடு உமது திருப்பாதத்தை அண்டி வருகிறேன்.

அர்ச். மரியாயின் மாசற்ற திரு இருதயமே! பாவியாயிருக்கிற நான் நல்ல ஆத்தும சோதனை செய்து, மெய்யான உத்தமமனஸ்தாபப்பட்டு, உறுதியான பிரதிக்கினைசெய்து பாவப்பொறுத்தலையும் தேவ இஷ்டப்பிரசாதத்தையும் உம்முடைய திருக்குமாரனும் என் ஆண்டவருமாகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு இருதயத்திலிருந்து பெற்றடைந்தருள உம்மை மன்றாடுகிறேன் தாயாரே. ஆமென் சேசு.

ஆத்தும சோதனை செய்யும் வகை.

பத்துக்கற்பனைகளின்பேரில்.

முதற் கற்பனை:—மனதுபொருந்தி விசுவாசத்தில் சந்தேகப்பட்டேனோ—வேதத்திற்கும் புண்ணியத்திற்கும் அடுத்த காரியங்களை அசட்டையினால் படியாமற் போனேனோ— கோவிலில் ஆசாரக் குறைவாய் இருந்தேனோ — பேசினேனோ — சிரித்தேனோ— தேவ ஊழியத்துக்கு அடுத்த காரியங்களை சங்கையீனமாகத் தொட்டேனோ—சொன்னேனோ—அசட்டை செய்தேனோ—பாவசங்கீர்த்தனம் செய்வேனென்கிற நினைவோடு பாவங்களைத் துணிந்து செய்தேனோ—சாவான பாவத்தைக் கட்டிக்கொண்ட பிறகு பாவசங்கீர்த்தனம் செய்வதற்கு தாமதம் செய்தேனோ—சர்வேசுரனை நம்பாமல் தன் தாய்தகப்பன் சுற்றத்தார் இவர்களை நம்பினேனோ—சர்வேசுரனுடைய தயவின்பேரில் அவநம்பிக்கை வைத்தேனோ—அந்தந்தக் காரியங்களைச் சர்வேசுரனுடைய தோத்திரத்துக்காகச் செய்யாமல் மனிதருடைய முகப்பிரீதிக்காகவும் வெகுமானத்துக்

காகவும் செய்தேனோ—நான் எப்பொழுதும் வாடிக்கையாகச் செய்கிற செபத்தியானம் இவை முதலான ஞானக்கிருத்தியங்களை சோம்பலினால் விட்டுவிட்டேனோ—ஒன்றில் குறைத்தேனோ—செபம் செய்தால் பத்திக் குறைவோடு ஆசாரமில்லாமல் தூங்கிவிழுந்து கொண்டு செபம் செய்தேனோ—இராத்திரி படுக்கிறதற்கு முன்னே சாவான பாவத்தோடு இருந்தாலும், உத்தமமனஸ்தாபப் படாமல் சும்மா படுத்துக்கொண்டேனோ—காற்று மழை உஷ்ணம் இவை முதலான காலவேற்றுமையின்பேரில் முறையிட்டேனோ—பாவத்துக்கு மிகவும் ஏதுவான சமயத்தில் மனதுபொருந்தி உட்பட்டேனோ—மற்றவர்கள் புண்ணிய வழியில் நடக்கிறதற்கு விக்கினம் செய்தேனோ—பத்தியோடே நடக்கிறவர்களைப் பரிகாசம் செய்தேனோ—யாதொரு பொருத்தனை வார்த்தைப்பாடு சொல்லி அதைச் செலுத்தாமல் போனேனோ—குறத்தி சாஸ்திரம் வள்ளுவ சாஸ்திரம் கேட்டேனோ—கேட்டதை விசுவசித்து நம்பினேனோ—கண் திருஷ்டிப்பட்டதென்று அதற்கு மந்திர தந்திரங்களைச் செய்து கொண்டேனோ?

இரண்டாங் கற்பனை:—மெய்யான காரியத்திற்கும் சந்தேகமான காரியத்திற்கும்

சர்வேசுரனைச் சாட்சிக்கு அழைத்தேனோ—மெய்யான காரியமாயிருந்தாலும் அற்பக் காரியமாயிருக்கையில் அதற்குச் சத்தியம் செய்தேனோ—மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு வாயினால் ஒரு காரியத்தைச் செய்வேனென்று சத்தியம் செய்துகொடுத்த பிறகு, பின்வாங்கி அதைச் செய்யாமற் போனேனோ—உன்னாணை என்னாணை கண்ணாணை என்று சொன்னேனோ—புறத்தியார் முறையற்றவிதயாய்ச் சத்தியம் செய்யக் காரணமாய் இருந்தேனோ—புறத்தியார் செய்த வார்த்தைப்பாட்டைச் செலுத்தாதபடிக்கு விக்கினஞ் செய்தேனோ—எனக்குத்தானே சாபம் போட்டுக்கொண்டேனோ—பாஷை இட்டுக்கொண்டேனோ—புறத்தியாரைச் சபித்தேனோ—இன்ன நன்மையான காரியத்தைச் செய்யேன், இன்ன தீமையான காரியத்தைச் செய்வேன் என்று பற்றுக் கூறினேனோ—இப்படி ஆணையிடுகிற பொல்லாத வாடிக்கையைத் தள்ள பிரயாசப்பட்டேனோ—சர்வேசுரனுக்கும் அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் விரோதமாகத் தூஷணஞ் சொன்னேனோ?

மூன்றாங் கற்பனை: — ஞாயிற்றுக்கிழமை கடன் திருநாளிலே முழுப்பூசை காணாமற் போனேனோ—கண்டாலும் பராக்காய் ஒடுக்

கம் வணக்கமின்றி பூசை கண்டேனோ—அந்த நாளை முழுதும் வீணாய் விளையாட்டிலும் பிரயாணத்திலும் செலவழித்தேனோ—அந்த நாளிலே உத்தாரமில்லாமல் விலக்கப்பட்ட வேலையைச் செய்தேனோ—அல்லது செய்வித்தேனோ?

நான்காம் கற்பனை:—தாய் தகப்பன் முதலானவர்களையும் குருக்கள் பெரியோர்களையும் அசட்டை செய்து நிந்தித்துப் புறக்கணித்து அவர்கள்பேரில் அருவருப்பாய் இருந்தேனோ — அவர்கள் வார்த்தையைக் கேட்டு அவர்களுக்குக் கீழ்ப்படியாமல் இருந்தேனோ—அவர்களுக்கு சங்கை செய்யாமற் போனேனோ—பிதா மாதாவானவர்களுக்குச் செய்யவேண்டிய பணிவிடை ஊழியங்களைச் செய்யாமற்போனேனோ — அவர்களுக்கு அன்ன வஸ்திரம் கொடுத்து விசாரியாமற் போனேனோ—அவர்களை அடித்தேனோ—அவர்கள் சாகவேண்டுமென்று மனதாயிருந்தேனோ?

ஐந்தாம் கற்பனை:—புறத்தியார்பேரில் பகை வர்மமாயிருந்தேனோ—அந்தப் பகையை மனதில் எத்தனை நாள், எந்நேரம் வைத்துக்கொண்டிருந்தேன்—சண்டை போட்டேனோ—கோபமாய்ப் பேசினேனோ—வர்மத்தி

னால் பேசாமலும் சங்கை செய்யாமலும் இருந்தேனோ—மனிதர்பேரில் வெறுப்பாயிருந்தேனோ—புறத்தியாருக்கு வந்த பொல்லாப்பைக் கண்டு சந்தோஷப்பட்டேனோ — அவர்களுக்கு வந்த நன்மையைக் கண்டு கஸ்திப்பட்டேனோ—அவர்கள் பாவத்தில் விழக் காரணமாயிருந்தேனோ—அவர்களுக்கு சாவுகேடு வரவேணுமென்று ஆசைப்பட்டேனோ — பழிவாங்கினேனோ — பழிவாங்க மனதாயிருந்தேனோ — அடித்தேனோ — புறத்தியாருக்கு வருகிற பொல்லாப்பை என்னால் ஆனமட்டும் விலக்காமல் இருந்தேனோ—என் பிள்ளைகளுக்கு மந்திர உபதேசம், புண்ணியவழி, கல்வி முதலானவைகளைப் படிப்பியாமற்போனேனோ—அவர்களுடைய துர்க்குணங்களை அடக்கி தண்டியாமற்போனேனோ—புறத்தியாருடைய குற்றங்களை மற்றவர்களிடம் சொன்னேனோ — கோள் குண்டணி பேசினேனோ—இதினாலே புறத்தியாருக்கு மெத்த மோசம் வந்ததோ—எத்தனைபேர் முன்பாக அப்பேர்ப்பட்ட காரியங்களைப் பேசினேன்?

ஆறாங் கற்பனை:—கற்புக்கு விரோதமான மோக பாவஞ்செய்தேனோ—செய்யக் கருத்தாயிருந்தேனோ — கற்புக்கு விரோதமான அங்கச்சேஷ்டைகளைச் செய்தேனோ—கன்னி

ஞலே கெட்ட பார்வைகளைப் பார்த்தேனோ
—கெட்ட புஸ்தகங்களை வாசித்தேனோ—
உதாசன வார்த்தைகள் சொன்னேனோ—
அல்லது கேட்டேனோ—வஸ்திர அலங்
கோலையாயிருந்தேனோ—காம விகாரத்தைப்
பற்றி என்னை அலங்கரித்தேனோ—தூது நட
த்தினேனோ—அல்லது பேசினேனோ—பேசு
வித்தேனோ—மோக விசாரத்துக்கடுத்த மய
க்கமான வஸ்துக்களைச் செய்தேனோ—அல்
லது தின்றேனோ—அல்லது குடித்தேனோ—
பாவம் செய்யத்தெரியாதவர்களுக்குச் செய்
யப் படிப்பித்துக் கொடுத்தேனோ—புறத்தி
யார் பாவத்தில் விழும்படி கட்டாயம் செய்
தேனோ—அல்லது காரணமாயிருந்தேனோ—
அல்லது அதற்கு ஏதுவான இடங்களுக்கும்
போனேனோ?

ஏழாங் கற்பனை :—திருடினேனோ—திருட்டு
உடைமையை வாங்கினேனோ--திருடச் சொ
ன்னேனோ—அல்லது அதற்கு உதவி செய்தே
னோ—கொள்ளல் விற்றலிலே அளவு நிறை
யிலே கூட்டாளிகளுக்கு வஞ்சனைத் துரோ
கஞ் செய்தேனோ—செல்லாப்பணங்களைச்
செலுத்தினேனோ, கெட்டதை நல்லதென்று
—அடுத்தவனை மோசஞ்செய்தேனோ—திருடி
னதை உத்தரியாமற் போனேனோ—கண்
டெடுத்த உடைமைகளை அதற்கு உடையவர்

களை விசாரித்துக் கொடாமற் போனேனோ—
உடன்படிக்கையில் தப்பிப்போனேனோ—
ஊழியங்களிலே அசட்டை செய்தேனோ?

எட்டாங் கற்பனை :—பகடி பரிகாசத்திற்
கும் புறத்தியார் முகப்பிரிதிக்கும் பொய்
சொன்னேனோ—ஒருவரை மோசம் போக்
கத் தக்கதாக அவர்களிடத்திலே இல்லாத
நன்மைகளைச் சொல்லி பசப்பினேனோ—
நான் செய்த குற்றத்தை மறைக்கப் பொய்
சொன்னேனோ — புறத்தியார்பேரில் அவ
தூறு சொன்னேனோ—அநியாயமாய்ப் புறத்
தியாருடைய கருத்துக்கும், கிரிகைக்கும்
வார்த்தைக்கும் விரோதார்த்தஞ் செய்து
விபரீதஞ் சொன்னேனோ—?

ஒன்பதாங் கற்பனை :—சர்வேசுரனுடைய
சந்நிதியிலே வார்த்தைப்பாடு கொடுத்த தன்
தாரம் தவிர பிறர் தாரத்தை அபேட்சித்
துப் பாவம் கட்டிக்கொண்டேனோ—பாவத்
துக்கு அடுத்த வார்த்தை, கிரிகை, நினைவு,
விசாரங்களுக்கு இடங்கொடுத்துச் சரசங்
கள் செய்தேனோ—பாவப் பழக்கமான
யாதொருவர் உண்டோவென்றும், அப்படிப்
பட்டவர்கள் கலியாணக்காரிகளோ—கலி
யாணமில்லாதவர்களோ — கைம்பெண்சாதி
களோ—கிட்டின உறவோ— தூரத்து உறவோ
—அந்நியரோ?

பத்தாங் கற்பனை :—புறத்தியார் உடைமையின்பேரில் ஆசை வைத்தேனோ—புறத்தியாருக்கு கொடுக்கவேண்டிய கடன்களைக் கொடுக்க அவகாசமிருந்துங் கொடாமல் அலைக்கழித்து மறுதலித்தேனோ — புறத்தியார் பிழைப்பைக்கெடுத்துச் சேதம்வருத்தி நான்மாத்திரம் பிழைக்கப் பேராசைப் பட்டேனோ—அடைக்கலமாக வைத்ததை அபகரித்துக்கொண்டேனோ—வேலை செய்தவர்களுக்கு உண்டான சம்பளம் கூலி கொடாமல் போனேனோ—ஏழை பரதேசிகள் உடைமைகளைக் கட்டாயமாய்ப் பறித்தேனோ—கபடு தந்திரஞ்செய்து கைப்பற்றினேனோ?

☞ இதன்பிறகு நமது சிநேகத்தினிமித்தம் இவ்வுலகத்தில் வந்து பாடுபட்டு நமக்காகத் தமது இரத்தமெல்லாம் சிந்தி மரித்து நம்மை இரட்சித்த ஆண்டவருக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தேனே யென்று மிகவும் உருக்கமான மனஸ்தாபப்பட்டு கெட்டியான பிரதிக்கினை செய்கிறது. உருக்கமான மனஸ்தாபந்தான் நல்ல பாவசங்கீர்த்தனத்தின் முக்கியமான குணமென்றறிக.

2. பாவசங்கீர்த்தனஞ் செய்யும்போது.

ஆத்தும குருவினிடத்தில் சென்று முழங்காலிலிருந்து சிலுவை வரைந்துகொண்டு கைகுவித்து "தேவரீர் என்னை ஆசீர்வதித்தரு

ளும்" என்று சொன்னதின்பின், நீ கட்டிக்கொண்ட பாவங் குற்றங்குறைகளைத் தாழ்ச்சியோடும், சுருக்கமாயும், தெளிவாயும், ஒன்றும் ஒளியாமலும், இத்தனைவிசையென்றும், குருவானவரிடத்தில் வெளிப்படுத்துகிறது. பிறகு குருவானவரைப் பார்த்து: "நான் செய்த இந்தப் பாவங்களையும் முன் கட்டிக்கொண்ட சகல பாவங்களையும் விசேஷமாய்...............(இங்கே முன் கட்டிக்கொண்ட பாவங்களில் பிரதான பாவம் ஒன்றை வெளிப்படுத்துகிறது) பாவத்தையும் சர்வேசுரன் பொறுத்துக்கொள்ள, பாவப்பொறுத்தல் ஆசீர்வாதந் தந்தருளும்" என்று சொல்லுகிறது. அதன்பின் ஆத்தும குருவானவர் சொல்லுகிற புத்திகளைக் கவனமாய்க் கேட்டு இடப்பட்ட அபராதத்தைப் பெற்றுக்கொண்டு உத்தம மனஸ்தாப மந்திரஞ் சொல்லுகிறது. கடைசியிலே பாடுபட்ட சுரூபத்துக்கும் ஆத்தும குருவுக்கும் தலைகுனிந்து ஆசாரஞ் செய்த பிற்பாடு கோவிலுக்குத் திரும்பி வருகிறது.

3. பாவசங்கீர்த்தனம் செய்தபின்.

1-வது. சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறது.

2-வது. கட்டளையிட்ட அபராதத்தைத் தீர்க்கிறது.

3-வது. பாவசங்கீர்த்தனத்துக்கு முன் செய்த பிரதிக்கினையை உறுதிப்படுத்துகிறது.

4-வது. நன்மை வாங்க ஆயத்தம் பண்ண நினைக்கிறது.

உத்தம மனஸ்தாபம் அடைவதற்கு அர்ச். அல்போன்ஸ் ரோதிரிகேஸ் சொல்லி வந்த செபம்.

மகா மதுரம் பொருந்திய சேசுவே, தேவரீர் பாடுபடும்போது எனக்காக அனுபவித்த சகல வேதனை நிர்ப்பந்தங்களைப்பார்த்து, என் பாவ துரோகங்களுக்காக மெய்யான துக்க மன்ஸ்தாபப்படவும், என் மனம் நொந்து என் கண்கள் இரவும் பகலும் பிரளயமாய்க் கண்ணீர் விட்டழவும், கிருபை செய்தருளவேணுமென்று தேவரீரை இரந்து மன்றாடுகிறேன். தேவரீரை மனநோகப் பண்ணினதினாலே மிகுந்த விதனப்பட்டு, இனிமேல் ஒருக்காலும் அப்படிச் செய்வதில்லையென்று கெட்டியான பிரதிக்கினை செய்து, பாவப்பொறுத்த

லடையப் பாத்திரவானாகும்படியாக, எனக்கு அனுக்கிரகம் செய்தருளும் சுவாமி. ஆமென் சேசு.

MISSERERE MEI, DEUS.

50-ம் சங்கீதம்.

☞ தாவீது என்கிறவர் தமது கண்முன்பாக எப்பொழுதும் இருக்கிற தமது பாவங்களைக் குறித்துச் சர்வேசுரனை நோக்கிப் பிரலாபித்துப் பாவத்தினின்று அதிகமதிகமாய்த் தம்மைப் பரிசுத்தமாக்கித் தமக்கு வரப்பிரசாதங்களையும் புதிதான இருதயத்தையுங் கொடுத்தருளவேணுமென்று சர்வேசுரனை மன்றாடினதும், தாழ்ச்சியும், மனஸ்தாபமுமுள்ள இருதயமே, சர்வேசுரனுக்குப் பிரிய பலி என்கிறதுமாகப் பாடி இருக்கின்றது.

சர்வேசுராசுவாமி, உமது தயையின் விசாலத்திற்குச் சரியானபடி என்மேல் இரக்கமாயிரும்.

உமது இரக்கப் பெருக்கத்திற்கு ஒத்தபடி என் அக்கிரமங்களை நிர்மூலமாக்கும்.

இன்னம் அதிகமாய் என் குற்றங்களில் நின்று என்னைக் கழுவி என் பாவங்களில் நின்று என்னை விடுவித்துப் பரிசுத்தப்படுத்தும்.

நானே எனது அக்கிரமங்களை அறிந்திருக்

கிறேன். என் பாவம் எந்நேரமும் என் கண்முன்னே நிற்கிறது.

உமக்கு மாத்திரமே குற்றஞ் செய்தேன், உம்முடைய சந்நிதிக்கு முன்னே தீங்குபுரிந்தேன், நீர் உமது வாக்குத்தத்தத்தில் பிரமாணிக்கராய் இருக்கிறீரென்றும், உமது தீர்வையிலே நீதிபரனாயிருக்கிறீரென்றும் விளங்கும்படி என் குற்றங்களைப் பொறுத்தருளும்.

நானோவென்றால், அக்கிரமத்தில் ஜன்மித்தேன், என் தாயார் பாவத்திலே என்னைக் கர்ப்பந்தரித்தாள்.

நீர் சத்தியத்தை நேசித்து, உமது பரமஞானத்தின் மறைவுள்ள இரகசியங்களை எனக்கு விளங்கச் செய்தருளினீர். நீர் ஈசோப்பென்கிற புல்லினால் என்மேல் தெளித்தருளுவீர், நானுஞ் சுத்தமாவேன். நீர் என்னைக் கழுவுவீர், நான் வெண்பனிக்கட்டியிலும் தூய்மையாவேன்.

என் செவிகளுக்கு இன்பத்தையுஞ் சந்தோஷத்தையுந் தந்தருளுவீர், தளர்ந்துபோன என் எலும்புகள் திடன்கொண்டு எழுந்து அக்களிக்கும்.

என் பாவங்களைப் பாராமல் உமது முகத்தைத் திருப்பிக்கொண்டு, என் அக்கிரமங்களெல்லாம் போக்கியருளும்.

சர்வேசுரா, என்னிடத்தில் சுத்தமான இருதயத்தை உண்டாக்கி என் உள்ளத்தில் நீதி முறைமையுள்ள புத்தியைப் புதுப்பித்தருளும்.

உமது சந்நிதியில் நின்று என்னைத் தள்ளாதேயும், உம்முடைய இஸ்பிரீத்து சாந்துவை என்னிடத்தில் நின்று மறுபடி வாங்கிக்கொள்ளாதேயும். உமது இரக்ஷணியத்தின் ஆனந்தத்தை எனக்குத்தந்தருளும், உமது மேலான ஞானத்தால் என்னை உறுதிப்படுத்தும்.

அநீதருக்கு உமது மார்க்கத்தைப் போதிப்பேன், துஷ்டர் உம்மிடத்தில் திரும்புவார்கள்.

சர்வேசுரா, என் இரட்சகரான சர்வேசுரா, இரத்தப்பழிகளில் நின்றென்னை மீட்டு விடுதலையாக்கியருளும், அப்போது என் நாவானது உமது நீதியைப் புகழ்ந்தேற்றும்.

ஆண்டவரே! என் இதழ்களைத் திறந்தருளும், என் வாய் உம்முடைய தோத்திரங்களைக் கூறும்.

ஆண்டவரே! உமக்குப் பலிவேண்டியிருந்தால் மெய்யாகவே பலி கொடுப்பேன், ஆனால் சர்வாங்கத் தகனப்பலிகள் உமக்குப் பிரியமாய் இருக்கிறதில்லை.

துக்கப்படுகிற உள்ளமே ஆண்டவருக்குப் பிரியமான பலி, மனஸ்தாபத்தினாலே நொறுங்கித் தாழ்ந்த இருதயத்தைப் புறக்கணிக்கமாட்டீரோ, சுவாமி.

ஆண்டவரே! உமது நன்மைத்தனத்தால் சீயோன் என்ற பருவதத்தின்மேல் கிருபையாயிரும். ஜெருசலேமென்கிற பட்டணத்தின் மதில்கள் எடுக்கப்படத் தயை செய்தருளும்.

அப்பொழுது நீதியின் பலியும், சர்வாங்கத் தகன பலியுங் காணிக்கைகளும் உமக்கு ஏற்கையாகும்.

அப்பொழுதே உமது பீடத்தின்மேல் நவசுகாரியப் பலிகளைக் கொடுப்பார்கள். ஒரு திரி.

DE PROFUNDIS.

129-ம் சங்கீதம்.

பாவப்பொறுத்தல் அடையச் சர்வேசுரனை மன்றாடவேண்டிய உருக்கத்தின் மாதிரிகையாகப் பாடியிருக்கின்றது:

சுவாமீ! பாதாளத்தில் நின்று உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன், சுவாமீ! என் சத்தத்தைக் கேட்டருளும்.

எனது விண்ணப்பத்தின் பேரொலியை உமது செவி தந்து கேட்டருளும். ஆண்ட

வரோ, நீர் எங்கள் பாவங்களைப் பாராட்டுவீராகில் உமக்கு முன்பாக நிர்வாகஞ் செய்கிறவனார்?

ஆனால் தேவரீரிடத்தில் தயாளமான மன்னிப்பு இருக்கிறபடியாலும், உமது வேத முறைமையைப்பற்றியும், சுவாமி, உம்மை நம்பிக் காத்திருக்கிறேன்.

என் ஆத்துமம் ஆண்டவருடைய திரு வசனத்தின்மேல் ஊன்றிக் காத்திருக்கின்றது, என் ஆத்துமம் ஆண்டவரிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறது.

உதயசாம காவல் நேரந் துவக்கி இராவுபரியந்தம் இஸ்ரயேல் ஜனம் ஆண்டவரை நம்பிக் காத்திருக்கக்கடவது.

ஏனென்றால் சுவாமி தயையுள்ளவர், அவரிடத்தில் இரட்சணியம் ஏராளமாய் இருக்கின்றது.

அவரே இஸ்ராயேல் ஜனத்தை அதின் சகல பாவங்களினின்றும் இரட்சித்தருளுவார். ஒரு திரி.

திவ்விய சற்பிரசாதம்.

நமது திவ்விய கர்த்தர் பூமியிலிருந்த
போது அவருடைய திரு இருதயம் அவ
ரது நெஞ்சுக்குள் துடித்துக்கொண்டிருந்த
விதத்தையும், இப்போது திவ்யநற்கருணை
யில் அது மறைந்திருக்கும் விதத்தையும்
தியானித்துப் பார்த்தால், அது சகல அன்
பும் நிறைந்துள்ளதாயிருக்கிறது. "சேசு
என்கிற திருநாமம் என் வாய்க்குத் தேனும்,
என் காதுக்கு இனிய சங்கீதமும், என் இரு
தயத்துக்கு அக்களிப்புமாயிருக்கிறது"
என்று அர்ச். பெர்நர்து எழுதியிருக்கிறார்.

தமது திவ்விய இருதயத்திலுள்ள இரத்தத்
தைக் கடைசித் துளிமட்டும் சிந்தி மனிதனை
இரட்சித்ததும், உலகமுடியுமட்டும் பூமி
யெங்குமுள்ள கணக்கற்ற பீடங்களில் அநு
தினமும் நமக்காகப் பலியாவதும், சேசுவின்
திரு இருதயம் மனிதர்மேல் வைத்த நேசப்
பிரவாகத்துக்குப் போதுமாயிருக்கவில்லை.
நமது ஆத்துமங்கள் சேசுவுக்கு எவ்வளவு
பிரியமும், எவ்வளவு விலைகொடுத்த பெற
றதுமாயுமிருந்ததென்றால், அவைகளை அவர்
தமது சொந்தச் சரீரத்தையும் இரத்தத்தை
யுமே போஜனமாக ஊட்டி வளர்க்கவேண்டி
யது அவசியமென்று அவருக்குத் தோன்
றிற்று. மனிதர்மட்டில் சேசுவின் திரு இரு
தயம் காட்டும் அன்பு எவ்வளவோ அணை
கடந்ததாம்.

திவ்யநற்கருணையில் நாம் கண்டடையும்
பொக்கிஷமென்ன? இந்தப் பரம அன்பின்
விருந்தில் சேசுக்கிறீஸ்துநாதர் நமக்குக்
கொடுக்கிறதென்ன? திரிதெந்து நகரத்தில்
கூடின திருச்சங்கம் இக்கேள்விக்கு மறு
மொழியாக சொல்வதைக் கேட்போமாக:
"திவ்விய சற்பிரசாதத்தில் சத்தியமாகவே
நமதாண்டவராகிய சேசுக்றீஸ்துநாதரு
டைய திருச்சரீரமும், திரு இரத்தமும், திரு
ஆத்துமமும், தேவசுபாவமும் அடங்கியிருக்

கிறது.” திவ்விய சற்பிரசாதத்தில், தேவ
வசீகர வார்த்தையின் பலத்தால் சேசுக்கிறீ
ஸ்துநாதருடைய திருச்சரீரமும், திரு இரத்த
மும், ஐக்கிய ஒன்றிப்பினால் அவருடைய
திரு ஆத்துமமும் தேவசுபாவமும், அடங்கி
யிருக்கிறதுமன்றி, பரமதிரித்துவ ஒருமிப்பி
னால் பிதாவும், இஸ்பிரீத்துசாந்துவும், இருக்
கிறார்கள். ஆகையால், திவ்வியநற்கருணை
வாங்கும்போது நமது நெஞ்சில் எழுந்தருளி
வருவது கன்னிமரியம்மாளின் திருவயிற்றி
னின்று பிறந்து, சிலுவையில் அறையுண்டு,
இப்போது மோட்சத்தில் ஒட்டலோகமா
யிருக்கிற சரீரமாத்திரமல்ல, நம்மை உண்
டாக்கினவரும், நம்மை இரட்சித்தவரும், நம்
மை நடுக்கேட்க வருபவருமான 'நித்திய சர்
வேசுரன்தாமே நம்முடைய இருதயத்தில்
எழுந்தருளி வருகிறார். ஆகையால், திரி
தெந்து நகரத் திருச்சங்கம் முடிவாய்ச் சொ
ல்லுகிறதாவது: “கிறீஸ்துநாதர் மனிதர்
மட்டில் வைத்த அன்பின் சகல திரவிய
பொக்கிஷங்களையும் திவ்விய சற்பிரசாதத்
தில் சேர்த்து வைத்திருக்கிறார்.” அர்ச. அகு
ஸ்தீன் சொல்லுகிறதாவது: “சேசுநாதர்
அளவில்லாத வல்லமையுள்ள சர்வேசுரனா
யிருந்தாலும் நமக்கு கொடுப்பதற்கு அவ
ரிடத்தில் இதிலும் மேன்மையான காரியம்

ஒன்றுமில்லை” அவர் தம்மைவிட, அதாவது தமது சொந்தச் சரீரத்தையும் இரத்தத்தையும் கொடுப்பதைவிட, அதிக மேலானதும் பரிசுத்தமானதுமான காரியம் வேறென்ன நமக்குக் கொடுக்கக்கூடும்?

மனிதர்மட்டில் சேசுவின் திரு இருதயத்தில் சுவாலித்தெரியும் சிநேகமானது திவ்விய நற்கருணையை நமதாண்டவர் உண்டாக்கினபோது தெளிவாய்க் காண்பிக்கப்பட்டது. சேசுநாதர்சுவாமி இந்த அன்பின் பிதிரார்ஜிதத்தை உலகத்துக்குக் கொடுக்கும் நேரம் எப்போது வருமோவென்று ஆவலோடு ஆசித்திருந்தார். “நான் பாடுபடுமுன் உங்களோடு இந்தப் பாஸ்காவை உண்ண ஆவலோடு காத்திருந்தேன்” என்று நமதிரட்சகர் திருவுளம்பற்றினார். (அர்ச். லூக்காஸ் 22-ம் அதிகாரம் 15-ம் வசனம்.) மேலும் அர்ச் அருளப்பர் எழுதியிருக்கிறதாவது: “சேசுநாதர் இந்த உலகத்தைவிட்டுத் தமது பிதாவினிடத்திற்குப் போகவேண்டிய நேரம் கிட்டினதென்றறிந்து உலகத்திலிருந்த தம்முடையவர்களைத் தாம் சிநேகித்திருக்கையில் அவர்களைக் கடைசிவரையில் சிநேகித்தார்.” (13-ம் அதிகாரம் முதல் வசனம்.) ஆகையால் சேசுக்கிறீஸ்துநாதர் மனிதர்களுக்குத் தமது சரீரத்தையும் இரத்தத்தை

யும் தந்தபோதே, சிநேகத்தின் முதல்தா
மான அடையாளத்தைக் காண்பித்தருளி
னார்.

சேசுநாதர், இந்த மோட்ச மன்னாவாகிய
உயிர்தரும் அப்பத்தை யாவரும் வந்து
அருந்தும்படி இன்பமாய் அழைப்பதால்
தமது திரு இருதயத்தின் நேசத்தைக் காட்
டுகிறார். நமது திவ்விய இரட்சகர் "இதை
வாங்கிப் புசியுங்கள், இது என் சரீரமாயிருக்
கிறது" என்று சொல்லும்போது நம்மை
அழைக்கிறதுமாத்திரமல்ல, நமக்குக் கட்
டளையிடுகிறார். (அர்ச். மத்தேயு 26-ம் அதி
காரம் 26-ம் வசனம்.) "வருந்திச் சுமை
சுமக்கிற நீங்கள் யாவரும் நமது அருகில்
வாருங்கள், நாம் உங்களைத் தேற்றுவோம்"
என்று நமது திவ்விய இரட்சகர் திருவுளம்
பற்றுகிறார். (அர்ச். மத்தேயு 11-ம் அதி
காரம் 28-ம வசனம்.) ஆம், உங்கள் ஆத்து
மங்களைச் சம்மனசுகளுடைய போசனத்தி
னால் தேற்றிவளர்ப்போம். தெரிந்துகொள்
ளப்பட்டவர்களுடைய கோதுமையாகிற
நமது சரீரத்தையும், 'கன்னியர்களை விளை
விக்கும் இரசமாகிற' நமது இரத்தத்தையும்
உங்களுக்குக் கொடுப்போம்.

சேசுநாதர்சுவாமி தமது இருதயத்தி
லுள்ள சிநேகத்தின் அக்கினிக் கதிர்களை

சகல மனிதர் இருதயங்களிலும் பரவச்
செய்ய ஆவலோடு ஆசிக்கிறார். ஆகையால்
அவர் சகலரையும் மிகவும் வருந்தி உருக்கத்
தோடு தமது விருந்துக்கு அழைக்கிறார்.
இப்படி வருந்தி அழைப்பதும் போதாமல்,
மகா மேலான வெகுமானமும் தருவோ
மென்று வார்த்தைப்பாடு கொடுக்கிறார்.
என்றும் முடியாத தமது திருமுகதரிசனை
யாகிய மோட்சபேரின்பத்தையே பத்தி
யோடு திவ்வியநற்கருணை வாங்குவோர்க்
குக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறார். "இந்
தத் திவ்விய அப்பத்தைச் சாப்பிடுகிற எவ
னும் நித்திய காலம் ஜீவித்திருப்பான். உல
கத்துக்கு உயிரைக்கொடுக்க நாம் தரும் திவ்
விய அப்பம் நமது சரீரமாயிருக்கிறது. நமது
மாம்சத்தைப் புசித்து நமது இரத்தத்தைப்
பானம்பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவிய
முண்டு. நாமும் அவனைக் கடைசிநாளில்
உயிர்ப்பிப்போம். நமது மாம்சம் உண்மை
யாகவே போசனமாகவும், நமது இரத்தம்
உண்மையாகவே பானமாகவும் இருக்கிறது.
உங்கள் பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னா
வைப் புசித்ததுபோல் அல்ல, அவர்கள்
மரித்தார்களே, இந்த அப்பத்தைப் புசிக்கிற
வனோவென்றால் என்றென்றும் ஜீவித்திருப்
பான்." (அர்ச். அருளப்பர் 6-ம் அதிகாரம்.)

மேலும் நமது திவ்விய விருந்தை மதியா
மல் அதை அசட்டை பண்ணுகிற நன்றிகெட்
டவர்களும், பத்தி சுறுக்கற்றவர்களுமான
கிறீஸ்துவர்களை மோட்சத்தில் சேர்த்துக்
கொள்வதில்லையென்று நமது ஆண்டவர் பய
முறுத்துகிறார். ஆனால் அவர் உறுத்துகிற
இந்தப் பயமும், ஆச்சரியத்துக்குரிய அவரு
டைய வார்த்தைப்பாடுகளும், மிகவும் இன்ப
மான அவரது அழைத்தல்களும், மனிதரு
டைய இரட்சணியத்தின்பொருட்டு ஆண்ட
வருடைய திரு இருதயத்தின் அன்பினின்று
புறப்படுகின்றன. ஆகையால் அர்ச். அக்கு
யினு தோமாஸ் சொல்லுகிறதாவது: "திவ்
விய சற்பிரசாதமானது சர்வேசுரன் செய்
கிற சகல அற்புதங்களின் சுருக்கமாயிருக்கி
றது." அர்ச். பிராஞ்சீஸ்கு சலேஸியார்
சொல்லுகிறதாவது: "திவ்விய நற்கருணை
யை உண்டாக்கின விசேஷத்தில், திவ்விய
இரட்சகர் காண்பித்த உருக்கமும் அன்பும்
மற்றெந்தக் காரியத்திலும காண்பிக்கப்பட
வில்லை; இதில் அவர் ஒருவிதத்தில் தம்மை
முற்றிலும் தகனமாக்கி, நமக்குப் போசன
மாகச்செய்து, நம்முடைய எலும்போடும்
மாம்சத்தோடும் சேர்ந்துபோய் நம்முடைய
சரீரத்தோடு ஒன்றுகிறார்.

அலெக்சாந்திரியா பட்டணத்து அர்ச்.
சிரில் என்கிறவர் திவ்விய நற்கருணையில் சேசு
நாதரோடு உண்டாகும் ஒன்றிப்பைப்பற்றி
எழுதுகிறதாவது: "இணைக்கப்பட்ட இரண்டு
மெழுகுத் துண்டுகள் ஒன்றாய்ப் போவது
போல, நாம் திவ்விய சற்பிரசாதத்தினால்
சேசுநாதரோடு ஒரு பொருளாகிறோம்."
அர்ச். பெர்நர்து சொல்வதாவது "உங்களில்
எவனிடத்திலாவது முன் இருந்ததுபோல
அவ்வளவு கடுங்கோபம். காய்மகாரம், மோக
இச்சை முதலிய துர்க்குணங்கள் காணப்
படாவிட்டால், அவன் தன் ஆத்துமத்தில்
ஜீவனை உண்டுபண்ணுகிற ஆண்டவருடைய
திருச்சரீரத்துக்கு நன்றி செலுத்துவானாக."
அந்த அர்ச்சியசிஷ்டவரோ ஆச்சரியத்துடன்
சொல்வதாவது: "ஞானப் பத்தினிகளாயி
ருக்கிற நீங்கள் எல்லோரும் அகமகிழுங்கள்.
ஆனந்தப் பரவசங்கொள்ளுங்கள். மோட்ச
இராச்சியத்தில் உங்களோடு பாக்கியமாய்
ஒன்றித்திருக்கப்போகிற திவ்விய பத்தா
வினுடைய அச்சாரம் உங்கள் கையிலிருக்
கிறது." நமது திவ்விய இரட்சகர் முத்திப்
பேறுபெற்ற மார்கரீத்மரிய அலக்கோக்
என்கிறவளுக்குத் திருவுளம்பற்றினதாவது:
"திவ்விய சற்பிரசாதத்தில் மனிதர் நம்மைச்
சந்திக்கவேண்டுமென்று நாம் வெகு தாகமா

யிருக்கிறோம். நமக்கு யாதொரு பதில் நன்றிகாட்டுவதினால் இந்தத் தாகத்தைத் தீர்க்க நமது ஆசைப்பிரகாரம் பிரயாசப்படுகிறவன் எவனுமில்லையே." இந்தப் பரிசுத்த கன்னிகை சொல்லுகிறதாவது: என் சர்வேசுரனுடைய இருதயத்தையும், என் இருதயத்தின் சர்வேசுரனையும் திவ்வியநற்கருணையில் வாங்க எனக்குள்ள ஆசை எவ்வளவு அதிகமாயிருக்கிறதென்றால், இந்தத் திவ்விய அப்பத்தை அருந்துவதற்குச் சுவாலித்தெரியும் அக்கினியின்மேல் நான் நடந்துபோகவேண்டியிருந்தால், அந்தப் போசனத்தை உட்கொள்ளாமல் தடைபட்டிருப்பதைப் பார்க்கிலும் அந்த அக்கினிமேல் நடந்துபோவது எனக்கு அதிக வருத்தமாயிராது."

ஆகையால் திவ்வியநற்கருணையில் எழுந்தருளியிருக்கும் சேசுநாதரிடத்தில் உன்னால் கூடுமானபோதெல்லாம் போகக்கடவாய். மெய்யான கிறீஸ்துவனாகி எப்போதும் எப்போதும் அப்படியே ஜீவித்துவர நீ கற்றுக்கொள்ளவேண்டுமானால், அடிக்கடி திவ்விய நற்கருணை வாங்கவேண்டுமென்பதை ஒருபோதும் மறக்கவேண்டாம். பத்திக்கு ஆதாரம் விசுவாசமாகையால், அந்த விசுவாசத்தை உன்னிடத்தில் உயிருள்ளதும், உறுதியுள்ளதும், உண்மையுள்ளதுமாய்க் காப்

பாற்றிக்கொண்டுவர உனக்குப் பிரியமுண்டானால், அடிக்கடி பத்தியோடு திவ்வியநற்கருணை வாங்கக்கடவாய்.

உன் மாசற்றதனத்தைக் காப்பாற்ற உனக்கு ஆசையுண்டானாலும், அல்லது அதை இழந்து, அதை இழந்துவிட்டபின் அதைத் திரும்பத் தேடியடைந்து இனி எப்போதும் பரிசுத்தமுள்ளவனாயிருக்க உனக்கு விருப்பமுண்டானாலும், அடிக்கடி திவ்விய நற்கருணை வாங்கக்கடவாய். திவ்விய நற்கருணையானது கற்புக்கும் பரிசுத்ததனத்துக்கும் மிகவும் வல்லபமுள்ள பாதுகாவலாயிருக்கிறது. பாவத்துக்குச் சார்புள்ள உன் சரீரத்தோடு நமதாண்டவர் தமது அளவற்ற பரிசுத்தமுள்ள திருச் சரீரத்தை ஒன்றுப்படுத்த அடிக்கடி எழுந்தருளிவருவாரானால், புயல்போல் எழும்புகிற உன் ஆசாபாசங்களை அடக்கி, பசாசின் சோதனைகளை அகற்ற சுபாவத்துக்கு மேற்பட்ட பலத்தை அவர் உனக்குத் தந்தருள்வார். இருதயங்களைப் பரிசுத்தமாக்கும் அவருடைய மதுர சிநேகமானது உன்னிடத்தில் நாளுக்குநாள் பாவத்தின்மேல் வெறுப்பும், பரிசுத்ததனத்தின்மேல் பிரியமும் அதிகரிக்கச் செய்யும்.

தேவநற்கருணை வாங்க ஆயத்தம்

விசுவாசப்பிரகாரணம்.

(ஆண்டவருடைய சந்நிதானத்தைத் தெளிவாய் உணர்தல்.)

நான் உட்கொள்ளப்போகிற திவ்விய அப்பத்தில் சேசுநாதருடைய திருச்சரீரமும், திரு இரத்தமும், திரு இருதயமும், திரு ஆத்துமமும் தேவசுபாவமும் அடங்கியிருக்கிறதென்று விசுவசித்து அறிந்துகொள்ளுகிறேன்.

அவருடைய திருச்சரீரம்.

அர்ச். கன்னிமரியம்மாளின் மிகப் பரிசுத்த உதிரத்தினால் உண்டானதும், மாட்டுக் கொட்டிலில் வைக்கோலின்மீது குளிரால் நடுங்கினதுமான மெலிவான சரீரம் இதுவே; அர்ச். கன்னிமரியம்மாளும் அர்ச். சூசையப்பரும் ஆனந்தப் பரவசங்கொண்டு முத்தமிட்ட அந்தச் சிறு சரீரமே இப்போது எனக்குள் இளைப்பாறப்போகிறது. எப்போதும் அழகும் பரிசுத்தமுமாய்க் குழந்தைப் பருவம், பாலியப் பருவம் இவைகளைக் கடந்து,

மிக அவமானத்துக்குரிய உபாதைகளை அநுபவித்து, சங்கிலிகளால் கட்டுண்டு மானபங்கமாய்த் தெருவீதிகளில் இழுக்கப்பட்டு, சாட்டை கசைவார்களினால் தசைகிழிய அடிபட்டு, சிலுவை சுமந்தப்பட்ட சரீரமிதுவே. கல்வாரிமலையின்மேல் தன் காயங்களில் தொங்கினதும், எப்போதும் மனுஷீகமானதும், சம்மனசுக்கள் அர்ச்சியசிஷ்டவர்களால் அத்தியந்த ஆனந்தத்தோடு தெரிசித்து ஸ்துதிக்கப்படுவதுமான சரீரம் இதுவே. என் இருதயத்தில் இந்தச் சரீரம் சத்தியமாகவே எழுந்தருளிவரப்போகிறது.

அவருடைய திரு இரத்தம்.

அவருடைய பரிசுத்த அவயவங்கள் யாவற்றிலும் பரவியோடினதும், பூங்காவனத்தில் அவர் மரண அவஸ்தைப்பட்டபோது பூமியை செந்நிறமாக்கினதும், கற்றூணில் கட்டுண்டு அவர் சாட்டைகளால் அடிபட்டபோது அந்தச்சாட்டைகளையும் கொலைக்காரருடைய கைகளையும் சிவக்கச் செய்ததும், பூமியை நனைத்ததும், துளைக்கப்பட்ட அவருடைய கைகால்களினின்று துளித்துளியாய்ச் சிலுவையடியில் வடிந்து விழுந்ததும், சிதறுண்ட சகலவிடங்களிலிருந்தும் மறுபடியும் மட்டற்ற தேவ வல்ல

மையால் ஒன்றுகூட்டப்பட்டுப் பழுதின்றி அவருடைய உயிர்த்த சரீரத்தில் திரும்பவும் சேர்க்கப்பட்டதுமான அந்தத் திரு இரத்தமே இப்போது எனக்குப் பானமாகப்போகிறது.

அவருடைய திரு இருதயம்.

மாம்சத்தால் உண்டாக்கப்பட்டு அவருடைய நெஞ்சுக்குள் துடித்துக்கொண்டிருந்ததும், சிநேகத்தின் உருக்கப்பற்றுதல்களால் வேகமாய் அடித்துக்கொண்டிருந்ததும், அவர் கண்களில் கண்ணீரையும் அவர் உதடுகளில் மதுர வசனங்களையும் பிறப்பித்ததும், அவருடைய நிகரற்ற ரூபலாவண்ணியமான திருமுகத்தில் பிரதிபிம்பமாய்த் துலங்கினதும், அர்ச். சூசையப்பர், அப்போஸ்தலர்கள், மதலேனம்மாள், லாசார், என்கிறவர்களையும், விசேஷமாய் அவருடைய தாயாரையும் உருக்கத்தோடு நேசித்ததும், ஈட்டியால் குத்தித் திறக்கப்பட்டதும், பிற்காலத்தில் முத்திப்பேறுபெற்ற மார்கரீத் மரியம்மாளால் தரிசித்து தியானிக்கப்பட்டதுமான அந்த உயிருள்ள திரு இருதயமே, இப்போது என் இருதயத்தோடொன்றித்து என்னை இப்போது ஆனந்தத்தால் பூரிப்பிக்கப்போகின்றதாமே.

அவருடைய திரு ஆத்துமம்.

உலகத்தைவிட விசாலமானதும், பரலோகத்தைவிட அழகுள்ளதுமான அந்த ஆத்துமம் எனக்குள் வந்து தங்கப்போகிறது. இஷ்டப்பிரசாதத்தினாலும் உண்மையினாலும் நிரப்பப்பட்டு, பரம பிதாவினால் அவதரித்த வார்த்தைக்குக் கொடுக்கப்பட்டதும், தெய்வீகத்தின் வாசஸ்தலமாயிருக்கிறதுமான மகா ஆச்சரியத்துக்குரிய அந்தத் திரு ஆத்துமமே எனக்குள் வரப்போகிறது. சகல படைப்புண்ட வஸ்துக்களையும் விபரமாய் அறிந்திருப்பதும், தன் பார்வையால் நித்தியத்தை ஊடுருவி நோக்குவதும், அன்பு நிறைந்த தன்னை நான் பார்த்த க்ஷணமே என்னை ஆனந்தப் பரவசமாக்குவதுமான அந்தத் திரு ஆத்துமமே ஒரு நிமிஷத்தில் எனக்குச் சொந்தப் பொருளாகப்போகிறது. அப்போது அதனோடு நான் பேசக்கூடுமாயிருக்கும். அது நான் சொல்வதைக் கேட்கும். நான் ஆழ்ந்த கவனத்தோடிருந்தால் அது பேசுவதைக் கேட்க சுவாமி எனக்கு அருள்புரிவார்.

அவருடைய தெய்வீகம்.

என்னிடத்தில் எழுந்தருளிவருகிற திவ்விய சேசுவே, நீரோ சமாரித்தாளுடையவும் மத

லெனம்மாளுடையவும் தேவனாயிருக்கிறீர்.
சேர்வைக்காரனுடையவும் லாசர் என்பவ
ருடையவும் தேவன் நீரோ. ஆயக்காரனான
சக்கேயுஸ் என்கிறவனுடைய சர்வேசுரன்
நீரோ ; மனஸ்தாபப்பட்ட இராயப்பருடை
யவும், அதிகமாய் நேசிக்கப்பட்ட அப்போஸ்
தலருடையவும் தேவன் நீரோ. தபோ
ரென்ற மலையில் மறுரூபமானவரும், செத்
செமெனி என்ற பூங்காவனத்தில் மரண அவ
ஸ்தை அனுபவித்தவருமான ஆண்டவர் நீரோ.

ஆம், வேதபுஸ்தகம் எனக்குத் தெரிவிக்
கும் சேசு நீரோ. பரிசுத்த எருசலேமின்
வீதிகளிலும், அதின் ஏரிகளிலும், மலைகளி
லும், நான் இன்னும் உம்மைக் காண்கிறதாக
எனக்குத் தோன்றுகிறது. "நாங்கள் அவ
ரைச் சுமந்தோம்" என்று அலைகள் சொல்லு
கின்றன. "நாங்கள் அவருக்குத் தங்க
இடம் கொடுத்தோம்" என்று வனாந்தரத்தி
லுள்ள குகைகள் கூறுகின்றன. என் இருத
யமும் அவருக்காகவே ஆவலாய்க் காத்துக்
கொண்டிருக்கிறது. *

* இந்த விபரங்களெல்லாம் நம்மைச் சர்வேசுரனுடைய சன்னிதானத்தில் நிலைக்கப்பண்ணமாத்திரம் உதவியாகும். இந்தக் கருத்து நிறைவேறினவுடன் அடுத்தபிரகரணத்துக்குச் செல்ல வேண்டும்.

தேவநற்கருணை உட்கொள்ளு முன் செபம்.

விசுவாசப் பிரகரணம்.

என் ஆண்டவராயிருக்கிற சேசுக்கிறீஸ்து
வே ! அடியேன் திவ்விய நற்கருணையை உட்
கொள்ளும்பொழுது தேவரீர் திரு ஆத்து
மத்தோடும் தேவ சுபாவத்தோடும், அர்ச்.
கன்னிமரியாயி திரு உதரத்தில் எடுத்த திருச்
சரீரத்தோடும் எழுந்தருளி என்னிடத்தில்
வருகிறீரென்று உறுதியாய் விசுவசிக்கிறேன்.
சுவாமீ, இது சத்தியமான காரியமென்று
ஒப்புவிக்கிறதற்கு என்னுடைய இரத்தமெல்
லாஞ் சிந்தி உமக்காகச் சீவனை இழக்க
வேண்டியிருந்தாலும் நல்ல மனதோடு இழக்
கத் துணிகிறேன். எனது விசுவாசத்தை
இன்னம் உறுதிப்படுத்தியருளுஞ் சுவாமி.

ஆராதனைப் பிரகரணம்.

என்னைப் படைத்து இரட்சித்து அனுசார
ணஞ் செய்துவருகிற என் ஆண்டவரே ! நித்
திய பரம கடவுளான கர்த்தாவே ! உமது
திருச்சமுகத்தில் என்னுடைய புத்தி மனதை
மிகவுந் தாழ்த்தி மகா தாழ்ச்சி விநயத்து
டனே உம்மை வணங்குகிறேன். தேவரீர்

மாத்திரமே சகல தோத்திரங்களுக்கும் ஆரா
தனைக்கும் பாத்திரமாயிருக்கிறீர்.

தாழ்ச்சிப் பிரகரணம்.

ஆ ! சுவாமீ, தேவரீரார் ? நானார் ? தேவரீ
ரிடத்தில் அற்பமாகிலும் பழுதில்லை, நான்
மட்டில்லாத பழுதுள்ளவன் ; தேவரீர் என்
னைப் படைத்தவர், நான் உம்மால் படைக்
கப்பட்டவன் ; தேவரீர் மட்டில்லாத மகி
மையுள்ளவராகையால், உமது சமுகத்தில்
பத்திராசனமென்கிற சம்மனசுக்கள் முத
லாய் நடுநடுங்குகிறார்கள். நான் நிலத்தின்
ஊத்தைக்குள் உதிக்கிற புழுவுக்குச் சமான
மாயிருக்கிறவன் ; தேவரீர் மட்டில்லாத பரி
சுத்தர், நான் அவலட்சண பாவச்சேற்றிலே
புரண்டு அசுத்த நாற்றமாய் இருக்கிறவன் ;
இப்படிப்பட்ட நானோ தேவரீரை உட்கொ
ள்ளுகிறது, இத்தனை நீசனாயிருக்கிற என்னி
டத்தில் எழுந்தருளிவர எப்படி மனந்துணிந்
தீர் ? அற்பப் புழுவுக்குச் சமானமாயிருக்கிற
என்னிடத்தில் என்ன நன்மை கண்டீர் ?
ஆ, சுவாமி ! மெய்யாகவே தேவரீர் என்னி
டத்தில் எழுந்தருளிவர நான் பேறுபெற்ற
வனல்ல, தேவரீர் ஒரு வார்த்தை மாத்திரந்
திருவுளம்பற்றினீரானால்: என் ஆத்துமம்
வியாதியில் நின்றுவிடப்பட்டு ஆரோக்கியத்

தையடையும். என் ஆத்துமமே, உன் கர்த்
தருடைய மகிமையையும் உனது நீசத்தனத்
தையுங் கண்டு அவருடைய சமுகத்தில்
வெட்கி நாணக்கடவாய்.

பயமும் நம்பிக்கையுமுள்ள பிரகரணம்.

சுவாமீ, அடியேன் உமது பரிசுத்ததன்மை
யையும், மகிமைப் பிரதாபத்தையும், என்னு
டைய பாவங்களையும், கொஞ்சத் தன்மை
யையும் நினைக்கும்பொழுது உம்மைத் திவ்
வியநற்கருணை வழியாக உட்கொள்ளப்
பயப்படுகிறேன். பின்னை ஒரு பக்கத்தில்
உம்மை உட்கொள்ளாமற்போனால், எனக்கு
நித்திய ஜீவியமில்லாமல் உமது கோபத்
துக்கு உள்ளாவேனென்று நினைத்து நடுநடு
ங்குகிறேன். இனி நான் போம்வழி என்ன
சுவாமீ ? அடியேன் எத்தனை அபாத்திரமான
வனாய் இருந்தாலும், உமது கிருபையை நம்பி
நீர் கட்டளையிட்டபடி உம்மை உட்கொள்ளத்
துணிகிறேன். தேவரீர்தாமே எனது ஆத்
துமத்தை உமது பிரசாதங்களினால் அலங்
கரித்து, உமக்கு யோக்கியமான இருப்பிட
மாயிருக்கத் தயை செய்தருளுஞ் சுவாமி.

சந்தோஷப் பிரகரணம்.

என் ஆண்டவரே ! தேவரீர் என்னை ஒன்று
மில்லாத காலத்தில் உண்டாக்கினீரே, உமக்

கே தோத்திரம் உண்டாகக்கடவது. என் ஆத்துமமே, என்ன நினைக்கிறாய்? நீ செய்யுங் காரியம் இன்னதென்று அறியாயோ? உனக்கு எத்தனை கனமான மகிமை வருமென்று விசாரிக்கிறாயோ? நித்திய சர்வேசுரனுடைய ஏக குமாரனாகிய திவ்விய சேசுநாதர் திரு ஆத்துமத்தோடுஞ் திருச் சரீரத்தோடுந் தேவ சுபாவத்தோடும் அவருக்குள்ள பாக்கியங்களோடும் நம்மிடத்தில் வருவாரோ, அவரும் நாமும் ஏகமாய் ஒருமித்திருப்போமே. அவர் நம்மிடத்திலேயும், நாம் அவரிடத்திலேயும் இருக்குமாப்போலாயிற்றே, ஆ! என் ஆத்துமமே, நமக்கு எத்தனை பாக்கியமும், எத்தனை மகிமையும் வருகிறதென்று பார்த்து சந்தோஷப்படக்கடவாய்.

ஆசைப் பிரகரணம்.

என் திவ்விய அன்பனுமாய் நாதனுமாயிருக்கிற பரம கர்த்தாவே! எனக்கு மிகவும் பிரிய சேசுவே! என் பாக்கியமே, என் சந்தோஷமே, என் இருதயமே, என் கண்மணியே, ஆ! என் அன்பே, என் இருதயத்தில் எழுந்தருளிவாரும். பசிதாகத்தை அனுபவிக்கிறவர்கள் எத்தனை ஆவலுடன் போசனமுந் தண்ணீருந் தேடுகிறார்களோ, அப்

படியே என் ஆத்துமந் தேவரீரை மிகுந்த ஆவலுடன் தேடுகிறது. சுவாமீ, சீக்கிரமாக வாருந் தாமதஞ் செய்யாதேயும், நீர் ஒரு நாழிகை தாமதஞ் செய்கிறது எனக்கு ஒரு வருஷம்போலிருக்கிறது. உம்முடனே ஒன்றிக்கவேண்டுமென்கிற ஆசையின் மிகுதியினால் என் ஆத்துமம் மயங்கிக் களைத்துப் போகிறது சுவாமீ.

தேவநற்சருணை உட்கொண்டபின் செபம்.

ஆச்சரியப் பிரகரணம்.

சேசுநாதர் மெய்யாகவே இப்பொழுது எனக்குள்ளே இருக்கிறார், இதென்ன ஆச்சரியம்! ஆ சுவாமீ! இதென்ன அதிசயம்! இந்த நீசனாயிருக்கிற என்னிடத்தில் தேவரீர் எழுந்தருளிவந்த காரணமென்ன? பரலோகத்தில் சம்மனசுகளும் அர்ச்சியசிஷ்டவர்களும் உமக்கு யோக்கியமான ஆராதனையுந் தோத்திரமுஞ் செய்வார்களே, என்னிடத்தில் உமக்கென்ன பிரியமான காரியங் கிடைக்கும்?

ஆராதனைப் பிரகரணம்.

என் சர்வேசுரா சுவாமி! என்னைப் படைத்தவரே, அடியேன் உமது திருச்சமுகத்தில்

யிருந்த பத்தி வணக்கத்துடன் சாஷ்டாங்க
மாக விழுந்து உம்மை வணங்குகிறேன். நீச
னாயிருக்கிற அடியேனால் உமக்கு யோக்கிய
மான பிரகாரத்திற்கு ஆராதனை செய்யக்
கூடாதென்கிறதினால், அர்ச்சியசிஷ்ட கன்னி
மரியாயி சகல சம்மனசுகள் அர்ச்சியசிஷ்ட
வர்கள் முதலானவர்களுடைய ஆராதனை
களை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமீ.

சிநேகப் பிரகரணம்.

ஆ! என் பிரிய சேசுவே! என் சீவமே,
என் மதுரமே, உம்மை எல்லாவற்றையும்
பார்க்க சிநேகிக்கிறேன். உம்மை மாத்திரஞ்
சிநேகிக்கிறேன். அடியேன் தேவரீரை சிநே
கிக்கிறேனோவென்று கேட்கிறீர். சுவாமி!
உமக்கு எல்லாந் தெரியுமே. நான் உம்மைச்
சிநேகிக்கிறதுஞ் சிநேகியாமல் இருக்கிறதும்
நீர் அறிவீர். இந்தமட்டும் நான் உம்மைச்
சிநேகியாமலிருந்ததும் மெய்தான்; ஆனால்
இது துவக்கி என் மரணபரியந்தம் உம்மை
மாத்திரஞ் சிநேகிக்கத் துணிகிறேன். ஆ!
என் திவ்விய கர்த்தரே! இத்தனை நன்மையும்
மகிமையுமுள்ளவருமாய் மட்டில்லாத தயை
சுரூபியுமாய் மனோவாக்குக்கெட்டாத அலங்
கிர்த வடிவு சோபனமுள்ளவருமாயிருக்கிற
தேவரீரைச் சிநேகியாதவர்களுக்குச் சாபம்,

நான் உம்மைச் சிநேகியாமற் போனாற் எல்
லாவற்றிற்கு முன்னே எனக்குத்தானே
சாபம்.

நன்றியறிந்த பிரகரணம்.

அர்ச்சியசிஷ்ட கன்னிமரியாயே! சகல
சம்மனசுகளே! அர்ச்சியசிஷ்டவர்களே!
சுவாமி எனக்குச் செய்த உபகாரத்தின் பெரு
மை எத்தனையென்று உங்களுக்கு நன்றாய்த்
தெரியுமென்கிறதினாலே, அவருக்குத் தோத்
திரஞ் செய்ய உங்களை மன்றாடுகிறேன். மட்
டில்லாத சிநேகத்திற்கும் அளவில்லாத
தோத்திரத்திற்கும் பாத்திரமாயிருக்கிற சர்
வேசுரா! உமக்குச் சதாகாலத்திற்கும் புகழ்
ச்சியும் வாழ்த்துதலும் உண்டாகக்கடவது.

காணிக்கைப் பிரகரணம்.

திவ்விய சேசுவே! எனது அற்பமாகிய
காணிக்கையைக் கையேற்றுக்கொள்ளக்
கிருபை செய்தருளும். சுவாமீ! தேவரீர்
உம்மை முழுதும் எனக்கு கொடுத்ததுபோல
நானும் என்னை முழுதுந் தேவரீருக்கு ஒப்
புக்கொடுக்கக்கடவேனாக. இனி நான் பரி
சுத்த கற்புள்ளவனாய்ச் சீவிக்கும்படிக்கு
என் சரீரத்தை முழுதும் தேவரீருக்குக் கை
யளிக்கிறேன். இனி நான் பாவமாசில்லாமல்
சீவிக்கும்படிக்கு என் ஆத்துமத்தை முழு

தும் தேவரீருக்குக் கையளிக்கிறேன். இனி
உமது சிநேகப் பற்றுதலுள்ளவனாய் நான்
ஜீவிக்கும்படிக்கு என் இருதயத்தைமுழுதும்
தேவரீருக்குக்கையளிக்கிறேன். இனி சுவாமி,
நான் சுவாசிக்கும் ஒவ்வொரு மூச்சையும்,
விசேஷமாய் என் கடைசி மூச்சையும் தேவரீ
ருக்கு கையளிக்கிறேன். இனி நான் எப்போ
தும் தேவரீருக்குச் சொந்த ஊழியனாய்
ஜீவிக்கும்படிக்கு என் ஜீவிய காலத்திலும்
மரண சமயத்திலும் என்னை முழுதும் தேவரீ
ருக்குக் கையளிக்கிறேன் சுவாமி.

மன்றாட்டுப் பிரகரணம்.

தனக்காக:—திவ்விய சேசுவே! விலை
மதியாத உமது திரு இரத்தத்தால் என் ஆத்
துமத்தின் பாவக்கறைகளைக் கழுவிச் சுத்தி
கரித்தருளும். ஆண்டவரே! பேயின் தந்
திரமான போராட்டம் என்னிடத்தில் இன்
னம் முடியவில்லையே. சோதனை தந்திரங்
கள் என்னை அடுத்துவரும்போது, அவைகளை
எதிர்த்து நின்று ஜெயிக்க போதுமான வரப்
பிரசாதத்தை எனக்குத் தந்தருளும்.
சோதனை நேரத்தில் "சேசுவே, என்னை
இரட்சியும். மரியாயே! என்னைத் தற்காத்
தருளும்" என்று எப்போதும் உச்சரிக்கக்
கடவேனாகை.

நல்ல சேசுவே! இனிச் சுகிர்தவாளாய்
ஜீவித்துப் பாக்கியமான மரணமடையச்
செய்தருளும். நான் சாகுந்தருணத்திலும்
தேவரீரை உட்கொள்ளும் பாக்கியம் எனக்
குக் கிடைக்கக்கடவதாக. நான் சாகும்
போது "சேசுமரியேசூசை உங்கள் கரங்
களில் என் ஆத்துமத்தையும் சரீரத்தையும்
கையளிக்கிறேன்" என்று உச்சரிக்கக்கட
வேனாகை.

பிறருக்காக:—திவ்விய சேசுவே! சத்திய
திருச்சபையின்பேரில் தேவரீர் இரக்கமா
யிரும். அதைப் பராமரித்துத் தற்காத்தரு
ளும். தயையின் சமுத்திரமாகிய சேசுவே!
நிர்ப்பாக்கியமான பாவிகள்பேரில் இரக்கமா
யிருந்து நித்திய நரக ஆக்கினையினின்று
அவர்களை இரட்சித்தருளும் சுவாமி. ஆண்ட
வரே! உமது திரு இருதய இஷ்டப்படியே
என் தாய் தந்தைகளையும், சகோதரர், சகோ
தரிகளையும் இன்னம் நான் ஆருக்காக வேண்
டிக்கொள்ள வேணுமோ அவர்களையும் ஆசீர்
வதித்தருளும். என் அன்பரான சேசுவே!
உத்தரிக்கிற ஸ்தலத்தின் ஆத்துமங்கள்பேரி
லும் இரக்கமாயிரும். அவர்களுக்கு நித்திய
இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும்.

என் திவ்விய சேசுவே! என் இரட்சகரே!
உமது இஷ்டப்பிரசாதத்தால் என் இருத

யத்தில் எப்போதும் வீற்றிருக்க தயைசெய்யும். உமது சிநேகத்தில் நின்று என்னை பிரியவொட்டாதேயும் சுவாமி.

தேவநற்கருணை உட்கொள்ள சுருக்கமான ஆயத்தம்.

மன்றாட்டுப் பிரகரணம்.

என் ஆண்டவரே, நான் தகுந்த ஆயத்தத்தோடு திவ்வியநற்கருணை உட்கொள்ள எனக்கு வேண்டிய ஒத்தாசையைத் தந்தருளும். எனதன்புள்ள தேவதாயே, எனக்காகச் சேசுவினிடத்தில் மன்றாடும். •பரிசுத்த சம்மனசுகளே, அர்ச்சியசிஷ்டவர்களே, எனக்காக வேண்டிக்கொள்ளுங்கள். என் பட்சமுள்ள காவல் சம்மனசானவரே, தேவ பலிபீடத்தண்டை என்னை நடத்தியருளும்.

விசுவாசப் பிரகரணம்.

என் சர்வேசுராசுவாமி, தேவரீர் அருளிச்செய்தபடியினாலே, நான் இப்போது உட்கொள்ளப்போகிறது சேசுக்கிறீஸ்துநாதருடைய திருச் சரீரமும் திரு இரத்தமுமென்று உறுதியாக விசுவசிக்கிறேன். என் தேவ

னே, நான் என் முழு இருதயத்தோடு இதை விசுவசிக்கிறேன்.

சிநேகப் பிரகரணம்.

ஆ! என் சேசுவே, இந்த மகாப் பரிசுத்த தேவதிரவிய அநுமானத்தில் எழுந்தருளியிருக்கிற தேவரீரே என் ஆண்டவரென்றும், என் இரட்சகரென்றும், என்னை அர்ச்சிக்கிறவரென்றும் நேசித்து வணங்குகிறேன்.

தாழ்ச்சிப் பிரகரணம்.

என் சர்வேசுராசுவாமீ, நான் நிர்ப்பாக்கியமான பாவியென்று ஒத்துக்கொள்ளுகிறேன். என் அக்கிரமங்களினிமித்தம் சேசுக்கிறீஸ்துநாதருடைய திருச் சரீரத்தையும் திரு இரத்தத்தையும் உட்கொள்ள அபாத்திரவானாயிருக்கிறேன். ஆண்டவரே, தேவரீர் அடியேன் குச்சுக்குள்ளே எழுந்தருளிவர நான் பேறுபெற்றவனல்ல. ஆயினும் தேவரீர் ஒரு வார்த்தைமாத்திரம் திருவுளம்பற்றுவீரானால் என் ஆத்துமம் பாவ வியாதியினின்று விடப்பட்டு ஆரோக்கியத்தையடையும்.

மனஸ்தாபப் பிரகரணம்.

என் சர்வேசுரா சுவாமி, என் சீவிய காலத்தில் நான் கட்டிக்கொண்ட பாவங்களையெல்

லாம் முழுமனதோடு வெறுத்துத் தள்ளுகிறேன். அளவற்ற நன்மைத்தனமுள்ள தேவரீருக்கு அவைகள் பொருந்தாதென்கிறதினால் அவைகளுக்காக நான் மிகுந்த மனஸ்தாபப்படுகிறேன். இனி ஒருபோதும் எந்தப் பாவத்தையும் செய்யப்போகிறதில்லையென்று கெட்டியான பிரதிக்கினை பண்ணுகிறேன். என் நல்ல சேசுவே, என்மேல் இரங்கி என் பாவங்களைப் பொறுத்துக்கொள்ளும்.

ஆராதனைப் பிரகரணம்.

திவ்விய பலிபீடத்தின்மீது வீற்றிருக்கும் என் மதுர சேசுவே, தேவரீருடைய சன்னிதானத்திற்கு முன்பாக அடியேன் சாஷ்டாங்கமாக விழுந்து தேவரீரை ஆராதிக்கிறேன்.

ஆசைப் பிரகரணம்.

என் மதுர சேசுவே, நானும்மைச் சிநேகிக்கிறேன். தேவரீரை என் இருதயத்தில் உட்கொள்ளவேண்டுமென்று என் முழு இருதயப்பற்றுதலோடு ஆசிக்கிறேன். மிகவும் மதுரம் நிறைந்த சேசுவே, ஏழையும் துன்பப்பட்டவனுமாகிய என்னுள்ளத்தில் எழுந்தருளிவந்து உமது திருச்சரீரத்தை எனக்குப்

போசனமாகவும், உமது திரு இரத்தத்தை எனக்குப் பானமாகவும் தந்தருளவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேன்.

நித்திய காலம் நானும்மோடு ஜீவித்திருக்கும்படியாக, உம்முடைய சரீரத்தையும் இரத்தத்தையும் ஆத்துமத்தையும் தேவசுபாவத்தையும் எனக்குத் தந்தருளும்படி உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன்.

ஆமென் சேசு.

தேவநற்கருணை உட்கொண்டபின் நன்றியறிந்த தோத்திரம்.

விசுவாசப் பிரகரணம்.

என் ஆண்டவரே சுவாமி, சத்திய சுரூபியாயிருக்கிற தேவரீர் திருவுளம்பற்றினபடியினாலே அடியேன் தேவரீருடைய திருச்சரீரத்தையும் திரு இரத்தத்தையும் உட்கொண்டேனென்று உறுதியாக விசுவசிக்கிறேன்.

நம்பிக்கைப் பிரகரணம்.

ஆ என் சேசுவே, தேவரீர் அளவில்லாத தயை நிறைந்தவரானதால் என் நம்பிக்கையாவும் உமது பேரில் வைக்கிறேன்.

ஆராதனைப் பிரகரணம்.

ஆ என் சேசுவே, என் தேவனே, என் சிஷ்டிகரோ, தேவரீர் அடியேனைப் படைத்துப் பரிபாலனம் பண்ணிக்கொண்டு வருவதினாலும் தேவரீருடைய நித்திய பேரின்ப பாக்கியத்துக்கு அடியேனையும் பங்காளியாக்கும்படி சித்தமாயிருக்கிறதினாலும் தேவரீரை அத்தியந்த பத்தி வணக்கத்தோடு ஆராதிக்கிறேன்.

தாழ்ச்சிப் பிரகரணம்.

ஆ என் சேசுவே, உமது சமுகத்தில் அடியேன் தூசியும் சாம்பலுமேயன்றி வேறென்ன? அப்படியிருந்தும் என்னிடத்தில் எழுந்தருளிவரத் திருவுளமானீரோ; தேவரீரை நோக்கி அடியேனுடைய ஆத்துமம் விண்ணப்பஞ் செய்யும்படி விடையளித்தருளும்.

சிநேகப் பிரகரணம்.

மதுர சேசுவே, நான் உம்மைச் சிநேகிக்கிறேன். என் முழு இருதயத்தோடும் உம்மைச் சிநேகிக்கிறேன். அடியேன் தேவரீரைச் சிநேகிக்கிறேனென்றும் நாளுக்குநாள் உம்மை அதிகமதிகமாய்ச் சிநேகிக்க ஆசிக்கிறேனென்றும் தேவரீர் அறிந்திருக்கிறீர்.

நன்றியறிந்த பிரகரணம்.

என் நல்ல சேசுவே, என் முழு இருதயத்தோடு உமக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்துகிறேன். மதுர சேசுவே, தேவரீர் எனக்குக் காட்டுகிற அன்பும் நன்மைத்தனமும் எவ்வளவோ அணைகடந்ததாயிருக்கிறது. பரம திவ்வியநற்கருணையில் எழுந்தருளியிருக்கும் சேசுக்கிறீஸ்துநாதர் சதாகாலமும் வாழ்த்தப்படக்கடவாராக.

காணிக்கைப் பிரகரணம்.

ஆ என் சேசுவே, என் அற்பமான காணிக்கையைக் கையேற்றுக்கொள்ளும். சேசுவே, உம்மை எனக்குச் சொந்தப் பொருளாகத் தந்தருளினபடியினாலே, என்னை முழுதும் உமக்குப் பாதகாணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன். என் சரீரத்தைத் தேவரீர் கையேற்றுக்கொண்டு அதைப் பரிசுத்தமாக்கியருளும். என் ஆத்துமத்தைக் கையேற்றுக்கொண்டு அதில் பாவமணுகாமல் காப்பாற்றியருளும். என் இருதயத்தை உமது கைவசமாக்கி அது தேவரீரை இடைவிடாமல் நேசிக்கும்படி அநுக்கிரகஞ் செய்தருளும். நான் விடும் ஒவ்வொரு மூச்சையும், என் கடைசிப் பெருமூச்சையும் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். நான் என்றும் உமக்குச் சொந்த

மாயிருக்கும்படியாக என் ஜீவியகாலத்திலும் என் மரண வேளையிலும் என்னை உமக்குக் கையளிக்கிறேன்.

மன்றாட்டுப் பிரகரணம்.

தனக்காக:—திவ்விய சேசுவே! விலைமதியாத உமது திரு இரத்தத்தால் என் ஆத்துமத்தின் பாவக்கறைகளைக் கழுவிச் சுத்திகரித்தருளும். ஆண்டவரே! பேயின் தந்திரமான போராட்டம் என்னிடத்தில் இன்னம் முடியவில்லையே. சோதனை தந்திரங்கள் என்னை அடுத்து வரும்போது, அவைகளை எதிர்த்து நின்று ஜெயிக்கப் போதுமான வரப்பிரசாதத்தை எனக்குத் தந்தருளும். சோதனை நேரத்தில் "சேசுவே, என்னை இரட்சியும். மரியாயே, என்னைத் தற்காத்தருளும்" என்று எப்போதும் உச்சரிக்கக்கடவேனாக.

நல்ல சேசுவே! இனிச் சுகிர்தவாளனாய்ச் ஜீவித்துப் பாக்கியமான மரணமடையச் செய்தருளும். நான் சாகுந் தருணத்திலும் தேவரீரை உட்கொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைக்கக்கடவதாக. நான் சாகும்போது "சேசுமரியே சூசை உங்கள் கரங்களில் என் ஆத்துமத்தையும் சரீரத்தையும்

கையளிக்கிறேன்" என்று உச்சரிக்கக்கடவேனாக.

பிறருக்காக:—திவ்விய சேசுவே! சத்திய திருச்சபையின்பேரில் தேவரீர் இரக்கமாயிரும். அதைப் பராமரித்துத் தற்காத்தருளும். தயையின் சமுத்திரமாகிய சேசுவே! நிர்ப்பாக்கியமான பாவிகள்பேரில் இரக்கமாயிருந்து நித்திய நரக ஆக்கினையினின்று அவர்களை இரட்சித்தருளும் சுவாமி. ஆண்டவரே! உமது திரு இருதய இஷ்டப்படியே என் தாய் தந்தைகளையும், சகோதரர், சகோதரிகளையும் இன்னம் நான் ஆருக்காக வேண்டிக்கொள்ள வேணுமோ அவர்களையும் ஆசீர்வதித்தருளும். என் அன்பரான சேசுவே! உத்தரிக்கிற ஸ்தலத்தின் ஆத்துமங்கள்பேரில் இரக்கமாயிரும். அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும்.

என் திவ்விய சேசுவே! என் இரட்சகரே! உமது இஷ்டப்பிரசாதத்தால் என் இருதயத்தில் எப்போதும் வீற்றிருக்கத் தயைசெய்யும். உமது சிநேகத்தில் நின்று என்னைப் பிரியவொட்டாதேயும் சுவாமி.

ஆமென்சேசு.

தேவநற்கருணை உட்கொண்ட பின் செய்யத்தகும் செபங்கள்.

எனதன்புக்குரிய சேசுவே! நானிப்போது அனுபவிக்கிற மேலான பாக்கியத்துக்காக உமக்கு என் முழுமனதோடு நன்றியறிந்திருக்கிறேன். இப்போது என் இருதயத்தில் வீற்றிருக்கிற தேவரீரை அத்தியந்த பத்திவினயத்துடன் ஆராதிக்கிறேன். ஆ என் தேவனே, உமக்கு ஆயிரமாயிரம்விசை வந்தனம் செலுத்துகிறேன். பரலோக இராஜாவே, நீச வஸ்துவாகிய என்னைச் சந்திக்கத் தேவரீர் திருவுளமானது எவ்வளவோ அணைகடந்ததும் ஆச்சரியத்துக்குரியதுமான நன்மைத்தனம்! நீசப் புழுவாகிய என்பேரில் உமது வரப்பிரசாதங்களைப்பொழிந்து, உமது திருச்சரீரமும் இரத்தமுமாகிய பரலோக விருந்தினால் என் ஆத்துமத்தைப் போஷிக்கத் தேவரீர் கிருபை செய்தருளினீர். தேவரீர் உம்மைத்தானே எனக்குத் தந்தருளினபடியினாலே, எனக்குக் கிடைத்த இந்த விலைமதியாத நன்மைக்குப் பிரதி நன்றியாக ஏதேனும் ஓர் காணிக்கையை உமக்குச் செலுத்த வேண்டுமென்று ஆசிக்கிறேன். ஆனால்,

ஐயையோ! என் இனிய சேசுவே, உமக்கு யோக்கியமான காணிக்கையைச் செலுத்த என்னால் கூடாதென்பது உமக்கு நன்றாய்த் தெரியுமே. ஆயினும் தேவரீருடைய நன்மைத்தனம் எப்படிப்பட்டதென்றால், தேவரீர் என் இருதயத்தைத் தவிர வேறொன்றையும் கேட்கிறதில்லையே. இந்தக் காணிக்கையை என் முழுமனதோடு உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். ஆண்டவரே, இதைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு இதை என்றென்றைக்கும் உமக்குச் சொந்தப் பொருளாகச் செய்தருளும். இது முழுவதையும் உமக்கே ஒப்புக்கொடுக்கிறேன். ஆமென்சேசு.

அர்ச். இஞ்ஞாசியார் உண்டாக்கின செபங்கள்.

மன்றாட்டு முயற்சி.

கிறீஸ்துவினுடைய ஆத்துமமானதே, என்னை அர்ச்சியசிஷ்டவனாகச் செய்தருளும். கிறீஸ்துவினுடைய திரு இருதயமே, உமது தேவ சிநேக அக்கினியால் என்னை எரியப் பண்ணியருளும். கிறீஸ்துவினுடைய திருச்சரீரமே, என்னை இரட்சித்துக்கொள்ளும். கிறீஸ்துவினுடைய திரு இரத்தமே, எனக்

குத் திருப்தி உண்டாகப் பண்ணியருளும். கிறீஸ்துவினுடைய விலாவிலே நின்று ஓடி விழுந்த திருத்தண்ணீரே, என்னைக் கழுவியருளும். கிறீஸ்துவினுடைய திருப்பாடுகளே, எனக்குத் தேற்றரவுண்டாகப்பண்ணியருளுங்கள். ஓ நல்ல சேசுவே, நான் கேட்கிறதைத் தந்தருளும். உம்முடைய திருக்காயங்களுக்குள்ளே என்னை மறைத்துக்கொள்ளும். என்னை உம்மைவிட்டுப் பிரியவொட்டாதேயும். துஷ்ட சத்துருக்களிடத்திலே நின்று என்னை இரட்சித்துக்கொள்ளும். என் மரணத்தறுவாயில் நீரென்னை அழைத்து, உம்முடைய சந்நிதியிலே உட்பட்ட சகல அர்ச்சியசிஷ்டவர்களோடு நான் உம்மை ஊழியுள்ளகாலம் தோத்திரம் பண்ணும்படி அடியேனை உம்முடைய சந்நிதியில் வரக் கற்பித்தருளும்.—ஆமென்சேசு.

(இந்தச் செபம் செபிக்கிறவர்களுக்கு 300 நாட் பலனும், நன்மை வாங்கினபின் சொல்லுகிறவர்களுக்கு 7-வருஷப் பலனுமாம்.)

பிரதிக்கினை முயற்சி.

என் அன்புக்குரிய ஆண்டவரே! விலைமதிப்பைப் பாராமல் உமக்குப் பலிகளை ஒப்புக்கொடுப்பதிலும், காயங்களுக்கஞ்சாமல்

உமக்காக யுத்தஞ் செய்வதிலும், இளைப்பாற்றியைத் தேடாமல் உமக்காக வருந்தி பிரயாசப்படுவதிலும், "உமது சித்தத்தை நிறைவேற்றுகிறேன்" என்னும் மனோகரம் ஒன்றே தவிர வேறே சம்பாவனையை நாடாமல் உமக்காக உழைத்து வேலைசெய்வதிலும், இப்படியாய்த் தேவரீருக்கு யோக்கியமான பிரகாரம் நான் ஊழியம்பண்ணுவதில் உதாரமான மன உற்சாகமுள்ளவனாகும்படி எனக்குப் படிப்பித்தருளும்.—ஆமென்சேசு.

காணிக்கை முயற்சி.

என் நேச சேசுவின் திரு இருதயமே! என் நினைவு, புத்தி, மனசு, மனச்சுயாதீனமெல்லாம், எனக்குள்ளதெல்லாம், இதோ தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். தேவரீர் அவைகளைக் கையேற்றுக்கொள்ளத் தயைசெய்தருளும். அவைகள் எல்லாவற்றையும் தேவரீர்தாமே எனக்குத் தந்தருளினபடியினாலே அவைகளெல்லாம் உமக்கே சொந்தம். தேவரீருடைய சித்தம்போல் அவைகளை நடப்பித்தருளும். சேசுவின் திரு இருதயமே! உமது சிநேகமும் இஷ்டப்பிரசாதமுமே எனக்குப் போதுமான ஆஸ்தியாகையால் அவைகளை மாத்திரம் அடியேனுக்குத் தந்தருளும் சுவாமீ.—ஆமென்சேசு.



பரிபூரண பலனுள்ள செபம்.

மகா மதுரம்பொருந்திய நல்ல சேசுவே!
அடியேன் தேவரீருடைய திருச் சமுகத்தில்
முழந்தாளிலிருந்து சாஷ்டாங்கமாக விழு
ந்து, என் கைகளையும் கால்களையுந் துளைத்

தார்கள். என்னெலும்பெல்லாம் எண்ணி
னார்களென்று தேவரீரைப்பற்றி முன்னர்
தாவீதென்கிற தீர்க்கதரிசி உமது திருவாயின்
வாக்கியமாக வசனித்ததை என் கண்முன்
பாகக்கண்டு, தேவரீருடைய அஞ்சு காயங்
களையும் மிகுந்த மன உருக்கத்தோடுந் துக்
கத்தோடும் என்னுள்ளத்தில் விசாரித்து
நினைவில் தியானிக்கிற இந்நேரத்தில், திட
னான விசுவாசம் நம்பிக்கை தேவசிநேகமென்
கிற சுகிர்த கருத்துகளையும், என் அக்கிரமங்
களின்மேல் மெய்யான மனஸ்தாபத்தையும்,
அதுகளைத் திருத்த மெத்த உறுதியான பிர
திக்கினையையும் என்னிருதயத்திற் பதியச்
செய்தருள வேணுமென்று என் நல்ல சேசு
வே! தேவரீரை என் ஆத்துமத்தின் மேலான
ஆசை ஆவலோடிரந்து மன்றாடிப் பிரார்த்திக்
கிறேன்.—ஆமென்சேசு.

ஞான ஏகாந்தத்தின் ஞாபகக் குறிப்பு.

அநுதின அப்பம்.

சுகிர்த குறள்.

1. திவ்வியநற்கருணை! ஓ, இது எப்பேர்ப்பட்ட விருந்து! ஓ! இது எத்தன்மையான போசனம்! இதில் தேவனுடைய மாங்கிஷம் போசனமாகவும், அவருடைய திரு இரத்தம் பானமாகவும் பரிமாறப்படுகிறதாமே.

2. திவ்வியநற்கருணை! ஓ! உண்மையாகவே இது சிநேகத்தின் தேவதிரவிய அநுமானமாம். ஏனெனில், இது சிநேகத்தினின்று உற்பத்தியாகி, சிநேகத்திற்குத் திருப்திகரம் வருவித்து, சிநேகத்தை விளைவிக்கின்றது.

3. நம்மோடே சஞ்சரிக்கப் பரலோகத்தை விட்டிறங்கி நம்மைத்தேடி பின்தொடர்ந்து நம்மை அழைத்து தம்மைத்தாமே நமக்குப் போசனமாகக் கொடுக்கிற சர்வேசுரனை நாம் சிநேகியாமல் இருப்பதெப்படி?

4. திவ்விய சேசு திருப்பேழையில் சஞ்சரிக்கும் நோக்கம், அவர்பேரில் நமக்குப்

பயத்தை வருவிக்கும்படிக்கல்ல, ஆனால் நம்மால் அவர் அன்புடன் சிநேகிக்கப்படுவதற்கே அங்கே வீற்றிருக்கிறார்.

5. சீனாய்மலைத் தேவனுக்கும், திருப்பேழையின் தேவனுக்கும், வித்தியாசமுண்டு. சீனாய்மலைமேல் சங்கை வணக்கத்தைக் கற்பிக்கும் தேவனாய் அவர் விளங்கினார். திருப்பேழையிலோ, சிநேகத்தைக் கேட்கும் தேவனாக வீற்றிருக்கிறார்.

6. மனிதர்களால் சிநேகிக்கப்படவும் சந்திக்கப்படவும் மாத்திரம் சர்வேசுரன் அப்பத்தின் ரூபம் எடுக்கவில்லை. ஆனால் தமது சிநேகத்திற்கு மனுஷனை வசப்படுத்தவும் அவர்களுக்குத் தாமே போசனமாகவும் அப்படி அமைந்திருக்கிறார்.

7. பாத்திரம் எவ்வளவு பெரிதோ அவ்வளவு அதிகமான தண்ணீரை அது ஊற்றினின்று மொண்டுகொள்ளுமே; அவ்வண்ணமே சிநேகம் நமது இருதயத்தின் கனவிலாச அளவாய் இருக்கின்றதாம்.

8. பயத்திலும் சிநேகம் அதிக நல்லதாம்; ஆகையால் உனக்கு எவ்வளவேனும் சிநேகம் இருந்தால் திருப்தியடைந்திரு; ஏனெனில் மற்றும் குறைகளை உன் இருதயத்தின் தாழ்ச்சி சரிக்கட்டுமாம்.

9. திவ்வியநற்கருணை வாங்குவது ஒருவன் அடைந்திருக்கும் சாங்கோபாங்கத்தின் சம்பாவனையல்ல, ஆனால் சாங்கோபாங்கத்தை அடையும் வழியாம்.

10. திவ்வியநற்கருணை வாங்க புண்ணிய சாங்கோபாங்கம் கட்டாயம் அவசியமென்று கற்பிப்பது ஆண்டவருக்கு அநியாயம் செய்வதுபோலாகும். ஏனெனில் அவருடைய தேவதிரவிய அநுமானங்களில் மிகுந்த மகுத்துவமும் பூசிதமான இந்தத் தேவதிரவிய அநுமானமானது அப்போது பிரயோசனமற்றதாகப் போகும். எவரும் பெறக்கூடாததாகவும் ஆகிவிடுமே.

11. சகல வரப்பிரசாதங்களின் ஊற்றாகிய திவ்வியநற்கருணையை உட்கொள்ளுவது நமது குற்றங்களைக் குறைக்க உத்தமமான வழியாம்.

12. பெலனில்லாமல் நாம் எப்படி வேலை செய்யக்கூடும்? எப்படி சண்டை செய்யக்கூடும்? பெலக்கிரசாலிகளின் அப்பமாகிய திவ்வியநற்கருணையில் அல்லாமல் வேறெங்கே நாம் பெலனைக் கண்டடைவோம்?

13. கற்பனை வேறே, ஆலோசனை வேறே, சாவான பாவமில்லாத எவனும் திவ்வியநற்கருணை வாங்க சுதந்தரவாளியாய்

இருக்கிறான். ஒருவன் தன் ஜீவியகாலமெல்லாம் இப்படிப் பாவமில்லாமலிருந்தால், அவன் தினந்தோறும் திவ்வியநற்கருணை வாங்கலாம். இதனால் அவன் உண்மையான பிரயோசனத்தைக் கைக்கொள்ளுவதுமல்லாமல் அவனிடத்தில் இஷ்டப்பிரசாதமும் பெருகி வளருமாம்.

14. திருச்சபையின் துவக்கத்தில் விசுவாசிகள் தினந்தோறும் திவ்வியநற்கருணை வாங்கிவந்தார்கள். அவர்களுக்கிருந்த ஆபத்தைவிட நமக்கிருக்கும் ஆபத்து கொஞ்சமா? நம்மைவிட அவர்கள் வித்தியாசமான சுபாவமுள்ளவர்களா? இப்போதிருக்கிற சேசுநாதர் சுவாமி வேறேயா? அல்லது அவருடைய போதனைகள் வேறேயா?

15. “இதோ! அவர்கள் ஒருவனையொருவர் எவ்வளவு சிநேகிக்கிறார்கள்” என்று கிறீஸ்துவர்களைக் குறித்துச் சொல்லக்கூடியதாயிருந்ததெப்போது? அவர்கள் தினந்தோறுந் திவ்வியநற்கருணை வாங்கிவந்தபோதுதான்.

16. அப்பமானது அபூர்வ சமயங்களில் மாத்திரம் உண்ணப்படும் போசனமல்ல, தினந்தோறும் சாப்பிடப்படும் போசனமாம்.

17. திவ்விய நற்கருணை அநுதினப் போசனமானால் அதை அபூர்வமாய்ப் புசிப்பானேன்? "உங்களுக்கு அநுதினம் நன்மை வருவிக்கக்கூடிய உணவை நீங்கள் அன்றன்று புசியுங்கள்" என்று அர்ச். அமிர்தநாதர் திருவுளம்பற்றினார்.

18. எவனும் பெலக்கிரசாலியாய் இருப்பதினாலே சாப்பிடுகிறானோ? அல்ல, ஆனால் பெலக்கிரசாலியாகும்படிக்கு அல்லது பெலனைக் காப்பாற்றும்படிக்குத்தான் சாப்பிடுகிறான்.

19. திவ்விய நற்கருணை வாங்க நீ வீணாய்ப் பயப்படுகிறாயே; நீ இப்படிப்பயந்து பின்தாங்குவதினாலே நீ பட்டினியாய்ச் சாக உன்னை உடன்படுத்திக்கொள்ளுகிறாய். திவ்விய நற்கருணை வாங்காமல் ஜீவிக்க நீ அதிகமாய்ப் பயந்திருக்கவேண்டியதாமே.

20. ஒறுத்தல் உபவாசம் சில சமயங்களில் பிரயோசனமுள்ளதுதான், இன்னம் அது அவசரமானதுதான். ஆத்தும விஷயத்திலும் அதின் அநுதின அப்பமாகிய திவ்விய சற்பிரசாத விஷயத்திலும் அப்படித்தான். ஆகிலும் குறிக்கப்பட்ட வரையறை அளவுக்கப்பால் சரீரம் ஜீவித்திராதாமே.

21. சற்பிரசாதத்தின்மட்டில் உனக்குள்ள சங்கையும் பத்தி சுறுசுறுப்பும் அற்றுப்போகுமென்று பயப்படுகிறாயாக்கும். ஆனால் ஒருநாள் சாயுங்காலம் சாப்பிடுவதினாலே மறுநாளைக்கு வேண்டிய சுகமும் பசிதாகமும் அற்றுப்போகும், ஆபத்து நேரிடுமென்று சொல்லுவாயோ?

22. அநுதினமுந் திவ்விய சற்பிரசாதம் உட்கொள்ளுவது முற்காலத்திலே சாதாரணமாக வழங்கிவந்ததென்று திருச்சபை அறிந்த விசேஷம். அப்படியே திருச்சபையானது தன் பிள்ளைகளுக்கு இப்பேர்ப்பட்ட வழக்கத்தை அனுசரித்துவரவேணுமென்று ஆசைப்பட்டு எக்காலத்திலும் போதித்துக்கொண்டு வருகிறதாமே.

23. திவ்விய நற்கருணை வாங்க நீ பாத்திரவானல்லவென்று நினைக்கிறாயாக்கும். இப்படி நினைப்பதே சற்பிரசாதம் உட்கொள்ள உத்தம ஆயத்தமாம்.

24. திவ்விய நற்கருணை வாங்க நீ பாத்திரவானாயிருக்கிறாயென்று நீ நினைத்தால் அப்போதுதான் அதற்கு நீ அபாத்திரவானாயிருககிறாய்.

25. நீ திவ்விய நற்கருணை வாங்கப் பாத்திரவானாகுமட்டும் காத்திருக்கிறதாயிருந்

தால், ஒருக்காலும் நீ தேவநற்கருணை உட்கொள்ளப் போகிறதேயில்லை. திவ்விய சற்பிரசாதம் ஆருக்காக ஸ்தாபிக்கப்பட்டதென்று உனக்குத் தெரியாதா?

26. திவ்வியநற்கருணை உட்கொள்வதாலே வரும் பலாபலனும், சுகிர்தமும், அத்தேவதிரவிய அநுமானத்தை ஒருவன் பெறுவதற்கு முந்தின ஆயத்தமாக இருக்கவேண்டுமென்று சர்வேசுரன் நம்மைக் கட்டாயப்படுத்தக்கூடாது. ஏனெனில் எவனும் வியாதியாயிருக்கையில் அல்லது வியாதியாயிருக்கிறதினாலே மருந்து சாப்பிடுவானேதவிர மற்றப்படியல்ல.

27. இன்னம் நீ பாவத்தில் விழக்கூடியவன் என்பாயோ? பாவத்தில் நீ விழாதிருக்கிற வரைக்கும் நீ காத்திருக்கிறதாயிருந்தால் நீ ஒருபோதும் திவ்வியநற்கருணை வாங்கப்போகிறதேயில்லை.

28. நான் அதற்கு யோக்கியனல்ல என்பாயாக்கும். அப்படியே இருக்கட்டும். நீ திவ்வியநற்கருணை உட்கொள்ளாவிட்டால், நீ எப்படியிருப்பாயென்று உனக்குத் தெரியாதே.

29. ஒருவிசை திவ்வியநற்கருணை வாங்குவது மறுவிசை அதை வாங்குவதற்கு உத்

தமமான ஆயத்தமாம். பிந்தினவிசை வாங்கினது முந்தினவிசை வாங்கினதற்கு உத்தம நன்றியறிந்த தோத்திரமாம்.

30. ஒருவிசை கூட அல்லது குறைய திவ்வியநற்கருணை வாங்குவதாலே வரும் பலாபலனை யார் அளிக்கக்கூடும்!

31. இனிமேல் நீ வாங்கப்போகிற திவ்வியநற்கருணைக்கு ஆயத்தமாக இந்தவிசை திவ்வியநற்கருணை வாங்கு. நீ இந்தவிசை வாங்கின திவ்வியநற்கருணைக்கு நன்றியறிந்த தோத்திரமாக இதற்கடுத்தவிசை திவ்வியநற்கருணை வாங்கு.

32. திவ்வியநற்கருணை வாங்குஞ் சமயங்களுக்குள் ஏதாவது ஒன்றில் உன் ஆத்தும இரட்சணியம் சார்ந்திருக்கக்கூடும். எந்தத் தருணத்தில் நீ திவ்வியநற்கருணை வாங்காமல் விட்டுவிட நினைக்கிறாயோ அந்தத் தருணத்தில் சிலவிசை உன் ஆத்தும இரட்சணியம் சார்ந்திராதென்று உனக்குத் திட்டமாய்த் தெரியுமோ?

33. திவ்வியநற்கருணை வாங்கும் சமயங்களில் ஒன்றை நீ விட்டுவிட்டாயாகில் சிலவிசை அந்தச் சமயத்தில் ஒரு ஆசாபாசம் மேலிட்டுப்போய் உன் ஆத்துமத்தையும் நித்திய சாவுக்கு உள்ளாக்கிவிடுமாம்.

34. திவ்விய நற்கருணை வாங்குவதின் மட்டில் நீ இன்னம் போக்குச் சொல்லிக்கொண்டிருந்தால், "விருந்தினருக்குள் போக நீ ஆசைப்பட்டாலும் உனக்கு கதவு அடைபட்டுப்போகுங்காலம் ஒருநாள் வரும்" என்று அறிந்திரு.

35. உனக்குப் பாவச்சோதனை மிச்சமாயிருக்குமோ? திவ்விய நற்கருணை வாங்க வேண்டியது உனக்குக் கடன். ஏனெனில் மேற்படி சோதனைகளை ஜெயிக்க உனக்குப் பெலன் வேண்டியதல்லவா?

36. பிறரிடத்தில் எவ்வளவுக்கு நாம் நெருங்கிச் சகவாசம் செய்கிறோமோ, அவ்வளவுக்கு அவர்கள்பேரில் நமக்கு எண்ணங் குறைந்து போகும் என்பாயோ? சர்வேசுரனுக்குக் கிட்ட எவ்வளவு நாம் நெருங்கிச் சேருகிறோமோ, அவ்வளவுக்கு அவர்பேரில் நமக்குச் சங்கையுண்டாகும். எவ்வளவுக்கு அவரை நாம் அறிகிறோமோ, அவ்வளவுக்கு அவரை நாம் சிநேகிப்போம் என்பது தப்பாது.

37. திவ்விய நற்கருணை வாங்கும் தருணங்களை எவ்வளவுக்கு நீ குறைத்துப்போடுவாயோ, அவ்வளவுக்கு திவ்விய நற்கருணை மட்டில் உனக்குள்ள நேச பற்றுதல் குறை

ந்துபோகும். அதற்கு விரோதமாய் எவ்வளவுக்கு அடிக்கடி இந்த திவ்விய போசனத்தை உட்கொள்வாயோ, அவ்வளவுக்கு அதின்பேரில் உனக்கு ஆசை நேசம் அதிகரிக்குமாம்.

38. நமதாண்டவருடைய திவ்விய பரிசுத்ததனமாவது நீ திவ்விய நற்கருணை வாங்கத் தடையாயிருக்குமோ? உனக்கிருக்கும் தரித்திரத்தைப்பற்றி நீ அவரண்டைக்குப் போக வேண்டியவனாயிருக்கிறாயே; உனக்கு சர்வேசுரன் அவசரமாயிருப்பதால், நீ திவ்விய நற்கருணை வாங்கப்போ. அவர்தான் உன்னைக் கூப்பிடுகிறார்.

39. உன் சகல பாவங்களும் குற்றங் குறைகளும் நீங்கி நிவாரணமாகுமட்டும் நீ காத்திருக்கவேண்டுமென்று நினைக்கிறாயோ? ஆனால் நீ பாவத்தில் விழாமல் உன்னைத் தற்காக்கவும், உன் குற்றங்குறைகளைத் திருத்திக்கொள்ளவும் திவ்விய சற்பிரசாத போசனம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்று நீ அறியக்கடவாய்.

40. உனக்கு வயது கொஞ்சம் என்பாயோ? உன் இருதயத்தை ஆண்டவருக்கு இப்போதே கொடுக்காமல், உலோகம் அதை மாசுபடுத்தும்வரையில் நீ காத்திருப்பது யோக்கியமோ?

41. வாடிக்கையாய்ப் போகுமென்று திவ்வியநற்கருணை வாங்க நீ பயப்படுகிறாயோ? வாடிக்கையாய்ப் போகுமென்கிற பயத்தினாலே எவனாவது சர்வேசுரனை வேண்டிக்கொள்ளாமலிருக்கவேணுமோ? வாடிக்கையாய்ப்போகுமென்று பயந்து பிள்ளையானது தன் தாயை அரவணைக்காமலிருக்கவேணுமோ?

42. இது பசாசின் கபடதந்திரம். ஏனெனில், சுக ஜீவியம் கிடைக்குமென்று மரணத்தின் கனியைத் தின்ன நமது ஆதித்தாய் தந்தையருக்கு பசாசு துற்புத்தி சொல்லிற்றல்லவா? இப்போதோ, மரணம் வருமென்று பயமுறுத்தி, ஜீவிய கனியை நீ தின்னாதபடிக்கு உன்னை விலக்கிவிட அது நினைத்திருக்கிறதாமே.

43. பலவீனமாயிருக்கும்போது உனக்குப் பெலன் உண்டாக நல்ல போசனம் சாப்பிடுகிறாயே, உனக்கு வியாதி வந்தால் சொஸ்தமடைய அவுழ்தம் வேணுமென்று கேட்கிறாயே, திவ்விய சற்பிரசாதம் பலவீனர்களுக்குரிய போசனமுமாய், வியாதிஸ்தர்களுக்குரிய அவுழ்தமுமாயிருக்கிறது உனக்குத் தெரியாதா?

44. நமதாண்டவர் உன்னை வருந்தி அழைப்பதையுஞ் சட்டைபண்ணாமல் திவ்

விய சற்பிரசாத விருந்திற்குப் போக நீ இன்னம் பயப்படுகிறாயே. அந்தத் திருப்பந்தியில் நீ சிலவிசை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாயென்று பயந்து அத்திரு விருந்தின் தருணத்தை விட்டுவிடாதபடிக்கு, நீ அதிக எச்சரிக்கையாய் இருக்கக்கடவாய்.

45. நீ அபாத்திரவானென்று உணர்ந்ததினால் திவ்வியநற்கருணை வாங்கப்படாதென்கிற எண்ணமும் உனக்கு வருமானால், உன்னுத்தும பலவீனத்தை யோசித்து உணர்ந்து உன்னிடத்தில் திவ்வியநற்கருணை வாங்க ஆசை வருவிக்கக்கடவாய்.

46. உன்னைப்பற்றி நீ தேவநற்கருணை வாங்க உனக்கு மனசில்லாவிட்டால், திவ்விய கர்த்தர் அநேகரால் பிறக்கணிக்கப்படுவதைப்பற்றி அவருக்கு வரும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக அந்தத் திவ்விய கர்த்தரைப்பற்றியாவது திவ்வியநற்கருணை வாங்குவாயாக.

47. தமது ஜீவனை நமக்குக் கொடுப்பது திவ்விய கர்த்தருடைய சிநேகமுள்ள திருஇருதயத்துக்கு ஒரு சந்தோஷமாம்; தமது நன்மைகளை நமக்குப் பொழிவது அவருடைய நன்மைத்தனத்துக்கு ஒரு திருப்திகரமாம்; தமது ஆஸ்திகளை நமக்குப் பகிர்ந்து கொடுப்பது அவருடைய ராஜரீகத்துக்கு

ஒரு மகிமையாம். ஆகையால் சேசுநாதரைப் பற்றித் திவ்வியநற்கருணை வாங்குகிறவன் மேற்கூறிய மூவிதத் திருப்திகரத்தையும் திவ்விய கர்த்தருக்கு வருவிக்கிறானே.

48. நீ தேவநற்கருணை வாங்க அசட்டை செய்தால், திவ்விய சற்பிரசாதத்தில் அடங்கிய வரப்பிரசாதங்கள் பலனை விளைவியாதபடிக்குத் தடை பண்ணுகிறாய். திவ்விய கர்த்தர் பட்ட பாடுகளினிமித்தம் அவருக்குச் செல்லவேண்டிய மகிமையை நீ அவருக்குச் செலுத்தமாட்டோம் என்கிறாயாமே.

49. திவ்விய கர்த்தர்பேரில் நமக்குள்ள சங்கை வணக்கம் குறைந்துபோகுமென்று பயந்து திவ்வியநற்கருணை வாங்காமலிருப்பது பைத்தியமாம். ஏனெனில் அவரோ உன்னை அழைக்கிறார்.

50. உனக்கு உருக்கமான பத்தியில்லை என்பாயோ? நாளையத் தினத்துக்குள் அல்லது வருகிற வாரத்துக்குள் நீ அதிக பத்தி சுறுசுறுப்புள்ளவனாய்ப் போவாயோ? அப்படிச் சொல்வது எதுக்குச் சமானமென்றால், குளிருள்ளவன் எனக்குக் குளிர் மெத்த இருப்பதினாலே நான் நெருப்பின் கிட்டப் போகமாட்டேன் என்பதுபோலும், அல்லது ஒரு வியாதிஸ்தன், எனக்குச் சௌக்கியம்

வருமட்டும் வைத்தியனை நான் கூப்பிடமாட்டேன், என்பது போலுமாம்.

51. உனக்கு மனச்சிந்தனையில்லை, பத்தி பற்றுதலில்லை என்பாயோ? திவ்வியநற்கருணை வாங்கப்போ. மனச்சிந்தனையும் பத்தி பற்றுதலும் திவ்விய கர்த்தரோடே உன்னிடத்தில் வந்து சேரும்.

52. உனக்கு நல்ல ஆயத்தமில்லை என்பாயோ? உன் சொந்தப் பேறு பலன்களால் நீ அதிக நல்ல ஆயத்தமுள்ளவனாவாயோ? இப்படி நினைப்பது அகந்தை. இன்னம் அதிக பூர்த்தியான இஷ்டப்பிரசாதம் கிடைக்குமென்றும், அது கிடைத்தபின் ஆகட்டுமென்றும், நினைத்திருக்கிறாயோ? இப்படி நினைப்பது முழுதும் ஆங்காரமாம்.

53. திவ்விய சற்பிரசாதம் உட்கொள்வதினாலே பரிசுத்தத்தனத்தின்பேரில் ஆசையுண்டாகிறது. இவ்வாசையை நிறைவேற்றத் திவ்வியநற்கருணை உனக்கு அவசரமாம்.

54. திவ்விய சற்பிரசாதத்தின் குறிப்பாயிருந்த மன்னாவென்னும் போசனமானது சனிக்கிழமை தவிர மற்ற நாட்களிலெல்லாம் காலமேதோறும் வானத்தினின்று பெய்தது. நித்திய இளைப்பாற்றியாகிய

உண்மையான சனிக்கிழமை வருமட்டும் நாம் தினந்தோறும் திவ்விய சற்பிரசாதம் உட்கொள்ளவேண்டும்.

55. பரிசுத்த தேவமாதாவின்பேரில் உனக்கு மிகுந்த பத்தி உண்டல்லவா? திவ்விய சற்பிரசாதத்தில் நாம் உட்கொள்ளும் திரு மாங்கிஷமும் இரத்தமும் அந்த மாதாவினால் கொடுக்கப்பட்டபடியால், திவ்விய சற்பிரசாதம் உட்கொள்வதின் மட்டிலும் நீ உருக்கமான பத்தி வைக்கவேண்டியது.

56. திவ்விய சற்பிரசாதமே! பலவீனர்களுக்குத் தாபரமே! ஏழைகளின் பொக்கிஷமே! நிர்ப்பாக்கியர்களுக்கு ஆறுதலே! தேவன் நமது வசமானார். இனிச் சகல நன்மைகளும் அவரோடே நமக்கு வந்து சேரும்.

57. "திவ்விய சற்பிரசாதம் உட்கொள்ளும் தருணங்களில் ஒரு தருணத்தை விட்டுவிடுவதைப்பார்க்க, இப்பூலோக நன்மைகளையெல்லாம் விட்டுவிடுவது நலமாம்" என்று அர்ச். பாஜி மதலேனம்மாள் சொல்லியிருக்கிறாள்.

ஆசை நன்மை வாங்குவதைப் பற்றி.

ஆசை நன்மை வாங்குவது என்னவென்று யாவருக்கும் தெரியுமாயினும், திருச்சபை அதை வரையறுத்துச் சொல்லும் மொழிகளை சிலவிசை யாவருங் கவனித்து யோசித்திரார்கள். திரிதெந்து நகரத்தின் பரிசுத்த திருச்சபைச் சங்கத்தார் சொல்லுகிறதாவது: "பரலோக அப்பத்தின்பேரில் தங்கள் உள்ளத்தில் ஆசையை உண்டாக்கி வளர்த்துத் தேவசிநேகத்தோடு கூடிய தங்கள் உயிருள்ள விசுவாசத்தின் சகிர்தத்தாலே அந்தத் தேவதிரவிய அநுமானத்தின் பலனையும் உபயோகத்தையும் கைக்கொள்ளுகிறவர்கள்தான் ஆசை நன்மை வாங்குகிறவர்களென்று சொல்லப்படும். ஆகையால் திவ்வியநற்கருணை என்னும் தேவதிரவிய அநுமானத்தின் வழியாய் சுவாமியை உட்கொள்ளக் கூடாதபோது அவரை நமது இருதயத்திற்குள் வரவழைக்கவேணுமென்கிற உருக்கமான ஆசையை விளைவிப்பதும், பின் அவர் நமதிருதயத்தில் உண்மையாய் வந்து பிரசன்னமாய் இருப்பதுபோல அவருக்கு நன்றியறிந்த ஆராதனை சிநேகப் பிரகரணங்களைச் செலுத்துவதும் ஆசை

நன்மை வாங்கும் முயற்சிகளென்று சொல்
லப்படும்.

இது விஷயத்தைச் சுருக்கமாய்ச் சொல்ல
வேண்டுமாகில் இந்த முயற்சியானது திவ்
விய நற்கருணை என்னும் தேவதிரவிய அநு
மானத்தைப் பெற்றுக்கொள்ள வேணு
மென்கிற உருக்கமான ஆசையே தவிர
வேறொன்றுமல்ல, இது தேவபத்தி நேசத்
தோடு கூடிய உயிருள்ள விசுவாசத்தினால்
உண்டாகும் சுகிர்தமாம். திரிதெந்து நகரத்
தின் திருச்சங்கத்தார் மொழியைக்கொண்டு
இன்னம் இதிலே நாம் அறியத்தக்க விசே
ஷம் என்னவென்றால், ஒரு கிறீஸ்துவன் சம்
மனசுகளின் போசனத்தைப் புசிக்கவேணு
மென்ற ஆசையைத் தன்னிருதயத்தில் விளை
விக்கும் சமயத்தில், தான் சேசுநாதர்சுவாமி
யோடுகூட ஞானவிதமாய் முழுதும் ஒன்றித்
துப்போகவும், அப்படிப்பட்ட ஒன்றிப்பி
னால் விளையும் பலனை அநுபவிக்கவும், இவன்
இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருக்க வேண்டி
யது அவசரமாமே.

ஆசை நன்மை வாங்தவதால் வரும் பிரயோசனங்கள்.

ஆசை நன்மை வாங்குவதால் வரும் பிர
யோசனங்களுக்கும், திவ்விய அப்பத்தினும்

ரசத்தினும் குணங்களுக்குள் அமைந்த திவ்
விய சற்பிரசாதத்தை உட்கொள்வதாலுண்
டாகும் பிரயோசனங்களுக்கும் யாதொரு
வித்தியாசமில்லை. அவைகளை உட்கொள்
ளும் வகையிலும் அளவிலுமே வித்தியாச
முண்டு.

முதல் பிரயோசனம்.—நமது திவ்விய இர
ட்சகரோடு நமக்குள்ள ஒன்றிப்பினால் விளை
யும் அநுக்கிரகப் பிரசாதம் அதிகரித்துக்
கொண்டுவரும். ஆகிலும் இந்த அநுக்கிரகப்
பிரசாதமானது நமது ஆயத்தத்திற்கு அள
வாக அதிகரிக்குமேயல்லாது, மற்றப்படி
யல்ல. இவ்விதமாய் வாக்குக்கெட்டாத
உச்சித அளவு பிரமாணத்தோடு அது பெருகி
வர்த்திக்கக் கூடுமாமே. திவ்வியநற்கருணை
யை உட்கொள்வதால் உண்டாகும் பிரயோ
சனத்தைப்போலவே, இன்னும் அதிலும்
அதிகமாகவே, ஆசை நன்மை வாங்குவதால்
விளையக்கூடும்.

திவ்வியநற்கருணையை உட்கொள்வதால்
வரும் இன்னொரு பிரயோசனமானது நமது
ஒட்டோலக உத்தானத்திற்கு ஒரு அச்சார
மாகும். ஆசை நம்மை வாங்குவதோவென்
றால், மேற்கூறிய பிரயோசனத்தை ஸ்திரப்
படுத்துகிறதுமன்றியே மோட்ச பாக்கியத்

தின்மட்டில் நமக்குள்ள பாத்தியத்தைக் காப்பாற்றிக்கொள்ள உதவுகின்றது. இத்தோடு கூட மேற்படி பாத்தியத்திற்கு அதிக தெய்வீக இலட்சணங்களைக் கொடுத்துச் சிறப்பிக்கின்றது.

திவ்வியநற்கருணை என்னும் தேவதிரவிய அநுமானத்தின் வழியாய் நாம் உட்கொள்ளும் நமது திவ்விய இரட்சகருடைய திருச்சரீரமும் இரத்தமும் முன்னமே பொறுக்கப்பட்ட நமது பாவங்களுக்குரிய அநித்திய ஆக்கினையை நிவாரணமாக்குவதுபோல, ஆசை நன்மை வாங்கும் முயற்சியும் அவ்வித நிவாரணத்தை வருவிக்கின்றது. அந்த நிவாரணம் நமது பத்தி சுறுசுறுப்பின் அளவுக்குத்தக்கது ஆகுமேதவிர மற்றப்படி பூரண நிவர்த்தியாகாது. (அர்ச். தோமையார்.)

இதன்றியே, யாதாமொரு கிறீஸ்தவன் தனக்குள்ள காரியஸ்திதியினாலாவது வேலை அவசரத்தினாலாவது அடிக்கடி திவ்விய விருந்துக்குப் பங்காளியாகக்கூடாதபோது, அதற்கு பதிலாய் ஆசை நன்மை வாங்கினால், அது சொல்லிமுடியாத பிரயோசனத்தையும் ஆச்சரியமான பிரதி நலத்தையும் விளைவிக்குமென்பதற்குச் சந்தேகமல்லை. இந்தச்

சுகிர்த முயற்சியை விசுவாசிகளுக்குள் பரம்பச் செய்வதற்கு மிகவும் ஆவலுள்ளவராயிருந்த அர்ச். லிகோரியார் இதன் பலனை மிகவும் புகழ்ந்து பாராட்டிப் போதித்து வந்தார். முத்திப்பேறுபெற்ற திருச்சிலுவை அருளம்மாளுக்கு நமது ஆண்டவர் ஒரு விசை திருவுளம்பற்றினதாவது: "நீ ஆசை நன்மை வாங்கும்போது நாம் உனக்குக் கட்டளையிடும் வரப்பிரசாதமானது, திவ்விய நற்கருணையை நீ உண்மையாய் உட்கொள்ளும் சமயத்தில் நீ பெற்றுக்கொள்ளும் வரப்பிரசாதத்துக்குக் கீழ்த்தரமானதல்லவென்று அறிந்துகொள்" என்றார். முத்திப்பேறுபெற்ற ஆன்சேலம்மாள் சொல்லிவந்ததாவது: "இப்பேர்ப்பட்ட ஆசை நன்மை முயற்சியை என் ஆத்தும குருவானவர் எனக்குப் படிப்பித்திராவிட்டால் நான் ஜீவித்திருந்திருக்க முடியாது" என்றாள்.

கடமையான அலுவல், குடும்பக் கவலை, வியாதி, கோவில் தூரம், முதலிய இப்பேர்ப்பட்ட பல விக்கினங்களினாலே திவ்விய சற்பிரசாதவிருந்துக்கு அநேகர் போகக்கூடாதிருப்பது சரியே. ஆகிலும் இவர்கள் இந்த ஆசை நன்மை முயற்சியை அனுசரிக்கப் பிரயாசப்படக்கடவார்கள். ஏனெனில் இவர்கள் திவ்விய கர்த்தருடைய திரு மாங்

இஷ்டத்தைச் சுகிக்கக் கூடாதிருந்தாலும், ஞானவிதமாயாவது தங்கள் முழு இருதயத்தை ஆண்டவரோடு ஒன்றித்து, திரளான வரப்பிரசாதங்களையும், ஞான மனோகரத்தையும் பெற்றுக்கொள்வார்களாமே.

இன்னமும் ஆசை நன்மையானது சோதனைகளை ஜெயிப்பதற்கும் துர்க்குணங்களை அடக்குவதற்கும் கைகண்ட பரம அவுழ்தமாம்.

அப்படியே நமது ஆசாபாசங்களை அடக்கி வெல்லும் வீண் நினைவுகளையும், மனரூபிகரத்திலுள்ள தொந்தரையான மாயா தோற்றங்களையும் வெருட்டி அகற்றிவிடும். எவ்விதப் புண்ணியங்களையும் செய்ய நல்ல மனதையும் உற்சாகத்தையும் உண்டாக்கும், விசுவாசத்துக்கு உயிர் கொடுக்கும், மனத்திடனை ஸ்திரப்படுத்தும், இடறி விழாதபடிக்கு ஊன்றுகோல்போல் உதவும், விக்கினங்களைத் தவிர்க்கும், கிறீஸ்துவனுக்குரிய நமது கடமைகளைச் சரிவர நிறைவேற்றத் துணையாய் நிற்கும். கடைசியாய் ஆசை நன்மையால் விளையும் மகா முக்கியமான பிரயோசனம் ஒன்று உண்டு. இதை யாவருங் கவனிக்கவேண்டியது. அது ஏதென்றால், திவ்வியநற்கருணை என்னுந் தேவதிரவிய

அநுமானத்தை நாம் பெற்றுக்கொள்ள இம்முயற்சி உத்தம ஆயத்தமாம்.

ஏனெனில், “நமது திவ்விய இரட்சகருடைய திரு மாங்கிஷ இரத்தத்தை உட்கொள்ளுதற்கு நமதாத்துமத்திலுள்ள ஆசை நேசத்தை அதிகரிக்கும்” என்று ஒரு மகாத்துமா எழுதிவைத்தார். இந்த ஆசை நன்மையானது, நமது திவ்விய இரட்சகருடைய இருதயத்தின் அற்புத நிரூபித ஸ்தாபகமென்று வேறொரு மகாத்துமா திருவுளம் பற்றினார். இப்படியிருக்க விசுவாசிகள் இதைச் சுகித்தனுபவியாமல் போவேனேன்?

இது யாவருக்கும் எளிதான முயற்சியாயிருக்க இதை அநேகர் அலட்சியஞ் செய்வானேன்?

இச்சுகிர்த முயற்சியின் சுளுவு.

இம்முயற்சியின் அநுசரணை எவ்வளவு சுளுவானதென்று கண்டுணர்ந்து சகல கிறீஸ்துவர்களும் இதை நாடோறுஞ் செய்ய உடன்படவேண்டும். ஏனெனில் இது ஒருவருக்கும் பாரமான வருத்தத்தை உண்டுபண்ணாது. புது நன்மைக்கு ஆயத்தம் செய்யும் பிள்ளைகளும், தேவ இஷ்டப்பிரசாதத்தில் நிலைபெற விரும்பும் வாலிபர்

களும், கோவிலைச் சந்தித்து நெடுநேரம் செபஞ்செய்ய ஆசைப்பட்டும் வேலையினிமித்தம் நேரமில்லையென்று கஸ்திப்படுகிறவர்களும், பத்தியுள்ள விசுவாசிகளும், திவ்ய கர்த்தருக்கு இடைவிடாத ஆராதனை செலுத்தவேண்டிய குருக்களும், சபை ஒழுங்கினிமித்தம் அடிக்கடி திவ்யநற்கருணை வாங்கக்கூடாதிருக்கிற சந்நியாசிமார் கன்னியாஸ்திரிமார்களும், பங்கு விசாரணைச் சுவாமிமார்களும், திவ்யநற்கருணை வாங்கக்கூடாத யாத்திரைசாலிகள், வியாதிஸ்தர் முதலியவர்களும், சுளுவான இந்தச்சுகிர்த முயற்சியை அனுசரித்து இதன் பலனைக் கைக்கொள்ளக்கடவார்கள்.

திவ்யநற்கருணை என்னுந் ·தேவதிரவிய அனுமானத்தை ஒருநாளைக்கு ஒருவிசை மாத்திரம் கொடுக்கக்கூடும். அதையுங் குருவானவர் மாத்திரம் வாங்கக்கூடும். ஆசை நன்மையையோ, ஒருநாளைக்கு எத்தனைவிசை வேண்டுமோ அத்தனை விசையும் வாங்கலாம். இதற்குக் குருவானவருடைய உதவி வேண்டியதில்லை. ஒருவரும் இதற்குத் தடைபண்ணமாட்டார்கள், தடைபண்ணவுங்கூடாது.

முத்திப்பேறுபெற்ற சிலுவை அருளம்மாள் சொல்லுகிறதாவது :

“என் திவ்விய இரட்சகரே! இவ்விதமாய்த் தேவரீரை உட்கொள்ளுவது எவ்வளவோ மனரம்மியமான முயற்சி. ஒருவனுடைய கண் கவர்ச்சிக்கும் ஏதுவாகாமல், என் ஆத்தும குருவுக்கு முதலாய்த் தொந்தரவு வருவியாமல் நான் இந்த முயற்சியை அனுசரிக்கலாம். எனக்கு ஆதாரமாகிய தேவரீர்தானே ஏகாந்தத்தில் எனக்கு ஒழிவனந்தந்து என் ஆத்துமத்தோடே பேசுகிறீர்” என்றாள்.

ஆராதனைக்குரிய தேவதிரவிய அனுமானத்தின் வழியாய்த் திவ்விய கர்த்தரை வாங்குதற்கு வேலையைவிட்டு விலகவேண்டும், கோவிலுக்குப் போகவேணும், கொஞ்சநேரம் ஆயத்தம் செய்யவேணும். ஆனால் ஆசை நன்மை வாங்க இந்தத் தொந்தரவெல்லாம் வேண்டியதில்லை. நாடோடிய வேலை நடக்கும்போதே, இரவிலும் பகலிலும் ஏகாந்தத்திலும் கூட்டச் சச்சரவிலும் வீட்டிலும் வழியிலும் எப்பொழுதும் எவ்விடத்திலும் இந்த முயற்சியை யாவருஞ் செய்யலாம்.

இதன்றியே திவ்யநற்கருணை என்னும் தேவதிரவிய அனுமானத்தைப் பெற்றுக்கொள்ளச் சற்றுநேரம் பசி பொறுத்திருக்கவேணும். சுத்தமான வஸ்திரம் உடுத்திருக்கவேணும். ஆனால் ஆசை நன்மைக்கு

இதுவெல்லாம் வேண்டியதில்லை. ஆகையால் இந்தச் சுகிர்த முயற்சியை அனுசரிக்கக் கூடாத நாளுமில்லை, மணியுமில்லை. எந்த நாளும், மணியும் சரி, சலிப்பு அல்லது சந்தோஷம், மன அமரிக்கை அல்லது மனக் கலக்கம், மனவறட்சி அல்லது மனப்பற்றுதல் முதலிய எந்த ஸ்திதியுஞ் சரி. இந்தச் சுகிர்த முயற்சியானது நமதாத்துமத்துக்கு இனிய மனோகர ஊறணியுமாய் ஒப்பற்ற அநுகூலம் அடங்கிய உதவியுமாயிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை.

ஆசை நன்மை வாங்கும் வகை.

ஆசை நன்மை வாங்குவதற்கு விசேஷித்த வகை யாதொன்றும் இல்லையாயினும், திவ்விய கர்த்தர்பேரில் வைத்த சிநேக மிகுதியால் இருதயத்தில் நின்று சுயமாய் உண்டாகும் வகையே உத்தமமான வகையாம். ஆராதனைக்குரிய திவ்விய சற்பிரசாதத்தில் வீற்றிருக்கும் ஆண்டவரை உட்கொள்ள வேணுமென்கிற ஆசையோடே ஆத்துமமானது திருப்பேழையை நோக்கிப்பார்த்து வெளிப்படுத்தும் நேசப்பற்றுதல் ஒன்றே போதுமானதாம். வேறே விசேஷ செபம் வேண்டியதில்லை. இது விஷயத்தில் ஒவ்வொருவரும் தங்களிருதய ஏவுதலை அனுசரிக்கக்கூடுவார்கள்.

ஆகிலும் இதற்கொருவித வாய்ப்பாடு வேணுமென்று ஆசைப்படுகிறவர்களுக்கு உதவியாக அர்ச். அல்போன்ஸ் லிகோரியார் எழுதிவைத்த வகையைச் சொல்லித்தருவோம். அதாவது: "என்னாண்டவரும் இரட்சகருமாகிய சேசுவே! திவ்விய சற்பிரசாதத்தில் தேவரீர் மெய்யாகவே பிரசன்னராய் இருக்கிறீரென்று விசுவசிக்கிறேன். என் முழு இருதயத்தோடே தேவரீரை நேசிக்கிறேன். தேவரீரை உட்கொள்ள ஆசையாயிருக்கிறேன். என்னிருதயத்தில் எழுந்தருளிவாரும். என்னை முழுதும் தேவரீரோடே ஐக்கியப்படுத்திவிடுகிறேன். உம்மைவிட்டு என்னைப் பிரியவொட்டாதேயும் சுவாமி." (அல்லது இன்னஞ் சுருக்கமாக), என்னாண்டவராகிய சேசுவே! என்னிருதயத்தில் எழுந்தருளிவாரும். தேவரீரை உட்கொள்ளவும், தேவரீரோடே ஒன்றித்திருக்கவும் ஆசைப்படுகிறேன். சர்வநன்மைச் சுரூபியான என்னாண்டவரே! என் சர்வேசுரா! நான் எப்போதும் உம்மோடே ஒன்றித்திருக்கச் செய்தருளும்." ஆமென் சேசு.

(இதன்பின் திவ்விய கர்த்தருக்கு ஆராதனை நன்றியறிந்த தோத்திரம் செய்து உனக்கு வேண்டிய வரப்பிரசாதங்களைக் கேட்பாயாக.)

திருப் பந்தியிலிருந்து திவ்விய சற்பிரசாதத்தை அடிக்கடி உட்கொள்ளுவோமாக; இதன்றியே வீட்டிலிருக்கும்போதே இன்னம் அடிக்கடி அத்திரு விருந்தை உட்கொள்ளுவோமாக. இப்பேர்ப்பட்ட பத்தி சுறுசுறுப்பினால் ஆண்டவருடைய திருவாய்மொழிகளைக் கேட்கப் பாத்திரவான்களாவோம். அவையாவன: “திவ்விய சற்பிரசாதத் தேவதிரவிய அநுமானத்தை உட்கொள்ளும் உன் சுகிர்த கிரியையை ஒரு பொற் பாத்திரத்திலும், உன் ஆசை நன்மை முயற்சியை ஒரு வெள்ளிப் பாத்திரத்திலும் சேர்த்து வைக்கிறோம்” என்று ஒரு புண்ணியாத்துமத்துக்கு அவர் திருவுளம்பற்றினாராமே.

ஆசை நன்மை முயற்சி.

என் சேசுவே! தேவரீர் மகாப்பரிசுத்த பரம திவ்விய நற்கருணையில் மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறீரென்று உறுதியாக விசுவசிக்கிறேன். அடியேன் தேவரீரைச் சகலத்துக்கு மேலாகச் சிநேகிக்கிறேன்; தேவரீரை என் இருதயத்தில் உட்கொள்ள ஆசையாயிருக்கிறேன். ஆயினும், தேவரீரை இச்சமயம் திவ்விய நற்கருணை வழியாக உட்கொள்ளக் கூடாதவனாயிருக்கிறபடியால்,

ஞானவிதமாயாவது தேவரீர் என் இருதயத்தில் எழுந்தருளிவாரும். தேவரீர் ஏற்கனவே என் இருதயத்தில் எழுந்தருளி வந்திருக்கிறது போல, உமது திருப்பாதத்தைக் கட்டி அணைத்துக்கொள்ளுகிறேன். என்னை உம்மைவிட்டு ஒருபோதும் பிரியவொட்டாதேயும்.

வேறுவித ஆசைநன்மை முயற்சி.

(முத். லெயோனார்து உண்டாக்கினது.)

என் பிரியசேசுவே, தாழ்மையுள்ள என் இருதயத்தில் எழுந்தருளிவந்து என் ஆசையை சம்பூரணமாக்கியருளும். என் ஆத்துமத்தை அர்ச்சிக்க வாரும். மகாமதுரம் பொருந்திய சேசுவே, உமது அன்பு நிறைந்த இருதயத்தினால் என் தாழ்மையுள்ள இருதயத்தில் எழுந்தருளிவந்து அதை உமது சொந்தப் பொருளாகக் கையேற்றுக்கொள்ளும்.

முத். மார்கரீத் மரியம்மாள் உண்டுபண்ணின ஆசை நன்மை முயற்சி.

நித்திய பிதாவே, என் புத்தியானது தேவரீரையன்றி வேறொன்றையும் அறியக் கற்றுக்கொள்ளாதபடி அதை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். என் மதுர சேசுவே, என்

ஞாபகம் உம்மைமாத்திரமே நினைவுகூரும்படி அதை உமக்குக் காணிக்கையாகக் கையளிக்கிறேன். சிநேகத்துக்கு இருப்பிடமான திவ்விய இஸ்பிரீத்து சாந்துவே, தேவரீர் என் மனதில் அனலைமூட்டி, உமது திவ்விய சிநேகத்தால் அதை எரியப்பண்ணியருளும்; உமது ஏழு ஞானவரங்களாலும் என் ஆத்துமத்தை யலங்கரித்து, என்னை உமது பரிசுத்த ஆலயமாகச் செய்தருளும். உமது வரப்பிரசாதங்களால் என்னை நிரப்பி, என் ஆத்துமம் ஆண்டவரை ஞானவிதமாய் உட்கொள்ள அதை ஆயத்தப்படுத்தியருளும்.

என் திவ்விய சேசுவே, என் பாவங்களினிமித்தம் என் இருதயத்தில் தேவரீரை உட்கொள்ள நான் அபாத்திரவாளாயிருக்கிறபடியால், என்னை உமது திவ்விய இருதயத்திற்குள் ஏற்றுக்கொண்டு ஒரு நிமிஷமாகிலும் நான் அதைவிட்டுப் பிரியாதபடி, என்னைப் பூரணமாய் உம்மோடு ஐக்கியப்படுத்தியருளும். என் நிர்ப்பாக்கியத்தையும் நீசத்தன்மையையும் உமது இரக்கப் பெருக்கத்தில் மூழ்கடித்து, நான் இதுமுதல் உம்மாலும், உம்மிடத்திலும், உமது சிநேகத்தைப்பற்றியுமே ஜீவித்திருக்கும்படி என்னைமுழுதும் உம்மோடு ஒரே பொருளாய் ஒன்றுபடுத்தியருளும். எனக்குப் பூரண திருப்தியைக்

கொடுக்கிற ஏக கர்த்தாவாகிய நீர், என்னிடத்தில் எழுந்தருளிவந்து, உமக்கு முழுதும் சொந்தமாயிருக்கிறதும், உம்மை விட்டு ஒரு நிமிஷமும் பிரிந்திருக்கக் கூடாததுமான என் இருதயத்தை உமது கைவசமாக்கியருளும்.

ஆண்டவரே, தேவரீர் ஞானவிதமாய் என் ஆத்துமத்துக்குள் எழுந்தருளி வந்ததற்காக உமக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்துகிறேன். தேவரீர் என்னிடத்தில் நிறைவேற்ற மனதாயிருக்கிற யாவற்றையும் செய்து முடிக்கும்படி என்னை முழுதும் தேவரீருக்குக் கையளித்துவிடுகிறேன். என்னிடத்திலுள்ள சுயபட்சத்தை நிர்மூலமாக்கி, என்னுள் எழும்பும் அகங்கார கர்வத்தைத் தாழ்த்தி, உமக்கு எதிர்த்துநிற்கும் எவ்வித துர்க்குணங்களையும் தகர்த்து நாசமாக்கியருளும். ஆமென்சேசு.

திவ்விய சற்பிரசாதம்.

திவ்விய சற்பிரசாதச் சன்னிதியில் காலமணித் தியானம்.

சேசுநாதர்: "ஆத்துமமே, நீ நமக்குப் பிரியப்படத்தக்கதாக அநேக காரியங்களை அறிந்திருப்பது அவசரமல்ல. நம்மை உருக்கமாய்ச் சிநேகிப்பதே போதும். உன் பிரிய

சிநேகிதனோடே சம்பாஷிப்பதுபோல இப்
போது நம்மோடே பேசுவாயாக.
யாரைப்பற்றியாவது நம்மிடத்தில் மனுப்
பேசவேண்டியதுண்டா? உன் உற்றார்,
உறமுறையார், சகோதரர், சகோதரிகளு
டைய பேரென்ன?...அவர்களில் ஒவ்வொரு
வருக்கும் நாம் என்ன செய்யவேணுமென்
கிறாய்?...அவர்களுக்கு வேண்டிய காரியங்
களையெல்லாம் நம்மிடத்தில் கேள். ஏனென்
றால் தங்கள் சுயநலத்தைத்தானே மறந்து
பிறத்தியாருடைய நன்மையை நாடியிருக்கிற
தயாள சற்குணமுள்ள ஆத்துமங்கள் நமக்கு
மிகவும் பிரியம்...எந்த ஏழைக்கு நாம் இரக்
கஞ்செய்ய வேணுமென்கிறாய்? அங்கே ஒரு
வியாதிஸ்தன் மிகவுந் துன்பப்படுகிறதாக
நீ பார்த்தாயே, அவனார்? எந்தப் பாவியின்
மனது திரும்பவேணுமென்று கேட்கிறாய்?...
யாரோடே சிலகாலம் மனஸ்தாபமாய் இருந்
தபின், இப்போது நீ சமாதானமாய்ப் போக
வேணுமென்கிறாய்?...அவர்களுக்காக இப்
போது சற்றுநேரம் பத்தியோடே வேண்
டிக்கொள்...இருதயப்பற்றுதலோடே செபி
க்கப்படும் ஜெபங்களையெல்லாம் கேட்டரு
ளுவோமென்று நாம் வாக்குறுதியாகத் திரு
வுளம் பற்றியிருக்கிறோமே. அப்படியே
சிநேகிதர் ஒருவரொருவருக்காக ஒப்புக்

கொடுக்கிற ஜெபம், இருதய உருக்கம் அமை
ந்த ஜெபமல்லவா? இதற்கு நாம் இரங்கா
திருப்போமா?

உனக்காக ஏதாவது நன்மை வரப்பிர
சாதம் நீ கேட்கவேண்டியதில்லையா?...உன
க்குப் பிரியமானால் உன் ஆத்துமத்திலுள்ள
குறைகளையெல்லாம் எழுதிக்கொண்டுவந்து
நமது சமுகத்தில் வாசித்துக்காட்டு...ஆசா
பாசம், அகந்தை, பொருளாசை, சுயபட்சம்,
கோழைத்தனம், சோம்பல் முதலிய துர்க்
குணங்கள்மட்டில் நீ எவ்வளவு மனச்சார்
புள்ளவனாய் இருக்கிறாய்?...இந்தத் துர்க்
குணங்களையெல்லாம் நீ ஜெயித்தடக்கத்தக்
கதாக, நாம் உன்னிடத்தில் எழுந்தருளி
வந்து உனக்கு உதவி செய்யவேணுமென்று
மன்றாடக்கடவாய்...நிர்ப்பாக்கியமான ஆத்
துமமே, வெட்கப்படாதே; ஏனென்றால்
முதலில் இப்பேர்ப்பட்ட துர்க்குணங்களுக்
குள்ளாயிருந்த அநேகர் உருக்கமாய் மன்றா
டிக் கேட்டுக்கொண்டபடியால், நமது உதவி
யைக்கொண்டு அவர்கள் அந்தக் குற்றங்
களைக் கொஞ்சங் கொஞ்சமாய் ஜெயித்து
ஜெயசீலராகி, இப்போது முத்தி முடிதரித்த
அர்ச்சியசிஷ்டவர்களாக மோக்ஷ பேரின்பத்
தில் விளங்கி வீற்றிருக்கிறார்கள். புத்தி,
ஞாபகம், தேர்ச்சி, க்ஷேமம் முதலிய பிர

பஞ்ச நன்மைகளையும் நம்மிடத்தில் கேட்க
நீ கூச்சப்படாதே. அவைகளையெல்லாம்
நாம் கொடுக்கச் சித்தமாயிருக்கிறோம்.
அவைகளால் உன் ஆத்துமம் அதிக பரிசுத்த
மாகக் கூடுமானால் அவைகளை உனக்குக் கட்
டளையிட்டருளுவோம். ஆத்துமமே, இன்
றைக்கு உனக்கு என்னென்ன வேணும்...
உனக்கு நன்மை செய்ய நாம் எவ்வளவோ
ஆசைப்படுகிறோம்!...

உனக்கு ஓயாத கவலையை உண்டுபண்ணு
கிற அலுவல் ஏதாவது உண்டா? அதை நம
க்கு விபரமாய்ச் சொல்...அந்த அலுவலைப்
பற்றி நீ என்ன நினைக்கிறாய்?...அதில் என்
னென்ன பிரயோஜனம் வருமென்று நம்பி
யிருக்கிறாய்?...உன் உற்றார், உறமுறையார்,
பெற்றார், பெரியோருக்குப் பிரியப்படுகிற
தற்காக அதைச் செய்கிறாய்?...அதினால்
அவர்களுக்கு என்ன நன்மை செய்யலா
மென்று எண்ணியிருக்கிறாய்? நமக்காக நீ
ஏதாகிலும் செய்யமாட்டாயா? உன் உற
முறையார் சிநேகிதர் நம்மை மறந்துபோகி
றார்களே! அவர்களுடைய ஆத்துமங்களுக்கு
வேண்டிய நன்மை செய்ய உனக்கு மனசில்
லையா? . எந்த விஷயத்தில் அதிக அக்கறை
யாய் அல்லது கரிசனத்தோடே உழைத்து
வேலைசெய்கிறாய்? எந்தெந்த முகாந்தரத்

தைப்பற்றி நீ அதிலே ஓயாத சிந்தனையா
யிருக்கிறாய்? அதற்காக நீ பிரயோகித்துக்
கொள்ள நினைக்கும் உபாயங்கள் என்ன?
உனது க்ஷேமாதிக்ஷேமம், சலிப்புச் சஞ்சலங்
களையும் நமக்குச் சொல்லிக்காட்டு. அவற்
றின் காரணத்தை உனக்கு விளக்கிக் காண்
பிப்போம். உன் ஏற்பாடு பிரயத்தனங்களில்
யாராருடைய உதவியை நீ கோரியிருக்கி
றாய்?...சகல இருதயங்களுக்கும் எஜமான்
நாம் அல்லவா? நமது இஷ்டம்போல் அவை
களைப் படிப்படியாய் இளக்கி வசப்படுத்து
வோம். உன் கோரிக்கை பிரயத்தனங்களு
க்கு உதவியான பேர்வழிகளை உன் கிட்டக்
கொண்டுவந்துவிடுவோம்.

ஆத்துமமே! உனக்கு ஏதாவது தொல்லை
தொந்தரவுகள் உண்டா? அதன் விபரத்தை
நமக்கு வெளிப்படுத்து. நீ ஏன் சலிப்பாய்
இருக்கிறாய்?...உனக்கு கஸ்தி வருவித்த
தார்?...உன்னை நிந்தித்து அவமானப்படுத்
தினதார்?...உன் அகந்தையைக் குத்திக்
காயப்படுத்தினதார்? அப்படிப்பட்டவர்
கள் எல்லாருக்கும் நீ பொறுத்தல் கொடுக்
கிறாயென்றும், அந்தக் குறைகளை முழுதும்
மறந்துவிடுவாயென்றும் உறுதியாய்ச் சொல்
லி அவர்களுக்காக வேண்டிக்கொள். நாமும்
உன்னை ஆசீர்வதிப்போம். உனக்கு கலக்கம்

வருவிக்கிற தந்திர சோதனைகள் ஏதாவது
உண்டா? காரணமில்லாத பயம் சிலவேளை
உன் இருதயத்தைக் கலக்கடிக்கிறதாக்கும்...
ஆத்துமமே, பயப்படாதே. நமதுபேரில்
நம்பிக்கையாயிரு...நாம் உன்னிருதயத்தில்
வாசம் பண்ணுகிறோம். அங்கே நடக்கிற
விசேஷங்களையெல்லாம் நாம் அறிந்திருக்கி
றோம். நாம் உனக்கு உதவி செய்வோம்.
தைரியமாயிரு...உன் சிநேகிதரென்று வெ
றும்பேர் படைத்து இச்சகம் பேசி உனக்கு
வஞ்சனை செய்கிறவர்களுண்டா?...அவர்
களுக்காகவும் வேண்டிக்கொள். உன் மன
ஆறுதலுக்கு அவசரமாகில் அவர்கள் மன
சைத் திருப்பி எதார்த்தவாதிகளாக்குவோம்.
நமக்குச் சொல்லத்தகும் சந்தோஷ
விசேஷம் ஒன்றுமில்லையா?...உன்னோடே
நாமும் மகிழத்தக்கதாக அந்த விசேஷங்
களை நமக்குச் சொல்லலாகாதா? நேற்றை
யத்தினமுதல் உனக்கு நேரிட்ட சந்தோஷ
விசேஷங்களை நமக்கு வெளிப்படுத்து. நீ
நினையாத சமயத்தில் உன்னைச் சந்திக்கவந்த
ஒரு சிநேகிதரால் நீ அடைந்த சந்தோஷமும்,
உனக்கிருந்த அச்சம் சலிப்புகள் நீங்கி ஆறு
தலுண்டான அகமகிழ்ச்சியும், சிநேக மேனா
யாய் உனக்குக் கிடைத்த கடிதமும், சந்திப்
புச் சாமான்களால்வந்த அக்களிப்பும், இவை

களெல்லாம் நம்மாலேதான் உனக்கு அனுப்பப்பட்டன. ஆத்துமமே! இவைகளுக்காக ஏன் நீ நன்றியறிதல் காண்பிக்கிறதில்லை? "சுவாமி, நன்றியறிந்திருக்கிறேன், உமது திருநாமம் வாழ்த்தப்படக்கடவது" என்று ஏன் சொல்லுகிறதில்லை? நன்றியறிதல் அதிகமான நன்மையை விளைவிக்குமே. .உபகாரம் மறக்கப்படாதிருப்பதைக் காண்பது உபகாரிக்கு அதிக உதாரகுணத்தை வருவிக்குமல்லவா?...

நமக்கு நீ செய்ய விரும்பும் வாக்குத்தத்தங்கள் ஏதாவது உண்டா? உன் இருதய அந்தரங்கமெல்லாம் நமக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது... பிறரை நீ ஏய்த்துப் போட்டாலும், உன் ஆண்டவராகிய நம்மை ஏய்க்கமுடியாது. ஆகையால், ஆத்துமமே! உண்மை எதார்த்தத்துடன் நமது சமுகத்தில் சஞ்சரிப்பாயாக...அந்தந்தப் பாவ சமயத்தை விலக்கிவிட தீர்மானித்திருக்கிறாயா?...உன் ஆத்துமத்துக்குப் பொல்லாப்பாயிருக்கிற அந்தப் பொருளை விட்டுவிடுவாயா?...உன் மன ரூபிகரத்தை வீணாய்க் குளப்பிக்கொண்டிருக்கிற அந்தக் கெட்டப் புத்தகத்தை இனி வாசியாமல் தள்ளிப் போடுவாயா? உன் ஆத்தும சமாதானத்துக்கு விக்கினமாயிருக்கிற இன்னின்னாரு

டைய சகவாசத்தை விட்டுவிடுவாயா?... உனக்குப் பொல்லாப்புச் செய்தவர்களுக்கு எப்படித் தயை சாந்தகுணம் காண்பிக்க வேணுமென்று நம்மிடத்தில் கற்றறிந்துகொள்.

ஆத்துமமே, உனக்கு ஆசீர்வாதம். இப்போது நீ போய் உன் வேலைகளைச் செய். ஒழுங்குபோல் மௌனமாயிரு. அடக்க ஒடுக்கமாயிரு. கீழ்ப்படிதல் உள்ளவனாயிரு. பிறர்நேசமுள்ளவனாயிரு...அமலோற்பவ மாதாவை அதிமிக அன்போடு நேசித்திரு. நாளைக்கு திரும்பவா. வரும்போது உன்னிருதயம் அதிகப் பத்தி பற்றுதல் அமைந்ததாய் இருக்கும்படி பார்த்துக்கொள். இனி உன்னிருதயம் நன்மையில் சார்ந்ததுமாய், நன்மைசெய்ய அதிக உறுதியான தீர்மானமுள்ளதுமாயிருக்கவேண்டும். நாளைக்குச் சில புது வரப்பிரசாதங்களையும் நன்மைகளையும் உனக்குக் கட்டளையிடச் சித்தமாயிருக்கிறோம்.

(குறிப்பு)...புள்ளியிட்ட இடங்களில் சற்று நேரம் நின்று அவ்விடத்துக்குரிய மன உச்சாரணம் செய்யவேண்டும்.

திவ்விய சற்பிரசாதச் சன்னிதியில் காலைச் செபம்.

ஓ! அதியுன்னத மதுரம் பொருந்திய
சேசுவே! அடியேன் உமது கிருபாசனத்
தண்டையில் இப்படி திரும்ப வந்து சேரு
மளவும், இந்நேரமட்டும், இருண்ட இந்த
இராநேரமுழுதும், எனக்காகப் பொறுமை
யாய்க் காத்திருந்தீரோ! என் அன்புக்குரிய
சேசுவே! இப்போது இதோ நான் உமது
சன்னிதியில் வந்து சேர்ந்தேன். கடந்த
இராநேர முழுதும் தேவரீர் எனக்காகக் காத்
திருந்ததும் போதாமல், இந்நாள் ஜீவியத்
தையும் எனக்குக் கட்டளையிட்டு உமது
தோத்திரத்துக்காகவும் என் ஆத்தும இர
க்ஷணியத்துக்காகவும் உழைத்து பேறுபல
னைச் சம்பாதிக்க ஆயுசைத் தந்தருளினீர்.
இப்பேர்ப்பட்ட நன்மைகளுக்காக நான்
என் முழு இருதய நன்றியறிதலோடே தேவ
ரீருடைய திருப்பாதத்தில் ஓடிவந்து என்னை
முழுதும் தேவரீருக்குக் காணிக்கையாக
ஒப்புக்கொடுக்கிறேன். இன்று தாழ்ச்சி
சிரவணமுள்ளவனாகவும், சின்னஞ் சிறுவர்க்
குரிய கபடற்றதனமுள்ளவனாகவும் என்
னைப் புதுப்பித்து உமது திருச் சித்தத்துக்கு
முழுதும் அமைந்து நடக்க வரப்பிரசாதம்
தந்தருளும். கடைசியாய் உம்மை உண்மை

உருக்கமாய்ச் சிநேகித்துச் சேவிக்கிறவர்க
ளுக்குத் தேவரீர்தாமே வார்த்தைப்பாடு
கொடுத்திருக்கிற நித்திய சம்பாவனைக்கு
அடியேனும் பாத்திரவானாகத் தயை செய்
தருளும் சுவாமி. ஆமென்சேசு.

திவ்விய சற்பிரசாதச் சன்னிதியில் மாலைச் செபம்.

திவ்விய சேசுவே, தெரிசிப்போரின்றியும்,
பூசிப்போரின்றியும் எத்தனையோ திருப்
பேழைகளில் இராமுழுதும் தனிவாசமானீர்.
அன்பு அமைந்த என் இருதயத்தை தேவரீ
ருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். அதின் ஒவ்
வொரு அசைவு ஆட்டமும் தேவரீரை நோக்
கிய சிநேகப் பிரார்த்தனையாயிருக்கக்கட
வது. திவ்விய சற்பிரசாதத்தில் மறைந்
திருந்து எங்களுக்காகத் தேவரீர் எப்பொழு
தும் விழித்துக் காத்துக்கொண்டிருக்கிறீர்.
தேவரீர் உமது நேசப்பெருக்கத்தால் ஒரு
பொழுதும் சோர்ந்து அயர்ந்துபோவதமில்
லையே. பாவிகளுக்காகக் காத்துக்கொண்
டிருக்கும் அலுவலில் தேவரீர் ஒருபொழு
தும் சலிப்பதுமில்லையே.

அன்புக்குரிய சேசுவே! தனிவாசமாகிய
ஆண்டவரே! என் இருதயம் தேவரீருக்காக

சுடர்விட்டெரியும் ஓர் தீபமாகக்கடவது. திவ்வியநற்கருணையில் வீற்றிருக்கும் காவல் தீரனே, எங்கள் க்ஷேம லாபத்தினிமித்தம் விழித்திருக்கலானீர்.

திவ்விய சற்பிரசாதத்தில் வீற்றிருக்கும் சேசுவின் திரு இருதயத்தை நோக்கிச் செபம்.

என் அன்புக்குரிய சேசுவே, உமது நிகரற்ற சிநேகமானது உம்மை எம்மாத்திரம் அணைகடந்த விதமாய் மாற்றிவிட்டதென்று பாரும். உம்மை முழுதும் எனக்குக் கொடுக்கும்படியாக, உமது சரீரத்தையும் இரத்தத்தையுங்கொண்டே எனக்கு ஓர் விருந்தை ஆயத்தஞ் செய்திருக்கிறீர். என்னை இம்மாத்திரம் அணைகடந்தவிதமாய் நேசிக்கும்படி உம்மை ஏவித்தூண்டினதென்ன? அது உமதன்புநிறைந்த இருதயமேயன்றி வேறல்லவே. தேவ சிநேகம் சுவாலித்தெரியும் என் சேசுவின் ஆராதனைக்குரிய இருதயமே, உமது மகாப் பரிசுத்த காயத்துக்குள் என் ஆத்துமத்தை வரவிட்டு, தமது சிநேகத்தைக் காண்பிக்கும் பொருட்டு இவ்வளவு ஆச்சரியத்துக்குரிய அத்தாட்சிகளைக் கொடுத்திருக்கிற ஆண்டவருடைய சிநேகத்

துக்குத் தகுந்த கைம்மாறு அளிக்கும்படி நான் அந்தச் சிநேகப் பள்ளியில் கற்றுக் கொள்ளும்படி செய்வாயாக. ஆமென்சேசு.

(தினம் ஒரு முறை 100-நாட் பலன்.)

திவ்வியநற்கருணைக்குச் சுருக்கமான செபங்கள்.

ஓ! மிகவும் பரிசுத்த தேவதிரவிய அநுமானமே! உமக்கு எந்நேரமும் முடிவில்லாத தோத்திரமும் நன்றியறிதலும் செலுத்தப்படுவதாக. (100-நாட் பலன். மாதமொருமுறை பரிபூரண பலன்.)

நித்திய பிதாவே, என் பாவங்களுக்குப் பரிகாரமாகவும், உமது திருச்சபையின் நன்மைக்காகவும், சேசுக்கிறீஸ்துவின் விலைமதியாத திரு இரத்தத்தை உமக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன். (100-நாட் பலன்.)

திவ்விய சற்பிரசாதத்தில் எழுந்தருளியிருக்கும் சேசுவின் திரு இருதயமானது, பூமியெங்குமுள்ள திவ்வியநற்கருணைப் பெட்டிகளிலும் சதாகாலமும் இடைவிடாமல் ஸ்துதித்து, ஆராதித்து, நன்றியறிதலோடு நேசிக்கப்படக்கடவது. ஆமென்சேசு.

(தினமொன்றுக்கு 100-நாட் பலன்.)

திவ்வியநற்கருணையைச் சந்திக்கச் செபம்.

(அர்ச். அல்போன்ஸ் லிகோரியார் உண்டாக்கினது.)

நிகரில்லாத பரம அன்பின் மிகுதியினால்
இந்தத் திவ்வியசற்பிரசாதத்தில் இரவும் பக
லும் வீற்றிருந்து, இரக்கமும் நேசமும் நிறைந்
தவராய் உம்மைச் சந்திக்க வருகிறவர்களுக்
காக ஆவலோடு எதிர்பார்த்திருந்து அவர்
களைப் பட்சத்தோடு ஏற்றுக்கொள்ளுகிற
என் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரே,
தேவரீர் இந்தப் பலிபீடத்தின்மீது உண்மை
யாகவே எழுந்தருளியிருக்கிறீரென்று உறுதி
யாக விசுவசிக்கிறேன். என் நீசத்தனமா
கிய பாதாளத்தினின்று உம்மை நோக்கி
ஆராதிக்கிறேன். தேவரீர் எனக்குச் செய்
தருளிய சகல உபகாரங்களுக்காகவும், விசே
ஷமாய் இத்திவ்விய விருந்தில் உம்மையே
எனக்குப் போசனமாகத் தந்து, உமது மிக
வும் பரிசுத்த தாயாரை எனக்குச் சிபாரிசுக்
காரியாகக் கட்டளையிட்டதற்காகவும், இப்
போது உம்மைச் சந்திக்கும்படி என்னை வர
வழைத்ததற்காகவும், உமக்கு நன்றியறிந்த
தோத்திரஞ் செலுத்துகிறேன். இந்த மகத்
தான நன்மைக்கு நன்றியறிதலாகவும், இந்
தத் தேவதிரவிய அநுமானத்தில் உமது
விரோதிகளால் உமக்குச் செய்யப்பட்ட

சகல நிந்தை அவமானங்களுக்குப் பரிகார
மாகவும், இந்தப் பரிசுத்த தேவதிரவிய
அநுமானத்தில் தேவரீர் மிகவும் அற்பமாய்ச்
சங்கித்து அசட்டை செய்யப்படுகிற இடங்
களிலெல்லாம் உம்மை ஆராதிக்கவும், ஆகிய
இந்த மூன்று முகாந்தரங்களுக்காகவும்
இன்று உம்மை வணங்கி நமஸ்கரிக்கிறேன்.

என் சேசுவே, என் முழு இருதயத்தோடு
உம்மைச் சிநேகிக்கிறேன். இதுவரையில்
உமது நிகரற்ற நன்மைத்தனத்துக்கு விரோ
தமாய் நான் கட்டிக்கொண்ட துரோகங்களை
நினைத்து மனஸ்தாபப்படுகிறேன். உமது வர
ப்பிரசாதத்தின் உதவியைக்கொண்டு இனி
ஒருபோதும் உமக்குத் துரோகஞ் செய்வ
தில்லையென்று பிரதிக்கினை பண்ணுகிறேன்.
நான் ஒரு நீச வஸ்துவாயிருந்தாலும் என்னை
முழுதும் இப்போது உமக்குக் காணிக்கை
யாக ஒப்புக்கொடுக்கிறேன். என் முழு மன
தையும், என் ஆசைப்பற்றுதல்களையும், என
க்குள்ள யாவற்றையும் உமக்குக் கையளிக்
கிறேன். இந்நாள் முதற்கொண்டு என்னை
யும் எனக்குள்ளதெல்லாவற்றையும் உமக்
கிஷ்டமானபடி நடத்தியருளும். உமது திவ்
விய சிநேகத்தையும், நிலைமை என்கிற வரத்
தையும், உமது திருச் சித்தத்தைப் பூரண
மாய் நிறைவேற்ற உதவியையும் மாத்திரமே

உம்மிடத்தில் இரந்து கேட்கிறேன். உத்தரிக்கிற ஸ்தலத்திலிருக்கிற ஆத்துமாக்களையும், விசேஷமாய் திவ்வியநற்கருணையின்பேரிலும் மிகவும் பரிசுத்த கன்னிமரியாயின்பேரிலும் பத்தியாயிருந்து மரணமடைந்த ஆத்துமாக்களையும் நிர்ப்பாக்கியரான சகல பாவிகளையும் உமது கிருபாகடாட்சத்தினால் நோக்கியருளவேண்டுமென்று உமது தயாள இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுகிறேன்.

கடைசியாய் என் அன்புக்குரிய இரட்சகரே, என்னுடைய ஆசைப் பற்றுதல்களையெல்லாம் உமது மிகவும் நேசத்துக்குரிய திரு இருதயத்தின் விருப்பப் பற்றுதல்களோடு ஒன்றித்து வைக்கிறேன். இப்படி ஒன்றிக்கப்பட்ட என் விருப்பப் பற்றுதல்களை உமது நித்திய பிதாவுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்து, அவர் உமதுபேராலும் உம்மைக் குறித்தும் அவைகளைக் கையேற்றுக்கொள்ளும்படி அவரை மன்றாடுகிறேன்.

திவ்விய சற்பிரசாதக் காதல்.

1. ஓ! மதுரம்பொருந்திய சேசுவே, தேவரீருடைய திருப்பீடத்திற்கு முன் என் இரு

தயம் நேசச் சுடர்விட்டெரியும் ஓர் தீபமாகக்கடவது.

2. ஓ! மிகவும் பிரிய சேசுவே, நான் உம்மை முகமுகமாய்க் கண்டு தெரிசித்து சதாகாலத்திற்கும் உமது மடியிலிருந்து இளைப்பாறுவதெப்போ?

3. மிகவும் ஆசை நேசம் அமைந்த ஆண்டவரே, உமது அன்பின் தேவதிரவிய அறுமானச் சங்கிலியால் என்னைப் பந்தனமாக்கியருளும்.

4. மாடப்புறாவின் இறக்கைகள் எனக்கு இருக்குமாகில் ஓ எவ்வளவு சந்தோஷமாய் நான் பறந்தோடிச்சென்று என் சேசுவின் திரு இருதயத்தில் சதாகாலத்திற்கும் இளைப்பாறுவேன்.

5. நேச சங்கிலியால் பந்தனமாகிச் சிறைப்பட்டிருக்கும் திவ்விய சேசுவே, நிற்பாக்கியமான என் இருதயத்தை உமது திருப்பீடத்தடியில் சேர்த்துக் கட்டி உமது சிநேக பந்தனமாக்கியருளும்.

6. மிகவும் பிரிய சேசுவே, உமக்காகவே தேவரீர் என் இருதயத்தை சிருஷ்டித்திருக்கிறபடியால், திருப்பெட்டகத்திலுள்ள உமது திவ்விய இருதயத்தோடு அதை வைத்து மறைத்துக்கொள்ளும்.

7. சிறந்த குணகுணங்கள் அமைந்த திவ்விய கர்த்தரே, என் இருதயம் மெலிந்து அயர்ந்துபோனபடியால், உமது திரு இருதயத்திற்குள் அது பிரவேசித்து இளைப்பாற உத்தாரம் தந்தருளும்.

8. சேசுவே, அந்தரங்கமான உமது சிநேக இரகசியங்களை எனக்குப் படிப்பித்தருளும்.

9. திவ்விய சற்பிரசாதத்தில் வீற்றிருக்கும் சேசுவை உலகம் நன்றாய் அறியுமாகில், இப்பூலோகம் அதிகப் பிரகாசமாகவும் மறுலோகம் அதிக சமீபமாகவும் விளங்குமாம்.

10. மிகவும் பரிசுத்த திவ்விய நற்கருணைக்கு எந்நேரமும் ஸ்துதியும் நன்றியறிந்த தோத்திரமும் செலுத்தப்படக்கடவது.

திவ்விய சற்பிரசாதத்திற்கு நிந்தைப் பரிகாரச் செபம்.

என் சிருஷ்டிகரும் இரட்சகருமாகிய சேசுவே! மெய்யான தேவனும் மனிதனுமாகிய ஆண்டவரே! என் முழு இருதயத்தோடே தேவரீரைச் சிநேகித்து வணங்கி ஆராதிக்கிறேன். திருப்பீடத்தில் மறைந்து வசிக்கும் தேவனாகிய உமக்கு விரோதமாய், நான் நன்றி நாணமின்றிக் கட்டிக்கொண்ட

தோஷ துரோக அநாசாரங்களுக்கு உத்தரிப்புப் பலியாகவும், மற்றும் மனுக்குலத்தோரால் செய்யப்பட்டதும் இனி செய்யப்படுவதுமாகிய பாவ அக்கிரமங்களுக்குப் பரிகாரமாகவும் அடியேனுடைய ஆராதனை வணக்க தோத்திரங்களைக் கையேற்றுக்கொள்ளக் கிருபைபுரிந்தருளும். தேவரீருக்கு அடியேன் செலுத்தவேண்டிய ஆராதனை தோத்திரங்களை உமது மகிமைப் பிரதாபத்துக்கு யோக்கியமான பிரகாரமாய் நான் செய்யக்கூடாதிருந்தாலும், என்னாலியன்ற தாழ்ச்சி நேசப்பற்றுதலோடே அவைகளை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். இதன்றியே புத்தியுடைத்தான ஜீவஜெந்துக்களின் இருதய கமலங்களில் எவ்வளவான சிநேகப் பெருக்கம் அடங்கக்கூடுமோ, அவ்வளவான பூரண அன்பு ஐக்கியத்தோடே தேவரீரைச் சிநேகிக்க ஆசைப்படுகிறேன். தேவரீரை அறியாமலும் சிநேகித்துச் சேவியாமலும் இருக்கிற கத்தோலிக் கிறீஸ்துவர்களுடைய குற்றங் குறைகளைப் பரிகரிக்கவும், பாவிகள், பதிதர், பிரிவினைக்காரர், அஞ்ஞானிகள், யூதர், துலுக்கர், நாஸ்திகர், தேவ தூஷணிகள், மந்திரவாதிகள் முதலிய அவிசுவாசிகள் எல்லோரும் மனந்திரும்பிவரவும் நான் ஆசைப்படுகிறேன். என் நேச சேசுவே!

தேவரீருடைய தெய்வீகம் இப்பூலோகமெங்கும் பிரபலியமாய் ஆராதிக்கப்படவும், திவ்விய சற்பிரசாதத்தில் தேவரீருக்கு இடைவிடாத தோத்திரம் செலுத்தப்படவும் கடவதாக. ஆமென்சேசு.

(200-நாட் பலன்.)

வேறு பரிகாரச் சேபம்.

அதியுன்னத பரிசுத்த தேவனே! மிகவும் பூசிதமாகிய திவ்விய சற்பிரசாதத்தில் வீற்றிருக்கும் சேசுவின் திரு இருதயத்தின் வழியாய்த் தேவரீரை வாழ்த்தி வணங்கிப் போற்றிப் புகழ்ந்து நேசித்து தோத்தரிக்கிறேன். இப்பூலோகமெங்கும் செய்யப்படும் எவ்வித தேவ துரோகம், தூஷணம், அநாசாரம், அவிசுவாச முதலிய பாவங்களுக்கு உத்தரிப்பாகவும், பரிகாரமாகவும் எங்கள் பீடங்களில் அல்லது திருப் பேழைகளில் திவ்விய நிவேதனப் பலியாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் திரு அப்பத்தையெல்லாம் அமலோற்பவ கன்னிமாதாவின் திருக்கரங்களைக்கொண்டு தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி. ஆமென்சேசு.

(300-நாட் பலன்.)

சேசுவே! பூங்காவனந்துவக்கி சாகுந்தனையும் துக்கமுள்ளவரே! இன்னமும் திவ்விய நற்கருணையில் சகல அவிசுவாசிகளால் நிந்திக்கப்படுகிறவரே! உமக்கே ஆராதனை பண்ணுகிறோம்.

அர்ச். தோமாஸ் ஆக்குயீனுஸ் தீவ்விய நற்கருணைச் சந்திப்புக்காகச் செய்த ஜெபம்.

என்மேல் வைத்த நிகரில்லாத அன்பினால் மெய்யாகவே இப்பீடத்தில் எழுந்தருளி இனிதாய் வீற்றிருக்கும் சேசுவே! நிதரிசனமாயிருக்கும் என் தேவனே! என் மன்றாட்டைக் கேட்டருளும்படி உம்மை மிகவும் வணக்கமாய்ப் பிரார்த்திக்கிறேன். உமது திருச்சித்தமே எனது ஆனந்த சந்தோஷமும் நேச பாசமுமாயிருப்பதாக. அதையே நான் ஆராய்ந்து தேடிக் கண்டடைந்து நிறைவேற்ற வரப்பிரசாதத்தைத் தந்தருளும். உம்முடைய உந்நத வழிகளை எனக்குக் காண்பியும்; உமது நியம நெறிகளை எனக்குக் கற்பியும். என்மேல் உமக்குள்ள எண்ணங்களைத் தெரியப்பண்ணி அவைகளை நிறைவேற்றுவதால் நான் ஆத்தும ஈடேற்றத்தை அடையும்படி கிருபைசெய்யும்.

என் சர்வேசுரா சுவாமி! கடந்துபோகிற பலவற்றையுங் கவனியாமல் உம்மை மாத்திரமே தரிசிக்க விருப்பத்தைத் தாரும்; உமக்குரியவைகளனைத்தையும் ஆசித்து எல்லாவற்றையும்விட உம்மையே சிநேகிப்பேனாக.

உம்மிலிருந்து வராத எவ்வகை இன்பமும் எனக்குக் கசப்பாகவும், உம்மை நோக்கிச் செல்லாத எவ்வித ஆசையும் எனக்கு அருவருப்பாகவும் உமக்காகமாத்திரம் நான் ஆரம்பிக்கிற கிரியைகள் யாவும் எனக்குச் சந்தோஷத்தைக் கொடுப்பனவாகவும், உம்மில் தேடப்படாத இளைப்பாற்றிகள் எனக்கு சகிக்கக்கூடாத பாரமாகவும் செய்தருளும். ஓ என் நல்ல சேசுவே! என் ஆத்துமம் உம்மைநோக்கிப் பறந்தோடி வரக்கடவது. என் ஜீவியகாலமோ ஒரு சிநேக முயற்சியாயிருப்பதாக. உமக்காகச் செய்யப்படாத எவ்விதக் கிரியையும், பலனற்றதென்றும், உயிரற்றதென்றும் நான் உற்றுணரச் செய்தருளும். எனது பத்தியானது ஒரு அப்பியாசமாயிராமல் உம்மை நோக்கி ஓயாது பற்றியெரியும் இருதய மனோகரமாயிருப்பதாக.

ஆ! என் சேசுவே! என் சந்தோஷமே! என் ஜீவியமே! நான் எனது தாழ்ச்சியில் சுயநலத்தை நாடாமலும், இன்பத்தில் மித

மிஞ்சி சந்தோஷங்கொள்ளாமலும், துன்பத்தில் சலிப்படையாமலும், ஒறுத்தலில் கடுமையாயிராமலும் ஜீவிக்க கிருபைசெய்யும்.

நான் கபடின்றிப் பேசவும், அவநம்பிக்கையின்றிப் பயப்படவும், அகங்காரமின்றி நம்பவும், கோபமின்றிக் கண்டிக்கவும் பாசாங்கின்றி சிநேகிக்கவும், டம்பமின்றி நன்மாதிரி காட்டவும், எதிர்வார்த்தையின்றிக் கீழ்ப்படியவும், முறுமுறுப்பின்றித் துன்பங்களைப் பொறுத்தனுபவிக்கவும் தயைபண்ணியருளும்.

ஓ உன்னத நன்மையே! என் அருமைச் சேசுவே! எவ்விதப் பார்வையாலும், தொனியாலும் உம்மிடத்திலிருந்து பிரியாமல் உம்மால் வசப்படுத்தப்பட்டதும், ஒருபோதுந் தளராததுந் தடுமாறாததுமான பிரமாணிக்கமுள்ள இருதயத்தை எனக்குத் தந்தருள உம்மை மிகவும் மன்றாடுகிறேன். மேலும் அது தனக்கு நேரும் சோதனைகளை ஜெயித்து வெல்லவும், அபஜெயத்தால் தளர்ந்து போகாமல் மறுபடியும் எதிர்த்துப் போராடத்தக்க பராக்கிரமமுள்ள இருதயமாகவும், எவ்வித பற்றுதலாலும் கவரக்கூடாததும் சிறைப்படுத்தக் கூடாததுமான சுவாதீனமுள்ள இருதயமாகவும், தவறுதலான மார்க்

கங்களிற் பிரவேசியாத பிரமாணிக்கமுள்ள இருதயமாகவும் இருக்கக் கிருபை செய்யும். ஆ என் ஆண்டவரே! உன்னத ஞானமே! உம்மை அறிய ஆவலும், உம்மைத் தேடிக் கண்டடைய உற்சாகமுமுடைய என் மனது உம்மைத் தரிசித்து ஆனந்தமடையும் வகையை அறியத் தயைபுரியும். அதன் எண்ணங்களும், தியானங்களும், உமது சந்நிதியிற் பிரியமுள்ளவைகளாய் இருக்கக்கடவன. நம்பிக்கை, அமரிக்கையோடு உமது உத்தரவுக்குக் காத்திருந்து, உமது திருவசனாமிர்தத்தில் அமர்ந்து இளைப்பாறக்கடவது.

நான் எனது தவத்தால் உமது திருமுடியின் முட்களை உணரவும், இஷ்டப்பிரசாதத்தால் எனது பரதேசத்தில் உமது வரங்களைச் சம்பூரணமாய் அடையவும், மகிமையால் உமது இராச்சியத்தின் சந்தோஷங்களைக்கொண்டு எனது ஆத்துமம் சிநேக அக்கினிச் சுவாலை பற்றியெரியவும் கிருபை செய்தருளும் சுவாமி, ஆமென்சேசு.

திவ்வியநற்கருணை ஆசீர்வாதம்.

திவ்விய நற்கருணை ஆசீர்வாதமென்பது நமதாண்டவர் திவ்விய சற்பிரசாதத்தை உண்டாக்கினதில் காண்பித்த மட்டற்ற நன்

மைத்தனத்துக்கும் பட்சத்துக்கும் நன்றியறிதலாக, அவருக்கு ஆராதனையும், புகழ்ச்சியும், வாழ்த்துதலும் செலுத்தும்படி சத்திய திருச்சபை நடத்திவரும் பத்தி முயற்சியாம்.

திவ்விய நற்கருணைப் பெட்டகத்திலிருந்து சற்பிரசாதத்தை எடுத்து அதை ஜனங்களுடைய கண்முன் ஸ்தாபிக்கிறபோது, பாட்டுக்காரர் "ஓ சாலுத்தாரிஸ் ஓஸ்தியா" என்னும் திருப்புகழ் பாடுகிறார்கள்.

இதன் பிறகு, பெரியோர் உத்தரவின்படி, அல்லது ஆசீர்வாதம் கொடுக்கும் குருவின் யோசனைப்படி, அல்லது காலத்தின் தேவைக்குத் தக்கப்படி, "பாஞ்சேலிங்குவா" என்ற சங்கீதம், அல்லது, அதின் பிந்தின பாகமாகிய "தாந்தும் ஏர்கோ" என்கிற பாடல் திவ்விய நற்கருணைக்குத் தோத்திரமாகப் பாடப்படும்.

சிலுவையிலறையுண்ட நமது திவ்விய கர்த்தரைநோக்கிப் பத்திமுயற்சிகள்.

சிலுவையிலறையுண்ட நமதாண்டவர்பேரில் நாம் விசேஷித்த பத்தியுள்ளவர்களாயிருக்கவேண்டும். அர்ச். லிகோரியார் சொல்லுமாப்போல நமது திவ்விய இரட்சகர்பேரில் நமதிருதயங்களில் நேசத்தை எழுப்புவதற்கு இதுவே நிச்சயமான வழிபாடாகும். நமதாண்டவருடைய திருக்காயங்கள் கடினமான இருதயங்களை இளக்கி, குளிர்ந்த இருதயங்களைத் தேவசிநேகத்தால் எரியச் செய்யுமென்று அர்ச். பொனவெந்தூர் சொல்லுகிறார். இந்தப் பரிசுத்த காயங்களில் நாம் அணைகடந்த இன்பத்தையும், வரப்பிரசாத சம்பூரணத்தையும், புண்ணிய சாங்கோபாங்கத்தையும், ஆத்துமத்தைப் பரிசுத்தப்படுத்தி அதிலுள்ள காயங்களை ஆற்றுவதற்கு ஏற்ற உத்தம வழிப்பாடுகளையும் கண்டடைவோமென்று அர்ச். அகுஸ்தீன் வசனித்திருக்கிறார்.

ஆகையால், சிலுவையிலறையுண்ட சேசுக்கிறீஸ்துநாதரைமாத்திரமே அறிய ஆசித்த அர்ச். சின்னப்பரையும், புஸ்தகங்களில்

வாசித்தறிந்ததைவிடச் சிலுவையின் பாதத்தில் அதிகமாய்க் கற்றுக்கொண்ட அர்ச். பொனவெந்தூரையும், பாடுபட்ட சுரூபத்தைக் கண்டமாத்திரத்தில் சிநேகத்தால் இருதயம் இளகிப்போன அர்ச். தெரேசம்மாளையும், எனது ஈடேற்றத்துக்குக் காரணமாயிருந்த புஸ்தகம் பாடுபட்ட என் ஆண்டவர்தாமே, என்று சொல்லிக்கொண்டு வந்த பத்திசுவாலகரையொத்த ஐந்து காயப் பிராஞ்சீஸ்குவையும், நாம் கண்டுபாவிக்கப் பிரயாசப்படக்கடவோம். இந்த ஆச்சரியத்துக்குரிய புஸ்தகத்தையே நாமும் நமது இடையறாத பாடமாகச் செய்துகொள்வோமானால், நம்மை இம்மாத்திரம் சிநேகித்த ஆண்டவரை நேசிக்கவும், நமது திவ்விய கர்த்தரைச் சிலுவையோடு அறைந்த பாவத்தையும் உலகத்தையும் வெறுக்கவும், மெய்யான கிறீஸ்துவனுக்குரிய விதமாயும் மனஸ்தாபமுள்ள இருதயத்தோடும்ஜீவித்துவரவும்இப்புஸ்தகத்தினிடமாய்க் கற்றுக்கொள்ளலாம்.

சிலுவைப்பாதை செய்யும் வகை.

சிலுவைப்பாதை செய்வது, நமது திவ்விய கர்த்தருடைய திருப்பாடுகளையும் திருமரணத்தையும் தகுந்த பிரகாரமாய்க் கொண்

டாடுவதற்குள்ள பிரதானமான பத்திமுயற்சிகளில் ஒன்றாகும். மேலும் இப்பத்திமுயற்சியானது பாவிகளை மனந் திருப்பவும், சோர்ந்தவர்களுக்குச் சுறுக்குண்டாகவும், நீதிமான்களை அர்ச்சிக்கவும், தகுதியான பத்தி முயற்சியாமே. சிலுவைப்பாதை என்றால் நமதாண்டவர் மரணத்திற்கு தீர்வையிடப்பட்ட பிலாத்துவின் வீட்டிலிருந்து அவர் சிலுவையிலறையுண்ட கல்வாரிமலையுச்சிவரையில் சிலுவையைச் சுமந்துகொண்டு போகையில் அவர் நடந்த தூரத்தைக் குறிக்கும்.

அர்ச். தேவமாதா தமது திவ்விய குமாரன் மோட்சத்துக்கு எழுந்தருளிப் போனபிறகு தனிமையாக அல்லது வேறே புண்ணிய ஸ்திரீகளோடு பலமுறை இந்தத் திரு யாத்திரை செய்துவந்தாள். இந்தச் சுகிர்த மாதிரிகையைக் கண்டுபாவித்து, பலஸ்தீன் என்னும் பரிசுத்த நாட்டுக்கிறீஸ்துவர்களும், பிற்காலத்தில் உலகத்தின் நாலாதிசையிலுமுள்ள விசுவாசிகளில் அநேகரும் சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு இரத்தத்தினால் தோய்ந்த இந்தத் திருஸ்தலங்களைச் சந்தித்துக்கொண்டு வந்தார்கள். நமது பரிசுத்த திருச்சபையும் இவர்களுடைய பத்தியை அங்கீகரித்து இவர்களுக்குத் தனது வரப்

பிரசாத பொக்கிஷத்தைத் திறந்து ஏராள
மான பலன்களை அளித்துவந்தது. விசுவாசி
களனைவரும் விசேஷமாய் அந்நியதேசங்
களிலுள்ளவர்களும் இந்தத் திரு யாத்திரை
செய்வது அசாத்தியமாயிருக்குமென்றறிந்த
அர்ச். பாப்பானவர் உலகமெங்குமுள்ள
கோவில்களில் ஜெருசலேம் பட்டணத்தி
லிருந்து கல்வாரிமலைக்கு இடையிலுள்ள
திருச்சிலுவையின் பாதையில் நடந்த துக்க
விசேஷங்களைக் காட்டும் சுரூபங்களை அல்
லது படங்களை ஸ்தாபிக்கும்படி உத்தரவு
செய்தார்.

இந்தப் பத்தியுள்ள முயற்சியைத் தக்க பத்தியுருக்கத்தோடு செய்கிறவர்கள் ஜெருசலேம் பட்டணத்தின் திருஸ்தலங்களைச் சந்திக்கிறவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற பலன்களையெல்லாம் அடைவார்கள். இந்தக் கணக்கற்ற பலன்களை உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமங்களுக்காக ஒப்புக்கொடுக்கலாம்.

இந்தப் பலன்களை அடைவதற்கு அவசியமான நிபந்தனைகளாவன :

(1) திருச்சபையின் முறைமைப்படி சிலுவைப்பாதைப் படங்களை அல்லது சிலுவைகள் ஸ்தாபிக்கப்பட்ட கோவில்களில் சிலுவைப்பாதை சேவிக்கவேண்டும். (2) வியாதியினாலாவது இடத்தின் குறைவினாலாவது

ஜனநெருக்கத்தினாலாவது கூடாமற்போனாலொழிய மற்ற சமயங்களில் விசுவாசிகள் பதினான்கு ஸ்தலங்களையும் சந்தித்து ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்துக்கு நடந்து செல்லவேண்டும். மேலே சொல்லப்பட்டபடி விக்கினம் நேர்ந்தால், எழுந்திருந்து ஒவ்வொரு ஸ்தலத்துக்கும் நேராய்த் திரும்பி, முழங்காலிலிருந்தால் போதும். (3) இந்த முயற்சியைச் செய்யும்போது ஆண்டவருடைய பாடுகளைப்பற்றித் தியானிக்கவேண்டும். தியானிக்கக்கூடாதவர்கள் யாதோர் விசேஷித்த பாடுகளின் வரலாற்றைத் தங்களால் கூடியமட்டும் யோசனை பண்ணினால் போதும். ஒவ்வொரு ஸ்தலத்திலும் ஒரு பரமண்டலமந்திரம், ஒரு பிரியதத்தமந்திரம் சொல்லலாம். ஆனால் இது அவசியமான நிபந்தனையல்ல (4) அதிக காலதாமதஞ் செய்யாமல் 14 ஸ்தலங்களையும் சந்தித்து முடிக்கவேண்டும்.

மேலே சொல்லப்பட்டதைக் கொண்டு, இப்பலன்களையடைய, ஒவ்வொரு ஸ்தலத்திலும், திவ்விய சேசுவே உம்மையாராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறோம் என்கிற செபத்தை, அல்லது, பரமண்டலமந்திரம், பிரியதத்தமந்திரம், அர்ச். தமதிரித்துவ தோத்திரம், எங்கள்

பேரில் தயவாயிரும், விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் முதலிய செபங்களைச் சொல்வது அவசியமில்லையென்று தெரியவருகிறது. ஜெப புஸ்தகத்திலுள்ள சிலுவைப்பாதைச் செபங்களை வாசிப்பதும் அவசியமான நிபந்தனையல்ல. ஆகிலும் இது ஒரு நல்ல பழக்கமென்பதற்குச் சந்தேகமில்லை.

சிலுவைப்பாதை.

(அர்ச். அல்போன்ஸ் லிகோரியார்).

பீடத்திற்கு முன்பாக.

பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினாலே ஆமென்சேசு.

என்னாண்டவராகிய சேசுக்கிறீஸ்துவே! எவராலும் சொல்லிமுடியாத நேசப்பெருக்கத்தால் தேவரீர் எனக்காக மரிக்க இந்தக் கல்வாரி மலைப் பயணம் செய்யலானீர். ஐயோ! எத்தனையோவிசை நான் உம்மை விட்டுப் பிரிந்துபோனேன். ஆகிலும் இது வரையில் தேவரீரை நான் மனநோகப் பண்ணினதினிமித்தம் இப்போது துக்கமனஸ்

தாபப்பட்டுத் தேவரீரை நான் முழுமனதோடு சிநேகிக்க வருகிறேன். என் சர்வேசுரா! எனக்குப் பொறுத்தலைத் தந்து, இந்தக் கல்வாரி மலைப்பயணத்தில் நான் தேவரீரைப் பின்சென்றுவர உத்தாரந் தந்தருளும். என்பேரில் வைத்த சிநேகத்தாலல்லவோ தேவரீர் உமது சீவனை விடப்போகிறீர். என் அன்புக்குரிய இரட்சகரே! அடியேனும் உமது சிநேகத்தினிமித்தம் சாக ஆசையாயிருக்கிறபடியால், நான் உம்மோடு ஒன்றித்துச் சீவித்து மரிக்கக் கிருபை செய்தருளுஞ் சுவாமி.

முதலாம் ஸ்தலம்.

சேசுக்கிறீஸ்துநாதர் மரணத்திற்கு தீர்வையிடப்படுகிறார்.

முத. திவ்விய சேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகிறோம்.

துணை. அதேனென்றால் உம்முடைய அர்ச். சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

என்னாத்துமமே! நமது திவ்விய இரட்சகர் சாட்டை கசைவார்களினால் அடிபட்டு, முண்முடி சூட்டப்பட்ட பின்னும் சிலுவையில் அறையுண்டு மரிக்கப் பிலாத்து என்பவனால் அநியாயமாய்த் தீர்வையிடப்பட்டதைத் தியானித்துப் பார்.

என் ஆராதனைக்குரிய சேசுவே! உமக்கு மரணத்தீர்வையிட்டது பிலாத்தென்பவனல்ல, என் பாவங்கள்தான் அதற்குக் காரணமாயிருந்தது. இந்தத் துக்கநிறைந்த கல்வாரிமலைப் பயணத்தின் பேறுபலன்களைப் பார்த்து நித்தியத்தை நோக்கிச் செல்லும் பயணத்திலே என் ஆத்துமத்தைக் கைதூக்கி நடத்தியருளுஞ் சுவாமி.

பர. பிரி. திரி.

இரண்டாம் ஸ்தலம்.

சேசுக்கிறீஸ்துநாதர் சிலுவை சுமத்தப்படுகிறார்.

முத. திவ்விய சேசுவே...

துணை. ஏனென்றால்...

என் ஆத்துமமே! நமது திவ்விய இரட்சகர் பாரச் சிலுவையைத் தோளிற் சுமந்து, இந்தக்கல்வாரி மலைப்பயணம் செய்கையில் நம்மை நினைத்து நமக்காக அவர் அநுபவிக்கப்போகிற மரண வேதனையைப் பிதாவா

கிய சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தாரென்று தியானித்துப் பார்.

என் அன்புக்குரிய சேசுவே! எனக்குத் தேவரீர் நியமித்த சகல துன்ப துரிதங்களையும் நான் மரணபரியந்தம் அனுபவிக்கக் கையேற்றுக்கொள்ளுகிறேன். இந்தச் சிலுவையைச் சுமந்து போகையில், தேவரீர் அனுபவித்த வேதனையின் பேறுபலன்களைப் பார்த்து, நான் உத்தம பொறுமையோடும் அமைந்த மனதோடும் என் சிலுவையைச் சுமந்துகொண்டுபோக அவசரமான வரப்பிரசாதத்தை எனக்குத் தந்தருளும் சுவாமி.

பர. பிரி. திரி.

மூன்றாம் ஸ்தலம்.

சேசுக்கிறீஸ்துநாதர் தமது பாரமான சிலுவையோடு முதல்விசை குப்புற விழுகிறார்.

முத. திவ்விய சேசுவே...

துணை. ஏனென்றால்...

என் ஆத்துமமே! நமது திவ்விய கர்த்தர் இப்படி முதல்விசை விழுந்ததைத் தியானித்துப்பார். அவர் மிகவும் பலவீனம் அடைந்ததைப்பற்றி நடக்கக்கூடாதிருந்தா

லும், இந்தப் பாரச் சுமையைத் தோளிற் சுமந்துகொண்டுபோக வேண்டியதாயிருந்தது. சேவகர் அவரை நிஷ்டூரமாய் அடித்தபடியால் அவர் அநேகமுறை தரையில் விழுந்தார்.

என் சேசுவே! சிலுவையின் பாரமல்ல, ஆனால் என் பாவங்கள்தான் தேவரீருக்கு இவ்வளவான வேதனையை வருவித்தது. ஆ! இப்படி முதல்விசை தேவரீர் விழுந்த பேறுபலன்களைப்பார்த்து, சாவானபாவத்தில் விழுகிற நிர்ப்பாக்கியத்தில் நின்று என்னைக் கைதூக்கி இரட்சியுஞ் சுவாமி.

பர. பிரி. திரி.

நான்காம் ஸ்தலம்.

சேசுக்கிறீஸ்துநாதர் தமது தாயாரை எதிர்கொண்டு மினவுகிறார்.

முத. திவ்விய சேசுவே...

துணை. ஏனென்றால்...

என் ஆத்துமமே! இந்தக் கல்வாரிமலைப் பயணத்தில் இந்தத் திவ்விய தாயும் திருச்சுதனும் சந்தித்த விசேஷத்தைத் தியானித்துப்பார். ஒருவர் ஒருவரை நோக்கின பார்வையானது அவர்களுடைய உருக்க நேச

முள்ள இருதயத்தை ஊடுருவும் அம்புகளாயிற்று.

என் இனிய சேசுவே! இந்த மினவுதலில் தேவரீர் அனுபவித்த துக்கத்தைப் பார்த்து உமது திவ்விய மாதாவின்பேரில் உண்மையும் உருக்கமுமான பத்தி வரப்பிரசாதத்தை எனக்குத் தந்தருளும். துக்க வியாகுலம் நிறைந்த இராக்கினியே! உமது திருக்குமாரனுடைய பாடுகளை நான் இடைவிடாமல் தியானிக்கும் வரத்தை எனக்குக் கேட்டுத் தந்தருளுந்தாயே. பர. பிரி. திரி.

ஐந்தாம் ஸ்தலம்.

சேசுக்கிறீஸ்துநாதர் சிலுவை சுமக்கச் சிமியோன் உதவிசெய்கிறார்.

முத. திவ்விய சேசுவே ..

துணை. ஏனென்றால்...

என் ஆத்துமமே! நமது திவ்விய இரட்சகர் இப்பயணத்தில் க்ஷணத்திற்குக் க்ஷணம் மரிக்கும் தருவாயிலிருப்பதாகக் கண்ட யூதர்கள் அவரைச் சிலுவையின் அவமான மரணத்திற்கு உட்படுத்த நினைத்திருந்தபடியால், அவர் வழியில் இறந்துபோகாதபடிக்கு, அவருக்குப் பிறகே நின்று சிலுவையைத் தாங்கிச் சுமந்துவரச் சிமி

யோனைக் கட்டாயப்படுத்தினார்கள் என்று தியானித்துப்பார்.

என் அன்புக்குரிய சேசுவே! நான் சிமியோனைப்போலே சிலுவையை வெறுத்துத் தள்ளுவேனல்ல. அதைத் தழுவி ஏற்றுக்கொண்டு சுமந்து வருவேன். எனக்குத் தேவரீர் நியமித்திருக்கிற மரணம் எவ்வித வேதனைகளோடு கூடியதாயிருந்தாலும் அதையும் கையேற்றுக்கொள்ளுகிறேன். தேவரீருடைய திரு மரணத்தோடு அதை ஒன்றித்துத் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி. பர. பிரி. திரி.

ஆறாம் ஸ்தலம்.

வெரோணிக்கம்மாள் சேசுவின் திருமுகத்தைத் துடைக்கிறாள்.

முத. திவ்விய சேசுவே...

துணை. ஏனென்றால்...

என் ஆத்துமமே! வெரோணிக்கம்மாள் என்ற இந்தப் பரிசுத்த ஸ்திரீயானவள் சேசுநாதர் இவ்வளவு நிர்ப்பந்தங்களோடுகூட அவர் முகம் வேர்வையாலும் இரத்தத்தாலும் அழுக்கடைந்து இருப்பதைக்கண்டு இரங்கி ஒரு வஸ்திரத்தை அவருக்குக் கொடுக்க, அதனால் அவர் தமது திவ்விய முகத்

தைத் துடைக்கவே, அதில் அவருடைய
திரு முகச்சாயல் எப்படி பதிந்துபோயிற்
றென்று தியானித்துப்பார்.

என் அன்புக்குரிய சேசுவே! முன் வடிவு
சோபனமுள்ளதாயிருந்த உமது திரு முகம்
இப்போது பங்கமடைந்து காயங்களாலும்
இரத்தத்தாலும் மங்கி வடிவிழந்துபோயிற்
றே. ஐயோ! என்னாத்துமம் ஞானஸ்நா
னத்தால் அடைந்த இஷ்டப்பிரசாத அழகு
சௌந்திரியத்தையெல்லாம் என் பாவத்
தால் இழந்துபோயிற்றே; என் திவ்விய
இரட்சகரே! முன்னிருந்த அதன் வடிவு
அலங்காரத்தை அதற்குத் திரும்பத் தந்த
ருளும் சுவாமி. பர. பிரி. திரி.

ஏழாம் ஸ்தலம்.

சேசுக்கிறீஸ்துநாதர் இரண்டாம்விசை குப்புற விழுகிறார்.

மூத. திவ்விய சேசுவே...

துணை. ஏனென்றால்...

என் ஆத்துமமே! நமது திவ்விய இரட்
சகர் சிலுவையின் பாரத்தால் இரண்டாம்
விசை குப்புற விழுந்தபோது அவருடைய
திருத்தலையிலும் சர்வாங்கத்திலும் இருந்த
காயங்களின் வேதனைகளையெல்லாம் திரும்

பவும் அனுபவித்தாரென்று தியானித்துப்
பார்.

என் அன்புக்குரிய சேசுவே! எத்தனையோ
விசை எனக்குத் தேவரீர் பொறுத்தலைக்
கொடுத்திருந்தும் எத்தனையோவிசை நான்
திரும்பத்திரும்ப பாவத்தில் விழுந்து உமது
மனதை நோகப்பண்ணினேன். ஆ! இப்படி
இரண்டாம்விசை தேவரீர் விழுந்து அடைந்த
துக்கத்தின் பேறுபலன்களைப் பார்த்து இனி
யாகிலும் நான் தேவரீருடைய இஷ்டப்பிர
சாதத்தில் உறுதியாய் நிலைத்திருக்கத்தக்க
தாக அவசரமான ஒத்தாசையை எனக்குத்
தந்தருளுஞ்சுவாமி. பர. பிரி. திரி.

எட்டாம் ஸ்தலம்.

சேசுக்கிறீஸ்துநாதர் எருசலேம் பட்டணத்துப் புண்ணிய ஸ்திரீகளுக்கு ஆறுதல் சொல்லுகிறார்.

மூத. திவ்விய சேசுவே ...

துணை. ஏனென்றால் ...

என் ஆத்துமமே! திவ்விய இரட்சகர் இவ்
வளவு இரக்கத்துக்குரிய ஸ்திதியிலிருப்பதை
ப்பார்த்து அந்தப் புண்ணிய ஸ்திரீகள் இரங்
கிப் பிரலாபித்து அழுகையில், "மக்களே!
எனக்காக அழவேண்டாம், உங்களுக்காகவும்

உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்று அவர் திருவுளம்பற்றினதைத் தியானித்துப்பார்.

திவ்விய சேசுவே! தேவரீருக்கு விரோதமாய் நான் கட்டிக்கொண்ட பாவங்களுக்காக துக்க மனஸ்தாபப்பட்டு அழுகிறேன். என்னை இவ்வளவாக நேசித்த தேவரீருக்கு அவைகளாலே எவ்வளவோ கஸ்தி வருவித்தேன். இப்போது நரக ஆக்கினையின் அச்சத்தினால் அல்ல, தேவரீருடைய பட்சத்தினிமித்தமே நான் பாவங்களுக்காகப் பச்சாத்தாபப்பட்டு அழுகிறேன். எனக்கு பொறுத்தலைத் தந்தருளுஞ் சுவாமி.

பர. பிரி. திரி.

ஒன்பதாம் ஸ்தலம்.

சேசுக்கிறீஸ்துநாதர் மூன்றாம்விசை குப்புற விழுகிறார்.

முத. திவ்விய சேசுவே...

துணை. ஏனென்றால்...

என் ஆத்துமமே! திவ்விய கர்த்தருக்கு உண்டாயிருந்த பலவீன மிகுதியால் அடிபெயர்த்து நடக்கக் கூடாதிருக்கையில், கொலைபாதகர் அவரைத் தீவிரப்படுத்த வருந்திச்செய்த நிஷ்டூரத்தால் இப்படி மூன்றாம்

விசை குப்புற விழுந்தாரென்று தியானித்துப்பார்.

ஆ! மானபங்கம் அடைந்திருக்கும் என் திவ்விய சேசுவே! கல்வாரிமலைக்குப் போகையில் தேவரீர் அனுபவித்த வேதனையின் பேறுபலன்களைப்பார்த்து தேவரீருடைய சிநேகத்தைப் பிறக்கணிக்கக் காரணமான என்னுடைய துர்க்குண ஆசாபாசங்களையெல்லாம் அடக்கி ஜெயிக்கவும், மனுஷர் முகத்தாக்ஷணியத்தை வெறுத்துத் தள்ளவும் எனக்கு வரந்தந்தருளுஞ் சுவாமி.

பர. பிரி. திரி.

பத்தாம் ஸ்தலம்.

சேசுக்கிறீஸ்துநாதர் வஸ்திரம் உரியப்படுகிறார்.

முத. திவ்விய சேசுவே...

துணை. ஏனென்றால்...

என் ஆத்துமமே! கொலைப்பாதகர் எவ்வளவு நிஷ்டூரத்தோடு திவ்விய கர்த்தருடைய வஸ்திரங்களை உரிந்துகொண்டார்களென்றும், அவருடைய காயங்களோடு ஒட்டியிருந்த உள்சட்டையை அவர்கள் இப்படி உரிந்தபோது அவருடைய திரு மாங்கிஷம் பியந்துபோயிற்றென்றும் தியானித்துப்பார்.

மாசில்லாத திவ்விய சேசுவே ! இச்சமயத்தில் தேவரீர் அனுபவித்தவேதனையின் பேறுபலன்களைப்பார்த்து பிரபஞ்சப் பொருட்களின் மேல் எனக்குள்ள பற்றுதலெல்லாம் அகற்றி, என் சிநேகத்திற்கு முழுதும் பாத்திரமாகிய தேவரீர் பேரிலேயே என் நேசமெல்லாம் வைக்க எனக்கு உதவி செய்தருளுஞ்சுவாமி.

பர. பிரி. திரி.

பதினோராம் ஸ்தலம்.

சேசுக்கிறீஸ்துநாதர் சிலுவையில் அறையப்படுகிறார்.

முத. திவ்விய சேசுவே...

துணை. ஏனென்றால்...

என் ஆத்துமமே ! நமது திவ்விய கர்த்தரைச் சிலுவையின்மேல் விழத்தாட்டியபோது அவர் தமது கரங்களை விரித்து நமது இரட்சணியத்திற்காக தமது சீவனை நித்திய பிதாவுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தாரென்றும், அந்தக் கொலைப்பாதகர்கள் அவரைச் சிலுவையோடு சேர்த்து ஆணிகளால் அறைந்தபோது மட்டிலடங்காத வேதனை நிர்ப்பந்தங்களை அவர் அனுபவித்தாரென்றும் தியானித்துப்பார்.

நிந்தை அவமானங்களால் பூரிப்படைந்திருக்கும் என் திவ்விய சேசுவே ! என் இருதயம் தேவரீரை நேசிக்கவும் உம்மை ஒருக்காலும் விட்டுப் பிரியாதிருக்கவும், உம்முடைய திருப்பாதங்களோடு சேர்த்து அதைச் சிலுவையில் அறைந்தருளுஞ் சுவாமி.

பர. பிரி திரி.

பன்னிரண்டாம் ஸ்தலம்.

சேசுக்கிறீஸ்துநாதர் சிலுவையில் உயிர்விடுகிறார்.

முத. திவ்விய சேசுவே...

துணை. ஏனென்றால்...

என் ஆத்துமமே ! நமது திவ்விய கர்த்தர் சிலுவையின்மேல் மூன்றுமணி நேரமளவும் மரண அவஸ்தைப்பட்டு வேதனை நிர்ப்பந்தங்களால் சோர்ந்து தமது திருச்சரீரத்தின் பாரத்தோடு சாய்ந்து தலைகுனிந்து பிராணனை விட்டாரென்று தியானித்துப்பார்.

உயிர்பிரியுந் திவ்விய சேசுவே ! என் சிநேகத்தினிமித்தம் தேவரீர் மரித்த திருச்சிலுவையை நான் பத்தியோடு முத்திசெய்கிறேன். தேவரீருடைய மரணமே என் இரட்சணியத்திற்கு நம்பிக்கை. இந்தத் திருமரணத்தின் பேறுபலன்களைப்பார்த்து நான்

உமது திருப்பாதத்தைக் கட்டியணைத்து உமது சிநேக அக்கினியினால் பற்றியெரிந்து மரிக்க எனக்கு உம்முடைய வரப்பிரசாதம் தந்தருளுஞ் சுவாமி. பர. பிரி. திரி.

பதின்மூன்றாம் ஸ்தலம்.

சேசுக்கிறீஸ்துநாதர் சிலுவையினின்று
இறக்கப்படுகிறார்.

முத. திவ்விய சேசுவே...

துணை. ஏனென்றால்...

என் ஆத்துமமே! நமது திவ்விய கர்த்தர் சிலுவையில் மரித்தபிறகு அவருடைய சீஷர்களில் இருவர் அவரைச் சிலுவையினின்று இறக்கி எடுத்து, வியாகுலம் நிறைந்த அவருடைய மாதாவின் மடியின்மேல் வைத்தபோது அந்தத் திருத்தாயார் அவரைக் கட்டியணைத்துக்கொண்டழுதாளென்று தியானித்துப்பார்.

வியாகுலமுள்ள மாதாவே! உமது திவ்விய குமாரனுடைய சிநேகத்தினிமித்தம் என்னை உமது ஊழியனாக ஏற்றுக்கொள்ளும்.

என் திவ்விய இரட்சகரே! எனக்காகத் தேவரீர் மரித்தபடியால், நானும் உம்மைச் சிநேகித்து மரிக்க வரந்தந்தருளும். ஏனென்றால் உம்மையன்றி எனக்கு வேறொன்றும் வேண்டியதில்லை சுவாமி. பர. பிரி. திரி.

பதினான்காம் ஸ்தலம்.

சேசுக்கிறீஸ்துநாதர் கல்லறையில்
அடக்கம் பண்ணப்படுகிறார்.

முத. திவ்விய சேசுவே...

துணை. ஏனென்றால்...

என் ஆத்துமமே! சீஷர்கள் திவ்விய கர்த்தருடைய திருச்சரீரத்தை அடக்கம் செய்யும்படிக்குத் தூக்கிக்கொண்டு போகையில் அவருடைய பரிசுத்த மாதாவும் பின்சென்றுபோய் தமது கரங்களால் நல்லடக்கம் செய்தாளென்று தியானித்துப்பார்.

கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டிருக்கும் திவ்விய சேசுவே! உம்முடைய கல்லறையை மூடின திருக்கல்லை நான் பத்தியோடு முத்திசெய்கிறேன். தேவரீர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தருளின பரம இரகசியத்தைப் பார்த்து நான் தேவரீரை நித்தியத்திற்கும் நேசித்து பரகதியில் வாழ்த்தி ஸ்துதிக்கப் பாத்திரவானாகும்படிக்கு ஒட்டோலகமாய் உயிர்க்கக் கிருபைசெய்தருளுஞ் சுவாமி. பர. பிரி. திரி.

சிலுவையில் அறையுண்டிருக்கும் கர்த்தரை நோக்கி ஜெபம்.

திவ்விய சேசுவே! பூலோக இரட்சணியத்தினிமித்தம் தேவரீர் மனுஷ அவதாரம் எடுத்துப் பிறந்தீர், விருத்தசேதனப்பட்டீர். யூதர்களாலே பிறக்கணிக்கப்பட்டீர், துரோகியான யூதாசினால் முத்தமிட்டுக் காட்டிக் கொடுக்கப்பட்டீர். சங்கிலிகளால் கட்டுண்டு, மாசற்ற செம்மறிப்புருவையைப்போல் கொலைக்களத்துக்கு நடத்திக்கொண்டு போகப்பட்டீர். ஆனாஸ், கைப்பாஸ், பிலாத்துஸ், எரோதேஸ், இவர்கள் சமுகத்தில் அவமானமாய் நிறுத்தப்பட்டீர். பொய்ச்சாட்சிகளால் குற்றஞ் சாட்டப்பட்டீர். சாட்டை கசை வார்களினால் அடிக்கப்பட்டீர். நிந்தை கோரணியாய்த் திருக் கண்கள் மூடி குட்டப்பட்டீர். திரு முகத்தில் துப்பப்பட்டீர். முள்முடி சூட்டப்பட்டு மூங்கில் தடியால் அடிக்கப்பட்டீர். திருச்சட்டைகள் உரியப்பட்டீர். ஆணிகளால் சிலுவையில் அறையுண்டு உயர்த்தப்பட்டீர். கள்ளர்களில் ஒருவனாய் எண்ணப்பட்டீர். பிச்சுக் கலந்த புளித்த காடி குடிக்கப்பட்டீர். ஈட்டியால் குத்தப்பட்டீர்.

என் ஆண்டவரே சுவாமி! அடியேன் எவ்வளவு பாவியாய் இருந்தாலும் நான் இப்

போது தியானித்து பூசிக்கும் உமது திருப்பாடுகளைக்கொண்டும், உமது திருச்சிலுவை மரணத்தைக்கொண்டும் என்னை நரக ஆக்கினையினின்று மீட்டு இரட்சித்து, உமது வலதுபாரிசக் கள்ளனுக்குக் கட்டளையிட்ட மோக்ஷ பாக்கியத்தில் அடியேனையும் சேர்க்கத் தயைபுரியும். பிதாவோடேயும் இஸ்பிரீத்துசாந்துவோடேயும் சதாகாலம் சுயஞ்சீவியராய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவராயிருக்கிற ஆண்டவரே, ஆமென்சேசு.

பாடுபட்ட சுரூபம்: நமது அருதின அன்பர்.

உன்னிடத்தில் ஒரு பாடுபட்ட சுரூபம் உண்டா? உண்டானால் அதை உனக்கு நன்மையாகப் பிரயோகித்துக்கொள்ளுகிறாயா? உன்னால் கூடியமட்டும் அச்சுரூபத்தை உன்னோடேகூட வைத்துக்கொண்டு சஞ்சரிக்கப் பிரயாசப்படு. அடிக்கடி அதை உன் கண்ணால் பார்க்கத்தக்கதாக நீ எழுதிக்கொண்டிருக்கும்போது, அதை உன் மேசையின் மேலும், வேலைசெய்யும்போது உன் மடியிலும் வைத்திரு; நீ படுத்திருக்கும்போது

பத்தியோடு அதை உன் விலாப்பக்கத்தில் வைத்துக்கொள்.

திவ்விய சற்பிரசாதத்தின்பேரில் பத்தியாயிருப்பதும், அத்திருப்போசனத்தை அடிக்கடி உட்கொள்ளுவதும், பரிசுத்ததனத்தை அடைய உத்தம வழிபாடு என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகிலும் திவ்விய கர்த்தருடைய சன்னிதானத்தை எப்போதும் சுகிக்கவும், அல்லது திருப் பீடத்தண்டையில் இடைவிடாமல் சாஷ்டாங்கமாய் விழுந்திருந்து செபிக்கவும், நமக்குச் சாவகாசமில்லாமல் போகிறது நிசமே.

ஆனால் பாடுபட்ட சுரூபத்தையோ, நாம் எப்போதும் எங்கும் வைத்திருக்கவும், இதினால் அநேக நன்மைகளைக் கைக்கொள்ளவுங் கூடும். அதிகாலையில் நீ கண்விழித்தவுடனே பாடுபட்ட சுரூபத்தைப் பத்தியோடே முத்திசெய்து, "சுவாமி, இன்று முழுதும் எனக்கு நேரிடும் துன்பதுரிதமாகிய சிலுவைகளைப் பொறுமையோடே சகித்துக்கொள்வேன்," என்று அவருக்கு வாக்குத்தத்தஞ்செய். இன்னம் உன் இருதயப் பற்றுதலை எழுப்பத்தக்கதாக பாடுபட்ட சுரூபத்தின் கை கால் ஆணிகளை அடிக்கடி தொட்டுணர்ந்துபார். உனக்கு வரும் துன்ப

துரிதங்களிலும் சோதனை தந்திரங்களிலும் அச்சுரூபத்தை எடுத்து நெஞ்சோடு அணைத்துக்கொண்டு நேசப்பிரகரணஞ் செய். பிறசிநேகத்துக்கடுத்த யாதொரு தர்மக் கிரியையை நீ செய்யத் தொடங்குகையில், ஏழை எளியவர்களுக்குச் செய்வதெல்லாம் சேசுநாதர்சுவாமிக்குத்தானே செய்யப்படுவதுபோல் ஆகுமென்று எண்ணிக்கொண்டு மனப்பற்றுதலோடே அச்சுரூபத்துக்கு வணக்க நமஸ்காரஞ்செய். தபசு முயற்சி செய்யத் தொடங்குகையில், பரிசுத்ததனத்துக்கெல்லாம் ஊறணியான சுவாமியின் திருக் காயங்களைப் பத்தியோடே முத்திசெய். இராத்திரி நித்திரைக்குப் போகுமுன் பாடுபட்ட சுரூபத்தின் சன்னதியில் முழந்தாளிலிருந்து, அன்று பகல் முழுதும் நீ செய்ததெல்லாம் நினைத்துப்பார்த்து, சிலுவையில் மரித்திருக்கும் இத்தேவ சுதனின் தாழ்ச்சியோடே, உன் அகங்காரத்தையும், அவருடைய நிந்தை அவமானங்களோடே உன் பெருமை சலாக்கியத்தையும், அவருடைய பாடுகளோடே உன் கோழைத்தனத்தையும், அவருடைய இரத்த வெயர்வையோடே உன் பிரயாச மனத்தளர்ச்சியையும், அவருடைய அளவற்ற நேசத்தோடே உன் சுயநல விருப்பத்தையும், உனக்காகக் காத்திருந்த அவரு

டைய பொறுமையோடே உன் பொறுமைக் குறை, நேசக் குறைகளையும் ஒப்பிட்டுப்பார்.

இச்சுகிர்த முயற்சிகளையெல்லாம் நீ அனுசரிப்பாயாகில் சிலுவையில் மரித்த சுவாமியானவர் உனக்கு உண்மை உருக்கம் அமைந்த உத்தம சிநேகிதனாவாரென்பது நிச்சயம். அப்போது அந்த சுவாமியானவர் பாடுபட்ட சுரூபத்தைக்கொண்டு உன்னைச் சிநேகித்து உணர்த்தி உபதேசித்துத் திடப்படுத்துவார். என்றும் வளர்ந்து ஓங்கத்தக்க இப்படிப்பட்ட அவருடைய ஐக்கிய நேசத்தில் உன்னாத்துமம் முழுதும் மறுரூப சுரூபமாய் மாறுபடுவதைக் கண்டுணர்வாய்.

சிலுவை மரத்திலும் பித்தளை ரூபத்திலும் திவ்விய கர்த்தருடைய சாயலை நீ பார்ப்பதன்றி அந்தச் சுவாமியின் சாயலே உன்னிருதயத்திலும் ஸ்திரமாய்ப் பதிந்திருப்பதைக் காண்பாய். உனக்காக வலியச் சிலுவையில் அறையுண்டு மரித்த கர்த்தரின் தேவ வல்லப மாட்சியை அப்போது நீ நேராய் உணர்வாய். நீயும் அவரிடத்தில் மாறி மறுரூபமாக ஆசைப்பட்டு, அர்ச். சின்னப்பர் சொன்னதுபோலே, "கிறீஸ்து நாதரே எனது ஜீவன்" என்றுரைப்பாய்.

உன் இருதயப் பற்றுதலுக்கு இவ்விதமாய் நீ இடம் விட்டுக் கொடுப்பாயாகில்

உன் நடக்கை முழுதும் மாறி மறுரூபமடையும். கிறீஸ்துவனுக்குரிய உத்தமதன விசால விஸ்தீரணம் அப்போது உனக்கு விளங்கித்துலங்கும். உனது ஜீவன், சாஸ்திரம், சௌபாக்கியமெல்லாம் "சிலுவையில் மரித்த சேசுநாதர்தான்," என்னும் மூன்று மொழிகளிலேயே தொகுத்தடங்கி நிற்கும்.

நமது கரங்களில் நாம் ஏந்தியிருக்கும் திருச் சுரூபச் சாயலானது நமக்குச் சுட்டிக் காட்டுகிற திவ்விய உபாத்தியாயரைப்பற்றி, நன்மைத்தனமுள்ள நமது ஆண்டவரைப் பற்றி தியானிப்பதே இராத்திரி நித்திரைக்குமுன் நாம் சுகிக்கக்கூடிய சுகிர்த மனோகரமாம். இச்சமயத்தில் அவர்பேரில் நமக்குள்ள அன்பைக் காண்பித்து நமது பாவங்களுக்குப் பொறுத்தல் கேட்போம், நமது மன்றாட்டை அவர் கேட்டருளினாரென்று அப்போது உணர்வோம்.

இவ்விடத்தில் நித்திய பிதாவை ஆராதித்து வணங்கி நமது வணக்க தோத்திரத்தில் குறையானவைகளைச் சரிக்கட்ட அவருடைய திருக்குமாரனைத்தானே அவருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுப்போம். அவர் நமக்குச் செய்த எண்ணிறந்த நன்மை உப

காரங்களையும் நாம் பெற்றுக்கொண்ட வரப்பிரசாதங்களையும் நினைத்துப் பார்த்து, அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்துவோம். நம்மிடத்தில் அவர் கேட்பதைச் செய்ய வார்த்தைப்பாடு கொடுப்போம் நாம் வீணாய்ச் செலவழித்த நேரத்தையும் நாம் செய்த பாவங்களையும் நினைத்து மனஸ்தாபப்படுவோம். பின் நல்ல பிரதிக்கினை செய்து இஸ்பிரீத்துசாந்துவின் உதவியை இரந்து மன்றாடுவோம். கபாலமலையில் உற்பத்தியான திருச்சபைக்காகவும் பிரார்த்திப்போம். நாம் பாவிகளாயிருப்பதினிமித்தம் வெட்கப்படுவோம். ஆகிலும் சர்வ வல்லபமுள்ள சர்வேசுரனுடைய கிருபையையும் நேசத்தையும் சிந்தித்து நமது ஆத்துமந் திடாரிக்கமடையும். இப்பேர்ப்பட்ட சிந்தனைகளிலே நேரம் தீவிரமாய்ச் செல்லவே நமது பத்தியுள்ள மனச்சல்லாபம் நித்திரா மயக்கத்தில் மறைந்துபோகும்.

இந்தச் சிறு கருத்துகளடங்கிய யோசனைகளாலே பாடுபட்ட கருபத்தின்பேரில் உனக்கு உருக்கமான மனப்பற்றுதல் உண்டாகும். இப்படியாய் உன் இருதயத்திலும் மனதிலும் சேசுநாதர்சுவாமி இடைவிடாமல் வீற்றிருப்பார்.

சிலுவையில் மரித்த திவ்விய கர்த்தர் பேரில் உனக்கு உண்மை நேச உருக்கத்தை வருவிக்கத்தக்கதாகவும் உனக்கு அவசரமான வரப்பிரசாதத்தை அவரிடத்திலே தேடி அடையத்தக்கதாகவும் பரிசுத்த தேவமாதாவை இரந்து மன்றாடுவாயாக.

சிலுவையே உனது ஏக நம்பிக்கையும், உன் சீவனும், சம்பாவனையும், உனது சகலமுமாயிருக்கக்கடவதாக.

(R. P. D'alzon.)

முத். மார்கரீத் மரியம்மாள் சொல்லிய சுகிர்த வாக்கியங்கள்.

1. சேசுக்கிறீஸ்துநாதரோடேகூட சிநேகத்தால் சிலுவை சுமந்து செல்வதிலுஞ் சிறந்த நலம் வேறொன்றுமில்லை.

2. சிலுவை எப்படிப்பட்டதாயிருந்தாலும் பரவாயில்லை. நமது ஆண்டவருடைய திரு இருதயத்தின் பேராலே அது நமக்குக் கொடுக்கப்படுமாகில் அதுவே போதும்.

3. சிலுவையில் அறையுண்ட சுவாமியோடே ஜீவியாதவனும், அவரோடே சிலுவையில் மரியாதவனும், அவரைச் சிநேகிப்பதெப்படி?

4. சிலுவைப் பாரத்தின் கீழிருந்து ஜீவிப்பதும் மரிப்பதும் எவ்வளவோ மன இரஞ்சிதமாம்.

நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துவின் திரு இருதயப்பத்தி.

இச்சிறு சங்க்ஷேபத்தை வாசிக்கும் ஆத்துமமே, திரு இருதயப்பத்தியில் உன்னை நன்றாய் ஸ்தாபித்துக்கொள். சத்திய திருச்சபையின் அருமை நேசமுள்ள பத்தி இதுவாம்.

இது எந்தக் கருத்துக்காகவென்றால்:—

சிந்தனையும், உருக்க மனஸ்தாபமுமற்ற மனுக்குலத்தார்பேரில் சேசுவின் திரு இருதயம் வைத்த அபூர்வ அன்பும், கைம்மாறற்ற நேசமும், வியர்த்தமாய்ப்போயிற்றே; அந்த சுவாமியானவர் வலிய தம்மேல் போட்டுக்கொண்ட தாரித்திரம், துன்ப துயரப் பிரயாசங்கள் நிறைந்த தமது சீவியகால முழுதும் வாக்குக்கெட்டாத பயங்கரமான சிலுவைக் கழுமரத்தில் அவர் அறையுண்டு எவராலும் கைவிடப்பட்டு நிந்தை அவமான நிஷ்டூரணத்துக்குள்ளானபோதும், ஆராதனைக்

குரிய அவருடைய திவ்விய மகத்துவத்துக்
குச் செய்யப்பட்ட நிந்தை தூஷண அவமா
னங்களுக்குப் பரிகாரஞ்செய்யவும், இனிமை,
புனிதம், இரக்கம், பொறுத்தல், சீர்சிறப்பு
இவைகள் அமைந்த கிரியைகளேயன்றி மற்
றொன்றும் இயற்றாத, முறைப்பாடுளையாத
இனிய சாது சாந்தகுணம் தங்கிய திவ்விய
செம்மறிப்புருவையானவருக்கு மனுக்குலத்
தாலுண்டான சொல்லொண்ணாக் கொடிய
நன்றிகெட்டதனத்தின்மட்டில் உனக்குள்ள
உருக்கத் துயரத்தை யாவருக்கும் உரைத்
துக் காட்டுதற்காகவும் இந்தப் பத்தி ஏற்
படுத்தப்பட்டதாம்.

இதன்றியே, அபாத்திரமாய்த் திவ்விய
சற்பிரசாதம் உட்கொள்ளுகிறவர்களால் கட்
டிக் கொள்ளப்படும் நெஞ்சுத் துணிவான
நிந்தைகளுக்காகவும், திவ்விய பூசைநேரம்,
திருப்பீடத்தில் ஆண்டவர் வீற்றிருக்கும்
தருணம், இவைகளில் அவருடைய சமூகத்
தில் கத்தோலிக்கு கிறீஸ்துவர்கள் காண்
பிக்கும் வேண்டா வெறுப்பு, பாராமுகம்,
மறதி, அசட்டைத்தனத்திற்காகவும், விசே
ஷமாய் அவர் தமது ஆவல் அமர்ந்த சற்பிர
சாதத் தனி ஜீவியத்தின்போது வெறுமை
யான ஆலயங்களில் அவருக்குச் செய்யப்ப
டும் புறக்கணிப்புக்காகவும், சுவாமியின் இரு

தயத்திற்குப் பரிகாரஞ்செய்து, இவ்வுலகிலுள்ள சகல மனிதர்களாலும் கட்டிக்கொள்ளப்படும் நன்றிகெட்டதனம் முதலிய பாவங்களைப்பற்றி முக்கியமாய்த் தமது சத்திய திருச்சபை என்னும் மந்தைக்குள்ளிருந்தும் தங்கள் பாவச் செயல்களை அகோரப்படுத்தும் பாவிகளுடைய நன்றிகெட்டதனத்தைப்பற்றி, நமது சிநேக பரிதாப முயற்சிகளால் பரிகரிக்கவும் இந்தப் பத்தி நியமிக்கப்பட்டிருக்கின்றது.

ஆகிலும் இதில் ஆச்சரியமாயிருப்பது ஏதென்றால், நமது சுவாமியானவர் தமது கிருபாகடாக்ஷம் பெற்ற புண்ணியவதிக்குத் தந்த காக்ஷிகளில் அவர் அதிகமாய் முறைப்பட்ட விஷயம், இத்தொகையான தோஷதுரோகங்களைப்பற்றியல்ல; நேச சாதுவான அவருடைய திரு இருதயத்தைப் பாரதூரமாய்க் குத்தி வருத்தின விசேஷம் வேறொன்றுண்டு. அதாவது: தம்முடையவர்களைப்பற்றியே, தம்முடைய சிநேகிதர்களைப்பற்றியே, தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைப்பற்றியே, திவ்விய சற்பிரசாதத்தில் தம்மை அடிக்கடி உட்கொள்ளுகிறவர்களைப்பற்றியே, அவர் முறைப்பட்டார். ஐயோ! இவர்களிடத்தில் பத்தி சுறுசுறுப்பு இல்லையே, பட்சம் உருக்கமில்லையே, பற்றி

யெரியும் ஆசை தயாள அன்பில்லையே, அவர்கள் திவ்விய சற்பிரசாத விருந்துக்கு அணுகிவருகையிலும் தங்கள் வாடிக்கை வழக்கமேயன்றி, அன்பினடையாளம் அவர்களிடத்தில் இலவலேசமும் இல்லையே; இப்பேர்ப்பட்டவர்களைப்பற்றித்தான் சுவாமி அதிகமாய் முறைப்பட்டார். ஏனெனில் “அன்பன் வருத்தும் காயம் எப்போதும் அதிக விதனமுடையதாம்,” என்னும் நாடோடிய வாக்கியமே அதற்குத் திருஷ்டாந்தம்.

நேசப்பற்றுதல்களின் குறையென்னும் சாதாரண குற்றத்துக்குப் பரிகாரமாக, நமது பத்தி நேச சுறுசுறுப்பை மட்டளவின்றிப் பெருக்கிப் பூர்த்தியாக்கிப் புறக்கணிக்கப்பட்டிருக்கும் சுவாமிக்கு ஒப்புக்கொடுப்பதற்காகவே முக்கியமாய் இந்த உச்சித பத்தியானது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தப் பாவப்பரிகார நிவர்த்தியென்னும் இனிய முகாந்தரங்கள் நிமித்தம் மாதாந்தர முதல் வெள்ளிக்கிழமைதோறும் திவ்விய சற்பிரசாதம் உட்கொள்ளுவதாலும், திவ்விய பூசை காண்பதாலும், திவ்வியநற்கருணையை அல்லது திரு இருதயச் சுரூபத்தைச் சந்திப்பதாலும், இந்தப் பத்தி முயற்சியை அனுசரிக்கலாம். ஆகிலும் இந்த உத்தம

கிருத்தியத்தை நிறைவேற்றச் சற்பிரசாதம் உட்கொள்ளும் முயற்சியே மற்றெவ்வித முயற்சிகளிலும் அதிக உத்தம தயாள சிறப்பமைந்த சுகிர்த வகையாம்.

திவ்விய சற்பிரசாதம் வாங்கினபிறகு, அல்லது நடுப்பூசை நேரத்தில், அல்லது திவ்விய நற்கருணைக்கு முன்பாக (முதல் வெள்ளிக்கிழமைக்கென்றே இயற்றப்பட்டிருக்கும்) பரிகார முயற்சியென்னும் செபத்தைச் செபிக்கப் பிரயாசப்படக்கடவாய். இத்தினத்தைத் தம்மைக் குறித்து விசேஷ வணக்கமாய்ச் செலவழிக்க வேண்டுமென்று அவரே கேட்டுக்கொண்டார்.

இந்தப் பத்தியைப் பிரபலியப்படுத்த உன்னாலியன்றமட்டும் பிரயாசப்படு; உன் பிரயாசத்துக்குரியது இதுவேயன்றி, வேறொன்றும் இல்லை; இதை அனுசரிக்கிறவர்களுக்குச் சுகக்ஷேம அனுகூல முதலிய பிரபஞ்ச நன்மைகளை முதலாய்த் தருவதாக நமது திவ்விய இரக்ஷகர் வாக்குக் கொடுத்திருக்கிறார். இந்தப் பத்தியை அநுசரிக்கிறவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் மகத்தான நன்மைகளுக்குள்ளே மிகவும் ஆச்சரியத்துக்குரியதான ஒரு நன்மை ஏதென்றால், தொடர்ச்சியாக ஒன்பது முதல் வெள்ளிக்

கிழமைகளில் தக்க ஆயத்தத்தோடு திவ்விய சற்பிரசாதம் உட்கொள்ளுகிறவர்கள் தேவ கோபாக்கினைக்கு ஏதுவாகத்தக்க துர் மரணத்துக்குள்ளாகவேமாட்டார்கள், என்று அந்தத் திவ்விய கர்த்தர்தாமே திருவுளம்பற்றியிருக்கிறார். மோக்ஷபாக்கியத்தைக் கைக்கொள்ள இது எவ்வளவோ சுளுவான வழி. உனது இரக்ஷணியத்தை நிச்சயப்படுத்தத் தக்க ஆதாய அன்பனுகூலம் அமைந்த சுருக்கமான வழி இதுவாமே.

அமலோற்பவ கன்னிமாதா நிர்ப்பந்தமான சிலுவையடியில் நின்றபோது, அன்பு இரக்கமுள்ள அவளுடைய இருதயம் துக்க விதனத்தாலும் பக்ஷ பரிதாபத்தாலும் சிலுவையில் அறையுண்டு நொறுங்கினதைக் குறித்து பரலோக நேசமமைந்த இந்தப் பத்தியின் வரப்பிரசாதத்தை உனக்குக் கட்டளையிட்டருள அந்த ஆண்டவளை மன்றாடு. ஏற்கனவே குறித்திருக்கும் சிநேக கிருத்தியங்களில் எதையும் நீ தவறாமல் நிறைவேற்ற இன்று சில ஒறுத்தல் முயற்சிகளைச் செய்து ஒப்புக்கொடு. சுய ஒறுத்தலே உண்மை நேசத்துக்கு உத்தம அடையாளமாம்.

இந்தப் பத்தியை நீ பிரசித்தப்படுத்தும்படியாய் நாம் திரும்பவும் கேட்டுக்கொள்ளு

கிறோம். இதைச் செய்ய உனக்கு எப்பக்கத்
திலுமிருந்து வரக்கூடிய விக்கினங்களையெல்
லாம் ஜெயித்துத் தள்ளுவாயாக.

ஓ! இதனால் உனக்குண்டாகும் சம்பா
வனை ஏராளமானதாம். இச்சிநேகக் கட
னைத் தீர்க்கும் கிரியைக்குவரும் திரளான
பாக்கியம் மனிதருடைய புத்தி நினைவுக்
கெட்டாத பேரின்ப மோக்ஷபலனும், இந்
தப் பத்தியைப் பிரபலியப்படுத்துவதற்கு
நீ செய்யத்தகும் சொற்ப பிரயத்தனங்
களைத் தொந்தரவாக நீ எண்ணாதே. இதில்
உனக்கு எவ்வளவு வருத்தம் நேரிடுமோ அவ்
வளவுக்கு அதிக பேறுபலனும் சம்பாவனை
யும் உனக்குண்டாகும் என்று நினைத்துக்
கொள்.

"மனிதர் சமுகத்தில் நம்மை மறுதலிப்ப
வனைப் பரமண்டலங்களில் வீற்றிருக்கும்
நமது பிதாவின் சமுகத்தில் நாமும் மறுத
லிப்போம்" என்று ஆண்டவர் உரைத்த
வாக்கியத்தை நினைத்துக்கொள். ஜூன்-மீ
சேசுவின் திரு இருதயத்திற்கு உரிய மாதம்
என்று அறிந்துகொள். அந்த மாதத்தில்
கூடியமட்டும் அடிக்கடி திவ்விய சற்பிரசா
தம் வாங்கு. சேசுவின் திரு இருதயத் திரு
நாள் அந்த மாதத்திலேதான் கொண்டாடப்

படுகிறது. திவ்விய சற்பிரசாதத் திருநா
ளுக்கு எட்டாம் நாளை யடுத்த வெள்ளிக்
கிழமையிலேதான் அந்தத் திருநாள் வருகி
றது. வருஷமுழுதும் வருகிற முதல் வெள்
ளிக்கிழமைகளெல்லாம் மாக்ஷிமைதங்கிய
இந்த உற்சவத்திற்கு ஆயத்தமாகவே
கொண்டாடப்படுகிறது. முத். மார்கரீத்
மரியம்மாளுக்கு சேசுவின். திரு இருதயம்
தந்தருளிய அன்பமைந்த ஆச்சரிய காக்ஷி
யை நினைப்பூட்டும் திருநாளிதுவே. நமது
மனதையும் நினைவையும் ஆனந்தத்தால்
நிறப்பி இருதயத்தை வசப்படுத்தும் உற்
சவம் இதுவே. இந்த மகோற்சவத்திற்கு
முந்திய நவநாட்களில் கூடியவரையில் அநு
தினமும் திவ்விய சற்பிரசாதமும் வாங்க
உன் ஆத்தும குருவானவரிடத்தில் உத்தரவு
கேள். சற்பிரசாதமென்னும் நேச தாசிகத்
தில் அமர்ந்திருக்கும் அன்பரானவர், அற்ப
ஈன இச்சைக்கடிமையான நமது இருதயங்
களின்பேரில் கொண்டிருக்கும் இரகசிய பரி
தாப ஆசைகளுக்கு இது எவ்வளவோ உதார
திருப்திகரமாகும்!

அக்டோபர் மாதம் 17-ம் தேதியும், அன்
பான இந்தச் சிறந்த பத்திக்கு மிகவும் அரிய
பெருமை தங்கிய உற்சவமாம். திரு இரு
தய இரகசியங்களின் சிங்காரப் பாத்திர

மாகிய மூத். மார்கரீத் மரியம்மாளின் திரு நாள் இதுவே. பத்தி சுறுசுறுப்புக்கும் நன்றியறிதலுக்கும் இன்பநேச பிரயத்தனங் களுக்கும் உரிய உற்சவம் இதுவே.

இந்த இனிய பத்திக்கிருத்தியத்தில் நீயும் சேர்ந்திரு. இவ்வளவு காலம் பொறுமை யோடு காத்திருந்த உனது உண்மையான சிநேகிதனாகிய அந்தச் சுவாமியின்பேரில் இனி ஈரமற்ற கல்நெஞ்சனாயிராதே. இதற்கு மேல் உன்னை அதிகமாய் அவர் கேட்கப் போகிறதில்லை.

விசேஷித்த பத்தி.

எவ்வளவுதான் பாவமாசடைந்த ஆத்தும மாயினும் அப்பேர்ப்பட்ட ஓர் ஆத்துமத்தை அன்புள்ள சேசுவின் திரு இருதயத்தண்டை யில் கொண்டுவந்து சேர்க்கும் சுகிர்தமானது உன் ஜீவியகாலமெல்லாம் நீ செய்யக்கூடிய உத்தம புண்ணியங்களிலும் மேலானதாமே. இந்த ஆத்துமத்தின் இரட்சணியத்திற்காகச் செலுத்தப்பட்ட மிகுந்த விலைமதிப்பை நினைத்துப்பார்.

ஒருவன் தன் ஆத்தும இரக்ஷணியத்தைக் கவனிப்பது மகா உத்தமமென்பதற்குச் சந் தேகமில்லை. ஆயினும் அற்பசொற்ப நிற் பாக்கியமான நமது மனது இவ்விஷயத்தி

லும் சுயபக்ஷமுள்ளதுதான். மற்றும் சகல காரியங்களிலும் இந்தச் சுயபக்ஷமானது அன்பு சாந்தம் பொறுதி அமைந்த நமது திவ்விய இரட்சகரைப்பற்றி நாம் அறிந் திருக்கும் சகல சற்குணங்களுக்கும் நேர் விரோதமாயிருக்கின்றது. அவருடைய ஜீவியகாலமெல்லாம் ஓயாத கவலையிலும் தகனப்பலியிலும் செலவழிக்கப்பட்டதாம். புத்திகெட்டு வழிதப்பி அலைந்து திரியும் நிர்ப் பாக்கிய பாவிகளுக்காகத்தான் இவையெல் லாம் அவர் செய்தார். ஊதாரிப்பிள்ளையி னுடையவும், மதலேனம்மாளுடையவும், பச் சாத்தாபக் கள்ளனுடையவும், வரலாறுகளை நினைத்துப்பார். நாம் சொல்லும் விசேஷம் அப்போது உனக்குத் திருஷ்டாந்தமாகத் தெரியவரும். சிலுவையில் நிர்ப்பந்த வேத னைப் படுகையில் அவர் செபித்த கடைசிச் செபம், தம்மைக் கொலைப்படுத்தும் பாவி களுக்கு இரக்கத்தையும் பொறுத்தலையும் வருவிப்பதற்காகத்தான் செபித்தார். ஆத் தும இரட்சணியத்தின்பேரில் அவருக்கு எவ் வளவான ஆசையிருந்தது. ஆத்தும இரட் சணிய அலுவல் அர்ச்சியசிஷ்டவர்களுக்கு ஸ்திரமான அடையாளமாம்.

இந்தப் பத்தியில் நீ சேர்ப்பித்த ஆத்து மங்களின் ஒரு சிறு டாப்பை எழுதி வைத்

துக்கொண்டு முதல் வெள்ளிக்கிழமைக்கு சில நாளைக்கு முந்தி, திவ்விய இருதயத்தை அவர்களுக்கு நினைப்பூட்டுவது உனக்கு இனிய அலுவலாய் இருக்கக்கடவது.

இடைவிடாமல் அன்பாய் அவதானித்துக் கொள்ளத்தகும் விசேஷம்.

நமதன்பான "இரட்சகர் திருப்பீடத்தில் எப்போதும் வீற்றிருக்கிறாரென்றும், நமது விண்ணப்பங்களுக்கு இரங்கி அருள்புரிய பூரண சித்தமாயிருக்கிறாரென்றும் நீ மறந்து போகாதே. அவருடைய சிநேக தேவதிரவிய அநுமானத்தில் அவர் காண்பிக்கும் அளவற்ற அதிசய இரக்கம். தயை அன்பு இவைகளை யோசித்துப்பார். நாம் அவருக்கு ஊழியம் பண்ணுகிறோமென்று நினைக்கும்போது முதலாய், நாம் அவருக்குக் காண்பிக்கும் அற்ப சொற்ப அரைகுறையான அன்பை அதற்கு எதிரிடையாய் வைத்துச் சீர்தூக்கிப்பார். நாம் பாவத்தோடிருக்கும் பொழுது, அறியாமையினாலும் அகந்தையினாலும் அவரை முழுதும் மறந்து, அல்லது துணிந்து நிந்திக்கிறதுமல்லாமல், சாந்த குணமுள்ள அந்த சுவாமிக்கு விரோதமாய் எழும்பிக் கலகமும் செய்கிறோமே! "அவரு

டைய நுகத்தடி இனிமையாயும், சுமை இலேசாயும் இருக்கின்றது" அல்லவோ? ஆயினும் நம்மாலியன்றபொழுதெல்லாம் மறுபடியும் மறுபடியும், நிஷ்டூரமாய் அவரைச் சிலுவையில் அறைகிறோமே! இது எவ்வளவோ நன்றிகெட்ட துரோகம்! நமது மன்றாட்டுக்குக் காதுகொடுத்து, நம்மை ஆசீர்வதித்து நமக்கு பொறுத்தலைத் தந்து தேற்றித் திடப்படுத்தி நடத்தும்படிக்குத் திருப்பீடத்தில் அவர் இடைவிடாமல் ஆசை ஆவலோடு வீற்றிருப்பதையும் நினைத்துக் கொள். இதை அடிக்கடி தியானித்துப் பார்த்து உன் சீவியகாலமெல்லாம் நீ செய்யத்தகும் சுகிர்த முயற்சி என்னவென்றால்:— அன்பமைந்த அவருடைய திருவீடாகிய ஆலயத்தின் ஓரமாய் நீ வழி நடந்துபோகையில், சிநேக சாகர பொறுமை விசித்திரமாகவும், இரக்கத்தின் பரம இரகசியமாகவும் அமர்ந்திருக்கும் அந்தச் சுவாமியை வாழ்த்தி வணங்கிப் போற்றிப் புகழத்தக்கதாக அங்கு சென்று, அவரைச் சந்திக்க அலட்சியம் செய்யாதே. இன்னும் உனக்கு சாவகாசம் இருக்கும்போது திவ்விய நற்கருணைக்கு முன்பாக ஆழ்ந்த சிந்தனை ஆராதனை முயற்சியோடு முழந்தாளிலிருந்து பூலோக நினைவுகளை அகற்றி, ஆண்டவரோடு ஒன்றித்து விசுவாசம்

பத்தி சுறுசுறுப்போடும் முழு ஆத்தும
நேசத்தோடும் சொல்லத்தக்க சிறு செபங்க
ளாவன :—

"இருதயத் தாழ்ச்சியும் சாந்தகுணமுள்ள
சேசுவே! என் இருதயத்தை உமது திவ்
விய இருதயத்துக்கு ஒத்ததாக்கியருளும்,
சுவாமி."

எவ்விதத்தாலும் விரோதித்து நிந்திக்கப்
படுகிற என் நல்ல சேசுவே! எனது நன்
மைக்காகவே தேவரீர் எனக்கு கட்டளை
யிடும் சிறு சிலுவைகளை நான் பொறுமை
யோடு சகிக்கவும் உமக்காக அவைகளை
நேசிக்கவும் எனக்கு வரம் தந்தருளும்,
சுவாமி."

"மாசில்லாத தேவ செம்மறிப்புருவையே,
பிலாத்தன் அரண்மனையில் அநியாயமாகவும்
அவமானமாகவும் குற்றஞ் சாட்டப்பட்ட
போதும், கசையால் அடிபட்டபோதும்,
திரு முகத்தில் துப்பி பரிகாசம் செய்யப்
பட்டபோதும், நிந்தை கோரணியாய்க்
கொடிய முள்முடி சூட்டப்பட்டபோதும்,
இகழ்ச்சி புறக்கணிப்புக்குரிய பொருளாய்
எவருக்கும் தோன்றினபோதும், தேவரீ
ரிடத்தில் விளங்கின தயை பொறுமையைக்
குறித்து, எனக்கும் வருகிற துன்ப விரோ

தங்களை நான் மவுனமாய்ப் பொறுத்துச் சகி
க்க வரப்பிரசாதம் தந்தருளும் சுவாமி."
"எவ்வளவேனும் முறைப்பாடோயாத
சேசுவே! நான் நெறி வழுவிக் காயப்பட்
டுத் துக்கித்து, எண்ணங்குலைந்து, அல்லது
இகழப்பட்டிருக்குஞ் சமயத்தில் விசேஷ
மாய் எனக்கு தயைபுரிந்தருளும், சுவாமி"
"திவ்விய சேசுவே! என் வாழ்நாள்களை
எல்லாம் காசுபெறாத உலகத்துக்கு நான்
கையளிக்காதபடிக்கும். அடிக்கடி உமதண்
டையில் நான் வந்து இளைப்பாறும்படிக்கும்,
எனக்கு எப்போதும் நல்ல புத்தி தந்தரு
ளும், சுவாமி."
"மதுர சேசுவே! நாடோறும் நான்
உம்மை அதிகமதிகமாய்ச் சிநேகிக்க வரப்பிர
சாதம் தந்தருளும், சுவாமி."
"திவ்விய உபாத்தியாயரும் இனிய ஆண்
டவருமாகிய சேசுவே! மிகவும் பரிசுத்த
முள்ள உமது திரு இருதய நேசமே எனது
ஜீவியகாலத்தின் முக்கிய ஆசை நோக்கமா
யிருக்கக்கடவது."
"நல்ல சேசுவே! எனக்கு இன்னும் ஒரு
கிருபை செய்யவேணும் சுவாமி; உமது அதி
உத்தம மதுரமடங்கிய கிருபை அதுவாம்.
அளவற்ற நேசம் அமைந்த உமது திரு இரு
தயம், இனி இல்லை என்னப்பட்டவிதமாய்

எனக்காகக் கண்டுபிடித்து இயற்றியிருக்கிற நன்மை அதுவாம். ஆண்டவரே, அது ஏதென்றால், நமது சத்திய திருச்சபையின் சகல பத்திக்குரிய பொருளும் நோக்கமுமாய் அமைந்த சுகிர்தம் அதுவாம், சாதுகுணமுள்ள சேசுவே! அப்பேர்ப்பட்ட பத்திக்குரிய பொருள்களுக்குள் முக்கியமாய் உருக்கநேசம் நிறைந்த பொருள் அதுவாம். பரிசுத்தமும் ஆச்சரியமும் ஆராதனைக்குரியதுமான திருப்பீடத்தின் தேவதிரவிய அநுமானத்தில் பிரசன்னமாயிருக்கும் தேவரீர் பேரில் ஆழ்ந்தடர்ந்தெரியும் தேவ சிநேக அக்கினியை என் இருதயத்தில் பற்றியெரியச் செய்தருளும், எனக்கிதுவே போதும், சுவாமி.

ஆமென் சேசு.

சேசுநாதர்சுவாமி தமது திவ்விய இருதயத்தின்பேரில் பத்தியுள்ளவர்களுக்காக முத். மார்கரீத் மரியம்மாளுக்கு கொடுத்த வார்த்தைப்பாடுகள்.

1. தங்கள் அந்தஸ்தின் கடமைகளையெல்லாம் சமுத்திரமாய் நிறைவேற்ற வேண்டிய சகல வரப்பிரசாதங்களையும் அளித்தருளுவோம்.

2. அவர்களுடைய குடும்பங்களில சமாதானத்தை விளைவிப்போம்.

3. அவர்களுடைய சகல துன்பங்களிலும் ஆறுதலாயிருப்போம்.

4. அவர்கள் உயிரோடிருக்கும்போதும் விசேஷமாய் அவர்களுடைய மரணசமயத்திலும் அவர்களுக்குத் தவிராத அடைக்கலமாயிருப்போம்.

5. அவர்கள் தொடங்குகிற சகல காரியங்களும் அநுகூலமாகும்படி திரளான வரப்பிரசாதங்களைப் பொழிந்தருளுவோம்.

6. நமது இருதயமானது பாவிகளுக்கு தயாளத்தின் ஊற்றும் கரைகாணாத சமுத்திரமுமாயிருக்கும்.

7. புண்ணியத்தின் வழியில் சுறுசுறுப்பற்ற ஆத்துமாக்கள் சுறுசுறுப்பை அடைவார்கள்.

8. புண்ணியத்தின் வழியில் சுறுசுறுப்புள்ள ஆத்துமாக்கள் அதிசீக்கிரமாய் மேலான உத்தமதனத்தை அடைவார்கள்.

9. எந்தெந்த வீடுகளில் நமது திரு இருதயப்படத்தை ஸ்தாபித்து சங்கிப்பார்

களோ அந்த வீடுகளை முதலாய் நாம் ஆசீர்வதிப்போம்.

10. பாவத்தில் முதிர்ந்து அதில் நிலைக்கொண்ட ஆத்துமாக்களை திருப்புகிறதற்கான வரத்தைக் குருக்களுக்குத் தந்தருளுவோம்.

11. நமது இருதயத்தின்பேரில் பத்தி மற்றவர்களிடத்திலும் உண்டாகப் பிரயாசப்படுகிறவர்களின் நாமங்களை நமது இருதயத்தில் ஒருக்காலும் அழிக்கப்படாதவிதமாய் அச்சுப்போலப் பதிப்பிப்போம்.

12. மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமைகளில் ஒன்பது கிழமைகள் விடாமல் நன்மை வாங்குகிறவர்கள், சாகும்போது பாவத்துக்கு மனஸ்தாபப்பட்டுச் சாகும்வரம், அளவில்லாத பெலனுள்ள நமது இருதயத்தின் சிநேகம் கொடுக்குமென்று அவ்விருதயத்திலுள்ள இரக்க மிகுதியால் வார்த்தைப்பாடு கொடுக்கிறோம். இப்படிச் செய்பவர்கள் நமது சத்துருக்களாயாவது தேவதிரவிய அநுமானங்களின்றியாவது சாகவே மாட்டார்கள். அவர்கள் சாகும்வேளையில் நமது திரு இருதயம் அவர்களுக்கு நிச்சயமான அடைக்கலமாயிருக்கும்.

திவ்விய கர்த்தருடைய திரு இருதயத்தின்பேரில் தியானங்கள்

வெள்ளிக்கிழமைகளில் சபையார் திவ்விய நற்கருணை வாங்கச் சமயம் இல்லாவிட்டால் அன்றையத்தினத்தில் குறிக்கப்பட்ட அரை மணி நேரத்தைப் பத்தியாக செலவழிக்கத் திரு இருதயத்தின்பேரில் இரண்டு தியானங்களைச் சேர்த்துவைத்தோம்.

முதல் தியானம்.

திவ்விய கர்த்தருடைய திரு இருதயத்தின் விலைமதிக்கப்படாத மேன்மை.

ஆயத்தச் செபம்: சேசுவின் திரு இருதயமே, என் புத்தி, நினைவு, மனதையும், என் சகல கிரியைகளையும், தேவரீருடைய திவ்விய மகத்துவத்தின் ஆராதனை வணக்க

தோத்திரத்திற்காக நான் செலவழிக்க என க்கு வரப்பிரசாதந் தந்தருளுஞ் சுவாமி.

1-ம் கிருத்தியம்: காயம்பட்டதுமாய், அக் கினிச் சுவாலையால் சூழப்பட்டதுமாய், முள் முடி புனையப்பட்டதுமாய், அதனடுவே சிலுவை ஊணப்பட்டதுமான திரு இருதய த்தைச் சேசுநாதர்சுவாமி மூத்தி. மார்கரீத் மரி அலக்கோர்க்கம்மாளுக்கு காண்பித்து காட்சி தந்த விதமாக இப்போது அவர் திவ் விய சற்பிரசாதத்திலும் நீ பார்க்கிறதுபோல உருபிகரித்துக்கொள்.

2-ம் கிருத்தியம்: மனோவாக்குக்கெட்டாத திரு இருதயத்தின் மேன்மையை நீ அறிய வும் கர்த்தருடைய சித்தத்துக்கு ஒத்தபிர காரம் வணக்க நேச உணர்ச்சிகளுடன் அவ ருடைய திரு இருதயத்தைச் சங்கிப்பதற்கு உன்னை ஆயத்தப்படுத்தவும், விசேஷ ஞானத்தெளிவை உனக்குத் தந்தருள வேணுமென்று கர்த்தனை மன்றாடு.

முதல் பிரிவு.

சேசுக்கிறீஸ்துவின் திரு இருதயமானது தெய்வீகத்தோடு ஒன்றித்திருக்கிறது.

மனுஷ அவதாரத்தின்போது தேவசுபா வம் சேசுவின் ஆத்துமத்தோடு மாத்திர

மல்ல, இன்னமும் ஆராதனைக்குரிய அவரு டைய திருச்சரீரத்தோடும் சுயமாய் ஒன்றித் திருந்தது. இப்பேர்ப்பட்ட சுயமான ஒன் றிப்பில் பிதாவாகிய சர்வேசுரனுடைய நித் திய வார்த்தையின் தெய்வீகத்தோடு அவ ருடைய இருதயமும் ஒன்றித்திருந்தது. இந்த முகாந்தரத்தையிட்டு அது திவ்விய இருதயமுமாய், தேவனுடைய இருதயமு மாய் இருந்தது. இன்னமும் நித்திய காலத் திற்கும் அவ்விதமாகவே இருக்கும். ஆகை யால் சர்வேசுரன் அத்திரு இருதயத்தின் ஜீவியத்திற்கு மூலாதாரமாய் இருக்கிறார். அவருடைய இருதயத்தின் ஜீவியம் மனுஷீ கத்துக்குரியதாய் மாத்திரமல்ல, இன்னந் தெய்வீகத்துக்குரியதுமாய் இருக்கின்ற தாமே. நாமும் சகல விசுவாசிகளும் அதற்கு செலுத்தும் உன்னத வணக்க தோத்திரங்க ளெல்லாம் ஒரு கடைசிக் கதிபோல் அத் தெய்வீகத்தை நோக்கியே செல்லுகின்றது. ஆகையால் திவ்விய கர்த்தருடைய திரு இரு தயப் படத்தின் முன்பாக நீ சாஷ்டாங்க மாய் விழுந்து வணங்கும்பொழுது எவ்வ ளவோ மேலான வஸ்துவுக்கு உன் வணக்க தோத்திரத்தைச் செலுத்துகிறாயென்று அறிந்துகொள். இப்பேர்ப்பட்ட உன்னத கர்த்தரின் தெய்வீகத்திற்கு யோக்கியமான

ஆழ்ந்த வணக்க உணர்ச்சிகளால் உன் பத்
திக்கிருத்தியத்தைப் பலனாக்கிக்கொள்ள நீ
பிரயாசப்படக்கடவாய். ஆனால் மனுஷாவ
தாரமான தேவனின் திரு இருதயம் தேவ
சுபாவத்தோடு இப்படி அன்னியோன்னிய
மாய் ஒன்றித்திருப்பதினாலே அது எத்தனை
யோ உச்சித வரப்பிரசாதங்களுக்கு இருப்
பிடமாய் அமைந்து அலங்கரிக்கப்பட்டிருக்கி
றது. இஷ்டப்பிரசாதத்தினுடையவும் அர்ச்
சியசிஷ்டதனத்தினுடையவும் இந்தப் பொக்
கிஷங்கள் தெய்வீகமாய் இருப்பதினாலே
மட்டற்றதாய் இருக்கிறதென்பதற்குச் சந்
தேகமில்லை. தேவனின் பரிசுத்ததனத்தை
யே பரிசுத்ததனமாக அணிந்திருக்கும் இரு
தயமே, தேவனின் அர்ச்சியசிஷ்டதனத்தை
யே அர்ச்சியசிஷ்டதனமாகவும், தேவனின்
நேசத்தையே தேவநேசமாகவும், தேவனின்
பிலத்தையே பிலனாகவும், தேவனின் இனி
மை, தயாளம், உண்மை, உதாரம் என்னும்
உச்சித குணங்களையே சுய உச்சித குணங்க
ளாகவும் அணிந்திருக்கும் திரு இருதயமே!
இப்படியாய் தேவன் ஆராதனைக்கும் அன்
புக்குரியவராயிருப்பதுபோல, ஆராதனைக்
கும் அன்புக்கும் உரியதாயிருக்கும் திரு இரு
தயமே! சிலவிசை இன்றுதான் முதல் தட
வையாகத் தேவரீர் எத்தன்மையானவரெ

ன்று நான் உணரத் தொடங்குகிறேன். என்
னுத்தமமே, நிர்ப்பாக்கியப்பட்ட உன் இரு
தயத்திற்கு, உத்தம மாதிரிகையாய் இருக்
கும்படிக்கே, சேசுவின் திரு இருதயம் இவ்
வளவு மேன்மை, பரிசுத்தம், அர்ச்சயம், பிர
மாணிக்கம், திடாரிக்கம், என்னும் சுகிர்தங்க
ளால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. ஆகை
யால் இந்த நன்மை வரங்கள் நிறைந்திருக்
கும் சேசுவின் திரு இருதயத்தோடு உன்னிரு
தயத்தைக் கவனமாய் ஒப்பிட்டுப்பார்.
ஆ! சர்வேசுரா, எவ்வளவோ வித்தியா
சம்! தெய்வீகத்தின் உயிருள்ள ஆலயமே!
என்னிருதயம் இருளில் அமிழ்ந்தியிருக்கி
றது. உம்மிடத்திலே ஞானத்தின் சம்பூர
ணம் இயற்கையாய்க் குடிகொண்டிருக்கி
றது. என்னிருதயம் பெலவீனமுள்ளதா
யிருக்கிறது. உம்முடையதோ, சர்வ வல்ல
பத்தின் சிம்மாசனமாயிருக்கிறது. என்னிரு
தயம் பயந்து திகிலடைந்து தக்கித்து வரு
ந்தி இன்பத்தை ஆசித்து தேடியும் அடைய
நம்பிக்கையற்றதாயிருக்கிறது. உம்மில்மா
த்திரம், உம்மைக் கண்டுபாவித்தலில் மாத்
திரம், என் உண்மையான பாக்கியத்தை
நான் தேடவேண்டியதாயிருக்கிறது. இனி
உம்மிடத்திலேயே அதை நான் தேடுவேன்
சுவாமி.

இரண்டாம் பிரிவு.

சேசுவின் திரு இருதயம் சிநேக சிம்மா
சனமாயிருந்தது. இன்னமும் அப்படியே
இருக்கிறது.

இருதயமானது பொதுவாய்ச் சுறுசுறுப்
புள்ள அவயவமாகிலும் திவ்விய கர்த்தரி
டத்தில் அது அதிக முயற்சியுடையதாயிருக்
கின்றது. அதெப்படியென்றால், தமது பிதா
வானவர்பேரில் மாத்திரமல்ல. இன்னம்
ஐயோ! நிர்ப்பாக்கியப் பாவிகளாகிய நமது
பேரிலும் அவர் வைத்த சிநேகத்திற்கு அவ
ருடைய திரு இருதயமே இருப்பிடமாயிருந்
தது, இன்னமும் இருக்கின்றது. சிநேகமும்
ஜீவியமும் அங்கேயே ஒருமிக்கத் துவக்கி
னது. என்னென்ன தொழிலும் முயற்சி
யும் சிநேகமுமுள்ள இருதயப் பற்றுதலுக்
குரியதோ, அவ்விதமான தொழில்களையெல்
லாம் உன் மட்டிலும் நிறைவேற்ற வேணு
மென்று அத்திரு இருதயம் நன்றாய் அறிந்து
கொண்டது. நினைவால் நீ மாட்டுக்கொட்
டிலுக்குப் போய் அங்கே அந்தப் பால
தேவனின் இருதயத்திற்குள் பிரவேசித்துப்
பார். புதிதாய் உற்பத்தியான அந்தத் திரு
இருதயத்தின் சிநேகம் எத்தன்மையாயிருக்
கிறதென்றால், "அவருடைய ஜீவியத் துவக்

கத்தில் ஒரு இராக்ஷதனைப்போல் மகிழ்ச்சி
கொண்டாடினார்," என்று இந்தத் திவ்விய
பாலனைக் குறித்து வாஸ்தவமாய்ச் சொல்ல
லாம். மெய்யாகவே அவருடைய ஜீவியம்
சிநேக ஜீவியமாம். ஓ! அவருடைய ஜீவிய
காலமெல்லாம் எவராலும் எதிர்த்து முடி
யாத பிரயத்தனங்கள் எத்தனையோ, உழை
ப்பமைந்த பிரயாசங்கள் எத்தனையோ,
இன்னும் சலியாத முயற்சிகள் எத்தனை
யோ, உனக்காக அவர் நடத்தினார்.
பொதுவாய் இருதயமானது சிநேக உக்கி
ரகத்திற்கு உட்படும்போது அதன் பற்று
தல் பதஷ்டங்களும் பிரயாசங்களும் எப்
படிப்பட்டதாய் இருக்குமென்று நீ கவ
னித்துப்பார். அப்பேர்ப்பட்ட உணர்ச்சி
களையெல்லாம் சேசுவின் திரு இருதயம்
உன்மட்டிலும் உணர்ந்து வருந்தி முயன்ற
தென்பதற்குச் சந்தேகமில்லை. சிநேகத்தை
நெருப்புக்கு ஒப்பிடுகிறோமே, ஏன்? ஏனெ
னில் உணரக்கூடிய அக்கினியை அது நமது
இருதயத்தில் மூட்டுகின்றது. சிநேக மிகுந்
திருக்கும் இடத்தில் அந்த அக்கினிச் சுவாலை
எவ்வளவு எரிக்குந்தன்மையா யிருக்கிற
தென்றால், அர்ச்சியசிஷ்டவர்களிடத்தி
லிருந்த அந்த சிநேக உஷ்ணத்தைத் தணிக்
கக் குளிர்ந்த காற்றும் ஜலமும் வேண்டிய

தாயிருந்ததாமே. இப்பேர்ப்பட்ட ஸ்திதி
யிலேதான் சேசுவின் நேச திரு இருதயம்
உனக்காக அத்தனை வருஷகாலம் சீவித்தி
ருந்தது. ஓ! சிநேகமுள்ள ஆத்துமத்தின்
பற்றுதலுக்கு இருதயமும் எவ்வளவு
இணங்கிப்போகிறதுபார். ஏனெனில் சிநே
கம் மிகுதியாயிருக்கையில் எவ்வளவு பத
ஷ்டமும் மும்முரமான முயற்சிகளும் அதில்
இயல்பாயுண்டாகின்றது. பற்றுதல் மிகுந்
திருக்கும் இருதய உயிரானது தூரந்தொலை
யைக் கண்டு சோர்ந்து மடிந்து போகாது.
நன்றிகெட்டதனமோ, ஒரு வாளைப்போல்
அவ்விருதயத்தைக் குத்திக் காயப்படுத்துகி
றது. இரக்கமோ, அதை நெறுக்கி வருத்து
கின்றது. சேதபாதமோ, அதற்குச் சலிப்பை
யுண்டுபண்ணி உயிரை மாய்த்துவிடுகிறது.
இப்பேர்ப்பட்ட குணுகுணங்களையுடைய
நேச சேசுவின் திரு இருதயத்தை நீயே
இவ்வளவான சஞ்சலத்திற்கு உள்ளாக்கி
னாய். ஓ! அந்த அன்புள்ள இருதயம் உன்
பேரில் வைத்த பட்சமிகுதியால் அநு
பவித்த துன்பம் அதற்கு துன்பமேயல்ல,
இன்பமாகவே இருந்தது. அந்தத் துன்பங்
களையெல்லாம் இப்போது நான் உனக்கு
காண்பிக்கக்கூடுமானால், ஓ! அது எத்
தன்மையான காட்சியாயிருக்கும். அத்திரு

இருதயம் உன்பேரில் வைத்த நேசத்தால்
பூரித்து மகிழ்ந்து துடித்து பட்சமிகுதியால்
ஆனந்த பரவசத்திற்குள்ளும் அமிழ்ந்தி
யிருந்ததாமே. இப்பேர்ப்பட்ட துக்கதுயர
உணர்ச்சிகளால் அத்திரு இருதயம் கலங்
காத நெஞ்சமுமாய் கரைகாணாத சந்தோஷ
முமாயிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை.
ஆனால் சிநேக பிரமாணிக்க பரிசுத்த ஆத்து
மங்களுக்கு அவர் பட்ட பாடுகள் மிகுந்த
பலனையிற்றேதவிர வியர்த்தமாய்ப் போக
வில்லை. அந்த இன்ப மனோகர உணர்ச்சி
களுக்கும், அத்திரு இருதயத்தில் பற்றி
யெரியும் மகிமை பொருந்திய தேவ சிநேக
அக்கினிக்கும், நீயும் ஒரு காரணமாயிருக்க
லாம். இந்தச் சிந்தனைகள் எவ்வளவு அற்ப
சொற்பமாயிருந்தும் அத்திரு இருதயத்தில்
உன்னிமித்தம் எரிந்துகொண்டிருக்கும் தேவ
சிநேகப் பலாபலனைப்பற்றி இப்போது நீ
என்ன நினைக்கிறாய்? இப்பேர்ப்பட்ட
தியான யோசனையால், ஆச்சரியம்,
புகழ்ச்சி, நன்றியறிதல் முதலிய முயற்சிகள்
உன்னிடத்திலுண்டாகப் பிரயாசப்படக்
கடவாய். விசேஷமாய் உன்னிருதய ஆசை
யை விளைவித்து அதிகரித்து இனிமேல்
அத்திவ்விய இருதயத்தின் சிநேகமே உன்
னிருதயத்தின் இடைவிடாத அலுவலாய்

இருக்குமென்று பிரதிக்கினை செய்யக்கட
வாய்.

மூன்றாம் பிரிவு.

சேசுக்கிறீஸ்துவின் பரிசுத்த இருதயத்
தில் குடிகொண்டிருந்த துயரம்.

துன்பமில்லாத சிநேகம் ஜீவியமில்லை
யென்று பத்தியுள்ள தோமாஸ் அக்கெம்பிஸ்
என்பவர் சொல்லியிருக்கிறார். அப்படியே
சேசுவின் திரு இருதய ஜீவியம் எல்லாம்
சிலுவையுமாய்ச் சீவ வாதையுமாய் இருந்த
தேயொழிய மற்றப்படியல்ல., திருப் பாடு
களின்போது அவ்விருதயம் அனுபவித்த
பாகமாகிய வேதனையைச் சற்றே தியா
னித்துப்பார். ஆராதனைக்குரிய அவரு
டைய திருச் சரீரத்திற்கு வந்த கொடிய
நிந்தை அவமான பாடுகளை நீ தியானிக்கும்
போது உனக்குண்டாகும் இரக்கத்தையும்
பயங்கரத்தையும் யோசித்துப்பார். அந்தப்
பாடுகளெல்லாம் ஒன்றாய்க் கூடினாலும்
இந்தத் திரு இருதயம் பட்ட வேதனைக
ளுக்கு அவைகள் நிகரல்ல. ஏனெனில்
அந்தப் பாடுகளுக்குள்ளே பார்க்கமுடியாத
அவ்விருதயவாதையே, மிகவும் பயங்கரத்
துக்குரியதாயிருந்தது. முந்த முந்தப்
பூங்காவனத்தில் அது குத்துப்படத் துவக்

கிக் கடைசியில் அது சிலுவைமரத்தில்
உயிர்விட்டபோது முழுதும் புண்பட்டு
நொறுங்கித் தகர்ந்து போயிற்றல்லோ?
நமக்குள்ள இருதயமும் சிநேக ஆசனமாய்
மாத்திரமல்ல, துக்க ஆசனமாயும் இருக்கி
ன்றது. ஆகையால் இருதயமானது, துக்
கத்துக்கு எவ்வளவு இணங்கி இடங்கொடுக்
கிறதோ அவ்வளவாக நமக்கு மன வேதனை
உண்டாகும். வேறு பொல்லாப்புகள்
நம்மை அவ்வளவு வருத்தப்படுத்தாது.

திருப்பாடுகளின்போது சேசுவின் திரு
இருதயம் அனுபவித்த பாடுகளின் பாத்தி
ரத்தை முழுதும் நீ கண்டுபிடிக்கக்கூடு
மென்று நினையாதே. அத்திரு இருதயம்
தான் படவேண்டியிருந்த நிஷ்டூர வேதனை
களின் சிந்தனையாலும் ஆறுதலற்று எவரா
லும் கைவிடப்பட்டு பாவவெறுப்பாலும்
பாவிகளுடைய நன்றிகெட்டதனத்தாலும்
அனுபவித்த சலிப்புச் சஞ்சலம் அச்சம் நடுக்
கத்தைப்பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயே,
இந்தத் துயர விசேஷங்கள் வெளிப் பார்
வைக்கு ஒன்றின்பின் ஒன்றாய் நேரிட்டதா
கத் தோன்றினாலும், இத்திரு இருதயம்
அவைகளையெல்லாம் ஒருமிக்க அனுபவித்த
தென்று நினைத்துக்கொள்.

கர்த்தருடைய திருச் சரீரத்தின் சுபாவ உடற்கூறு மகா மிருதுவாயிருந்தது சரியே. அவருடைய திரு இருதயத்தின் கூறு அதிலும் அதிக மிருதுவான அமைப்பென்று அறிந்துகொள். ஆகையால் ஒவ்வொரு வேதனையும் அவருடைய சரீர அவயவங்களுக்கு வருவித்த நோவைவிட அவருடைய நேச இருதயத்தை அதிக வருத்தப்படுத்தினதாம். கடைசியாய் அவரை அடித்துக் கொல்ல அவருடைய கொலைபாதகருக்கிருந்த ஆசையானது மனுஷ சுபாவத்துக்குரிய துற்குணமே தவிர மற்றப்படியல்ல. ஆனால் அவருடைய பாடுகளின்போது அவருக்கிருந்த மாறாத இருதய நேசமே, அவருயிரை மாய்க்க ஆவலுள்ள கொலையாளியாயிற்று.

கடைசியாய் கண்ணாலே காணக்கூடாத அவருடைய திரு இருதயத்தின் மரண வேதனையை வெளியரங்கமான அத்தாட்சியால் ஆண்டவர் நமக்குக் காண்பித்தாலொழிய, அத்திரு இருதயம் பட்ட இளைப்புத் தவிப்பு மனோவாதையான பாடுகளின் மிகுதியை யார்தான் கண்டுபிடிப்பார்? ஆகிலும் இரத்தவெயர்வை என்ற முற்குறியாகிய புதுமையே மேற்கூறிய விசேஷத்திற்குப் போதுமான அத்தாட்சியாம்.

ஓ! சிநேகமுள்ள இருதயமே! துன்பதுயரத்திலமிழ்ந்திய சேசுவின் திரு இருதயமே! நான் தேவரீருக்குச் செலுத்தவேண்டியதென்ன? சிநேகத்திற்குச் சிநேகம் நான் செலுத்தவேண்டுமானால் துன்பத்துக்குத் துன்பத்தைச் செலுத்த நான் கடனாளியாயிருக்கிறேன். ஆனால் தேவரீரிடத்திலுள்ள மனத்திடனில் ஒரு பங்கை எனக்குக் கொடுத்தாலொழிய பலவீனனாகிய நான், சுயபட்சமுள்ள நான், அப்பேர்ப்பட்ட பிரதி நன்றியை எப்படிச் செலுத்துவேன்? சேசுவே! உமதுபேரில் எனக்குச் சிநேகத்தைத் தந்தருளும். ஏனெனில் சிநேகம் துன்பச் சகிப்பைப் படிப்பிக்கும், வருத்தப்பட உதவி செய்யும். உமது பரிசுத்த இருதயத்தோடே ஒன்றித்துப் பாடுபட எனக்கு ஆசையை வருவிக்குமாம்.

இரண்டாம் தியானம்.

திவ்விய சற்பிரசாதத்தில் சேசுவின் திரு இருதயம் மனிதருக்குக் காண்பிக்கும் சிநேகத்தின்பேரில்.

ஆயத்தச் செபம்: முந்தின தியானத்தில் சொல்லப்பட்டதுபோல.

1-ம் கிருத்தியம்—சேசுநாதர் நமக்குக் காண்பிக்கிற வாக்குக்கெட்டாத சிநேகத்தின் மிகுதியையும், மனிதர் அவருக்கு வருவிக்கிற மிகுந்த நன்றிகெட்டதனத்தையும், நீ நன்றாய் தியானித்து அறியும்படியாகவும், அவ்வளவு சிநேகம் நிறைந்திருந்தும் மனிதரால் சிநேகிக்கப்படாதிருக்கிற இந்தத் திரு இருதயத்திற்கு உன்னாலான பரிகாரஞ் செய்வதற்கு நீ பிரதிக்கினை செய்யும்படியாகவும் அவரை மன்றாடு.

முதல் பிரிவு.

திவ்வியநற்கருணையிலிருக்கிற இந்தத் திரு இருதயம் மனிதர்பேரில் வைத்திருக்கிற இடைவிடாப் பற்றுதல் எப்பேர்ப்பட்டது!

மகா உண்மையும் வேகமுமான சிநேகப் பற்றுதலாமே. திவ்வியநற்கருணையில் சேசுநாதர் என்ன செய்கிறார்? நம்மைச் சிநேகிக்கிறார். இந்த வார்த்தைகளே அவரைப்பற்றி எப்போதும் கேட்கக்கூடிய கேள்விகளுக்கெல்லாம் மறு உத்தாரமாகும். திவ்விய நற்கருணை வழியாக அவர் உன்னிடத்திலே ஏன் வருகிறார்? அவர் உன்பேரிலுள்ள சிநேகத்தினாலேதானே. அவர் உன்னிடத்தில் எப்படி தங்கியிருக்கிறார்? சிநேக நிறைந்த

சர்வேசுரனைப்போலதான். உனக்கு என்ன
நன்மை உண்டாகவேணுமென்று விரும்பு
கிறார்? சிநேகத்தால் ஆசிக்கத்தகும் க்ஷேம
லாய நலங்களெல்லாம். இவர் எவ்விடங்க
ளிலுமிருந்து எல்லோருக்கும் தம்மை திருப்
திகர போசனமாகச் செய்வானேன்? இவ்
விய சற்பிரசாதத்தில் இவர் இத்தனை வருஷ
காலமாய்த் தங்கி இருப்பானேன்? இங்கே
அவரிப்படி மறைந்திருப்பானேன்? சிநேகத்
தினாலேதான். சிலுவையிலே சிநேகமும்
நீதியும் சேர்ந்து அரசாண்டது. இன்னம்
சிநேகமே நீதிக்கு துணையேதுகரமாயிருந்
தது. திவ்விய நற்கருணையிலேயோ, சிநே
கமே செங்கோல் செலுத்துகிறது. மற்ற
தெல்லாம் அதற்குத் துணையேதுகரமாயிருக்
கிறது. ஞானக் குருட்டாட்டமுள்ள ஆத்
துமமே! உன் தேவனின் இருதயம் உனக்
காக எத்தன்மையாய் அமைந்திருக்கிறது?
இதை நீ நாடோறும் கண்டுணருகிறதில்
லையா? பாவமாசடைந்த ஆத்துமமே! இவ்
விடத்தில் உன்னை எவ்விதமாய் அவர் ஏற்
றுக்கொள்ளுகிறார்? அவருடைய முறைப்
பாடுகள், அவருடைய துக்க பிரலாபங்கள்,
அவருடைய கண்டனை தண்டனைகள்,
இவைகளெல்லாம் சிநேகச் செயல்களாமே.
பத்தியற்ற, நேச உணர்ச்சியற்ற, ஆத்து

மமே! இத்திரு இருதயம் தம்முடைய சமுகத்திலிருந்து உன்னை எப்போதாகிலும் துரத்திவிட்டதுண்டா? இல்லை. உனக்கு வேண்டிய ஞானப்பிரகாசத்தையும் பாவப் பரிகாரத்தையும் ஞான ஆறுதலையும் மனத்திடனையும் அவர் உனக்கு வருவிக்கிறதில்லையோ? பரிசுத்தமும் புண்ணிய சுறுசுறுப்புமுள்ள ஆத்துமாக்களே! இத்திரு இருதயம் திவ்விய சற்பிரசாதத்தில் எப்பேர்ப்பட்டதாய் அமைந்திருக்கிறதென்று மனிதருக்கு வெளிப்படுத்தவேண்டியது உங்கள் கடனுமே. எவ்வளவோ தம்மை மறந்த தயை தாட்சணியத்தை அவர் மனிதர்களுக்கு காண்பிக்கிறார்! எவ்வளவோ மன ஏகாந்தத்தோடும் அன்பு அரவணைப்போடும் சந்தோஷ பெருக்கத்தோடும் அவர்களை நடத்துகிறார். என்னாத்துமமே, நீ இவ்விடத்தில் சற்றுநேரம் நின்று இப்போது சொல்லப்பட்ட சிந்தனைகளையெல்லாம் உற்று விசாரித்துப்பார். இதுகளிலே உன்னிடத்தில் உண்டாகவேண்டிய பற்றுதல்களேதென்றால், விசேஷமாய் ஆச்சரியமும் மகிழ்ச்சியும் நன்றியறிந்த தோத்திரங்களுமாம். ஐயோ! அவ்வளவு சிநேகமுள்ள திவ்விய இருதயத்திற்கு இதுவரையில் நீ தகுந்த நன்றியறிந்த தோத்திரம் செலுத்திவந்தாயோ?

இரண்டாம் பிரிவு.

திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கிற சுவாமியின்பேரில் அநேகரிடத்தில் உண்டான நேசப் பற்றுதல் எத்தன்மையானது?

சர்வாதி கர்த்தர்தானே மனிதர்பேரில் வைத்த சிநேகத்தின் நிமித்தம் இத்தன்மையான ஸ்திதிக்குள் அமைந்திருக்கிறானென்றும், இப்படிச் சற்பிரசாதத்தில் இருந்துகொண்டே எல்லோரையும் உருக்கமாய் நேசிப்பதில் உத்தியோகமாயிருக்கிறானென்றும், எத்தனையோபேர் இன்னம் அறியாதிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட அறிவீனர்களுக்குள் சிலர், அவர் இன்னாரென்று உணராமலும் அவருடைய அன்பான அழைத்தலுக்குக் காது கொடாமலும், மனம்பொருந்திக் குருடராயிருக்கிறார்கள். ஆண்டவரே! உமது மட்டற்ற சிநேகத்துக்கு இது வாக்குக்கெட்டாத நிந்தையல்லவா? திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் சுவாமியின் இருதயத்துக்கு அநேகாநேகம் கிறீஸ்துவர்கள் வருவிக்கும் நிஷ்டூர நிந்தை அவமானம் இது மாத்திரமல்லவே. திவ்விய சற்பிரசாதத்தில் வீற்றிருக்கும் இந்த சுவாமியின் நேசம் அளவற்றதென்று அந்த நன்றிகெட்ட ஆத்துமங்களுக்குத் தெரியாதோ? நன்றாய்த்

தெரியுந்தான். இன்னம் இந்த விஷயங்களை
யெல்லாம் விசுவசிக்கிறதாகவும் அவர்கள்
சொல்லுகிறார்கள்தான். ஆகிலும் அவர்கள்
சொல் வேறு, கிரியை வேறாயிருக்கிறது.
இந்த தேவதிரவிய அநுமானத்தில் ஆண்ட
வருக்கு அவர்கள் வருவிக்கிற நிந்தை, அவ
மானம், அவிசுவாசம், அவசங்கை எவ்வள
வென்று நீ உணரவில்லையோ? இன்னம் இந்
தத் துரோகச் செயல்களை நடத்தும் மனிதர்
யாரொன்றும், எந்த நேரத்தில் எந்த வதுக்
களைக்கொண்டு இவைகளை நடத்துகிறார்க
ளென்றும், எத்தனை, எத்தனை தடவை இப்
படிச் செய்யத் துணிகிறார்களென்றும், இப்
படியாய் அவர்களுடைய பாதகச் செயல்
களின் அகோர விசேஷங்களைப் பற்றும் பற
றாய்ச் சீர்தூக்கிப்பார். இப்படிப்பட்ட பாத
கங்களைக்கண்டு பயந்து நடுங்கி அவைகளின்
மட்டில் வெறுப்பை உன் மனதில் வருவி
த்து, பின் உன் நடக்கையை சீர்திருத்திக்
கொள்ளக்கடவாய்.

ஐயோ! உனது திவ்விய அன்பரை நீயுங்
கூட அவமானப்படுத்தினாயே! இதுவரை
யிலும் நீ நடந்த நடக்கையை நன்றாய்ச்
சோதித்துப்பார். உனக்கு வயது முதிர,
முதிர உன் நன்றிகெட்டதனமும் முதிர்ந்து
போயிற்றாக்கும்.

நீ புது நன்மை வாங்கினபோது உன்னி
டத்திலிருந்த பரிசுத்ததனமும், பத்தி சுறு
சுறுப்பும் எங்கே? குறைந்து மெலிந்து தள
ர்ச்சியடைந்துபோயிற்றே! இப்படிப்பட்ட
நடக்கையைக் கண்டு வெட்கப்பட்டு புத்தி
யைக்கொண்டு இந்தச் சிநேக சிம்மாசனத்
தண்டையில் சாஷ்டாங்கமாக விழுந்து
பொறுத்தலைக்கேள். இன்னம் நீ உன்னை
நன்றாயறிந்து பகைக்க ஞானத் தெளிவை
யும், உறுதியான பிரதிக்கினை செய்யத் திர
ளான வரப்பிரசாதத்தையும் தந்தருள
அவரை மன்றாடுவாயாக.

மூன்றாம் பிரிவு.

திவ்விய கர்த்தருக்கு மனிதர் வருவிக்
கும் அநியாயமான நன்றிகெட்டதனத்தைப்
பற்றி அவருடைய இருதயத்தில் உண்டா
கும் எண்ணங்களென்னவென்று நாம் நன்
றாய் அறியத்தக்கதாக, முந்த முந்த நீதி
நியாயத்துக்கு ஒத்தபிரகாரம் அவைகள்
எப்படிப்பட்டதா யிருக்கத்தகும் என்று
யோசித்துப்பார்ப்போம்.

இந்த ஆண்டவர்தானே முன் பழைய ஏற்
பாட்டின் ஆலயத்தில் இபுறுசனங்களுக்குள்
வசிக்கத் திருவுளமான கிருபைக்கு, அவர்
கள் காண்பித்த நன்றிகெட்டதனம் எத்தன்

மையானது! அதனிமித்தம் அவர்களை அவர் எப்படித் தண்டித்தார்? அவர்களுடைய ஆலயத்தை அழித்து நிர்மூலமாக்கி அவர்கள் சந்ததியாரை முழுதுங் கைவிட்டு விட்டோமென்றும் திருவுளம்பற்றினாரல்லவா? ஆனால் அவர்களிலும் அதிக உபகார சகாயங்களைப் பெற்ற கிறீஸ்துவனுடைய நன்றிகெட்டதனத்துக்கு எப்பேர்ப்பட்ட ஆக்கினையிடவேண்டியிருக்கிறது? நமது பாவங்களின் தோஷத்தைவிட அவருடைய சிநேகப் பெருக்கம் அணைகடந்ததாம். எவ்வளவோ பொறுமை, எவ்வளவோ சிநேகம், எவ்வளவோ சலியாத தயை அவரிடத்தில் விளங்குகிறது பார். கொல்லுங் கத்திக்கு மௌனமாய்க் குனிந்து தலைகொடுக்கும் சாதுவான செம்மறிப்புருவையான சுவாமியிவரோ. இவர் தம்மால் சிநேகிக்கப்பட்ட ஆத்துமாக்களிடத்தில் சிலவிசை முறைப்பட்டது நிசந்தான். ஆனால் அவருடைய முறைப்பாடுகள் அவருடைய சிநேகத்துக்கு ஸ்திரமான அத்தாட்சியேயன்றி மற்றப்படியல்ல.

மனிதர் தம்மை மறந்துபோகிறதைப்பற்றி முத்திப். மார்கரீத் மரியம்மாளிடத்தில் அவர் சொன்ன விசேஷங்களை உற்றுக்கேள்: "நாம் பாடுபடும் நேரத்தில் நாம் அனுபவித்த வேதனையிலும் இது மகா பெரிய வேதனை

யாம். மனிதர் நமக்குச் சிநேகத்துக்குச் சிநேகம் காண்பிப்பார்களாகில், நாம் அவர்களுக்குச் செய்த நன்மைகளெல்லாம் ஒன்றுமில்லை என்று எண்ணுவோம். இன்னம் கூடுமானால் அதிகமான நன்மைகளை அவர்களுக்குத் தந்தருளச் சித்தமாயிருக்கிறோம்.

அவர்களுக்கு நன்மை செய்ய வேணுமென்கிற நமதாசைக்குப் பிரதி நன்றியாக அவர்கள் நமதுபேரில் மனவெறுப்பைக்காட்டி நம்மைப்பிறக்கணித்து நடக்கிறார்கள்." நமது திவ்விய இரட்சகருடைய அன்பமைந்த இந்த முறைப்பாடுகளைக் கேட்டு நீ நினைப்பதென்ன?

இதுமாத்திரமல்ல: இன்னம் அவர் வேறொரு சமயத்தில் அந்தப் புண்ணியவதிக்குத்தானே திருவுளம்பற்றினதாவது:

"இது விஷயத்தில் நமக்கு அதிகத் துயரம் வருவிப்பதென்னவென்றால், நமக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட இருதயங்களாலே முதலாய் இப்பேர்ப்பட்ட அவமானம் நமக்கு நேரிடுகிறது." நேசம் நிறைந்த இந்த சுவாமிக்கு உண்டாகும் இவ்வித நிந்தை அவமானங்கள் மட்டில் உணர்ச்சியற்ற ஆத்துமமே! பத்தி சுறுசுறுப்பற்ற ஆத்துமமே! உன்னைப்பற்றிதான் அவர் முறைப்படுகிறார்.

ஆகையால் நீ உன்னிருதயத்தில் எழுப்ப வேண்டிய மனப்பற்றுதலான பிரதிக்கினைகள் ஏதென்றால்:—

இந்தச் சுவாமியின் அணைகடந்த நேசத்துக்கு உருக்கமான நன்றியறிதலும், இவருக்கு மனிதர் காண்பிக்கும் நன்றிகெட்டதனத்தைப்பற்றி உண்மையான துக்கமும், உன்னாலியன்றளவும் அன்பான ஊழியங்களைக் கொண்டு அதற்குப் பரிகாரஞ்செய்ய ஆசையும், வருவித்துக்கொள்ளக்கடவாய்.

இந்த மூவிதப் புண்ணிய முயற்சிகளும் ஆராதனைக்குரிய சேசுவின் திருஇருதயப் பக்தர்களுக்குரிய இலட்சணங்களாம். ஆகையால் உன்னை முழுதும் அவருக்குப் பலியாக ஒப்புக்கொடுப்பதற்கு வேண்டிய வரப்பிரசாதத்தை அவரிடத்தில் இரந்து மன்றாடுவாயாக.

சேசுநாதருடைய திரு இருதயத்துக்குதன்னை முழுதும் ஒப்புக்கொடுக்கும் ஜெபம்.

(முத். மார்கரீத் மரியம்மாள்.)

சேசுநாதருடைய திரு இருயத்துக்கு அடியேன் (இன்னான்) என்னை முழுதும் கையளித்து ஒப்புக்கொடுக்கிறேன். என்னிலுள்ளதும் எனக்குள்ளதுமான சகலமும் அத்திரு

இருதயத்தையே சிநேகித்து ஸ்துதித்து
வணங்கும்படியாக என்னையும் என் ஜீவன்
உயிரையும் என் கிரியைகள் முதல் எனக்கு
வரும் துன்பவருத்தங்கள் சகலமும் அத்
திரு இருதயத்துக்குப் பாதகாணிக்கையாக
வைக்கிறேன். திவ்விய இருதயத்துக்கு முழு
தும் சொந்தமாயிருப்பதும் அதற்கு மனத்
தாங்கல் வருவிக்கக்கூடிய சகலத்தையும்
என் முழுமனதோடு அருவருத்துத்தள்ளி,
அத்திரு இருதயத்தின்மட்டில் எனக்குள்ள
சிநேகத்தைக் காண்பிக்கச் சகலமும் செய்
வேனென்பதும் இதுவே சற்றும் மாறாத
என் தீர்மானமாமே.

ஓ! மதுரமான சேசுவின் திரு இருதயமே!
இனிமேலாக நீரோ, என் சிநேகத்துக்கெல்லா
ம் முற்றும் உரியவர். நீரோ, என் உயிரின்
ஏககாவல். எனது இரட்சணியத்தின் தள
ராத நம்பிக்கை நீரோ. நீரோ, என் பலவீனத்
தைத் தாங்கும் அவுழ்தம். என் ஜீவிய நாட்
களில் நான் செய்த குற்றங் குறைகளைப் பரி
கரிப்பவர் நீரோ. நீரோ என் உயிர்பிரியும்
வேளையில் எனக்கு ஸ்திரமான அடைக்கலம்.
ஓ தயிரளம் நிறைந்த சேசுவின் திரு இருதய
மே! உமது பிதாவின் சமுகத்தில் நீரோ என
க்காக மன்றாடி அவருடைய நீதியின் கோ
பாக்கினை என்மேல்விழாதபடி தடுத்தருளும்.

ஓ! சிநேகப் பிரளயமான சேசுவின் திரு இருதயமே! என் பலவீனத்தைப் பார்க்கையில் எனக்கு முற்றும் பயமும், உமது தயாளத்தை நினைக்கையில் எனக்கு முழுநம்பிக்கையும் வருவதினாலே என் நம்பிக்கையாவும் உமது பேரில் வைக்கிறேன்.

ஆனதினால் உமக்குப் பிரியமற்றதும் விரோதமுமானது எதுவும் என்னிடத்திலிருந்தால் அதை உமது சிநேக அக்கினியினால் சுட்டெரித்தருளும். நான் உம்மை என்றும் மறவாமலும், உம்மைவிட்டு என்றும் பிரியாமலும் இருக்கும்படி உமது தூய சிநேகத்தை என் இருதயத்தில் பதிப்பித்தருளும். நான் உமது சொந்த அடிமையாகச் சீவிப்பதும் சாவதுமே என் சர்வபாக்கியமாகச் செய்ய ஆசிப்பதினாலே என் பெயரை உமது திரு இருதயத்தில் எழுதி வைத்தருளுவீரென்று உமது தயாள இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுகிறேன் சுவாமி—ஆமென்சேசு.

(300-நாள் பலன்.)

சேசுவின் திரு இருதயத்தை நோக்கி நம்பிக்கை முயற்சி :

மகா பூஜிதமும் தெய்வீகமுமான சேசுவின் திரு இருதயமே, நீசப் பாவியாகிய அடியேன்

தேவரீருக்குச் செலுத்தவேண்டிய அன்பு, ஆராதனை, ஸ்துதி தோத்திர வணக்கங்களை என்னால் கூடியவரையில் செலுத்தவேண்டுமென்று உமது சமுகத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து கிடக்கிறேன். தேவரீர் அடியேனுக்கு அன்பர்களில் உத்தம அன்பராகையால், என் சகல நிர்ப்பாக்கியங்களையும், வறுமை தாரித்திரத்தையும், துன்ப துரிதங்களையும், என் அசமந்தத்தையும் என் ஆத்துமத்தில் பட்டிருக்கும் காயங்களையும் தேவரீருக்கு வெளியாக்கி, உமது தயாளவிசாலத்துக்குத் தக்கபடி அடியேனுக்கு இரங்கி உதவிபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேன். ஓ! சிநேகமயமான இருதயமே, அடியேன் என் ஆத்துமத்தையும், என்னைப்போல் நித்திய கேட்டுக்கு ஏதுவான ஆபத்தில் அகப்பட்டிருக்கிற ஆத்துமங்களையும் காப்பாற்றிக் கரை சேர்ப்பதற்கான அனுக்கிரகஞ்செய்தருளவேணுமென்று உமது கிருபை தயாளத்தின்பேரால் உம்மை இரந்து கேட்கிறேன்.

அத்தியந்த கிருபையுள்ள இருதயமே, என் அக்கிரம பாதாளத்தில் நான் அமிழ்ந்திக் கெடவொட்டாதேயும். சதாகாலமும் நான் உம்மைச் சிநேகிப்பேனாகில் அதுவே எனக்குப் போதுமாகையால், மற்றப்படி உமது சித்தம் எவ்விதமோ அவ்விதமே என்னை

நடப்பித்தருளும். என் நம்பிக்கையெல்லாம் உமதுபேரில்வைத்திருக்கிறேன். நித்தியத்துக்கும் என்னைக் கைநெகிழ்ந்து விடாதேயும். என் சகல நோய்களுக்கும், நோய்களுக்கெல்லாம் பெரிய நோயாகிய பாவத்துக்கும் நீரே பரம அவுழ்தமென்று உம்மை நோக்கி அபயமிட்டு மன்றாடுகிறேன். என்னிடத்தில் பாவத்தை நிர்மூலமாக்கி என் ஜீவியகாலத்தில் நான் கட்டிக்கொண்ட பாவங்களுக்குப் பொறுத்தல் அளித்தருளும். அவைகளுக்காக என் இருதயத்தின் சத்துவங்கொண்டமட்டும் மனஸ்தாபப்படுகிறேன்.

ஓ! பூஜித இருதயமே, உமது உன்னத தயாப வல்லபம் எம்மாத்திரமென்று அடியேனும், உம்மைச் சிநேகிக்கத்தக்க சகல இருதயங்களும் உணர்ந்து அனுபவத்தால் அறிந்துகொள்ளும்படி செய்வீராக. இந்த அனுக்கிரகத்தை என் தந்தை தாய் சிநேகிதருக்கும், எனக்காக வேண்டிக்கொள்ளுகிறவர்களும், நான் யாராருக்காக வேண்டிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேனோ அவர்களுக்கும் செய்தருளும்படி பிரார்த்திக்கிறேன். அவர்கள் படும் இக்கட்டு இடையூறுகளுக்குத் தக்கபடி அவர்களுக்கு ஒத்தாசைசெய்தருளும். மகா அன்புள்ள இரு

தயமே, பாவிகளின் கல் நெஞ்சத்தை இளகச் செய்யும், உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு இளைப்பாற்றியைக் கட்டளையிடும், மரணஅவஸ்தைப்படுகிறவர்களுக்குச் சேமமான அடைக்கலமாயிரும், துன்பப்படுகிறவர்களுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் ஆறுதலாயிரும்; கடைசியாய்ச் சிநேகமயமான இருதயமே, நீரே எனக்குச் சர்வத்திலும் சர்வமாயிரும். விசேஷமாய் என் மரணத்தறுவாயில் தவிக்கும் என் ஆத்துமத்துக்கு நீரே தஞ்சமோக்ஷமாயிருந்து உமது தயாள மடியில் என்னை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இரந்து மன்றாடுகிறேன்.— ஆமென் சேசு.

சேசுவின் திரு இருதயத்தை நோக்கி அர்ச். ஜெர்த்துருத்தம்மாள் தினந்தோறும் ஜெபித்த ஜெபம்.

மிகவும் பரிசுத்தமான சேசுவின் திரு இருதயமே, வாழ்க! நித்திய சீவியத்தின் ஊறணியே, தெய்வீகத்தின் அளவில்லாப் பொக்கிஷமே, தேவசிநேக அக்கினிச்சூளையே வாழ்க! எனது தஞ்சமும் அடைக்கலமும் நீரே. என் இனிய இரட்சகரே! உமது திரு இருதயத்தில் எரியுந் தேவசிநேக அக்கினி

யானது என்னிருதயத்திலும் பற்றியெரியச்
செய்தருளும். உமது திரு இருதய ஊற்றி
னின்று ஓடிவரும் இஷ்டப்பிரசாத ஜலத்தை
என்னிருதயத்தில் பொழிந்தருளும், என்னி
ருதயத்தை உமது திரு இருதயத்தோடு
முழுதும் ஐக்கியப்படுத்தி, உமது சித்தம்
என் இஷ்டமாகவும், என் மனப்பிரியமெல்
லாம் உமது திருச்சித்தத்தோடு ஒத்திருக்கச்
செய்தருளும். ஆராதனைக்குரிய உமது
திருச்சித்தமே, இனி என் ஆசைகளுக்குங்
கிரியைகளுக்கும் நியாயப்பிரமாணமாய் இரு
க்கக்கடவதாக.— ஆமென்சேசு.

சேசுவின் திரு இருதயத்திற்கு நவநாட்சேபம்.

“ கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்
கள் அகப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்,”
என்று திருவுளம்பற்றியிருக்கிற திவ்விய
சேசுவே! தேவரீருடைய இருதயத்தினின்று
உற்பத்தியாகி, ஆராதனைக்குரிய உமது திரு
நாவினால் உரைக்கப்பட்ட இந்த வாக்குத்
தத்தங்களை நம்பிக்கொண்டு உயிருள்ள விசு
வாசத்தால் ஏவப்பட்டு உம்முடைய திருப்
பாதத்தில் இதோ அடியேன் சாஷ்டாங்க
மாக விழுந்து வணங்கித் தாழ்ச்சியுடன்
கேட்டுக்கொள்ளும் மன்றாட்டேதென்றால்,—

சகல நன்மைகளுக்கும் பேறுபலன்களுக்
கும் வற்றாத ஊறணியாகிய தேவரீருடைய
திரு இருதயத்தினின்றல்லாமல் வேறே யாரி
டத்தினின்று இதைக் கேட்கப்போகிறேன்.
தயாள சம்பன்ன ஐசுவரியங்களெல்லாம்
அடங்கிய பொக்கிஷத்திலன்றி வேறெங்கே
நான் இதைத் தேடப்போகிறேன். சர்வே
சுரன்தானே பிரசன்னமாகிறதுமாய் நாங்
கள் அவரிடத்திற்குப்போக வழியுமாயிருக்
கிற உமது திரு இருதய வாசலிடத்தில் வந்து
தட்டாமல் வேறெங்கே நான் தட்டிக் கேட்
கப்போகிறேன். ஆகையால் என் நேச சேசு
வின் திரு இருதயமே! தேவரீருடைய தஞ்ச
மாக ஓடிவந்தேன். இக்கட்டிடைஞ்சலில்
என் ஆறுதல் நீரே, துன்ப துயரத்தில் என்
அடைக்கலம் நீரே, சோதனைத் தருணத்தில்
எனக்கு ஊன்றுகோல் நீரே, தேவரீருக்குச்
சித்தமானால் அற்புதம்வேண்டியிருந்தாலும்
நடத்தி இந்த வரத்தை எனக்குத் தந்தருளு
வீரென்று நம்பியிருக்கிறேன். தேவரீர் சித்
தம் வைத்தாலே போதும். என் செபம்
பிரார்த்தனைகள் அநுகூலமாகும். திவ்விய
சேசுவே! தேவரீருடைய நன்மை உபகாரங்
களுக்கு நான் முழுதும் அபாத்திரவான்
தான். ஆகிலும் நான் இதினாலே அவநம்பிக்கை
யப்பட்டுப் பின்னிடைந்து பேர்வேனல்ல.

தேவரீர் இரக்கத்தின் தேவனாகையால் துக்க மனஸ்தாபப்படும் தாழ்ச்சியுள்ள இருதயத்தைத் தேவரீர் தள்ளுவீரல்ல. உமது இரக்கமுள்ள கண்களால் என்னை நோக்கியருளும். என் நிர்ப்பாக்கியத்தையும் பலவீனத்தையும் கண்டமாத்திரத்தில் தேவரீருடைய கிருபை நிறைந்த இருதயம் எனக்கிரங்காமற் போகாது.

இரக்கமுள்ள திரு இருதயமே! என் விண்ணப்பத்தின்மட்டில் தேவரீர் என்ன தீர்மானம் செய்தாலும் சரியே. தேவரீரை நான் வாழ்த்தி வணங்கிப் போற்றிப்புகழ்ந்து சேவிக்க நான் ஒருக்காலும் பின்வாங்குவேனல்ல. அன்புக்குரிய இரட்சகரே! ஆராதனைக்குரிய உம்முடைய திவ்விய இருதயத் தீர்மானத்திற்கு முழுதும் அமைந்து நடக்க நான் செய்யும் சுகிர்த முயற்சியைக் கிருபையாய்க் கையேற்றுக்கொள்ளும். நானும் சகல சிருஷ்டிகளும் இப்படி உமது சித்தத்தை நாடி நடந்து சதாகாலத்திற்கும் இதை நிறைவேற்ற ஆசையாயிருக்கிறேன். ஆமென்சேசு.

சேசுநாதருடைய திரு இருதயத்துக்குப் பலனுள்ள சுகிர்த ஜெபங்கள்.

சேசுநாதருடைய திரு இருதயமானது எங்கும் சிநேகிக்கப்படுவதாக. (100-நாட் பலன்.)

சேசுவின் மதுரமுள்ள திரு இருதயமே! அடியேன் எப்போதைக்கும் மென்மேலும் உம்மைச் சிநேகிக்க அநுக்கிரகஞ் செய்தருளும். (300-நாட் பலன்.)

இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமுமுள்ள சேசுவே! என் இருதயத்தை தேவரீருடைய இருதயத்துக்கு ஒத்ததாகப்பண்ணியருளும். (300-நாட் பலன்.)

சேசுவின் மதுரமான இருதயமே! என் சிநேகமாயிரும். (300-நாட் பலன்.)

சேசுவின் திரு இருதயமே! எங்கள்பேரில் இரக்கமாயிரும். (100-நாட் பலன்.)

சேசுவின் திரு இருதயப் படத்துக்குமுன் சொல்லத்தக்க ஜெபம்.

என் நேச சேசுவே! அடியேன் (இன்னான்) தேவரீர்பேரில் வைத்த பத்தியைக் காண்பிக்கவும், என் துரோகங்களைப் பரிகரிக்கவும், தேவரீருக்கு என் இருதயத்தைக் கையளித்து என்னை முழுமையும் தேவரீருக்கு நேர்ந்து

ஒப்புக்கொடுக்கிறேன். இனி உம்முடைய அநுக்கிரகத்தைக்கொண்டு ஒருபோதும் எந்தப் பாவத்தையும் செய்வதில்லையென்று கெட்டியான மனதோடு பிரதிக்கினை பண்ணுகிறேன். ஆமென்சேசு.

ஒருநாளைக்கு ஒரு விசை 100-நாள். ஒரு மாதத்துக்கு ஒரு பரிபூரண பலன்.

முத். மார்கரீத் மரியம்மாள் சொல்லிய சுகிர்த வாக்கியங்கள்.

1. சகலத்தையும் சிநேகத்தால் நாம் செய்து முடிக்க சேசுவின் திரு இருதயம் ஆசிக்கின்றது.

2. உனக்கு நேரிடும் சகல துன்ப துரிதங்களிலும், சிலுவையில் அறையுண்ட சேசுவின் திரு இருதயத்தோடே உன்னிருதயத்தை ஐக்கியப்படுத்துவாயாக.

3. உன் இருதயத்தில் சம்பவிக்கிறதெல்லாம், சேசுவின் திரு இருதயம் நன்றாய் அறிந்திருக்கிறது. அவருடைய சித்தத்துக்கு உன்னை கையளிக்கவும் உன்பேரில் அவருக்குள்ள எண்ணத்துக்கு நீ இசைந்து நடக்கவும் உனக்குப் படிப்பிப்பதற்காக அவரே உனக்கு இவ்வகையான துன்பங்களை வரவிடுகிறார்.

4. சேசுவின் திரு இருதயத்துக்கு உன் இருதயம் முழுதும் இணங்கி நடக்க ஏதுகாமானது உண்மையும் தாழ்ச்சியுமேயன்றி வேறொன்றுமில்லை.

5. ஒரு பலமான கோட்டைக்குள்ளிருப்பதுபோல சேசுவின் திரு இருதயத்தில் நீ மறைந்திரு; உன் குற்றங்குறைகளினாலாவது மற்றெந்த விஷயத்தினாலாவது நீ மனங்கலங்காமலும் திடனற்றுப்போகாமலும் இருக்கத்தக்க மனோபலத்தை அங்கே கண்டடைவாய்.

6. ஆத்தும பொல்லாப்பிலும், நிற்பாக்கியத்திலும், பலவீன சாகரத்திலும் நீ அகப்பட்டிருந்தால் சேசுவின் திரு இருதயத்தை அடிக்கடி நாடிப்போவாயாக. ஏனெனில் அது மனோபலனின் சாகரமுமாய்க் கிருபைச் சமுத்திரமுமாய் இருப்பதால் அது உன்னைக் கைதூக்கித் திடப்படுத்துமென்பதற்குச் சந்தேகமில்லை.

7. மனக் கலக்கத்திலும் சஞ்சலத்திலும் நீ அமிழ்ந்திருந்தால் சமாதான சாகரமாகிய சேசுவின் திரு இருதயம் அச்சமாதானத்தை உனக்கு கட்டளையிடும்.

8. நமக்கு நடு நீதி செலுத்துகிறவராகிய சுவாமியின் திரு இருதயத்தின்பேரில் இடை

விடாமல் பத்தியாயிருந்து மரிப்பது எவ்வள
வோ சந்தோஷம்.

9. சேசுவின் திரு இருதயத்துக்கு விசே
ஷவகையாய்த் தங்களை வசீகரஞ்செய்து
பத்தியாய் இருப்பவர்களில் ஒருவரும் கெட்
டுப்போக மாட்டார்களென்று நம்புகிறேன்.

சேசுவின் திரு இருதயத்துக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும் முயற்சி.

சிநேகத்தின் ஊறணியும், இரக்கத்தின்
பிதாவும், சர்வ ஆறுதலின் தேவனுமாகிய
மகா மதுரம் நிறைந்த சேசுவே, நிர்ப்பாக்கி
யரும் அபாத்திர பாவிகளுமான எங்களுக்கு
உமது இருதயத்தின் வாக்குக்கெட்டாத திர
விய பொக்கிஷங்களைத் திறந்தருளச் சித்த
மானீரே, அடியேன் (இன்னான்) தேவரீர்
எனக்கும் மற்ற மனிதருக்கும் அளித்தரு
ளிய எண்ணிறந்த உபகார சகாயங்களுக்கா
கவும், விசேஷமாய் மகா பரிசுத்த சற்பிரசா
தத்தை ஏற்படுத்தினதற்காகவும் நன்றி
யறிந்த தோத்திரஞ் செய்து, என்னாலும்
மற்ற மனிதராலும் அளவற்ற சிநேகம் நிறை
ந்த இந்தப் பரம இரகசியத்தில் தேவரீ
ருடைய அன்புள்ள இருதயத்துக்குச் செய்
யப்பட்ட சகல நிந்தை அவமானங்களுக்குப்

பரிகாரமாக என்னையும் எனக்குள்ள யாவற்
றையும், உமது அனுக்கிரகத்தினால் நான்
அடைந்ததும் இனி அடையப் போவதுமான
பேறுபலன்களெல்லாவற்றையும் உமது பரி
சுத்த இருதயத்துக்குக் காணிக்கையாக ஒப்
புக்கொடுத்து, என் சத்துவங்கொண்டமட்
டும் உமது திவ்விய இருதயத்தின் வணக்கத்
தைப் பரவச்செய்வேனென்று வார்த்தைப்
பாடு கொடுக்கிறேன்.

இதுவுமன்றி, மிகவும் பரிசுத்த கன்னிமரி
யம்மாளை விசேஷித்த பிரகாரமாய் என்னு
டைய தாயாரிகத் தெரிந்துகொண்டு, என்
னையும் எனக்குள்ளதெல்லாவற்றையும் அவ
ளுடைய மகாப் பரிசுத்த இருதயத்துக்குக்
காணிக்கையாக் ஒப்புக்கொடுத்து, சத்திய
திருச்சபையின் கருத்துக்கொத்தபடி, இந்த
நல்ல தாயார்பேரிலும், விசேஷமாய் அவ
ளுடைய அமல உற்பவத்தின் பேரிலும் எங்
கும் பத்தியை என்னால் ஆனவளவில் பர
வச் செய்வேனென்று வார்த்தைப்பாடு கொ
டுக்கிறேன்.

ஆகையால், அடியேன் ஒப்புக்கொடுக்கும்
இந்தக் காணிக்கைப் பலியைத் தேவரீர்
சுகந்த வாசனையாக ஏற்றுக்கொள்ள கிருபை
புரிய வேண்டுமென்று தேவரீருடைய அள

வற்ற நன்மைத்தனத்தையும் தயாளத்தையும் தாழ்மையோடு மன்றாடுகிறேன்.

இந்தக் காணிக்கையை ஒப்புக்கொடுக்க உமது அருளால் ஏவின தேவரீர் இதைச் செய்து முடிக்கவும் அநுக்கிரகித்தருளவும் உம்மை மன்றாடுகிறேன். ஆமென்சேசு.

7-வருஷம்-7-மண்டலப்பலன்.

சேசுநாதருடைய திரு இருதயத்துக்கு உலக முழுவதையும் ஒப்புக்கொடுக்கும்படி அர்ச். பாப்பு ஏற்படுத்திய ஜெபம்.

ஓ! மிகவும் மதுரம் நிறைந்த சேசுவே! மனுக்குலத்தின் இரட்சகரே! உமது பீடத்தின் முன்பாக மகா தாழ்ச்சி விநயத்துடன் சாஷ்டாங்கமாய் விழுந்து கிடக்கும் அடியோர்கள்மேல் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும் சுவாமி! நாங்கள் தேவரீருக்குச் சொந்தமானவர்கள். உமக்குச் சொந்தமாகவே நாங்களிருக்கும்படி ஆசையாயிருக்கிறோம். தேவரீரோடு இன்னும் அதிக ஸ்திரமாய் நாங்கள் ஒன்றித்திருக்கத்தக்கதாக, நாங்கள் ஒவ்வொருவரும், எங்கள் மனசார, எங்களை முழுதும் இன்றைக்கு உம்முடைய இருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கிறோம் சுவாமி.

சுவாமி! மனிதர்களுக்குள்ளே பெரும்பங்கான அநேகம் பேர்கள் தேவரீரை ஒருபோதும் அறிந்ததே இல்லை. வேறே அநேகம் பேர்கள் உம்முடைய கற்பனைகளை நிந்தித்து, உம்மைப் பழித்து வேண்டாமென்று தள்ளிப்போட்டார்கள். ஓ! மகா தயாளம் நிறைந்த சேசுவே! உம்மை இன்னம் அறியாதவர்கள் பேரிலும், உம்மை அறிந்தும், நிந்திக்கிறவர்கள் பேரிலும் இரக்கமாயிரும். இவர்கள் எல்லாரையும் உமது திரு இருதயத்தின் கிட்ட சிநேக பந்தனங்களால் இழுத்தருளும் சுவாமி.

ஆண்டவரே! உம்மைவிட்டு ஒருபோதும் பிரியாமல் என்றும் பிரமாணிக்கமாயிருக்கும் விசுவாசிகளான கிறீஸ்துவர்கள்பேரில் தயவாயிரும். விசேஷமாய் உம்மை விரோதித்துப்போன ஊதாரிப்பிள்ளைகள் பேரிலும் இரக்கமாயிரும். இவர்கள் எல்லாரும், பசியாலுந் துன்பத்தாலும் வருந்திக்கெட்டுப் போகாதபடி, தங்கள் தகப்பன் வீட்டுக்குச் சீக்கிரத்தில் வந்து சேரும்படி கிருபை செய்வீராக.

அபத்தப் பொய்களால் வழிதப்பி பிசகிப்போயிருக்கிறவர்களுக்கும், விரோதத்தால் பிரிந்திருக்கிறவர்களுக்கும் தேவரீர் இராஜா

வாய் இருப்பீராக. இவர்கள் எல்லாரையும் சத்தியத்தின் அறைமுகத்திற்கும், விசுவாசத்தின் ஒற்றுமைக்கும் அழைத்துக் கூட்டிச்சேர்த்தருளும் சுவாமி. அப்போது எல்லாருக்கும் ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனும் உண்டாயிருக்கும். கடைசியாய் அஞ்ஞானத்தின் முதிர்ந்த குருட்டாட்டத்தில் அமிழ்ந்தியிருக்கும் ஜனங்களுக்கும் தேவரீர் இராஜாவாய் இருப்பீராக. இவர்கள் எல்லாரையும் இருளின் மயக்கத்திலிருந்து தேவப் பிரகாசத்துக்கும், சர்வேசுரனுடைய இராச்சியத்திற்கும் அழைத்தருளும் சுவாமி.

ஆண்டவரே! உமது பரிசுத்த சபைக்கு இரட்சண்ணியமாயிரும். அமரிக்கையும் சுவாதீனமும் அதற்குக் கொடுத்தருளும். சகல ஜனங்கள் மத்தியில் ஒழுங்கும் சமாதானமும் உண்டாகும்படி செய்யும். இப்பூமியில் ஒருகோடிமுனைமுதல் மறுகோடி முனைமட்டும் ஒரே குரல் சத்தமாய், நமக்கு இரட்சண்ணியங் கொண்டுவந்த இருதயத்துக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக! மகிமையும் வணக்கமும் திரு இருதயத்துக்குச் சதாகாலம் உண்டாவதாக, என்று விடாது சத்தித் தொலிக்கக்கடவது.—ஆமென்சேசு.

அர்ச். பாப்பானவரால் புதிதாய் அங்கீகரிக்கப்பட்ட சேசுநாதருடைய திரு இருதயப் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்... மற்றதும்.

1. நித்திய பிதாவின் சுதனாகிய சேசுவின் திவ்விய இருதயமே,

2. பரிசுத்த கன்னித்தாயின் உதரத்திலே இஸ்பிரீத்துசாந்துவினால் உருவான சேசுவின் திவ்விய இருதயமே,

3. தேவ வார்த்தையான சுதனோடு ஒரே பொருளாய் ஒன்றித்திருக்கும் சேசுவின் திவ்விய இருதயமே,

4. அளவற்ற மகத்துவ பிரதாப நிறைந்த சேசுவின் திவ்விய இருதயமே,

5. சர்வேசுரனுடைய அர்ச்சிக்கப்பட்ட ஆலயமாகிய சேசுவின் திவ்விய இருதயமே,

6. அதி உன்னத ஆண்டவரின் வாசஸ்தலமான சேசுவின் திவ்விய இருதயமே,

7. சர்வேசுரனுடைய வீடும் மோட்சத்தின் வாசலுமான சேசுவின் திவ்விய இருதயமே,

(1–7:) எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

8. சிநேக அக்கினி சுவாலித்தெரியும் சூளையான சேசுவின் திவ்விய இருதயமே,

9. நீதியும் சிநேகமும் தங்கி இருக்கும் இல்லிடமான சேசுவின் திவ்விய இருதயமே,

10. தயாளமும் சிநேகமும் நிறைந்த சேசுவின் திவ்விய இருதயமே,

11. சகல புண்ணியங்களுஞ் சம்பூரணமாய் நிறையப்பெற்ற சேசுவின் திவ்விய இருதயமே,

12. எவ்வித ஸ்துதி புகழ்ச்சிக்கும் முற்றும் உரிய சேசுவின் திவ்விய இருதயமே,

13. இருதயங்களுக்கெல்லாம் அரசும் அவைகளின் மத்திய ஸ்தானமுமான சேசுவின் திவ்விய இருதயமே,

14. ஞானமும் அறிவும் நிறைந்த பூரண பொக்கிஷமான சேசுவின் திவ்விய இருதயமே,

15. தெய்வத்துவ சம்பூரணம் தங்கி வாசஞ் செய்யும் சேசுவின் திவ்விய இருதயமே,

16. உமது பிதாவுக்கு உகந்த பிரிய நேசமுள்ள சேசுவின் திவ்விய இருதயமே,

எங்கள்பேரில் இரக்கமாயிரும் சுவாமி.

17. உம்மிடத்தில் நிறைந்திருக்கும் நன்மைகளை நாங்கள் அனைவோரும் பெற்று மகிழச்செய்யும் சேசுவின் திவ்விய இருதயமே,

18. நித்திய சிகரங்களின் ஆசையாகிய சேசுவின் திவ்விய இருதயமே,

19. பொறுமையும் மிகுந்த தயாளமுமுள்ள சேசுவின் திவ்விய இருதயமே,

20. உம்மை மன்றாடி பிரார்த்திக்கும் சகலருக்கும் சம்பூரணங் கொடுக்குந் தாராளமுள்ள சேசுவின் திவ்விய இருதயமே,

21. ஜீவியத்துக்கும் அர்ச்சியசிஷ்டதனத்துக்கும் ஊற்றாகிய சேசுவின் திவ்விய இருதயமே,

22. எங்கள் பாவங்களின் மன்னிப்புக்கேற்ற பரிகாரமான சேசுவின் திவ்விய இருதயமே,

23. நிந்தை அவமானங்களால் நிறைந்து மிகுந்த சேசுவின் திவ்விய இருதயமே,

24. எங்கள் அக்கிரமங்களின் நிமித்தம் நொந்து வருந்தின சேசுவின் திவ்விய இருதயமே,

25. மரணமட்டுங் கீழ்ப்படிந்திருந்த சேசுவின் திவ்விய இருதயமே,

எங்கள்பேரில் இரக்கமாயிரும் சுவாமி.

26. ஈட்டியால் குத்தி ஊடுருவப் பட்ட சேசுவின் திவ்விய இருதயமே,
27. சர்வ ஆறுதலின் ஊற்றாகிய சேசுவின் திவ்விய இருதயமே,
28. எங்கள் சீவனும் உத்தானமுமாகிய சேசுவின் திவ்விய இருதயமே,
29. எங்கள் சமாதானமும் ஒற்றுமைப் பந்தனமுமாகிய சேசுவின் திவ்விய இருதயமே,
30. பாவங்களின் பலியான சேசுவின் திவ்விய இருதயமே,
31. உம்மிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறவர்களுக்கு இரட்சணியமான சேசுவின் திவ்விய இருதயமே,
32. உம்மிடம் மரிக்கிறவர்களின் நம்பிக்கையாகிய சேசுவின் திவ்விய இருதயமே,
33. சகல அர்ச்சியசிஷ்டவர்களின் ஆனந்தமாகிய சேசுவின் திவ்விய இருதயமே,

எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களை... .....மற்றதும்.

மு.—இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமுமுள்ள சேசுவே,

து.—எங்கள் இருதயம் உமது இருதயத்தைப்போலாகும்படி கிருபைசெய்யும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வ வல்லபரான நித்திய சர்வேசுரா! உம
க்கு மிகவும் பிரிய குமாரனுடைய இருதயத்
தையும் அவர் பாவிகள்பேரால் உமக்குச்
செலுத்தின பரிகாரத்தையும், ஸ்துதி புகழ்ச்
சியையும் கிருபையாய்ப் பார்த்தருளுஞ்
சுவாமி. உமது இரக்கத்தை மன்றாடிக் கேட்
பவர்களுக்குத் தேவரீர் இரங்கி மன்னிப்புக்
கொடுத்தருளும், இந்த மன்றாட்டுக்களையெல்
லாம் தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோ
டும் சுயஞ்சீவியராய் சதாகாலமும் இராச்சிய
பரிபாலனஞ் செய்யும் உமது திவ்விய குமா
ரன் சேசுக்கிறீஸ்துநாதர் பெயரால் எங்களுக்
குத் தந்தருளுஞ் சுவாமி. ஆமென்சேசு.

1899-ம் வருஷம் ஏப்பிரல்-மீ 2-ம் தேதி
பதின்மூன்றாம் சிங்கராயரொன்னும் அர்ச்.
பாப்பானவர் இந்தப் பிரார்த்தனையைப் பத்
தியோடு சொல்லுகிற ஒவ்வொருவிசைக்கும்
300 நாட் பலனை கட்டளையிட்டிருக்கிறார்.

ஜெப அப்போஸ்தல சபை.

ஜெப அப்போஸ்தல சபையானது தேவ தோத்திரப் பற்றுதலினாலும், பிறர் ஆத்தும ஈடேற ஜெபத்தினாலும் திரு இருதயத்தோடு ஒன்றித்திருக்கும் சபையாம்.

இச்சபையின் பிரதான நோக்கங்கள் என்னவென்றால், சேசுவின் திரு இருதயம் திவ்விய நற்கருணைப் பெட்டியிலும், திவ்விய பலி பீடத்தின்மேலும் வீற்றிருந்து, இடைவிடாமல் மனுப்பேசும் பரம கருத்துகளை நிறைவேற்றுவதாம். அக்கருத்துகள் என்னவென்றால், ஆத்தும ஈடேற்றமும், திருச்சபையின் வெற்றியும், பாவப்பரிகாரமுமாம்

இச்சபையாருக்கு வருத்தமில்லாத சுலுவான ஒரே கடமையுண்டு. அதென்னவென்றால், அநுதினமும் காலைச்செபத்தில் தான் அன்றுசெய்யும் ஜெபங்களையும், கிரியைகளையும், படும் துன்பவருத்தங்களையும், சேசுவின் திரு இருதயத்தின் கருத்துகளுக்காக ஒப்புக்கொடுப்பதாம். இந்தக் காணிக்கைச் செபத்தை அவரவர் பிரியப்பட்ட வார்த்தைகளைக்கொண்டு செபிக்கலாம். ஆனால் கருத்தினால் மாத்திரம் இதை ஒப்புக்கொடுப்பது

போதாது. வாய்ச்செபமாகவும் இதைச் சொல்லவேண்டும்.

இச்சபையில் சேர்ந்திருப்பதால் நமக்கும் மற்றவர்களுக்கும் ஏராளமான நன்மைகள் உண்டாகின்றன.

1. சேசுவின் திரு இருதயத்திலுள்ள சிநேகத்துக்கு நாம் விசேஷ சுதந்தரவாளிகளாகிறோம். "இந்தப் பத்தியைப் பரப்புகிறவர்களுடைய நாமங்கள் ஒருபோதும் அழியாத அக்ஷரத்தால் நமது இருதயத்தில் எழுதப்பட்டிருக்குமென்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார்."

2. நமது அநுதின கிரியைகளின் பேறு பலன் அதிகரிக்கிறது.

3. நாம் செய்யும் ஒவ்வொரு கிரியையும், திருச்சபையைக் காக்கும் ஓர் நூதன ஆயுதமாயும், அதின் சத்துருக்களை வெல்லத்தக்க புதிதான ஓர் கேடயமாயுமாகின்றது. மேலும் இப்பிரபஞ்சத்தில் பாவச்சேற்றில் புரளும் ஆத்துமாக்களை ஈடேற்றத்தின் வழியில் சேர்ப்பிக்கவும், உத்தரிப்பு ஸ்தலத்தில் வேதனைப்படும் ஆத்துமாக்களைப் பாகதியில் சேர்ப்பிக்கவும் வெகு அநுகூலமான வழிப் பாடாயிருக்கிறது.

4. அநேக துறவறத்தாரடங்கினதும், இலட்சாதி லட்சம் விசுவாசிகளுள்ளதுமான இச்சபையின் அநுதின வேண்டுதல் மன்றாட்டுகளுக்கு நாம் பங்காளிகளாகிறோம்.

5. ஏறக்குறைய சகல சந்நியாச சபைகளின் புண்ணியபேறுகளுக்கும் நாம் பங்காளிகளாகிறோம். அர்ச். ஆசீர்வாதப்பர் சபையார், கர்த்தூசியன் சபையார், திராப்பிஸ்த் சபையார், கர்மேல் சபையார், அர்ச். பிராஞ்சீஸ்கு சபையார், அர்ச். கிளாரம்மாளின் ஏழைச்சபையார், அர்ச். தொமினிக் சபையார், அர்ச். அகுஸ்தீன் சபையார், சேசு சபையார், ரெதெம்தோரிஸ்த் என்ற இரட்சகர் சபையார், மேரிஸ்த் என்ற அர்ச். மரியாயின் சபையார், லாசரிஸ்த் சபையார், தர்ம சகோதரிகளின் சபையார் முதலியவர்களும், இன்னும் அனேகரும் இந்தச் சபைக்கு இந்த மகத்தான உபகாரத்தை அளித்திருக்கிறார்கள். அவர்கள் ஒப்புக்கொடுக்கும் திவ்விய பூசைகளும், திவ்விய நன்மைகளும், பத்தி முயற்சிகளும், நமது மரணத்துக்குப் பிற்பாடு நமக்காக மனுப்பேசும் என்கிறது தப்பாது.

6. இதுவுமன்றி, ஏராளமான பலன்கள் இச்சபைக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன.

அவைகளில் முக்கியமானவை அடியில் கூறப்பட்டிருக்கின்றன.

7. இச்சபையில் சேர்ந்திருக்கிற கிறீஸ்தவர்களிடத்தில் அதிக பத்தி உருக்கமும், தேவதிரவிய அநுமானங்களை அடிக்கடி ஆவலோடு பெற்றுக்கொள்ளும் பழக்கமும் உண்டாகிறபடியால், குருக்களின் விசாரணையிலுள்ள பங்குகளில் அதிக ஞானப்பிரயோசனங்கள் காணப்படும்.

ஜெப அப்போஸ்தல சபையில் சேர்ந்துகொள்வதற்கு இச்சபையின் காரியதரிசிகளில் ஒருவருடைய பத்தர்திச்சீட்டு பெற்றுக்கொண்டு, விசாரணைக்குருவினிடத்தில், அல்லது கன்னியாஸ்திரி மடங்களில் வைக்கப்பட்டிருக்கும் பெரிய ரிஜிஸ்தர் புத்தகத்தில் பெயர் பதிந்துகொண்டால் போதும்.

ஜெப அப்போஸ்தல சபையில் சேர்ந்திருக்கும் 2-கோடிக்கதிகமான சபையார் காலையில் செய்யும் காணிக்கைச் செபம்:

சேசுவின் திரு இருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர் திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாக ஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்று செய்யும் செபங்களையும் கிரியைகளை

யும் படும் துன்பவருத்தங்களையும் அர்ச். கன்னிமரியாயின் மாசில்லாத திரு இருதயத்தின் வழியாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

இந்த மாதத்துக்கும் இந்த நாளுக்கும் இச்சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், விசேஷமாய் அவைகளை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.—

ஆமென்சேசு.

இச்சபைக்குள்ள பலன்கள்.

முதல் வகுப்பு.

(மேற்சொன்ன காலைச்செபம் சொல்லுகிறவர்கள் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள்.)

பரிபூரண பலன்கள்.

1. சேர்ந்த தினத்தில் ஒரு பரிபூரண பலன்.

2. சேசுவின் திரு இருதயத் திருநாளில்—ஒன்று.

3. தேவதாயாரின் அமலோற்பவ திருநாளில்—ஒன்று.

4. மாதத்தில் ஒரு வெள்ளிக்கிழமை—ஒன்று.

5. மாதத்தில் நமக்கு இஷ்டமான நாளில்—ஒன்று.

6. ஒவ்வொருவருக்கும் மாதம் மாதம் கொடுக்கப்படும் சபைச் சீட்டில் குறித்த பாதுகாவலரான அர்ச்சியசிஷ்டவரின் திருநாளில்—ஒன்று.

7. திருமணிச் செபம் செய்யும் ஒவ்வொரு வியாழன், அல்லது வெள்ளிக்கிழமையில், அல்லது விசாரணைக்குருவானவர் குறித்த வேறொரு நாளில் மேற்படி செபத்தைப் பொதுவாய்ச் செய்யும் நாளில்—ஒன்று.

8. விசாரணைக்குருவின் உத்தரவுப்படி, பலர் ஒன்றுகூடித் திவ்வியநன்மைவாங்கி, திவ்வியநற்கருணையில் நமதாண்டவருக்குச் செய்யப்படும் துரோகங்களுக்குப் பரிகாரமாக அதை ஒப்புக்கொடுக்கும் நாளில்—ஒன்று.

தனிப் பலன்கள்.

1. மாதத்தின் பொதுக்கருத்துக்காக ஒப்புக்கொடுக்கப்படும் ஒவ்வொரு செபத்துக்கும், கிரியைக்கும்—100-நாட் பலன்.

2. ஜெப அப்போஸ்தல சபையின் திரு அடையாளத்தை மார்பில் அணிந்துகொண்டு, வாயினால் அல்லது மனதில், "உம்முடைய இராச்சியம் வருக" என்று பத்தியோடு செபிக்கும் ஒவ்வொருவிசைக்கும்—100-நாட் பலன்.

3. சபையின் அடையாளத்தைப் பகிரங்கமாய் தரித்துக்கொண்டு, பொதுவான சுற்றுப்பிரகாரங்களுடன் போகிறவர்களுக்கு—7-வருஷமும், 7-மண்டலப் பலனுமாம்.

4. திவ்விய நற்கருணை வெளியரங்கமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்போது, அரைமணி நேரம் இந்த அடையாளத்தைத்தரித்துத் திவ்விய நற்கருணை சந்தித்தால்—7-வருஷமும் 7-மண்டலப்பலனுமாம்.

5. "சேசுவின் மதுரமான இருதயமே, என் சிநேகமாயிரும்" என்ற மனவல்லயச் செபம் சொல்லும் ஒவ்வொரு விசைக்கும் 300-நாள் பலன்.

6. "மரியாயின் மதுரமான இருதயமே, என் இரட்சணியமாயிரும்" என்கிற மனவல்லயச் செபம் செய்கிற ஒவ்வொருவிசைக்கும் 300-நாள் பலன்.

இரண்டாம் வகுப்பு.

(மாதத்தின் பொதுக்கருத்துக்காக, தினம் 10 மணிச் செபம் செபிக்கிறவர்கள் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள்.)

பரிபூரண பலன்கள்.

1. நமதாண்டவர் பூங்காவனத்தில் செய்த செபத்தின் திருநாளில் (ஒரு பரிபூரண பலன்.)
2. அர்ச். சூசையப்பரின் அடைக்கலத் திருநாளில்—ஒன்று.
3. தேவமாதாவின் பரிசுத்த இருதயத் திருநாளில்—ஒன்று.

தனிப் பலன்கள்.

10 மணிச் செபஞ் செய்கிற ஒவ்வொரு தினத்திலும் 100-நாட் பலன்.

இரண்டாம் வகுப்பார்க்கு, அவர்கள் வைத்து வேண்டிக்கொள்ளும் ஜெபமாலைக்கு உள்ள பலன்களும் கிடைக்கும். இவ்வகுப்பில் 50 பேருக்குக் குறையாமல் சேர்ந்திருந்தால், அவர்கள் ஜெபமாலைக்கு அப்போஸ்தொலிக்குப் பலன்களையும், அர்ச். விரிசித்தம்மாள் பலன்களையும் அளிக்க, அப்போஸ்தலர் சபை விசாரணைக்காரருக்கு சுதந்தரம் கிடைக்கும். ஆனால், சபையார் மாத மாதம் கோவிலில் ஒருதடவை கூடவேண்டியது.

[குறிப்பு:—புதிதாய்ப் பிறந்த கட்டளைப் பிரகாரம், மேற்படி பலன்களையடைய வேண்டுமாகில் வாரத்திற் கொருவிசையாகிலும் 50 மணிச் செபமாலை செய்து முடிக்க வேண்டியது.]

அப்போஸ்தோலிக்குப் பலன்கள்.

(இப்பலன்கள், சிலுவைகள், சுரூபங்கள், ஜெபமாலைகள், கழுத்தில் போட்டுக்கொள்ளும் சிறு சுரூபங்கள் முதலிய பத்திக்கடுத்த பொருள்களுக்கு ஸ்தாபிக்கப்படலாம்.)

கர்த்தர் பிறந்த திருநாள், மூன்று இராஜாக்கள் திருநாள், பாஸ்கு ஞாயிறு, கர்த்தர் பரலோகத்துக் காரோகணமான திருநாள், இஸ்பிரீத்து சாந்து திருநாள், அர்ச். தமதிரித்துவத்தின் திருநாள், திவ்வியநற்கருணைத் திருநாள், தேவமாதா மோக்ஷத்துக் காரோகணமான திருநாள், தேவமாதா பிறந்த திருநாள், தேவமாதா ஜென்மப்பாவமின்றி உற்பவித்த திருநாள், அர்ச். ஸ்நாபக அருளப்பர் பிறந்த திருநாள், அர்ச். இராயப்பர்-சின்னப்பர் திருநாள், ஒவ்வொரு அப்போஸ்தலரின் திருநாள், அர்ச். சூசையப்பர் திருநாள், சகல மோட்சவாசிகளின் திருநாள் ஆகிய தினங்களிலும், மரணத்தறுவாயிலும் ஒரு பரிபூரண பலன் கிடைக்கும்.

இதுவுமன்றி, அநேக சில்லறைப் பலன்களும் அளிக்கப்படும்.

1. அர்ச். விரிசித்தம்மாள் திருநாளில் (அக்டோபர்-மீ 8-ம் வ) ஒரு பரிபூரண பலன்.

2. மரணத்தறுவாயில் — ஒரு பரிபூரண பலன்.

3. ஒவ்வொரு பரமண்டல மந்திரத்துக்கும், பிரியதத்த மந்திரத்துக்கும் 100-நாட் பலன்.

4. பதினைந்து நாளைக் கொருமுறை— 7-வருஷப் பலனும், 7-மண்டலப் பலனுமாம்.

அர்ச். விரிசித்தம்மாள் ஜெபமாலையில் ஒவ்வொரு பரமண்டல மந்திரம், அல்லது, பிரியதத்த மந்திரம் சொல்லும்போதும்— 100-நாள் பலன் கிடைக்கும்.

மூன்றும் வகுப்பு.

(குறிக்கப்பட்ட தினத்தில் பரிகாரநன்மை வாங்குகிறவர்கள் இப்பிரிவில் சேர்ந்தவர்கள்.)

பரிபூரண பலன்கள்.

1. பரிகாரநன்மைச் சபையில் பேரெழுதி வைக்கும் நாளில்—ஒரு பரிபூரண பலன்.

2. ஒவ்வொரு மாதத்திலும் பரிகார நன்மை வாங்கும்படி விசாரணைக்காரர், குறித்த அல்லது சபையார் தாங்களாய்க் குறித்துக் கொண்டநாளில் பரிகாரநன்மை வாங்கும்போது—ஒரு பரிபூரண பலன்.

தகுந்த முகாந்தரத்தைப்பற்றி, குறித்த நாளில் திவ்வியநன்மை வாங்கக்கூடாத பட்சத்தில், அதே வாரத்திலாவது, அல்லது மாதத்திலாவது நன்மை வாங்கினாலும், அந்தப் பலன்களை யடையலாம்.

மேலும், வாரத்தில், அல்லது, மாதத்தில், குறிக்கப்பட்டபடி திவ்வியநற்கருணை வாங்கக்கூடாதபோதும், சரியான காரணமிருந்தால், இப்பலன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3. மரணத்தறுவாயில்—ஒரு பரிபூரண பலனுண்டு.

தனிப் பலன்கள்.

“சேசுவின் திரு இருதயத்தில் மாம்ச உருவமெடுத்த திவ்விய இரக்கமே, உலகத்தின்மீது தயை புரிந்து, எங்கள்மேல் உமது ஞான வெளிச்சம் வீசப்பண்ணியருளும்.”—(இதைச் செபிக்கும் ஒவ்வொருவிசைக்கும்—100-நாட் பலன்.

ஜெப அப்போஸ்தல சபையின் விசாரணைக்காரருக்கும், இதின் பத்தியைப் பரம்பச் செய்ய முயற்சிசெய்கிறவர்களுக்கும் அளிக்கப்பட்ட பலன்கள் :—

பரிபூரண பலன்கள்.

1. பத்தந்தியில் குறிக்கப்பட்ட திருநாட்களில், மாதத்தில் இரண்டுவிசை பரிபூரண பலன்கள் உண்டு.

2. சபையில், அவர்களுடைய உத்தியோகத்தின் அடையாளமாக அளிக்கப்பட்ட சிலுவையை அவர்கள் வெளியரங்கமாய்த் தரித்துக்கொண்டு, தங்களை முழுதும் சேசுவின் திரு இருதயத்துக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கும் நாளில்—ஒரு பரிபூரண பலனுண்டு.

3. சேசுவின் திரு இருதயத் திருநாளிலும், அமலோற்பவ மாதாவின் திரு நாளிலும், இவர்கள் தங்களை முழுதும் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கும்போது மேற்சொன்ன சிலுவையைப் பகிரங்கமாய்த் தரித்திருந்தால், வருஷத்தில் இரு முறை பரிபூரண பலனடைவார்கள்.

தனிப் பலன்கள்.

சர்வேசுரனுடைய மகிமையைப் பிரபலியப்படுத்த வேணுமென்கிற எண்ணத்தோடு.

இவர்களெல்லோரும் சேர்ந்தாவது, அல்லது, இரண்டு மூன்றுபேர் கூடியாவது, ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்த முயலும் ஒவ்வொரு விசைக்கும்—300-நாள் பலனடைவார்கள்.

திருமணித்தியாலம்.

இந்தப் பத்தியானது, பூங்காவனத்தில் நமதாண்டவர் செபித்த செபத்தோடுகூட ஒன்றித்து, நாமும் மனதினால் அல்லது வாக்கினால் செய்யும் பத்திக்குரிய முயற்சியாம்.

அதெப்படியென்றால், அந்தம்மாள் ஓர் நாள் திவ்விய சற்பிரசாதச் சன்னிதியில் செபித்துக்கொண்டிருக்கும்போது, சுவாமி அவளுக்குத் தரிசனமாகித் திருவுளம்பற்றினதாவது: "வியாழன், வெள்ளிக்கு நடுமத்தியமான இராநேரத்தின்போது நாம் பூங்காவனத்தில் மனம்பொருந்தி அனுபவித்த மரண கண்டிதமாகிய துயரசாகரத்திற்கு உன்னையும் பங்காளியாக்குவோம். அந்த மரண அவஸ்தை நேரத்தில் நாம் ஒப்புக்கொடுத்த தாழ்ச்சியுள்ள செபத்தில் நீயும் துணை நிற்கத்தக்கதாக அந்த இராத்திரி பதினொருமணிக்கும், நடுச்சாமத்திற்கும், மத்திய

மான மணிநேரத்தில் நீயும் எழுந்திருந்து நம்மோடு கூட ஒருமணிநேரம் சாஷ்டாங்கமான நிலையிலிருந்து செபித்துக்கொண்டிருப்பாயாக. அது எந்தக் கருத்துக்காகவென்றால்: அப்போஸ்தலர்களால் நாம் கைவிடப்பட்டிருந்தபோதும், அப்படிப்பட்ட அப்போஸ்தலரை நோக்கி, ஒருமணிநேரம் நம்மோடு விழித்திருக்கக்கூடாதோவென்று நாம் கடிந்துகொண்டபோதும், நமக்கிருந்த அக்க துயரத்திற்கு ஒருவிதத்தில் ஆறுதல் வருவிப்பதற்குத்தான்" என்றார்.

இந்தத் தேவ திருவுள வாக்கின்படியே மேற்படி திருமணித்தியாலத்தின் பொருளும் நோக்கமும் ஏதென்றால்: உலகத்திலுள்ள இத்தனை ஆயிரம் கிறீஸ்துவர்களுடைய அஜாக்கிரதையான நடத்தைக்குப் பரிகாரஞ் செய்யவும், மரண அவஸ்தைப்பட்ட சேசுவின் திரு இருதயம் நமக்காக அனுபவித்த அக்க துயரத்திற்கு ஆசையாலாகிலும் நாம் பங்காளிகளாகவும், தேவகோபம் நீங்கவும், பாவிகள் மனந்திரும்பவும், வேண்டிக்கொள்வதற்காகத்தான்.

முத். மார்கரீத் மரிய அலக்கோக்கம்மாள் வியாழக்கிழமை இராத்திரி பதினொருமணி முதல் நடுச்சாமம்வரையில் அந்தப் பத்திக்

கிருத்தியத்தை அனுசரித்து வந்தாள். அநேகம் பத்தியுள்ள ஆத்துமாக்கள் இந்தச் சுகிர்த வழக்கத்தை அநுசரித்து இன்னும் அநேக பலன்களைக் கைக்கொண்டார்கள். மேற்சொன்ன மணிநேரமே அந்தப் பத்தி முயற்சிக்கு மிகவும் தகுந்த நேரமாயினும், அந்த நேரத்தில் இம்முயற்சியை அனுசரிக்க அநேகரால் கூடாதிருப்பதால், ஜெப அப்போஸ்தல சபையார் வியாழக்கிழமை சாயங்காலம் இரண்டுமணிமுதல் வெள்ளிக்கிழமை சூரிய உதயமட்டும் உள்ள மணிநேரங்களிலே ஏதாவதொன்றில் இந்தச் சுகிர்த கிருத்தியத்தை அனுசரித்து சாதாரண நிபந்தனைகளின் பிரகாரம் ஒரு பரிபூரண பலனைப் பெற்றுக்கொள்ளலாமென்று அர்ச். பாப்பானவர் உத்தரவு கொடுத்திருக்கிறார்.

இவ்வளவு முக்கியமான வரப்பிரசாதத்தை செப அப்போஸ்தல சபையாரில் எவனும் இழந்துபோகாதபடிக்கும், யாவரும் ஒருமிக்கக் கூடி, இந்தப் பலனைப் பெற்றுக் கொள்ளும்படிக்கும், வாரத்தில் ஒரு சாவகாசமான நாளையும் மணியையும் குறித்துக் கொள்ளத்தக்கதாக, அந்தந்த ஸ்தானத் தலைவர்களுக்கு பதின்மூன்றாம் சிங்கராயரென்னும் அர்ச். பாப்பானவர் உத்தரவு கொடுத்திருக்கிறார்.

இம்முயற்சியைக் கோவிலிலேயாவது வீட்டிலேயாவது, முழந்தாளிலிருந்துகொண்டு அல்லது நின்றுகொண்டு, அல்லது உட்கார்ந்துகொண்டு செய்து முடிக்கலாம். இதன்றியே, இந்த மணித்தியாலத்தைப் பத்திக்குரிய பற்பல முயற்சிகளில் செலவழிக்கலாம். அப்படியே முந்தின கால்மணி நேரத்தில் செபமாலையின் துக்கத் தேவ இரகசியங்களைச் சொல்லிச் செபிக்கலாம். இரண்டாங் கால் மணிநேரத்தில், திவ்விய இரட்சகருடைய திருப்பாடுகளைப்பற்றிய விசேஷங்களை வாசிக்கலாம். மூன்றாங் கால்மணிநேரத்தில் அப்படி வாசிக்கப்பட்ட விசேஷங்களைத் தியானிக்கலாம். நாலாங் கால்மணி நேரத்தில் சிலுவைப்பாதை சேவிக்கலாம்.

1669-ம் வருஷம் ஓர் வெள்ளிக்கிழமையன்று முத். மார்கரீத்மரியம்மாள் வழியாக நம்மெல்லோருக்கும் சேசுவின் திரு இருதயம் கொடுத்தருளிய ஆச்சரியமான வார்த்தைப்பாடு.

முத். மார்கரீத்மரியம்மாள் எழுதுகிறதாவது:—“ என் திவ்விய இரட்சகர் மாதமுழுவதும் மிகவும் பரிசுத்த சற்பிரசாதத்தில் தமக்குச் செய்யப்படுகிற நிந்தையவமானங்களுக்கு என்னால் கூடியமட்டும் நான் பரிகா

ரம் பண்ணும்பொருட்டு, ஒவ்வொரு மாதத்
தின் முதல் வெள்ளிக்கிழமையில் திவ்விய
நற்கருணை வாங்கும்படி எனக்குக் கட்டளை
யிட்டார்.

இந்தப் பரிசுத்த கன்னிகை வேறோரிடத்
தில் எழுதுகிறதாவது:—ஒரு வெள்ளிக்கிழ
மை நான் திவ்வியநன்மை வாங்கும் நேரத்
தில் திவ்விய கர்த்தர் தமது அபாத்திர அடி
யாளை நோக்கித் திருவுளம்பற்றினதாவது:
"தொடர்ந்த ஒன்பது மாதமளவாய்த் தலை
வெள்ளிக்கிழமைதோறும் நன்மை வாங்கு
கிற சகலருக்கும், அவர்கள் சாகுந்தறுவாயில்
பாவத்துக்கு மனஸ்தாபப்பட்டுச் சாகும்
வரம் அளவில்லாப் பெலனுள்ள நமது
இருதயத்தின் சிநேகம் கொடுக்குமென்று,
அவ்விருதயத்திலுள்ள இரக்க மிகுதியால்
உனக்கு வார்த்தைப்பாடு கொடுக்கிறோம்.
அவர்கள் நம்முடைய ஆயாசத்தோடாவது,
தேவதிரவிய அநுமானங்களின்றியாவது,
சாகவேமாட்டார்கள். அன்றியும் நம்மு
டைய இருதயமானது அந்த அந்தியவேளை
யில் அவர்களுக்குக் க்ஷேமமான அடைக்கலமா
யிருக்கும்" என்றார்.

சின்சின்னாத்தி என்னும் பட்டணத்தி
லுள்ள அர்ச். பிராஞ்சீஸ்கு சவேரியார் கோ

விலிலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற திரு இரு
தய அதிசிரேஷ்ட சபையார் மேற்கூறிய
வார்த்தைப்பாட்டைப் பின்வருமாறு ஆச்சரி
யத்துக்குரிய விதமாய் வியாக்கியானம் செய்
திருக்கிறார்கள்:

விலைமதிக்கப்படாததும், அதிசயத்துக்
குரியதுமான இந்த வார்த்தைப்பாட்டை
முத். மார்கரீத்மரியம்மாளுடைய சரித்திரத்
தை எழுதினவர்கள் அவள் கையால் எழுதப்
பட்ட கடிதங்களிலிருந்தே எடுத்து, அவள்
சரித்திரத்தில் இரண்டு இடங்களில் குறித்
திருக்கிறார்கள்.

இதிலே தலைவெள்ளிக் கிழமையில் நன்
மை வாங்கி ஒப்புக்கொடுக்கவேண்டியது
அவசியமான • நிபந்தனையென்பதை நாம்
மறந்துபோகலாகாது. அதற்குப் பதிலாக
அடுத்த ஞாயிற்றுக்கிழமை நன்மை வாங்கி
னால் போதாது. அன்றியும் தொடர்ந்து ஒன்
பது தலைவெள்ளிக்கிழமை நன்மை வாங்கு
வதில் ஏது முகாந்தரத்தைப்பற்றியாகிலும்
நடுவில் ஒரு கிழமை தவறிப்போனால், மறு
படியும் புதிதாய்த் துவக்கவேண்டியது.

இதிலே சொல்லப்பட்டிருக்கிற வாக்குத்
தத்தம் அற்ப சொற்பமானதல்ல. நித்திய
மானது நமக்கு ஒரு க்ஷணத்தில் முடிவு கட்

டப்படும். நம்முடைய முடிவு நல்லதானால்
சகலமும் நலமாய் முடியும். ஆனால் நமக்குச்
சடுதி மரணம் வரலாம்; புத்தியும் அந்நேரம்
தடுமாறியிருக்கலாம். ஆகையால் நல்ல ஆயத்
தஞ்செய்வதற்கு அந்த நேரம் போதாதென்
பதற்குச் சந்தேகமில்லை. நாம் எப்போது
சாவோம் என்பதும், எப்படிச் சாவோம்
என்பதும் நமக்குத் தெரியாததினாலே,
ஏற்கனவே நாம் நல்ல ஆயத்தஞ்செய்து
சாவுக்கு எந்நேரமும் தயாராய்க் காத்திருப்
பது நமக்கு முக்கியமான காரியமல்லோ!
அப்படியிருக்க ஒன்பது மாசம் தொடர்ச்சி
யாய்த் தலைவெள்ளிக்கிழமைகளில் நன்மை
வாங்குகிறவர்கள் அவதிமரணமடையமாட்
டார்களென்று சேசுநாதர் சுவாமி வாக்குக்
கொடுத்திருக்கும்போது நாம் எவ்வளவோ
ஆவலோடு அவ்விதஞ் செய்யவேண்டும்.

ஈராந்த நிலைமை என்னும் வரமானது நமது
பேறுபலனால் அடையத்தக்கதல்ல என்பது
நிச்சயம். ஆனாலும் செபத்தினால் அதை
அடையலாம். இந்தத் தேவ வரத்தைத்
தாழ்மையான மன்றாட்டினால் அடையலாகு
மென்று அர்ச். அகுஸ்தீன் வசனித்திருக்
கிறார். ஏனெனில் செபமானது நமக்குத்
தேவ வரப்பிரசாதத்தைப் பெறுவிக்கும்.
ஆனால் நாம் செபத்தைக் கைவிடாமல், நிலை

மையாய்ச் செபித்து வருவோமாகில், அந்தச்
செபமானது நமது உயிர்பிரிகிற க்ஷணம்வரை
யில் நம்மைத் தாங்கி நடத்தும்படியான வரப்
பிரசாதங்களை ஒன்றுக்குப்பின் ஒன்றாய்த்
தொடர்ந்த கோர்வையாகப் பெற்றுக்கொடு
க்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

அப்படியிருக்க, எவ்வகைச் செபங்களி
லும், தகுந்த விதமாய்த் திவ்விய நன்மை
வாங்குவது மகா சக்தியுள்ள உத்தம வகைச்
செபமானதினாலே, அதற்கு உண்டான வரப்
பிரசாதம் நமக்குச் செபத்திலே நிலைமையெ
ன்னும் அனுக்கிரகத்தைப் பெறுவிக்கக் கூடு
ம். ஆனால் திவ்விய கர்த்தருடைய கோரிக்
கையின்படியே நாம் நன்மை வாங்கிவருவோ
மானால், செபத்தில் நிலைமையென்னும் அனுக்
கிரகத்தை அடைவதற்கு இது அதிக நிச்சய
மான வழிபாடென்பதற்கு ஆக்ஷேபனை
இல்லை.

ஈராந்த நிலைமையை அடைவதற்கு அடை
மானமாகத் தொடர்ந்த ஒன்பது மாதம் தலை
வெள்ளிக்கிழமைதோறும் நன்மை வாங்கு
வதே நம்முடைய திவ்விய கர்த்தருடைய
கோரிக்கையென்று அவருக்கு உகந்த அடி
மையானவள் வழியாய் நாம் நிச்சயமாய்
அறிந்திருக்கிறோம்.

பொதுப்பட ஒருவர் கண்ட காட்சிகளையும் தரிசனங்களையும் மெய்யென்று சுளுவில் அங்கீகரிக்கலாகாது. ஆனால் இந்த மகா வாக்குத்தத்தத்தைச் சுவாமியிடத்தில் பெற்று நமக்கு அறிவித்தவள் மரிய மார்கரீத்தென்னும் பரிசுத்த புண்ணியவதி. திருச்சபையால் முத்திப்பேறுபெற்ற பட்டமடைந்து பிரசித்தமாய் வணங்கப்படுகிறவள். இந்த மகிமைப் பட்டத்தை இவளுக்குச் சூடுமுன், திருச்சபையானது இவளுடைய நடபடிக்கைகளையும், இவளால் எழுதப்பட்டவைகளையும் நுணுக்கமாய்ப் பரிசோதித்து ஆராய்ந்திருப்பதினாலே,

1-வது. இந்த அம்மாள் கண்ட தரிசனங்களிலே கத்தோலிக்கு விசுவாசத்துக்காவது, சன்மார்க்கத்துக்காவது, கிறீஸ்தவனுக்குரிய நல்லொழுக்கத்துக்காவது விரோதமானது ஒன்றுமில்லையென்றும்,

2-வது. உத்தம அத்தாட்சிகளால் ருசுவான சங்கதிகளை நாம் எவ்வாறு மெய்யென்று விசுவசிக்கிறோமோ, அவ்வாறே இந்த அம்மாள் கண்ட தரிசனங்களையும் உண்மையென்று பத்தியோடும், விவேகத்தோடும், குருட்டாட்டமின்றியும் நாம் விசுவசிப்பதற்கான சகல அத்தாட்சிகளும் உண்டென்றும் நமக்கு வெளியாகிறது.

அன்றியும் திவ்விய நன்மை வாங்குவதற்குச் சம்பாவனையாக நித்திய சீவியம் அளிக்கப்படுமென்கிற வாக்குத்தத்தம் புதிது அல்லவே. சேசுக்கிறீஸ்துநாதர் அர்ச். அருளப்பர் சுவிசேஷத்திலே பலமுறை சொல்லியிருக்கிறதும் இதுவே. “இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் சீவித்திருப்பான்” என்கிறார். (அதி. 6. வச. 59)

ஆயினும் சுவிசேஷத்திலாவது, இந்த அம்மாள் கண்ட தரிசனத்திலாவது கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் சந்தேகமில்லாமல் ஒரே தீர்க்கமாய்க் கொடுக்கப்பட்டதல்ல. ஆகையால் திவ்விய நன்மை வாங்கினபின் நாம் அச்சமில்லாமல் பாவத்தைச் செய்யலாமென்று ஒருபோதும் நினைக்கத்தக்கதல்ல. சர்வேசுரன் பலவந்தமாய் நம்மை மோட்சத்தில் சேர்க்கவுமாட்டார், நமது மனச் சுதந்தரத்தை அழித்துப் போடவுமாட்டார். ஆனால் அவர் நன்மை வாங்குகிறவர்களுக்குத் தந்திர சோதனைகளை ஜெயிப்பதற்கு வேண்டிய வரப்பிரசாதங்களைத் தந்தருளுவார். “இந்தத் தேவ திரவிய அநுமானம் அற்பப்பாவங்களின் மேல் நமக்குள்ள நாட்டத்தைக் குறைத்து, சாவான பாவத்துக்கு நாம் சம்மதியாதபடி

செய்யும்'' என்று அர்ச். பெர்நார்து வசனித்திருக்கிறார்.

திரிதேந்து நகரில் கூடிய திருச்சங்கம் சொல்வதைக் கேட்கக்கடவோம்: "இந்தத் தேவதிரவிய அநுமானம் ஆத்துமத்துக்குப் போஜனமாக உட்கொள்ளப்படவேண்டுமென்று நம்முடைய திவ்விய இரட்சகர் சித்தமானார். "என்னைப் புசிப்பவன் என்னால் பிழைப்பான்" என்று சொன்ன கர்த்தரைக் கண்டுபாவித்துச் சீவிக்கிறவர்கள் இந்தத் திவ்விய அப்பத்தினால் போஷிக்கப்பட்டுப் பெலனடைவார்கள். அன்றியும் திவ்விய கர்த்தர் இந்தத் தேவதிரவிய அநுமானத்தை இனி நமக்கு வரப்போகிற நித்தியானந்த மகிமைக்கு ஓர் அடைமானமாகவும் தந்தருளச் சித்தமானார் என்று மேற்சொன்ன சங்கமானது கூறுகின்றது.

ஒருவிசை நன்மை வாங்குகிற ஆத்துமத்துக்கு இது பலிக்குமானால், அநேகம் விசை நன்மை வாங்குகிறவனுக்கு எவ்வளவோ அதிகமாய் இது பலிக்கமாட்டாது. அதிகமான வரப்பிரசாதங்கள் அவனுக்கு அளிக்கப்படுமல்லவா? சேசுநாதசுவாமி தமது திவ்விய இருதயத்துக்கு ஸ்தோத்திரமாகத் தொடர்ச்சியாய் ஒன்பது தலை வெள்-

ளிக்கிழமைகளில் இந்த நற்கிருத்தியத்தை நிறைவேற்றுகிறவர்கள் தங்களுக்கு நேரிடும் எவ்வித ஆபத்துகளுக்கும் அவசரமான வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளுவார்களென்று வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறார்.

இதுவுமல்லாமல், இந்தப் பத்தி முயற்சியை அநுசரிக்கிறவன் ஒன்பது தலை வெள்ளிக்கிழமை நன்மை வாங்கினது போதுமென்று இராமல், அடுத்தடுத்து நன்மை வாங்குகிற வழக்கமுள்ளவனாவான். மேலும் அவன் தன் தவறுதல்களை அதிக எளிதாய் மேற்கொண்டு, புண்ணியத்தில் விர்த்தியடைவான். அவனுடைய நல்லொழுக்கமான ஜீவியமே மரணத்துக்கு நல்ல ஆயத்தமாகும்.

சேசுவின்
திரு இருதயப் பரிகாரச் சபை.

இச்சிறு சபையானது திருச்சினாப்பள்ளியிலுள்ள அர்ச். சூசையப்பருடைய கல்விச்சாலை மாணாக்கருக்காக முந்த முந்த ஸ்தாபிக்கப்பட்டது. சேசுவின் ஆராதனைக்குரிய திரு இருதயத்தை விசேஷித்த வகையாய்

வணங்கத் தாற்பரியமுள்ள மாணாக்கருக்கு, இது உதவியாயிருப்பதுமன்றி அன்பின் தேவதிரவிய அநுமானத்தில் அத்திவ்விய இருதயத்துக்குச் செய்யப்படும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரஞ் செய்ய ஆசையுள்ள யாவருக்கும், மேற்படி பரிகார முயற்சிக்கு அவசியமான வழிபாடுகளைக் காண்பிப்பதே இச்சபையின் கருத்தாம்.

ஆகையால் முத்திப்பேறுபெற்ற மரிய மர்க்கரீத்தம்மாளுக்கு நமது திவ்விய இரட்சகர்தாமே திருவாய் மலர்ந்தருளிய மனவிசனகரமான வார்த்தைகளே இதற்கு மூலாதாரமாம். அவையாவன:—“இதோ நமதிருதயம்! இது மனிதரை எவ்வளவாய்ச் சிநேகித்து வருகிறதென்றால், அவர்களுக்காகத் தன்னாற் கூடுமானதை ஒன்றும் செய்யாமல் விடவில்லை. ஏனெனில் அவர்கள்மட்டில் இதற்குள்ள சிநேகத்திற்கு அத்தாட்சியாக, இது தன்னை முழுதும் செலவழித்துப் பலியிட்டதாமே. ஆகிலும் இதற்கெல்லாம் பிரதி நன்றியாக, அநேகர் நன்றிகெட்டதனத்தையே காண்பிக்கிறார்கள்.”

மேற்படி கல்விச்சாலை மாணாக்கர்கள் தங்களுக்குள் சிறு சிறு கூட்டங்களை ஏற்

படுத்திக்கொண்டு, இந்தத் திரு இருதயத்தின் துயரப் பிரலாபத்துக்கு நிவர்த்தி செய்யத் தங்களால் இயன்ற பிரயாசமெல்லாம் பட்டு, அத்திவ்விய இருதயத்தின் மட்டில் தங்களுக்குள்ள பத்தியானது உண்மையும் உருக்கமுமுள்ளதென்று தங்களுடைய சுகிர்த நேச சுறுசுறுப்புத் தவ முயற்சிகளைக்கொண்டு அத்தாட்சி காட்டவும் தீர்மானித்தார்கள்.

இச்சபையானது துவக்கத்தில் சொற்பஸ்திதியுள்ளதாயிருந்தபோதிலும் நாளாவிர்த்தியில் பிரபலியமாகவே, மேற்படி கல்விச்சாலைக்குப் புறம்பேயுள்ள அநேகர் இதில் உட்படக் கேட்டுக்கொண்டபடியால், ஸ்திரமான ஒழுங்குகளை இதில் ஏற்படுத்த வேண்டியதாயிற்று. இதற்கு முன் மேற்படி மாணாக்கர்தானே ஏற்படுத்தி ஒரு வருஷகாலமா யநுசரித்துவந்த ஒழுங்குகளைக் குருப்பிரசாதிகளில் ஒருவர் பரிசோதித்துச் சீர்திருத்திச் சகலருடைய உபயோகத்திற்கும் தகுந்ததாயிருக்கும்படி திட்டஞ் செய்தார்.

1891-ம் ௵ மார்ச்சு-௴ 26-௳ திவ்விய சற்பிரசாதத்துக்குப் பரிகாரத் திருநாளாகிய பெரிய வியாழக்கிழமை யன்று, உரோமா

புரியினின்று வந்த ஒரு நிருபம் அர்ச். பாப்பானவருடைய பட்சமுள்ள ஆசீர்வாதத்தை இச்சபையாருக்கு மகிமையாகக் கொண்டு வந்தருளிற்று. மேற்படி கல்விச்சாலைச் சுவாமிமார்களுக்குத் தெரியாமல் உரோமை நகர் திவ்விய நற்கருணைச் சபையின் ஒரு குருவானவர்தானே விண்ணப்பமெழுதி இவ்வாசீர்வாதத்தைக் கேட்டனுப்பினாரென்று அறியலானோம். இது எவ்வளவோ உற்சாகம் வருத்துவிக்கும் விசேஷமென்று இவ்விடத்தில் சொல்லிமுடியுந் தன்மையல்ல.

மேற்படி விண்ணப்பமாவது:—" திருச்சினாப்பள்ளியிலுள்ள அர்ச். சூசையப்பருடைய கல்விச்சாலை மாணாக்கர்கள் தேவரீருடைய திருப் பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து கேட்டுக்கொள்வதென்னவென்றால்: திவ்விய நற்கருணையை அடிக்கடியும் இன்னும் அநுதினமும் உட்கொள்ளுவதில் அவர்கள் காண்பிக்கும் பத்தி சுறுசுறுப்புக்கு ஒரு தூண்டுதலாக தேவரீருடைய அப்போஸ்தொலிக் ஆசீர்வாதத்தை இரந்து மன்றாடுகிறார்கள்."

" இதன்றியே திவ்விய இருதயத்துக்குத் தோத்திரமாக மேற்படி கல்விச்சாலையில்

அவர்கள் தானே ஏற்படுத்தியிருக்கிற பரிகாரச் சபையை ஆசீர்வதித்தருளத் தேவரீரைப் பிரார்த்திக்கிறார்கள். இன்னமும் இந்த மாணாக்கருக்கு உண்மையும் உறுதியுமான பத்தி விசுவாசத்தை ஊட்டும்படிக்கு, நாடோறும் சலியா முயற்சியோடு பிரயாசப்படும் அவர்கள் ஆசிரியராகிய சேசுசபைச் சுவாமிமார்களுக்கும் மேற்கூறிய ஆசீர்வாத அநுக்கிரகங் கிடைக்கும்படியாயும் கேட்டுக் கொள்ளுகிறார்கள்."

Die XXVII Februarii MDCCCXI.

SSmus Apostolicam benedictionem omnibus de quibus in precibus peramanter dignatus est impertire.

RAYNALDUS ANGELY,
SS. ab Intimo Sacello.

1891-ம் ௵ பெப்ரவரி-௴ 27-௳ மேற்கூறிய விண்ணப்பத்தில் கண்டிருக்கும் யாவர்க்கும் தமது அப்போஸ்தொலிக் ஆசீர்வாதத்தை அர்ச். பாப்பானவர் மிகுந்த பட்சத்தோடு கொடுக்கத் திருவுளமானார்.

ரெய்னல்துஸ் ஆன்ஜெலி
SS. ab Intimo Sacello.

இச்சபையாருடைய அநுதினக் கடமைகள் மிஞ்சியவைகளென்றும், வருத்தமுள்ளவைகளென்றும் சிலர் நினைப்பார்கள். அப்படியல்ல, நமதாண்டவர் முத்திப்பேறுபெற்ற மரிய மார்கரீத்தம்மாளுக்குச் சொல்லிக்காண்பித்த முறைப்பாடுகளை நிவர்த்திபண்ணுவதே இச்சபையாரின் பிரதான கடமையென்று அவர்கள் அறியக்கடவார்கள். அதேதெனில் "நமது திரு இருதயம் இந்த ஆறுதலற்ற ஸ்திதியில், உன்னாலும் தெரிந்தெடுக்கப்படும் விசுவாசிகளாலும் தேற்றரவடையத் தேடுகின்றது." நமதாண்டவர் திவ்வியநற்கருணையில் அநுபவிக்கும் நிந்தை அவமானங்களுக்குக் கூடியமட்டும் பரிகாரஞ் செய்ய யாரார் இருதயப் பற்றுதலுள்ளவர்களோ அப்பேர்ப்பட்ட தயாள நற்குணமுள்ள அன்பர்களையே அவர் முக்கியமாய்த் தேடுகிறாரென்று மேற்கூறிய வாக்கியத்தால் திருஷ்டாந்தமாய் விளங்குகின்றது. இவர்கள் கூட்டமே அவர் சொல்லிய சிறு மந்தையாம்.

சத்திய சுரூபியாகிய திவ்விய கர்த்தருடைய வார்த்தைகளால் ஏவப்பட்டு, வாரத்துக்கு இரண்டுவிசை இச்சபையார் திவ்வியநற்கருணை வாங்கும்படி ஒரு ஒழுங்கு ஏற்படுத்தி

யிருக்கிறோம். மனிதருடைய பத்திக்குறைவுகளுக்கும் நன்றிகெட்டதனத்துக்கும் பரிகாரமாக "நம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அடிக்கடி திவ்வியநற்கருணை வாங்குவதைக் காண்பது நமக்கு மிகவும் பிரியம்" என்று திவ்விய கர்த்தர் பற்பல சமயங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆகையால் "அவர்களுடைய நன்றிகெட்டதனத்துக்குப் பரிகாரமாக உனக்கு உத்தரவு கிடைத்தமட்டும் அடிக்கடி திவ்வியநற்கருணை வாங்குவாயாக" என்று முத்திப்பேறுபெற்ற மரிய மார்கரீத்தம்மாளுக்கு அவர் தாமே திருவுளம்பற்றினார்.

இந்தச் சபையார் தங்கள் கடமையைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்றினால் தங்கள் ஊர் ஜனங்கள்மேலும், தங்கள் குடும்பங்களின் மீதும், திரு இருதயத்தாலே திரளான நன்மை வரப்பிரசாதங்களைப் பெறுவிப்பார்கள் என்பதற்கு அற்பமேனும் சந்தேகமில்லை. இதுவிஷயத்தில் ஏற்கனவே நடந்தேறிய விருத்தாந்தங்கள் அனந்தமுண்டு. இதன்றியே, இச்சபையானது தான் உற்பத்தியாகி எழும்பும் இடங்களிலெல்லாம், பத்தி பரிசுத்ததனமுதலிய எவ்விதப் புண்ணியங்களையும் திரளாய் விளைவிக்கிறது. விசேஷ ஆத்தும இரட்சணியப்

பற்றுதலுக்குரிய இப்பத்தியின் உயிர்ப்பெலனானது, கல்விசாஸ்திர மடங்களிலுள்ள ஒவ்வொரு மாணாக்கருக்கும் தன்னை உணர்த்திக் காட்டாமல் போகாதென்பதினாலே அங்கே இது முக்கியமாய் விலைபொருந்தியதாம். "நமது இருதயத்தை யாரார் பூசித்து வணங்கிப் பிறரையும் இதற்குடன்படுத்துவார்களோ, அவர்கள்பேரிலெல்லாம் இத்திரு இருதயம் தன் அன்பின் விலாசத்தை விஸ்தரித்துத் தேவ சிநேகத்தின் சக்தியைத் திரளாய்ப் பொழியவிடுமென்று நாம் வாக்குக் கொடுக்கிறோம்," என்பதாக நமது திவ்விய இரட்சகர் திருவாய் மலர்ந்து உரைத்தருளவில்லையா? நமது பரிசுத்த பிதாவாகிய அர்ச். பாப்பானவருடைய ஆசீர்வாதத்தைப் பற்றிக் கூடியமட்டும் அவர்களுடைய சாதாரண மொழிகளையே இச்சிறு புத்தகத்தில் உபயோகிக்கலானோம்.

கடைசியாய் இச்சபை மட்டில் அறிய வேண்டியதாவது: இது செப அப்போஸ்தல சபையின் மூன்றாம் வகுப்பாயிருந்தாலும், சற்று மேலான சாங்கோபாங்கத்தை நாடியதும் அந்தப் பெரிய சபையின் பலன்களுக்கெல்லாம் இது பங்குள்ளதுமாயிருக்கிறது. ஆயினும் இது தனிச்சபையென்றே சொல்லப்படும். உலோக சீவியத்தில்

வாழ்ந்தாலும் சேசுவின் திரு இருதயத்தோடு அதிகமாய் ஒன்றித்துச் சீவிக்க விருப்பமுள்ள புண்ணியாத்துமாக்களுக்காகவும், விசேஷமாய்ச் செபத்தைக்கொண்டு இப்படிப்பட்ட ஒன்றிப்பை அடைய ஆசைப்படுகிற பத்தியுள்ளவர்களுக்காகவும் இச்சபை ஸ்தாபிக்கப்பட்டது.

சேசுவின் திரு இருதயப்பற்றுதலுள்ள அன்பர்களின் தொகையானது இச்சிறு புத்தக மூலியமாய்ப் பெருகக்கடவதாக. இதுவே இச்சிறு சஞ்சிகையின் தாற்பரியமும் நமது உருக்கநேசப் பெருக்கத்தின் நோக்கமுமாம்

1891-ம் வருஷம் அக்டோபர்-மீ 25-ம் உ முத்திப்பேறுபெற்ற மரிய மார்க்கரீத்தம்மாள் திருநாள்.

I. இச்சபையின் கருத்து.

நமது திவ்விய இரட்சகர் நமதுபேரில் வைத்த சிநேகத்தினாலேயே தம்மைப் பலியிட்டுத் தேவகோபாக்கினையினின்று நம்மை இரட்சித்தார். ஆனால் இந்தச் சிநேகத்தின் அத்தாட்சி அவருடைய திரு இருதயத்திற்குத் திருப்திகரம் வருவிக்கப் போதாத

படியால் தம்மாலியன்ற எவ்வித வகை
யாலும் தமது நேசப் பெருக்கத்தை
மெய்ப்பித்துக் காட்டத் திருவுளமானார்.
அதெப்படியென்றால், நாம் அவரோடு சம்
பாஷிக்கவும், அவரை உட்கொள்ளவும்,
அவர் நமக்குச் செய்த சகல நன்மைகளுக்
கும் நாம் நன்றியறிந்த தோத்திரம் செலுத்
தவும், நமக்கு அடிக்கடி சமயங் கிடைக்கும்
படியாக அவர் நமக்கு நடுவாகவே எப்பொ
ழுதும் பிரசன்னமாய் எழுந்தருளியிருக்கச்
சித்தமானார். மெய்யாகவே இதிலும் அதிக
மாய் அவர் நமக்குச் செய்யக்கூடியது
வேறொன்றுண்டோ?

மனுமக்களோடு சஞ்சரிப்பதே அவருக்கு
உண்மையான சந்தோஷமென்று காண்பிக்க
நமக்கு வேறென்ன திருஷ்டாந்தம் வேண்
டும்?

ஆனால் அந்தத் திவ்விய கர்த்தருடைய
திரு இருதயத்திற்கு மனுமக்களால் வரும்
கைம்மாறுகளை நாம் யோசிக்கையில், அவ
ரை யாதொன்று அறியாமல் நாள்கழிக்கும்
அனந்த மனிதரை நாம் நினைக்கையில்,
அவரை விசுவசிக்கமாட்டோமென்று பிதற்
றும் பதிதரை நாம் காண்கையில்—இன்னும்
ஐயோ! அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட

புத்திரர்களாகிய அநேகம் கத்தோலிக் கிறீ
ஸ்துவர்கள் அவர்மட்டில் பத்தியற்றுப் பரா
முகமாய்த் திரிவதை நாம் பார்க்கையில்,
அவர் நமக்காக நமது பீடங்களில் திவ்விய
சற்பிரசாதத்தில் மறைவுள்ளவிதமாய்ச் சிவி
க்க அவர் தம்மை உடன்படுத்தியிருப்பதை
நாம் தியானிக்கையில்,—நமது இருதயம் நம
க்குள் எடுத்துக்காட்டும் எவ்விதப் பரிகார
முயற்சியையும் செய்ய நாம் ஆசைப்படா
திருப்பதெப்படி? நம்மாலியன்ற எவ்வித
முயற்சியாலும் அவருக்கு ஆறுதல் வருத்த
நாம் விரும்பாதிருப்பதெப்படி?

ஆ! கொடிய கொலைப்பாதகர்களாலல்ல,
ஆனால் பாவ அழுக்கடைந்த இருதயத்தில்
அந்தத் திவ்விய கர்த்தரை உட்கொண்டு
அவருடைய திருப்பாடுகளின் நிந்தை அவ
மானங்களைப் புதிப்பித்து வரும் அவருடைய
நேச புத்திரர்களால் தானே அவருக்கு இக்
காலத்தில் வரும் கைம்மாறுகளை விசுவாசக்
கண்களால் பார்ப்போமாக;—ஐயோ!
இதுமாத்திரமல்ல, இன்னம் நமது இருதயத்
தைத்தானே நாம் ஆராய்ந்து பார்ப்போமா
கில், எத்தனையோவிசை நமது பலவீனத்தா
லும் பத்திக் குறையாலும் மேற்கூறிய பாத
கச் செய்கையில் நாமும் பங்காளிகளாயிருந்
தோமென்று கண்டுணர்வோம். இதை நாம்

நன்றாய் யோசித்துப் பார்த்தால் மேற்சொன்ன நன்றிகெட்டதனத்துக்கெல்லாம் பரிகாரஞ்செய்ய உருக்கமான ஆசை நம்மிடத்தில் பிறக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால் நாம் பரிகாரச் சபையாராகியமட்டில் 1-வது, துக்கப் பரிதாபத்தை நமது இருதயத்தில் எழுப்பப் பிரயாசப்படுகிறதும், 2-வது, திவ்விய நற்கருணையில் நாம் அவரை அடிக்கடி சந்தித்து அங்கே அவருடைய பாதத்தில் சாஷ்டாங்கமாக வணங்கி, அவரனுபவிக்கும் நிந்தை அவமானங்களுக்குப் பொறுத்தல் கேட்கிறதும், 3-வது, நெருங்கிய சிநேகிதனைப்போல இரங்கிப் பரிதபித்து, இருதயத்திலே அவரோடே சம்பாஷிக்கிறதும், 4-வது, அவருடைய அன்பை அறியாதிருக்கிறவர்களுக்கு அதை விளக்கிக்காட்டி அவர்களுக்கும் அந்தப் பத்தியை ஊட்டி நம்மாலியன்றமட்டும் திரு இருதயத்திற்குப் பரிகார முயற்சி செய்வோமென்று நமது திவ்விய கர்த்தருக்கு வார்த்தைப்பாடு கொடுக்கிறதும் நமது கடமையாம். ஆகையால் சேசுவின் திரு இருதயத்திற்குப் பரிகாரஞ் செய்கிறவர்கள், தங்கள் கருத்தை அர்ச். பாப்பானவருடையவும் திருச்சபையின் சகல விசுவாசிகளுடையவும் கருத்தோடே ஒன்றித்துத் திரு இருதயப்

பத்தியை எங்கும் பரம்பச்செய்வதே தங்கள் முக்கியமான அலுவலென்று உறுதியாய் ஸ்தாபித்துக்கொள்ளவேண்டியது.

சுருக்கத்திலே, பரிகாரச் சபையாரென்பது திவ்விய கர்த்தருக்கு ஐக்கிய சிநேகிதராகி கூடியமட்டும் பிரிய நேச பணிவிடைகள் புரிவதாம். இதற்கு நமது சம்பாவனையோ, திவ்விய இருதயத்தில் ஒரு விசேஷ ஸ்தலமாம்.

சேசுக்கிறீஸ்துவின் ஐக்கிய சிநேகிதர்: இது எவ்வளவோ மகிமையுள்ள பட்டம்! எவ்வளவோ பாக்கியமுள்ள சுகிர்தம்! கர்த்தருடைய சிநேகத்தை எங்கும் பரம்பச்செய்வதில் அலுவலாயிருந்து கடைசிமட்டும் இத்தொழிலை நடத்திவருகிறவர்களுக்கே இது உரிய சலாக்கியமாம்.

திவ்விய கர்த்தருக்கு **நெருங்கிய சிநேகி**தராகிய இந்த அன்பர்களுடைய மனச்சமாதானமும், பாக்கியமும் எத்தன்மையதென்று எடுத்துரைக்கக் கூடுமானவர்களார்? இப்பேர்ப்பட்ட மகிமையான பட்டத்தை ஆசையோடே தேடாதிருப்பவர்களார்? இப்பூலோகத்தில் இதிலும் மேலான தொழில் வேறென்ன இருக்கக்கூடும்?

ஆகையால் இப்பேர் தங்கிய பிரிய சபையாரே, அதற்கு அதிக அதிகமாய்ப் பாத்திரவான்களாக நாளுக்குநாள் முயற்சி செய்யுங்கள். திவ்விய இருதயத்திற்கு முன்பாக சாஷ்டாங்கமாக வணங்கி நம்மைத்தானே காணிக்கையாக புதிப்பித்து அவருக்கு ஒப்புக்கொடுப்போம். சேசுவின் திரு இருதயத்திற்கு நாம் நெருங்கிய சிநேகிதரென்றும், உண்மையான பரிகாரச் சபையாரென்றும், நமது நினைவு வாக்குக் கிரியைகளைக்கொண்டு அவருக்கு அத்தாட்சி காட்டுவோமென்று நம்மாலியன்ற பத்தி சுறுசுறுப்போடு அவருக்கு வார்த்தைப்பாடு கொடுப்போமாக.

II. பொதுவான ஒழுங்குகள்.

1-வது. சபையார் ஒவ்வொருவரும் தன்னாலியன்றமட்டும் சேசுவின் திவ்விய இருதயப் பத்தியைப் பரம்பச்செய்து அதைப் பிரபல்லியமாக்குவது தன்னுடைய கடமையாயிருக்கிறதுமல்லாமல், நன்மாதிரிகையாலும், புத்திமதியாலும் அடிக்கடி திவ்விய நற்கருணை உட்கொள்ளும் வழக்கத்தை விர்த்திபண்ணுவதே ஆராதனைக்குரிய திவ்விய இருதயத்திற்குப் பிரியப்படத்தக்க உத்தம

வழியென்று அவர்கள் அறியக்கடவார்கள். ஆகையால் ஒவ்வொரு சபையாரும் வாரத்திற்கு இரண்டுவிசை அல்லது கூடுமானால் அதிகமாகவும் திவ்வியநற்கருணை உட்கொள்ளவேண்டியது.

2-வது. வெள்ளிக்கிழமைகளில் யாராவது நன்மைவாங்க முழுதும் கூடாதிருந்தால், ஞாயிற்றுக்கிழமையிலாகிலும் வாங்கக்கடவார்கள். இப்பேர்ப்பட்ட சமயத்தில் வெள்ளிக்கிழமைகளில் திவ்விய இருதயப் படத்திற்கு முன்பாக முழந்தாளிலிருந்துகொண்டு திவ்விய கர்த்தருடைய சிநேகத்தின்பேரில் அரைமணி நேரம் தியானஞ்செய்து ஆசை நன்மை வாங்கவேண்டியது.

3-வது. வெள்ளிக்கிழமைகளை முக்கியமாய் மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமையைப் பரிகாரத்திற்குரிய நாளென்று நினைத்து, திவ்விய இருதயம் திருப்பீடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தருணத்தில், அதற்குண்டாகிற நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரஞ் செய்வோமென்று சபையார் யாவரும் தங்களைப் பலியாக ஒப்புக்கொடுக்கவேண்டியது. அவர்கள் இப்பேர்ப்பட்ட நாட்களில் திவ்விய கர்த்தரோடு அதிக ஐக்கியமாக ஒன்றித்துத் திவ்வியநற்கருணையை

அடிக்கடி சந்தித்து, கூடுமானால் செபதவ
ஒறுத்தல் முயற்சிகளை அதிகரித்துச் செய்
யப் பிரயாசப்படக்கடவார்கள்.

4-வது. சபையார் பத்தியுள்ள எவர்க
ளைக் கண்டாலும் இச்சபையின் கருத்தை
எடுத்துப் பேசுவது நல்லதாம். இன்னும்
அவர்களுக்குப் பிரியமானால் அவர்கள் பெய
ரைச் சபையாருடைய நாம அட்டவணையில்
சேர்த்தெழுதிச் சங்கைக்குரிய விசாரணைச்
சுவாமியார் அவர்களுக்கு அனுப்பலாம்.

5-வது. சபையார் இருவருக்கு அதிகமா
யிருக்கிற ஊர்களிலே சமயத்துக்குச் சம
யம், அதாவது, வெள்ளிக்கிழமைதோறும்
கூட்டங்கூடிக் குறிக்கப்பட்ட நற்கிரிகைகளை
நிறைவேற்றி முக்கியமாய்ச் செபமாலையை
யும் சொல்லுவது உத்தமமாம். இதன்வழி
யாய் அவர்கள் பிரதிக்கினைகள் ஸ்திரப்படும்.

6-வது. சபையாரில் ஆருக்காவது இக்
கட்டு இடைஞ்சல் நேரிட்டால், அல்லது,
யாதொரு கவை காரியங்களின் அநுகூலத்
தைப்பற்றிச் சஞ்சலமுண்டானால், தங்கள்
விசேஷ கருத்துக்காகச் செபதவம் நடக்கும்
பொருட்டுச் சபை விசாரணைக் குருசுவாமி
யார் வழியாய்க் கல்விசாலைச் சகோதரருக்

குத் தெரியப்படுத்தும்படி சொல்லவேண்டி
யது. சேசுக்கிறீஸ்துவின் ஐக்கிய சிநேகி
தர்கள் இடத்தால் பிரிந்திருந்தாலும் அவரு
டைய திவ்விய இருதயத்தில் ஒன்றித்திருக்
கிறபடியால், அவருடைய வாக்குத்தத்தத்
தின்படியே அவர்கள் மன்றாட்டு அங்கே
கேட்கப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை.

7-வது. ஒவ்வொருவனும், தன்னாலான
மட்டும், சமயாசமயம், தான் சபை ஒழுங்கு
களை அனுசரிப்பதில் எவ்வளவு பிரமாணிக்க
முள்ளவனாயிருக்கிறானென்றும், தன் சங்கத்
தில் நடக்கும் நன்மை எவ்வளவென்றும்
சபை விசாரணைக் குருவானவருக்கு அறிக்
கையிடவேண்டியது.

8-வது. அவரவர் தங்கள் கடமையைப்
பிரமாணிக்கமாய் நிறைவேற்றினார்களோ
இல்லையோவென்றும், முக்கியமாய்த் திரு
இருதய வணக்க தோத்திரத்தைப் பிறருக்கு
உணர்த்துவிக்கும் சமயத்தை அசட்டையாய்
விட்டுவிட்டார்களோவென்றும், தினந்தோ
றும் ஆத்துமசோதனை செய்யவேணும். இத
ற்காகச் சபையின் ஒழுங்குப் புத்தகத்தை
ஒவ்வொருவரும் வைத்துக்கொண்டு அதைச்
சமயத்துக்குச் சமயம் வாசிக்கவேண்டும்.

சபாசனம்.

இச்சபையாருடைய தனிச்சங்கம் கூடிய மட்டும் வெள்ளிக்கிழமையிலே நடக்கும். அப்பொழுது இஸ்பிரீத்துசாந்துவின் மந்திரம் சொல்லி அதை ஆரம்பித்தபின் திவ்விய இருதயத்தின் செபமாலையைச் செபித்துப் பரிகார முயற்சியை வார்த்தைக்கு வார்த்தையாய் எல்லோருங்கூடிச் சொல்லிச் செபிக்கவேண்டும். மேற்படி செபங்களுக்குப் பிறகு திவ்விய இருதயத்தைக்குறித்துக் கூடியமட்டும் ஒரு சிறு ஞானவாசகம் வாசித்து, முடிவில் சபையாருக்காக "சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே," என்கிற செபமும, ஒரு பர., பிரி., திரி., மந்திரமும் சொல்லவேண்டும். இன்னும் திவ்விய இருதயப் பிரார்த்தனையும் செபிக்கலாம். அல்லது திவ்விய இருதயத்தைக் குறித்தாவது தேவமாதாவைக் குறித்தாவது சில பத்தியுள்ள பாட்டுகளைப் பாடலாம்.

III. சபையார் செய்யவேண்டிய சுகிர்த கிருத்தியங்கள்.

I.—சேசுவின் திரு இருதயச் செபமாலை. அதின் ஒவ்வொரு பத்துமணிச் செபமும் எந்தக் கருத்துகளுக்காகச் சொல்லவேண்டுமென்றால்:

(1) 1-ம் பத்துமணி—பதிதர் அஞ்ஞானிகளால் அவருக்கு வரும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக.

(2) 2-ம் பத்துமணி—கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களால் அவருக்கு வரும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக.

(3) 3-ம் பத்துமணி—இச்சபையாரால் அவருக்கு வரும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக.

(4) 4-ம் பத்துமணி—மாசில்லாத தேவமாதாவின் திரு இருதயத்தோடுகூட ஒன்றித்து சேசுவின் மதுரமான திரு இருதயத்திற்கு நமது இருதயத்தை ஒப்புக்கொடுப்பதற்காக.

(5) 5-ம் பத்துமணி—சேசுவின் திரு இருதயத்தின்பேரில் உத்தம நேச வரத்தையும், ஆத்தும இரட்சணியத்தின்பேரில் பற்றுதலையும் கேட்பதற்காக.

II.—தேவமாதாவின் மாசற்ற திரு இருதயத்திற்கு நிந்தைப்பரிகாரமாக இச்செபமாலை முடிவில் மூன்று பிரியதத்தமந்திரம் செபிக்கவும்.

III.—அபாத்திரமாய்ச் சற்பிரசாதம் உட்கொள்ளப்படும் தோஷ துரோகங்களுக்குப் பரிகாரமாக வெள்ளிக்கிழமைதோறும் திவ்விய நன்மை வாங்குகிறது.

IV.—தினந்தோறும் சில ஒறுத்தல் முயற்சிகள் செய்து திரு இருதயத்திற்கு ஒப்புக்கொடுக்கிறது. இம்முயற்சி விஷயத்தில் கல்விச்சாலையில் இருப்பவர்கள முழு மவுனத்தோடு அரைமணிநேரம் கண்டிப்பாய் வேலை செய்தால் போதும்.

V.—கூடியமட்டும் ஒரு நாளைக்கு ஒருவிசையாவது திவ்விய சற்பிரசாதத்தைச் சந்தித்து தேவாலயத்தில் செய்யப்படும் அவசங்கைக்குப் பரிகாரமாக இக்கிரிகையை ஒப்புக்கொடுக்கிறது.

தேவ வசீகர முயற்சி.

ஓ! சேசுவின் மதுரமான திரு இருதயமே, திவ்விய சற்பிரசாதத்தில் தேவரீர் அனுபவித்ததும் இன்னும் அனுபவிக்கிறதுமாகிய நிந்தை அவமானங்களை நாங்கள் நினைத்து துக்க மனஸ்தாபப்படுகிறோம் சுவாமி. தேவரீருக்குண்டாகிற இப்படிப்பட்ட துரோகங்களுக்குப் பரிகாரஞ் செய்ய இதோ நாங்கள் உமது திருப்பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து கிடக்கிறோம். இப்படி பிறக்கணிக்கப்பட்ட உமது சிநேகத்திற்கு எங்கள் வணக்கத் தோத்திரங்களும், பத்திக் கிருத்தியங்களும், தக்க பரிகார முயற்சிகளாகக் கூடுமானால் ஓ! எவ்வளவோ ஆறுதலாயிருக்கும்! இன்னம் எங்கள் உயிரைப் பலியிடவேண்டியிருந்தாலும் பலியிட்டு தேவரீருக்கு இப்பேர்ப்பட்ட பரிகாரஞ் செய்யக்கூடுமானால், ஓ! எவ்வளவோ மனோகரமாயிருக்கும்! என் சேசுவே, உம்மை நிந்தித்து தூஷணிக்கிற அஞ்ஞானிகள் பதிதர், பத்தியற்ற கிறீஸ்துவர்கள் முதலானவர்களும் விசேஷமாய்த் தேவரீரை அநேகவிசை மனநோகப்பண்ணின பாவிகளாகிய எங்களுக்கும் பொறுத்தலைத் தந்தருளவேணுமென்று மன்றாடுகிறோம். எங்கள் நன்றிகெட்டதனத்தைப் பாராட்டாமல் தேவரீ

ருடைய கிருபைப் பெருக்கத்தைமாத்திரம் நினைத்தருளும் சுவாமி. எங்கள் பாவச் சுமையைச் சுமந்த உமது திவ்விய இருதயம் மரணமட்டும் துக்கசாகரத்தில் அமிழ்ந்தியிருந்ததையும் நினைவுகூர்ந்தருளும். பாவ அழுக்கடைந்த எங்களிருதயத்தை நிர்மூலமாக்கிப்போடும். தேவரீருடைய திரு இருதயத்திற்குச் சரியான தாழ்ச்சி மனஸ்தாபமுள்ள இருதயத்தை—பாவ வெறுப்பும் பரிசுத்ததனமுமுள்ள இருதயத்தை—தேவசிநேக அக்கினியாலெரியும் இருதயத்தை—உமது திவ்விய மகிமைக்காக இனி முழுதும் வசீகரமான பலியாகத்தக்க இருதயத்தை—எங்களுக்குத் தந்தருளும் சுவாமி.

திவ்விய சற்பிரசாதத்தில் தேவரீருக்கு உண்டாகிற அவசங்கை, நிந்தை, தேவதுரோகம் முதலிய நன்றிகெட்டதனத்திற்காக நாங்கள் மிகவும் மனநொந்து துக்கப்படுகிறோம். அவைகளுக்காக எங்களால் கூடியமட்டும் பரிகாரஞ் செய்ய பிரயாசப்படுவோம். தேவாலயத்தில் இனி பத்தி வணக்கத்தோடிருப்போம். உமது சிநேக தேவதிரவிய அநுமானத்தில் இனி தேவரீரை சுறுசுறுப்போடு சந்தித்துவருவோம். திவ்விய நற்கருணை வழியாகத் தேவரீரை இனி பத்தி விநயத்தோடு அடிக்கடி உட்கொள்ளுவோம்.

சகலரும் தேவரீரை அறிந்து சிநேகிக்க முயலுவோம். இந்த எங்கள் வாக்குத்தத்தங்களையும் பிரதிக்கினைகளையும் தேவரீர் ஆசீர்வதித்து, எங்கள் ஜீவியகாலமுழுதும் அவைகளைப் பிரமாணிக்கமாய் அநுசரிக்க உமது கிருபை வரப்பிரசாதம் தந்தருளும் சுவாமி. ஆமென்சேசு.

சேசுநாதருடைய திரு இருதயத்தின் ஜெபமாலை.

முந்தமுந்தச் சிலுவையின்பேரில்.

கிறீஸ்துவினுடைய . ஆத்துமமானதே, என்னை அர்ச்சியசிஷ்டவனாகப் பண்ணியருளும். கிறீஸ்துவினுடைய திரு இருதயமே, உமது தேவசிநேக அக்கினியாலென்னை எரியப் பண்ணியருளும். கிறீஸ்துவினுடைய திருச்சரீரமே, என்னை இரட்சித்துக்கொள்ளும். கிறீஸ்துவினுடைய திரு இருதயமே, என்னை உமது வசமாக்கி எனக்குத் திருப்தி உண்டாகப்பண்ணியருளும். கிறீஸ்துவினுடைய விலாவினின்று ஓடிவிழுந்த திருத்தண்ணீரே, என்னைக் கழுவியருளும். கிறீஸ்துவினுடைய திருப்பாடுகளே, எனக்குத்

தேற்றரவு உண்டாகப்பண்ணியருளும். நல்ல சேசுவே, நான் கேட்கிறதைத் தந்தருளும், உம்முடைய திருக்காயங்களுக்குள்ளே என்னை வைத்து மறைத்துக்கொள்ளும். என்னை உம்மை விட்டுப் பிரியவொட்டாதேயும், துஷ்ட சத்துருக்களிடத்திலேநின்று என்னை இரட்சித்துக்கொள்ளும். என் மரணத்தறுவாயில் நீரென்னை அழைத்து உம்முடைய சந்நிதியிலேயுட்பட்ட சகல அர்ச்சியசிஷ்டவர்களோடுகூட ஊழியுள்ளகாலம் நானும்மைத் தோத்திரம் பண்ணும்படிக்கு அடியேனை உமதண்டைக்கு வாக்கற்பித்தருளும்.

ஆமென்சேசு.

* இச்செபம் செபிக்கிறவர்களுக்கு 300 நாள் பலனும், நன்மை வாங்கினபின் இந்தச் சொல்லுகிறவர்களுக்கு 7 வருஷப்பலனும் உண்டு.

பின்னும் பெரியமணியில்.

இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமுமுள்ள சேசுவே, என் இருதயத்தைத் தேவரீருடைய இருதயத்துக்கு ஒத்ததாகப்பண்ணியருளும்.

சிறுமணியில்.

சேசுவின் மதுரமான இருதயமே, என் சிநேகமாயிரும்.

பத்துமணி முடிந்தபின்.

மரியாயின் மதுரமான இருதயமே, என் இரட்சணியமாயிரும்.

* விவரம்: இம்மூன்று மனவல்லயச் செபங்களில் ஒவ்வொன்றுக்கும் 300 நாள் பலனுண்டு.

ஐம்பதுமணி முடிந்தபின்பு.

1-வது சேசுவின் திரு இருதயமே, எங்கள் பேரில் இரக்கமாயிரும்.

2-வது. ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த அர்ச். மரியாயின் மதுரமான இருதயமே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

3-வது. திரு இருதயத்தின் ஆண்டவனே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

4-வது. சேசுவின் திரு இருதயமானது எங்கும் சிநேகிக்கப்படக்கடவதாக.

* விவரம்: இந்நான்கு மனவல்லயச் செபங்களில் ஒவ்வொன்றுக்கும் 100 நாள் பலன்.

இச்செபமாலையானது பலன்களடங்கிய உத்தம பொக்கிஷமாம். ஏனெனில் இச்செபமாலைக்கு அங்கமாயமைந்திருக்கும் செபங்கள் இவ்விஷயத்தில் மிகவும் சுகிர்த

மடங்கியவைகள். இதைச் செபித்தால் இரு பதினாயிரம் நாள் பலனடையலாம். இவையெல்லாம் உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்கு ஒப்புக்கொடுக்கத்தகும்.

திவ்விய இருதயத்திற்கு நிந்தைப் பரிகார முயற்சி.

சேசுவின் திவ்விய இருதயமே! தேவரீருக்கு இடைவிடாமல் செய்யப்படுகிற நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக தேவரீர் பேரில் எங்கள் சிநேக பிரமாணிக்கத்தை அதிகரித்து எங்கள் வசீகர முயற்சியைப் புதுப்பிக்க, இதோ! உம்முடைய திருப்பாதத்தில் விழுந்து கிடக்கிறோம். இதற்காக நாங்கள் இப்போது தேவரீருக்கு பிரசித்தமாகக் கொடுக்கும் வார்த்தைப்பாடுகள் ஏதென்றால்:—

சேசுவின் திவ்விய இருதயமே, உமது தேவ இரகசியங்கள் எவ்வளவுக்குத் தூஷணிக்கப்படுமோ அவ்வளவுக்கு நாங்கள் அவைகளை உறுதியாய் விசுவசிப்போம்.

மனுக்குலத்தின் ஏக நம்பிக்கையே, சததமான சீவியத்தின்மட்டில் எங்களுக்குள்ள விசுவாசத்தை அழிக்க எவ்வளவுக்கு அதிகமான அஞ்ஞானம் எழும்புமோ, அவ்வளவுக்கு அதிகமாக நாங்கள் உமது திரு இருதயத்தில் நம்பிக்கை வைப்போம்.

ஓ! அளவில்லாத நேசம் அமைந்த சேசுவின் திரு இருதயமே, தேவரீருடைய ஏவுதல்களை ஆத்துமங்கள் எவ்வளவுக்குப் புறக்கணிப்பார்களோ, அவ்வளவுக்கு அதிகமாய் நாங்கள் தேவரீரைச் சிநேகிப்போம்.

சேசுவின் திவ்விய இருதயமே, உம்முடைய தெய்வீகம் எவ்வளவுக்கு அதிகமாய் விரோதிக்கப்படுமோ, அவ்வளவுக்கு அதிகமாய் அதை நாங்கள் ஆராதித்து வணங்குவோம்.

சேசுவின் மிகவும் பரிசுத்த திரு இருதயமே, உம்முடைய திவ்விய கற்பனைகள் எவ்வளவுக்கு அதிகமாய் மறந்தும், மீறியும், புறக்கணிக்கவும்படுமோ, அவ்வளவுக்கு அதிகமாய் நாங்கள் அவைகளை அநுசரிப்போம்.

மிகவும் தயாள சம்பன்னராகிய சேசுவின் திரு இருதயமே, உமது தேவதிரவிய அநுமானங்கள் எவ்வளவுக்கு நிந்தித்து அசட்டை செய்யப்படுமோ, அவ்வளவுக்கு அதிகமான வணக்கத்தோடும் பூச்சியத்தோடும் தேவரீரை நாங்கள் உட்கொள்ளுவோம்.

சகல புண்ணியங்களுக்கும் மாதிரிகையாகிய திவ்விய இருதயமே, ஆராதனைக்குரிய

தேவரீருடைய புண்ணியங்கள் எவ்வளவுக்கு அதிகமாய் மறந்து அலட்சியம் செய்யப்படுமோ, அவ்வளவுக்கு அதிகமாய் நாங்கள் அவைகளைப் பயிற்சிசெய்ய பிரயாசப்படுவோம்.

ஆத்தும அன்பராகிய சேசுவின் திரு இருதயமே, ஆத்துமாக்களைக் கெடுக்க எவ்வளவுக்கு அதிகமாய்ப் பசாசுகள் பிரயாசப்படுமோ, அவ்வளவுக்கு அதிகமாய் நாங்கள் அந்த ஆத்துமங்களை இரட்சிக்க ஆசை நேசமுள்ளவர்களாவோம்.

சேசுவின் திவ்விய இருதயமே, அகங்கார சிற்றின்பங்கள் எவ்வளவுக்குச் சுய ஒறுத்தலை அழித்து கடமையின் பிரியத்தைக் கெடுக்குமோ, அவ்வளவுக்கு அதிக தாராள குணத்தோடு எங்களை ஒறுத்து ஜெயிக்க முயலுவோம்.

திவ்விய இருதயமே, பூலோக நடுவில் நாங்கள் தேவரீருடைய அப்போஸ்தலர்களாய் விளங்கவும், நீடூழிகாலத்தில் உமது கிரீடமாய்த் துலங்கவும், போதுமான திடமும் பலமும் அமைந்த வரப்பிரசாதத்தையும் எங்களுக்குத் தந்தருளுஞ் சுவாமீ.

ஆமென்சேசு.

நமதாண்டவரின் திருமுகப் பத்தி.

பதின்மூன்றும் சிங்கராயரொன்றும் பாப்புவினால் அங்கீகரிக்கப்பட்டு, ஓர் பெரிய சபையாக ஏற்படுத்தப்பட்டு வழங்கிவருகிற சபையாக ஏற்படுத்தப்பட்டு வழங்கிவருகிற இந்தப் பத்தியை, பரிகாரச்சபையாரனைவரும் கனமாய் மதிக்கக்கடவார்கள். இதின் விசேஷ கதி ஏதென்றால்:—

1-வது. அர்ச். வெரோணிக்கம்மாளுடைய முக்காட்டு வஸ்திரத்தில் பதிந்திருக்கும் திவ்விய கர்த்தரின் திருமுகத்துக்கு நாம் காட்ட வேண்டிய நேச தோத்திர நமஸ்காரத்தை அந்த ஆராதனைக்குரிய திருமுகத்துக்கு நாம் செலுத்தத்தக்கதாகவும்,

2-வது. தேவமகத்துவத்துக்கும், சேசுக்கிறீஸ்துவின் தெய்வீகத்துக்கும், சத்திய திருச்சபையின் அதிகாரத்துக்கும் விரோதமாய்ச் செய்யப்பட்ட அவமான துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், திருமுகத்துக்குத் தோத்திரமாகவும், செப தப பத்தி விசுவாச முயற்சிகளை உற்சாகப்படுத்தத்தக்கதாகவும் இப்பத்தி ஏற்பட்டது.

சேபங்கள்.

தேவதூஷணக்காரரால் இன்னமும் நிந்திக்கப்படுகிற என் இரட்சகரான சேசுவே, நான் உம்மை வணங்கி ஆராதித்து நேசிக்கிறேன். சகல அர்ச்சியசிஷ்டவர்களும் தேவதூதர்களும் உமக்குச் செலுத்துகிற ஸ்துதி நமஸ்காரங்களை ஓர் சுகந்த பரிமளமாகவும், தூபமாகவும், உமது பரிசுத்தமாதாவின் இருதயத்தின் வழியாக உமக்கு ஒப்புக்கொடுத்து, பாவத்தினால் என்னிடத்திலும் சகல மனிதரிடத்திலும் உருவழிந்த உமது சாயலை, உமது திருமுகத்தின் வல்லமையினால் சீர்படுத்திப் புதிப்பித்தருளவேணுமென்று மிகுந்த தாழ்ச்சியோடு உம்மை இரந்து மன்றாடுகிறேன். ஆமென்சேசு.

வேறு சேபம்.

என் அன்பரான சேசுவின் ஆராதனைக்குரிய திருமுகமே, தெய்வீகத்தின் உத்தம முத்திரையே, உம்மை வணங்கி ஆராதித்து நேசிக்கிறேன். என் ஆத்துமத்தின் சகல சக்திகளைக்கொண்டும் உமது சரணமாய் ஓடி வந்து, உமது திவ்விய சாயலின் சகல இலட்சணங்களையும் எங்களிடத்தில் பதியப்பண்ணவேணுமென்று மிகுந்த தாழ்ச்சி விநயத்தோடு மன்றாடுகிறேன் சுவாமி.—ஆமென்சேசு.

வேறு சேபம்.

என் சேசுவின் ஆராதனைக்குரிய திருமுகமே, உலக இரட்சணியத்தின் பொருட்டுத் தேவரீர் பாடுபட்ட அன்று சிலுவைமரத்தில் மிகுந்த இரக்கத்தோடு சாய்ந்தவண்ணமே நிர்ப்பாக்கிய பாவிகளாகிய எங்கள்மேல் இரங்கி இன்று உமது கிருபைக் கண்ணால் நோக்கி உமது சமாதான ஒன்றிப்புக்கு எங்களை உரியவர்களாக்கியருளும் சுவாமீ.—

ஆமென்சேசு.

சேசுவின் திரு இருதயமே, எங்கள்பேரில் இரக்கமாயிரும்.—ஆமென்சேசு.

ஆண்டவருடைய திருநாமம் வாழ்த்தப்படக்கடவது. 100-நாட்பலன்.

துப்போந்தேன்பவர் செய்த வேறு சேபங்கள்.

சர்வவல்லபமுள்ள பிதாவாகிய சர்வேசுரா, உம்முடைய திருக்குமாரனாகிய சேசுவின் திருமுகத்தைப்பார்த்தருளும். எங்கள் பாவ மன்னிப்பை இரந்து மன்றாடி நம்பிக்கையோடு அத்திரு முகத்தைத் தேவரீருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறோம். அவ

ரோ எங்கள் பரிபாலன். எங்களுக்காக மனுப் பேசுகிறவர் அவரோ. என் ஆண்டவரோ, அவருடைய அபயசத்தத்தைக் கேட்டருளும். அவருடைய கண்ணீரைப் பார்த்தருளும். ஆண்டவருடைய அளவில்லாத பேறுபலன்களைப் பார்த்து நிர்ப்பாக்கியப் பாவிகளாகிய எங்களுக்காக அவர் கேட்கும் மன்றாட்டுகளைத் தந்தருளும் சுவாமீ.—ஆமென்சேசு.

நல்ல சேசுவே, கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் அகப்படும், தட்டுங்கள் திறக்கப்படுமென்று திருவுளம்பற்றினீரோ. ஆண்டவரோ, சகல நன்மைகளையும் பெறுவிக்கும் விசுவாசத்தை எங்களுக்குத் தந்தருளும் அல்லது எங்கள் விசுவாசத்திலுள்ள குறைகளைத் தேவரீர்தாமே சீர்ப்படுத்தியருளும். தேவரீருடைய சிநேகத்தின் பரிசுத்த பேறுபலனைக்கொண்டு உமது நித்திய மகிமைக்காக நாங்கள் இரந்து மன்றாடும் வரப்பிரசாத நன்மைகளையும் உமது அளவில்லாத இரக்கத்தால் நாங்கள் நம்பிக்கையோடு அடையக் காத்திருக்கின்ற நன்மைகளையும் எங்களுக்குத் தந்தருளும்.—ஆமென்சேசு.

தேவரீர் எங்களுக்குத் தந்த நன்மை வரப்பிரசாதங்களுக்காக நாங்கள் மிகவும் நன்றி

யறிந்திருக்கிறோம். தேவசிநேகமும் நன்றியறிதலும் பொருந்திய நல்லுணர்ச்சிகளை எங்களிருதயத்தில் பதிப்பித்துத் தேவரீருடைய நித்திய புகழ்ச்சிக்குரிய நன்மனவாழ்த்துதலை நாங்கள் பாடித் தேவரீரைப் புகழ்ந்தேற்றக் கிருபை செய்தருளும் சுவாமீ.—ஆமென்சேசு.

திருமுகத்தைக்குறித்து 9-ம் பத்திநாதரென்னும் பாப்பானவர் இயற்றிய செபம்.

இனிய சேசுவே! எங்களை உமது கிருபைக் கண்களால் நோக்கியருளும். அன்று வெரோணிக்கம்மாளைக் கிருபாகடாட்சமாய்ப் பார்த்தருளினதுபோல எங்களில் ஒவ்வொருவரையும் தயவாய்ப் பார்த்தருளும். உமது பிரத்தியட்ச தரிசனத்தை அடியோர்கள் இச்சரீரக்கண்களால் காண அபாத்திரவான்களாகையால், எங்கள் இருதயத்தை நோக்கிய உமது திருமுகத் தரிசனத்தைத் திருப்பியருளும். இந்தத் திவ்விய தரிசனத்தால் எங்கள் இருதயம் உற்சாகமடைந்து, இப்பிரபஞ்ச சீவிய ஞான யுத்தத்தில் எங்களுக்கு அவசரமான மனத்திடனை அத்திருக் கிருபாகடாட்ச ஊறணியால் அடையச் செய்தருளும் சுவாமீ.—ஆமென்சேசு.

வியாதியில் தேவ உதவியைக் கேட்குமுன் பிரதிக்கினை.

என் ஆண்டவராகிய சேசுவே, சுவிசேஷத்தில் சொல்லப்பட்ட வியாதிஸ்தனை நோக்கி "எழுந்திரு" என்று தேவரீர் திருவுளம்பற்றுமுன் அவனுக்குப் பாவப்பொறுத்தல் அளிக்கச் சித்தமானீரோ, நிர்ப்பாக்கிய பாவியாகிய அடியேன் என் சரீரநோய்களை நீக்கவேணுமென்று தேவரீருடைய அளவிறந்த இரக்கத்தை நோக்கி மன்றாடுமுன், தேவரீர், பாவப்பொறுத்தலளிக்கும் அதிகாரத்தை உம்முடைய குருக்களுக்குக் கொடுத்திருக்கிறீரென்று அறிந்து உறுதியாக விசுவசித்து, பச்சாத்தாபமாகிய ஞான அருவியில் என் ஆத்துமத்தைக் கழுவிச் சுத்தமாக்கக்கடவேன். அதன்பின், என் ஆண்டவரே, உமது திருச்சித்தத்துக்கு என் முழு இருதயத்தையும் ஆத்துமத்தையும் ஒப்படைத்து, சதாகாலமும் மோட்ச இராட்சியத்திலே உமது ஆராதனைக்குரிய திரு முகத்தைத் தெரிசித்துப் போற்றிப்புகழுவேன் என்கிற நம்பிக்கையோடு, இவ்வுலகத்தில் என் விருப்பம் நிறைவேறவேண்டுமென்று சமாதான அமரிக்கையோடு காத்திருப்பேன். ஆமென்சேசு.

சர்வேசுரனுடைய திரு நாமத்துக்கு விரோதமாய்ச் செய்யப்படும் நிந்தைகளுக்குப் பரிகாரமாக புகழ்ச்சிப் பிரகரணம்.

அதிமிகப் பரிசுத்தமானதும், ஆராதிக்கப்படத்தக்கதும், எங்கும் அறியப்படாததும், எவராலும் உரைத்து முடியாததுமாகிய ஆண்டவரின் திரு நாமதேயம், எப்பொழுதும், பரலோகத்திலும் பூலோகத்திலும் பாதாள லோகத்திலும், தேவ திருக்கரத்தால் சிருஷ்டிக்கப்பட்ட சகல வஸ்துக்களாலும், திருப்பீடத்தின் உந்நத திவ்விய சற்பிரசாதத்தில் வீற்றிருக்கும் நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவின் பரிசுத்த திரு இருதயத்தாலும், புகழ்ந்து ஸ்துதிக்கப்படவும், வாழ்த்தி வணங்கப்படவும் கடவதாக.

ஆமென்சேசு.

தோத்திரப் பிரகரணம்.

சர்வேசுரனுக்குத் தோத்திரம். அவருடைய திரு நாமத்துக்குத் தோத்திரம். மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனுஷனும் ஒன்றான சேசுக்கிறீஸ்துநாதருக்கு தோத்திரம். சேசுவின் திரு நாமத்துக்குத் தோத்திரம். பலிபீடத்தில் மகா பரிசுத்த

தேவதிரவிய அநுமானத்தில் சேசுநாதருக்குத் தோத்திரம். நிகரற்ற தேவதாயாகிய கன்னிமரியாயிக்கு தோத்திரம். அவளுடைய பரிசுத்தமும் மாசற்றதுமான உற்பவத்திற்கு தோத்திரம். கன்னித்தாயான மரியாயின் திரு நாமத்திற்கு தோத்திரம். தம்முடைய சம்மனசுக்களிலும் அர்ச்சியசிஷ்டவர்களிலும் சர்வேசுரனுக்கு தோத்திரம்.

ஒரு வருஷப்பலன்; மாதமொருமுறை பரிபூரணபலன்.

சிநேகப்பிரலாபம்.

ஆண்டவரே, எங்களைச் சுற்றிலும் நாள்தோறும் சேதமாய்ப்போகிற ஏராளமான ஆத்துமங்களுக்குப் பொறுத்தலைத் தந்தருளும். சாத்தான் பயங்கரமான ஜெயங்கொள்ளும்பொருட்டு நரக பாதாளத்தினின்று புறப்பட்டு அசுத்தப்பேய்களைத் தூண்டிவிடுகிறது. "ஆத்துமங்கள்! ஆத்துமங்கள்! ஆத்துமங்களைக்கெடுக்க நாம் தீவரித்துப்போவோமாக" என்று பேரிரைச்சலிடுகிறது. ஆத்துமங்கள், இலையுதிர் காலத்தில் மரங்களின் இலைகள் உதிர்வது போல, நரக பாதாளத்தில் திரளாய் விழுந்து சேதமாய்ப் போகின்றன.

ஆண்டவரே, நாங்களும் ஆத்துமங்கள், ஆத்துமங்களென்று அபயசத்தமிடுகிறோம். தேவரீருக்கு நாங்கள் செலுத்தவேண்டிய நன்றியறிதலைக்காட்ட எங்களுக்கும் ஆத்துமங்கள் வேண்டியிருக்கிறது. எங்கள் இரட்சகரான சேசுவின் திருக்காயங்களைக் குறித்து அவைகளை உம்மிடத்தில் கேட்கிறோம். இந்த ஆராதனைக்குரிய காயங்கள் அத்தனையும், அத்தனை வாய்கள்போல உம்மை நோக்கிக் கூப்பிடுகின்றன. முண்முடி தரித்த அரசர் பசாசின் கைவசமான பிரஜைகளைத் தம்மிடத்தில் பிடுங்கிக் கொடுக்கக் கேட்கிறார். உமது அதியுன்னத மகிமைக்காக அவர்பேராலும், அமலோற்பவ கன்னிமரியாயின் பேராலும், அவர்களுக்காக உம்மை அவரோடு ஒன்றித்து மன்றாடுகிறோம். ஆமென்சேசு.

திருமுகத்தின் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்...மற்றதும்.

எங்கள் பாவ அக்கிரமங்களால் நாணித் துக்கித்து அன்று பூங்காவனத்தில் தரைமட்டும் பணிய விழுந்த ஆராதனைக்குரிய திருமுகமே,

எங்கள்மேல் இரக்கமாயிரும்.

கொலைக்காரரின் உமிழ்நீரால் அழுக்கடைந்து அவர்களுடைய அடிகளாலும், அறைகளாலும் நொறுக்கப்பட்டிருந்த ஆராதனைக்குரிய திருமுகமே,

இரத்தத்தாலும், வேர்வையாலும் நிறைந்து சிலுவைப் பாரத்தால் தரையில் விழுந்த ஆராதனைக்குரிய திருமுகமே,

மிகுந்த அவமானத்துக்குரிய தண்டனையின் எத்தனமான சிலுவையில் உயர்த்தப்பட்ட ஆராதனைக்குரிய திருமுகமே,

உயிர்த்தெழுந்தருளின தினத்தில் உச்சித மகிமையாலும், வடிவு அலங்காரத்தாலும் முழுதும் பிரதாபித்து விளங்கின ஆராதனைக்குரிய திருமுகமே,

உத்தானமாகிய நேரத்தில் முற்றிலும் கண்கூசத்தக்க ஒளி வீசிய ஆராதனைக்குரிய திருமுகமே,

திவ்விய சற்பிரசாதத்தில் மறைந்து எழுந்தருளியிருக்கும் ஆராதனைக்குரிய திருமுகமே,

உலகமுடியுங் காலத்தில் மிகுந்த மகிமைப் பிரதாபத்தோடு மேகாசனத்தில் விளங்கி நிற்கும் ஆராதனைக்குரிய திருமுகமே,

புண்ணியவான்களை நித்திய காலத்திற்கும் பேரின்ப ஆனந்த சந்தோஷத்தால் நிரப்பப்பண்ணும் ஆராதனைக்குரிய திருமுகமே,

உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய திவ்விய செம்மறிப்புருவையாகிய சேசுவே. மற்றதும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

என் அன்பரான சேசுவின் ஆராதனைக்குரிய திருமுகமே, தெய்வீகத்தின் உத்தம முத்திரையே, உம்மை வணங்கி ஆராதித்து நேசிக்கிறேன். என் ஆத்துமத்தின் சகல சத்திகளைக்கொண்டும் உமது சரணமாய் ஓடி வந்து, உமது திவ்விய சாயலின் சகல இலட்சணங்களையும் எங்களிடத்தில் பதியப்பண்ண வேணுமென்று மிகுந்த தாழ்ச்சி விநயத்தோடு மன்றாடுகிறேன் சுவாமீ.

ஆமென்சேசு.

மனவல்லய ஜெபங்கள்.

"ஆண்டவரே, நான் உமது திருமுகத்தை நாடிவர ஆசையாயிருக்கிறேன். என் பாவங்களைப்பற்றி என்னை அதனிடத்திலிருந்து அகற்றிவிடாதேயும்; உமது திரு வாக்கை என்னிடத்தினின்று நீக்கிக்கொள்ளாதேயும்."

"உமது திருமுகத்தின் பிரகாசம் என் பேரில் வீசக்கடவது. உமது கற்பனைகளுக்கு ஏற்க நடக்க எனக்குப் படிப்பித்தருளும்."

பரிசுத்த கன்னிமரியம்மாள்.

அர்ச். பெர்நர்து பரிசுத்த கன்னிமரியம்மாளைக் குறித்துச் சொல்லும் புகழ்ச்சியாவது: "பரிசுத்த கன்னிமரியம்மாளை, வெகு நியாயத்தோடு, ஓர் நட்சத்திரத்துக்கு ஒப்பிடலாம்; ஏனென்றால், நட்சத்திரமானது தன் பிரகாசம் குன்றாமலே தனது சோதிக் கதிர்களை வீசுவதுபோல, இந்தப் பரிசுத்த கன்னிகை தமது கற்புக்கு யாதோர் பழுதின்றி, தமது திருக்குமாரனைப் பெற்றெடுத்தாள். நட்சத்திரத்தினின்று கதிர்கள் புறப்படுவதினால், அதின் ஒளி குன்றாததுபோல, இந்தத் திவ்விய கன்னியிடம் பாலன் பிறந்ததினால் அவள் பரிசுத்ததனம் குன்றவில்லை. ஆகையால், இவள் யாக்கோப்பின் கோத்திரத்தினின்று உதித்து, பரலோகத்தில் தன் சோதிக்கதிர்களை வீசி, நரகபாதாளத்தை ஊடுருவிச் சென்று, பூமண்டலத்தைத் தன்

திருக்கன்னிமாதாவின் பக்தருடைய சுகிர்த முயற்சிகள்.

திருச் செபமாலையை அநுதினமுஞ் செய்.
இதற்கு ஏறக்குறைய கால்மணி நேரம்
தானே செல்லும். பரலோக ராஜேஸ்பரி
க்கு தோத்திரமாகக் கால்மணி நேரஞ் செல
வழிக்கக் கூடாதா? உனக்காகச் சலியாமல்
மனுப்பேசும் தயை நேசம் அமைந்த மாதா
அவளல்லவா? சர்வ வல்லபமுள்ள தன்
செல்வாக்கு மன்றாட்டினால் சகல ஆபத்துக்
களிலும் நின்று உன்னைத் தற்காக்கு மாதா
அவளல்லவா? உன்னத திருப்பூசைப் பலி
க்குப்பின் மகா முக்கிய பலன் அடங்கிய
சுகிர்த கிருத்தியம் செபமாலையாம் என்று
நினைத்துக்கொள். மற்றவர்களும் இதைச்
செபிக்கப் புத்திசொல். சிறுவர்களுக்கும்
இதைப் படிப்பித்துக்கொடு.

திருக்கன்னிமாதாவின் அமலோற்பவத்
துக்குத் தோத்திரமாக அந்திசந்தி இரண்டு
வேளையிலும் மூன்று பிரியதத்த மந்திரம்
செபிக்க மறந்துபோகாதே. ஆத்தும சரீர
பரிசுத்ததனத்தை உன்னிடத்தில் விளைவிக்க
வேண்டுமென்று அந்த மாதாவை மன்றாடுவ
தற்கு அதுவே நல்ல சமயம்.

உச்சித இனிமைபொருந்திய கிருபைதயா
பத்து மந்திரத்தை அடிக்கடி பத்தி நம்பிக்

தையும் மறுபடி ஒருபோதும் புதுப்பிக்கமாட்டேனென்று பிரதிக்கினை செய்துகொள்வாயாக.

பரமண்டல மந்திரத்திலடங்கிய ஏழு மன்றாட்டுகளும் சிலுவையின்பேரில் அவஸ்தைப்படும்போது நமதாண்டவர் திருவுளம்பற்றின ஏழு வாக்கியங்களுக்கு அடையாளமாயிருக்கின்றன.

குருவானவர் தேவநற்கருணையைப் பிட்கும்போது.

சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு ஆத்துமம் அவருடைய திருச்சரீரத்தைவிட்டுப் பிரிந்து பாதாளங்களுக்குப்போய் அங்கேயிருந்த நீதிமான்களுடைய ஆத்துமங்களை விடுவித்ததையும், பீடத்தின்மேல் திவ்விய அப்பத்தின் மூன்று பங்குகளிலும் அவருடைய தேவத்துவம் இப்போது எழுந்தருளியிருக்கிறதுபோலவே, அப்போது அது அவருடைய திரு ஆத்துமத்தோடும் திருச்சரீரத்தோடும் சேர்ந்திருந்ததென்றும் தியானிக்கக்கடவாய்.

“ஆண்டவருடைய சமாதானம் உங்களோடு இருப்பதாக,” “இதோ ஆண்டவருடைய செம்மறிப்புருவை” என்கிற வார்த்தைகள், ஆண்டவர் உயிர்த்தபின் தம்மு

டைய அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமாகி, “உங்களுக்குச் சமாதானமுண்டாகக்கடவது” என்றருளிச்செய்ததை நமக்கு நினைப்பூட்டுகிறது. “ஆண்டவரே, இவ்வுலகத்தின் சகல சந்தோஷங்களுக்கும் மேற்பட்டதாகிய அந்தச் சமாதானத்தை எனக்குக் கட்டளையிட்டருளும். என் ஆத்துமமானது சர்வேசுரனுடைய திருச்சித்தத்தை நிறைவேற்றும்படி அவரோடு சமாதான ஐக்கியத்திலிருக்கக்கடவது. என் சகோதரனுடைய குற்றங்களை நான் பொறுமையோடு சகிப்பதால் என் ஆத்துமம் அவனோடு சமாதான ஒற்றுமையில் இருக்கக்கடவது. என் ஆசாபாசங்களை என் புத்திக்குக் கீழ்ப்படியச் செய்வதால், அது என் மனச்சாட்சியோடு எப்போதும் சமாதான பந்தனமாயிருக்கக்கடவது.

குருவானவர் திவ்விய சற்பிரசாதத்தை உட்கொள்ளும்போது.

அந்நாளில் பலமுறையும் பின்வரும் விதமாய் நீ ஆசைநன்மை வாங்கலாம். “ஓ, மிகவும் மதுரமான சேசுவே, தேவரீர் இந்த மாக்ஷிமை நிறைந்த தேவதிரவிய அநுமானத்தில் மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறீரென்று உறுதியாக விசுவசிக்கிறேன்.

கையோடே சொல்லப் பிரயாசப்படு. நீ சலித்தயர்ந்து துக்க துயரத்துக்குள்ளாயிருந்தாலும், எவராலும் நிந்தித்து புறக்கணிக்கப்பட்டிருந்தாலும், ஞான யுத்தத்தில் நீ அடிபட்டு நொறுங்கியிருந்தாலும், பரிசுத்த கன்னிமாதாவின் பாதசரணத்தை மறந்து போகாதே. அந்த மாதாவை ஏறெடுத்துப் பார்த்துப் பேரொலியிட்டு இச்செபத்தைச் செபி. துக்க சஞ்சலத்தைப் போக்கும் சுகிர்த அவுழ்தம் இதுவாம். துன்ப வேதனைகளைத் தணிக்கும் சுளுவான வழி இதுவாம்.

உன்னால் கூடியமட்டும் மாதாவின் பிரார்த்தனையை அநுதினமுஞ் சொல். இராஜேஸ்பரியான மாதாவின் பாதத்தில் வைத்து பூசிக்கத்தக்க வாசனை பொருந்திய பூச்செண்டு இதுவாம். ஏனெனில் இதிலே திருக்கன்னிமாதாவின் மகத்துவ இலட்சணங்களெல்லாம் வாழ்த்துதல் மேனையாய் வகுத்து தொகுத்திருப்பதால் இது மிகவும் மனோகரம் அமைந்த செபமாம். இதை நாம் உச்சாரணம் பண்ணும்போதே அவளுடைய உதவி சகாயத்தை உருக்கமாய் இரந்து மன்றாடுகிறோம்.

திரிகாலசெபத்துக்கு மணி அடிக்கும்போது அச்செபத்தைச் சொல்ல மறந்து

போகாதே. "ஆண்டவருடைய சம்மனசானவர் திருக்கன்னிமாதாவுக்குச் சொன்ன விசேஷத்தினிமித்தம் இஸ்பிரீத்துசாந்துவினால் அவள் கெற்பணியாயினாள்" என்னும் இச்செப உச்சாரணமானது நமது இரட்சணியத்தின் உன்னத வேலை நடந்தேறின விசேஷத்தை நமக்கு நினைப்பூட்டுகிறது.

திருக் கன்னிமாதாவின்பேரில் உனக்குள்ள அன்பின் அடையாளமாக அந்த மாதாவின் ஓர் சுரூபத்தை அல்லது படத்தை உன் வீட்டில் ஸ்தாபித்து வைத்துக்கொள். அதைச்சுற்றி புஷ்பங்களைத் தெளித்து அதற்குமுன் ஒரு சிறு தீபமும் ஏற்றிவை. உன்னால் கூடிய வரையில் அடிக்கடி இந்தச் சுரூபத்தைச் சோடிப்பதுமல்லாமல், முக்கியமாய் மாதாவின் திருநாட்களிலும் அவளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட திரு மேமாதத்தின்போதும் அதை அலங்கரித்துத் திருநாள் கொண்டாட்டம் செய்.

திருக்கன்னிமாதாவைக் குறித்து அடிக்கடி சற்பிரசாதம் வாங்கு. அவள்பேரில் உனக்குள்ள அன்புக்கு அத்தாட்சிகாட்ட இச்சுகிர்த கிருத்தியத்தை நிறைவேற்றப் பின்வாங்காதே. அவளுடைய திருநாட்களிலும் திரு மே மாதத்திலும் திவ்விய

சற்பிரசாத பந்திக்கு அடிக்கடி போவது உத்தமம்.

திருக்கன்னிமாதாவின் தாசர்களுக்கு அடையாளமாகிய உத்தரீயத்தை, விசேஷமாய், கார்மேல் மாதாவின் உத்தரீயத்தைக் கழுத்தில் தரித்திரு. அதைத் தரித்திருக்கையில் உனக்கு மரணம் நேரிட்டால் நீ இரக்ஷணியமடைவது நிச்சயம். பிரபஞ்ச முகாந்தரங்களைப்பற்றி இந்த சொற்ப சுகிர்தத்தைப் புறக்கணிப்பவருண்டா?

பசாசின் சோதனை தந்திரங்களில், ஆபத்து வேளைகளில், அலுவல் அவசரங்களில், துன்ப துயரங்களில் அந்த மாதர்க் கரசியை நோக்கி மன்றாடும் வழக்கத்தை விட்டு விடாதே. எத்தனையோ துக்க துயர துன்ப வருத்தங்களின் வழியாய் அவள் வழி நடந்து துறைசேர்ந்திருக்கிறாள். இப்பூவுலகில் துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதலாகவும், சஞ்சலப்படுகிறவர்களுக்குத் தேற்றரவாகவும், எவர்க்குந் தயை நேசம்பொருந்திய மாதாவாகவும் அவள் நியமிக்கப்பட்டிருக்கிறாள். அந்த மாதாவை நோக்கி உன் சிந்தனைகளை உயர்த்தி, அபயசத்தமிட்டு "தயை நிறைந்த மாதாவே! எனக்குத் தஞ்சமாக வந்தருளும். துன்ப சோதனைக்குள் வருந்தும் பாவியாகிய என்னைக் கைதூக்கி இரட்சியும். பரலோக இராஜேஸ்பரியே! பாவியாகிய என்னைக் கிருபைக்கண்ணோக்கியருளும். சிலுவையில் மரித்த தேவனின் அன்னையே! என்னைத் திடப்படுத்தியருளும்" என்று நம்பிக்கையோடே மன்றாடு. இப்படிப்பட்ட சிறு செபங்களால் பாவச்சோதனை நீங்கும். துன்ப துயரம் அகலும். மனச்சமாதானம் பெருகும்.

இன்னும் ஒரு விசேஷம்:—நமது ஆண்டவளுடைய பத்தி வணக்கத்தை பிரபலியப்படுத்து. அம்மாதரசியைக் குறித்து அடிக்கடி பேசு. பத்திவிசுவாசமற்றவர்களோடே நீ பேசும்போது, திருக் கன்னிமாதாவின் அத்தியந்த நேசத்தைப்பற்றியும் அவளுடைய வல்லப மாட்சியைப்பற்றியும், அவளுடைய சுவாதந்தரிய சுகிர்த பேறுகளைப் பற்றியும், மனோவாக்குக்கெட்டாத அவளுடைய சாங்கோபாங்கத்தைப்பற்றியும் பேசு. ஓ, உன் அருமை நேசம் பொருந்திய தாயாராகிய இந்த உன்னத இராக்கினியை நீ சங்கித்து நேசித்திருப்பாயாக. அவள்பேரில் உனக்குள்ள நேசத்திற்கு அத்தாட்சியாகவும், அவளுடைய நாமதேயத்துக்கு தோத்திரமாகவும், அடிக்கடி செபதப ஒறுத்தல் முதலிய புண்ணிய முயற்சிகளைச் செய்.

அவளைக் குறித்து திருச்சபையில் முக்கியமாய் வழங்கும் பிரியதத்த முதலிய செபங்களைச் சொல்லுவாயாக. உன் மரணத்தறுவாயில் பிரபஞ்ச காரியங்களால் நீ கைவிடப்பட்டிருக்கும் அந்தக் கடைசி வேளையில்— இந்த மாதா உன் கிட்டக் காத்திருந்து உனக்கு தேவபத்தி நம்பிக்கையைப் புகட்டி ஆறுதலான மொழிகளை உனக்குச் சொல்வாள். கடைசியாய் நீ மரித்தவுடனே, கண்ணீர்க் கணவாயான இந்தப் பூலோக யுத்தகளத்தினின்று உன் ஆத்துமம் பிரிந்தவுடனே, உனக்கு வாழ்த்துதல் கூறி உன்னை ஆசீர்வதித்துக் கூட்டிக்கொண்டு போய் பேரின்ப சம்பாவனையை உனக்குக் கட்டளையிட்டு உன்னைச் சிநேகிக்க நித்தியத்துக்கும் உன்கிட்ட வீற்றிருப்பாளாமே.

நம்முடைய கர்த்தராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருப்பாடுகளைக் குறித்து அர்ச். தேவமாதாவுக்குச் செலுத்தும் முப்பதுநாளைய மன்றாட்டு.

(இதைப் பத்தி நம்பிக்கையோடு முப்பதுநாளும் செய்துவருகிறவர்கள் தங்கள் கிரமமான மன்றாட்டை அடைவார்கள். தபசுகாலத்தின் ஒவ்வொரு தினத்துக்கும், வருஷத்தில் வரும் சகல வெள்ளிக்கிழமைகளுக்கும் இது மிகவும் ஏற்ற பத்தி முயற்சியாம்.)

எக்காலத்திலும் மகிமைபொருந்திய பரிசுத்த மரியாயே! கன்னியர்களுடைய இராக்கினியே! இரக்கத்தின் மாதாவே! புறக்கணித்துக் கைநெகிழப்பட்ட ஆத்துமாக்களின் ஆறுதலே! உம்முடைய ஏக குமாரனும், எங்கள் ஆண்டவருமாகிய சேசுக்கிறீஸ்துநாதர் சிலுவையில் மரணத்தையடையும்பொழுது உம்முடைய மிருதுவான இருதயத்தில் ஊடுருவின அந்தத் துக்க வல்லயத்தைக்குறித்தும், நீர் பட்ட வியாகுலத்தைப் பார்த்துந் துக்கித்து சிலுவையிலிருந்து அவர் தம்முடைய பிரிய சீஷனான அர்ச். அருளப்பருடைய பாதுகாவலுக்கு உம்மை ஒப்புக்கொடுத்ததில் அவரிடத்தில் விளங்கின பிள்ளைக்குரியதும், பரிசுத்தமுமான நேசத்தைக்குறித்தும், என்னுடைய எளிமை வறுமையின்பேரில் மனம் இரங்க உம்மை மன்றாடுகிறேன்.

என்னுடைய சகல துன்பம் பீடைகள் எல்லாவற்றிலும் ஆறுதலான தஞ்சமாகவாரும். நீர் உதவியற்றவர்களுக்கும், தாயற்றவர்களுக்கும் ஏக தாபரமும, மதுரமும், ஆறுதலும், இரக்கத்தின் தாயுமாகவே யிருக்கிறீர். ஆதலால் ஏழையின் நிர்ப்பாக்கியத்துக்குரிய ஆதரவற்ற பிள்ளையாகிய என் மன்றாட்டைக் கேட்டு உமது தயாப கருணைக் கடைக்கண்

னை என்பேரில் திருப்பியருளும். ஏனென்
றால், என் பாவங்களின் அகோரத்துக்குச் சரி
யான தண்டனையாக நானாவித துன்பங்க
ளாற் சூழப்பட்டு மனக்கவலையால் நொறுங்
கி வாதனைப்படுகிற அடியேன் என் ஆண்ட
வரும் இரட்சகருமாகிய சேசுக்கிறீஸ்துநாத
ருடைய சிநேகத்துக்குரிய மாதாவாகிய என்
தாயின் சரண நிழலை அண்டிவருகிறதைவிட,
என் துன்பத்திற்குத் தஞ்சம் வேறே
எங்கே உண்டென்று தேடி ஓடுவேன்.

ஆகையால், என்னுடைய ஆவலான விண்
ணப்பத்தை இரக்கமும் தயாளமும் பொருந்
திய உம்முடைய செவிகளைச் சாய்த்துக்
கேட்டருளும். இந்த மன்றாட்டை உம்மு
டைய நேச குமாரனின் மகாப்பெரிய இரக்
கத்தைக் குறித்து எனக்கு தருவிக்க உம்மை
மன்றாடுகிறேன். நீர் அவர் திருவுளப்படி
சம்மதித்து, ஒன்பது யாதம் உம்முடைய
திரு உதிரத்தில் அவரைச் சுமந்து பெற்றீர்.
இந்தப் பூலோகத்தை அவர் பிரசன்னத்தால்
ஆசீர்வதிக்க அவர் மனித சுபாவத்தின்
நேசத்தையும் இணக்கத்தையும் குறித்து
அதை எனக்குத் தருவிக்க உம்மை மன்றாடு
கிறேன். உம்முடைய அன்புக்குரிய குமார
னாகிய என் நேச இரட்சகர் ஒலிவேத்துமலை
யில் தம்முடைய நித்திய பிதாவைப் பார்த்

து: கூடுமானால் வரப்போகிற கசப்பான
பாடுகளின் பாத்திரம் என்னைவிட்டு விலகக்
கடவதென்று வேண்டிக்கொண்டபோது
பட்ட ஆராட்டத்தைக் குறித்தும் அதை
எனக்குத் தருவிக்க உம்மை மன்றாடுகிறேன்.
அவர் பூங்காவனத்தில் மும்முறை வேண்டிக்
கொண்ட செபத்தைக்குறித்தும், அவ்விடத்
திலிருந்து வியாகுலத்தோடு தளர்ந்து நடந்
து கண்ணீர் புரண்டோட அழுது அவர்
பாடுபட்டு உயிரைவிடும் பிரலாபத்துக்குரிய
ஸ்தலங்களுக்கு நீர் பின் சென்று போன
தைக் குறித்தும் அதை எனக்குத் தருவிக்க
உம்மை மன்றாடுகிறேன்.

அவருடைய கொலையாளிகள் பிரித்துப்
பங்கிட்டுக்கொண்ட தையலில்லாச் சட்டை
யை உரிந்துகொண்டபொழுதும், அவரைக்
கட்டியடித்த கசைகளினாலும் கயிறுகளினா
லும் கற்புள்ள திருமேனியில் உண்டான காய
முறிவுகளைக்குறித்தும் அதை எனக்குத் தரு
விக்க உம்மை மன்றாடுகிறேன். அவரை அவ
மானஞ்செய்து பரிகாசம்பண்ணி வருவித்த
நிந்தைகளைக் குறித்தும், அவர் அனந்த
பொறுமையோடு சகித்த பொய்ச் சாட்சி
அநியாயத் தீர்வை நிர்ப்பாக்கிய மரணத்
தைக் குறித்தும் அதை எனக்குத் தருவிக்க
உம்மை மன்றாடுகிறேன். அவருடைய பிர

லாபத்திலுடைய கண்ணீர்த் துளிகள், இரத்
தவேர்வை, மவுனம், பொறுமை, துக்கக்
கிலேசம் முதலியவைகளைக்குறித்தும் அதை
எனக்குத் தருவிக்க உம்மை மன்றாடுகிறேன்.
அவருடைய இராஜரீக திருச்சிரசு மூங்கிற்
றடியால் அடிபட்டு, முண்முடியால் ஊடுரு
வப்பட்டபோது ஒழுகி வடிந்த திரு உதிரத்
தைக் குறித்தும், அதை எனக்குத் தருவிக்க
உம்மை மன்றாடுகிறேன். சிலுவை மரத்தில்
பெரும் இருப்பாணிகளால் அவருடைய கை
கால்கள் அறையுண்டிருந்தபோது அநுப
வித்த கடோர வேதனைகளைக்குறித்தும் அதை
எனக்குத் தருவிக்க உம்மை மன்றாடுகிறேன்.

அவருடைய உக்கிரம தாகத்தையும், கசப்
பானபிச்சும் புளித்த காடியின் பானத்தைக்
குறித்தும், அதை எனக்குத் திருவிக்க உம்
மை மன்றாடுகிறேன். அவர், என் தேவனே
என் தேவனே! என்னைக் கைநெகிழ்ந்தது
ஏதென்று கூவிச் சிலுவையின்பேரில் கை
விடப்பட்ட நிர்ப்பாக்கியத்தைக் குறித்தும்,
அதை எனக்குத் தருவிக்க உம்மை மன்றாடு
கிறேன். எல்லாம் முடிந்ததென்று சொல்லி,
அவர் சீவன் விடும்போது தம்முடைய ஆத்
துமத்தை நித்திய பிதாவின் கையில் ஒப்புக்
கொடுத்ததைக் குறித்தும், தம்முடைய
இரக்கத்தை நல்ல கள்ளனுக்குக் காண்பித்

ததைக்குறித்தும், அதை எனக்குத்தருவிக்க
உம்மை மன்றாடுகிறேன். அவருடைய திரு
விலாவைக் குத்தித் திறந்தபொழுதும், மகா
தயவாய்க் கிருபை இரக்கம் பெருகி, வெள்
ளமாய்ப் பொழிந்த திரு இரத்தத்தையும்,
தண்ணீரையுங் குறித்தும், அதை எனக்குத்
தருவிக்க உம்மை மன்றாடுகிறேன்.

அவர் சீவித்த பரிசுத்த வாழ் நாட்களை
யும், அவர் அநுபவித்த கசப்பான பாடுகளை
யும், அவர் சிலுவையில் அவமானமாய் மரண
மடையும்போது, கற்பாறைகள் பிளக்க,
கோவில் திரைச்சீலை கிழிய, பூமி அதிர, சூரி
யன் சந்திரன் இருண்டு மங்க, இப்படியாக
சமஸ்த சிருஷ்டிகளும் புரண்டு மாறின மாற்
றங்களைக் குறித்தும், அதை எனக்குத் தரு
விக்க உம்மை மன்றாடுகிறேன். பழைய
வேதத்துப் பிதாப் பிதாக்களுக்குத் தம்மு
டைய பிரசன்னத்தால் ஆறுதல் கொடுத்துச்
சிறை நீக்கப் பாதாளங்களில் அவர் இறங்கி
னதைக்குறித்தும், அதை எனக்குத் தருவிக்க
உம்மை மன்றாடுகிறேன். அவர் மரணத்தை
ஜெயித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தரு
ளினபோது, தம்முடைய தாயாராகிய உமக்
கும், அப்போஸ்தலர்கள், மற்றும் தம்மு
டைய சீஷர்களுக்கும், தம்மைத் தரிசனமா
கக் காண்பிக்கும்போது, நேர்பட்ட சந்தோஷ

த்தைக் குறித்தும், உமக்கும் அவர்களுக்கு
முன்பாக அற்புதமாய் மோட்சத்துக்கு
அவர் ஆரோகணமானதைக் குறித்தும்,
அதை எனக்குத் தருவிக்க உம்மை மன்றாடு
கிறேன்.

அவர் மோட்சத்துக்கு எழுந்தருளின பிற்
பாடு தம்முடைய சீஷர்களின்மேரில் அக்கினி
நாக்கு ரூபமாய் இறங்கி அவர்களுடைய இரு
தயங்களில் அருட்பொழிவு உண்டாக்கிப்
பத்தி சுவாலையை எழுப்பி, உலகத்தைத்
திருப்பவும். வேதத்தைப் பிரசங்கிக்கவும்,
சுற்றித்திரிய அவர்கள் அடைந்த இஸ்பிரீத்
துசாந்துவின் அநுக்கிரகத்தைக் குறித்தும்,
அதை எனக்குத் தருவிக்க உம்மை மன்றாடு
கிறேன். உம்முடைய திருக்குமாரன் கடை
சித் தீர்வை நாளில் சீவியர்களையும் மரித்த
வர்களையும் நடுக்கேட்டு, உலகத்தை நெருப்
பினால் அழிக்கும் அவருடைய பயங்கரமான
பிரசன்னத்தைக்குறித்தும், அதை எனக்குத்
தருவிக்க உம்மை மன்றாடுகிறேன். இவ்வுல
கத்திலே அவர் உம்முடைய மடியில் கொண்
டிருந்த ஊக்கத்தையும், நீர் பரலோகத்
துக்கு ஆரோகணமானபோது முழுமையும்
தேவலோக பரவசத்தால் ஆனந்த சந்தோ
ஷத்தில் அமிழ்ந்தி, அடைந்த உல்லாசப்
பூரிப்பைக்குறித்தும், அதை எனக்குத் தரு

விக்க உம்மை மன்றாடுகிறேன். மகா மகிமை
பொருந்திய பரிசுத்த கன்னிகையே! உம்
மை மன்றாடுகிறவர்களின் இருதயத் தைரி
யமே, இதை எனக்கு அடைந்து தந்தருளும்.

¶ இவ்விடத்தில் உன் கிரமமான விண்ண
ப்பத்தைச் சுவாமியின் சித்தத்துக்குப்
பொருந்திக் கேட்பாயாக.

என்னுடைய திவ்விய இரட்சகர் தம்மு
டைய திருமாதாவாக உம்மை மகிமைப்படுத்
துகிறார் என்றும், நீர் அவருடைய மகி
மைக்கு விரோதமாய் யாதொன்றும் அவ
ரைக் கேட்கிறதில்லையென்றும், எனக்குச் சம
பூரணமாய்த் தெரிந்திருக்கிறதினால், உம்மு
டைய தாய் நேசத்துக்குரிய இரக்கத்துக்குச்
சரியானபடி மன்றாடும். உம்முடைய திருக்
குமாரன் உம்முடைய மன்றாட்டின்படி தமக்
குப் பயப்படுகிற ஆத்துமாக்கள் கேட்கிற
மன்றாட்டை இரக்கமாய்த் தந்தருளுகிறபடி
யினால் உம்முடைய சக்தியுள்ள சலுகையை
நான் சீக்கிரத்தில் அடையத் தயை செய்தரு
ளும். இதினிமித்தம், மகாப்பரிசுத்த கன்
னிகையே, நான் இப்போது கேட்ட விண்
ணப்பந் தவிர இன்னமும் எனக்கு வேண்
டியதாயிருக்கிற உயிருள்ள விசுவாசத்தை
யும், கெட்டியான நம்பிக்கையையும், உத்

தம தேவசிநேகத்தையுந் தந்தருளும். கண்ணீர் சொரிந்து கொண்டு பாவத்துக்குச் சரியாய் மெய்யான மனஸ்தாபப்படவும், உருக்கமாய்ப் பாவசங்கீர்த்தனம் பண்ணவுஞ் செய்தருளும். மனச் சமாதானம், பாவநிக்கிரகம், தேவசிநேகம், பிறர்சிநேகம்: உலக நிந்தையவமானத்திற் பொறுமையையும் எனக்கடைந்து தந்தருளும். உம்முடைய திருக்குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய சினேகத்தைப்பற்றி, வேண்டுமானால் அவமானமான மரணத்தை நான் அடையவுஞ் செய்தருளும்.

இப்படியே பரிசுத்த ஆண்டவரின் தாயே, நற்கிரியைகளிலே நான் நிலைக்கவும், பிரதிக்கினைகளை நிறைவேற்றவும், என் சுய இச்சையை அடக்கவும், என் வாழ்நாட்கள் முழுமையிலும் பத்தியான சம்பாஷணை செய்யவும், என் கடைசித்தருவாயில் உருக்கமுள்ள மனஸ்தாபத்தால் என்னுடைய மனதை நிலை நிறுத்தி, திருச்சபையின் கடைசித் தேவதிரவிய அநுமானத்தைத் தக்க முயற்சியோடு பெறவும், தேவ சலுகை சிநேகத்தில் உயிர்விடவுஞ் செய்தருளும். கடைசியாய் உம்முடைய திருக்குமாரன் மூலமாய் நானும்மை மன்றாடும் மன்றாட்டு ஏதெனில், என் தாய், தகப்பன், சகோதரர், பந்துக்

கள், உபகாரிகளுடைய ஆத்துமங்களுக்கும், உயிரோடிருக்கிறவர்கள், மரித்தவர்களுக்கும், நித்திய நன்மையைக் கட்டளை பண்ணியருளும். சம்பூரண அருட்பிரசாதத்தை அளிக்கிற சர்வேசுரனிடத்தில் நித்திய சீவியத்தை எனக்கு அடைந்தருள வேணுமென்று உம்மை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.—ஆமென் சேசு.

தேவமாதாவுக்குத் தன்னை ஒப்புக்கொடுக்குஞ் செபம்.

அதிமிக பரிசுத்ததனமும் அமலோற்பவமும் அமைந்த திருக்கன்னிகையே, என் ஆண்டவரை ஈன்றெடுத்த மாதாவே, என் தாயாரே, மூவுலகராசியே, பாவிகளின் தஞ்சமே, அவர்களுக்கு ஏகநம்பிக்கையே, பரிபாலியே, சகலரிலும் நிர்ப்பாக்கியனாகிய அடியேன் உமது சரணமாக ஓடிவந்து உம்மை வணங்கி நமஸ்கரிக்கிறேன். உன்னத இராக்கினியே, தேவரீர் அடியேனுக்குத் தந்தருளின சகல நன்மை உபகாரங்களுக்காகவும், விசேஷமாய் எனக்கு வரவிருந்த நரகாக்கினையினின்று என்னை மீட்டு இரட்சித்ததற்காகவும், தேவ

ரீருக்கு அனந்தானந்தமுறை நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகிறேன். என் அன்புக்குரிய ஆண்டவளே, தேவரீரை நான் சிநேகிக்கிறதுமன்றி, அந்த சிநேகத்தினிமித்தம் எப்போதும் தேவரீருக்கு ஊழியம் செய்யவும், பிறத்தியாரை உமது பத்திநேசத்திற்குட்படுத்தவும் வார்த்தைப்பாடு கொடுக்கிறேன். திவ்விய கர்த்தருக்குப் பிறகு தேவரீர்பேரிலேயே என் இரட்சணிய நம்பிக்கையெல்லாம் வைத்திருக்கிறேன்.

இரக்க நேசமிகுந்த மாதாவே, அடியேனை உமது ஊழியனாக ஏற்றுக்கொண்டு, உமது அடைக்கலத்தில் என்னை வைத்து ஆதரிக்கத் தயைபுரிந்தருளும். சர்வேசுரன் சமுகத்தில் தேவரீர் மிகுந்த செல்வாக்கு வல்லபமுள்ளவளாகையால், சகல சோதனை தந்திரங்களிலும் நின்று என்னைத் தற்காத்து மரணபரியந்தம் அவைகளை ஜெயித்துத் தள்ளப்போதுமான மனத்திடனை எங்களுக்குக் கட்டளையிட்டருளும். உமது திவ்விய குமாரனாகிய சேசுநாதர்பேரில் நான் வைக்கவேண்டிய பத்தியை எனக்குப் படிப்பித்து உமது மன்றாட்டினாலே எனக்கு நல்ல மரணமும் கிடைக்கச் செய்தருளும். என் ஆண்டவளே, தேவரீர் சர்வேசுரன்பேரில் வைத்த சிநேகத்தினிமித்தம் அடியேன் மீதிரங்கி ஜீவியகாலமுழு

வதிலும் என்னை ஆண்டு நடத்தி, விசேஷ
மாய் என் மரணத்தறுவாயில் என்னைத் தற்
காத்து இரட்சியும். கடைசியாய் சதா நித்
தியகாலத்திற்கும் நான் உமது கிருபைதயா
பத்தைப் பாடிப் புகழ்ந்து தோத்தரிக்கப்
பரகதியில் வந்து சேருமளவும் என்னைக் கை
தூக்கி நடத்தியருளும் தாயே.-ஆமென்சேசு.

அர்ச். பேர்நர்து தேவமாதாவை நோக்கி வேண்டின ஜெபம்.

மிகவும் இரக்கமுள்ள தாயே! உமது
அடைக்கலமாக ஓடிவந்து, உம்முடைய உப
கார சகாயத்தை இரந்து, உம்முடைய மன்
றாட்டுக்களின் உதவியைக் கேட்ட ஒருவனா
லும் உம்மால் கைவிடப்பட்டதாக ஒருபோ
தும் உலகில் கேள்விப்பட்டதில்லையென்று
நினைத்தருளும். கன்னியருடைய இராக்கினி
யாகிய கன்னிகையே, தயையுள்ள தாயே,
இப்படிப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு
உம்முடைய திருப்பாதத்தை அண்டிவருகி
றேன். பெருமூச்செறிந்து அழுது பாவியா
கிய நான் உமது தயாளத்துக்கு காத்துக்
கொண்டு உமது சமுகத்திலே நிற்கிறேன்.
அவதரித்த வார்த்தையின் தாயே, என் மன்

றாட்டைப் பிறக்கணியாமல் தயாபரியாய்க்
கேட்டுத் தந்தருளும்.—ஆமென்சேசு.
(300-நாட் பலன்.)

தேவமாதாவுக்குத் தன்னை முழுவதும் ஒப்புக்கொடுக்குஞ் சேபம்.

என் ஆண்டவளே, என் தாயாரே, இதோ
என்னை முழுமையும் தேவரீருக்குக் காணிக்
கையாக ஒப்புக்கொடுக்கிறேன். தேவரீர்பே
ரில் அடியேன் வைத்த பத்தியைக் காண்பிக்
கத்தக்கதாக இன்றைக்கு என் கண் காதுக
ளையும் வாய் இருதயத்தையும் என்னை முழு
மையும் தேவரீருக்குக் காணிக்கையாக ஒப்
புக்கொடுக்கிறேன். என் நல்ல தாயாரே,
நான் தேவரீருக்குச் சொந்தமாயிருக்கிறபடி
யினாலே என்னை உம்முடைய உடமையாக
வும் சுதந்தரப் பொருளாகவும் ஆதரித்துக்
காப்பாற்றியருளும். (100-நாட் பலன்.)

என் ஆண்டவளே, என் தாயாரே, நான்
தேவரீருக்குச் சொந்தமாய் இருக்கிறேனெ
ன்று நினைத்துக்கொள்ளும். என்னை உம்மு
டைய உடமையாகவும் சுதந்தரப் பொருளா
கவும் ஆதரித்துக் காப்பாற்றியருளும்.
ஆமென்சேசு. (40-நாட் பலன்.)

அர்ச். ஜெர்த்துருத்தம்மாளுக்கு தேவமாதா படிப்பித்த ஜெபம்.

மகிமையில் இலங்கி என்றென்றைக்கும் சமாதானத்தில் வீற்றிருக்குந் தமதிரித்துவத்தின் வெண்மையான லீலியே, மோக்ஷவாசிகளுக்கு ஆனந்தமாகிய சிறந்த ரோசாப் பூவே, வாழ்க. பரலோக இராஜா உம்மிடத்திற் பிறந்தருளவும் உமது கொங்கைகளின் பாலூட்டி அவரை வளர்க்கவும் பாக்கியம் பெற்றவளே, உமது தெய்வீகமான வரங்களின் இரசத்தை எங்கள் ஆத்துமங்களிற் பொழிந்து அவைகளுக்கு அது அன்னபோசனமாகச் செய்தருளுந் தாயே. ஆமென்சேசு.

மேற்கண்ட ஜெபத்தைச் சொல்லித் தம்மை வாழ்த்துகிறவர்களுக்குத் தமது அன்பு நிறைந்த தயாளத்தின் விலைமதியாத பொக்கிஷங்களை திறந்து காட்டுவதாக, நமது பரம ஆண்டவள் அர்ச், ஜெர்த்துருத்தம்மாளுக்கு வெளிப்படுத்தினாள். அவர்கள் சாகிறதறுவாயில் "தாம் சோதிமயமான அலங்கார உடை உடுத்தினவளாய்த் தரிசனமாகி, அவர்கள் ஆத்துமத்தில் பரலோகத்துக்குரிய ஆனந்தத்தையும் ஆறுதலையும் பொழிந்தருளுவோம்" என்று வசனித்திருக்கிறாள்.

அர்ச். ஞானப்பிரகாசியார் பரிசுத்த கன்னி கையைக்குறித்து உண்டாக்கின ஜெபம்.

அர்ச். மரியாயே, என் உன்னத அரசியே,
இப்போதும், என் வாழ்நாட்களில் அநுதின
மும், என் மரணத்தறுவாயிலும், நான் தாழ்
ச்சியோடு என் ஆத்துமத்தையும் சரீரத்தை
யும் உமது தயாப கரங்களிலும், உமது விசே
ஷித்த அடைக்கலத்திலும் ஒப்படைக்கிறே
ன். என் நம்பிக்கை, ஆறுதல் முழுவதையும்
உமது பாதத்தில் வைக்கிறேன். என் சகல
நிர்ப்பாக்கியங்களிலும், துன்ப துரிதங்களி
லும் உமது சகாயமாய் ஓடிவருகிறேன். என்
ஜீவனையும், அதின் முடிவையும் உமது அடை
க்கலத்தில் வைத்து, உமது பரிசுத்த சிபாரி
சினாலும், உம்முடைய பேறுபலன்களாலும்,
என் கிரியைகள் யாவும் உமது சித்தத்துக்
கும், உமது திருக்குமாரனுடைய சித்தத்துக்
கும் ஏற்க அமைந்து நடத்தப்படும்படியாக
அநுக்கிரகம் செய்தருளும்படி உம்மைப்
பிரார்த்திக்கிறேன்.—ஆமென்சேசு.

அயலோற்பவ கன்னிமரியாயின் திரு இருத யத்திற்கு நிந்தைப் பரிகாரச் சேபம்.

அர்ச். கன்னிமரியாயின் திரு இருதயமே, திவ்விய கர்த்தருக்கு உகந்ததும் அவரோடு

அன்னியோன்னிய ஐக்கியமமைந்ததுமான உமது திரு இருதய கமலத்தை வணங்கி நமஸ்கரிக்கிறேன். அன்பிற் சிறந்த அன்னையர்க்கன்னையின் இருதயமாக உம்மை நேசித்து, உமது மகிமைப்பிரதாப இலட்சணங்களினிமித்தம் மனமகிழ்ந்து, உம்மை வாழ்த்தி ஸ்துதிக்கிறேன். அடியேனாலும் மற்றும் சகல மனிதர்களாலும் தேவரீருக்கு வந்த நிந்தை தூஷண அவமானங்களுக்குப் பரிகாரமாக, இதோ! உமது சமுகத்தில் நான் சாஷ்டாங்கமாக விழுந்து தாழ்ச்சியுடனே இந்தப் பரிகார முயற்சியை ஒப்புக்கொடுக்கிறேன். உமக்கு மிகவும் நன்றிகெட்டதனங் காண்பித்துப் பலதரம் நான் குற்றவாளியாய் நடந்தது உண்மைதானென்று தாழ்ச்சியோடு இப்போது வெளிப்படுத்துகிறேன். ஆகிலும் தேவ கிருபையும் மன்னிப்பும் உம்மாலே எனக்கு அனேகவிசை உண்டாயிற்று என்று உணர்ந்து, தேவரீர் என்னை ஒருபோதும் கைவிடமாட்டீரென்று உறுதியாக நம்பியிருக்கிறேன். இந்த மனோகரமான நம்பிக்கையால் திடப்பட்டு உமதுபேரில் இனி அதிகப் பத்தி உருக்கம் பிரமாணிக்கமுள்ளவனாய் நடக்க ஆசையாயிருக்கிறேன். இனி நான் உமது தோத்திரத்திற்காக செய்யத் தீர்மானித்திருக்கிற சுகிர்த கிரியைகளெல்லாம் தய

வாய்க் கைகயேற்றுக்கொண்டு அவைகளை உமது திருக்குமாரன் சேசுநாதர்சுவாமிக்கு ஒப்புக்கொடுத்து, உம்மாலே அந்த அன்புள்ள திவ்விய கர்த்தர் என்பேரிலும் என் இனத்தார்பேரிலும் இரங்கி, தமது வரப்பிரசாதங்களைத் திரளாய்ப் பொழிந்தருளும்படியாய் தேவரீர் மனுப்பேசவேணுமென்று உம்மை மன்றாடுகிறேன்.— ஆமென்சேசு.

அர்ச். கன்னிமரியாயின் மாசற்ற இருதயத்தின் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்... மற்றதும்.
அர்ச். மரியாயின் பரிசுத்த இருதயமே, (எங். இரக்.)
சர்வேசுரனுடைய திரு இருதயத்திற்கு உகந்த திரு இருதயமே,
சேசுவின் திரு இருதயத்தோடு ஒன்றான திரு இருதயமே,
இஸ்பிரீத்துசாந்துவுக்குப் பிரிய சங்கேதமாகிய திரு இருதயமே, (எங். வேண்டிக்கொள்.)
அர்ச். திரித்துவத்தின் தேவாலயமான திரு இருதயமே,
மாம்சமாய் அவதரித்த தெய்வீக வார்த்தைக்குப் பிரிய இருப்பிடமான திரு இருதயமே,

பிரியதத்தத்திஞலே பூரணமான திரு இருதயமே,

சகல இருதயங்களிலும் ஆசீர்வதிக்கப் பட்ட திரு இருதயமே,

மகிமைப்பிரதாப சிம்மாசனமாகிய திரு இருதயமே,

அத்தியந்த தாழ்ச்சியுள்ள திரு இருதயமே,

தேவசிநேகத்தின் பலியான திரு இருதயமே,

சேசுநாதரோடு சிலுவையில் அறையுண்ட திரு இருதயமே,

கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆறுதலாகிய திரு இருதயமே,

பாவிகளுக்கு அடைக்கலமான திரு இருதயமே,

மரிக்கிறவர்களுக்கு நம்பிக்கையாகிய திரு இருதயமே,

இரக்கத்திற்கு இருப்பிடமான திரு இருதயமே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உலகத்தின் பாவங்களை. ......மற்றதும்.

இருதயத் தாழ்ச்சியும் சாந்தமுமுடைத்தான மாசற்ற மரியாயே,

எங்கள் இருதயம் சேசுவின் திரு இருதயம்போலாகும்படி செய்தருளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

இரக்கம் நிறைந்த சர்வேசுரா, பரிசுத்த
கன்னிமரியாயின் மாசற்ற திரு இருதயம்
பாவிகளுக்கு இரட்சணியமும், நிர்ப்பாக்கிய
ருக்கு அடைக்கலமுமாய் இருக்கத்தக்கதாக
அத்திரு இருதயத்தை சிநேகத்திஞலும் இர
க்கத்திஞலும் உமது திருக்குமாரன் சேசு
நாதருடைய திரு இருதயத்துக்கு மிகவும்
ஒத்ததாயிருக்கச் செய்தருளினீரே; இந்த
மிகுந்த மதுரமும் அன்பும் பொருந்திய இரு
தயத்தைக் கொண்டாடுகிற நாங்கள் அந்தப்
பரிசுத்த கன்னிமரியாயின் பேறுபலன்களா
லும் சலுகையாலும், சேசுவின் திரு இரு
தயத்துக்கு உகந்தவர்களாய்க் காணும்படி
அநுக்கிரகஞ்செய்தருளும். இந்த மன்றாட்டு
களையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுக்
கிறீஸ்துவின் திருமுகத்தைப்பார்த்து எங்க
ளுக்குத் தந்தருளும் சுவாமி. ஆமென்சேசு.

அர்ச். லூர்துமாதாவை நோக்கிச் செபம்.

அமலோற்பவ கன்னிமாதாவே, சொல்
லொண்ணுச் சோதிக்கதிர் வீச, சூரியன் ஒளி
தங்கிய சுத்த வெள்ளை உடை அணிந்து,
தெய்வீக வடிவு அலங்காரத்தோடு அன்று
எழுந்தருளிவந்து, தன்னந்தனிமையான

லூர்துமலைக் கெபியில் காட்சிதரக் கருணை
புரிந்த உமது கிருபாகடாட்சத்தை நினைத்
தருளும். உமது திருக்குமாரன் உமக்குக்
கட்டளையிட்டிருக்கிற மட்டற்ற வல்லமை
யையும் நினைவுகூர்ந்தருளும். புதுமையில்
பிரபலியமான லூர்துமலை மாதாவே, உமது
பேறுபலன்களின்மீது நிறைந்த நம்பிக்கை
வைத்து, உமது தயவு ஆதரவை அடைய
இதோ ஓடிவந்தோம். உமது தரிசன வர
லாறுகளின் உண்மையை உணர்ந்து ஸ்திரப்
படுத்தின அர்ச். பாப்பானவரை பாதுகாத்து
நடத்தியருளும். எவராலும் எதிர்த்துத் தடு
க்க முடியாத உமது திருக்கர வல்லபத்தால்
அவரைத் தற்காத்தருளும். தேவ இரக்க
நேச மனோகரம் அடங்கிய இரட்சணிய
பொக்கிஷங்களைத் திறந்து அவைகளை எங்
கள்மீது பொழிந்தருளும். உம்மை மன்று
டிக் கேட்கும் எங்கள் விண்ணப்பம் எதுவும்
வியர்த்தமாய்ப் போகவிடாதேயும். மாசற்ற
கன்னிகையான லூர்துமலை மாதாவே, தேவ
ரீர் எங்கள் தாயாராகையால், எங்கள் மன்
றாட்டுக்களைத் தயவாய்க் கேட்டுத் தந்தரு
ளும். ஆமென்சேசு.

அர்ச். கன்னிமரியாயின் ஏழு வியாகுலங்களைக் குறித்துச் செபம்.

1. வியாகுலமாதாவே, உமது ஆத்துமத்
திலே வியாகுலவாள் ஊடுருவப்படுமென்று
சிமியோன் தீர்க்கதரிசனம் சொன்னதைக்
கேட்டு மிகுந்த வியாகுலப்பட்டீரே. அந்த
வியாகுலத்தைப்பார்த்து நாங்கள் இவ்வுலக
சீவியத்தைச் சட்டைபண்ணாமல் பரலோக
சீவியத்தை அடையும்படி உம்முடைய திருக்

குமாரனை வேண்டிக்கொள்ள உம்மை மன்றாடுகிறேன். பிரி.

2. வியாகுலமாதாவே, நீர் ஏரோதேசென்பவனுக்குப் பயந்து உமது திருக்குமாரனை எடுத்துக்கொண்டு எஜிப்து தேசத்துக்கு ஓடிப்போகிறபோது நீர் மிகுந்த வியாகுலப்பட்டீரோ. அந்த வியாகுலத்தைப் பார்த்து நான் பசாசின் தந்திரங்களுக்குத் தப்பிப் பரலோகவழி தவறாமல் நடக்க உம்மை மன்றாடுகிறேன். பிரி.

3. வியாகுலமாதாவே, உமது திருக்குமாரன் பன்னிரண்டு வயதில் மூன்றுநாள் காணாமற் போனதால் வியாகுலப்பட்டீரோ. அந்த வியாகுலத்தைப்பார்த்து நான் பாவத்தினால் அவரை இழந்துபோகாதபடிக்கு உம்மை மன்றாடுகிறேன். பிரி.

4. வியாகுலமாதாவே, உமது திருக்குமாரன் பாரமான சிலுவையைச் சுமந்துகொண்டு போகிறதைக்கண்டு நீர் மிகுந்த வியாகுலப் பட்டீரோ. அந்த வியாகுலத்தைப்பார்த்து பாவத்தினால் எனக்குவருகிற கஸ்திகளை இம்மையில் நான் பொறுமையோடு சகிக்கவும், மறுமையில் ஈடேற்றம் அடையவும் உம்மை மன்றாடுகிறேன். பிரி.

5. வியாகுலமாதாவே, உமது திருக்குமாரன் எண்ணிக்கையில்லாத கஸ்தி வேதனைப் பட்டுச் சிலுவையிலே மரணம் அடைந்ததைக்கண்டு நீர் மிகுந்த வியாகுலம் அனுபவித்தீரோ. அந்த வியாகுலத்தைப்பார்த்து அவருடைய திருப் பாடுகளையும் வேதனைகளையும் நான் நினைத்து நல்ல மரணமடைய உம்மை மன்றாடுகிறேன். பிரி.

6. வியாகுலமாதாவே, உமது திருக்குமாரனுடைய திருச்சரீரத்தை உமது திருக்கரங்களில் வளர்த்தி அதைக் கட்டி மினவிக்கொண்டபோது மிகுந்த வியாகுலப்பட்டீரோ. அந்த வியாகுலத்தைப்பார்த்து அவருடைய மரண நினைவு என்னிருதயத்தில் பதிந்திருக்கவும், நான் என் பாவங்களுக்காக மாறாமல் கண்ணீர் சொரிந்து அழவும் உம்மை மன்றாடுகிறேன். பிரி.

7. வியாகுலமாதாவே, உமது திருக்குமாரனுடைய திருச்சரீரத்தைக் கல்லறையில் அடக்கினபிற்பாடு நீர் மிகுந்த வியாகுலப் பட்டீரோ. அந்த வியாகுலத்தைப்பார்த்து நான் ஒருபோதும் சர்வேசுரனைவிட்டுப் பிரிந்து தனிமையாயிராதபடிக்கு உம்மை மன்றாடுகிறேன். பிரி.

சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு வாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாகத்தக்கதாக,

மிகவும் வியாகுலமுள்ள கன்னிகையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

பிரார்த்திக்கக்கடவோம்.

எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவே, தேவரீர் பாடுபடும் வேளையில் உமது திரு மாதாவின் ஆத்துமம் வியாகுல வாளால் ஊடுருவப்பட்டதே. அந்தத் தாயாராகிய பரிசுத்த கன்னிமரியாயி எப்போதும் எங்கள் மரணநேரத்திலும் உமது இரக்கத்தினிடமாக எங்களுக்காக மனுப்பேசும்படி அனுக்கிரகஞ் செய்தருளவேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் சதாகாலம் சீவியராய் இராச்சிய பரிபாலனம் செய்துவரும் உலக இரட்சகராகிய சேசுக்கிறீஸ்துவே, இந்த மன்றாட்டை எங்களுக்குத் தந்தருளும். ஆமென்சேசு. (300-நாட்பலன்.)

வியாகுலமாதாச் செபமாலை.

ஒவ்வொரு வியாகுலத்துக்குமுன் ஒரு பரமண்டல மந்திரமும், பின்பு ஏழு பிரியதத்தமந்திரமும் ஒரு திரித்துவமந்திரமும் சொல்லவும்.

1. அர்ச். சிமியோன் தீர்க்கதரிசனம் சொன்னபோது தேவமாதா அனுபவித்த வியாகுலத்தைத் தியானிப்போமாக.
2. எஜிப்து தேசத்திற்கு ஓடிப்போனபோது.
3. கர்த்தர் மூன்றுநாள் காணாமற்போனபோது.
4. சிலுவை சுமந்துபோகிற கர்த்தரை எதிர்கொண்டு மினவினபோது.
5. கல்வாரிமலைமேல் சிலுவையடியில் நின்றபோது.
6. சிலுவையில் நின்று இறக்கப்பட்ட கர்த்தருடைய திருச்சரீரத்தை தமது மடிமேல் வளர்த்தினபோது.
7. தமது திருக்குமாரனைக் கல்லறையில் அடக்கம் பண்ணினபோது.

மிகவும் வியாகுலம் நிறைந்த கன்னிகையே, உமது திருக்குமாரனுடைய சீவியத்திலும், மரணத்திலும், நீர் அழுத கண்ணீரைப் பார்த்து, நாங்கள் செய்த பாவங்களுக்காக மனஸ்தாபமாயிருந்து உமக்கு ஆறுதல் வருமளவும் நாங்கள் பிரலாபித்தழ உம்மை மன்றாடுகிறோம். (3 பிரியதத்த மந்திரம்.)

அர்ச். வியாகுலமாதாவின் செபமாலைக்கு அளிக்கப்பட்ட பலன்கள்.

1. வியாகுலமாதாச் சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கோவில்களில் செபிக்கும் ஒவ்வொரு பரமண்டல மந்திரம், பிரியதத்த மந்திரத்துக்கும், (200 நாட் பலன்.)

2. வெள்ளிக்கிழமைகளிலும், தபசுநாட்களிலும், வியாகுலமாதாத் திருநாளிலும் அதற்கு எட்டாம் நாளிலும், எந்த இடத்தில் செபித்தாலும், ஒவ்வொரு பரமண்டல மந்திரம், பிரியதத்த மந்திரத்துக்கு (200 நாட் பலன்.)

3. செபமாலையைச் செபிக்கும் ஒவ்வொரு விசைக்கும் 100 நாட் பலனும், 7 வருஷம் 7 மண்டலப்பலனும்.

4. இந்தச் செபமாலை மாதத்தில் அநுதினமும் செபிக்கிறவர்களுக்கு ஒரு பரிபூரண பலன்.

5. ஒவ்வொரு விசை செபமாலை செபிக்கும்போதும் (100 வருஷப் பலன்.)

6. திங்கள், புதன், சனிக்கிழமைகளில் (150 வருஷப் பலன்.)

7. வாரத்தில் 4 விசையாகிலும் செபிப்பவர்களுக்கு, வருஷத்தில் ஒரு பரிபூரண பலன்.

8. பாவசங்கீர்த்தனஞ் செய்து, அர்ச். பாப்பானவருடைய சுகிர்த கருத்துகளுக்காக வேண்டிக்கொண்டால் ஒரு பரிபூரண பலன்.

9. இந்தச் செபமாலையை அடிக்கடி செபித்து, தங்கள் வசத்தில் இதை வைத்திருக்கிறவர்கள், பூசை காண்கிற அல்லது பிரசங்கம் கேட்கிறபோதும், அல்லது நமதாண்டவரையாவது, அர்ச். கன்னிமரியாயையாவது, தங்கள் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவரையாவது குறித்து ஆத்துமத்துக்கு அல்லது சரீரத்துக்கடுத்த நற்கிரியைகளைச் செய்து, 7 பரமண்டல மந்திரம், 7 பிரியதத்த மந்திரம், 7 தமதிரித்துவதோத்திரம் செபிக்கும்போதெல்லாம் 10 வருஷப் பலனுண்டு.

இப்பலன்களையெல்லாம் உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு ஒப்புக்கொடுக்கலாம்.

நல்ல ஆலோசனைமாதாவை நோக்கிச் சொல்லத்தக்க செபம்.

(மூன்று பிரியதத்தம்.)

அர்ச். மரியாயே, நித்திய ஆலோசனையின் மாதாவே, இந்த மூன்று பிரியதத்த மந்திரங்களையும் தேவரீருக்குத் தோத்திரமாகச் செபித்து உமது பரிசுத்த இருதயத்தைக் குறித்து உமது திருக்குமாரனுக்கு ஒப்புக்கொடுக்

கிறேன். அவருக்கு நிந்தை வருவிக்கத்தக்க
எந்தக் கிரியையையும் இனி ஒருபோதும்
செய்வதில்லையென்று கெட்டியான பிரதிக்
கினை பண்ணுகிறேன். சர்வேசுரனுடைய சித்
தத்தையும் உமது சித்தத்தையும் நான் சரி
யாய் நிறைவேற்ற எனக்கு நல்ல யோசனை
தந்தருளவேணுமென்று இப்போது தேவ
ரீரை மன்றாடுகிறேன். என் இருதயத்தை
முழுதும் தாய்க்குரிய உமது திருக்கரங்களில்
வைத்துத் தேவரீரை நான் கேட்கு மன்றாட்
டேதென்றால் (........) இது சர்வேசுரனுக்
குப் பிரியமாயிருந்தால், தேவரீருடைய
தோத்திரத்திற்கும் என்னுத்தம இரட்சணி
யத்திற்கும் உதவியாயிருந்தால், இந்த மன்
றாட்டைத் தந்தருளும்; ஆனால் இது தேவ
திருவுளத்திற்கு விரோதமாகவும் என் ஆத்து
மத்திற்குப் பொல்லாப்பாகவும் இருந்தால்
தாய்க்குரிய உமது பராமரிப்பில் என்னை
முழுதும் கையளித்துவிடுகிறேன்.

ஆமென்சேசு

அர்ச். சகாயமாதாவை நோக்கிச் செபம்.

திவ்விய தாயே, அடியேனுக்கு உதவிசெய்
ய உம்மால் இயலாதென்று என்னைப் புறக்
கணியாதேயும். ஏனெனில் உமது திருக்குமா
ரன் பரலோகத்திலும் பூலோகத்திலும் உமக்

குச் சர்வ அதிகாரங் கொடுத்திருக்கிறார்.
அல்லது என்னைக் கைதூக்கி இரட்சிக்க உமக்
குக் கடனில்லை என்பீரோ? அல்ல, ஏனெ
னில் ஏவையின் மக்களெல்லோருக்கும் விசே
ஷமாய் அடியேனுக்குந் தேவரீர் தாயாராக
நியமிக்கப்பட்டிருக்கிறீரோ. ஆகையால் இரக்
கம் நிறைந்த கன்னிகையே! தேவரீர் என்
தாயாராகையாலும் எனக்கு உதவிசெய்து
தற்காக்க எவ்விதத்திலும் ஆட்சேபனை சொ
ல்லமாட்டார். என் நல்ல தாயாரே! என்
மன்றாட்டிற்கு இரங்கி, என் விண்ணப்பங்க
ளுக்கு அனுகூலம் தந்தருளும். ஆமென்சேசு.

சம்மனசுகளுடைய இராக்கினியை நோக்கிச் செபம்.

சம்மனசுகளுடைய உந்நத ஆண்டவளா
கிய மாட்சிமை நிறைந்த மோட்ச இராக்கி
னியே, ஆதிகாலமுதல் பசாசின் தலையை
மிதிக்கும்படி அதிகாரமும் வல்லமையும்
பெற்றவளே, நீர் உமது பரிசுத்த படைகளைச்
சேர்த்து, அவர்களுக்குத் தலைவியாக நின்று,
உமது வல்லமையில் பசாசுக்களை விரட்டி
அவர்களோடு போர் புரிந்து, அவர்களுடைய
கர்வத்தை யடக்கி, நரகபாதாளத்தில் அவர்
களை விழத்தாட்டும்படி உம்மைத் தாழ்ச்சி
யோடு கெஞ்சி மன்றாடுகிறோம்.

தரும் அதிதுதருமாகிய பரிசுத்த சம்மனசுக்களே, எங்களைத் தற்காத்து ஆதரிப்பீர்களாக.

சோதனை வேளையில் சொல்லத்தகும் பலனுள்ள சேபம்.

ஓ தேவதாயாரே, துஷ்ட சத்துருவினிடத்திலிருந்து என்னைக் காத்து, அதை என்னை விட்டுத் தூர அகற்றிவிட உமது சம்மனசுக்களை அனுப்பியருளும் தாயே. ஆமென்சேசு.

அர்ச். தேவமாதாவின் மந்திரமாலை.

மந்திரமாலை ஜெபிக்குமுன் ஜெபம்.

ஆண்டவரே! உமது திரு நாமத்தை நான் வாழ்த்த என் நாவைத் திறந்தருளும். சகலமான பொல்லாத வீண் புறத்தி விசாரங்களினின்று என்னிருதயத்தைப் பரிசுத்தப்படுத்தும். நான் இந்த மந்திரமாலையைச் சரியான வனத்தோடும் பத்தியோடும் செபிக்கும்படிக்கும், தேவரீருடைய திருச்சமூகத்தில் நான் கேட்கும் மன்றாட்டை அடையும்படிக்கும், ஆண்டவரான சேசுக்கிறீஸ்துநாதரைப் பற்றி என் புத்திக்குப் பிரகாசத்தையும் என் நேசத்துக்கு அக்கினியையுங் கொடுத்தருளுஞ்சுவாமி. ஆமென்சேசு.

ஆண்டவரே! நீர் பூமியிலிருக்கும்போது எந்தக் கருத்தோடு சர்வேசுரனுக்குப் புகழ் புரிந்தீரோ, அந்தக் கருத்தோடு இச்செபத்தை நான் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

மாலைத்தோத்திரச் செபம்.

முத — மாசற்ற கன்னிகையின் புகழ்ச்சியையும் அவளுடைய மேலான நாமத்தையும்,

துணை.—என்னுளே களிகூர்ந்து வாழ்த்துவாயாக.

மு.—பரிசுத்த ஆண்டவளே, உமது கிருபையுடைத்தான உதவியைத் தந்தருளும்.

து.—மாசற்ற கன்னிகையே, சகல சத்துருக்களிடத்தில் நின்று என்னைக் காத்தருளும்.

மு.—பிதாவுக்கும் சுதனுக்கும் இஸ்பிரீத்து சாந்துவுக்கும் தோத்திரமுண்டாகக்கடவது.

து.—ஆதியிலேயும் இப்பொழுதும் எப்பொழுதும் அநாதி சதாகாலமும் இருக்கும்படியே, ஆமென்சேசு. * அல்லேலூ.ய்யா.

* விபூதித் திருநாளுக்கு முன்வரும் மூன்றும் ஞாயிற்றுக்கிழமை முதல், சுவாமி உத்தான நாளுக்கு முன்னாள் வரையில் அல்லேலூய்யா என்று சொல்வதற்குப் பதிலாக "நித்திய மகிமைக்கு இராஜாவாகிய ஆண்டவரே, உ..க்கே ஸ்தோத்திரமுண்டாகக்கடவது" என்று சொல்லவும்.

சங்கீதச் செபம்.

1. பூலோகத்துக்கு ஆண்டவளே! வாழ்க, பரலோகத்துக்குப் பிரகாசமுள்ள இராக்கினியே! வாழ்க, கன்னியர்களுக்கு மேலான கன்னிகையே! வாழ்க, குளிர்ந்த தாரகையே! வாழ்க.

2. தெய்வ அநுக்கிரகத்தினாலும், திவ்விய ஒளியினாலும் நிரப்பப்பட்டு, பூலோகத்துக்கு அதிகாலையிற் பிரகாசிக்கின்றீர். ஆண்டவளே! துரிதமாய் வந்து கைகொடுத்துப் பாவத்தினின்றும் சத்துருக்களிடத்தினின்றும் எங்களைக் காத்தருளும்.

3. பூலோகத்துக்கு மேலான ஆண்டவர் தம்முடைய ஏக புத்திரனாகிய வார்த்தையினால் பூமியையும், சமுத்திரத்தையும், வானத்தின் ஒளிவுள்ள அணியணியான நட்சத்திரங்களையும் உண்டுபண்ணி,

4. அந்த ஏக பரிசுத்த வார்த்தையாகிய சுதனுக்கே உம்மைச் சதாகாலத்துக்குந் தாயாராக நியமித்து, குற்றங் கட்டிக்கொண்ட ஆதாமின் சந்ததியின பாவத்தில் நின்று சர்வேசுரன் உம்மை நீக்கித் தமக்குப் பிரியமுள்ளவளாகத் தெரிந்துகொண்டார்.

ஆமென்சேசு.

மு.—மனுக்குல மாசுகொள்ளுமுன் இந்தப் பரம நாயகியைச் சர்வேசுரன் தெரிந்து கொண்டார்.

து.—அவளைத் தமது ஆலயத்தில் வாசஞ் செய்யச் செய்தார்.

மு.—ஆண்டவளே! என்னுடைய மன்றாட்டைக் கேட்டருளும்.

து.—என்னுடைய அபயசத்தம் உமது சந்நிதிமட்டும் வரக்கடவது.

பிரார்த்திக்கக்கடவோம்.

அர்ச். மரியாயே, யாலாயுங் கைவிடாதவளும் புறக்கணியாதவளுமாகிய மோட்ச இராக்கினியே! எங்கள் ஆண்டவராகிய சேசுக் கிறீஸ்துவின் தாயே, பூலோகத்துக்கு ஆண்டவளே, உம்முடைய தயைவிழியால் என்னை நோக்கி என்னுடைய பாவங்களுக்கெல்லாம் பொறுத்தலைத் தந்தருளும்படி உம்முடைய மாசற்ற உற்பத்தியை மிகுந்த பத்தியுடன் கொண்டாடுகிறபடியால், கன்னிகையாகிய நீர் பெற்றவருமாய், ஏக திரித்துவத்தோடு சீவியரு பரிபாலனஞ் செய்கிறவருமாய், இராச்சிய பரிபாலகருமாயிருக்கிற சேசுக்கிறீஸ்துநாதருடைய தயையால் நித்திய பாக்கியமாகிய சம்பாவனையை இனி அடைவேனாக. ஆமென்சேசு.

மு.—ஆண்டவரே, என் மன்றாட்டைக் கேட்டருளும்.

து.—என்னுடைய அபயசத்தம் உமது சந்நிதிமட்டும் வரக்கடவது.

மு.—ஆண்டவரை வாழ்த்தக்கடவோம்.

து.—சர்வேசுரனுக்குப் புகழுண்டாகக்கடவது.

மு.—இறந்துபோன விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய இளைப்பாற்றியை அடையக்கடவது.

து.—ஆமென்சேசு.

முதற் கணிதச் செபம்.

மு.—பரிசுத்த ஆண்டவரே! உமது கிருபையுடைத்தான உதவியைத் தந்தருளும்.

து.—மாசற்ற கன்னிகையே! சகல சத்துருக்களிடத்திநின்று என்னைக் காத்தருளும்.

மு.—பிதாவுக்கும் சுதனுக்கும். மற்றதும்.

து.—ஆதியிலே...மற்றதும். * அல்லேலுய்யா.

சங்கீதச் செபம்.

1. ஞானமுள்ள கன்னிகையே, வாழ்க! உச்சிதமாய் ஆசீர்வதிக்கப்பட்ட தாயே, சர்வேசுரன் தங்குதற்குப் பரிசுத்தமாய்க் கட்டப்பட்ட மாளிகையே, மேலாக உன்னதமாய்ச் சித்தரிக்கப்பட்ட ஏழு சௌந்தரிய ஸ்தம்பங்களால் அலங்கரிக்கப்பட்டவளே!

2. பூமியின்பேரில் விதிக்கப்பட்ட சாபத்தில் நின்று நீக்கப்பட்டு உம்முடைய மாட்சிமை தங்கிய பிறப்புக்கு முன்னமேதானே பரிசுத்தமும் துப்புரவுமுள்ளவளாயிருக்கிறீர்.

3. ஜீவியர்களின் தாயே,பரிசுத்தர் நுழையும் வாசலே,யாக்கோபின் நவநட்சத்திரமே, சம்மனசுக்களின் மகிமையான அரசியே!

4. காணப்பட்ட அணிவகுப்புள்ள வல்லபம் பொருந்திய சேனைகளைப்போல அஞ்சத்தக்கவளே, கிறீஸ்துவர்களின் இருதயத்தில் நின்று சகல பயத்தையும் அகற்றி, எங்களுடைய அடைக்கலமாகவும், எங்களுடைய இளைப்பாற்றியின் துறையாகவும் இரும்.—ஆமென்சேசு.

மு.—அவர் அவளைப் பரிசுத்தமுள்ளவளாய் உண்டுபண்ணினார்.

து.—அவர் அவளைத் தம்முடைய சகல சிருஷ்டிப்புக்கு மேலாக உயர்த்தினார்.

மு.—ஆண்டவரே! என்னுடைய......மற்றதும். 437-ம் பக்கங் காண்க.

மூன்றும் கணிதச் செபம்.

மு.—பரிசுத்த ஆண்டவளே! உமது கிருபையுடைத்தான உதவியைத் தந்தருளும்:

து.—மாசற்ற கன்னிகையே! சகல சத்துருக்களிடத்தில் நின்று என்னைக் காத்தருளும்.

மு.—பிதாவுக்கும் சுதனுக்கும்...மற்றதும்.

து.—ஆதியிலே...மற்றதும். * அல்லேலூய்யா.

சங்கீதச் செபம்.

1. வாக்குத்தத்தத்தின் பெட்டகமே, சலமோனின் உன்னத சிம்மாசனமே, நடுக்கமுள்ள மானிடருக்குக் காண்பிக்கப்பட்ட நம்பிக்கையின் வானவில்லே, ஒளியுற்ற காட்சியின் அடர்ந்த சோலையே, ஆரோனுடைய செளந்தரியத் தண்டுகோலே!

2. கீர்த்திபெற்ற சேதையோனின் தொல்லிய கம்பளமே, கடவுளின் திறக்கப்படாத வாசலே, சஞ்சோன் என்பவரின் மதுரமான தேன்கூடே, நாங்கள் சர்வேசுரனுக்கு மதுரமான சுகந்த மணமாயிருக்கும்படியாய் வேண்டிக்கொள்ளும்.

3. மாசற்ற கன்னிகையே! நிற்பாக்கிய நிலைமையாகிய பாவக்கறைபட்ட ஏவாளின் சந்ததியின் குற்றத்தில் நின்று நீக்கப்பட்ட தாயே, நித்திய பிதாவின் ஏக சுதனை உமது குமாரன் எவ்வளவு சற்பாத்திரமுள்ளவராயிருக்கிறார்.

4. உம்மைச் சகல பாவக்கறையில் நின்று நீக்கும்பொருட்டு, விசேஷ அநுக்கிரகத்தை உமக்காக க்ஷேமித்துவைத்தார்.

ஆமென்சேசு.

மு.—உன்னத ஸ்தலத்தில் நான் வீற்றிருக்கிறேன்.

து.—என்னுடைய சிம்மாசனம் மேகமண்டலத்தின் தூணுக்குள் இருக்கின்றது.

மு.—ஆண்டவளே! என்னுடைய...மற்றதும். 437-ம் பக்கம் காண்க.

ஆறுங் கணிதச் செபம்.

மு.—பரிசுத்த ஆண்டவளே! உமது கிருபையுடைத்தான உதவியைத் தந்தருளும்.

து.—மாசற்ற கன்னிகையே! சகல சத்துருக்களிடத்தில் நின்று என்னைக் காத்தருளும்.

மு.—பிதாவுக்கும் சுதனுக்கும்...மற்றதும்.

து.—ஆதியிலே ... மற்றதும். * அல்லேலுய்யா.

சங்கீதச் செபம்.

1. எங்களுடைய இரக்கமுள்ள ஆண்டவரின் கன்னித்தாயே, ஆராதனைக்குரிய திரித்துவத்தின் ஆலயமே, வாழ்க! சம்மனசுக்களின் சந்தோஷமே, தப்புரவின் அழகிய குடிலே!

2. துன்பப்படுகிறவர்களின் இருப்பிடத்துக்கு ஆறுதலைக் கொண்டு வருகிறீர், மாசற்ற இன்பந்தருகிற தோட்டமே, பொறுமையின் வெற்றிக்குருத்தே, கற்பின் விருட்சமே, பச்சாத்தாபமுள்ள பாவிகளின் தைலமே!

3. வாக்குத்தத்தத்தின் நிலயமே, குருத்துவத்துக்குரிய பாக்கியமே, ஜென்மப்பாவக் கறையில் நின்று நீக்கப்பட்ட பரிசுத்தமுள்ளவளே, கடவுளின் நகரோ, மகா உன்னதமானவளே, கிழ்த்திசையின் வாசலே, சகல கிருபையுடைத்தானவளே, உம்மையே கொண்டாடுகிறோம்.

4 மகா ஆச்சரியமாய் ஆசீர்வதிக்கப்பட்ட மாசற்ற கன்னிகையே! உம்முடைய பரா

மரிப்பான கண்காணிப்பில் நாங்கள் தஞ்சமடைகிறோம். ஆமென்சேசு.

மு.—முட்செடிக்குள் லீலியென்னும் புஷ்பமிருக்கிறதுபோல்,

து.—ஆதாமின் குமாரத்திகளுக்குள்ளே என் அன்புக்குரியவள் இருக்கிறாள்.

மு.—ஆண்டவளே! என்னுடைய...மற்றதும். 437-ம் பக்கங் காண்க.

ஒன்பதாம் கணிதச் செபம்.

மு.—பரிசுத்த ஆண்டவளே! உமது கிருபையுடைத்தான உதவியைத் தந்தருளும்.

து.—மாசற்ற கன்னிகையே! சகல சத்துருக்களிடத்தில் நின்று என்னைக் காத்தருளும்.

மு.—பிதாவுக்கும் சுதனுக்கும் ..மற்றதும்.

து.—ஆதியிலே...மற்றதும். * அல்லேலுய்யா.

சங்கீதச் செபம்.

1. எங்களுடைய அடைக்கல நகரோ வாழ்க, தாவீதின் உப்பரிகையே! அவருடைய வல்லமையின் படைக்கலங்களாலும் வெற்றிக்கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டவளே! வாழ்க.

2. அநுக்கிரகமும் கருணையும் நிறைந்த தாயே! பயமும் கிலேசமும் படுகிற பாவிகளாகிய நாங்கள், உம்முடைய கெற்ப உற்பத்தியின் நேசத் தூய்மையான சுவாலையால் கொளுத்தப்பட்டு உம்மை நோக்கி ஓடி வந்தோம், பறவை நாகமாகிய பசாசு உம்மால் நாணப்பட்டது.

3. போர்க்கூடாரத்தில் அஞ்சாத குதித்து என்பவளைப்போல, வீரமுள்ள கிரிகைகளினால் எங்கும் பேர்பெற்ற ஸ்திரீயே, அழகுள்ள ஒரு கன்னிகையால் வயது மிகுந்த தாவீதென்பவர் போஷிக்கப்பட்டதைப் போல, நித்திய சுதனாகிய சர்வேசுரன் உம்முடைய கண்காணிப்பினால் பராமரிக்கப்பட்டார்.

4. இராக்கேல் என்பவள் எஜிப்துதேசத்தின் போஷகனைப் பெற்றதைப்போல, ஸ்திக்கும்படியாக நீர் ஒரு இரட்சகனை இப்பிரபஞ்சத்துக்கு தந்தீர். ஆமென்சேசு.

மு.—என் நேசமுள்ளவளே, நீர் முழுமையும் அழகுள்ளவள்.

து.—ஜென்மப்பாவத்தின் மாசு உம்மிடத்தில் ஒருபோதும் இருந்ததில்லை.

மு.—ஆண்டவளே, என்னுடைய ... மற்றதும்...437-ம் பக்கங் காண்க.

வேஸ்பரொன்னும் மாலைச் செபம்.

மு.—பரிசுத்த ஆண்டவளே! உமது கிருபையுடைத்தான உதவியைத் தந்தருளும்.

து.—மாசற்ற கன்னிகையே, சகல சத்துருக்களிடத்தில் நின்று என்னைக் காத்தருளும்.

மு.—பிதாவுக்கும் சுதனுக்கும்...மற்றதும்.

து.—ஆதியிலே ... மற்றதும். * அல்லேலுய்யா.

சங்கீதச் செபம்.

1. சூரிய ஓட்டத்தின் பத்து ரேகைகள் பின்சென்ற அக்காஸ் என்பவனுடைய சூரிய கடியாரமே!

2. மாசற்ற கன்னிகையிடத்தில் நின்று சுபாவ நூலற வார்த்தையாகிய கடவுள் அவதரித்தார். மட்டில்லாத கடவுள் தாம் உண்டு பண்ணின சம்மனசுகளைவிட அதிகமாய்த் தாழ்ந்து மனுக்குலத்தின் மீட்பெல்லாங் கொடுத்து மோட்சத்தை மனுக்குலத்துக்கு அடைந்து கொடுத்தார்.

3. மரியாயே! உம்மைச் சுற்றிப் பரமபிரகாசத்தின் நீதியுள்ள சூரியனானவர், தம்முடைய சோதியுள்ள கதிரை வீச, நீர் உம்மு

டைய கெற்ப உற்பத்தியினால், அவருடைய தேவ ஒளிகொண்டு உதய காலையைப்போல குளிர்ச்சியாய்ப் பிரகாசித்தீர்.

4. பாம்பின் ஜெயசீலியே! முட்செடிகளுக்குள் லீலியென்னும் புஷ்பத்தைப்போல ஒளியுள்ள சந்திரனாக இருக்கிறீரென்று சகல வர்ணிப்பும் உம்மை வர்ணிக்கின்றது. ஆமென் சேசு.

மு.—வானத்தில் மாறாத ஒளியை உதிக்கச் செய்தேன்.

து.—பூமி முழுதும் மூடுபனியைப்போல மூடினேன்.

மு.—ஆண்டவரே! என்னுடைய...மற்றதும்...437-ம் பக்கங் காண்க.

'மிகவும் இரக்கமுள்ள தாயே' என்கிற செபத்தைச் சொல்லவும்.

கடைசி வேண்டுதல்.

மு.—ஆண்டவரே! நீர் எங்களுக்காக மன்றாடுகிற மன்றாட்டினால், உமது குமாரனாகிய சேசுக்கிறீஸ்துவின் கோபந்தணிந்து' எங்களைச் சீர்படுத்துவாராக.

து.—அவர் எங்கள் பேரிலுள்ள தம்முடைய கோபத்தை மாற்றுவாராக.

மு.—பரிசுத்த ஆண்டவரே, உமது கிருபையுடைத்தான உதவியைத் தந்தருளும்.

து.—மாசற்ற கன்னிகையே, சகல சத்துருக்களிடத்தில் நின்று எங்களைக் காத்தருளும்.

மு.—பிதாவுக்கும் சுதனுக்கும்...மற்றதும்.

து.—ஆதியிலே ... மற்றதும். * அல்லேலுய்யா.

சங்கீதச் செபம்.

1. வல்லபம் பொருந்திய கன்னிகையே, மகா பேர்பெற்ற தாயே, பிரகாசத்தின் நட்சத்திரங்களினால் முடி சூட்டப்பட்ட சௌந்தரிய அரசியே,

2. மோட்சத்தின் உன்னத சிம்மாசனத்தில் சர்வேசுரனுடைய வலது பாரிசத்தில் நிற்கப்பேறுபெற்ற பீதாம்பரத்தினால் அலங்கரிக்கப்பட்டவளே, ஸ்தாபிக்கப்பட்ட சம்மனசுக்களைப் பார்க்கிலும் மகிமையில் உயர்ந்து மாசற்ற தூய்மையும் மகா தெளிவுமுள்ளவளுமாயிருக்கிறீர்.

3. கிருபையின் தாயே! இனிய நம்பிக்கை உம்மிடத்தில் காணப்படுகின்றது. உம்முடைய மன்றாட்டினால் கடவுள் பாவிகளை விடுதலையாக்குவார்.

4. குளிர்ந்த ஒளியுற்ற சமுத்திர நட்சத்திரமே! கப்பல் சேதம் அடைந்தவர்களின் கண்களைக் களிப்பிக்குந் துறையே, திறக்கப்பட்ட வாசலும் பாவிகளின் தஞ்சமுமாகிய உம்மால், நாங்கள் பரலோக இராஜாவைக் கண்டு அர்ச்சியசிஷ்டவர்களாகக் கடவோமாக. ஆமென் சேசு.

மு.—மரியாயே! உம்முடைய நாமம் பொழிந்த பரிமளத் தைலமாம்.

து.—உம்முடைய ஊழியர்கள் உம்மை மிகவும் நேசிக்கிறார்கள்.

மு—ஆண்டவரே! என்னுடைய...மற்றதும்...437-ம் பக்கங் காண்க.

திருப்புகழ்.

1. வணக்கமான கன்னிகையே! நாங்கள் சுத்த கருத்துடனே வேதப்பிரமாணத்துக்கேற்ற இந்த மணித்தியாலங்களை உமக்குப் பாதகாணிக்கையாக வைக்கிறோம்.

2. அன்புள்ள கன்னிகையே! பரதேசிகளாகிய நாங்கள் கிறீஸ்துநாதரைத் தரிசிக்குமளவும்,

3. எங்களை நடத்தி மரண நேரத்தில் ஒத்தாசையாயிரும்.

4. ஜென்மப்பாவக்கணுவும் கர்மப்பாவப் பட்டையும் அணுகாத கிளையிதுவே, ஆமென் சேசு.

மு.—கன்னிகையே, உம்முடைய கெற்ப உற்பத்தியில் நீர் மாசற்றவளாயிருந்தீர்.

து.—நீர் பெற்ற குமாரனின் பிதாவினிடத்தில் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரா சுவாமி! பரிசுத்த கன்னிகையின் மாசற்ற கெற்ப உற்பத்தியினால் உம்முடைய குமாரனுக்கு உகந்த பீடமாய் அவளிருக்கச் செய்தீரே. முன் நியமித்த உமது திருக்குமாரனின் மரணத்தினால் அவளைச் சகல பாவக்கறையில் நின்று இரட்சித்தது போல நாங்களும் பாவக்கறையில்லாமல் உம்மிடத்திற்கு வர என்றென்றைக்கும் உம்மோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் ஏக சர்வேசுரனாயிருந்து இராச்சியபாரஞ் செய்கிற உமது குமாரனாகிய சேசுக்கிறீஸ்துநாதர் சுவாமியின் திருமுகத்தைப் பார்த்து நீர் எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். ஆமென் சேசு.

மு.—அர்ச். கன்னிமரியாயின் மாசில்லாத கெற்ப உற்பவமானது.

து.—எங்களுடைய தஞ்சமாகவும் காவலாகவும் இருக்கக்கடவது.

மந்திரமாலை முடிந்தபின் செபம்.

மகா பூசிக்கத்தக்க ஏக திரித்துவத்திற்கும், சிலுவையில் அறையுண்ட நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய மனுஷீகத்துக்கும், ஒட்டோலக மாட்சிமைதங்கி ஒருபோதுங் கன்னிமை குன்றாத முத்திப்பேறுபெற்ற மரியாயின் குறைவில்லாக் கன்னிமைக்கும், சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய கூட்டத்திற்கும், சகல சிருஷ்டிகளினாலே ஸ்துதியும் தோத்திரமும், மகிமையும், புகழும் அநவரதகாலமும் உண்டாகக்கடவது. நமக்கோவென்றால் சதாகாலமும் பாவவிமோசனம் உண்டாகுவதாக, ஆமென்சேசு.

மு.—நித்திய பிதாவின் சுதனைத் தாங்கின கன்னிமரியாயின் உதரம் பாக்கியம் பெற்றது.

து.—ஆண்டவராகிய கிறீஸ்துநாதர் பாலுண்ட கொங்கைகள் பாக்கியம் பெற்றன,

ஆமென்சேசு.

DE PROFUNDIS.

129-ம் சங்கீதம்.

1. சுவாமீ! பாதாளத்தில் நின்று உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; சுவாமி, என் சத்தத்தைக் கேட்டருளும்.

2. எனது விண்ணப்பத்தின் பேரொலியை உமது செவிகொடுத்துக் கேட்டருளும்.

3. ஆண்டவரே! நீர் எங்கள் பாவங்களைப் பாராட்டுவீராகில், உமக்கு முன்பாக நிருவாகம் பண்ணுகிறவனார்?

4. ஆனால் தேவரீரிடத்தில் தயாளமான மன்னிப்பு இருக்கிறபடியாலும், உமது வேத முறைமையைப்பற்றியும், சுவாமி உம்மை நம்பிக் காத்திருக்கிறேன்.

5. என் ஆத்துமம், ஆண்டவருடைய திருவசனத்தின்மேலூன்றிக் காத்திருக்கின்றது; என் ஆத்துமம் ஆண்டவரிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறது.

6. உதய சாமகாவல்நேரந்துவக்கி இரவு பரியந்தம் இஸ்ராயேல் ஜனம் ஆண்டவரை நம்பிக் காத்திருக்கக்கடவது.

7. ஏனெனில் சுவாமி தயையுள்ளவர்; அவரிடத்தில் இரட்சணியம் ஏராளமாயிருக்கின்றது.

8. அவரே, இஸ்ராயேல் ஜனத்தை அதின் சகல பாவங்களினின்றும் இரட்சித்தருளுவார்.

மு.—ஆண்டவரே, அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும்.

து.—ஊழியுள்ள பிரகாசம் அவர்களுக்குப் பிரகாசிக்கக்கடவது.

பிரார்த்திக்கக்கடவோம்.

சமஸ்த விசுவாசிகளின் சிரேஷ்டிகரும் இரட்சகருமாகிய சர்வேசுரா! உமது அடியார்களுடைய ஆத்துமங்களுக்குப் பாவப் பொறுத்தல் தந்து அவர்கள் எப்போதும் அபேட்சித்துக்கொண்டுவந்த மன்னிப்பை எங்கள் பத்தியுள்ள மன்றாட்டுக்களினாலே அடையச் செய்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப்பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென் சேசு.

அர்ச். சூசையப்பர் பேரில் பத்தி வணக்கம்.

சேபம்.

மிகவும் இரக்கமுள்ள அர்ச். சூசையப்பரே, மிகுந்த தயாள சற்குணங்களமைந்த பிதாப்பிதாவே, உமது சரணமாக ஓடிவந்து

உமது மன்றாட்டுக்களின் உதவியைக் கேட்டு ஒருபோதும் வியர்த்தமாகவில்லையென்று அர்ச். தெரேசம்மாள் நிச்சயித்துச் சொன்னதை நினைத்தருளும். மிகவும் அன்புக்குரிய அர்ச். சூசையப்பரே, இப்பேர்ப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு, உமது திருப்பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து, எண்ணிறந்த என் பாவங்களுக்காக உமது சமுகத்தில் பெருமூச்சுவிட்டழுகிறேன். தயைநிறைந்த பிதாவே, என்னுடைய தாழ்மையான மன்றாட்டைப் பிறக்கணியாமல் கேட்டு என் விண்ணப்பத்திற்கு அனுக்கிரகந் தந்தருளும். ஆமென்சேசு.

(300-நாள் பலன்.)

அனுகூலம் பெறுவிக்கும் செபம்.

கன்னியர்களின் தந்தையும் பரிபாலனுமாகிய அர்ச். சூசையப்பரே, பிரமாணிக்கமுள்ள காவலனே, பரிசுத்த மயமாகிய சேசுவையும் கன்னியர்க்கரசியாகிய அர்ச். மரியாயியையும் சர்வேசுரன் உமது அடைக்கலத்தில் ஒப்படைத்தாரே. உமது அருமைப் பராமரிப்புக்கு மிகவும் உரியவர்களாயிருந்த இந்த இருவரைக்குறித்து நான் இரந்து கேட்கும் மன்றாட்டேதென்றால், நான் மாசற்ற சிந்தனைகளோடும் பரிசுத்த இருதயத்தோடும் கற்புள்ள சரீரத்தோடும் உத்தம தேவசிநே

கத்தோடும் பழுதின்றி நடந்து, அத்திவ்விய சேசுவுக்கும் தேவமாதாவுக்கும் இடைவிடாமல் ஊழியம் பண்ணும்படிக்கு எனக்கு வேண்டிய வரப்பிரசாதத்தைக் கேட்டுத் தந்தருளும். ஆமென்சேசு. (100-நாள் பலன்.)

13-ம் சிங்கராயரென்னும் பாப்பானவர் அர்ச். சூசையப்பர் பேரில் செய்த செபம்.

அர்ச். சூசையப்பரே! எங்களுடைய துன்பதுயரங்களில் உமது சரணமாக ஓடி வந்தோம். உமது பரிசுத்தபத்தினியின் உதவியை இரந்து மன்றாடினபின் உமது அடைக்கலத்தை அடைய நம்பிக்கையோடே பிரார்த்திக்கிறோம். தேவ தாயாரான அமலோற்பவ கன்னிமாதாவின்பேரில் நீர் வைத்திருந்த அன்பின் ஐக்கியத்தைப் பார்த்து, திவ்விய பாலனை சேசுவை அன்போடு அரவணைத்து வளர்த்த தந்தைக்குரிய உமது நேசத்தைப்பார்த்து, அத்திவ்விய கர்த்தர் தமது திரு இரத்தத்தால் மீட்டிரட்சித்த மனுக்குலத்தைக் கிருபாகடாட்சமாய்ப் பார்த்தருளி, எங்கள் அவசரங்களில் உமது செல்வாக்குள்ள மன்றாட்டினால் எங்களுக்கு உதவிசெய்

செய்யவேணுமென்று மன்றாடுகிறோம். திருக்குடும்பத்தைக் காத்து நடத்தின விவேக காவலனே! சேசுக்கிறீஸ்துவின் பிரஜைகளை ஆதரித்தருளும். அதிமிக உருக்க நேசம் அமைந்த பிதாப்பிதாவே! சகல பாவ மாசுகளினின்றும் எங்களைத் தற்காத்தருளும். வல்லமைபொருந்திய பாதுகாவலனே! எங்கள் சத்துருக்களோடே நாங்கள் நடத்தும் போராட்டத்தில் எங்களைப் பாதுகாத்தருளும். மரண ஆபத்தினின்று திவ்விய பாலனைத் தேவரீர் அன்று மீட்டிரட்சித்தது போல இப்போது எங்கள் சத்துருக்களின் சகல தந்திரங்களில்நின்றும் இக்கட்டு இடையூறுகளில் நின்றும் திருச்சபையைப் பாதுகாத்தருளும். உமது தயவு ஆதரவால் நாங்கள் தற்காக்கப்பட்டு உமது திவ்விய மாதிரிகையைப் பின்சென்று பரிசுத்தமாய்ச் சீவித்துப் பத்தியாய் மரித்துப் பரகதியின் ஆனந்தத்தில் வந்து சேரத்தக்கதாகத் தேவரீருடைய இடைவிடாத உதவி ஒத்தாசையை எங்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆமென் சேசு.

அர்ச். சூசையப்பருடைய ஏழு வியாகுலங்களையும் ஏழு சந்தோஷங்களையும் குறித்துக் கேட்கும் மன்றாட்டு.

1-வது. அர்ச். சூசையப்பரே, நீர் கன்னிமரியாயின் கெற்பத்துக்குக் காரணமறியாமல் பட்ட துக்கத்தைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் காரணத்தைச் சம்மனசுவினால் அறிந்து நீர் அனுபவித்த சந்தோஷத்தைப்பற்றிக் களிகூருகிறேன். அர்ச். சூசையப்பரே, நீர் அனுபவித்த இந்தத் துக்கத்தையுஞ் சந்தோஷத்தையும் பார்த்து எங்களுக்காக மனுப்பேசியருளும். (அல்லது அவனவன் தனக்குவேண்டியதைக் கேட்கிறது.)
பர. பிரி. திரி.

2-வது. அர்ச். சூசையப்பரே, சேசுநாதர் மாட்டுக்கொட்டிலிற் பிறந்ததைக்கண்டு நீர் பட்டதுக்கத்தைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் அவர் சம்மனசுக்களாலும் மனிதர்களாலும் ஆராதிக்கப்படுகிறதைக்கண்டு நீர் அனுபவித்த சந்தோஷத்தைப்பற்றிக் களிகூருகிறேன். அர்ச். சூசையப்பரே.—பர. பிரி. திரி.

3-வது. அர்ச். சூசையப்பரே, திவ்விய குழந்தை விருத்தசேதனப்படுகிறதைக்கண்டு நீர் பட்ட துக்கத்தைப்பற்றி மனமிரங்கு

கிறேன். மேலும் அவருக்குச் சேசுவென்னும் திருநாமந் தரிக்கப்படுவதைக்கண்டு நீர் அனுபவித்த சந்தோஷத்தைப்பற்றிக் களிகூருகிறேன். அர்ச். சூசையப்பரே. பர. பிரி. திரி.

4-வது. அர்ச். சூசையப்பரே, திவ்விய குமாரனுடைய பாடுகளையும் அவர் திருத்தாயாருடைய வியாகுலங்களையுஞ் சிமியோன் முன்னறிவிக்கக் கேட்டு நீர் பட்ட துக்கத்தைப் பற்றி மனமிரங்குகிறேன். மேலும் மனுக்குலத்தின் இரட்சணியத்தை அவர் முன்னறிவிக்கக்கேட்டு நீர் அனுபவித்த சந்தோஷத்தைப்பற்றிக் களிகூருகிறேன்.

அர்ச். சூசையப்பரே.—பர. பிரி. திரி.

5-வது. அர்ச். சூசையப்பரே, நீர் எஜிப்து தேசத்துக்கு ஓடிப்போனதைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் நீர் திவ்விய இரட்சகரைக் காப்பாற்றினதைப்பற்றிக் களிகூருகிறேன். அர்ச். சூசையப்பரே.-பர.பிரி.திரி.

6-வது. அர்ச். சூசையப்பரே, எஜிப்து தேசத்தினின்று திரும்பிவருகையில் நீர் பட்ட பயத்தைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் சம்மனசுவின் காட்சியால் தேறுதல் அடைந்ததைப்பற்றிக் களிகூருகிறேன்.

அர்ச். சூசையப்பரே.—பர. பிரி. திரி.

7-வது. அர்ச். சூசையப்பரே, சேசுநாதர் காணமல் போனதினால் நீர் பட்ட துக்கத்தைப்பற்றி மனமிரங்குகிறேன். மேலும் அவரை மறுபடியுங்கண்டு நீர் அனுபவித்த சந்தோஷத்தைப்பற்றிக் களிகூருகிறேன். அர்ச். சூசையப்பரே.— பர. பிரி. திரி.

மு. நாங்கள் சேசுக்கிறீஸ்துவின் வாக்குத்தத்தங்களுக்குப் பாத்திரவான்களாகத் தக்கதாக.

து. அர்ச். சூசையப்பரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுராசுவாமி, உம்முடைய மிகவும் அர்ச். திருமாதாவின் பரிசுத்த பத்தாவாக முத்தனை சூசையப்பரை மனோவாக்குக் கெட்டாத பராமரிக்கையால் தெரிந்து கொள்ளத் திருவுளமானீரே. பூலோகத்தில் அடியோர்களை ஆதரிக்கிறவரென்று எங்களால் வணங்கப்படுகிற அவர் பரலோகத்தில் எங்களுக்காக மனுப்பேசுகிறவராயிருக்கும்படிக்கு நாங்கள் பாத்திரவான்களாகத் தக்கதாகத் தேவரீர் அனுக்கிரகஞ் செய்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோ

டும் சதாகாலஞ் சீவியருமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணுநின்றவருமாயிருக்கிற ஆண்டவரே. ஆமென்சேசு.

நல்ல மரணமடைய அர்ச். சூசையப்பரை நோக்கிச் செபம்.

1. ஓ! உன்னத மகிமைப் பிரதாபம் பொருந்திய அர்ச். சூசையப்பரே, நான் சாகுந்தறுவாயில் நல்ல புத்தி நினைவோடிருந்து என் பாவங்களுக்காக உத்தம மனஸ்தாபப்பட்டழுது நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து மரிக்கச் சமயங்கிடைக்கவும், அவதிமரணமில்லாமல் நல்மரணமடையவும் என் மீதிரங்கி எனக்காகப் பிரார்த்தித்தருளும். திரி.

2. ஓ! அதிமிக நேசம் பொருந்திய அர்ச். சூசையப்பரே, நான் சாகுந்தறுவாயில் திவ்விய கர்த்தருடைய திருமாங்கிஷ இரத்தமென்னுந் திவ்விய விருந்தை இருதய ஆசைப்பற்றுதலோடே உட்கொள்ளவும், நித்தியத்துக்குச் செல்லும் வழியில் அத்திவ்விய அமுதால் திடப்பட்டு மரிக்கவும் என் மீது இரங்கி எனக்காகப் பிரார்த்தித்தருளும். திரி.

3. ஓ! மிகுந்த மகிமையிலங்கிய பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரே, நான் மரண அவஸ்தைப்படுமுன்னே, என் அன்பான சுவாமியை மனநோகப்பண்ணினதினிமித்தம் துக்க மனஸ்தாபப்பட்டு நல்ல ஆயத்தத்தோடே அவஸ்தைப்பூசுதல் பெற்று மரிக்க எனக்காகப் பிரார்த்தித்தருளும். திரி.

4. ஓ! மிகவும் மகிமைதங்கிய அர்ச். சூசையப்பரே, கடைசித் தேவதிரவிய அநுமானங்களைப் பெற்றபின், திவ்விய கர்த்தரின் திருப்பாடுகளையும் மாதாவின் வியாகுலங்களையும் எனக்கு நினைப்பூட்ட ஒரு குருவானவருடைய உதவி கிடைக்கவும், இப்படியாய் திருநாமதேயங்களைப் பத்தியோடு உச்சரித்து பரிபூரணபலனடைந்து மரிக்கவும் எனக்காகப் பிரார்த்தித்தருளும். திரி.

5. ஓ! மிகுந்த மாட்சிமை தங்கிய அர்ச். சூசையப்பரே, என் மரணத்தறுவாயில் பிசாசின் சகல தந்திரங்களினின்றும் எனக்கு வழக்கமான குற்றங் குறைகளினின்றும் என்னைத் தற்காத்து எவ்விதக் கிரியைகளிலும் விசுவாசம் பத்தி நம்பிக்கை முயற்சிகளை அப்பியாசித்து மரிக்க எனக்காகப் பிரார்த்தித்தருளும். திரி.

6. ஓ! மிகவும் அன்புக்குரிய பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரே, என் ஆத்துமமானது அழிவுக்குரிய இவ்வுடலை விட்டுப் பிரிந்து தன் சீவியகாலக் கணக்குக் கொடுக்கத் திவ்விய நியாயாதிபதியின் சமுகத்திற்குப் போகும் தறுவாயில் அந்தப் பயங்கரமான வேளையிலே தேவரீரும் உமது திவ்விய பத்தினியாகிய அர்ச். கன்னிமரியாயியும் எனக்குத் துணைநின்று உதவும்படியாய்த் தேவரீரை இரந்து மன்றாடுகிறேன். திரி.

7. ஓ! மிகவும் பிரியமான பாதுகாவலரே, என்னுடைய எண்ணிறந்த பாவங்களினிமித்தம் தேவநீதிக்கு உத்தரிக்கத்தக்கதாக உத்தரிப்பு ஸ்தலத்தின் வேதனைகளுக்குள் நான் கட்டுண்டு கிடக்கையிலும் உமது வல்லமையுள்ள மன்றாட்டுகளால் என்னைக் கைதூக்கி இரட்சிக்கக் கிருபை புரிந்தருளும். திரி.

திருக்குடும்பத்தை நோக்கிச் செபம்.

சேசுவின் திரு இருதயமே! அமலோற்பவ கன்னிமாதாவின் திரு இருதயமே! ஓ! மிகுந்த மகிமைப் பிரதாபம் பொருந்திய அர்ச். சூசையப்பரே! உங்கள் அடைக்கலமாக ஓடிவந்து உங்கள் உபகார சகாயங்களை இரந்து மன்றாடிக் கேட்ட எவனும் அந்த

மன்றாட்டுக்களை அடையாமல் போனதில்லையென்று நினைத்தருளுங்கள். இப்பேர்ப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு என் பாவச்சுமையோடே உங்கள் பாத சன்னிதானத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து பிரார்த்திக்கிறேன்.

இரக்கமுள்ள சேசுவின் திரு இருதயமே! அமலோற்பவ கன்னிமாதாவின் திரு இருதயமே! ஓ! மகிமைப் பிரதாபம் பொருந்திய அர்ச். சூசையப்பரே, அடியேனுடைய மன்றாட்டுக்களை பிறக்கணியாமல் தயவாய்க் கேட்டுத் தந்தருளுங்கள். ஆமென்சேசு.

பற்பல பத்தி விஷயங்கள்.

தமதிரித்துவ ஸ்தோத்திரம்.

தளங்களுக்குக் கர்த்தராகிய தேவன் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்: உம்முடைய மகிமை பூலோகமெங்கும் நிறைந்திருக்கின்றது. பிதாவுக்கு ஸ்தோத்திரம்—சுதனுக்கு ஸ்தோத்திரம் — இஸ்பிரீத்து சாந்துவுக்கு ஸ்தோத்திரம். (100-நாட் பலன்.)

சடுதி மரணத்தினின்று தற்காக்கப் படுகிறதற்கு செபம்.

ஓ! மிகவும் இரக்கம் நிறைந்த தயாபராகிய சேசுவே! தேவரீருடைய இரத்த வெயர்வையையும் மரண அவஸ்தையையும் சிலுவை மரணத்தையும் பார்த்து, நல்ல ஆயத்தமின்றி மரிக்கும் சடுதி மரணத்தினின்று என்னைத் தற்காத்து இரட்சிக்கவேணுமென்று உம்மை மன்றாடுகிறேன். நல்ல சேசுவே! தேவரீர் அனுபவித்த நிந்தை அவமான நோவு நிர்ப்பந்தமுள்ள கசையடிகளையும், முள்முடி வேதனைகளையும், பாரச்சிலுவையையும், துக்கசாகரப்பாடுகளையும் உமது

அளவற்ற நன்மைத்தனத்தையும் பார்த்து அடியேன் கடைசித் தேவதிரவிய அநுமானங்களைப் பெறுமுன், சடுதி மரணத்தால் என்னை அழைத்துக்கொள்ளாதேயும். சுவாமி, நல்ல ஆயத்தமில்லாதிருக்கும் வேளையில் இச்சீவியத்தினின்று என் உயிர் பிரியவொட்டாதேயும். ஓ! மிகவும் அன்புக்குரிய சேசுவே! என் ஆண்டவரே! என் சர்வேசுரா! பிரலாபத்துக்குரிய உமது சர்வாங்க வேதனைகளையும், காயங்களையும் பார்த்து,—"என் தேவனே! என் தேவனே! என்னைக் கைநெகிழ்ந்ததேது" என்று தேவரீர் சிலுவைமீதிருந்து உரைத்த கடைசி வாக்கியத்தைப்பார்த்து, "பிதாவே! உமது கரங்களில் என் ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேன்" என்று தேவரீர் உரைத்த பேரொலி வாக்கியத்தைப்பார்த்து, இப்பூலோகத்தினின்று என்னைச் சடுதியில் அழைத்துக்கொள்ளாதபடிக்கு உம்மை இரந்து மன்றாடுகிறேன். என் திவ்விய இரட்சகரே, அடியேன் உமது திருக்கரத்தின் சிருஷ்டியல்லவோ? என்னை முழுதும் சிருஷ்டித்து அமைத்தது தேவரீரல்லவோ? நான் நினையாத சமயத்திலும், நல்ல ஆயத்தமில்லாதிருக்கையிலும் என்னைச் சாகடியாதேயும் சுவாமி! தபசுசெய்ய எனக்கு நேரந் தந்தருளும், இவ்

வுலகில் நின்று நான் பரகதிக்குச் செல்லும் நேரம், பாக்கியமுள்ளதாயிருக்கச் செய்தருளும்; அங்கே அடியேன் என் முழு இருதயத்தோடே தேவரீரைச் சிநேகித்து நித்தியத்துக்கும் உம்மை வாழ்த்தி ஸ்துதித்துக் கொண்டிருப்பேன் சுவாமி. ஆமென்சேசு.

(தனியேல் ஜெற்றீகன்.)

மனவல்லயச் செபங்கள்.

1. சேசு, மரியே, சூசை! என் இருதயத்தையும் ஆத்தும சரீரத்தையும் உங்களுக்கு ஒப்புக்கொடுக்கிறேன்!

2. சேசு, மரியே, சூசை! என் கடைசி அவஸ்தையில் எனக்கு உதவி செய்தருளுங்கள்.

3. சேசு, மரியே, சூசை! உங்கள் பரிசுத்த ஐக்கியத்தில் மனச்சமாதானமாக என் ஆத்துமம் என் உடலைவிட்டுப் பிரியக்கடவது.

* இம்மூன்று மனவல்லயச் செபம் ஒவ்வொன்றுக்கும் நூறுநாட்பலன்.

ஆண்டவரைநோக்கி நம்பிக்கைப் பிரகரணம்.

இனியநேச பராமரிப்புள்ள என் ஆண்டவரே! உமது கரங்களில் என் புத்தி மனதை முழுதும் ஒப்புக்கொடுக்கிறேன். எனது பயம் „அவநம்பிக்கையையும், என் மன

இஷ்ட வெறுப்பையும், அநித்திய நித்திய நம்பிக்கை நாட்டங்களையும் உமக்கே கையளித்து விடுகிறேன். அழியும் உடலுக்குரிய அவசரங்களையும், அழியாத ஆத்துமத்தின் உச்சித நன்மைக் கவலைகளையும் தேவரீருக்கே ஒப்புக்கொடுக்கிறேன். தேவரீருடைய அடைக்கலத்தினின்று நான் நீங்காதிருக்குமளவும், என் க்ஷேம லாபங்களைப்பற்றி நான் எவ்வளவேனும் அஞ்சிச் சஞ்சலப்படுவேனல்ல.

என் பாவங்கள் எண்ணிறந்ததாயினும், என் நிற்பாக்கியம் வாக்குக்கெட்டாததாயினும், என் ஆத்தும தரித்திரம் மட்டற்றதாயினும், உமது பேரில் எனக்குள்ள நம்பிக்கை அவைகளிலும் அணைகடந்ததாம். இந்த நம்பிக்கையானது எனக்குள்ள பலவீனத்தைப் பார்க்கிலும், இக்கட்டிடைஞ்சல்களைப்பார்க்கிலும், இன்னம் மரணத்தைப் பார்க்கிலும் அளவில் அதிகமுமாய்ப் பலமுள்ளதுமாய் இருக்கின்றது. ஆண்டவரே! தந்திரசோதனைகள் வெள்ளம்போல் பெருகி என்மேல் வந்து விழுந்தாலும் உம்மையே நம்புவேன். என் துர்ப்பல மிகுதியால் நான் விழுந்து நொறுங்கி மடிந்தாலும் உம்மையே நம்புவேன். நன்னெறிவழுவி என் பிரதிக்கினைகளை நான் எவ்வளவாக மீறி

நடந்தாலும் கடைசியாய் அவைகளை அனு
சரிப்பதற்குரிய வரப்பிரசாதங்களையுடைய
உம்மை நோக்கியே நம்பிக்கையோடே
பிரார்த்திப்பேன். சுவாமி! தேவரீர் என்-
னைக் கொன்றபோதிலும் உம்மையே நம்பு
வேன். ஏனெனில் என் சர்வேசுரனும் என்
தந்தையும் என் இரட்சணிய ஊன்றுகோ
லும் நீரல்லவோ? உருக்க நேசம் அமைந்த
கருணாகரக்கடவுள் நீரல்லவோ? அடியேன்
தேவரீருடைய பட்சபரிதாப இரக்கத்துக்
குரிய பிள்ளையல்லவோ? சுவாமி! உமது
திருக்கரங்களில் என்னை ஒப்புடைத்து உமது
அன்புள்ள ஆசீர்வாதத்தை இரந்து மன்றாடு
கிறேன். தேவரீர்பேரில் நம்பிக்கை வைத்
திருக்கிற அடியேனை மோசம்போகவொட்
டாதேயும், சுவாமி.

ஆமென் சேசு.

(வணக்கத்துக்குரிய தெலா கொலம்பியேர்.)

மனவல்லயச் செபம்.

.. மகா நீதியும் உந்நதமும் சிநேகத்துக்குரிய
துமான தேவ திருவுளம், சகலத்திலும் நிறை
வேறிச் சதாகாலமும் புகழ்ச்சியும் மேன்மை
யும் பெறக்கடவதாக! (100 நாட் பலன்.)

அர்ச். மிக்கேல் சம்மனசானவரை நோக்கிச் செபம்.

வானுலகச்சேனைத்தளங்களின் அதிபதி
யே! சதாஜீவ அரூபிகளில் மகிமைப்பிரதா

பநிறைந்த சம்மனசானவரே! அவர்களிலும்
உத்தமமானவரே! உன்னத கடவுளின் மந்
திராலோசனை நிர்ணயப் பெட்டகமே!
தேவசிம்மாசனத்தருகேநிற்கப்பேறுபெற்ற
பிரபுவே! தேவகட்டளைப்படியே பரலோ
கவாசலைத் திறக்கவும் பூட்டவும் அதிகார
முடைய வானவனே! தேவநீதி சிம்மாசனத்
தண்டையில் எங்கள் ஆத்துமங்களைச் சேர்ப்
பிக்கும் தூதாதி தூதனே! மரண அவஸ்தை
ப்படுகிறவர்களுக்கு உதவிசெய்யத் தீவிரித்
தோடிவரும் உபகாரியே! மரித்தவர்களின்
ஆத்துமங்களை அழைத்துக்கொண்டுபோய்
திவ்வியகர்த்தரின் சந்நிதியில் சேர்க்கும்
காவலனே! பலவீனனும் நிர்ப்பாக்கியனு
மாகிய அடியேனைக் கிருபாகடாட்சமாய்ப்
பார்த்து, என் சீவியகால முற்றிலும், விசே
ஷமாய் என் மரணத்தறுவாயிலும், எனக்கு
உமது தயைநேச உதவி புரிந்தருளவேணு
மென்று உம்மை மன்றாடுகிறேன்.

ஆமென் சேசு.

மனவல்லயச் செபம்.

அதிதூதரான அர்ச். மிக்கேல் சம்மன
சானவரே! பயங்கரமான தீர்வைநாளில்
நாங்கள் மோசம்போகாதபடிக்கு எங்கள்

ஞானயுத்தத்தில் எங்களைத் தற்காத்தருளும். ஆமென் சேசு. (100 நாட் பலன்.)

காவல் சம்மனசை நோக்கிச் செபம்

அதிமிக பிரமாணிக்கம் அமைந்த காவலனே! அடியேனுக்குப் பிரியாத துணைவராக சர்வேசுரனால் நியமிக்கப்பட்டு, எப்போதும் என்னண்டையிலிருந்து என்னை ஆண்டு நடத்திவரும் சம்மனசானவரே! உமது நேச பராமரிப்புக்கும் தேவரீர் எனக்குச் செய்துவரும் நன்மை உபகாரங்களுக்கும் நான் என்ன பிரதிநன்றி செலுத்தப்போகிறேன்! ஏனெனில் நித்திரை வேளையில் என்கிட்ட விழித்திருந்து என்னைக் காப்பாற்றிவருகிறீர். துக்க துயரத்தில் எனக்கு ஆறுதல் வருவிக்கிறீர். நான் இடறிவிழுகையில் என்னைக் கைதூக்குகிறீர். என்மேல் விழவரும் ஆபத்துகளை விலக்குகிறீர். எனக்கு இனி வரவிருக்கும் துன்பதுரிதங்களைத் தாங்க பலன் தந்து என்னை ஆயத்தப்படுத்துகிறீர். என் பாவங்களின் நிமித்தம் நான் அனந்தமுறை விழவேண்டியிருந்த நரகாக்கினையினின்று என்னை மீட்டிரட்சித்தீர். நன்மைசெய்ய என் மனதைத் தூண்டி, தவமுயல என் மனதை இளக்கி ஆண்டவருடைய ஐக்கிய உற

வுக்கு என்னை உரித்தாளியாக்குகிறீர். இன்னம் என்மேல் வரவிருந்த தேவ கோபத்தை உமது மன்றாட்டினால் அகற்றாதிருந்தால், ஐயோ! இதற்கு முன்னே நரகபாதாளத்திலே விழுந்திருப்பேன். அன்புக்குரிய சம்மனசானவரே! அடியேனுக்கு நேரிடும் இன்பதுன்பங்களைச் சீர்ப்படுத்தி என்னை ஆண்டு நடத்தியருளும். பேயின் தந்திர சோதனைகளுக்கு நான் இரையாய்ப்போகாதபடிக்கு என்னைத் தற்காத்தருளும். என் செபதபங்களையும் நற்கிரிகைகளையும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து, புண்ணியவழியில் எனக்கு நிலைமைவரம் கிடைக்கச் செய்தருளும். கடைசியாய் என் இரட்சகருடைய நேச ஐக்கியத்தில் மரித்து நித்திய பேரின்பத்தில் சேரத்தக்கதாக எனக்காக பிரார்த்தித்தருளும். ஆமென் சேசு.

மனவல்லயச் செபம்.

எனக்கு காவலாயிருக்கிற சர்வேசுரனுடைய சம்மனசானவரே, தெய்வீக கிருபையால் உம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட எனக்கு ஞான வெளிச்சங்கொடுத்து என்னைக் காத்து நடத்தி ஆண்டருளும். ஆமென் சேசு.

(100 நாட் பலன்.)

அர்ச். இஞ்ஞாசியாரை நோக்கிச் செபம்.

தேவ ஸ்தோத்திரத்தை இப்பூவுலகில் பரம்பச் செய்வதற்கும், எண்ணிக்கையில்லாத ஆத்துமங்களைப் பரகதியில் சேர்ப்பதற்கும் சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்ட அர்ச். இஞ்ஞாசியாரே, அடியேன் எவ்வளவு அபாத்திரவானாயினும், தேவரீர் பேரிலுள்ள நம்பிக்கையாலும் உமது பேறுபலன்களின் மேன்மையாலும் உமது செல்வாக்கு வல்லபத்தாலும் ஏவப்பட்டு, உமது சரணமாய் ஓடிவந்தேன். தேவரீர் என் பரிபாலனக் காவலனாயிருந்து என் ஆத்துமத்தைப் பாதுகாத்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறேன். ஏனெனில் என் ஜீவனை உமக்கே கையளிக்கிறேன். என் மரணகாலத்தையும் உமக்கே ஒப்படைத்து விடுகிறேன். சோதனை வேளையில் எனக்கு ஆதரவாயிரும். தேவ சன்னிதியில் என் மத்தியஸ்தராயிருந்து மனுப்பேசி என் குறைகளைப் போக்கியருளும். விசேஷமாய் என் கிரியைகளையெல்லாம் அர்ச்சித்துப் பேறுபலனுள்ளதாக்கி நித்திய மோக்ஷ சம்பாவனையை நிச்சயப்படுத்தும் சக்தியுடையதாகிய உத்தம தேவசிநேகத்தை எனக்காகக் கேட்டுத் தந்தருளும். ஆமென் சேசு.

அர்ச். ஸ்தனிஸ்லாசை நோக்கிச் செபம்.

எனது பாதுகாவலரும் பரிபாலரும் பரிசுத்தவானவருமாகிய அர்ச். ஸ்தனிஸ்லாசே! உமக்குத் தந்தருளப்பட்டிருந்த கற்பென்னும் விசேஷ வரத்துக்காகவும், எப்போதும் நீர் காத்து அனுசரித்துவந்த இருதய பரிசுத்ததனத்துக்காகவும் சர்வேசுரனுக்கு நான் நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகிறேன். அசுசியான எவ்வித சோதனையையும் நான் ஜெயித்துத் தள்ளுதற்குப் போதுமான வரப்பிரசாதத்தை எனக்காகக் கேட்டுத் தந்தருள உம்மை மிகவும் மன்றாடுகிறேன். நான் தேவசமுகத்துக்கு உகந்தவனாகவும் தேவ தாயாருக்குப் பிரியமுள்ளவனாகவும் இருக்கும்படிக்கு ஆத்தும சரீர பரிசுத்ததனமே ஏதுவாகையால், அப்புண்ணியத்தை எள்ளளவும் பழுதின்றி நான் எப்போதும் எச்சரிக்கையோடே காப்பாற்றிக்கொண்டுவர எனக்கு நல்ல ஏவுதல் வரப்பிரசாதத்தைத் தந்தருளும். ஆமென் சேசு.

அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பரை நோக்கிச் செபம்.

எனது பரிசுத்த காவலனாகிய அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பரே! இதோ! உமது திருப்

பாதத்தண்டையில் சாஷ்டாங்கமாக விழுந்து கிடக்கும் அடியேனைக் கிருபாகடாட்சமாய் நோக்கியருளும். இன்று உம்மை என் பாதுகாவலராகவும் அடைக்கலமாகவும் தெரிந்துகொண்டு, என்றென்றைக்கும் என்னை முழுதும் உமது பராமரிப்பில் வைத்துவிடுகிறேன். உமது அடைக்கலத்தில் என்னைத் தயவாய்க் கையேற்றுக்கொண்டு, பேயின் சகல தந்திரங்களிலும், விசேஷமாய் அனுபவமற்ற என் இளம் பிராயத்தின்மேல் வந்து விழுஞ் சோதனை ஆபத்துகளிலும் என்னைத் தற்காத்தருளும். எனது கற்பை முழுதும் உமது திருக்கரங்களில் ஒப்படைத்துவிடுகிறேன். இந்தப் பரிசுத்ததனத்துக்கு விரோதமாய் நான் ஒருபோதும் நடக்கவொட்டாதேயும். என் ஆத்துமத்தைக் கெடுக்கத் தேடுகிற கெட்ட தோழருடைய சகவாசத்தை முழுதும் வெறுத்துத் தள்ளவும், உம்மைப்போலே எப்போதும் பரிசுத்த கற்புள்ளவனாய்ச் ஜீவிக்கவும் போதுமான மனத்திடனை எனக்காகக் கேட்டுத் தந்தருளும். என் படிப்புகளில் எனக்கு ஒத்தாசைசெய்து, என் ஜீவிய அந்தஸ்தைத் தெரிந்துகொள்ள வழி காண்பித்தருளும். என் ஜீவிய காலத்திலும் விசேஷமாய் என் மரணத்தறுவாயிலும் எனக்கு நேரிடும் இக்கட்டு இடை

ஞ்சல்களில் என்னைக் கைதூக்கி நடத்தியருளும். பரிசுத்த காவலனே! உம்மைப்போலே தேவமாதாவின்பேரில் உருக்க நேச பத்தியுள்ளவனாகி அந்த ஆண்டவளுக்கு உகந்த பிள்ளையாய் நடந்து பரகதியில் அவளுடைய புகழ்ச்சியை நான் பாடி ஸ்துதிக்கப் பேறுபெற்றவனாகும்படிக்கு எனக்காக வேண்டிக்கொள்ளும். ஆமென்சேசு.

அர்ச். ஞானப்பிரகாசியாரை நோக்கிச் செபம்.

அர்ச். ஞானப்பிரகாசியாரே! நீர் பிரதாபி
த்திருக்கிற மோட்சத்தை நோக்கி நான் உம்
மை வாழ்த்தி ஸ்துதிக்க ஆண்டவரை இரந்து
வரந்தந்தருளும். நீர் செய்த புண்ணியக்
கிருத்தியங்களுக்கு நீதிப்படியே நித்திய
மகிமைப் பிரதாபத்தை உமக்கு கட்டளை
யிட்ட அர்ச். தமதிரித்துவத்துக்கு சதா
காலம் ஸ்துதியும் தோத்திரமும் உண்டாகக்
கடவது. இத்தனை ஒட்டோலக பிரதாபத்

துடனே மேலான பேரின்ப வீட்டிலே வீற்
றிருந்து வாழ்கிற நீர் ஞானக் காரியங்களி
லே அறிவீனனாகிய அடியேனை உமது கடைக்
கண்ணால் நோக்கியருளவேணுமென்று உம்
மை மன்றாடுகிறேன். இப்பொழுது நீர் உல
கத்திலுள்ள மனிதருடைய ஆத்தும சரீரத்
துக்கு வேண்டிய சகல சகாயமும் செய்யப்
பேறுபெற்றவராகக்கொள்ள, அடியேன்
உம்மைப் பத்தியுடன் மன்றாடுகிறதென்ன
வென்றால்: உமது தயவான மன்றாட்டால்
என் ஆயுசுபரியந்தம் உம்மைக் கண்டுபாவி
த்து நடக்கச் சர்வேசுரனுடைய அனுக்கிர
கங் கிடைக்கும்படி செய்தருளவேணு
மென்று உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளு
கிறேன். அதுவே எனக்குப் போதும்.
இந்த உலகத்தில் உம்மைக் கண்டுபாவித்து
நடப்பேனாகில் சந்தேகமின்றி காலாகாலத்
துக்கும் உம்மோடுகூட மோட்சத்தில் வாழ்
ந்திருப்பேன். இந்தப் பாக்கியம் எனக்குக்
கிடைப்பதாக. ஆமென் சேசு.

அர்ச். ஞானப்பிரகாசியாரை நோக்கிச் செபம்.

சம்மனசுகளின் சுகிர்த லட்சணம் தங்
கிய அர்ச். ஞானப்பிரகாசியாரே! அபாத்திர
ஊழியனாகிய அடியேனுடைய ஆத்தும சரீர
பரிசுத்த கற்பை விசேஷித்த வகையாய்த்
தேவரீருக்கு நான் ஒப்புக்கொடுக்கிறேன்.
வானவர்களுக்குரிய உமது பரிசுத்ததனத்
தை நான் கண்டுபாவித்து, எவ்வித பாவ
மாசுமின்றிச் சீவிக்கத்தக்கதாக மாசில்லாத
செம்மறிப்புருவையாகிய திவ்விய கர்த்தருக்
கும், கன்னியர்க்கு அரசியான பரிசுத்த கன்
னிமாதாவுக்கும் என்னை ஒப்புக்கொடுக்கக்
கிருபைசெய்தருளும். பரிசுத்ததனத்துக்கு
விரோதமான எவ்வித மாசுமறுவினாலும்
என் ஆத்துமம் கெட்டுப்போகாதபடிக்கு
தேவரீர் உதவிசெய்தருளும். பேயின் தந்
திரங்களிலாவது பாவத்தருணங்களிலாவது
நான் அகப்பட்டிருப்பதைத் தேவரீர் கா
ணும்போது, அசுசியான சகல ஆசை தோற்
றங்களையும் என் இருதயத்தினின்று வில
க்கி அகற்றியருளும். சிலுவையில் மரித்த
திவ்விய கர்த்தரையும், நித்திய பயங்கரத்
தையும், எனக்கு நினைப்பூட்டி தேவ
பயத்தை ஏன் இருதயத்தில் ஸ்திரமாய்ப்

பதியச் செய்தருளும். இப்படியாய் தேவ
சிநேகப் பற்றுதலோடே நான் பூலோகத்
தில் தேவரீரைக் கண்டுபாவித்து, பரகதி
யில் திவ்விய கர்த்தரின் பிரத்தியக்ஷ தரி
சனத்துக்கு என்னைப் பேறுபெற்றவனாகப்
பண்ணியருளும், காவலனே! ஆமென்சேசு.

பேர்கொண்ட அர்ச்சியசிஷ்டவரை நோக்கிச் செபம்.

நான் பேர்கொண்டிருக்கிற அர்ச்சியசிஷ்
டவரே!...உமது அடைக்கலத்தில் என்னை
ஒப்படைத்துவிடுகிறேன். எனக்கு இடப்
பட்டிருக்கும் திரு நாமதேயத்துக்கொத்த
சுகிர்த நடக்கையுள்ளவனாய்ச் சீவிக்கவும்,
உம்மிடத்தில் விசேஷமாய் விளங்கிய புண்
ணியங்களை நான் அநுசரிக்கவும், எனக்குத்
தேவகிருபை வரப்பிரசாதம் கிடைக்கத்தக்க
தாகப் பெலமாய் மனுப்பேசியருளும். என்
சீவியகாலத்தில் எனக்கு நேரிடும் ஆபத்துக்
களில் நின்று என்னைத் தற்காத்துப் பயங்
கரமான மரணவேளையில் என்னைக் கைவிடா
மல் பாதுகாத்தருளும் காவலனே! ஆமென்
சேசு.

அர்ச். பிராஞ்சீஸ்கு சவேரியாரைக்குறித்துக் கொண்டாடப்படும் அருள் நவநாள்.

முத். மாஸ்திரிலி சுவாமியார் மரண அபாயமான காயத்தால் வருத்தப்படும் வேளையில் அர்ச். பிராஞ்சீஸ்கு சவேரியார் அவருக்குக் காட்சிகொடுத்து அற்புதமாய் சொஸ்தப்படுத்தின பிறகு அவருக்குச் சொன்னதாவது: " மார்ச்சு மீ 4-உ முதல் 12-உ வரையிலும்

நம்மைக் குறித்து யாராகிலும் நவநாள் கொண்டாடி, பாவசங்கீர்த்தனம் பண்ணி, திவ்வியநற்கருணை வாங்கி, நமது மன்றாட்டின் உதவியை இரந்து பிரார்த்திப்பவர்கள் கேட்டுக்கொள்ளும் நன்மை வரப்பிரசாதங்கள் தேவசித்தத்துக்கு உகந்ததாயிருக்குமாகில் நிச்சயமாய் அவைகளைப் பெற்றுக்கொள்ளுவார்கள். ,, ஆகையால் அர்ச். அகுஸ்தீன், அர்ச். பெனார்து சொல்லுகிறபடியே நாம் இந்த நவநாளை மிகுந்த நம்பிக்கையோடே கொண்டாடத் துவக்கினால் நாம் கேட்கிற வரப்பிரசாதத்தையாவது அல்லது நமக்கு அதிக அவசரமான நன்மையையாவது சர்வேசுரன் கட்டளையிட்டருளுவார் என்பதற்குச் சந்தேகமில்லை.

தவறாது அநுகூலந்தரும் அர்ச். சவேரியாருடைய நவநாட் செபம்.

மிகுந்த நேசத்துக்குரியவரும் பிறர்சிநேகம் நிறைந்தவருமான அர்ச். சவேரியாரே! உம்மோடுகூட பயபத்தியோடு தேவப்பிரதாப மகத்துவத்தை ஆராதிக்கிறேன். சர்வேசுரன் உம்மை இவ்வுலகத்தில் விசேஷப் பிரதாப வரங்களாலும் மரணத்துக்குப் பிறகு நித்திய மாட்சிமையினாலும் அலங்கரித்தாரென்கிற நினைவு எனக்கு எவ்வளவோ

சந்தோஷத்தை வருவிக்கின்றது. அதற்காகச் சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய்து உமது வல்லபமுள்ள மன்றாட்டினால் எனக்கு மகா அவசியப் பிரசாதமாகிய பரிசுத்த தனத்தையும் அர்ச்சிக்கப்பட்ட மரணமென்கிற வரத்தையும் அடைந்தருளும்படி இரந்து கேட்கிறேன்.

சேசுக்கிறீஸ்துநாதரின் பெரிய அப்போஸ்தலராகிய அர்ச். சவேரியாரே, உம்முடைய ஆச்சரியத்துக்குரிய ஆதரவாகிய ஜெப அப்போஸ்தல சபை வளர்ந்தோங்கத் தயைசெய்தருளும். உமது ஆதரவை அடையவும், உமது ஆசை நிறைவேறவுந்தானே இந்த ஜெப அப்போஸ்தல சபைப் பந்தனம் ஸ்தாபிக்கப்பட்டது. இது உலகமெங்கும் பரம்பவும், அது செழித்தோங்கி வளர்ந்து, திரளான பலன்களைத் தந்து, சேசுநாதருடைய திரு இருதயத்துக்கும் அர்ச். கன்னிமரியாயின் மாசற்ற இருதயத்துக்கும் மகிமையுண்டாகி, மென்மேலும் அதிகரிக்கவும் தயைசெய்தருளும். [3-பா. 3-பிரி. 10-திரி.]

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரா சுவாமி, முத். அர்ச். சவேரியாருடைய ஞானபோதகத்தினாலும் அவா

பண்ணின அற்புதங்களினாலும் சிந்து தேசத்திலுள்ள ஜனங்களைத் தேவரீருடைய திருச்சபையிலே அழைத்துட்படுத்த சித்தமானீரே. அவருடைய புண்ணிய பலன்களைத் துதித்து வணங்குகிற நாங்கள் அவருடைய சுகிர்த மாதிரிகைகளை அநுசரிக்க அநுக்கிரகஞ் செய்தருளும். இந்த மன்றாட்டுகளையெல்லாம் சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளுஞ்சுவாமி. ஆமென்சேசு.

அஞ்ஞானிகள் மனந்திரும்புவதற்காக அர்ச். சவேரியார் உண்டாக்கின செபம்.

அநாதியுமாய்ச் சர்வத்தையும் படைத்தவருமாயிருக்கிற சர்வேசுரா! அஞ்ஞானிகளுடைய ஆத்துமங்கள் உம்மால் சிருஷ்டிக்கவும் தேவரீருடைய இலட்சணசாயலாக ஏற்படுத்தவும் பட்டிருக்கிறதை நினைத்தருளும் சுவாமி; இதோ! தேவரீருக்கு அவமானமாக அவர்களால் நரகம் நிறைந்துபோகின்றது. ஆ, சுவாமி! உம்முடைய திருக்குமாரனாகிய சேசுநாதர் அவர்களை இரட்சிக்க மகா கடின மரணத்தை அடைந்ததை நினைத்தருளும். ஆண்டவரே! தேவரீருடைய திருக்குமாரன் அஞ்ஞானிகளால் பிறக்கணிக்கப்படும்படி விடாமல், சகல அர்ச்சியசிஷ்டவர்களின் மன்றாட்டுகளினாலும், உம்முடைய மகா அர்ச்

சியசிஷ்ட குமாரனுக்குப் பத்தினியாகிய திருச்சபையின் வேண்டுதலினாலும், தேவரீர் சித்தமிரங்கி அவர்களுடைய அஞ்ஞானத்தையும் அவிசுவாசத்தையும் பாராமல், தேவரீரால் அனுப்பப்பட்டவரும் எங்கள் இரட்சணியமும் ஜீவியமும் உத்தானக்காரணமுமாகிய சேசுக்கிறீஸ்துநாதரை அவர்களும் ஒருநாள் வணங்கும்படி செய்தருளும். எங்களை மீட்டிரட்சித்த அந்தத் திவ்விய கர்த்தருக்கு அநவரதகாலமும் தோத்திரமுண்டாகக்கடவது. ஆமென்சேசு. (300-நாட் பலன்.)

பாவிகள் மனந்திரும்பச் செபிக்கும் செபம்.

அன்புக்குரிய இரட்சகரே! கல்நெஞ்சரான பாவிகள்பேரில் இரக்கமாயிரும். அவர்கள் உமது திருக் கரங்களின் சிருஷ்டிகளென்று நினைவு கூர்ந்தருளும். அவர்களை இரட்சிப்பதற்காகவே தேவரீர் முப்பத்துமூன்று வருஷகாலம் இப்பூவுலகில் எவ்வித துன்ப துரிதங்களையும் அநுபவித்தீர். கடைசித் துளிபரியந்தம் உமது திரு இரத்தமெல்லாஞ் சிந்தினீர். சிலுவையின் நிற்பந்த மரணத்திற்கும் உள்ளானீர். என் திவ்விய சேசுவே! அந்த ஆத்துமாக்களைத் தேவரீர் இரட்சிக்கக்கூடு

மான இக்காலத்தில் அவர்களைக் கைவிடாதேயும். அவர்களுடைய பாவ அக்கிரமங்கள் எவ்வளவு அகோரமானவைகளாயினும் உமது திரு இரத்தத்தால் சுத்திகரிக்கக்கூடாதது ஒன்றுமில்லையே. சுவாமி! அந்த நிர்ப்பாக்கியமான ஆத்துமாக்கள்பேரில் இரங்கி அவர்கள் இருதயத்தில் தேவரீர்தாமே பேசக் கிருபை புரிந்தருளும். அவர்களும் மனந்திரும்பி இரட்சணியம் அடைவார்கள் சுவாமி. ஆமென்சேசு.

நமது மன்றாட்டின் உதவியைக் கேட்டுக் கொண்ட சகலருக்காகவுஞ் சொல்லுஞ் செபம்.

(அர்ச். ஜெர்த்துருத்தம்மாள் செய்த செபம்.)

அன்புள்ள சேசுவே! தேவரீர் அளவற்ற கிருபைநேசப் பராமரிப்பாலல்லோ மனுக்குலத்தை மீட்பதற்காக பிதாவின் சமுகத்தைவிட்டு பூலோகத்தில் எழுந்தருளிவர திருவுளமானீர். அபாத்திரனாகிய என்னுடைய செபதப உதவியைக் கேட்டுக்கொண்டவர்களை எல்லோரையும் உமது திவ்விய நேசபராமரிப்புக்கே ஒப்புக்கொடுக்கிறேன். தேவரீர் சிலுவைமீதிருந்து மரித்தபோது பிதா

வாகிய சர்வேசுரனுடைய திருக்கரத்தில்
உமது ஆத்துமத்தை ஒப்புக்கொடுத்த நேர
த்தில் தேவரீரிடத்தில் விளங்கிய அன்பின்
ஐக்கியத்தோடு நான் ஒன்றித்து திரு இருத
யத்துக்கே ஒப்புக்கொடுக்கிறேன்; மனுஷ
ருடைய இரட்சணியத்துக்காக இத்தன்மை
யான இருதயத்தை எடுத்து அவதரிக்க உம்
மை உடன்படுத்தின வாக்குக்கெட்டாத நே
சத்தைப் பார்த்து நான் மன்றாடுவது என்ன
வென்றால், நான் யாருக்காக வேண்டிக்கொ
ள்ளுகிறேனோ, அவர்கள்பேரிலும், நான் யாரு
க்காக வேண்டிக்கொள்ளவேண்டியிருக்கு
மோ அவர்கள் எல்லோர்பேரிலும், உமது
திருக்கர ஆசீர்வாதம் தங்கி நீளித்திருக்கக்
கிருபை செய்தருளும். ஆமென்சேசு.

துன்பப்படும் வேளையிலே செபிக்கும் செபம்.

என் ஆத்துமமே! இன்றைக்குப் பொறு
மையாயிரு. தேவசித்தம்போல நாளைக்கு
வருகிறது வரும். அதுமட்டும் ஆண்டவரு
டைய சித்தத்தை நிறைவேற்றுவோமாக.
நேற்று என்பது கடந்துபோயிற்று. அதி
லிருந்த துன்பவருத்தங்களெல்லாம் ஓடி
ஒழிந்துபோயிற்று. அவைகளை நான் சர்
வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்திருப்பேனாகில்

அவைகளினால் உண்டாகிய பேறுபலன் அழி
யாதிருக்கும். இன்று எனக்கு வரும் துன்
பங்களை நான் பேறுபலனாக்கிக்கொள்ளு
வேன். இன்று என்பது ஒரே ஒரு நாள்
மாத்திரம், அதிகமில்லை. என் சர்வேசுரா!
ஒரே ஒரு நாளில் வரக்கூடிய துன்பதுரித
இளைப்பு, தவிப்பு, வருத்தங்களைத் தேவரீ
ருக்கு நான் ஒப்புக்கொடுப்பது பெரிதான
காரியமல்லவே. இன்று எனக்கு நேரிடுவ
தெல்லாம் உமது சிநேகத்துக்காகவே நான்
அனுபவிக்கக்கடவேனாக. தேவரீர் எனக்
குச் செய்த நன்மை உபகாரங்களுக்கு நன்றி
யறிதலாக, சேசுவின் திரு இருதயத்தின்
வழியாய் தேவரீருக்கு அவைகளையெல்லாம்
ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி. ஆமென்சேசு.

கொள்ளைநோய் அகல பிரார்த்திக்குஞ் செபங்கள்.

தேவமாதாவை நோக்கி வேண்டிக்கொள்ளுஞ் செபம்.

போர்த்துக்கல் தேசத்திலுள்ள கோயிம்
பிரா நகரத்தில் கொடிய கொள்ளைநோய்
பரம்பினபோது, அர்ச். கிளாரம்மாள் மடத்

தக்கன்னியாஸ்திரிமார் இந்தச் செபங்களைச் செபித்து ஒப்புக்கொடுக்கவே, அந்த விஷநோய் உடனே நீங்கிப்போயிற்று. இதன்றியே அந்தத் தொத்துநோயானது இச்சுகிர்த செபத்தால் அநேக இடங்களில் முழுதும் அகன்று மறைந்துபோனதென்று அறிவோம்.

I. பரலோக நட்சத்திரம்.

நமது ஆதித்தாய் தந்தையரின் பாவத்தால் பூலோகத்துக்கு வந்த மரணமென்னுங் கொள்ளை நோயானது, உலக இரட்சகருக்கு அமுதூட்டி வளர்த்த பரலோக நட்சத்திரத்தால் அகற்றிவிடப்பட்டது. ஒளிதங்கிய இந்த நட்சத்திரமானது தோஷ தாரகைகளின் அக்கினியைத் தயவாய் அவிக்கக்கடவதாக! ஏனெனில் பேய்த் தாரகைகளின் காலத்தால் மனுக்குலத்துக்கு மரணமென்னுங் காயம் உண்டாகி அவர்கள் முழுதும் சங்காரமானார்களே.

ஓ! மிகுந்த மனோபத்திக்குரிய சமுத்திரத்தின் நட்சத்திரமே! கொள்ளை நோயினின்று எங்களைத் தற்காத்தருளும். ஆண்டவளே, உமது திருக்குமாரன் உமது மன்றாட்டைக் கேட்டு உம்மை மகிமைப்படுத்துகிறபடியால், எங்கள் வேண்டுதலைக் கேட்டரு

ளும். ஆண்டவரே, உமது திருத்தாயார் எங்களுக்காக மன்றாடுவதைப் பார்த்து, எங்கள்பேரில் இரங்கி எங்களைக் கைதூக்கி இரட்சியும்.

மு.—நாங்கள் சேசுக்கிறீஸ்துவின் வாக்குத்தத்தங்களுக்குப் பாத்திரவான்களாகத் தக்கதாக.

து.—சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

இரக்க மிகுந்த சர்வேசுரா! கிருபா சமுத்திரமாகிய ஆண்டவரே! உமது திருப்பிரசைகள் பட்ட துன்பத்துக்கு இரங்கி அவர்களை வாதித்த தேவதூதனை நோக்கி, "உன் கரத்தை நிறுத்து" என்று திருவுளம்பற்றினீரே! மகிமையிலங்கிய நட்சத்திரமாகிய திவ்விய தாயின் நேசத்தைப் பார்த்து, அந்த ஆண்டவளின் திருக்கொங்கைப்பாலை எங்கள் பாவதோஷங்களுக்கு எதிர் அவுழ்தமாகத் தேவரீர் உட்கொள்ளத் திருவுளமான தயவைப் பார்த்து, எவ்விதக் கொள்ளைநோயினின்றும் சடுதி மரணத்தினின்றும் எங்களை இரட்சிக்கக் கிருபைசெய்தருளும். சதாகாலம் சீவியருமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்கிற மகிமையின் அரசனாகிய

ஆண்டவரே! நித்திய நரக ஆக்கினையிலே நின்று எங்களைத் தற்காத்து இரட்சியும் சுவாமி.

ஆமென் சேசு.

11. அர்ச். ஆரோக்கியநாதரைப் பார்த்து வேண்டிக்கொள்ளும் செபம்.

அர்ச். ஆரோக்கியநாதரே! வியாதிஸ்தரைச் சொஸ்தப்படுத்தத்தக்கதாக கொள்ளைநோய் பரம்பியிருந்த ஊர்களுக்குத் தேவரீர் தேவசிநேக உற்சாகத்தால் வருந்திப் பிரயாணஞ்செய்தீர். உமக்கே அந்த வியாதி நேரிட்டவிடத்தில் உமது நம்பிக்கைத் தோழனாயிருந்த துஷ்ட மிருகத்தால் தேற்றரவு அடைந்தீர். இத்துன்பகாலத்தில் தேவரீர் எங்கள்பேரில் இரங்கி எங்களுக்காக மன்றாடி உதவிபுரிந்தருளும். இப்போது எங்கள்மேல் வந்திருக்கும் இந்தப் பயங்கரமான தேவ கோபாக்கினையை முழுதும் அகற்ற, இரக்கமுள்ள திவ்விய இரட்சகரிடத்தில் எங்களுக்காக மனுப்பேசியருளும். நிற்பாக்கியமான கொள்ளை நோய் பரம்பின இருண்ட ஸ்தலங்களில் தேவரீர் ஐந்து வருஷ காலம் ஜீவித்த சுகிர்தத்தாலல்லா, கொள்ளை நோய்களைச் சொஸ்தப்படுத்த அற்புத வரம் அடைந்தீர். "அர்ச். ஆரோக்கியநாத

ருடைய சலுகையை இரந்து மன்றாடுகிற நோயாளிகள் யாவரும் அந்தக் கொடிய வியாதியினின்று சொஸ்தமடைவார்கள்" என்ற வாசக வாக்குறுதியடங்கிய சீட்டை ஒரு சம்மனசானவர் கொண்டுவந்து உமது திருப்பிரேதத்தின்மேல் வைத்ததைத் தேவரீர் தயவாய் நினைவுகூர்ந்தருளும்.

ஓ! இரக்க மிகுந்த அர்ச்சியசிஷ்டவரே! முழுமன நம்பிக்கையோடே நாங்கள் உமது சரணமாக ஓடிவந்தோம். எங்களைக் கைவிடாதேயும், காவலரே! ஆமென் சேசு.

மு.—நாங்கள் சேசுக்கிறீஸ்துவின் வாக்குத்தத்தங்களுக்குப் பாத்திரவான்களாகத் தக்கதாக.

து.—அர்ச். ஆரோக்கியநாதரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுராசுவாமி! அர்ச். ஆரோக்கியநாதருடைய உதவியையிரந்து மன்றாடுகிற யாவரும் கொள்ளை நோய் முதலிய கொடிய வியாதிகளால் எவ்வளவேனும் பயப்பட வேண்டியதில்லையென்று ஒரு சம்மனசுவினால் அந்த அர்ச்சியசிஷ்டவருக்குத்தானே தெரியப்படுத்தத் திருவுளமானீரே.

அந்த அர்ச்சியசிஷ்டவருடைய சுகிர்த மன்றாட்டினாலே ஆத்தும சரீர சகல ஆபத்துக்களினின்று நாங்கள் இரட்சிக்கப்படும் பொருட்டுக் கிருபை புரிந்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு முகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும்.

ஆமென்சேசு.

கொள்ளைநோய் அல்லது விஷபேதிகாலத்தில் செபிக்கும் செபம்.

மகிமைப் பிரதாபம் பொருந்திய அர்ச். ஆரோக்கியநாதரே! கொள்ளைநோய் விஷபேதி முதலிய கொடிய ஆக்கினைகள் எங்கள் மேல் வராதபடிக்கு, இரக்கமிகுந்த தேவ சிம்மாசனத்துக்கு முன்பாக உமது செல்வாக்குள்ள மன்றாட்டுக்களால் மனுப்பேசக் கிருபை புரிந்தருளும்.

எங்களுக்கு நேரிடும் சரீரத்துக்கடுத்த சகல தொத்துநோய்களையும், விசேஷமாய் எங்கள் ஆத்துமத்துக்கு வரக்கூடிய எவ்வித மோசமான வியாதிகளையும் விலக்கி, எங்களை ஆதரித்து நடத்தவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்சேசு.

விஷபேதியகல அர்ச். லோயோலா இஞ்ஞாசியாரை நோக்கிச் செபம்.

மாட்சிமைதங்கிய பிதாப்பிதாவாகிய அர்ச். இஞ்ஞாசியாரே! பாவத்துக்கு ஆக்கினையாகச் சர்வேசுரன் மனிதருக்கு விதிக்கிற தண்டனைகளில் ஒன்றாகிய மரண அபாய விஷபேதியினின்றும், விசேஷமாய் ஆத்துமத்துக்குக் கொடிய பொல்லாப்பான பாவத்தினின்றும் எங்களை மீட்டிரட்சிக்கத் தேவ சன்னிதியில் மனுப்பேசக் கிருபைபுரிந்தருளும். நாங்கள் உமது புண்ணிய மாதிரிகையைப் பின்சென்று சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்காகவும், பிறருடைய ஆத்தும இரட்சணியத்துக்காகவும், வருந்தி உழைக்க ஸ்திரமான ஆசைப்பற்றுதலை எங்களுக்குத் தந்தருளும். கடைசியாய் நேச சேசுக்கிறீஸ்துவின் திரு இருதயமானது எங்கள் பேரில் இரங்கி, சகலத்துக்கும் சுபமுடியாபரணமான சுகிர்த நிலைமை வரத்தையும், மோக்ஷானந்தத்தையும் எங்களுக்குக் கட்டளையிட்டருளத் தேவரீர் தாமே பிரார்த்திக்கவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்சேசு. (200 நாட் பலன்.)

உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்கள்பேரில் பத்திவிபரம்.

உத்தரிக்கிறஸ்தலத்திலுள்ள ஆத்துமாக்கள் படும் வேதனையைச் சர்வேசுரன் குறைக்கவும், மோக்ஷபாக்கியத்தில் அவர்களைச் சீக்கிரம் சேர்க்கவும் அவர்களுக்காக வேண்டிக்கொள்வது, ஆண்டவருக்கு மிகவும் பிரியமுமாய், நமக்கு மிகவும் பேறுபலனுள்ளதுமாய் இருக்கிறதென்று அர்ச். அல்போன்ஸ் என்பவர் வசனித்திருக்கிறார்.

ஏனெனில் அந்தப் புண்ணியாத்துமாக்கள் ஆண்டவருக்கு மிகவும் பிரியமுள்ளவர்களாயிருப்பதுமன்றி, தங்களுடைய வேதனை தீரவும் அல்லது குறையவும் உதவிசெய்கிறவர்கள்மட்டில் மிகவும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள். அந்த ஆத்துமங்கள் நமக்காக வேண்டிக்கொள்ளும்பொருட்டு, நாம் அவர்களுக்காக வேண்டிக்கொள்வதைச் சர்வேசுரன் அவர்களுக்குத் தெரிவிக்கிறாரென்பது சாதாரணமாய் விசுவாசிகளுக்குள் வழங்கிவரும் சத்திய விசேஷமாம். இந்த ஆத்துமங்கள் தங்கள் பாவங்களினிமித்தம் தண்டனைப்படுங் குற்றவாளி

களைப்போல இருக்கிறபடியால், அவர்கள் தங்களுக்காகத் தாங்களே பரிந்து பேசக்கூடாதென்பது மெய்யே. ஆகிலும் அவர்கள் சர்வேசுரனுக்குப் பிரியமுள்ளவர்களாகையால், நமக்காக அவர்கள் வேண்டிக்கொள்ளக் கூடும். அப்படியே அவர்கள் மன்றாட்டினாலே நமக்கு வேண்டிய நன்மை வரப்பிரசாதங்களை நாம் அடையவுங் கூடும். இந்த ஆத்துமங்கள் பேரில் பத்தியுள்ளவர்களுக்கு இவர்களுடைய வேண்டுதலினாலே கிடைத்த உதவி சகாயங்களுக்கு எண்ணிக்கையில்லை.

நமது மன்றாட்டுகளால் இந்த ஆத்துமங்களுக்குத் தேற்றரவு வருவிப்பது நீதி நியாயத்துக்கொத்த சுகிர்தமாயிருப்பதுமன்றியே, இது நமது கடமைதானென்று சொல்லலாம். ஏனெனில் பிறத்தியாருக்கு நமது உதவி அவசரமாயிருக்கும்போது நம்மாலியன்ற ஒத்தாசை செய்யவேணுமென்று சாங்கோபாங்க மார்க்கம் படிப்பிக்கின்றதாமே. இந்தப் புண்ணிய ஆத்துமாக்களுக்கல்லாதே வேறே யாருக்கு நமது உதவி அதிக அவசரம். இப்பூலோக நெருப்பைவிட அதிக அகோர வாதனை அமைந்த அந்த அக்கினியிலே இடைவிடாமல் அவர்கள் வேகிறார்கள்.

சர்வேசுரனுடைய பிரத்தியட்சதரிசனையை அனுபவிக்கக் கூடாதிருக்கிறார்களே, இதுவே எவ்வித வேதனைகளிலும் அவர்களுக்கு அகோர வேதனையாமே. நமது செபதப உதவிக்காகக் காத்துக்கொண்டிருக்கும் இந்த ஆத்துமங்களுக்குள் சிலவிசை நமது தாய், தந்தை, சகோதரர், சகோதரிகள் முதலிய உறவின்முறையார் இருக்கிறார்களென்றும், இந்த ஆத்துமாக்கள் தங்கள் பாவங்களினிமித்தம் கடன்காரருடைய ஸ்திதியிலிருப்பதால், தங்களுக்காக ஒன்றுஞ் செய்யக்கூடாதிருக்கிறார்களென்றும் நினைத்துக்கொள்வோமாக. இப்படிப்பட்ட ஆத்துமங்களுக்கு நாம் உதவிசெய்தால், சர்வேசுரனுக்குப் பிரியமுள்ளவர்களாகி மிகுந்த பேறுபலனைச் சம்பாதித்துக்கொள்வோம். கிறீஸ்துவர்களுடைய செபதபத்தால் உத்தரிக்கிற ஸ்தலத்தினின்று விடுதலையடைந்த ஆத்துமமானது மோக்ஷத்துக்குள் பிரவேசிக்கையில் சர்வேசுரனைப் பார்த்து, "சுவாமீ, இன்னார், இன்னார், தங்கள் செபதப தான தர்மத்தால் என் உத்தரிப்பு காலத்தைக் குறைத்து என்னை உத்தரிக்கிறஸ்தலத்தினின்றுமீட்டு, உமது பிரத்தியட்சத் தரிசனையின் பாக்கியத்தில் என்னைக் கொண்டுவந்து சேர்த்ததினால் அவர்களைத் தேவரீர் கைதூக்கி

இரட்சிக்கவேணும்" என்று தப்பாமல் பிரார்த்திக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

129-ம் சங்கீதம். சுவாமீ! பாதாளத்தில் ...மற்றதும் 450-ம் பக்கம் காண்க.

உத்தரிக்கிற ஸ்தலத்திலுள்ள ஆத்துமங்களுக்காகச் செபம்.

திவ்விய சேசுவே! உத்தரிக்கிற ஸ்தலத்தின் ஆத்துமங்கள் பேரில் இரக்கமாயிரும். தாவீதரசனின் புத்திரனாகிய சேசுவே! சிலுவைப் பாரத்தால் அதிகரித்த உமது திருக்காயங்களின் கொடிய வேதனைகளைப் பார்த்து, உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமங்கள்பேரில் இரக்கமாயிரும். சுவாமீ! தேவரீர் அன்று சிலுவைப் பீடத்தில் பலியாகும் நேரம் பச்சாத்தாபக் கள்ளனுக்குக் கிருபை புரிந்ததுபோல, இந்த ஆத்துமங்கள்பேரில் இரக்கமாயிருந்து அவர்களை உமது பிரத்தியட்சத் தரிசனையின் பாக்கியத்தில் சேர்ந்தருளும்.

அங்கே சகல அர்ச்சியசிஷ்டவர்களோடேயும் சம்மனசுக்களோடேயும் அவர்கள் சதாகாலமும் தேவரீரை வாழ்த்தி ஸ்துதித்துக்கொண்டிருப்பார்கள். ஆமென்சேசு.

உந்நதத்தில் வீற்றிருக்கும் பிதாவே! உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படும்

ஆத்துமங்களுக்காக, திவ்விய சேசுக்கிறீஸ்துவின் விலைமதியாத திரு இரத்தத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். சுவாமி! பரிசுத்தரே, சர்வவல்லப பரிசுத்தரே, அட்சயரான பரிசுத்தரே, சுவாமீ! எங்கள்மேல் இரக்கமாயிரும். பாவிகளுக்குப் பொறுத்தலைத் தந்தருளும். மரித்த சகல விசுவாசிகளுக்கும் நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும்.

ஆமென் சேசு.

(நாள் 1-க்கு 300 நாட் மலன்.)

உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமங்களின் நன்மைக்காக செய்யப்படும் நேச வீரத்துவ முயற்சி.

நமது அனுதினக் கிரிகைகளைச் செய்வதால் நமது சீவிய காலத்தில் நாம் அடையக்கூடிய பேறுபலன்களையும், நமது மரணத்துக்குப்பின் நமக்காக ஒப்புக்கொடுக்கப்படும் சுகிர்த கிருத்தியங்களையும், உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமங்களுக்காக முழுமனதோடே கொடுத்துவிடும் காணிக்கைதான் இந்த வீரத்துவ முயற்சியென்று சொல்லப்படும். நமது பரிசுத்த தாயார் தமது சித்தம்போலே அந்த ஆத்துமங்களின் ஆறுதலுக்கு அல்லது மீட்புக்கு உதவத்தக்க பிரகாரமாய் அந்தப் பலன்களைச் செலவிடும்

பொருட்டு அந்த ஆண்டவள் கையிலே இந்தக் காணிக்கையை ஒப்புக்கொடுத்துவிடவேண்டும். நமக்காகவாகிலும், பிறத்தியாருக்காகவென்கிலும், நாம் நற்கிரிகைசெய்ய அல்லது வேண்டிக்கொள்ள, இதனால் யாதொரு விக்கினமும் நேரிடாது. நமது கிரிகைகள், செபதபங்கள், இவற்றின் பரிகாரப் பலன்களையெல்லாம் அர்ச். கன்னிமாதாவுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்துவிடுவதே இது விஷயத்தில் நாம் செய்யவேண்டிய கிருத்தியமாம். ஆகிலும் நாம் செய்யும் நற்கிரிகைகள் நமக்கு சர்வேசுரனிடத்திலிருந்து அடையக்கூடிய இஷ்டப்பிரசாதங்களும் அவற்றின் மன்றாட்டுப் பலனும் நமக்கே சொந்தமாயிருக்கும். 13-ம் ஆசீர்வாதேந்திரரும்; 6-ம், 9-ம் பத்திநாதர் என்னும் அர்ச். பாப்புமார்களும், இந்த வீரத்துவக் காணிக்கையை ஒப்புக்கொடுக்கிறவர்களுக்குத் திரளான பரிபூரண பலன்களைக் கட்டளையிட்டிருக்கிறார்கள். "பிறர்சிநேகத்தால் உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்கு நாம் கொடுப்பதெல்லாம், நமக்குத் தேவகிருபை வரப்பிரசாதங்களாக மாறிப்போவதுமன்றி, நமது மரணத்துக்குப் பிறகு அவைகள் நமக்கு நூறு மடங்கு பலனாகப் பெருகி அதிகரித்திருப்பதைக் காண்

போம்" என்று ஆர்ச். அமிர்தநாதர் வசனித்திருக்கிறார்.

இதற்காக அளிக்கப்பட்டிருக்கும் பலன்களாவன:

1. திவ்விய சற்பிரசாதம் உட்கொள்ளும் ஒவ்வொரு விசைக்கும் ஒரு பரிபூரண பலனுண்டு. இதை உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமங்களுக்காக மாத்திரம் செலுத்தத்தகும்.

2. இந்த ஆத்துமங்களுக்காகத் திங்கட்கிழமை பூசைகண்டு ஒப்புக்கொடுக்கிறவர்களுக்கு ஒவ்வொரு விசைக்கும் ஒரு பரிபூரண பலனுண்டு. அன்றையத்தினத்தில் திவ்விய நன்மை வாங்குவது அவசியமல்ல. விருத்தாப்பியர்கள், வியாதிஸ்தர், காவல்கைதிகள், பிரயாணிகள் முதலியவர்களும், தவிர்க்கமுடியாத விக்கினங்களினிமித்தம் திங்கட்கிழமை பூசை காணக்கூடாதவர்களும், ஞாயிற்றுக்கிழமைப் பூசை கண்டு ஒப்புக்கொடுத்தால் ஷை பலனைப் பெற்றுக்கொள்வார்கள்.

3. பொதுவாய் உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமங்களுக்குச் செலுத்தத்தகாத பூரண பலன்கள் இந்த வீரத்துவ முயற்சியைச் செய்யும் விசுவாசிகளுக்கும் செல்லாகும்

காணிக்கைச் செபம்.

மிகவும் பரிசுத்த கன்னிமரியாயே! உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமங்கள்பேரில் இரக்க மிகுந்த தேற்றரவுமாதாவே! அடியேன் இதோ உமது திருப்பாதத்தண்டையில் சாஷ்டாங்கமாக விழுந்து பிரார்த்தித்து ஒப்புக்கொடுக்கும் காணிக்கை என்னவென்றால்:—என் அறுதினக் கிரியைகளினாலே நான் அடையக்கூடிய பூரணப் பேறுபலன்களையும், என் மரணத்துக்குப்பின் எனக்காக ஒப்புக்கொடுக்கப்படும் செபதபப் பலன்களையும் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். மரித்த விசுவாசிகளின் ஆத்துமங்களின் நன்மைக்காகத் தேவரீர் சித்தம்போல அவைகளைப் பிரயோகிக்கக் கிருபைபுரிந்தருளும். தற்காலத்திலும் பிற்கால நித்தியத்திலும் எனக்கு வரக்கூடிய நன்மைப் பயன்களையெல்லாம் சுயநல நாட்டமின்றி தாய் நேசமுள்ள உமது பராமரிப்பிலேயே முழுதும் ஒப்படைத்துவிடுகிறேன். உமது திருக்குமாரனாகிய ஆண்டவர் தமது கிருபை இரக்கத்துக்கு அல்லது நீதிக்கேற்றபடி உமது திருக்கரங்களின் வழியாய் அடியேனுக்கு நியமித்தனுப்பும் நன்மை தின்மைகளையெல்லாம் மனப்பூரணமான அமைத

லோடு இப்போதே கையேற்றுக்கொள்ளுகிறேன்.

ஆமென் சேசு.

(இதை அல்லது இதைப்போலொத்த செபத்தைச் செபிப்பது அவசியமில்லை. கருத்தொன்றே போதும்)

பூரணபலன்களின் பேரில்.

நமது பாவங்களுக்குரிய அநித்திய ஆக்கினையின் நிவாரணமே பூரண பலனாம். அதெப்படியென்றால் பச்சாத்தாபமென்னுந் தேவதிரவிய அநுமானத்தின் வழியாய்ப் பாவங்களின் தோஷமும் அவற்றிற்குரிய நித்திய ஆக்கினையும் மன்னிக்கப்பட்டாலும் அந்தப் பாவங்களுக்காக நாம் இன்னம் உத்தரிக்கவேண்டிய அநித்திய ஆக்கினையுமுண்டு. இப்படிப்பட்ட அநித்திய ஆக்கினையை நிவாரணமாக்குகிறதற்காகப் பூரண பலன் முதலான பலன்கள் திருச்சபையில் நியமிக்கப்பட்டிருக்கின்றன. முழுப்பலன் அல்லது பரிபூரண பலனானது அநித்திய ஆக்கினையை முழுதும் நிவாரணமாக்கும். ஆனால் தனிப்பலன் அல்லது பாகப்பலனென்று வரையறுக்கப்பட்ட பலனானது ஆக்கினையின் ஒரு பாகத்தை மாத்திரம்

நிவாரணமாக்கும். அப்படியே பத்து வருஷப்பலன், நூறு நாட் பலன், என்பவற்றின் அர்த்தமென்னவென்றால் :

பூர்வீக திருச்சபையானது பிரசித்தமான பாவிகளுக்கு வேதாசாரப்படியே இட்டு வந்த பத்து வருஷம் அல்லது நூறுநாள் முதலிய குறிக்கப்பட்ட காலத் தபசால் எவ்வளவான அநித்திய ஆக்கினை நிவாரணமாகுமோ, அவ்வளவான ஆக்கினையும் ஒரு மண்டலப் பலனால் நிவர்த்தியாகும்.

இன்னம், ஒரு மண்டலம் என்பது ஒரு தபசு காலத்தின் அல்லது நாற்பது நாளின் அளவு அடங்கியதாம். ஆகையால் பூர்வீக திருச்சபை ஆசாரப்படிக்கு நாற்பது நாள் உபவாச அநுசரணையாலே எவ்வளவான அநித்திய ஆக்கினை நிவாரணமாகக் கூடியதோ அவ்வளவான ஆக்கினையும் ஒரு மண்டலப் பலனால் நிவர்த்தியாகும்.

பரிபூரண பலன் அடைவதற்கு வழக்கமாய் நியமிக்கப்படும் நிபந்தனைகளாவன :

1. யாதொரு தர்மக்கிரியை செய்கிறது அல்லது பலன் ஸ்தாபித்திருக்கும் ஒரு செபத்தைச் சொல்லுகிறது.

2 பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறது.

3. திவ்வியநற்கருணை உட்கொள்ளுகிறது.

4. யாதொரு கோவிலைச் சந்திக்கிறது.

5. அர்ச். பாப்பானவருடைய கருத்துக்காக வேண்டிக்கொள்ளுகிறது.

இவ்விடத்தில் அறியவேண்டியதாவது: அர்ச். பாப்பானவருடைய கருத்து என்னவென்று அறிவது அவசியமல்ல. அவருடைய கருத்துக்காக வேண்டிக்கொள்வதே போதும். அந்த கருத்துகள் என்னவென்றால்:

திருச்சபையின் மேன்மை விர்த்திக்காக, விசுவாசம் பரம்புதற்காக, பதிதர் மதம் அழிவதற்காக, அஞ்ஞானம் நீங்குதற்காக, சத்தியவேத இராஜாக்களுக்குள் சமாதானம் உண்டாயிருப்பதற்காக—இவை முதலியன.

பாவசங்கீர்த்தனம். பலனுனது நியமிக்கப்பட்டிருக்கும் தினத்துக்கு முந்தினநாள் சாயங்காலம் பாவசங்கீர்த்தனம் செய்வது வழக்கம். ஆனால் வாரத்துக்கொருவிசை பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறவர்கள், ஒரு பாவசங்கீர்த்தன நாள்முதல் மறு பாவசங்கீர்த்தன நாள்மட்டும் இடையில் நேரிடும் பலன்களையெல்லாம் பெற்றுக்கொள்வார்கள். இரண்டு வாரத்துக்கொருவிசை பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறவர்கள் இடையில்

நேரிடும் பலன்களையெல்லாம் அடைவதற்கு விசேஷ உத்தரவு வேண்டியது. இப்படிப்பட்ட விசேஷ உத்தரவு இந்துதேசத்தின் சகல பங்குக் கோவில்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திவ்விய நற்கருணை உட்கொள்ளுதல். பலன் அடைய நியமிக்கப்பட்டிருக்கும் தினத்திலேயே திவ்விய நன்மை வாங்குவது வழக்கம். அதற்கு முந்தின தினத்திலேயும் வாங்கலாம்.

கோவிலைச் சந்தித்தல். இது திவ்விய நற்கருணை வாங்குகிறதற்கு முந்தியாவது, பிந்தியாவது செய்யலாம். ஆனால் எத்தனை பலன்களை நாம் அடையவேண்டுமோ, அத்தனை விசை அந்தச் சந்திப்பு முயற்சி செய்ய வேண்டியது. அந்தியாரம்பமான திருநாளுக்குக் குறிக்கப்பட்ட பலனை அடைவதற்கு ஷை திருநாளுக்கு முந்தின நாள் சாயங்காலம், குறிக்கப்பட்ட கோவிலைச் சந்திக்கலாம். அப்படியல்லாவிட்டால் முந்தினநாள் நடுச்சாமமுதல் மறுநாள் நடுச்சாமமட்டும் நீளித்திருக்கும் அந்தத் திருநாளிலேயே சந்திக்கலாம்.

ஜெபம். கோவிலைச் சந்திக்கிறதின்மட்டில் சொல்லப்பட்ட விபரங்களெல்லாம்

இதற்கும் செல்லும். விசேஷமான செபங் குறிக்கப்பட்டிருந்தாலொழிய மற்றப்படி இன்ன செபம் செபிக்கவேணுமென்ற நிபந்தனையில்லை. உதாரணமாக: 5-பர., 5-பிரி., அர்ச். தேவமாதாவின் பிரார்த்தனை, 50-ம் சங்கீதம் அல்லது பத்து மணிச்செபம் முதலியன.

பூரண பலன்களின் பொக்கிஷம்.

I. சிலுவைப்பாதை.

இப்போது திருச்சபையில் வழங்கிவரும் சிலுவைப்பாதையானது பதினேழாம் யுகத்தின் மத்தியில் பிரான்சிஸ்கான் சபையாரால் ஏற்படுத்தப்பட்டது. இந்த சிலுவைப்பாதை முயற்சிக்கு அர்ச். பாப்புமார்கள் அநேக பலன்களைக் கட்டளையிட்டிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் இவ்விடத்தில் சொல்லமுடியாது. இந்தப் பலன்களை அடைவதற்கு அவனவன் இஷ்டப்பிரசாதத்தோடே இருக்கவேண்டியதுமன்றி ஒவ்வொரு ஸ்தலத்துக்குமுன் முழந்தாளிலிருந்து அந்தந்த ஸ்தலத்தின் பரமரகசிய விசே-

ஷத்தைச் சற்றுநேரந் தியானித்து, இப்படியாய் பதினாலு ஸ்தலங்களையும் சுற்றிச்சென்று சேவிக்கவேண்டியது. இதற்கு இன்ன செபமே அவசியமென்பதுமில்லை. இந்தத் தியானம் நீடித்திருக்க வேண்டியதுமில்லை. (1829-௵ செப்டெம்பர்-௴ 22-௳ 1831-௵ எப்பிரல்-௴ 7-௳ பூரணபலன் நிருபம் காண்க.) இந்த ஸ்தலங்களைச் சேவிக்கக் கூடாதவர்கள் இதற்கென்று பலன் ஸ்தாபித்திருக்கும் பாடுபட்ட சுரூபத்தை வைத்துக்கொண்டு செய்யலாம். இப்படிப்பட்டவர்கள் ௸ சுரூபத்தைக் கையில் பிடித்துக்கொண்டு 14-பர., பிரி., திரி., செபித்து கர்த்தருடைய ஐந்து திருக்காயங்களைக் குறித்து 5-பர., பிரி., திரி., சொன்னபின், அர்ச். பாப்பானவருடைய கருத்துக்காக ஒரு பர., பிரி., திரி., வேண்டிக்கொண்டால், மேற்கூறிய பலன்களையெல்லாம் பெற்றுக்கொள்வார்கள்.

II. ஜெபமாலை.

9-ம் பத்திநாதர் என்னும் பாப்பானவர் ஒருநாள் சொன்னதாவது: "இதோ! திருச்சபையின் விலையுயர்ந்த பொக்கிஷத்தைப் பாருங்கள்!"

திருச்செபமாலைச் சபையார்கள் செபமாலை செபிக்கையில் ஒவ்வொரு பிரியதத்த மந்திரத்துக்கும் 2025-நாட் பலனைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். இப்படியாய் ஒரு 53-மணிச் செபமாலைக்கும் ஒருலட்சத்து ஓராயிரத்து ஒருநூற்றைம்பது நாட் பலனும், ஒரு முழுச் செபமாலைக்கு மூன்று லட்சத்து மூவாயிரத்து எழுநூற்றைம்பது நாட் பலனும் கிடைக்கும். பூரணபலன் சங்கத்தார் 1886-௵ மார்ச்சு-௴ வெளிப்படுத்திய நிருபத்தால் ௸ பலன்கள் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன. இச்சபையார் தங்கள் பாவங்கள்பேரில் மனஸ்தாபத்தோடே இச்செபமாலையைத் தங்களிடத்தில் வைத்திருந்தால் நாள் ஒன்றுக்கு 40,000-நாட் பலன் அடைவார்கள்.

சபைக்கோவிலில் (இது இல்லாவிட்டால் வேறெந்தக் கோவிலிலாவது) செபமாலை செபிக்கிறவர்களுக்கு 50 வருஷப் பலனுண்டு.

(9-ம் பத்திநாதர் பாப்பானவர்.)

இந்தப் பலன்களையெல்லாம் அடைவதற்கு 1. இச்சபை டாப்பில் பேரெழுதிவைக்கிறது. 2. இதற்கு அதிகாரமுள்ள குருவானவரால் மந்திரிக்கப்பட்ட செபமாலையை உப

யோகிக்கிறது. 3. செபமாலையின் பரமரகசியங்களைத் தியானித்துக்கொண்டு வாரத்தில் மூன்று விசை செபமாலையைச் செபிக்கிறது.

III. கார்மேல் மாதாவின் உத்தரீயம்.

திரு உத்தரீயத்தைத் தரித்துப் பத்தியாய் மரிக்கிற சகலரும் நித்திய நரக ஆக்கினைக்குத் தப்பித்துக்கொள்வதன்றியே சனிக்கிழமைப் பலனென்ற பேரால் ஒரு விசேஷ நன்மையைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். அதாவது: இச்சபையார் கொஞ்சம் சுத்தபோசனம் அனுசரித்து தினந்தோறும் தேவமாதாவின் ஒப்பீசும் தங்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி கற்பையும் அனுசரித்து மரிக்கிறவர்கள், கூடிய சீக்கிரத்தில் மோக்ஷபாக்கியத்தில் சேர தேவமாதா உதவி செய்கிறாளென்பது பத்திக்குரிய விசுவாச சத்தியமாம். இந்த சுத்தபோசன முயற்சியையும் ஒப்பீசையும் மாற்றி வேறே சுகிர்த கிருத்தியங்களை அனுசரிக்க, விசேஷ அதிகாரமுள்ள குருவானவர் உத்தரவு கொடுக்கக்கூடும்.

இந்தச் சபையார் பரிபூரண பலனடையும் நாட்களாவன:

சபையில் பிரவேசிக்கிற நாள், அமலோற்பவமாதாவின் திருநாள், தேவமாதா பிறந்த

திருநாள், காணிக்கைமாதாவின் திருநாள், மங்கள வார்த்தைத் திருநாள், எலிசபெத்தம்மாளை மினவின திருநாள், சுத்திகரத் திருநாள், தேவமாதா மோக்ஷத்துக்கு எழுந்தருளின திருநாள், அர்ச். சூசையப்பர் திருநாள், அர்ச். சிமியோன் ஸ்தோத்திரம், அர்ச். அன்னம்மாள் திருநாள், அர்ச். தெரேசம்மாள் திருநாள், அர்ச். மிக்கேல் சம்மனசு திருநாள், வருஷத்தின் சகல புதன் கிழமைகள், மரண சமயம் இவைகள் தாம். இச்சபையார் இஷ்டப்பிரசாதத்தோடு திரு உத்தரீயத்தை அணிந்துகொண்டு செய்யும் பத்திக்குரிய அல்லது பிறசிநேகத்துக்குரிய எவ்வித கிரியைக்கும் மிகுந்த பலனைப் பெற்றுக்கொள்ளுகிறதன்றியே விசேஷ வகையாய் 100 நாட் பலனையும் அடைவார்கள். இந்தப் பலன்களையெல்லாம் உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்கு செலுத்தத்தகும்.

IVº அமலோற்பவ மாதாவின் உத்தரீயம்.

இந்த உத்தரீயத்தை அணிந்திருக்கிறவர்கள் பரிபூரண பலனை அடையும் நாட்களாவன:

சபையில் பிரவேசிக்கிற நாள், மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை, திருப்பாடுகளின்

ஞாயிறு, பெரிய வெள்ளிக்கிழமை, பாஸ்கு ஞாயிறு, ஆரோகணத் திருநாள், இஸ்பிரீத்துசாந்து திருநாள், திருச்சிலுவை கண்டெடுத்த திருநாள், திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாள், கர்த்தர் பிறந்த திருநாள், அமலோற்பவமாதாவின் திருநாள், தேவமாதா பிறந்த திருநாள், மங்கள வார்த்தைத் திருநாள், சுத்திகரத் திருநாள், பரலோகத்துக்கு எழுந்தருளின திருநாள், சம்மனசுகளின் இராக்கினியின் திருநாள், சகல மோக்ஷவாசிகள் திருநாள், அர்ச். சூசையப்பர் திருநாள், அர்ச். மிக்கேல் சம்மனசு திருநாள், காவல் சம்மனசு திருநாள், அர்ச் ஸ்நாபக அருளப்பர் திருநாள், அர்ச். இராயப்பர் திருநாள், அர்ச். அகுஸ்தீன் திருநாள், அர்ச். தெரேசம்மாள் திருநாள் முதலியன.

இந்த உத்தரீயத்தின் மிகுந்த விலைபொருந்திய பலனானதென்னவென்றால், இதைத் தரித்துக்கொண்டு 6 பர., பிரி,, திரி., செபிக்கிற ஒவ்வொரு விசைக்கும் கொடுக்கப்பட்ட பலனும். இதிலே போர்சியூங்குலா என்கிற பூரண பலனும், கொம்போஸ்தெல்லா என்ற அர்ச். யாகப்பருடைய ஆலயத்துக்கு திருயாத்திரைப் பலன்களும், திரு ஸ்தலங்களையும் உரோமாபுரியின் எழு கோவில்களையும் சந்திப்பதற்கு நியமிக்கப்பட்ட பலன்களும்

அடங்கியிருக்கின்றன. இந்தப் பலன்களையெல்லாம் அடைவதற்கு இஷ்டப்பிரசாதத்தோடிருந்து அர்ச். தமதிரித்துவத்துக்குத் தோத்திரமாகவும், அர்ச். அமலோற்பவ மாதாவின் தோத்திரத்துக்காகவும் அர்ச். பாப்பானவருடைய கருத்துகளுக்காகவும் 6 பா., பிரி., திரி, செபிப்பதே போதும்.

செபம்.

என் தேவனாகிய ஆண்டவரே! எவ்வகையான மரணத்தை எனக்கு அனுப்ப உமக்குச் சித்தமோ, அம்மரணத்தை அதைச்சேர்ந்த சகல துக்க துயரம் வேதனை நோக்காடுகளோடு கூட, இதோ இக்ஷணமே, உமது கரத்திலிருந்து சமாதான அமரிக்கையோடும், முழு மனச் சம்மதத்தோடும் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

குறிப்பு:—நமது பரிசுத்த தந்தையாகிய பத்தாம் பத்திநாதர் புதிதாய் இச்செபத்தை அங்கீகரித்து, இதற்கு ஒரு மகா விசேஷித்த பலனையும் கட்டளையிட்டிருக்கிறார். இப்பலனையடைய விரும்புகிறவர்கள், பாவசங்கீர்த்தனம் செய்து திவ்விய நன்மை வாங்கியபின். சர்வேசுரன்மேல் மெய்யான சிநேக பற்றுதலோடு இச்செபத்தை ஒரு தடவையாகிலும் செபிக்கவேண்டும். தங்கள் ஆயுசு காலத்தில் எப்போவாகிலும் ஒரு தடவை மேற்கூறியபடி செய்தவர்கள், மரண சமயத்தில் சாவான பாவமின்றி தேவ இஷ்டப்பிரசாதமுடையவர்களாயிருப்பார்களேயாகில், வேறெதுவும் செய்யத்தேவையின்றி, அவர்களுடைய ஆத்துமம் சரீரத்தை விட்டுப் பிரியும் வேளையில் அவர்களுக்கு ஒரு பரிபூரண பலன் கொடுத்தருளப்படும்.

பிரதி தின திவ்விய நன்மை.

நமது பரிசுத்த பிதா 10-ம் பத்திநாதர் 1905-ம் வருஷம் ஜூன் மாதம் 3-ம் தேதி அனுப்பிய நிருபத்தில், அனுதின திவ்விய நன்மையை வெகுவாய் வியந்து பாராட்டியிருக்கிறதுமன்றி, அந்த அறிவுன்னத அப்பியாசம் கிறீஸ்துவர்கள் மத்தியில் செழித்தோங்கும்படி, எல்லோரையும் ஏவுகிறார். அர்ச். பாப்பானவர் இச்சுகிர்த அப்பியாசம், நமதன்றாட நோக்காடுகளின் அன்றாட ஔஷதமாகவும், நமது ஆத்துமத்தின் தினமான

போஜனமாகவும், நமதநுதின குற்றங் குறைகளின் பரிகாரமாகவும், இருக்கிறதென்று எண்ணுகிறாரேயொழிய, மகா பத்தியுள்ள ஆத்துமாக்களுக்கு மாத்திரம் இது உரிய சம்பாவனையென்று அவர் எண்ணுகிறதில்லை.

இந்த உச்சிதமான அப்பியாசம் பரம்பும்படியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிற பின்வரும் ஜெபத்துக்கு அர்ச். பாப்பானவர் 300 நாள் பலன் அளித்திருக்கிறார். நாள் தவறாமல் மாதமுழுவதும் இச்செபத்தைச் சொல்லி வருகிறவர்கள் தாங்கள் தெரிந்துகொண்ட ஓர் நாளில் பரிபூரண பலன் அடையக்கூடும். ஆனால் அதற்காக அவர்கள் பாவசங்கீர்த்தனம் பண்ணி, திவ்விய நன்மை வாங்கவேண்டியதுமல்லாமல், ஒரு கோவிலைச் சந்தித்து, அர்ச். பாப்பானவருடைய கருத்துகளுக்காக வேண்டிக்கொள்ளவும் வேண்டியது. மேலும் இந்தப் பலன்களை உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு ஒப்புக்கொடுக்கலாமென்று அர்ச். பாபபானவர் அறிவிக்கிறார்.

கசிமீர் கர்தினால் ஜெனாரி.

Casimir Cardinal Gennari.

உரோமாபுரி, 1905-ம் ௵ ஜூன் மாதம் 3-ம் தேதி.

பிரதி தினம் திவ்விய நன்மை வாங்குகிற சுகிர்த அப்பியாசம் பரம்புவதற்காகப் பலனுள்ள செபம்.

மகா மதுரம் பொருந்திய சேசுவே, தேவரீர் சகலருக்கும் உமது இஷ்டப்பிரசாத உயிரளிக்கும்படி இவ்வுலகத்துக்கு எழுந்தருளி வந்ததுமன்றி, அந்த உயிரைக் காப்பாற்றி வளர்ப்பதற்காக எங்கள் அநுதின நோய்களுக்கு அநுதின அவுழ்தமும் அநுதின போசனமுமாகும்படி சித்தமானீரே. எங்கள் மேலுள்ள நேசத்தால் அவ்வளவாய்ப் பற்றியெரியும் தேவரீருடைய திரு இருதயத்தை முன்னிட்டு, உமது திவ்விய நோக்கப் பற்றுதலைச் சகலருடைய ஆத்துமங்களிலும் பொழிந்தருளவேண்டுமென்று தாழ்மையோடு உம்மை மன்றாடுகிறோம். ஆகையால் நிற்பாக்கியமாய்ச் சாவான பாவத்தோடிருக்கிறவர்கள் தேவரீரிடத்தில் திரும்பிவந்து, தாங்கள் இழந்துபோன இஷ்டப்பிரசாத உயிரை மறுபடி பெற்றுக்கொள்ளவும், உமது தயாளத்தால் அந்தத் திவ்விய சீவியத்தில் உயிர் வாழ்ந்திருக்கிறவர்கள், தங்களால் கூடும் போதெல்லாம் பத்தி விநயத்தோடு உமது

திருப்பந்தியை அண்டி வரவும், கிருபைசெய்தருளும். இவ்விதமே அநுதினமும் சற்பிரசாதத்தை உட்கொள்வதினால் அவர்கள் தங்கள் அநுதின குற்றங்களுக்கு அன்றன்று பரிகாரம் பெற்று, உமது இஷ்டப்பிரசாத உயிரைத் தங்களிடத்தில் தினமும் பெருகப்பண்ணவும், இவ்வழியாய் எப்போதும் மென்மேலும் தங்களைப் பரிசுத்தப்படுத்தித் தேவரீரோடு நித்தியானந்த ஜீவியத்தை அடையும்படி அநுக்கிரகித்தருளும்.

ஆமென் சேசு.

அர்ச். ஆசீர்வாதேந்திரர் சுரூபம்.

இச்சுரூபம் இருநூறு வருஷகாலமாய் திருச்சபையில் வழங்கி வருகிறதன்றியே 14-ம் ஆசீர்வாதேந்திரர் என்னும் அர்ச். பாப்பானவர் தமது நிருபத்தால் இதை மேன்மைப்படுத்தியிருக்கிறார். நமது இரட்சணியத்தின் அடையாளமாகிய திருச்சிலுவை இச்சுரூபத்தின் ஒரு புறத்திலும், அர்ச். ஆசீர்வாதேந்திரருடைய சாயல் மறுபுறத்திலும் பதிக்கப்பட்டிருக்கின்றது. இதைப் பத்தி விசுவாசத்துடனே உபயோகிக்கிற விசுவாசி

கள் இதனால் எண்ணிக்கையில்லாத நன்மைவரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளுகிறபடியால் திருச்சபையாருடைய பத்திக்கு இது ஒரு அருமைப் பொருளாயிற்று. இத்திருச் சுரூபத்திலிருக்கும் குறிகள் எப்படிப்பட்டனவென்று சற்றுங் கவனித்துப் பார்த்தால், ஆத்தும சரீர ஆபத்துக்களில் விசுவாசிகள் இதை உபயோகித்து வரும் முகாந்தரம் நன்றாய்த் தெரியவரும். அதேதென்றால், இதன் ஓர் புறத்திலுள்ள திருச்சிலுவையானது நமது இரட்சணியத்தின் எத்தனமுமாய் சர்வேசுரன் நமக்குத் தந்தருளிய அடைக்கலத்தின் கேடயமுமாயிருக்கிறதாம். இத்திரு அடையாளத்தாலேயே, நரகப் பேயினங்களின் கொடிய தந்திரங்களையெல்லாம் நாம் ஜெயித்துத் துரத்தக்கூடும். மறுபுறத்திலுள்ள ரூபமோ மேற்சொன்ன திருச்சிலுவை அடையாளத்தாலே துஷ்டப் பேயின் தந்திரங்களையெல்லாம் நிர்மூலமாக்கின அர்ச். ஆசீர்வாதேந்திரருடைய சாயல். இந்த இரண்டு வல்லமைகளும் நமது திவ்விய இரக்ஷகருடைய கிருபையுள்ள கருத்துகளோடுகூடி ஒன்றித்து இச்சுரூபத்தில் பொருந்தி அமைந்திருப்பதால், இது விசுவாசிகளுக்கு உத்தம தஞ்சமாகவும், பேய்களுக்குப் பயங்கரமான சாட்டையாகவும் வழங்கி

வருகின்றது. இச்சுரூபத்தில் பதிந்திருக்கும் எழுத்துக்களத்தனையும், அத்தனை திருமொழிகளின் ஆதி அட்சரமாம். இவை யாவும்,



பேய்களைத் துறத்தி வெருட்ட மிகுந்த தத்துவமுடைய இலத்தீன் மொழிகளாம். இவற்றின் அர்த்தமாவன: (1) திருச்சிலுவையின் நாலு வெளி மூலைகளிலுமுள்ள C. S. P. B. என்னும் நான்கு அட்சரங்களும், "தந்தை ஆசீர்வாதேந்திரரின் திருச்சிலுவை" என்று அர்த்தமாம். (2) ஷை சிலுவையின் செங்குத்தான கோட்டிலுள்ள C. S.

S. M. L. என்னும் ஐந்து அட்சரங்களும் "திருச்சிலுவை எனக்கு வெளிச்சமாயிருக்கக்கடவது" என்று அர்த்தமாம். (3) அந்தச் சிலுவையின் குறுக்குக் கோட்டிலுள்ள N. D. S. M. D. என்ற ஐந்து அட்சரங்களும் "நரக சர்ப்பம் எனக்கு அதிபதியாக வேண்டாம்" என்று அர்த்தமாம். (4) மேற்படி பக்கத்தின் ஓரத்தைச் சுற்றி திவ்விய சேசுவின் வழக்கமான நாமதேயக் குறிப்பெழுத்துகள் I. H. S. என்ற மூன்றும் "மனு இரட்சகரான சேசு" என்று அர்த்தமாம். (5) இவைகளுக்குப்பின் ஈரேழு அட்சரங்கள் இருக்கின்றன. அவைகள் இலத்தீன் பாஷையின் இரு சிறு கவிகளின் குறிப்பாம். அவை யாவன: V. R. S. N. S. M. V.; S. M. Q. L. I. V. B இவைகளின் அர்த்தம்: "அப்பாலே போ! சாத்தானே, அபத்தங்களை எனக்குப் போதிக்காதே, நீ கொடுப்பது தீது, நீயே நஞ்சை உட்கொள்" என்று பயனும்.

14-ம் ஆசீர்வாதேந்திரர் என்னும் அர்ச். பாப்பானவர் 1742-௵ மார்ச்சு-௴ 12-௳ எழுதித்தந்த நிருபத்தால் இச்சுரூபத்தின் உபயோகத்தை அங்கீகரித்துக்கொண்டதுந் தவிர, இதைத் தரித்திருக்கிறவர்களுக்குத் திரளான பலன்களையும் கட்டளையிட்டிருக்கிறார்.

பிரார்த்தனைகள்.

அர்ச். சூசையப்பர் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்... மற்றதும்.

அர்ச். சூசையப்பருடைய கன்னிப்பத்தினியான அர்ச். மரியாயே,

அர்ச். கன்னிமரியம்மாளுக்குப் பரிசுத்த பத்தாவாகச் சர்வேசுரனால் சகல மனிதரிலுந் தெரிந்துகொள்ளப்பட்ட அர்ச். சூசையப்பரே,

மனோவாக்குக்கெட்டாத ஆசீர்வாத நன்மை வரங்களால் நிறைந்தவரே,

பிதாப் பிதாக்களுக்குத் தலைமையானவரே,

தேவமாதாவுக்கேற்ற உதவியானவரே,

கன்னித்தாயாருக்கு விரத்த பத்தாவாயிருந்தவரே,

கன்னிமை விரத்தமாருக. சமுசாரத்துக்கு முதல் மாதிரிகையானவரே,

இவ்வுலகில் தேவமாதாவுக்கு ஆறுதலாயிருந்தவரே,

தாவீதரசனுடைய புத்திரனே,

தேவசுதன் உம்முடைய குமாரனாக எண்ணவுஞ் சொல்லவும்படத் திருவுளமானதினால் உந்த மேன்மை பெற்றவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சர்வாதி கர்த்தர் உமக்குக் கீழ்ப்படிய மகிமை பெற்றவரே,

சர்வேசுரன் தாவீதரசனைப்போலத் தமது திரு இருதயத்துக்குச் சரிப்பட்டவனென்று ஏற்றுக்கொண்டவரே,

சர்வேசுரனுடைய திருவுளத்தின் பரம இரகசியங்களில் மேலான இரகசியத்தை அவரால் அறிந்துகொள்வதற்குப் பாத்திரவானானவரே,

இவ்வுலகத்தின் பிரபுக்களில் ஒருவரும் அறியாத பரம இரகசியத்தை அறிவதற்கு வரம் பெற்றவரே,

அநேக இராஜாக்களுந் தீர்க்கதரிசிகளுங் காணவுங் கேட்கவும் விரும்பியிருந்தாலுங் காணாமலுங் கேளாமலும்போன இரட்சகரைக்கண்டு திருமொழிகேட்டதுமன்றி, அவரை ஏந்தவும் நடத்தவும் அணைக்கவும் முத்தமிடவும் வளர்க்கவுங் காக்கவும் பேறுபெற்றவரே,

கன்னித்தாயாருக்குப் பின்பு முதல்வராகத் திவ்விய குழந்தையான நாதரை ஆராதித்தவரே,

அவதரித்த ஞானமானவரை நடப்பித்தவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சர்வலோக நாயகனை வளர்த்தவரே,

பரலோகத்தின் பொக்கிஷமானவரைக் காத்தவரே,

தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட உலக மீட்பரை மீட்டுக்கொண்டவரே,

உலக இரட்சகரைக் காப்பாற்றினவரே,

சர்வத்தையும் நடத்துகிறவரை நடத்தினவரே,

பரதேசியான தேவனைப் பராமரித்து ஆதரித்தவரே,

பரம ஆலோசனைக்கு உதவியானவரே,

சகல குடும்பங்களிலும் மேன்மையும் பரிசுத்ததனமுமுள்ள திவ்விய குடும்பத்துக்குத் தலைமையானவரே,

பரலோக இராஜாவாலும் இராக்கினியாலும் பணிவிடை செய்யப்பட்டவரே,

சேசுநாதருக்கும் கன்னிமரியம்மாளுக்கும் மிகவும் நேசரானவரே,

பூலோகத்தில் பிறந்த பூமான்களில் உமக்குச் சரியொத்தவர் ஒருவருமில்லையென்கிற மேன்மை பெற்றவரே,

சம்மனசுகளிலும் முக்கியமான மகிமைப்பேறைச் சுதந்தரித்துக்கொண்டது போலே அவர்களிலும் உத்தமரானவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சேசுநாதருந் தேவமாதாவுந் தங்களுடைய திருமுக தரிசனையாலுந் திருவாக்கினாலுந் திவ்விய மாதிரிகையினாலும் இடைவிடாத சுகிர்த சஞ்சரிப்பினாலும் அநேக வருஷகாலம் ஏவின இஷ்டப்பிரசாதங்களால் பூரிக்கப்பட்டவரே,

பரிசுத்த கற்புள்ள விரத்தராயிருந்தவரே,

மிகுதியான தாழ்ச்சியில் அதிகரித்தவரே,

தேவசிநேக அக்கினிச்சுவாலையே,

தியானயோகத்தில் உயர்ந்தவரே,

நீதிமானும் உத்தமருமானவரே,

சேசுநாதருடைய அணைப்பிலும் தேவமாதாவின் திருக்கரங்களிலும் பாக்கியமான மரணத்தை அடைந்தவரே,

சேசுநாதரோடேகூட உயிர்த்தவர்களில் ஒருவரானவரே,

ஆத்துமத்திலுஞ் சரீரத்திலும் விசேஷ மகிமை வரங்களால் அலங்கரிக்கப்பட்டவரே,

திவ்விய குமாரனுடைய பத்திராசனத்துக்குந் தேவமாதாவின் சிம்மாசனத்துக்கு மிகவும் அடுத்தவராக மகிமையில் உயர்த்தப்பட்டவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் ஈடேற்றத்துக்கு மிகவும் உதவி செய்கிறவரே,

உம்முடைய சகோதரராகிய மனுமக்களின் பிரபுவானவரே,

திருச்சனத்தின் திடனாயிருக்கிறவரே,

உம்முடைய பிரஜைகளுக்கு உறுதித் தேற்றரவே,

மரிக்கிறவர்களுக்கு அடைக்கலமாயிருக்கிறவரே,

எங்களுக்கு ஆதரவாயிருக்கிறவரே,

வேண்டிக்கொள்ளும்.

உலகத்தின் பாவங்களை .. மற்றதும்.

கர்த்தர் தம்முடைய திருமாதாவுக்கு ஆறுதலாகவும் தமது திருமனுஷீகத்தை வளர்க்கிறவராகவும் பூலோகத்தில் பரம தேவ ஆலோசனையின் ஏக பிரமாணிக்க உதவியாகவும் ஏற்படுத்தின பணிவிடைக்காரன் பாக்கியவானாமே.

மு.— அர்ச். சூசையப்பரே! என் ஆத்துமத்தையும் உம்முடைய அடியார்களின் ஆத்துமத்தையும் பிறக்கணியாமல்,

து.— கிருபாகடாட்சத்தோடே பார்த்தருளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரா சுவாமீ! தேவரீர் அர்ச். பரிசுத்த கன்னிமரியம்மாளுக்கு மாசற்ற பத்தாவாகவும், உம்முடைய திவ்விய குமாரனை இவ்வுலகத்தில் வளர்க்குந் தகப்பனாகவும் அர்ச். சூசையப்பரை முன்னால் தெரிந்துகொண்டீரே. அவருடைய புண்ணிய பலன்களைப் பார்த்து எத்தேசத்திலும் அக்கியானம் நீங்கவும், திருச்சபை வர்த்திக்கவும், அவரை நம்பின நாங்கள் எல்லோரும் புண்ணியத்திலே நிலைநின்று நல்ல மரணத்தை அடையவும், அவரோடு எப்போதுந் தேவரீரை ஸ்துதித்து மோக்ஷபாக்கியத்தை அநுபவிக்கவுங் கிருபை பண்ணியருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் உம்மோடேயும் இஸ்பிரீத்துசாந்துவோடேயும் ஏக சர்வேசுரனுமாய் நித்திய சீவியருமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்கிற சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும். ஆமென் சேசு.

அர்ச். காவலான சம்மனசின் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்... மற்றதும்.

சம்மனசுக்களுடைய இராக்கினியாகிய அர்ச். மரியாயே,

அர்ச். மிக்கயேலே,

அர்ச். கபிரியேலே,

அர்ச். இரபயேலே,

எங்களுக்குக் காவலாயிருக்கிற அர்ச். சம்மனசானவரே,

எங்களைக் காக்கிறதிலே மிகவும் பிரமாணிக்கராகிய சம்மனசானவரே,

எங்களை ஆதரிக்க எந்நேரமுங் கவனிக்கிறவராகிய சம்மனசானவரே,

மிகுந்த மகிமைப்பிரதாப வல்லமையுள்ள காவலாகிய சம்மனசானவரே,

தவறாத சத்திய சாட்சியாகிய சம்மனசானவரே,

எங்களுக்குப் பிரியாத துணையாகிய சம்மனசானவரே,

இப்பரதேசத்தில் ஆத்துமத்துக்கு ஆறுதலாகிய சம்மனசானவரே,

மிகுந்த ஞான விவேகத்தோடே நடப்பிக்கிறவராகிய சம்மனசானவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பரிசுத்த சற்புள்ள நேசராகிய சம்மனசானவரே,

தயைநிறைந்த ஆயனாகிய சம்மனசானவரே,

பரிசுத்ததனத்தைக் காக்கிறவராகிய சம்மனசானவரே,

உத்தம ஆலோசனையை ஏவுகிறவராகிய சம்மனசானவரே,

சாந்தந் தயவோடே புத்திமதி சொல்லுகிறவராகிய சம்மனசானவரே,

இருதயத்தைப் பிரகாசிப்பிக்கிறவராகிய சம்மனசானவரே,

ஏகாந்தத்தில் ஞானக்கதிர் வீசுகிறவராகிய சம்மனசானவரே,

காணப்படாதவராயிருந்தாலும் வழிகாட்டியாகிய சம்மனசானவரே,

எந்தக் காரியங்களையும் ஒழுங்கோடே நடத்துகிறவராகிய சம்மனசானவரே,

பலவீனத்தில் எங்கள் தஞ்சமாகிய சம்மனசானவரே,

எங்களுக்காகச் சர்வேசுரனிடத்தில் மிகவும் ஏற்கத்தக்க மனுப்பேசுகிறவராகிய சம்மனசானவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

தேவகிருபைச் சிம்மாசனத்தில் எங்கள் செபங்களைச் செலுத்துகிறவராகிய சம்மனசானவரே,

பலத்த உதவியாகிய சம்மனசானவரே,

எங்கள் சத்துருக்களோடே யுத்தஞ் செய்கிறதிலே ஒருபோதுந் தோல்வைப் படாதவராகிய சம்மனசானவரே,

பசாசுகளுக்குப் பயங்கரமான சாட்டையாகிய சம்மனசானவரே,

குற்றஞ்செய்கிறவர்களைக் கண்டிக்கிறவராகிய சம்மனசானவரே,

திடனற்ற சமயத்தில் ஸ்திரப்படுத்துகிறவராகிய சம்மனசானவரே,

வியாதியில் உதவியாயிருக்கிற சம்மனசானவரே,

துயரத்தில் ஆறுதலாகிய சம்மனசானவரே,

மரண அவஸ்தையில் தேற்றரவாகிய சம்மனசானவரே,

ஞானயுத்தத்தில் தைரியம் வருவிக்கிறவராகிய சம்மனசானவரே,

ஜெயங் கொள்ளுகிறவர்களுக்குத் தேவகிருபையால் முடிசூட்டுகிறவராகிய சம்மனசானவரே,

பரிசுத்த ஆத்துமாக்களை கைக்கொள்ளுகிறவராகிய சம்மனசானவரே,

யுத்தசபையின் வச்சிரத் தூண்களாகிய காவலான சம்மனசுக்களே,

நவிலாச சபையாயிருக்கிற சகல பரிசுத்த சம்மனசுக்களே,

உலகத்தின் பாவங்களை...மற்றதும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

மு.—நடுநடுக்கமான தீர்வைநாளில் நாங்கள் நித்திய சாபத்துக்குள்ளாகாதபடிக்கு,

து.—எங்கள் காவலாகிய பரிசுத்த சம்மனசானவரே, ஞான யுத்தத்தில் எங்களைக் காத்தருளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுராசுவாமீ! மனோவாக்குக்செட்டாத உமது கிருபையுள்ள பராமரிக்கையால் எங்களைக் காக்கத் தேவரீருடைய பரிசுத்த சம்மனசுக்களை நியமித்தனுப்பச் சித்தமானீரே, உம்மை மன்றாடுகிற நாங்கள் அவர்கள் ஆதரவில் எப்பொழுதுங் காப்பாற்றப்

படவும் நித்தியமாய் அவர்களுடைய பேரின்ப ஐக்கியத்தில் வாழ்ந்திருக்கவும் எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவின் திருமுகத்தைப்பார்த்து அனுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ. ஆமென்சேசு.

அர்ச். ஆரோக்கியநாதர் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்...மற்றதும்.

சம்மனசுகளுக்கு இராக்கினியான அர்ச். மரியாயே,

அர்ச். ஆரோக்கியநாதரே,

சேசுநாதருக்குந் தேவமாதாவுக்குஞ் செய்யப்பட்ட பத்தியுள்ள வேண்டுதலால் உற்பவித்த அர்ச். ஆரோக்கியநாதரே,

திரவிய சம்பன்னரான தாய்தகப்பனிடத்திலும் உயர்ந்த வங்கிஷத்திலும் பிறந்த அர்ச். ஆரோக்கியநாதரே,

தாயார் கெற்பத்தில்தானே உமது சரீரத்தில் அர்ச். சிலுவை பதியப்பட்டுப் பிறக்க வரம்பெற்றவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சிறுபத்தில்தானே புண்ணியத்தின் பேரிலே யிருந்த பிரியத்தைக் காண்பித்துப் பன்னிரண்டாம் பிராயத்திலே உமது சரீரத்தைத் தவத்தினாலும் உபவாசத்தினாலும் ஒறுத்தவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

அரிய தவத்தினாலுஞ் செபத்தினாலும் ஆசாபாசத்தைக் கீழ்ப்படுத்தின அர்ச். ஆரோக்கியநாதரே,

உமது தாய் தகப்பன் இறந்தவுடனே சகல ஆஸ்திகளையும் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துத் தகப்பன் காணியாட்சிகளை உமது நன்மாமன் வசம் ஒப்புவித்து உலகத்தை வெறுத்துத் துறந்தவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

ஜென்மதேசத்தையுஞ் சிநேகிதரையும் பந்துக்களையும் விட்டு, அர்ச். பிராஞ்சீஸ்குவின் மூன்றாஞ்சபையில் உட்பட்டவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உரோமாபுரியில் அர்ச். ஸ்தலங்களைச் சந்திக்கத் தரித்திரவேஷங்கொண்டு இத்தலி தேசத்திற்குப் போனவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

அந்தத் தேசத்திலே மிகவும் பரம்பியிருந்த கொள்ளைநோயில் நின்று சிலுவை

யின் அடையாளத்தால் திரளான ஜனங்களைக் குணமாக்கின அர்ச். ஆரோக்கியநாதரே,

இத்தலி தேசத்தைச் சேர்ந்த அநேக இராச்சியங்களிலே கொள்ளைநோயால் சாவுக்கு ஆயத்தப்பட்டவர்களுக்கு ஆரோக்கியந்தந்த அர்ச். ஆரோக்கியநாதரே,

சர்வேசுரன் உம்மைக்கொண்டு செய்து வந்த நவமான அதிசயத்தைக்கண்டு ஆச்சரியப்பட்ட ஜனங்களால் மிகவும் ஸ்துதிக்கப்பட்ட அர்ச். ஆரோக்கியநாதரே,

பின்னும் உமக்குவந்த கொள்ளைநோய் முதலிய துன்ப துரிதங்களையெல்லாம் பொறுமையோடு அனுபவித்து மகிமையான மோக்ஷமுடியை உறுதிப்படுத்திக் கொண்டவரான அர்ச். ஆரோக்கியநாதரே

ஆண்டவரால் வரப்பட்ட அகோரமான காய்ச்சல் உமக்கு வந்தபோது உமது பெருந்துடையானது அம்பால் உருவப்பட்டாப்போலே கடும் இரணப்படப் பேறுபெற்ற அர்ச். ஆரோக்கியநாதரே,

அந்த நோக்காடுகளை மிகுந்த ஆச்சரியமான பொறுமையோடுஞ் சந்தோஷத்தோடும் அனுபவித்தவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

[எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.]

ஜென்மதேசத்திற்கு வரும்போது வழியிலே மறுபடியும் வியாதியினால் அடிபட்டுச் சர்வேசுரனுடைய ஆதரவொழிய மனிதருடைய சகாயமின்றிக் காட்டிலே படுத்திருந்தவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

அந்தக் காட்டிலே வியாதியாயிருக்கும் போது சர்வேசுரனுடைய தயவால் நாயைக்கொண்டு உமது ஜீவனத்திற்கு அப்பங்கொண்டுவர வரம்பெற்றவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

உமது ஜென்மபட்டணத்தில் நுழைந்தவுடனே வேவுகாரனைப்போலே பிடித்துச் சிறையில் அடைக்கப்பட்டவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

அந்தப் பட்டணத்திற்கு உம்முடைய மாமன் அதிபதியாயிருந்தாலும் உம்மை இன்னாரென்று காண்பிக்க மனதில்லாதவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

உம்முடைய சுய பிரசைகளால் சேசுநாதரைப்பற்றிச் சகல நிற்பந்தங்களையும் அனுபவித்து மரணமடைய ஆசைகொண்டவரான அர்ச் ஆரோக்கியநாதரே,

உமது சாவு கிட்டினதென்றறிந்து மிகுந்த பத்தியோடே தேவதிரவிய அநுமா

[எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.]

னங்களைப் பெற்றுச சாவுக்கு ஆயத்தஞ் செய்தவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

நீர் ஐந்து வருஷகாலமாய்ச் சிறையில் அடைபட்ட பிறகு கொள்ளைநோயில் இறக்க அஞ்சாத தைரியத்துடனே ஏக சர்வேசுரனைத் தியானித்தபிறகு அந்த வியாதியால் மரணமடைந்தவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

கொள்ளைநோயில் உம்மை மன்றாடினவர்கள் இன்மையின்றிக் காப்பாற்றப்படுவார்களென்று ஏக சர்வேசுரன் தமது சம்மனசைக்கொண்டு அறிவிக்க வரம் பெற்றவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

கொள்ளைநோய் கொண்டவர்கள் உம்மை மன்றாடினால் ஆரோக்கியமடைவார்களென்று உமது சரீரத்தின் பக்கத்தில் ஓர் சிறு பலகையில் எழுதப்பட வரம்பெற்றவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

உம்மை வேவுகாரனுமாய்க் குற்றவாளியுமாய் எண்ணின உமது மாமன் உம்மை இன்னாரென்று அறிந்த மாத்திரத்தில், அவனால் மிகுந்த கஸ்தி வியாகுலத்துடனே சந்திக்கப்பட்டவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உமது திருச்சரீரம் வெகு ஆடம்பரத்துடனேயும் வணக்கத்துடனேயும் அடுத்த கோவிலில் அவனால் நல்லடக்கஞ் செய்யப்பட்ட அர்ச். ஆரோக்கியநாதரே,

கொன்ஸ்தான்ஸ் என்கிற பட்டணத்தில் சாதாரண திருச்சங்கமாகக் கூடின மேற்றிராணிமார்கள் உமது அர்ச்சியசிஷ்டதனத்தை வெகு ஆடம்பரத்துடனே கொண்டாடினபோது அங்கேயிருந்த கொள்ளைநோய்களையெல்லாம் போக்கடித்தவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

வெனிஸ் என்கிற பட்டணத்திலே விசேஷமாய் உமது சரீரம் வெகு வணக்கம் பெற்றிருக்கவும், அதைச் சந்திக்கிறவர்களுக்கு அநேக நன்மைகளைச் செய்யவும் வரம்பெற்றவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

எங்கள்பேரில் ஆண்டவர் கொண்டிருக்குந் தேவ கோபாக்கினைகளாகிய பஞ்சம், படை, நோய், கொள்ளைவியாதி, பெருவாரி இவை முதலானதுகளில் நின்று எங்களை இரட்சிக்க எங்களுக்காக மன்றாடுகிறவரான அர்ச். ஆரோக்கியநாதரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உலகத்தின் பாவங்களை...மற்றதும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வ வல்லபமுள்ள சர்வேசுரா சுவாமீ! கொள்ளைநோய், பஞ்சம், படை, பெருவாரிக் காய்ச்சல் இவை முதலான ஆபத்தில் துன்பப்படுகிற யாவரும் அர்ச். ஆரோக்கியநாதரை மன்றாடி வேண்டிக்கொண்டால் அவர்களுடைய பிணி தீர்ந்து குணப்படுவார்களென்று அவருடைய சரீரத்தின் பக்கத்தில் பதிந்ததுமன்றி, உம்முடைய சம்மனசானவரைக்கொண்டும் வார்த்தைப்பாடு கொடுத்தீரே. அவருடைய திருநாளைக் கொண்டாடுகிறவர்களும் அவருடைய வேண்டுதலின் உதவியைக் கேட்கிறவர்களுமாகிய நாங்கள் அவருடைய உத்தம மன்றாட்டினாலே எங்களுடைய ஆத்துமசரீரத்தின் ஆபத்தான கொள்ளைநோயில் நின்று எங்களை மீட்டு இரட்சிக்கும்படிக்குத் தேவரீரை மன்றாடுகிறோம். இந்த மன்றாட்டுக்களையெல்லாஞ் சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளுஞ் சுவாமீ. ஆமென் சேசு.

அர்ச். சவேரியார் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்...மற்றதும்.

ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்த அர்ச். மரியாயே,

அர்ச். இஞ்ஞாசியாரே,

அர்ச். இஞ்ஞாசியாருக்குச் சமயோக்கியமும் பிரியமுமுள்ள ஞானபுத்திரனாகிய அர்ச். சவேரியாரே,

சிந்துதேசத்துக்கு அப்போஸ்தலரே,

அர்ச். பாப்பானவருடைய விசேஷஸ்தானாபதியே,

நித்திய சமாதானத்துக்குரிய சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவரே,

சர்வ நன்மையுள்ள சுவிசேஷத்தைப் போதித்தவரே,

அஞ்ஞான ஜனங்களுக்கும் இராஜாக்களுக்குஞ் சேசுநாதருடைய திருநாமமாகிய சுகந்தத்தைக் கொண்டுபோகத் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமே,

தேவ இஷ்டப்பிரசாதம நிறைந்த பாத்திரமே.

சிந்துதேசச் சபையின் மேலான மகிமையே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

விசுவாசத்தைக் காப்பவரே,

அஞ்ஞானத்தை மிகவும் வெறுத்து நீக்குகிறவரே,

சுவிசேஷ சத்தியத்தின் உத்தம பிரசங்கியே,

பசாசினுடைய விக்கிரகங்களை அழித்தவரே,

தேவதோத்திர வணக்கம் பரம்பச்செய்வதற்கு எத்தனமாக நித்திய பிதாவினாலே தெரிந்துகொள்ளப்பட்டவரே,

சேசுநாதரைக் கண்டு பாவித்துப் பிரமாணிக்கமாய்ப் பின்சென்றவரே,

இஸ்பிரீத்துசாந்துவின் தொனியுள்ள எக்காளமே,

சர்வேசுரனுடைய திருச்சபையின் வச்சிரத் தூணே,

அஞ்ஞானிகள் சத்தியநெறியில் திரும்புதற்கு எத்தனமாகிய பிரகாசமே,

விசுவாசிகளின் போதகரான சற்குருவே,

மெய்யான பத்தியின் கண்ணாடியே,

சாங்கோபாங்கப் புண்ணிய நெறியில் தவறாத வழிகாட்டியே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

அப்போஸ்தலருக்குரிய ஞானத்துக்கும் அர்ச்சியசிஷ்டதனத்துக்கும் உத்தம மாதிரிகையே.

குருடருக்குப் பார்வை கொடுப்பவரே,

சப்பாணிகளின் ஊனந் தீர்ப்பவரே,

வியாதிக்காரருக்கு ஆரோக்கியமே,

பஞ்சம்படை நோயில் ஆதரவே,

பசாசுக்களைச் ஜெயித்தோட்டுபவரே,

சிலுவையால் சத்துருக்கள் படையைத் துரத்தினவரே,

மரித்தவர்களை உயிர்ப்பித்தவரே,

சமுத்திரத்தையும் புசலையுங் கீழ்ப்படுத்தி அடக்கும் வல்லபத்தைக் கொண்டவரே,

கடலும் மற்ற பூதியங்களும் உமது கட்டளைக்கடங்கிப் பணிவதால் பேர்பெற்றவரே,

அதிசயமான அற்புதங்களைச் செய்பவரே,

நல்ல மரணம் அடைவதற்கு உதவியாயிருப்பவரே,

தரித்திரர்களுக்கு அடைக்கலமே,

கஸ்தி துன்பப்படுகிறவர்களுக்குத் தேற்றரவே,

சிந்துதேசத்தின் பிரகாசமே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

அட்சயமான ஆலயமே,

சேசுசபையின் சிறப்புள்ள அலங்காரமே,

மனவிருப்பத்துடன் மிகவுந் தரித்திரராயிருந்தவரே,

மாறுத கற்புடைத்தானவரே,

குறையற்ற பொறுமை சிரவணமுள்ளவரே,

அத்தியந்த தாழ்ச்சியால் விளங்கினவரே,

ஆச்சரியமான தயையுள்ள பிரசன்னரானவரே,

சேசுநாதருடைய சிலுவைக்கும் பிரயாச வருத்தங்களுக்கும் மிகவும் ஆசைப்பட்டவரே,

பிறர் சிநேகத்தின் சாங்கோபாங்கத்தை அடைந்தவரே,

புறத்தியார் ஈடேற்றத்துக்காக எந்நேரமுங் கவன விசாரமாயிருந்தவரே,

தேவதோத்திரத்துக்கும் மனிதராத்தும நன்மைக்கும் அத்தியந்த பற்றுதலையுஞ் சுறுசுறுப்பையுங் கொண்டவரே,

தேவசிநேகத்தின் பொக்கிஷமே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உத்தரிக்கிற ஸ்தலத்திலுள்ள ஆத்துமாக்களில் அநேகருடைய அவதியைத் தீர்க்க மிகவும் உதவியானவரே,

சுகிர்த குணத்தினாலும் பரிசுத்த நடக்கையினாலுஞ் சம்மனசுபோலத் தோன்றினவரே,

தேவசிநேகத்தாலுஞ் சர்வேசுரனுடைய இருச்சனத்தை நடத்தின பராமரிக்கையாலும் பிதாப்பிதா வென்னத்தக்கவரே,

பெற்ற வரத்தாலும் ஞானத்தாலும் தீர்க்கதரிசியே,

பேராலும் பேறுகளாலும் அப்போஸ்தலரே,

சகல பாஷைகளிலும் அஞ்ஞான ஜனங்களுக்குச் சத்தியந் தெளிவித்த வேதபாரகரே,

சேசுக்கிறீஸ்துவைப்பற்றிப் பிராணனைத் தரத்துணிந்த தாற்பரியத்தால் வேதசாட்சியே,

சுகிர்த தவவொழுக்க நடக்கையால் ஸ்துதியரே,

ஆத்துமத்திலுஞ் சரீரத்திலும் பரிசுத்த விரத்தரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

தேவகிருபாகட்டாட்சத்தைக்கொண்டு சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய புண்ணியங்களினாலும் அலங்கரிக்கப்பட்டவரோ, எங். வேண்.

உலகத்தின் பாவங்களை... மற்றதும்.

மு.—சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாகத்தக்கதாக,

து.—அர்ச். சவேரியாரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுராசுவாமி! அர்ச். சவேரியாருடைய ஞானபோதகத்தினாலேயும் அவர் பண்ணின அற்புதங்களினாலேயுஞ் சிந்துதேசத்திலுள்ள ஜனங்களைத் தேவரீருடைய திருச்சபையிலே அழைத்துட்படுத்தச் சித்தமானீரே, அவருடைய பூச்சியமான புண்ணிய பலன்களைத் துதித்து வணங்குகிற நாங்கள் அவருடைய சுகிர்த மாதிரிகைகளை அநுசரிக்க அனுக்கிரகஞ் செய்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாஞ் சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும். ஆமென்சேசு.

அர்ச். ஞானப்பிரகாசியார் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்... மற்றதும்.

ஜென்மப் பாவமில்லாமற் உற்பவித்த அர்ச். மரியாயே,

மாசில்லாத அர்ச். ஞானப்பிரகாசியாரே,

அர்ச். இஞ்ஞாசியாருக்கு மிகவும் பிரிய புத்திரரான அர்ச். ஞானப்பிரகாசியாரே,

தேவமாதாவின் புதுமையால் பிறந்தவரே,

தேவமாதாவினிடத்தில் விசேஷ ஆதரவு பெற்றவரே,

முதல் வார்த்தையாகச் சேசுமரியாயே யென்று வசனித்தவரே,

புத்திவந்தவுடனே தேவ ஊழியத்துக்கு உம்மை முழுதும் ஒப்புக்கொடுத்தவரே,

தேவ வரப்பிரசாதங்களால் சம்பூரணமாய் அலங்கரிக்கப்பட்டவரே,

இஸ்பிரீத்துசாந்துவினால் நிரப்பப்பட்டவரே,

தேவபத்தி விசுவாசத்தில் மிகவும் உறுதிப்பட்டவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

நாளுக்குநாள் மென்மேலுந் தேவசிநேகத்தில் மிகவும் வர்த்தித்தவரோ,

மேலாங்கிஷத்துக்குக் கீழாங்கிஷத்தை ஆள் மேளையாகக் கீழ்ப்படியப் பண்ணினவரோ,

தேவமாதாவுக்கு உம்மைமுழுதும் பாதகாணிக்கையாக ஒப்புக்கொடுத்தவரோ,

ஒன்பதாம் வயதில்தானே மரணபரியந்தம் விரத்தனாயிருப்பேனென்று வார்த்தைப்பாடு கொடுத்தவரோ,

உத்தம மனஸ்தாப மிகுதியினாலே சோபமடைந்தவரோ,

தபசின் கடினத்திலே மிகுந்தவரோ,

சரீரத்தை முழுதும் பகைத்தவரோ,

பரிசுத்த விரத்தத்தை அனுசரிக்கிறவர்களுக்கு உத்தம மாதிரிகையே,

உத்தம புண்ணியவழியிலே நடக்கிறவாலருக்குத் தஞ்சமாயிருக்கிறவரோ,

படிக்கிற வாலர்களின் மகிமையும் ஆதரவுமானவரோ,

சரீரமில்லாதவனைப்போலே ஜெபத்தியானத்திலே பரவசமாயிருந்தவரோ,

துன்பப்படுகிறவர்களுக்கு இன்பமான ஆறுதலே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பகையாளிகளைத் தங்களுக்குள்ளே சமாதானப்படுத்தப் பிரயாசப்பட்டவரோ,

மனதரித்திரத்தை மிகவும் விரும்பி அனுசரித்தவரோ,

மகா சாது பொறுமையுள்ள அர்ச். ஞானப்பிரகாசியாரே,

ஆச்சரியத்துக்குரிய கீழ்ப்படிதலால் விளங்கினவரோ,

கன்னியருடைய பரிசுத்த கண்ணாடியே,

ஏழைப் பரதேசிகளையும் வியாதிக்காரர்களையும் மிகுந்த பட்சத்துடனே விசாரித்துக்கொண்டு வந்தவரோ,

மிகுந்த தேவசிநேகத்தினாலே சம்மனசுகளுக்கு இணையானவரோ,

சேசுநாதருடைய திருக்காயங்களை மகா பத்தியோடே தியானித்துக்கொண்டு வந்தவரோ,

சேசுநாதருடைய திவ்விய இருதயத்தின் பேரிலே மகா பத்தியுள்ளவரோ,

மகா ஆச்சரியவிதமாய்த் திவ்விய நற்கருணையைப் பூசித்தவரோ,

தேவமாதாவினுடைய வியாகுலத்தின் பேரிலே மிகுந்த இரக்கங்கொண்டிருந்தவரோ,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சேசுசபையின் அலங்கார சிறப்பே,

மற்றச் சந்நியாசிகளுக்கு உத்தம மாதிரியானவரே,

பிறசிநேக மிகுதியால் மரணம் அடைந்தவரே,

திரு இருதயத் திருநாளிலே மரித்த அர்ச். ஞானப்பிரகாசியாரே,

எண்ணப்படாத ஜனங்களுக்குப் புதுமையாக உதவிசெய்தவரே,

பரலோகத்தில் அத்தியந்த மகிமை வல்லமை அடைந்தவரே,

இக்காலங்களிலே முதலாய் மகா அற்புதங்களைச் செய்துகொண்டு வருகிறவரே,

தேவசிநேகத்தின் பெருக்கத்தினாலே பத்திசுவாலகரே,

தேவதோத்திர மகிமை எங்கும் பரம்பவேணுமென்கிற அபேட்சையினாலே அப்போஸ்தலரே,

சத்தியவேதத்துக்காக உயிரை விடவேணுமென்கிற தாற்பரியத்தினாலே வேதசாட்சியானவரே,

விரத்தத்துவத்தின் பரிசுத்ததனத்தினாலே சம்மனசுகளுக்குள்ளே மிகவும் பிரதாபிக்கிற அர்ச். ஞானப்பிரகாசியாரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உலகத்தின் பாவங்களை மற்றதும்.

மு.—சுவாமீ நாங்கள் கூப்பிடுகிற சத்தம்,

து.—தேவரீருடைய சந்நிதிமட்டும் வரக்கடவது.

பிரார்த்திக்கக்கடவோம்.

தேவ வரப்பிரசாதங்களைத் தந்தருளுகிற சர்வேசுராசுவாமீ, அர்ச். ஞானப்பிரகாசியாரைச் சிறுபத்திலேதானே உமது ஊழியத்துக்கு அழைத்துக்கொண்டு அவரிடத்திலே ஒரு அற்பக்குற்றமுதலா யில்லாதிருக்கவும், ஆச்சரியமான அருந்தவங்கள் விளங்கவும், பரிபூரண அனுக்கிரகம் பண்ணினீரே. அவர் பேறுபெற்ற புண்ணியபலன்களையும் அவருடைய மன்றாட்டுகளையும்பார்த்து நாங்கள் இற்றைவரைக்கும் பாவிகளாயிருந்தாலும் இனிமேல் அவரைப்போலே பரிசுத்தராயிருக்கவும், அவருடைய உத்தம தவங்களை அனுசரிக்கவும் எங்களுக்கு அனுக்கிரகம் பண்ணியருளும். இந்த மன்றாட்டுகளையெல்லாம் சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும்.

ஆமென்சேசு.

அர்ச். செபஸ்தியார் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்... மற்றதும்.

வேதசாட்சிகளுக்கு இராக்கினியாகிய அர்ச். மரியாயே,

அர்ச். செபஸ்தியாரே,

உயர்ந்த கோத்திரத்தின் பிரதாப மகிமையான அர்ச். செபஸ்தியாரே,

உமது பிறப்பினால் நர்போன் என்கிற பட்டணத்தை முக்கியப்படுத்தினவரே,

இத்தலி தேசத்தில் அதிசய புண்ணியப் பிரகாசத்தினால் விளங்கினவரே,

வேதத்துக்காகத் துன்பப்பட்ட விசுவாசிகளுக்கு ஆதரவாயிருக்கப் படையில் சேவித்தவரே,

அஞ்ஞான இருளில் ஞானக்கதிரால் பிரகாசித்தவரே,

தரித்திரர்களுக்கு உதார தகப்பனாயிருந்தவரே,

நிற்பந்தங்களுக்குள் தத்தளித்த வேதசாட்சிகளைப் புத்திமதிசொல்லித் திடப்படுத்திப் பரகதியில் சேர்ப்பித்தவரே,

ஆச்சரியத்துக்குரிய ஞானத்தோடுந் தைரியத்தோடும் வேதசத்தியங்களைப் பிரசங்கித்தவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

அநேக அற்புதங்களாலுஞ் சேசுக்கிறீஸ்துவினுடைய வேத விசுவாசத்தை விளங்கப்பண்ணினவரே,

வாக்கினாலுங் கிரியையினாலும் வல்லவராயிருந்தவரே,

சத்தியத்துக்காக உபத்திரவப்பட்டவர்களுக்கு மிகுந்த தைரியத்தை வருவித்தவரே,

வேதசாட்சிகளுக்குத் தங்கள் வேதனைகளிலும் மரணவேளையிலும் பலமுந் தேற்றரவுமாயிருந்தவரே,

அநேகர் வலிய வேதசாட்சிகளாவதற்கும் மோக்ஷ இராச்சியத்தை அடைவதற்கும் எத்தனமாயிருந்தவரே,

திடமான விசுவாசத்தினாலுஞ் சுகிர்தவொழுக்கத்தினாலும் யாவர்க்கும் நல்ல மாதிரிகையாயிருந்தவரே,

தருமக் கண்ணாடியானவரே,

பத்திநிறைந்த வாக்கியங்களால் அநேகர் இருதயத்தில் தேவசிநேக அக்கினியை மூட்டி வளர்த்தவரே,

அஞ்ஞானிகளான அநேகருக்குச் சத்தியத்தைத் தெளிவித்து ஞானதீட்சை பெறுவித்தவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பேர்பெற்ற பெரிய உத்தியோகஸ்தரை முதலாய் அஞ்ஞானத்தினின்று திருப்பிச் சத்திய திருச்சபையில் சேர்ப்பித்தவரே,

அதிசயமான சகல புண்ணியங்களிலும் தைரிய வீரசூரத்துவத்திலும் அதிகரித்தவரே,

விசுவாசிகளுக்கு உதவியாகச் சக்கரவர்த்தியான உரோமாபுரி இராயனிடத்தில் சேர்வைத் தலைவராகத் தேவகிருபையால் உயர்த்தப்பட்டவரே,

சர்வேசுரனுக்கும் மனிதர்களுக்கும் மிகவும் பிரியப்பட்டவரே,

சத்திய திருச்சபைக்குத் தஞ்சமாயிருந்தவரே,

அர்ச். பாப்பானவருக்கு மிகவும் இஷ்டமும் ஆறுதலும் அகமகிழ்ச்சியுமாயிருந்தவரே,

சிலுவை அடையாளத்தால் திமிர்வாதத்தை நீக்கினவரே,

ஊமையைப் பேசுவித்தவரே,

அதிசயமாக அநேக வியாதிகளைத் தீர்த்து ஆரோக்கியங்கொடுத்த உத்தம வைத்தியரே,

எண்ணப்படாத புண்ணிய நன்மை அற்புதங்களைச் செய்தவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பசாசுகளுக்குப் பயங்கரமான சாட்டையாயிருந்தவரே,

உலகம் பசாசு சரீரத்தின் தந்திரங்களையெல்லாஞ் ஜெயித்தவரே,

பாலியத்திலும் அழியாத கற்பினால் விளங்கினவரே,

அத்தியந்த விசுவாச திடனை உடைத்தானவரே,

இடைவிடாமல் தேவசிநேக அக்கினியால் எரிந்த ஞானச்சூளையே,

உலக மகிமை பெருமை ஆஸ்தி சுகமெல்லாம் பிறக்கணித்தவரே,

சேசுநாதருடைய சிநேகத்தைப்பற்றி பூச்சக்கரவர்த்தியான இராயனுடைய சிநேகத்தையும், அவன் தந்த மேலான உத்தியோகங்களையும் இகழ்ந்தவரே,

சேசுநாதரைப்பற்றிப் பிராணனைத் தர மிகவும் அபேட்சித்தவரே,

சத்தியவேதத்தை அனுசரித்ததைப் பற்றி இராயனால் மரணத்தீர்வை இடப்பட்டவரே,

திரளான அம்புகளால் எய்யப்பட்டவரே,

அம்புகளால் ஊடுருவப்பட்டு மரித்தவராக எண்ணி விடப்பட்டவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உயிர் பிழைத்து மறுபடியும் அதிசய தைரியத்துடனே இராயன் முன்னிலையிற் போய் அவன் கிறீஸ்துவர்களைவாதித்த அநியாய குரூரத்தின்பேரில் கண்டித்தவரே,

குரூரமாறாத இராயன் கட்டளையால் சாட்டைக் கசைகளையும் பெருந்தடிகளையுங் கொண்டு கொல்லப்பட்டவரே,

எந்த நிற்பந்தத்துக்கும் அஞ்சாதவராகிய வேதசாட்சியே,

விசுவாசத்தில் ஒருபோதுந் தத்தளியாத வேதசாட்சியே,

உமது இரத்தத்தால் கிறீஸ்து வேதத்தை மெய்ப்பித்த உத்தம வேதசாட்சியே,

அத்தியந்த தைரிய சந்தோஷத்துடனே வேதத்துக்காகப் பிராணனைத்தந்த வேதசாட்சியே,

தரிசனையில் ஏவுதலைப்பெற்ற ஒரு புண்ணிய தலைவியால் மிகுந்த பூச்சியத்துடன் அடக்கம்பண்ணப்பட்டவரே,

மோக்ஷவிராச்சியத்திற் சர்வேசுரனால் அத்தியந்த சோதிமகிமையுள்ள வேதசாட்சி முடி சூட்டப்பட்டவரே,

வேதசாட்சிகளுக்குள் விசேஷ மகிமைப்பிரதாபத்துடனே பிரகாசிக்கிறவரே

உமது மன்றாட்டின் உதவியால் உரோமாபுரி முதலிய பட்டணங்களினின்று

ஏ.ஜ.க்ஷ.கா.ஞ ஒ.உ.ஷ.ஞ.க.ஓ.கா.ஊ.ஜ.ந.

கொள்ளைநோய் பெருவாரிக்காய்ச்சலை நீக்கினதினால் மிகவும் பேர்பெற்றவரே,

பூலோகமெங்கும் சுகிர்தவாசம் பரிமளிக்கிற நாமமுடைத்தானவரே,

சகல கிறீஸ்துவர்களுக்கும் தயைநிறைந்த தகப்பனானவரே,

வைசூரி முதலிய வியாதி துன்பத்தில் ஆதரவும் அடைக்கலமுமாயிருக்கிறவரே,

உலகத்தின் பாவங்களை மற்றதும்.

நாங்கள் சேசுக்கிறீஸ்துவின் வாக்குத்தத்தங்களுக்குப் பாத்திரவான்களாகத்தக்கதாக, அர்ச். செபஸ்தியாரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

ஏ.ஜ. ஒ.உ.ஷ.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வவல்லபமுள்ள சர்வேசுரா சுவாமீ! எங்கள் இக்கட்டுகளையும் பலவீனத்தையுங் கிருபையுடனே பார்த்து அடியோர்கள் செய்த பாவங்களின் கனத்தினால் எங்களுக்கு வந்திருக்கிற துன்பதுரித வருத்தங்களின்பேரில் சித்தமிரங்கி அர்ச். செபஸ்தியாருடைய மன்றாட்டினால் எங்களுக்கு வேண்டிய ஆறுதலும் ஆதரவுங் கிடைக்கும்படிக்குக் கிருபை செய்தருள வேணுமென்று தேவரீரைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். ஆமென் சேசு.

திருக்குடும்பத்தின் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்... மற்றதும்.

அவதரித்த தேவவார்த்தையின் திருக்குடும்பமே,

பூலோகத்தில் அர்ச். தமதிரித்துவத்தின் பாவனையாகிய திருக்குடும்பமே,

பரமதேவபிதா அத்தியந்த பிரியத்துடனே நேசித்த திருக்குடும்பமே,

சகல வரப்பிரசாதங்களாலும் நிறைந்தலங்கரிக்கப்பட்ட திருக்குடும்பமே,

எல்லாப் புண்ணியங்களுக்கும் உத்தம மாதிரிகையே,

எல்லா இருதயங்களின் நேசத்துக்குப் பாத்திரமான திருக்குடும்பமே,

மோக்ஷத்துக்கு நியமிக்கப்பட்டவர்களுடைய ஞான பொக்கிஷமே,

பரலோகத்தின் பேரின்பமே,

சகல சம்மனசுகளாலும் வணங்கப்பட்ட திருக்குடும்பமே,

மனிதர்களால் நிந்திக்கப்பட்டிருந்தாலும் தேவசமுகத்தில் உந்நத மாட்சிமை பொருந்தின திருக்குடும்பமே,

பெத்லேலம் ஊரார்களால் பிறக்கணிக்கப்பட்டு ஒரு மாட்டுக்கொட்டாயில் ஒடுங்கிப்போக அவசரப்பட்ட திருக்குடும்பமே,

எங்களை இரட்சித்தருளும்.

திவ்விய இரட்சகர் பிறந்த சமயத்தில் இடையர்களால் சந்திக்கப்பட்ட திருக்குடும்பமே,

பிறந்த திவ்விய குழந்தைக்குத் தோத்திரமாகச் சம்மனசுக்கள் பாடின சங்கீதங்களைக் கேட்ட திருக்குடும்பமே,

மூன்றிராஜாக்களால் வணங்கிப் பாத காணிக்கை ஒப்புக்கொடுக்கப்பட்ட திருக்குடும்பமே,

தேவாலயத்தில் திவ்விய பாலனை ஏந்தின சிமியோனென்கிற மகாத்துமாவானவர் அவனைக்குறித்துச் சொல்லிய ஸ்துதிகளையுந் தீர்க்கதரிசனங்களையுங் கேட்டுச் சந்தோஷமும் துயரமும்பட்ட திருக்குடும்பமே,

எண்ணிறந்த ஆபத்துக்குள்ளே எஜிப்து தேசத்துக்கு ஓடிப்போகக் கட்டளையிட்ட சம்மனசுவின் வாக்கியத்துக்குத் தாமதமின்றிக் கீழ்ப்படிந்த திருக்குடும்பமே,

எரோதனென்கிற இராஜாவின் கொடுமைக்குத் தப்பித்துக்கொள்ள அத்தேசத்துக்கு ஓடிப்போகக் கட்டாயப்பட்ட திருக்குடும்பமே,

எங்களை இரட்சித்தருளும்.

அந்நிய தேசத்தில் பரதேசியான திருக்குடும்பமே,

பூலோகத்துக்குத் தெரியப்படாமல் மறைந்த தன்மையாய் ஜீவித்துவந்த திருக்குடும்பமே,

தரித்திரமும் உழைப்புந் தவமுமுள்ள சீவியமாய்ச் சீவித்த திருக்குடும்பமே,

நெற்றி வேர்த்து அன்னஞ் சம்பாதித்துக்கொண்ட திருக்குடும்பமே,

பிரபஞ்ச நன்மை வறுமையையும் பரலோக நன்மை மிகுதியையுங் கொண்டிருந்த திருக்குடும்பமே,

பிறசிநேகத்துக்குஞ் சமாதான ஒற்றுமைக்கும் மாதிரிகையான திருக்குடும்பமே,

நினைப்பினாலும் மனப்பற்றுதலினாலும் முழுதும் பரலோகத்தில் சஞ்சரித்திருந்த திருக்குடும்பமே,

உமது ஆயுள் முழுமையும் இடைவிடாத செபமுமாய் ஞானயோகமுமாயிருந்த திருக்குடும்பமே,

துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதலும் உம்மை மன்றாடுகிறவர்களின் நம்பிக்கையும் எல்லாக் கிறீஸ்துவர்களின் குடும்பங்களுக்குச் சுகிர்த மாதிரிகையுமாகிய திருக்குடும்பமே,

எங்களை இரட்சித்துக்கொள்ளும்.

உலகத்தின் பாவங்களை ...மற்றதும்

சேசுவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்,

சேசுவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

எங்கள் ஆண்டவருஞ் சர்வேசுரனுடைய ஏக குமாரனுமாகிய திவ்விய சேசுவே, எங்கள்பேரில் தயைநேசத்தைப்பற்றிக் குழந்தையாய்ப் பிறந்து உம்முடைய திரு மாதாவாகிய அர்சி. கன்னிமரியம்மாளுக்கும், அர்ச். சூசையப்பருக்குந் தாழ்ச்சியாய்க் கீழ்ப்படிந்து முப்பது வருஷகாலம் பூலோகத்துக்கு மறைந்த தரித்திர ஜீவியமாய்ச் சஞ்சரிக்கத் திருவுளமானீரே. அடியோர்கள் பரலோகத்தில் உமது மகிமைக்குப் பங்காளிகளாகத் தக்கதாக இவ்வுலகத்தில் உமது ஆழ்ந்த தாழ்ச்சியைக் கண்டுபாவிக்க எங்களுக்கு அனுக்கிரகஞ் செய்தருளும். அநவரத சதா காலமும் பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடுஞ் சுயஞ்சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிற ஆண்டவரே. ஆமென்சேசு.

நன்மரணப் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்... மற்றதும்.

சுவாமீ, தேவரீருடைய மட்டில்லாத கிருபையைக்கொண்டு,

மாசில்லாத கன்னிகையான உமது திருமாதாவின் பேறுபலன்களையும் மன்றாட்டையும் பார்த்து,

தூதரும் அதிதூதருமாகிய சகல சம்மனசுக்களுடைய மன்றாட்டையும் பார்த்து,

அப்போஸ்தலரும் சுவிசேஷகருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய பேறுபலன்களையும் மன்றாட்டையும் பார்த்து,

மேற்றிராணிகளும் ஸ்துதியர்களுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய பேறுபலன்களையும் மன்றாட்டையும் பார்த்து,

வேத வித்தியாபாரகரான சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய பேறுபலன்களையும் மன்றாட்டையும் பார்த்து,

சந்நியாசிகளுந் தபோதனருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய பேறுபலன்களையும் மன்றாட்டையும் பார்த்து,

குருப்பட்டமுள்ளவர்களும் ஆசாரியருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய பேறுபலன்களையும் மன்றாட்டையும் பார்த்து,

எங்களுக்கு நன்மரணந் தந்தருளுஞ் சுவாமீ.

கன்னியாஸ்திரிகளும் விதவை ஸ்திரீகளுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய பேறுபலன்களையும் மன்றாட்டையும் பார்த்து,

அசுப்பில் வருகிற துர்மரணத்திலே நின்று,

மரணத்தறுவாயிலே சகல பாவங்களிலே நின்று,

மரணத்தறுவாயிலே பசாசினுடைய சகல உபாய தந்திரங்களிலே நின்று,

மரணத்தறுவாயிலே எவ்வித அச்சத்திலேயும் நின்று,

மரணத்தறுவாயிலே அவநம்பிக்கையான தந்திரத்திலே நின்று,

மரணத்தறுவாயிலே வீண் நம்பிக்கையான தந்திரத்திலே நின்று,

மரணத்தறுவாயிலே கன்னெஞ்சத்தனத்திலே நின்று,

மரணத்தறுவாயிலே உமது கோபத்திலே நின்று,

மரணத்தறுவாயிலே பசாசினுடைய வல்லமையிலே நின்று,

மரணத்தறுவாயிலே நரகவேதனையிலே நின்று,

எங்களை இரட்சித்துக்கொள்ளுஞ் சுவாமீ.

மரணத்தறுவாயிலே உலகஞ்சரீரம் உறவின்முறையார் முதலான சகல மயக்கங்களிலே நின்று, — எங். இரட். சுவாமீ.

மரணத்தறுவாயிலே நல்ல பாவசங்கீர்த்தனஞ்செய்யவுந் தேவநற்கருணை வாங்கவும் அவஸ்தைப்பூசுதல் பெறவும்,

மரணத்தறுவாயிலே, தேவஇஷ்டப்பிரசாதத்தின் பெருக்கத்தை,

மரணத்தறுவாயிலே எங்கள் பாவங்களுக்குத் தக்க மனஸ்தாபப் பெருக்கத்தை,

மரணத்தறுவாயிலே விடாத நம்பிக்கையையுந் தவறாத விசுவாசத்தையும்,

மரணத்தறுவாயிலே தேவசிநேகத்தின் மிகுதியை,

மரணத்தறுவாயிலே, நேரிடப்போகிற கஸ்தி வாதைகளில் அசையாத பொறுமையை,

மரணத்தறுவாயிலே, பசாசின் போர்ச்சண்டையில் வெல்லப்படாத, தைரியத்தை,

மரணத்தறுவாயிலே, தேவரீருடைய திருச்சித்தத்துக்குக் கீழ்ப்படிதலை,

மரணத்தறுவாயிலே, சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசிக்கவேணுமென்கிற ஆசையை,

உமது மகா இரக்கத்தைக்கொண்டு எங்களைக் காத்தருளும் சுவாமீ.

மரணத்தறுவாயிலே, மாசில்லாத திவ்விய மாதாவின் ஆதரவையும், சம்மனசுக்களுடைய அடைக்கலத்தையும், சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய சிபாரிசையும்,

மரணத்தறுவாயிலே, குருவானவருடைய ஒத்தாசையையும், ஆறுதலையும்,

நித்திய பிதாவின் ஏக சுதனாகிய சேசுக்கிறீஸ்துநாதரே, எங்கள் மரணத்தறுவாயிலே, தேவரீருடைய மாங்கிஷ ஐக்கியத்தைப் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீருடைய பிறப்பைப் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீருடைய ஞானஸ்நானத்தையும், உபவாசத்தையும் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீருடைய வருத்தமான சீவியத்தைப் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீருடைய திருவிழிப்பையும் தாகத்தையும் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீர் சிந்தின திருக்கண்ணீர்களைப் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீருடைய திவ்விய இருதயம் அநுபவித்த அச்சத்தையும் கிலேசத்தையும் பார்த்து,

எங்கள் பாவங்களைப்பொறுத்து இரட்சித்தருளும் சுவாமீ.

மரணத்தறுவாயிலே, தேவரீருடைய திரு இரத்தத்தையும் வியர்வையையும் பார்த்து,

மரணத்தறுவாயிலே, கற்றூணோடே கட்டப்பட்ட தேவரீருடைய திருக்கரங்களைப் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீர் சகித்த நிந்தைகளையும் அவமானங்களையும் அறைகளையும் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீர் சாட்டைகளாலும் கசைகளாலும் பட்ட திருக்காயங்களைப் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீருக்குத் தரிசிக்கப்பட்ட முண்முடியைப் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீர் பற்பல இடங்களில் சிந்தின திவ்விய இரத்தத்தைப் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீருடைய திருச்சிலுவையையும் பாடுகளையும் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீருடைய திருத்தாயார் சிலுவையடியிலே அநுபவித்த சொல்லிலடங்காத வியாகுலங்களைப் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீருக்குக் கொடுக்கப்பட்ட பிச்சோடே கலந்த புளித்த முந்திரிகை இரசத்தைப் பார்த்து,

மரணத்தறுவாயிலே, இருப்பாணிகளால் ஊடுருவப்பட்ட தேவரீருடைய திருக்கரங்களையும் பாதங்களையும் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீர் திருச்சிலுவையிலே மூன்றுமணிநேரம் அநுபவித்த அவஸ்தையைப் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீர் நித்திய பிதாவுக்கு ஒப்புக்கொடுத்த உமது திவ்விய ஆத்துமத்தைப் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீருடைய திருச்சரீரத்தைவிட்டுப் பிரிந்த உமது திவ்விய ஆத்துமத்தைப் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீருடைய திருமரணத்தைப் பார்த்து,

மரணத்தறுவாயிலே, ஈட்டியினால் குத்துண்ட தேவரீருடைய திரு இருதயத்தைப் பார்த்து,

மரணத்தறுவாயிலே, குத்தப்பட்ட தேவரீருடைய திரு விலாவிலே நின்று சொரிந்து விழுந்த உதிரத்தையும் தண்ணீரையும் பார்த்து,

மரணத்தறுவாயிலே, தேவரீருடைய திரு அடக்கத்தைப் பார்த்து,

உலகத்தின் பாவங்களை ...மற்றதும்.

சேசுவே, எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்,

சேசுவே, எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

அதிதூதரான அர்ச். மிக்கயேலே, நவவிலாச சபையிலுட்பட்ட சகல சம்மனசுக்களே, எங்களுக்குக் காவலாயிருக்கிற தேவதூதர்களே, நாங்கள் பேர்கொண்ட மோக்ஷவாசிகளே, நாங்கள் தேவரீர் சந்நிதியினின்று தள்ளப்படாமல் எங்கள் மரணத்தறுவாயிலே எங்களைக் காப்பாற்றித் தாபரிக்கவேணுமென்று உங்களைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

சேசுக்கிறீஸ்துநாதருடையவும் தேவமாதாவுடையவும் திருக்கரங்களிற் பாக்கியமான மரணத்தையடைந்த அர்ச். சூசையப்பரே, மரிக்கிறவர்களுக்குச் சரணமாக அளிக்கப்பட்ட நீரே எங்கள் மரணநேரத்திலே எங்களை ஆதரித்து இஷ்டப்பிரசாதத்தோடே மரிக்கச் செய்தருளும்.

பரிசுத்த கன்னிகையுந் தேவதாயுமாகிய அர்ச். மாதாவே, சகல அர்ச்சியசிஷ்டவர்க

ளுடைய இராக்கினியே, கஸ்திப்படுகிறவர்களுக்குத் தேற்றரவே, நிற்பாக்கியராகிய எங்களுக்கிரங்கி எங்களுடைய ஆத்துமம் பாவமில்லாமலும் பாவத்துக்குச் செலுத்தவேண்டிய கடனில்லாமலுஞ் சரீரத்தைவிட்டுப் பிரிந்து சம்மனசுக்களாற் கைக்கொள்ளப்படவும், மோக்ஷ இராச்சியத்திற் பிரவேசிக்கவும், உமது திருக்குமாரனிடத்தில் வேண்டிக் கொள்ள வேணுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம் தாயே. ஆமென் சேசு.

ஜென்மப்பாவமில்லாமலுற்பவித்த அர்ச். தேவமாதாவின் சபையார் அனுசரிக்க வேண்டிய ஒழுங்குகள்.

1. இந்தச் சபையை ஆண்டு நடத்தும் அமலோற்பவமாதா அற்புத தயை நிறைந்த ஆண்டவளாயிருப்பதால், பத்தி உருக்கத்தோடு தம்மை மன்றாடி, தமது அடைக்கலமாக ஓடிவருகிறவர்களை ஆதரித்துக் காப்பாற்றுவதுபோலே, இந்தச் சபையையும் ஆண்டு நடத்தி வருகிறாளென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால் இந்தச் சபையிலுட்பட்டவர்கள் மிகுந்த பத்திவிநயத்தோடே தேவதாயாரைச் சங்கித்து உத்தம புண்ணிய முயற்சிகளை அனுசரித்து, அத்திருத் தாயார் காட்டின சுகிர்த நடக்கையைத் தங்களால் கூடினமாத்திரங் கண்டுபாவிக்கப் பிரயாசப்படுவார்கள். இதன்றியே திருக்கன்னிமாதாவின்பேரில் தங்களுக்கு விசேஷ பத்தியும் அன்பும் உண்டாகத்தக்கதாக, ஒருவருக்கொருவர் அன்னியோன்னியமாய்ச் சம்பாஷித்து அந்த ஆண்டவள் செய்துவரும் எண்ணிறந்த உபகாரசகாயங்களைக் குறித்து உருக்க நேசப்பற்றுதலோடே பேசிப் பழகவும், தேவதாயாரின் திருநாமத்தை மென்மேலும் போற்

றிப்புகழ்ந்து கொண்டாட வேணுமென்கிற ஆசை தங்கள் மனதில் ஸ்திரமாய் ஊன்றவும் பிரயாசப்படக்கடவார்கள்.

2. குருசுவாமியார் ஒருவர் இந்தச் சபையை விசாரித்து வருவதுமல்லாமல், இதில் உட்பட்ட இரண்டு துணைவர்களின் ஆலோசனைப்படி ஒரு சபைத்தலைவன் இதை நடத்திவருவானாக. இதன்றியே இச்சபைக்கு ஒரு சம்பிரதியும் ஆறு அல்லது பன்னிரண்டு ஆலோசனைக்காரர்களும் இருக்கவேண்டும். இவர்கள் அலுவல் ஏதென்றால், சபையை ஒழுங்காய் நடத்திவருவதில் தலைவனுக்கு ஆலோசனை தந்து அவனுக்கு உதவிசெய்வதாம். சபையார் சகலரும் அதிலிருக்கிற உத்தியோகஸ்தர்களுக்குச் செல்லுமான சங்கை மரியாதை காண்பித்து, சபைக்கடுத்த விஷயங்களில் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து வருவார்களாக.

3. கிறீஸ்துவர்களுக்கு அடுத்த நன்னடக்கை தேவபத்தி சுறுசுறுப்பிலே விசுவாசிகள் நாளுக்குநாள் வர்த்தித்து வருவதே இந்தச் சபையின் கதியாகக்கொள்ள, இதை அடைவதற்குச் சபையார் அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்து திவ்வியநற்கருணை உட்கொள்ளுகிறது சொல்லிடங்காத பிர

யோசனமுள்ளதாம். ஆகையால் இந்தச் சபையில் உட்பட மனசுள்ள சகலரும் இதில் உட்படுவதற்கு முந்திப் பொதுப்பாவசங்கீர்த்தனம் செய்து ஆத்துமசுத்தி பண்ணவேண்டியது. இது காரியத்தில் நியாயமான முகாந்தரத்தைப்பற்றி ஆத்தும குருவானவர் நிதானிக்கிறபடி நடந்துகொள்ளவேண்டியது. இதன்பின் சபையார் மாதாந்தரம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையில் பாவசங்கீர்த்தனம் பண்ணித் திவ்விய நன்மை வாங்கக்கடவார்கள். மீளவும் கர்த்தர் பிறந்த திருநாள், விருத்தசேதனத் தி., கர்த்தர் உயிர்த்த தி., கர்த்தர் பரலோகத்துக்கு ஆரோகணமான தி., இஸ்பிரீத்துசாந்து தி., திவ்விய நற்கருணைத் தி., தேவமாதா ஜென்மப்பாவமில்லாமலுற்பவித்த தி., தேவமாதா பிறந்த தி., மங்களவார்த்தைத் தி., சுத்திகரத் தி., தேவமாதா மோக்ஷத்துக் கெழுந்தருளின தி., சகல மோக்ஷவாசிகள் தி., அர்ச். ஸ்நாபக அருளப்பர் தி., அர்ச். இராயப்பர் சின்னப்பர் தி., இவைகளிலும் பாவசங்கீர்த்தனம் செய்து திவ்விய நன்மை வாங்கக்கடவார்கள். இந்தத் திருநாட்களில் ஒன்று மாதத்தின் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையில் வந்தாலும் அல்லது அதற்கு முன் பின் சமீபத்தில் நேரிட்டாலும் இரண்

டாம் ஞாயிற்றுக்கிழமைக்குப் பதிலாய் அது ஒப்புக்கொள்ளப்படும். இந்தச் சபையின் பிரதான உத்தியோகஸ்தர்கள் தங்கள் ஆத்துமகுருவானவர் நிதானிக்கிறபடி மற்றவர்களைப் பார்க்க அடிக்கடி திவ்விய சற்பிரசாதம் வாங்குவது நல்லதாம்.

4. சபையார் யாவரும் கூடியமட்டும் ஒரே குருவானவரிடத்தில் பாவசங்கீர்த்தனம் பண்ணி, தங்கள் ஆத்தும காரியங்களைத் தெளிவாய்ச் சொல்லிக்காண்பித்து அவர் சொல்லும் புத்தியின்படியே நடக்கவேண்டும். ஆகிலும் அவசரமிருக்கும்போது வேறே குருவானவரிடத்தில் பாவசங்கீர்த்தனம் செய்யலாம்; விக்கினமில்லை.

5. ஞாயிற்றுக்கிழமைகளிலும் பெரிய திருநாட்களிலும் சபையார் கூட்டங்கூடி விசாரணைக் குருவானவரும் சபைத் தலைவரும் தீர்மானிக்கிறபடியே பத்திக்கடுத்த ஞான முயற்சிகளில் ஒரு மணிநேரம் செலவழிக்கக்கடவார்கள்.

சபைக்கூட்டம் கூடும் நாட்களில் கூட்டம் ஆரம்பிக்குமுன், இஸ்பிரீத்துசாந்து மந்திரமும் அதைச் சேர்ந்த மன்றாட்டும், தேவமாதாவைக் குறித்து ஒரு பிரியதத்த மந்திரமும் சொல்லி, கூட்டம் ஆரம்பித்து, முடிக்கும்

போது, தேவமாதாப் பிரார்த்தனை அல்லது சமுத்திரத்தின் நட்சத்திரமே யென்னும் மந்திரமும் பரிபூரண பலனடையும் கருத்துக்காக 5 பர. பிரி. திரி. சொல்லவேண்டியது. அக்கூட்டத்தின்போது சபையில் சேராத எவரையும் விசாரணைக் குருவானவர் உத்தரவின்றி உள்ளே கூட்டிக்கொண்டு வரக்கூடாது.

6 சபையார் நாள்தோறும் கூடினமாத்திரம் திவ்விய பூசை காண்கிறதுமல்லாமல் குறிக்கப்பட்ட நாட்களில் திவ்விய நற்கருணை வாங்கினபிற்பாடு அதற்கு நன்றியறிந்த தோத்திரமாக ஒவ்வொருவன் தன் தன் பத்திக்குத் தக்கது கால்மணி நேரம் ஜெபத்தில் செலவழிக்கவேண்டியது.

7. சபையார் அநுதினம் காலமே கண் விழித்த உடனே சர்வேசுரன் செய்த உபகாரங்களுக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்த பிற்பாடு, 3 பர. பிரி. திரி. சொல்லி, ஒருவிசை விசுவாச மந்திரமும் கிருபைதயாப மந்திரமும் செபித்து, ஆத்தும குருவானவர் சொன்ன ஆலோசனைப்படி ஜெபத்தியானத்தில் கொஞ்சநேரம் செலவழிப்பது உத்தமமாம். இரவில் நித்திரைக்குப்போகுமுன்னே ஆத்துமசோதனை செய்துமுடித்து, உத்தரிக்

கிற ஸ்தலத்து ஆத்துமங்களுக்காக 3 பர. பிரி. திரி. செபித்து, ஒருவிசை 129-ம் சங்கீதமும் சொல்லவேண்டியது.

8. பரலோக இராஜேஸ்பரியின் ஊழியத்தில் விசேஷ பற்றுதலுள்ளவர்களாய் இருப்போமென்று இச்சபையார் கொடுக்கும் வார்த்தைப் பாட்டுக்கு ஒத்தபிரகாரம் மற்றக் கிறீஸ்துவர்களைப் பார்க்க இவர்கள் ஆத்தும சரீர சம்மந்தமான நற்கிரிகைகள் செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டியது. இதற்காக அடிக்கடி பத்தி சுறுசுறுப்போடே பாவசங்கீர்த்தனம் செய்து திவ்விய நற்கருணை வாங்குவதும், தேவமாதாவின் (ஒப்பீஸ்) மந்திரமாலை சொல்வதும், தியானம் ஆத்துமசோதனை செய்வதும், ஜெபமாலை செபிப்பதும், சிறைச்சாலையிலிருப்பவர்களையும் வியாதிஸ்தரையும் சந்தித்து புத்தி சொல்வதும், மரண அவஸ்தைப்படுகிறவர்களுக்கு உதவி செய்வதும், வேத உபதேசம் அறியாதவர்களுக்கு அதைப் படிப்பிப்பதுமாகிய இது முதலிய சுகிர்த கிரிகைகளாலே மிகுந்த புண்ணிய பலன்களைச் சேகரிக்க முயல்வார்களாக. ஆகிலும் இதிலும் மற்றெந்த விஷயத்திலும் சபை விசாரணைக் குருவானவர் சொல்லுகிறபடி நடந்துகொள்ளவேண்டியது.

9. சபைக்கூட்டத்துக்குப் போகக்கூடாதவர்கள், சபை விசாரணைக் குருவானவருக்காவது, சபைத்தலைவனுக்காவது தெரியப்படுத்தி, தங்கள் முகாந்தரத்தைச் சொல்லிக்காட்டவேண்டியது. இதுகாரியத்தில் யாராகிலும் அஜாக்கிரதையினால், சபைக்கூட்டத்துக்கு அடிக்கடி வராதிருந்தால், அல்லது சபை ஒழுங்குகளைச் சரியாய் அநுசரியாதிருந்தால், அல்லது சன்மார்க்க விஷயத்தில் தவறிநடந்தால், விசாரணைக் குருவானவரின் கண்டிப்புக்கு அவர்கள் உள்ளாகவேண்டியது. இப்பேர்ப்பட்ட தப்பிதங்கள் யாரிடத்திலாவது அடிக்கடி நேரிட்டால் அவர்கள் சபையினின்றும் தள்ளப்படுவார்கள்.

10. வருஷாவருஷம் சபையார் ஆரவாரமாய் நடத்தும் திருநாள் செலவுக்கு அவரவர் தங்களால் கூடிய வரிகொடுத்து அத்திருநாளைச் சிறப்பிக்கவேண்டியது. அத்திருநாளில் செய்யவேண்டிய செலவு, சிறப்பு, ஆரவாரம் முதலிய சடங்குகளை முன்னடியே யோசித்துப்பார்த்து, விசாரணைக் குருசுவாமியாரின் ஆலோசனைப்படியே சகலத்தையும் தீர்மானித்துக்கொள்ளவேண்டியது.

11. சபையாருக்குள் யாதொருவன் வியாதியாய் விழுந்தால் சபைத்தலைவன் அவனை அடிக்கடி சந்தித்து அவசரமானால் கடைசித் தேவதிரவிய அநுமானங்களைத் தக்க நேரத்தோடே வியாதிக்காரன் பெற்றுக்கொள்ளத்தக்கதாகக் கண்ணுண்டாயிருக்கவேண்டியது. அவஸ்தைக்காரன் இறந்துபோனால் சபையார் எல்லாரும் கல்லறைமட்டும்போய் அவனை நல்லடக்கஞ் செய்வார்களாக பின் கூடிய சீக்கிரத்தில் சபைக்கூட்டங் கூடி இறந்துபோனவன் ஆத்துமத்துக்காகச் செய்யத்தகும் சுகிர்த முயற்சிகளை நிறைவேற்றவேண்டும், அல்லது ஒவ்வொருவனும் தனித்தனியே எட்டுநாள் மட்டும் தினம் ஒருவிசை 129-ம் சங்கீதமும் அதைச்சேர்ந்த மன்றாட்டும் சொல்லவேண்டும். கடைசியாய் மரித்தவன் ஆத்துமத்துக்காக ஒருவிசையாவது பூசைசெய்து வைப்பார்களாக.

12. சபையாருக்குள் யாதொருவன், சபை ஏற்படுத்தியிருக்கிற ஊரைவிட்டு வேறே ஊருக்குப் போகவேண்டியிருந்தால் சபை விசாரணைக் குருவானவருக்கும் சபைத்தலைவனுக்கும் இதை அறிவிப்பானாக. கூடுமானால் தான் குடியிருக்கப்போகிற ஊரிலுள்ள சபையார் தங்களுக்குள் ஒருவனாகத்

தன்னைச் சேர்த்துக்கொள்ளத்தக்கதாக விசாரணைக் குருவானவரிடத்தில் காகிதப் பத்திரம் கேட்பானாகை. இன்னமும் தான் தூரத்து ஊருக்குப் போயிருந்தாலும் சபையின் பலனுக்குப் பங்காளியாய் இருக்கத் தக்கதாக, சன்மார்க்க நெறிபிசகாமல் யாவருக்கும் நல்ல மாதிரிகையாக நடக்கவேண்டியது. மேலும் தன் செய்திகளை ஆதிச்சபை சங்கத்தாருக்கு அடிக்கடி தெரியப்படுத்தி, தனக்காக அவர்கள் வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளவேண்டியது.

13 மெய்யான சபையாருக்குரிய கடமைகளின் சுருக்கமென்னவென்றால் :—ஆத்துமத்துக்குப் பழுதுவருவிக்கிற துஷ்டர் சகவாசம், ஆகாத வேடிக்கை, நாடகம், கூத்து, குடி, சூது, சண்டை, மனஸ்தாபம் முதலிய பாவச்சமயங்களையெல்லாம் விலக்கித் தள்ளிவிடுவதும், நல்ல கிறீஸ்துவர்களுக்கடுத்த புண்ணிய முயற்சிகளில் நாளுக்குநாள் வர்த்திக்க முயல்வதும், சபையிலிருப்பவர்களைச் சகோதரர்களைப்போலே பாவித்து அன்னியோன்னிய சிநேகமாய்ச் சஞ்சரிப்பதும் கடைசியாய்ப் பரலோக இராக்கினியின் அடைக்கலத்திலிருக்க இவர்களே பாக்கியயோக்கிய சபையாரென்று சகலரும்

எண்ணி மதிக்கும்படியாய் நடந்துகொள்வதாம்.

14 சபையின் ஒழுங்குகளை யாவரும் எளிதாய் அனுசரிக்கத்தக்கதாக அவனவன் தன்னிடத்தில் ஒரு பிரதிவைத்துக்கொண்டு மாதந்தோறும் அந்த ஒழுங்குகளை வாசிக்கவேண்டும். மாதாந்தரம் சபைக்கூட்டத்திலும் சபையின் உத்தியோகஸ்தரைப் புதிதாய் நியமிக்கும்போதும், பிரசித்தமாய் இந்த ஒழுங்குகளை வாசிக்கவேண்டியது. சபையின் உத்தியோகஸ்தர்கள் தங்களுக்குரிய ஒழுங்குகளைத் தாங்களே வாசித்து, அவைகளைச் சரியாய் அனுசரிக்கப் பிரயாசப்படக்கடவார்கள்.

விசேஷித்த ஒழுங்குகள்.

சபைத்தலைவனுக்கடுத்த ஒழுங்குகள்.

1. தலைவனாக நியமிக்கப்பட்டவனிடத்தில் விளங்கும் புண்ணிய நன்னடக்கையினிமித்தம் சபையார் அவனைத் தலைவனாகத் தெரிந்துகொள்ளுகிறபடியால் சபையின் மற்ற அங்கத்தாரைப் பார்க்கிலும் பொது ஒழுங்குகளையும் தன் அலுவலுக்கடுத்த ஒழுங்குகளையும் அவன் சரியாய் அனுசரித்து

வரக்கடவான். இதைப்பற்றித் தன்னைத் தலைவனாகத் தெரிந்துகொண்ட சபையார் எல்லோருக்கும் தன் வாக்கினால் புத்திசொல்லுகிறதைவிட தன் சுகிர்த மாதிரிகையினாலே புத்திசொல்லுகிறது அவனுக்குப் பொருந்தினதென்பது நியாயமாமே. ஆகையால் சபையிலுள்ள மற்ற அங்கத்தாரைப் பார்க்கிலும் சபைத்தலைவன் அடிக்கடி திவ்விய சற்பிரசாதம் வாங்கி ஒழுங்கு அனுசரணையிலே தேர்ந்து, சபையார் அனைவோருக்கும் இவன் எவ்விஷயத்திலும் சிறந்த மாதிரிகையாக விளங்கவேண்டியதாம்.

2. சபைக் கூட்டம் நடக்கவேண்டிய தினத்தில் குறிக்கப்பட்ட நேரத்துக்கு சற்று முந்தியே தலைவன் கோவிலுக்கு வந்து விசாரணைக் குருவானவரால் நியமிக்கப்பட்டபடியே, பத்தியுள்ள முயற்சிகள் நடப்பதற்கு வேண்டிய காரியங்களை முஸ்திப்புசெய்து வைக்கக்கடவான். இவன் சபைக்கூட்டத்திற்கு வர யாதொரு விக்கினம் நேரிட்டால் விசாரணைக் குருவானவருக்குத் தெரியப்படுத்தினபின், முதல் துணைவனுக்கு நேரத்தோடே அறிவித்துத் தனக்குப் பதிலாய் அவன் சகலத்தையும் நடப்பிக்கும்படி திட்டம் செய்யவேண்டியது.

3. தலைவன் சபைக்கு அதிகாரியானாலும் விசாரணைக் குருவானவருக்கு எவ்விஷயத்திலும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியவனாயிருக்கிறான். ஆகையால் சபையை நடத்தும் வகையில் அவருடைய ஆலோசனைப் பிரகாரம் சகலத்திலும் அவரோடு ஒருமைப்பந்தனமாய் நடந்துவரவேண்டும். அவருடைய அனுமதியின்றி சபையில் மாமூலான காரியங்களை அழித்துப்போடவுங் கூடாது; புதிதாய் யாதொன்றையும் ஏற்படுத்தவுங் கூடாது.

4. சபையின் ஒழுங்கு அநுசரணையானது தளர்ந்து கெட்டுப்போகாமலும் சபையின் கீர்த்தி குறையாமலும் இருக்கத்தக்கதாக சபையாரிடத்தில் எந்தத் தப்பிதமும் வேரூன்றி முளைத்தெழும்பும் முன்னமே அதை விவேகத்தோடே விலக்கிவிட வேண்டியிருப்பதால் அப்பேர்ப்பட்ட குறைகள் சபையாரிடத்தில் தோன்றினவுடனே விசாரணைக் குருவானவர் அதை அறியவேண்டியது அவசரமாம். ஆகையால் சபையாருடைய நடக்கையை தலைவன் கண்ணுண்டாய்ப் பார்த்து அவர்களில் யாராவது கிரமந்தப்பி நடக்கிறதை அறிந்தால் விசாரணைக்குருவானவருக்கு அதை இவன் தெரியப்படுத்த வேணும்.

5. சபையாரில் யாராவது வியாதியாய் விழுந்தால் சபையார் பேராலே தலைவன் போய் அவனைச் சந்திப்பதுமல்லாமல் வியாதிக்காரனுக்கு ஆறுதல் வருவித்து நல்ல மாதிரிகை தரக்கூடிய சில அங்கத்தாரைத் தெரிந்தெடுத்து அவனிடத்திற்கு அனுப்பவேண்டும். வியாதி அதிகரித்துவந்தால் அவனுக்காகச் சபையார் வேண்டிக்கொள்ளச் சொல்லி வியாதி அசாத்தியமென்பதையும் அவனுக்கறிவித்து கடைசித் தேவதிரவிய அநுமானங்களை அவன் தக்க நேரத்தோடே பெற்றுக்கொள்ளத் திட்டம் செய்யவேண்டும்.

6. சபையாரில் யாராகிலும் மரணித்தால் கூடியமட்டும் சகல அங்கத்தாரும் அடக்கச் சடங்குக்கு வர அழைத்து அவனை நல்லடக்கம் செய்தபின் அவனாத்துமத்துக்காக, பதினோராவது ஒழுங்குப்படிக்குச் சபையார் செய்யவேண்டிய சுகிர்த முயற்சிகளை அவர்களுக்கு நினைப்பூட்டவேணும். மீளவும் மரித்தவன் ஆத்துமத்துக்காகச் சபைக்கோவிலில் நடக்கும் திவ்விய பூசைக்கு யாவரும் வந்திருந்து ஒருவிசையாவது திவ்விய சற்பிரசாதம் வாங்கி அவனுக்காக ஒப்புக்கொடுக்கவேணும்.

7. மூன்று மாதத்துக்கொருவிசை சபைத்துணைவர்கள் சம்பிரதி இவர்கள் முன்னிலையில் பொக்கிஷக்காரனுடைய கணக்குகளைச் சோதித்துப்பார்த்து விசாரணைக் குருவானவருக்கு அதின் நிலைமையைத் தெரியப்படுத்தவேணும். அந்தக் குருவானவருடைய அனுமதியின்றி யாதொரு செலவும் நடவாதபடி பார்த்துக்கொள்ளக்கடவான்.

8. சபையில் யாதொருவனைச் சேர்த்துக்கொள்ளவும் அதில் இருக்கிறவர்களைத் தள்ளிப்போடவும் சபைத்தலைவனுக்கு அதிகாரமில்லை. யாதொருவன் சபையில் உள்படவந்தால் அவனுடைய நடபடிக்கைகளை நன்றாய் விசாரித்துப்பார்த்து குருவானவருக்குத் தெரியப்படுத்தி புதியவனை அவரிடத்தில் அனுப்பவேணும். பின் குருவானவருடைய அபிப்பிராயத்துக்கும் சங்கத்தாருடைய தீர்மானத்துக்கும் ஒத்தபிரகாரம் அவன் சபைக்குத் தகுந்தவனென்று அறிந்தால் அவனுடைய பெயரைச் சபை அட்டவணையில் எழுதிவைக்கக்கடவான்.

9. சபையில் உட்பட்டவர்களுக்குள்ளே யாதொருவன் ஒழுங்கின்படி நடவாமல் மற்றவர்களுக்கு துர்மாதிரியாகவும் சபைக்கு

அபகீர்த்தியாகவும் நடப்பதைக் கண்டால், தலைவன், ஒன்றில் தானேயாகிலும் அல்லது வேறொருவனைக்கொண்டாகிலும் அவனுக்கு பட்சத்தோடே நல்ல புத்திமதி சொல்லவேண்டும். இதுவும் வியர்த்தமாய்ப்போனால் விசாரணைக் குருவுக்கு இதை அறிவித்து அவர் அனுமதியின்படியே ஆலோசனைக்காரரை சங்கம் கூட அழைப்பிப்பானாக. அவன் சபையில் இருக்க ஆகாதென்று அவர்கள் தீர்மானித்தால் அந்தக் குற்றவாளியைச் சபையினின்று தள்ளிவிட்டு சபையாருக்கு வெளிப்படுத்தி, அட்டவணையிலிருந்து அவன் பெயரையும் கிறுக்கிப்போடுவானாக.

10. தலைவனானவன் இந்த உத்தியோகத்துக்கு நியமிக்கப்படும்போதும் அதைவிட்டு மாற்றப்படும்போதும் சபையைச் சேர்ந்த சாமான்களின் கணக்கையும் வரவு செலவு கணக்கையும் சம்பிரதி முன்னிலையிலே நன்றாய் ஆராய்ந்து பார்த்து எல்லாம் ஒழுங்காயிருக்கிறதென்று காண்பிக்க அவைகளில் தலைவன் கையொப்பம் வைக்கவேண்டியது.

துணைவர்கள் அனுசரிக்கவேண்டிய ஒழுங்குகள்.

1. சபைத் தலைவனுக்குள்ள கடமைகளில் அவனுக்கு ஒத்தாசையாயிருந்து சகலத்திலும் சபையின் நன்மையைத் தேடுவதே துணைவர்களுடைய முக்கிய கடமையாம். ஆகையால் தலைவனோடே இவர்கள் அன்னியோன்னியமாய் ஒருமித்து, சபைக்கடுத்த காரியங்களைப்பற்றி அடிக்கடி பேசவேண்டியது.

சபைத் தலைவனைப்போலவே இவர்களும் பத்தி சுறுசுறுப்போடே அடிக்கடி தேவதிரவிய அனுமானங்களைப்பெற்று, ஒழுங்குகளைச் சரியாயனுசரித்து யாவருக்கும் நல்ல மாதிரிகையாய் விளங்கக்கடவார்கள்.

2 புதிதாய்ச் சபையிலுட்பட வருகிறவர்கள் இந்தத் துணைவர்களின் விசாரணையில் ஒப்பிக்கப்படுவார்கள். சபை ஒழுங்கு அனுசரணையைப்பற்றியும் சபையாரின் கடமைகளைப்பற்றியும் அறியவேண்டிய விபரங்களையெல்லாம் புதியவர்களுக்கு இவர்கள் நன்றாய்ச் சொல்லிக்கொடுத்து அவர்கள் நடக்கையையும் கண்ணுண்டாய்ப் பார்த்துவரவேணும்: சபையின் நன்மையினிமித்தம்

ஷடி புதியவர்களைப்பற்றி விசாரணைக் குருவானவருக்குத் தெரியப்படுத்த வேண்டிய விசேஷங்களை அவருக்குத் தெளிவாய் வெளிப்படுத்தவேணும்.

3. சபை கூடுந்தருணத்தில் தலைவனுக்குப் பிறகுள்ள மகிமைக்கும், தலைவன் வராதபோது அவனுக்குள்ள மேன்மைக்கும், இவர்களே உரியவர்கள். ஆகையால் சபைக்கூட்டத்துக்குத் தலைவன் வராவிட்டால் முதல் துணைவர், (இவனும் வராவிட்டால் இரண்டாந் துணைவன்) சபைக்கடுத்த காரியங்களையெல்லாம் குறைவின்றி நடத்தக்கடவான். சபைப் பொக்கிஷக்காரன் கணக்கு ஒப்புவிக்கும் சமயத்திலும், உத்தியோகஸ்தர்கள் புதுப்பிக்கப்பட்டபின் கணக்கு விபரங்களில் தலைவனும் சம்பிரதியும் கையொப்பம் வைக்கும்போதும், துணைவர்களிருவரும் அங்கே ஆஜிராயிருக்கவேண்டியது.

சம்பிரதியின் ஒழுங்குகள்.

1. சம்பிரதியானவன் ஆலோசனைக்காரருக்குள் ஒருவராயிருக்கவேணும். சபை கூடும்போதெல்லாம் இவன் அங்கே ஆஜிராக வேண்டியது. சபைக்கடுத்த விஷயங்களில்

எழுதவேண்டிய வேலைகளை யெல்லாம் இவனே பார்த்துவரவேண்டியது. இதற்காக குறிப்புப் புத்தகங்கள் மூன்று இவனிடத்தில் இருக்கவேண்டியது.

2. முதல் புத்தகத்தில், சபையாருடைய இயல்பானபேர், குடும்பப்பேர், வாசஸ்தலம், வயது, தொழில், சபையில் சேர்ந்த ௵, ௴, ௳, சபையில் அங்கீகரிக்கப்பட்ட ௵, ௴, ௳, முதலியவற்றை எண்வரிசையாய் எழுதிவைக்கவேணும். இரண்டாம் புத்தகத்தில், சபைச் சங்கத்தின் முக்கிய தீர்மானங்களை முந்து முந்த நகலாய் எழுதி விசாரணைக் குருவானவருக்கும் சங்கத்தாருக்கும் காண்பித்து அங்கீகரிக்கபபட்டபின் சுத்தப்பிரதியாய் எழுதிவைக்கவேணும். மூன்றும் புத்தகத்தில், புது உத்தியோகஸ்தர்கள் நியமனமாகி முடிந்தபின் இவர்கள்பேர், உத்தியோகம் முதலியவைகளை எழுதிவைக்கவேணும். இதன்றியே சபையின் உபகாரிகள் பேர்களையும். சபையார்களுக்குள் அந்தஸ்துத் தொழில் மாறிப்போகிறவர்கள், வேறே ஊருக்குப் பிரிந்துபோகிறவர்கள், இறந்துபோகிறவர்கள், தள்ளப்படுகிறவர்கள், இவர்கள்பேர்களையெல்லாம் மூன்றும் புத்தகத்தில் பதிந்துவைக்கவேணும். சபையினின்று தள்ளப்பட்டவர்கள் பேரை எழுதும்போது, அவர்

கள் தள்ளப்பட்ட ருகாந்திரத்தை எழுதி வைக்கப்படாது. இத்தன்மையான விசேஷங்களடங்கிய புத்தகங்களைச் சபைச் சங்கத்திற்குமாத்திரம் காட்டலாமேதவிர வேறொருவருக்கும் காண்பியாமல் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிவைக்கவேணும்.

3. சபையாருடைய இயல்பானபேர், குடும்பப்பேர், முதலியவைகளடங்கிய இடாப்பு அட்டவணை ஒன்றை வரிசைக்கிரமமாயெழுதி கூட்டங்கூடும் நாட்களில் தக்க இடத்தில் ஸ்தாபித்து வைக்கவேண்டும்.

4. பொக்கிஷக்காரனானவன், சாமான்கள், வரவு செலவு கணக்குகளை ஒப்பிக்கும்போது தலைவனோடேகூடச் சம்பிரதியும் வந்திருந்து பார்வையிட்டு ஷை கணக்குகளில் இவனும் கையொப்பம் வைக்கவேண்டியது.

ஆலோசனைக்காரர் ஒழுங்குகள்.

1. ஆலோசனைக்காரர்கள் சகலருக்கும் நல்ல மாதிரிகை கொடுக்கவேண்டியவர்களாகையால், இவர்கள் சபையாரில் தெரிந்தெடுக்கப்பட்ட நல்ல புண்ணியவான்களாகவும் நற்குணசாலிகளாகவும் இருக்கவேண்டும். சபையின் நலத்தைப்பற்றி நடக்கும் ஆலோ

சனைகளிலெல்லாம் இவர்கள் ஐக்கியப்பட்டிருப்பார்கள்.

2. ஒவ்வொரு ஆலோசனை அங்கத்தானும், விசாரணைக் குருவானவரால் அல்லது தலைவனால், தனக்கு ஒப்படைக்கப்பட்ட சபையார்பேரில் கண்ணுண்டாயிருந்து, அடிக்கடி அவர்களைச் சந்தித்து, அவர்களுக்கு நல்ல புத்திமதி வருவிக்கத்தக்கவிதமாய், அவர்களோடே சம்பாஷித்துவரவேண்டியது. எந்த அங்கத்தானாவது தன் கடமையை நிறைவேற்றாமல் அவனிடத்தில் பத்திசுறுசுறுப்பு குறைந்துபோகிறதென்று கண்டால், அவனுக்குப் பட்சத்தோடே நல்ல புத்தி சொல்லவேணும். இன்னம் அந்தத் தப்பிதக்காரனாலே சபைக்கு அவமானம் நேரிடுகிறதாயிருந்தால் விசாரணைக் குருவானவருக்கு இதை அறிவிக்கவேணும்.

பொக்கிஷக்காரன் ஒழுங்குகள்.

1. இந்த அலுவலுக்குத் தெரிந்துகொள்ளப்பட்டவன், சபையின் வரவு செலவு கணக்கையும் ஒப்புக்கொண்டு, மூன்று மாதத்துக்கொருவிசை தலைவர், சம்பிரதி முன்னிலையில் தலைவனுக்குக் கணக்கொப்பிப்பானாக.

2. சபையின் உத்தியோகஸ்தருக்கு வேண்டிய காரியங்களை இவனை சேகரித்துக்கொடுக்கவேணும் இதுவிஷயத்தில் எவ்வளவு செலவு செய்யலாமென்று தலைவரின் யோசனைகேட்டு நடந்துகொள்ளவேண்டும்.

3. உத்தியோகங்கள் புதுப்பிக்கப்படும்போது, சபைக் கணக்குப் புத்தகங்களில் பழைய உத்தியோகஸ்தருடைய கையொப்பம் வாங்கவேண்டியிருப்பதினாலே, அதற்கு முன் சகல கணக்குகளையும் இவன் தீர்த்து எழுதி நேர்செய்து வைக்கவேண்டியது.

சக்கிறிஸ்தன் என்னும் திருப்பணிவிடைக்காரன் ஒழுங்குகள்.

1. சபைக்கோவிலையும் கோவில் சாமான்களையும் இவன் நன்றாய் விசாரித்துவரக்கடவான். விசாரணைக் குருவானவர் அல்லது தலைவன் சொல்லும் ஒழுங்குப்படியே, சபைக்கூட்டம் நடக்கும் நாட்களில், வேண்டிய காரியங்களை முஸ்திப்புப்பண்ணத்தக்கதாக, இவன் நேரத்தோடே வந்து ஆஜராக வேண்டியது.

2. சபைக்கோவில் பணிவிடைக்கு ஏதாவது அவசரமானால், தலைவனுக்கும் பொக்

கிஷக்காரனுக்கும் அதை நேரத்தோடே இவன் தெரியப்படுத்தவேண்டியது.

3. சபையைச் சேர்ந்த சாமான்கள் வைத்திருக்குமிடத்தில் அவற்றின் ஜாப்தா அடங்கிய புத்தகமும் இருக்கவேண்டியது. உத்தியோகங்கள் புதுப்பிக்கப்படும்போது இவன் தன் கணக்குகளை ஒப்பித்து தலைவன் முதலானவர்களிடத்தில் கையொப்பம் வாங்கவேண்டியது.

4. அந்தந்தத் திருநாளுக்குத் தக்கது போலே, சபைக் கோவிலைச் சோடித்து அலங்கரிப்பதும் இவன் கடமையாகையால், தேவமாதாவுக்கு ஸ்தோத்திரமாக இந்தத் திருப்பணிவிடையைச் சுகிர்த கருத்தோடே நிறைவேற்றக்கடவான்.

வாசல் காப்போன் ஒழுங்குகள்.

1. சபைகூடும் நாட்களில் மற்றெல்லோருக்கு முந்தியே இவன் கோவிலுக்கு வந்து ஆஜராகவேண்டியது.

2. சபைக்கூட்டத்துக்கு வரும் பேர்வழிகளை இவன் குறித்துவைத்துக்கொள்ளக்கடவான்.

3. சபைக்கூட்டம் முடிந்தவுடனே, வராதவர்கள் இன்னார் இன்னார் என்று குறித்துக்கொண்டு தலைவனுக்குக் காண்பிக்கக்கடவான்.

வாசகர் ஒழுங்குகள்.

1. சபைகூடுமுன்னமே இவர்கள் கோவிலுக்கு வரவேணும். ஏழு எட்டு அங்கத்தார் வந்து சேர்ந்தவுடனே வாசகரிலொருவன் வாசிக்கத் துவக்கவேணும். ஜெபமாலை செபிக்கத் தொடங்குமட்டும் வாசிக்கவேணும். சபைமுயற்சிகள் ஆரம்பமாகக் கால்மணிக்குமுன் ஜெபமாலை செபிக்கவேணும். வாசிக்க நெடுநேரஞ் செல்லுமானால் இவ்விருவரும் மாற்றிமாற்றி வாசிப்பார்கள்.

2. வாசிக்கவேண்டிய புத்தகம் ஏதென்று விசாரணைக் குருவானவரிடத்தில் கேட்டறிந்து முஸ்திப்புச்செய்து, சபையார் யாவரும் நன்றாய்க் கேட்டு கண்டுபிடிக்கத்தக்க தொனியோடே வாசிக்கக்கடவார்கள்.

கீர்த்தனர் ஒழுங்குகள்.

1. தேவதோத்திரங்களை மோக்ஷத்தில் இடைவிடாமல் பாடிப் புகழும் சம்மனசுகளைப்போலவும் திரு கீர்த்தனைகளைப் பாட

இவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் ஞானப்பாட்டுகளை பத்தி அடக்க ஒடுக்கத்தோடே இவர்கள் பாடவேண்டும்.

2. பரலோக இராஜேஸ்பரியின் தோத்திரத்துக்காகத் தாங்கள் பாடும் பாட்டுகள் இனிய சுவையுள்ளதாயிருக்கத்தக்கதாக இவர்கள் தனியே கூடி இராகமேஸ்திரியின் முன்னிலையில் நன்றாய் அவைகளை அப்பியாசப்படுத்திவைக்கவேண்டியது.

சபாசன சங்கம்.

1. சபைக்கடுத்த காரியங்களைப் பேசித் தீர்மானிக்கத்தக்கதாக விசாரணைக்குருவானவருடைய சமுகத்தில் சபையார் மாதந்தோறுங் கூட்டங் கூடுவார்கள். இச்சங்கத்தின் மந்திராலோசனை விஷயங்களெல்லாம் இரகசியமாகவே இருக்கவேண்டும்.

2. முந்தின சங்கத்தில் பேசி முடிவான விஷயங்கள் அங்கீகாரமாகத்தக்கதாக சம்பிரதியானவன் அதை முந்த முந்த சங்கத்தாருக்கு வாசித்து அறிக்கை செய்வான்.

3. விசாரணைக் குருவானவராவது தலைவனாவது, சங்கத்தில் பேசவேண்டிய விஷயங்

கள் எவையென்று முதலில் குறித்துக் காட்
டுவார்கள். இவர்கள் தொடங்கிப் பேசின
பின் அங்கத்தார் ஒவ்வொருவரும் வருசைக்
கிரமமாய்த் தங்கள் தங்கள் அபிப்பிரா
யத்தை புத்தி விவேகத்தோடும் மேரை மரி
யாதையோடும் சுருக்கமாய் வெளிப்படுத்தக்
கடவார்கள். இதில் விசாரணைக் குருவான
வரின் அபிப்பிராயமே சிரேஷ்டமாயிருக்கும்.

4. சர்வேசுரனுடைய தோத்திரத்துக்
கும் திருக்கன்னிமாதாவின் மகிமைக்கும்
சபையின் நன்மைக்கும் சம்பந்தப்படாத
விஷயங்களை இச்சங்கத்தில் ஒருவரும் பேசக்
கூடாது. ஆகையால் இப்பேர்ப்பட்ட சங்
கத்தில் பேசவேண்டிய விஷயங்களை விசா
ரணைக் குருவானவருக்கு ஏற்கனவே தெரி
யப்படுத்தவேணும். இப்படி முந்தியே நினை
யாத விஷயம் ஏதாவது சங்கத்தின்போது
குறுக்கிட்டால், அதைத் தீர்மானிக்கச் சங்
கத்தாருக்குப் போதுமான நேரம் கிடைக்
கும்படிக்கு அவ்விஷயத்தை மறு சங்கமட்
டும் நிறுத்திவைக்கவேணும். ஆகிலும் மெ
த்த அவசரமாயிருந்தால் அவ்விஷயத்தை
விசாரணைக் குருவானவர் ஏற்றுக்கொண்டு
உடனே அதைப் பேசி முடிவுகட்டச் சங்கத்
தாருக்குக் கற்பிக்கலாம்.

5 எவ்விஷயத்தைப்பற்றிய தீர்மான
மும் நியமச்சீட்டின் எண்ணிக்கை மிகுதி
யாலே நிச்சயிக்கப்படும். ஆனால் ஆம், அல்
லது இல்லை என்னும் நியமங்கள் இரு பட்சத்
திலும் சமமாயிருக்கும்போது, விசாரணைக்
குருவானவர் அபிப்பிராயம் சாரும்பக்கமே
அனுகூலமாகும். இவர் ஒரு அபிப்பிராய
மும் கொடுக்கச் சித்தமில்லாவிட்டால் தீர்
மானம் முடிவு பெறுதிருக்கும்.

6. சங்கத்தில் சம்பந்தப்பட்டிருப்பவர்
களில் முக்கால்வாசிப்பேர் கூடாவிட்டால்
எந்த விஷயத்தையும் பேசித் தீர்மானிக்கப்
படாது. எத்தனை அங்கத்தார் இப்படி
வெகுகாலம் வராவிட்டால், விசாரணைக் குரு
வானவரும் சபைத் தலைவனும் ஆலோசித்து,
ஷை பேர்வழிகளுக்கு பதிலாய் வேறே அங்
கத்தாரைத் தெரிந்துகொண்டு ஆலோசிக்க
வேண்டிய விஷயங்களைப்பேசி முடிவுகட்ட
லாம்.

7. சபைத்தலைவராவது, துணைவராவது
மற்ற எந்த உத்தியோகஸ்தராவது மூன்று
மாதகாலந் தொடர்ச்சியாய் சபை கூட்டத்
திற்கு வராவிட்டால் அவர்கள் தங்கள் உத்
தியோகத்தை மனசார விட்டுவிட்டதுபோல
எண்ணிக்கொள்ளப்படும். ஆகையால் அவர்

களுக்குப் பதிலாய் வேறே பேர்வழிகளைச் சட்டப்படி நியமித்துவைத்துச் சபைக்காரியங்களைக் குறைவின்றி நடத்தவேணும்.

8. சபாசன சங்கத்தார் ஒருவிசை பேசி முடிவுகட்டி, விசாரணைக் குருவானவரும் அங்கீகரித்த விஷயத்தைப் பலத்த முகாந்தரமின்றி ஒருபோதும் மாற்றப்படாது. அதைத் திட்டமாய் அனுசரித்து வரவேண்டியது.

9. சபாசன சங்கம் கூடி அமர்ந்தவுடனே, சபையின் பொதுவான நிலைமை எத்தன்மையான ஸ்திதியில் இருக்கிறதென்றும், இதில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்களெவையென்றும் சங்கத்தார் முந்த முந்த விசாரிக்கவேண்டியது. இதற்காக, எந்த ஒழுங்குகளின் அநுசரணை குறைவாயிருக்கிறதோ அந்த ஒழுங்குகளில் சிலவற்றை முதலில் வாசித்து, பின் அவற்றின் குறைகளைச் சுட்டிக்காட்டவேண்டும். இன்னமும் சம்பிரதியின் அறிக்கை வாசகம் முடிந்தபின், முந்தி நடந்தேறிய சங்கத்துத் தீர்மானங்கள் மறந்துபோகாதபடிக்கு அவற்றின் சுருக்கத்தை சமயத்துக்குச் சமயம் சங்கத்தின் ஆரம்பத்தில் வாசிக்கவேண்டியது.

புது நியமம்.

1. வருஷத்துக்கு ஒருவிசையாவது சபை உத்தியோகஸ்தர்களை மாற்றிப் புதியவர்களைத் தெரிந்துகொள்ளவேணும். ஆகிலும் அவசரமான முகாந்திரத்தில் தலைவர்மட்டும் இரண்டு வருஷம் அதே வேலையைப் பார்த்துவரலாம். அதற்குமேல் இருக்கப்படாது. வேண்டுமானால் வேறே உத்தியோகத்துக்கு அவரைத் தெரிந்துகொள்ளலாம். இதுவிஷயத்தில் தலைவனைத் தவிர மற்றும் சங்கத்தார் கூடி நியமச்சீட்டுகளால் தீர்மானித்து ஏற்படுத்தவேண்டியது. இப்படிப்பட்ட நியமம் மீண்டும் பழைய தலைவருக்கே வந்தால் இந்தத் தலைவரோடு வேறு இரண்டு பேர்களைச் சங்கத்தார் குறித்து ஆக இம்மூவரில் ஒருவரை, மூன்றும் பிரிவில் சொல்லியபடியே, தலைவராகச் சபையார் தெரிந்துகொள்ள விட்டுவிடக்கடவார்கள்.

2. புதுநியமம் நடக்கும் வகையாவது:— தலைவர் துணைவர்கள் சம்பிரதி ஆலோசனைக்காரர் ஆகிய இவர்கள் கூடி இஸ்பிரீத்து சாந்துவை பத்தியோடு வேண்டிக்கொண்டு, சபைத் தலைமை உத்தியோகத்துக்குத் தகுந்தவர்களென்று தோன்றும் மூவர் பேரை, ஒரு சீட்டில் குறித்து வைப்பார்கள். விசா

ரணைக் குருசுவாமியார் அந்தச் சீட்டுகளைத் திறந்து பார்த்து வாசிக்கவே, சம்பிரதி அவைகளை ஒழுங்காய்க் குறித்துக்கொள்வான்.

3. நியமச்சீட்டு அதிகமாய்ப் பெற்றவர்களில் முந்தின மூவரைச் சபையார் எல்லாருக்கும் குறித்துக் காட்டவேண்டும். அப்போது அம்மூவரில் ஒருவரைத் தலைவராகத் தெரிந்துகொள்ளத்தக்கதாக சபையாரெல்லோரும் நியமச்சீட்டுப்போடுவார்கள். விசாரணைச் சுவாமியாரும் சங்கத்தாரும் ஷை சீட்டு அதிகம் பெற்றவரையே தலைவரென்று பிரசித்தப்படுத்துவார்கள்.

4. மேற்சொன்ன நியமம் முடியவே மீதியாயிருக்கும் இருவர் பெயரோடு இன்னும் இரண்டு பேர்களைச் சங்கத்தார் குறித்துக் காட்டி ஆக இந்த நான்கு பெயர்களில் இரண்டு துணைவர்களைச் சபையார்தானே தெரிந்துகொள்ள விட்டுவிடுவார்கள். இதிலே மீந்திருக்கும் இருவர் முதன்மையான ஆலோசனைக்காரராவார்கள். இப்படி முதன்மையான உத்தியோகஸ்தர்கள் நியமனமாகி முடிந்தபின், தெதேயும் என்ற தேவதோத்திரம் பாடிக் கூட்டம் முடிவுபெறும்.

5. மற்ற உத்தியோகஸ்தர்களைத் தெரிந்துகொள்ளும் வகையோவென்றால் இப்

போது தெரிந்துகொள்ளப்பட்டிருக்கும் 5 உத்தியோகஸ்தருடைய அபிப்பிராயச் சீட்டுகளாலாவது சபை அங்கத்தாருடைய அபிப்பிராயச் சீட்டுகளாலாவது, மற்ற ஆலோசனைக்காரரை விசாரணைக் குருவானவர் தெரிந்துகொள்ளலாம்.

6. விசாரணைக் குருவானவர், தலைவன், துணைவர் ஆகிய இவர்கள், வேறு தினத்தில் கூடி ஆலோசித்து நியமச்சீட்டுகள் போட்டு சம்பிரதி, பொக்கிஷக்காரன், சக்கிறிஸ்தன் என்னும் கோவில் பணிவிடைக்காரன் முதலிய உத்தியோகஸ்தர்களைத் தெரிந்துகொள்வார்கள். சம்பிரதியானவன் ஆலோசனைக்காரரில் ஒருவனாயிருக்கவேண்டும். மற்ற உத்தியோகஸ்தர்கள் ஆலோசனைக்காரருக்குள்ளாவது சபை சங்கத்தாருக்குள்ளாவது தெரிந்துகொள்ளப்படலாம்.

7. இப்படித் தெரிந்துகொள்ளப்பட்ட புது உத்தியோகஸ்தர் பேரைச் சபைக் கூட்டத்தில் பிரசித்தப்படுத்தினபின், புது உத்தியோகஸ்தர்கள் தங்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றத் துடங்குவார்கள்.

அங்கீகாரம்.

1. சபையில் பிரவேசிக்க மனசுள்ளவன் முந்த முந்தத் தலைவனிடத்தில் கேட்கவே

ணும். இவன் நடக்கையைப்பற்றித் தலைவன் நன்றாய் விசாரித்து ஆராய்ந்து சங்கத்தவருடைய ஆலோசனை கேட்டபின், விசாரணைக் குருவானவருக்குத் தெரியப்படுத்துவான். சங்கத்தாருடைய ஆலோசனைப் பிரகாரம் விசாரணைக் குருசுவாமியார் அப்புதியவனை பரீட்சை ஸ்தானத்தில் ஏற்றுக்கொண்டு அடுத்த கூட்டத்தில் சபையாருக்கு இதை தெரியப்படுத்துவார். அந்தப் பரீட்சை ஸ்தானத்திலிருப்பவனை யாதொரு உத்தியோகத்துக்கும் தெரிந்துகொள்ளப்படாது. பரீட்சை நிலைமை முடியுமட்டும், அவன், சபைப் பலனுக்கு பங்காளியாகமாட்டான். அப்படிப் பரீட்சை ஸ்தானத்தில் இருப்பவனைத் தலைவனால் நியமிக்கப்படும் சபை உத்தியோகஸ்தன் ஒருவன் விசாரித்து வரக்கடவான். இந்த விசாரணைக்காரன் அப்புதியவனுடைய நடக்கையைக் கண்ணுண்டாய்ப் பார்த்து சபையின் முறைமை, கடமை, ஒழுங்கனுசரணை முதலியவைகளை அவனுக்குப் படிப்பிப்பான்.

2. இப்படியே பரீட்சை ஸ்தானத்தில் அவன் 3 மாதத்திற்குக் குறையாமலிருந்தபின் சங்கத்தாருடைய ஆலோசனைப் பிரகாரம் குருசுவாமியார் அவனைச் சபை அங்கத்தானாய் அங்கீகரிக்கத்தக்க நாளைத் தீர்மானி

த்துக்கொண்டு இதைப்பற்றிச் சபையார் யாவருக்கும் அறிக்கை செய்வார்.

3. அங்கீகாரத்துக்குக் குறிக்கப்பட்ட நாளிலே சபையார் கூடி முந்த முந்த இஸ்பிரீத்துசாந்துவின் மந்திரம் சொன்னபின் புதியவன் தேவமாதாச் சுரூபத்துக்கு முன்பாக முழங்காலிலிருந்து கையில் மெழுகுவத்தி பிடித்து பத்தி பற்றுதல் அமைந்த தொனியோடே வசீகரமுயற்சியைச் சொல்லுவான். அதாவது:— கன்னியும் தேவதாயுமான பரிசுத்த மரியாயே (இன்னாகிய) நான் இன்றைக்கு உம்மை என் ஆண்டவளாகவும் தாயாராகவும் அடைக்கலமாகவும் மத்தியஸ்தியாகவும் தெரிந்துகொள்ளுகிறேன். மேலும் நான் உமது மகிமைப் பிரதாபத்துக்கு விரோதமான எவ்வித வார்த்தைகளினாலும் கிரியைகளினாலும் உம்மை விட்டுப் பிரியாமலிருப்பதுமன்றி எனக்குக் கீழ்ப்பட்ட மற்றவர்களும் தேவரீருக்கு விரோதமாய் ஏதாகிலும் செய்யவும் சொல்லவும் விடுகிறதில்லையென்றும் பிரதிக்கினை பண்ணுகிறேன். ஆதலால் இன்றுமுதல் என் மரணபரியந்தம் உமது ஊழியனாக என்னை ஏற்றுக்கொள்ளும். நான் செய்யும் சகல கிரியைகளிலும் எனக்கு ஒத்தாசை செய்து விசேஷமாய்

என் மரணநேரத்தில் என்னைக் கைவிடாமல் காத்து இரட்சித்தருளும். ஆமென் சேசு.

4. இதன்பின் சுவாமியார் ஆசனத்தில் உட்கார்ந்து சொல்வதாவது:

சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்காகவும், தேவதாயாரான திருக்கன்னிமாதாவின் பத்திவணக்க அபிவிர்த்திக்காகவும், இச்சபையின் ஞான நன்மைக்காகவும், அர்ச். பாப்பானவர் நமக்குத் தந்தருளிய அதிகாரத்தால் இப்பங்கில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற அமலோற்பவ மாதாவின் சபையிலே (இன்னாகிய) உன்னை ஒரு அங்கத்தானாக அங்கீகரித்துக்கொள்ளுகிறோம். மீளவும் உரோமாபுரி ஆதிச்சபைக்கு அர்ச்சியசிஷ்ட பாப்புமார்களால் தந்தருளப்பட்டிருக்கிற பூரணபலன் முதலிய சகல நன்மைகளுக்கும் உன்னைப் பங்காளியாக்குகிறோம். பிதாவுடையவும் மற்றதும் ... இதன்பின் அவன் கையிலிருக்கும் மெழுகுவத்தியைக் குருசுவாமியார் வாங்கிக்கொண்டு சபை வழக்கத்தின்படி அவனுக்கு விருது கொடுத்து அவர் சொல்லும் செபமாவது:

5. தெய்வீக நன்மைத்தனத்தின் இஷ்டப்பிரசாத பலத்தாலும், உன் தாயாரான திருக்கன்னிமாதாவின் ஒத்தாசையாலும், நித்திய பாக்கியத்தை நீ பெற்றுக்கொள்ள

உன்னாத்துமம் சரீரக்ஷேமம் ஆதார ஆயுதமாக இச்சபை விருதைப் பெற்றுக்கொள்வாயாக. பிதாவுக்கும் மற்றதும்... இதன்பின் தேவமாதாவின் பத்திவணக்கத்தில் இவன் உண்மையாய் நிலைத்திருக்கத்தக்க புத்திமதிகளைக் குருவானவர் சொல்லுவார்.

6. வருஷந்தோறும் சபைத்திருநாளிலே சபையார் யாவரும் திருவசீகர முயற்சியைப் பிரசித்தமாய்ப் புதுப்பிக்கவேண்டியது.

சபையார் அநுதினம் சொல்லவேண்டிய ஜெபங்கள்.

காலையில்.

அர்ச். தமதிரித்துவத்துக்குத் தோத்திரமாக 3 பரமண்., 3 பிரியதத்த., திரித்துவ மந்திரம் சொன்னபின், விசுவாசமந்திரமும் கிருபைதயாபத்து மந்திரமும் சொல்லவேண்டும்.

சாயுங்காலத்தில்.

ஆத்துமசோதனை செய்தபின் 3 பர. பிரி. திரி. மந்திரம் சொன்னபின் 129-ம் சங்கீதமும் சொல்லவேண்டும்.

மரண அவஸ்தைப்பட்ட சேசுவின் திருஇருதயச்சபையின் விளக்கச் சுருக்கம்.

தினந்தோறும் சொல்லத்தக்க செபம்.

கருணாம்பர சேசுவே! ஆத்துமங்களை நேசிக்கிறவரே, தேவரீருடைய திவ்விய இருதயமானது பூங்காவனத்திலும் சிலுவையிலேயும் பட்ட அவஸ்தையையும், தேவரீருடைய மாசில்லாத திருத்தாயானவள் அநுபவித்த வியாகுலங்களையும் பார்த்து, இன்றுதானே

பூமியிலெங்கும் அவஸ்தையாய்க் கிடந்து சாகப்போகிற பாவிகளைத் தேவரீருடைய திரு இரத்தத்தினால் சுத்திபண்ணியருளும்.

அவஸ்தைப்பட்ட சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய இருதயமே! மரிக்கிறவர்களின்பேரில் இரக்கமாயிரும். ஆமென்சேசு. *

இரக்கமுள்ள மரியாயின் திரு இருதயமே, கஸ்திப்படுகிறவர்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சபையின் ஆரம்பம்:—1867-ஆ ஆகஸ்ட் மீ 24-உ 9-ம் பத்திநாதரென்னும் பாப்பானவரால், மரண அவஸ்தைப்பட்ட சேசுவின் திரு இருதயச் சபையும், வியாகுலமாதா சபையும், ஜெருசலேம் பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

சபையின் கருத்து:—மரண அவஸ்தைப்பட்ட சேசுவின் திருஇருதயத்தையும், தமது திருக்குமாரனின் பாடுகளினால், மன வேதனைப்பட்ட தேவதாயாரின் இருதயத்தையும், விசேஷித்தவிதமாய், ஆராதித்து

* இந்தச் செபத்தைச் செபிக்கும் ஒவ்வொரு விசைக்கும் நூறுநாள் பலனுண்டு. மாச அநுதினமும் ஒவ்வொரு நாளைக்கு மூன்றுவிசை வெவ்வேறே சமயங்களில் இந்தச் செபத்தை வேண்டிக்கொண்டால் மாதத்துக்கு ஒரு பரிபூரண பலன்.

சங்கைசெய்யவும், மகனுடையவும் தாயாருடையவும் நிகரற்ற வியாகுலங்களின் வழியாய், ஒவ்வொரு நாளும் மரிக்கும் 1,30,000 பேர்களும், நன்மரண வரமடையவும், சஸ்திப்படுகிறவர்கள் ஆறுதலடையும்படியாகவும், வேண்டிக்கொள்வதே இச்சபையின் கருத்தாம்.

இதில் ஆவல்கொள்ளும்பொருட்டு நம்மைத் தூண்டவேண்டிய நியாயங்கள்:— மரிக்கிறவர்களுக்காக, சேசுவின் திரு இருதயத்தைப் பார்த்து வேண்டிக்கொள்வதே, மெய்யான அப்போஸ்தல தொழில். இத்தொழிலே, அத்தியந்த அவசரமான அலுவல். இன்றைக்கு, 1,30,000 ஆத்துமாக்கள், தேவசந்நிதானத்துக்கு முன், தீர்ப்புச் சொல்லப்போகிறார்களே. ஐயோ! இவர்களில் எத்தனையோ பேர், சாவான பாவத்தோடிருக்கிறார்கள். அநேக குடும்பங்கள், இவ்விஷயத்தைக் கவனியாததுமன்றி, கடைசிவேளையில் முதலாய், தேவதிரவிய அநுமானங்களின் உதவி, தங்களுக்கு வேண்டாமென்று சொல்லித் தள்ளிப்போடுகிறவர்கள், அநேகம்பேருண்டாகையால், இப்படிப்பட்ட நிர்ப்பாக்கிய அந்தஸ்திலிருப்பவர்களுக்கு உதவிசெய்ய, இதுவே தகுந்த சபை. மரிக்கிறவர்கள், குருக்கள் உதவி

யின்றி சாகும்படி பிரயாசப்படுகிற இரகசிய சபைகளின் பிரயத்தனங்களை விலக்கவும், பசாசு செய்யும் தந்திரங்களினின்று அவர்களை மீட்கவும், இந்த அப்போஸ்தல தொழில், மிகவும் பிரயோசனமாம். கடைசியாய் இதின் உதவியால், நாம் பாக்கியமான நன்மரணமடையப் பேறுபெறுகிறோம்.

சபையாராவதற்குச் செய்யவேண்டியதும், சபையாரின் கடமைகளுமாவன:— இச்சபையில் சேருவதற்கு, அதிகாரமுள்ள ஒருவரால் இச்சபைப் புஸ்தகத்தில், தங்கள் பேரைப் பதியச்செய்வதே போதுமானது. சபையில் சேர்ந்தபின், தினந்தோறும் "கருணாம்பர சேசுவே" என்னும் ஜெபமாவது, ஒரு பரமண்டல மந்திரம் பிரியதத்த மந்திரமாவது சொல்லவேண்டியது.

இன்னும், மாதத்தில் ஓர்நாள் அரைமணி நேரம் மரிக்கிறவர்களுக்காகச் செபிப்பதில் செலவழித்து, அன்று திவ்வியநற்கருணை உட்கொண்டு ஒப்புக்கொடுப்பதும், மிகவும் நல்ல வழக்கமாம். வியாதிஸ்தர்கள் மரண சமயத்தில், கடைசி தேவதிரவிய அநுமானங்கள் பெறத்தக்கதாக அவர்களுக்கு உதவி செய்வது மிக்க பிரயோசனமான பிறசிநேகக்கிரியையுமல்லாமல், இச்சபையின் முக்கிய கருத்துமா

மே. வருஷாந்தரம், தவணைப்பிரகாரம் தங்களால் கூடியமட்டும் இச்சபையின் அவசரங்களுக்குப் பண உதவிசெய்து, முக்கியமாய் அன்றைக்கு மரிக்கிறவர்களுக்காகவும், சபையாருக்காகவும், அடிக்கடி திவ்வியபூசை செய்யும்படி, சபையார் முயன்று வருவார்களென்று நம்புகிறோம். குருக்கள் வருஷத்துக்கு ஒருதடவையாகிலும், இக்கருத்துக்காக திவ்வியபூசை செய்வதுமன்றி, ஒவ்வொரு வாரத்திலும் ஒரு பூசை இரண்டாம் கருத்துக்காகச் செய்து ஒப்புக்கொடுப்பார்களென்பது நமது விருப்பம்.

ஞானப் பிரயோசனங்கள் :—சபையார் குருக்களானாலும், மற்றும் கிறீஸ்துவர்களானாலும், தங்கள் சீவியகாலத்தில் இச்சபையில் செய்யப்படும் சகல பூசைகளின் பலனடைவார்கள். தங்கள் மரணபரியந்தம், இதில் நிலைத்திருப்பார்களேயானால், மரணத்துக்குப் பின்னும் செய்யப்படும், பூசைகளின் பலனுமடையலாம். ஒரே தடவையில் 12 ரூபாய் கொடுப்பவர்கள், அதே பலனடையலாம். மரிக்கிறவர்களுக்காக வருஷத்தில் நாலு பூசை செய்யும் குருக்களும், ஒரே தடவையில் அல்லது பற்பல சமயங்களில் சேர்ந்து 60 ரூபாய் கொடுப்பவர்களும், சபையின் 'ஸ்தாபகர்' என்னும் மகிமைப்பட்ட

மடைவார்கள். இவர்கள் மேற்சொன்ன பலன்களுந்தவிர, தங்கள் மரணத்துக்குப் பின், தங்கள் ஜீவியகாலத்தில், இச்சபையை எத்தனை இடங்களில் ஸ்தாபித்திருப்பார்களோ அதற்குத் தகுந்தபிரகாரம், ஒவ்வொன்றுக்கும் மூன்று பூசையும் தனிப்பலனும் அடைவார்கள்.

பரிபூரண பலன்கள் :—பின்வரும் நாட்களில், சபையார் பாவசங்கீர்த்தனஞ் செய்து, திவ்விய நன்மை வாங்கி, தேவநற்கருணை சந்திப்பதோடுகூட, அர்ச். பாப்பானவருடைய கருத்துக்காக வேண்டிக்கொள்வார்களேயானால், பரிபூரண பலனடைவார்கள்.

1. சபையில் சேர்ந்த அல்லது அம்மாதத்தின் வேறோர் நாள்.

2. பூங்காவனத்தில் இரத்தவேர்வை வேர்த்த திருநாள் அல்லது அந்த வாரத்தின் வேறோர் நாள்.

3. திரு இரத்தத்தின் திருநாள், பெரிய வியாழக்கிழமை, தேவநற்கருணைத் திருநாள், சேசுவின் திரு இருதயத் திருநாள்.

4. வியாகுலமாதாத் திருநாள்.

5. அர்ச். சூசையப்பர் திருநாள், அர்ச். சூசையப்பர் அடைக்கலத் திருநாள்.

6. தேவ அருளப்பர் திருநாள், (மார்ச்சு-மீ 8-உ). அர்ச். காமில்லிஸ் லெல்லிஸ் என்பவர் திருநாள் (ஜுலை-மீ 18-உ)

7. மரணசமயத்தில்.

8. தினந்தோறும் மரண அவஸ்தைப்படுகிறவர்களுக்காகவும் கஸ்திப்படுகிறவர்களுக்காகவும் வேண்டிக்கொண்டு வருவதுமல்லாமல், மாதத்தில் ஒருநாள் அரைமணிநேரம், அவர்களுக்காக வேண்டிக்கொள்வதில் செலவழித்து வருவார்களேயானால், மாதக்கடைசியில், உரோமாபுரியிலுள்ள திரு ஸ்தலங்களின் பலனடைவார்கள்.

மரிக்கிறவர்களின் இரட்சிப்புக்காகச் செய்யும் அப்போஸ்தல தொழில்.

சாகுந் தறுவாயிலிருப்பவர்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; நீங்கள் மரண அவஸ்தைப்படும்போது உங்களுக்காக வேண்டிக்கொள்வார்கள்.

உலகமுழுவதும் தினந்தோறும் ஏறக்குறைய 130,000 பேர் சாகிறார்கள்; மாதமொன்றுக்கு 3,000,000 பேருக்கு அதிகம் சாகிறார்கள்; ஒரு வருஷத்திலோவெனில் 47,000,000 பேர் மரணிக்கிறார்கள். இத்

தனைகோடி பேர்களுக்குள், எத்தனையோ பேர் சாவான பாவத்தோடிருக்கிறார்கள். மரிக்கிறவர்களின் இரட்சிப்புக்காகச் செய்யும் அப்போஸ்தல தொழிலின் முக்கிய கருத்தென்னவென்றால்: மரண அவஸ்தைப்பட்ட சேசுவின் திரு இருதயத்தின்மட்டில் விசேஷ பத்திவைக்கிறதும், மரியாயின் இரக்கமுள்ள இருதயத்துக்கு விசேஷ சங்கைசெய்கிறதும், சாவானபாவத்தோடு சாகக்கிடக்கிறவர்களுக்கு வரப்போகும் பயங்கரமான ஆபத்திலிருந்து, அவர்களை மீட்கும்படியாக இத்திரு இருதயங்களின் வழியாக அவர்களுக்கு நன்மரண வரத்தை அடையப் பிரயாசப்படுகிறதுமேயாம். பிறசிநேக உருக்கமுள்ள கிறீஸ்துவர்களே, நமதாண்டவரின் சிநேகத்துக்காகவும், அவருடைய திருத்தாயாரின் அன்பின் நிமித்தமாகவும், இதற்காக நாம் இங்கு சொல்லப்போகிற இரண்டு இலேசான வழிபாடுகளை உபயோகித்துக்கொண்டு வரும்படியாகக் கோருகிறோம் அதின் முதலாவது: சாகக்கிடக்கும் ஆத்துமாக்களுக்காகப் பின்வரும் செபத்தைத் தினந்தோறும் சொல்லிக்கொண்டு வாருங்கள். இரண்டாவது: மாதத்தில் ஓர்நாள் குறிப்பிட்டு, அந்நாளில் விசேஷித்தவிதமாய், அவ்வாத்துமாக்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

தினந்தோறும் சொல்லத்தகும் செபம்.

கருணைம்பர சேசுவே! (600-ம் பக்கம் காண்க.)

மரியாயின் இரக்கம்நிறைந்த இருதயமே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்,

அதிதூதரான அர்ச். மிக்கேலே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

நல்ல மரணத்துக்குப் பாதுகாவலரான அர்ச். சூசையப்பரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சேசுநாதருக்கு மரண அவஸ்தையில் ஆறுதல் சொன்ன சம்மனசானவரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சகல காவலான சம்மனசுக்களே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

மரிக்கிறவர்களின் பாதுகாவலரான அர்ச்சியசிஷ்டவர்களே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

மாதாந்த வேண்டுதல்.

1. காலையில் எழுந்திருந்தவுடன், அன்று செய்யும் செபம், கிரிகைகள், படுந் துன்ப வருத்தங்களெல்லாம், உலகமெங்கும் சாகக்

கிடக்கும் ஆத்துமாக்களுக்காகவும், விசேஷமாய் அன்றுதானே அல்லது அந்த மாதத்தில் சாகப்போகிறவர்களுக்காகவும், மரண அவஸ்தைப்பட்ட சேசுவின் திரு இருதயத்தின் வழியாய்ப் பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுங்கள். இக்கருத்துக்காக வேண்டிக்கொள்ளும் நாள், மரண அவஸ்தையாய்க் கிடக்கிறவர்களுக்காகச் சர்வேசுரனிடத்தில் பரிந்துபேசி, அவர்கள் நன்மரணமடைய, வேண்டிய வரப்பிரசாதத்தை அவர்களுக்குக் கட்டளையிடும்படி, சர்வேசுரனிடத்தில் இரந்து மன்றாடுவதற்காக விசேஷவிதமாய்க் குறிக்கப்பட்ட தினமென மறந்துபோகாதேயுங்கள்.

௨. வேளைக்கு வேளை, அந்தந்த மணிநேரத்தில் சாகக்கிடக்கும் ஆத்துமங்களுக்காக, சர்வேசுரனை நோக்கிப் பிரார்த்தியுங்கள். ஒரு மணி நேரத்தில், ஏறக்குறைய 4166 பேர் மரிக்கிறார்கள். ஆகையால், இவர்களுக்காக விசேஷமாய், அந்த மணிநேரத்தில் வேண்டிக்கொள்ளுங்கள். மரண அவஸ்தையாய்க் கிடக்கும் சகலருக்காகவும் விசேஷமாய் உங்கள் ஊரிலுள்ளவர்களுக்காகவும் அடிக்கடி "கருணைம்பர சேசுவே" என்னும் செபத்தைச் சொல்லிக்கொண்டு வரக்கடவீர்கள்.

3. கூடுமானால், அன்றையத்தினம் சாகப் போகிறவர்களுக்காக திவ்வியபூசை கண்டு ஒப்புக்கொடுப்பது மெத்த நல்லது. ஓர் கோவில் பக்கமாய்ப் போகநேரிட்டால், உள்ளே பிரவேசித்து, சில நிமிஷங்களாக்கும், தேவநற்கருணை சந்தித்து அவர்களுக்காக ஒப்புக்கொடுங்கள்.

4. உங்களால் கூடுமானமட்டும், ஏதாகிலும் பிச்சைக்காரருக்குத் தருமம் கொடுங்கள்.

5. யாதொரு தபசு, அல்லது தபசு முயற்சி செய்யக்கூடுமானால், அப்பேர்ப்பட்ட சமயங்களை வீணில் விட்டுவிடாதேயுங்கள். ஏனெனில், தர்மம், தபசு, முக்கியமாய் ஒருசந்தி முதலிய முயற்சிகளைச் செபத்தோடு கூட்டிச் செய்வோமானால், அச்செபமே, சகல செபங்களிலும் உத்தம செபமாமே. மேலும் அதுவே, மிக்கப் பிரயோசனமுள்ள செபம்.

6. சாயங்காலம் படுக்கப்போகுமுன், கடைசிவிசையாக அத்தியந்த இரக்கமுள்ள சர்வேசுரன் கையில் அவர்களை ஒப்படைத்து, விசேஷமாய் அன்று இராத்திரி சாகப்போகிறவர்களுக்காக வேண்டிக்கொள்வதுந் தவிர, பொதுப்பட சகல மனிதருக்காகவும்,

விசேஷவிதமாய் பாவத்தில் அமிழ்ந்திக் கல்நெஞ்சராயிருப்பவர்களுக்காகவும், சர்வேசுரனுடைய இரக்கத்தை மன்றாடுங்கள். அதன்பின், உங்கள் மரணத்தைப்பற்றியும் தியானித்து, உத்தம மனஸ்தாபமுயற்சி செய்து நன் மரணத்துக்கு ஆயத்தம் செய்யக்கடவீர்கள். சாவான பாவ அந்தஸ்திலிருந்தால், கூடியசீக்கிரம் பாவசங்கீர்த்தனம் செய்யப் போவேனென்று, நல்ல பிரதிக்கினை பண்ணி நித்திரைபோங்கள்.

7. இவ்விதமாய், குறிக்கப்பட்ட இந்த நாளைப் பிரயோசனமாய்ச் செலவழித்து, சொல்லப்பட்ட கிரியைகளையெல்லாம் செய்வது, மிகவும் எளிதாமே. சகல கிறீஸ்துவர்களும், ஆண், பெண், கடின வேலையாளிகள், வியாதிஸ்தரும், இவையெல்லாம் எளிதில் செய்து வெகு பிரயோசனமடையலாம். ஆகையால், இச்சபையை பட்டணங்களிலுமல்லாமல், இன்னும் பட்டிக்காடு கிராமங்களிலும் ஸ்தாபிக்கக்கூடும்.

8. இப்போது சொல்லியதைவிட, அதிகம் செய்யக்கூடுமான விசுவாசிகளோவெனில், திவ்வியநன்மை வாங்கி, முன் சொல்லிக்காண்பித்த செப முயற்சிகளோடு

சேர்த்து ஒப்புக்கொடுப்பார்களென நம்புகிறோம்.

குருக்கள் தாங்கள் செய்யும் திவ்விய பூசையின் இரண்டாம் கருத்து, இவர்களுக்காகச் செய்து, சேசுநாதர் சுவாமி ஒலிவேத்மலைத் தோட்டத்தில் பட்ட அவஸ்தையையும், சிலுவையரத்தில் அநுபவித்த மரண அவஸ்தையையும் குறித்து, மத்தியானத்துக்குப் பிறகு அரைமணிநேரம் அல்லது கால் மணி நேரமென்கிலும் தேவநற்கருணை முன்பாகச் செலவழித்து சாகிறவர்களுக்காகவும், பொதுப்பட சகல மனிதருடைய இரட்சிப்புக்காகவும் ஒப்புக்கொடுப்பார்கள். கூடுமானால்,மாதத்தில் குறிக்கப்பட்ட இந்த நாளில், ஒரு பூசை செய்விப்பது, மிகவும் பிரயோசனமாமே. கிறீஸ்துவப் புண்ணியக் கிரிகைகளில், அதி உன்னத பிரயோசனமும், விலைமதிக்கப்படாததுமான கிரிகை, திவ்விய பூசைப்பலியே.

அறிக்கை.

இச்சபை எங்கும் பரம்பும்படியாக, உங்களால் கூடிய பிரயாசமெல்லாம் படுவீர்களென்று விரும்புகிறோம். உங்கள் மரண வேளையில் ஆறுதலும், மோட்சத்தில் அதிக

சந்தோஷமும் அடைவீர்கள். மாதத்தின் 30 அல்லது 31 நாளும் தவறாமல் ஒவ்வொரு நாளிலும் ஒருவர் மேற்சொன்ன கருத்துக்காக வேண்டிக்கொண்டு வரும்படியாகச் சபையார் 31 பேருள்ள வெவ்வேறு பிரிவாகச் சேர்ந்து, ஒவ்வொருவருக்கும் ஓர்நாளைக் குறிப்பிட்டு இதைச் செய்துகொண்டு வருவது மிகவும் நல்ல வழிப்பாடே. கடைசியாய், பிறசிநேகமும், பிறர் ஆத்தும இரட்சண்ணிய ஆவலும் உள்ள சபையாரே, உங்களால் இயன்றமட்டும் மற்றவர்களும் திவ்விய நன்மை வாங்கி அவ்வண்ணமே நடக்கும்படியாக, வேண்டிய பிரயத்தனமெல்லாம் செய்வீர்களென்று, உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

மாதத்தின் தலைவெள்ளிக்கு முந்தி
செய்யப்படும்

சேசுவின் திரு இருதய நவநாள்;

சேசுவின் திரு இருதயத்துக்குக்
சாணிக்கையாய் ஒப்புக்கொடுத்தல்.

சேசுவின் திரு இருதயத்தோடு ஒன்றித்துச் செய்யப்படும் நவநாள் ஜெபங்கள்.,

சேசுவின் திரு இருதயத்தின் ஆழ்ந்த ஆராதனைகளே,
சேசுவின் திரு இருதயத்தின் உக்கிரமான சிநேகமே,
சேசுவின் திரு இருதயத்தின் வேகமான பத்தி பற்றுதலே,
சேசுவின் திரு இருதயத்தின் பரிகாரமே,
சேசுவின் திரு இருதயத்தின் நன்றியறிதலே,

நான் உன்னோடு இருக்...

சேசுவின் திரு இருதயத்தின் உறுதியான நம்பிக்கையே,
சேசுவின் திரு இருதயத்தின் உற்சாகமான ஜெபங்களே,
சேசுவின் திரு இருதயத்தின் வாய்ச்சாலமான மௌனமே,
சேசுவின் திரு இருதயத்தின் தாழ்ச்சியே,
சேசுவின் திரு இருதயத்தின் கீழ்ப்படிதலே,
சேசுவின் திரு இருதயத்தின் சாந்தகுணமும், சமாதானமுமே,
சேசுவின் திரு இருதயத்தின் வாக்குக் கெட்டாத மதுரமே,
சேசுவின் திரு இருதயத்தின் சர்வ வியாபகமான சிநேகமே,
சேசுவின் திரு இருதயத்தின் ஆழ்ந்த உள்ளொடுக்கமே,
சேசுவின் திரு இருதயத்தின் பாவிகள் மனந்திரும்பவேணுமென்கிற உருக்கமான கவலையே,
சேசுவின் திரு இருதயத்துக்கும், பரலோக பிதாவுக்குமுள்ள அந்நியோந்நிய ஒன்றிப்பே,
சேசுவின் திரு இருதயத்தின் கருத்துகள், ஆசைகள், விருப்பங்களே,

நான் உன்னோடு இருக்கிறேன்.

சேசுவின் திரு இருதயமானது எங்கும் சிநேகிக்கப்படக்கடவதாக.

என் சேசுவே! இரக்கமாயிரும்.

சேசுவின் திரு இருதயத்தின் அன்பே! என் இருதயத்தை எரியப்பண்ணியருளும்.

சேசுவின் திரு இருதயத்தின் சிநேகமே! என் இருதயத்தை நிரப்பியருளும்.

சேசுவின் திரு இருதயத்தின் பலமே! என் இருதயத்தைத் தாபரித்தருளும்.

சேசுவின் திரு இருதயத்தின் தயாளமே! என் இருதயத்தை மன்னித்தருளும்.

சேசுவின் திரு இருதயத்தின் பொறுமையே! என் இருதயத்தைக் கைவிடாதேயும்

சேசுவின் திரு இருதயத்தின் அரசாட்சியே! என் இருதயத்தில் வந்து குடியிரும்.

சேசுவின் திரு இருதயத்தின் ஞானமே! என் இருதயத்துக்குக் கற்றுக்கொடும்.

சேசுவின் திரு இருதயத்தின் மனமே! என் இருதயத்தை ஒழுங்குபடுத்தும்.

சேசுவின் திரு இருதயத்தின் பத்தி பற்றுதலே! என் இருதயத்தை உம்முடைய தாக்கியருளும்.

அமலோற்பவ கன்னிகையே! சேசுவின் திரு இருதயத்தைப்பார்த்து எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

ஜெபம்.

ஆராதனைக்குப் பாத்திரமான திரித்துவமே! உம்முடைய அடியாளாகிய முத். மார்கரீத்மரியம்மாளுக்கு ஏராளமாய் அளித்த வரங்களுக்காக நாங்கள் நன்றியறிந்திருக்கிறதுமல்லாமல், இந்த நவநாளில் நாங்கள் அடைய நம்பிக்கையாயிருக்கிற எங்கள் விண்ணப்பத்தை இவளுடைய மன்றாட்டினால், எங்களுக்கு கொடுத்தருளும்படி கெஞ்சி மன்றாடுகிறோம். ஆமென்சேசு.

ஓ! சேசுவின் திரு இருதயமே! தயாள சிநேகத்தின் சமுத்திரமே! என் நம்பிக்கையெல்லாம் உமது பேரில் வைக்கிறேன். உமது நன்மைத்தனத்தினின்று சகலத்தையும் அடைய நம்பிக்கையாயிருக்கிறேன்.

இச்செபத்திற்கு, 1901-ம் வருஷம் மார்ச்சு-மீ 13-ம் ௳ 13-ம் சிங்கராயர் என்னும் பாப்பானவர் 100 நாள் பலன் அளித்திருக்கிறார். இதை உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு ஒப்புக்கொடுக்கலாம்.

முடிவுரை.

I. விருத்தம்.

ஆத்துமமே! மயங்காதே, அநித்திய வாழ்வு,
அனைத்தும் ஒரு நீர்க்குமிழி அதை நம்பாதே,
ஏத்தரிய தற்பரனே என்றும் உள்ளோன்
இவரடியோர்க் கொருகுறையு மிடறுமில்லை.

சாத்தியமாஞ் சருவேசன் உனக்குப்போதும்
சகித்திரு நீ, சகலநலந்தானே சேரும்
தேற்றமுள காட்சிமிகும் அர்ச்சியசிஷ்ட
தெரேசம்மாள் வாக்கியமிது திண்ணந்தானே

II. விருத்தம்.

தேவனே கதியாய்வைத்து சேசுவைப் பின்
[சென்றென்றும்
ஆவலாய்க் கன்னித்தாயை அறத்துணையா
[யென்நாளும்
மேவியே எனைச்செயித்தால் மேற்கதி யடை
[வேனென்று
மாவர நந்தானென்னும் மறைமுனி வசனித்
[தாரே.

III. விருத்தம்.

"அன்புறில் எதையும் செய்" என் றகஸ்
[தினுரைத்தவண்ணம்
அன்புளோர், அன்பில், அன்பால், அன்பிற்
காயனைத்தும் செய்வார்
அன்பொன்றே கிரியைகட்கு அரும்பேறுண்
[டாக்குமென்று
அன்புள மார்கரீந்தாள் அருளினள் அறிவீர்
[தானே.

நித்தியமே! நித்தியமே!!

ஓ! அழியாத ஆத்துமத்தால் அலங்கிர்தம் அடைந்திருக்கும் அழிவுக்குரிய மனுக்குலத்தோரே! நித்தியமென்ற அந்த மொழியைக் கற்றுணர்ந்து கொள்ளுங்கள், அதைத் தியானித்துப் பாருங்கள், அந்தப் பயங்கரமான மொழியை ஆராய்ந்தளவிட்டுப் பாருங்கள்.

ஓ நித்தியமே! ஒரேயொரு நாள்மாத்திரம் ஜீவித்திருக்கிற மனிதன், உன்னைப்பற்றி என்ன சொல்லக்கூடும்? அவன் உன்னை என்னென்றுதான் வரையறுத்துச் சொல்வான்? உன்னைப்பற்றி அவன் சொல்வதை யார்தான் கண்டுபிடிப்பான்?

ஓ! நித்தியம் எவ்வளவு நிளிப்புள்ளது! சகல யுகங்களின் அரசியான அந்த நித்தியம் தன் வாழ்விலுந் தாழ்விலும் எவ்வளவு ஆழமுள்ளதுமாய், விஸ்தீரணமுள்ளதுமாய், அளவற்றதுமாயிருக்கிறது. இன்னம் அது எவ்வளவோ முடிவற்றதும் விலக்கமுடியாததும், நீடூழி ஜீவியமுள்ளதுமாயிருக்கின்றது!

கழிநெடில் விருத்தம்.

அத்தனருள் வனமரங்களிலைகள் புற்கள்
அடரிதழ்க ளாகாயத்தொளிரு மீன்கள்
நித்த மலைக்கடற் கரைநுண் மணல்கள்யாவும்
நீண்டகன்ற சமுத்திர நீர்த்துளிகள்யாவும்

இத்தனையிற் கணக்கெண்ணித் தொகுத்திட்டாலும்
இசையும்லெட்சக்கோடி மகாகோடியான
அத்தனை யாயிரம் வருஷம் நித்தியத்துக்
கணுவல்லால் வரையாகா தறிவீர்தானே.

நித்தியமே! சூரியன் இருளடர்ந்து போகும் ஒருநாள் வரும். அப்போது உலகம் அழிந்து பாழாய்ப் போய்விடும். மனுக்குல அரவமுழுதும் அடங்கிப் போய்விடும். சீவியரும் மரித்தோரும் தீர்வைக்குள்ளாகித் தீர்ப்படைந்தாகிவிடும். யுகங்கள் யுகங்களைத் தொடர்ந்து நடக்கும். நீடூழிகாலச் சக்கரங்கள் ஒன்றுக்குப் பின்னொன்றாய்ப் பின்பற்றிச் செல்லும். ஆகிலும் நித்தியமெஃபது அப்போதுதான் ஆரம்பமாகும். ஏனெனில் நித்தியமென்பது என்றும் நீளித்திருக்கும். ஒருபோதும் முடியாது.

ஓ! பயங்கரமான நித்தியம்!
எப்போதும்! எப்போதும்!!
ஒருபோதுமில்லை!

விருந்தம்.

பேரின்ப மோக்ஷ நித்தியம் பெருநலமடைவேணுகில்
சீர்பெறு முத்திபெற்ற சேனைகள் வானோர்கூட

பூரண ஆயுளுண்மையே புண்ணிய வசீகரத்தில் நேரிலாப் பாக்கியம்பெற்று நீடூழி வாழ்வேனே.

என்றும் தியானித்துச் சிநேகித்துச் சுகித்தனுபவித்துச் சதாகாலத்துக்கும், போற்றிப் புகழப்படும் சர்வேசுரனோடு இருப்பது எவ்வளவோ பேரின்ப பாக்கியம். அங்கு அழுகைப் பிரலாபமுமில்லை, சாவுநோவுமில்லை, துக்கசஞ்சலமில்லை; இல்லை. ஒருபோதுமில்லை.

ஆசிரிய விருத்தம்.

தீங்கிருள் நரகத்து நித்திய மெனக்குறில்
  தீராத மோசமதுவாம்
தினமுமென் பாவங்கள் கண்முனே நின்றெ
  சிட்சிக்கு மிடையறாது [ளை
தூங்கரு மனப்புழுவேதனை யருத்தெனைச்
  சுடுதீயு மிடையறாது
சூழவே எந்தனைக் கட்டிடுஞ் சங்கிலித்
  தொடர்களு மிடையறாது
நீங்கருங் கோபவெறி பற்கடிப் போடழும்
  நேர்கண்ணீ ரிடையறாது
நிமலனைத் தூஷிக்கும் நீச தூர்ச்சனருறவு
  நித்தமு மிடையறாது
ஓங்கிய பயங்கரமுறு பேய்கள் காட்சியும்
  ஒருபோது மிடையறாது

உன்னதன் சாபமென் காதினிற் சப்திக்கும்
  ஒலிகளு மிடையறாது.

விருத்தம்.

ஒன்றிடு மகிழ்ச்சியாக ஒருசுடரொளியு [மில்லை
நின்றிளைப்பாற அங்கே நிமிஷ நித்திரையு [மில்லை
குன்று நாவரட்சிதீரக் குடிநீரோர் துளியு [மில்லை
நன்றினி தாற்றத் தக்க நண்பான மொழியு [மில்லை.

சர்வேசுரனையோ, அங்கே ஒருக்காலும் காணக் கிடைக்காது. ஒருபோதுங் கிடைக்காது!

ஆசிரிய விருத்தம்.

அழியாத வாத்தும வலங்காரமேவிய
  அழிவுறு மாந்தர்கேளீர்
ஆராய நித்தியமிருக்கையில் நீரதை
  யறமறந் தலைகிறீரோ
ஒழியாது நீரதை மறந்திடினு நித்திய
  முங்களுக்காக வுளதாம்
உறுதியாய் நித்தியக் கரையோரம் வாழ்கிறீ
  உகந்தசில வருஷமகல
சுழிவாக வேதெனு மீந்திராதுங்களின்
  கவலைநகபோக மொழியும்

காசினியி லுங்களது கோரங் கவர்ந்திடும்
கனமகிமை தொழில்களொழியும்
பழியாக வுங்களையேந்திடும் பொருளெல்லா
பாழாய் மறைந்தொழியுமாம் [ம்
பரிவாகவே யிறுதி யளவாயிருப்பது
பதி நித்திய மென்றறிகுவீர்.

விருத்தம்.

தேவ நித்தியத்தோ டுங்கள் செய்கையும்
[பலனும் நீளும்
பாவிகளின்பம் நீங்கும் பாவ ஆக்கினையே
[நிற்கும்
சீவியர் துன்பமெல்லாம் தீர்ந்தகன் றொழியு
[முங்கள்
மேவிய பாகமாக விளையும் பேரின்பந்தானே.

விருத்தம்.

நித்தியத் துன்பம்வேண்டில் நீணிலத் தின்
[பந்தேடு
சத்திய இன்பம் வேண்டில் தளராது துன்ப
[நாடு
மத்திய ஸ்தலமேயில்லை மனதினி லிதைத்
[தியானித்துச்
சித்தமுந் திடனுமோங்கத் தேர்ந்தறம் புரி
[வாய் தானே.

விருத்தம்.

1. தெரியலானேன் பிரியமாக ஜீவிய
[மோக்ஷ நித்தியம்
உரியதேவனோடு வாழ்வேன் உகந்த சுகிர்தஞ்
[சுகந்தமாய்
அரியநித்திய அமலநியாய அதிபதியெனு
[மகிபனே
கரிய எனது பாவக்கறைகள்கண்டு துயருற்ற
[ழுகிறேன்.

2. அழுதுன்பாதம் பணிய வீழ்ந்தேன்
[அதுல நித்திய சமுகத்தில்
தொழுதே னெனக்கோர் துணைவேறில்லை
[சுகிர்த இரக்கம் புரிகுவாய்
வழுவாயுமக்குத் தீங்குபுரிந்து மனதுநோகச்
[செய்ததால்
முழுதுந் துயருற்றழுது வெறுத்தேன் முதல்
[வனே அருள்செய்குவீர்.

ஆசிரிய விருத்தம்.

தந்தைகளி லுத்தம இரக்கமிகு தந்தையே
தாஞ்ஞன் செய்பவத்தால்
சதாநித்திய காலமுன் தரிசனமிழந்துபோம்
தருண ஆபத்துழன்றேன்

சிந்தையுடனென் பிழை பொறுத்தருளும்
    தேவரீரை விசுவசித்தேன்
தேவ நித்தியத்தையும் விசுவசித்தேனிதோ
    தேவரீரை நம்பலானேன் [நாதனே
பந்தன பதாகமே யும்மாலெனக்குமொரு
    பாக்கிய நித்திய சுகிர்தம்
பரிவாய்க் கிடைக்குமென உறுதியுடன் நம்பி
    பாதம் பணிந்திரஞ்சி [னேன்
விந்தையுடனும்மை நான் நேசிப்பதன்றியே
    வியநித்திய காலமளவாய்
மேவியுமை நேசிக்க ஆவலுடனுழிமேனன்
    வேத ஒளியான பரனே.

ஆண்டவரே! இப்பூலோகத்தில் என்னை வெட்டும், குத்தும், இன்னும் என்னை நிர்மூலமாக்கினாலும் நிர்மூலமாக்கும். இங்கு எனக்கு மாப்புச் செய்யாதேயும். ஆனால் சதா நித்தியகாலத்திலோ, எனக்கு மன்னிப்பை, மன்னிப்பையே தந்தருளும், சுயாமி. ௧

பொருள் அட்டவணை.

பொருள். பக்கம்.

காலை நேரத்துக்கடுத்த புத்திமதிகளும், பத்தி முயற்சிகளும் ... 1
காலையில் கண்விழித்தவுடன் சிலுவை அடையாளம் வரைந்து சொல்லத் தகும் செபம் ... 1
படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போது சொல்லத்தகும் செபம் ... 1
உடுத்திக்கொண்டபின் சொல்லவேண்டிய செபம் ... 3
உன்னைச் சர்வேசுரனுடைய சந்நிதானத்தில் நிறுத்திச் சொல்லத்தக்க செபம் ... 3
6
விசுவாச முயற்சி ... 6
நம்பிக்கை முயற்சி ... 6
தேவசிநேக முயற்சி ... 7
மனஸ்தாப முயற்சி ... 8
பரமண்டல மந்திரம் ... ,,
பிரியதத்த மந்திரம் ... 9
விசுவாச மந்திரம் ... 10
பாவசங்கீர்த்தன மந்திரம்
அர்ச்சியசிஷ்டவர்களை நோக்கி வேண்டுதல் ... 11

தேவஊழியத்துக்கு அமைதல் .. 12

சேசுநாதருடைய திருநாமத்தின் பிரார்த்தனை ... 13

திரிகாலச்செபம் ... 19

போசனத்துக்குமுன் கேட்கும் ஆசீர்வாதம் ... 20

போசனத்துக்குப்பின் நன்றியறிந்த தோத்திரம் ... 21

இராச்செபம் .. 22

ஆத்துமசோதனைக்குப்பின் சொல்லத்தக்க செபம் ... 27

சத்திய திருச்சபைக்காக வேண்டுதல் ... 28

அர்ச். தேவமாதாவின் பிரார்த்தனை ... 30

சாதாரண திருப்பூசையில் சொல்லப்படும் செபங்கள் ... 35

உத்தரிக்கிற ஆத்துமாக்களைக் குறித்து பூசை காணும் வகை 78

பூசைக்கு உதவி செய்யும் வகை ... 100

திவ்விய பூசையைத் தக்க விதமாய்க் காணும் வகை ... 103

திவ்வியபூசை காணச் சுருக்கமான வகை ... 127

நல்ல பாவசங்கீர்த்தனம் செய்யும்வகை 137

ஆத்துமசோதனை செய்யும்வகை ... 139

பாவசங்கீர்த்தனம் செய்யும்போது ... 146

பாவசங்கீர்த்தனம் செய்தபின் ... 147

உத்தமமனஸ்தாபம் அடைவதற்கு அர்ச். அல்போன்ஸ் ரோதிரிகேஸ் சொல்லி வந்த செபம் ... 148

50-ம் சங்கீதம் ... 149

129-ம் சங்கீதம் ... 152

திவ்விய சற்பிரசாதம் ... 154

தேவநற்கருணை வாங்க ஆயத்தம் ... 164

தேவநற்கருணை உட்கொள்ளுமுன் செபம் ... 169

தேவநற்கருணை உட்கொண்டபின் செபம் ... 173

தேவநற்கருணை உட்கொள்ள சுருக்கமான ஆயத்தம் ... 178

தேவநற்கருணை உட்கொண்டபின் நன்றியறிந்த தோத்திரம் ... 181

தேவநற்கருணை உட்கொண்டபின் செய்யத்தகும் செபங்கள் ... 186

பரிபூரண பலனுள்ள செபம் .. 190

ஞான ஏகாந்தத்தின் ஞாபகக் குறிப்பு, ... 192

அநுதின அப்பம் 207

ஆசை நன்மை வாங்குவதைப்பற்றி

ஆசைநன்மை வாங்குவதால் வரும் பிரயோசனங்கள் ... 208
இச்சுகிர்த முயற்சியின் சுருவு ... 213
ஆசைநன்மை வாங்கும் வகை ... 216
ஆசைநன்மை முயற்சி ... 218
முத். மார்கரீத் மரியம்மாள் உண்டு பண்ணிய ஆசைநன்மை முயற்சி ... 219
திவ்விய சற்பிரசாதச் சன்னிதியில் கால்மணித் தியானம் ... 222
திவ்விய சற்பிரசாத சன்னிதியில் காலைச் செபம் ... 230
திவ்விய சற்பிரசாதச் சன்னிதியில் மாலைச் செபம் ... 231
திவ்விய சற்பிரசாதத்தில் வீற்றிருக்கும் சேசுவின் திரு இருதயத்தை நோக்கிச் செபம் ... 232
திவ்விய நற்கருணைக்குச் சுருக்கமான செபங்கள் ... 233
திவ்விய நற்கருணையைச் சந்திக்க செபம் 234
திவ்விய சற்பிரசாதக் காதல் ... 236
திவ்விய சற்பிரசாதத்திற்கு நிந்தைப் பரிகாரச் செபம் ... 238
வேறு பரிகாரச் செபம் ... 240

அர்ச். தோமாஸ் ஆக்குயினாஸ் திவ்விய நற்கருணைச் சந்திப்புக்காக செய்த செபம் ... 241
திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் ... 244
சிலுவையில் அறையுண்ட நமது திவ்விய கர்த்தரை நோக்கிப் பத்தி முயற்சிகள் ... 246
சிலுவைப்பாதை செய்யும் வகை ... 247
சிலுவைப்பாதை ... 251
பாடுபட்ட சுரூபம்: நமது அருமை அன்பர் ... 267
முத். மார்கரீத் மரியம்மாள் சொல்லிய சுகிர்த வாக்கியங்கள் ... 273
நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துவின் திரு இருதயப் பத்தி ... 274
இடைவிடாமல் அன்பாய் அவதானித்துக்கொள்ளத்தகும் விசேஷம் ... 284
சேசுநாதர்சுவாமி தமது திவ்விய இருதயத்தின்பேரில் பத்தியுள்ளவர்களுக்காக முத். மார்கரீத் மரியம்மாளுக்கு கொடுத்த வார்த்தைப்பாடுகள் ... 288
திவ்விய கர்த்தருடைய திரு இருதயத்தின்பேரில் தியானங்கள் ... 291
சேசுநாதருடைய திரு இருதயத்துக்கு தன்னை முழுதும் ஒப்புக்கொடுக்கும் ஜெபம் ... 312

சேசுவின் திரு இருதயத்தை நோக்கி நம்பிக்கை முயற்சி ... 314

சேசுவின் திரு இருதயத்தை நோக்கி அர்ச். ஜெர்த்துருத்தம்மாள் தினந் தோறும் ஜெபித்த ஜெபம். ... 317

சேசுவின் திரு இருதயத்திற்கு நவநாட் செபம் ... 318

சேசுநாதருடைய திரு இருதயத்துக்குப் பலனுள்ள சுகிர்த ஜெபங்கள் ... 321

சேசுவின் திரு இருதயப் படத்துக்கு முன் சொல்லத்தக்க ஜெபம் ... 321

முத். மார்கரீத் மரியம்மாள் சொல்லிய சுகிர்த வாக்கியங்கள் ... 322

சேசுவின் திரு இருதயத்துக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும் முயற்சி ... 324

சேசுநாதருடைய திரு இருதயத்துக்கு உலக முழுவதையும் ஒப்புக்கொடுக்கும்படி அர்ச். பாப்பு ஏற்படுத்திய ஜெபம் ... 326

அர்ச். பாப்பானவரால் புதிதாய் அங்கிகரிக்கப்பட்ட சேசுநாதருடைய திரு இருதயப் பிரார்த்தனை. ... 329

ஜெப அப்போஸ்தல சபை. ... 334

முதல் வகுப்பு. ... 338

இரண்டாம் வகுப்பு ... 341

மூன்றாம் வகுப்பு ... 343

திருமணித்தியாலம் ... 346

சேசுவின் திரு இருதயப் பரிகாரச் சபை ... 357

இச்சபையின் கருத்து ... 365

பொதுவான ஒழுங்குகள் ... 370

சபையார் செய்யவேண்டிய சுகிர்த கிருத்தியங்கள் ... 375

சேசுநாதருடைய திரு இருதயத்தின் ஜெபமாலை ... 379

திவ்விய இருதயத்திற்கு நிந்தைப் பரிகார முயற்சி ... 382

நம் ஆண்டவரின் திரு முகப்பத்தி ... 385

திரு முகத்தைக் குறித்து 9-ம் பத்திநாதரொன்னும் பாப்பானவர் இயற்றிய செபம் ... 389

வியாதியில் தேவ உதவியைக் கேட்கும் பிரார்த்தனை ... 390

சர்வேசுரனுடைய திரு நாமத்துக்கு விரோதமாய்ச் செய்யப்படும் நிந்தைகளுக்குப் பரிகாரப் பிரகரணங்கள் ... 391

திருமுகத்தின் பிரார்த்தனை ... 393
பரிசுத்த கன்னிமரியம்மாள் ... 395
திருக்கன்னிமாதாவின் பக்தருடைய சுகிர்த முயற்சிகள் ... 399
தேவமாதாவுக்கு தன்னை ஒப்புக்கொடுக்குஞ் செபம் ... 414
அர்ச். பெர்னர்து தேவமாதாவை நோக்கி வேண்டின ஜெபம் ... 416
தேவமாதாவுக்குத் தன்னை முழுவதும் ஒப்புக்கொடுக்குஞ் செபம் ... 417
அர்ச். ஜெர்த்துருத்தம்மாளுக்கு தேவமாதா படிப்பித்த ஜெபம் ... 418
அர்ச். ஞானப்பிரகாசியார் பரிசுத்த கன்னிகையைக் குறித்து உண்டாக்கின ஜெபம் ... 419
அமலோற்பவ கன்னிமரியாயின் திருஇருதயத்திற்கு நிந்தைப் பரிகாரச் செபம் ... 419
அர்ச். கன்னிமரியாயின் மாசற்ற இருதயத்தின் பிரார்த்தனை ... 421
அர்ச். லூர்துமாதாவை நோக்கிச்செபம் 423
அர்ச். கன்னிமரியாயின் ஏழு வியாகுலங்களைக் குறித்துச் செபம் ... 425

வியாகுலமாதாச் செபமாலை ... 428
அர்ச். வியாகுலமாதாவின் செபமாலைக்கு அளிக்கப்பட்ட பலன்கள் ... 430
நல்ல ஆலோசனை மாதாவை நோக்கிச் சொல்லத்தக்க செபம் ... 431
அர்ச். சகாயமாதாவை நோக்கிச்செபம். 432
சம்மனசுகளுடைய இராக்கினியை நோக்கிச் செபம் ... 433
சோதனை வேளையில் சொல்லத்தகும் பலனுள்ள செபம் ... 434
அர்ச். தேவமாதாவின் மந்திரமாலை ... 434
அர்ச். சூசையப்பர்பேரில் பத்தி வணக்கம் ... 453
அநுகூலம் பெறுவிக்கும் செபம் ... 454
13-ம் சிங்கராயரென்னும் பாப்பானவர் அர்ச். சூசையப்பர்பேரில் செய்த செபம் ... 455
அர்ச். சூசையப்பருடைய ஏழு வியாகுலங்களையும் ஏழு சந்தோஷங்களையும் குறித்துக் கேட்கு மன்றாட்டு ... 457
நல்லமரணமடைய அர்ச். சூசையப்பரை நோக்கிச் செபம். ... 460

திருக்குடும்பத்தை நோக்கிச் செபம் ... 462
பற்பல பத்தி விஷயங்கள் ... 464
சடுதி மரணத்தினின்று தற்காக்கப்படுகிறதற்கு செபம். ... 464
மனவல்லயச் செபங்கள் ... 466
அர்ச். மிக்கேல் சம்மனசானவரை நோக்கிச் செபம் ... 468
காவல் சம்மனசை நோக்கிச் செபம் ... 470
அர்ச். இஞ்ஞாசியாரை நோக்கிச் செபம் 472
அர்ச். ஸ்தனிஸ்லாசை நோக்கிச் செபம் 473
அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பரை நோக்கிச் செபம் ... 473
அர்ச். ஞானப்பிரகாசியாரை நோக்கிச் செபம் ... 476
பேர்கொண்ட அர்ச்சியசிஷ்டவரை நோக்கிச் செபம் ... 479
அர்ச். பிரான்சீஸ்கு சவேரியாரைக் குறித்துக்கொண்டாடப்படும் அருள் நவநாள் ... 480
தவறாது அநுகூலந்தரும் அர்ச். சவேரியருடைய நவநாட் செபம் ... 481
அஞ்ஞானிகள் மனந்திரும்புவதற்காக அர்ச். சவேரியார் உண்டாக்கின செபம் ... 483

பாவிகள் மனந்திரும்பிச் செபிக்கும் செபம் ... 484
நமது மன்றாட்டின் உதவியைக்கேட்டுக்கொண்ட சகலருக்காகவும் சொல்லுஞ் செபம் ... 485
துன்பப்படும் வேளையில் செபிக்கும் செபம் ... 486
கொள்ளைநோய் அகல பிரார்த்திக்குஞ் செபங்கள் ... 487
தேவமாதாவை நோக்கி வேண்டிக்கொள்ளுஞ் செபம் ... 487
அர்ச். ஆரோக்கியநாதரைப் பார்த்து வேண்டிக்கொள்ளுஞ் செபம் ... 490
கொள்ளைநோய் அல்லது விஷபேதி காலத்தில் செபிக்குஞ் செபம் ... 492
விஷபேதியகல அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரை நோக்கிச் செபம் ... 493
உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்கள் பேரில் பத்தி விபரம் ... 494
உத்தரிக்கிற ஸ்தலத்திலுள்ள ஆத்துமாக்களுக்காகச் செபம் ... 497

உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களின் நன்மைக்காக செய்யப்படும் நேச வீரத்துவ முயற்சி ... 498

பூரண பலன்களின்பேரில் ... 502

பூரண பலன்களின் பொக்கிஷம் ... 506

என் தேவனாகிய ஆண்டவரே என்கிற செபம் ... 512

பிரதிதின திவ்வியநன்மை .. 513

பிரதிதினம் திவ்வியநன்மை வாங்குகிற சுகிர்த அப்பியாசம் பரம்புவதற்காக பலனுள்ள செபம் ... 515

அர்ச். ஆசீர்வாதேந்திரர் சுரூபம் ... 516

அர்ச். சூசையப்பர் பிரார்த்தனை ... 520

அர்ச். காவலான சம்மனசின் பிரார்த் 526

அர்ச். ஆரோக்கியநாதர் பிரார்த்தனை ... 530

அர்ச். சவேரியார் பிரார்த்தனை ... 537

அர்ச். ஞானப்பிரகாசியார் பிரார்த்தனை 543

அர்ச். செபஸ்தியார் பிரார்த்தனை ... 548

திருக்குடும்பத்தின் பிரார்த்தனை ... 554

நன்மரணப் பிரார்த்தனை ... 558

ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்த அர்ச். தேவமாதாவின் சபையார் அநுசரிக்கவேண்டிய ஒழுங்குகள் ... 566

மரண அவஸ்தைப்பட்ட சேசுவின் திரு இருதய சபையின் விளக்கச் சுருக்கம் ... 600

மாதத்தின் தலைவெள்ளிக்கு முந்தி செய்யப்படும் சேசுவின் திரு இருதய ... 614

நவநாள் ... 618

படிவுரை ... 620

த்தியமே! நித்தியமே!!

224020

ஆவணக் காப்பகம்
சென்னை-600 0'8
லகம்